UNIVERSAL
LIBRARY

OU_208009

UNIVERSAL
LIBRARY

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. TM 894.8111 5941T Accession No. Tmf. 245

Author

Title Bharathi Tamil

This book should be returned on or before the date last marked below.

பாரதி தமிழ்

பெ. தூரன்

(தொகுத்துப் பதிப்பித்தது)

அமுத நிலையம் லிமிடெட்
தேரும்பேட்டை :: சென்னை - 18

முதற் பதிப்பு—அக்டோபர், 1953.
அமுதம்—72
உரிமை பதிவு

விலை 7 0 0

நாஷனல் ஆர்ட் பிரஸ்
தேனாம்பேட்டை, சென்னை-18



பாரதியார்

1920க்கு முன்பிருந்தே ஆசிரியர் வசமிருந்த படம்

பாரதியாரும் அவர் மனைவியாரும்

உதவி : திரு. சி. சு. செல்லப்பா.
அனுமதி : திருமதி செல்லம்மா பாரதி.

Registered No. M. 771 LIBERTY—EQUALITY—FRATERNITY தனிப்பிரதி அணா 1½

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை காலையில் வெளிவரும்.

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

பு 1 புதுவை வியாழக் கிழமை டிசம்பர் 1907ஆவது வருஷம் 15 ம இதழ் 1

இருதலைவிஷப்பாம்பு



எல்லாரும் சேர்ந்து கொண்டு மேடையின் — தமிழ் நாட்டின் சரித்திரம் என்னவென்றால்! திமிர், திமிர், திமிர் — என்று எப்போதும் திமிரை வளர்ப்பதே கலையாகக் கொண்டது. ஆரிய புரிய புரிய ஆரிய, புரிய புரிய யோதரை, புரிய புரிய உண்மை, புரிய புரிய மிஸ்டிக் — தினமும் எழுத வேண்டுமே. போதவேண்டும்.

தம்பி, — நான் எது செய்வேனடா!

தினமும் மற்றொரு மாணவி சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்தமாயிருக்கிறது. தினமும் மற்றொரு ஜாதியான் அரிஜனும், லஞ்சமும் உயர்ந்திருப்பது எனக்கு ஸம்மதமில்லை. தினமுத்தினையும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதையும் காணுகையில் என் மனம் புண்படுகிறது தம்பி — உன்னைப் போல உலகம்.

வேறு! வேறு! வேறு! மேலே, மேலே, மேலே! கீழ்நின்றும் நீ யிழுத்து கீழே வைத்த படி கையால் கிட்டி வைத்துக் கொண்டு பிடிக்க முயற்சி பண்ணும் இப் பழைய காலத்து மேல்நாட்டுக் கன்று குட்டியை நினைக்கச் சிரி.

உனக்குச் சிரமமென்று சொன்னாய். பார்த்து போ.

பகுதி — 3

பாடல் பகுதி வினா, வினா, வினா,

" "

1. திருமணம் — திருமணத்தின் நாள் எண் வரைந்து.

   திருமண அழைப்பில் இடம்பெற்ற ஊர் எண் வரைந்து.

   திருமண நாளில் மணமகள் திருமணப் பட்டாடை

   உடுத்தியிருந்த விதம் எண் வரைந்து.

   அருகில் திருமணப் பட்டாடையில் உடலழகை வர்ணனை

   செய்யும் பகுதியின் தொடக்கச் சொல் எண் வரைந்து

   திருமண நாளில் மணமகள் அணிந்திருந்த அணி

   வகையைக் குறிப்பிடும் அடுத்த சுற்றடி எண் வரைந்து

   இடம்பெறுகிறது எத்தனையாவது எண் வரைந்து.

   இறுதியும் பெண்ணும் — மேற்கோளில் இரண்டு கருத்து

   கள் எண் வரைந்து.

2. அணி வெளிப்படை அமைந்துள்ளது எண் வரைந்து.

   பெண்ணைத் தாழ்வாக எண்ணுவோரை கண்ணகி

   திருத்திக் கொண்டாள் எண் வரைந்து.

   பெண்ணை அடைத்தவன் கண்ணை அவன் பறித்தல்

   எண் வரைந்து.

   தொழில்கள், தொழில்கள் தொழிலில்லை எண்ணு

   க.

[illegible]

கோடையம்
21– செப்டம்பர்– 1918.

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

நான் [illegible] [illegible] [illegible]

சமர்ப்பணம்

★

தமிழ்த் தாயே

உனது திருவடிகளிலே சூட்ட ஆர்வமுடன் பாரதி கொண்டுவந்த மணமிக்க அழகிய புதுமலர்கள் எத்தனையோ.

அவற்றிலே பல சிதறுண்டு மறைந்து கிடந்தன. தேடித் தொகுத்து அவற்றை மாலையாக்கியுள்ளேன்.

உனக்கே அம்மாலை உரியது. ஏற்றருள்க.

நன்றியுரை

சுதேசமித்திரன் ஆசிரியர் திரு. சி. ஆர். ஸ்ரீனிவாசன் அவர்களுடைய அன்பில்லாமல் இந்த புத்தகம் உருவாகியிருக்க முடியாது. 1905 முதல 1921-ஆம் ஆண்டு வரை சுதேசமித்திரன தினசரி, வார மும்முறை இதழ்களுப பார்வையிட்டு அவற்றிலிருந்து பாரதியாரின் கவிதை, கட்டுரை முதலிய வற்றைப பெயர்த்தெழுதிக் கொள்ள அவர் எனக்கு அன்புடன் அனுமதியளித்த விவரத்தை முன்னுரையிலேயே தெரிவித்திருக்கிறேன். இருநூலை அச்சிடத் தொடங்கிய பிறகும் புதிதாக வேண்டியிருந்த சில விவரங்களைச் சேகரித்துக் கொள்ள அவர் எனக்கு எல்லாவிதமான வசதிகளையும செய்து உதவினர். புத்தக வடிவிலே வெளிவராத பாரதியாரின் கவிதை, கதை, கட்டுரை முதலியவற்றைத் தொகுத்து வெளியிடச் சம்மதம் தெரிவித்ததோடு பாரதியாரைப பற்றி எழுதும நூலில் முன்பே வெளிவந்துள்ள புத்தகங்களிலிருந்து தேவையான சிறு சிறு பகுதிகளுப பயன்படுத்திக் கொள்ளவும் சென்னை அரசாங்கம் அன்புடன் அனுமதி தந்துள்ளது. சென்னை அரசாங்கத்தின் உதவியின்றியும் இந்நூல் வடிவு கொண்டிருக்காது திரு. ரா. அ. பத்மநாபன் அவர்கள் தாம் பெருமுயற்சி செய்து பாரதியாரைப பற்றிச் சேகரித்த விவரங்களையும்; பாரதியாரின இந்தியா பத்திரிகை இதழ்களையும் ஆராய்ந்து பயன்படுத்த ஆர்வத்தோடு உதவினர்கள். தம்மிடமிருந்த பாரதியார் எழுதிய ஏற்புச் சீட்டையும், பாரதியார் போடோக்களையும் அன்போடு தந்தார்கள். திரு. பி. ஸ்ரீ. அவர்கள் தாம் அருமையாகப் பாதுகாத்து வைத்திருந்த பாரதியாரின் மொழிபெயர்ப்பு நூலாகிய நாகரின் பஞ்ச வியாசங்கள்

என்பதன் பிரதியைத் தந்து உதவியதோடு இம்முயற்சியிலே எனக்குப் பெரிதும் உற்சாகமூட்டி வந்தார்கள். தாகூர் வியாசங்களின் மொழிபெயர்ப்புக்களை இந்நூலில் சேர்த்துக்கொள்ள ஸ்ரீ ரதீந்திரநாத தாகூரும் மாக்மில்லன் கம்பெனியாரும் அன்புடன் இசைந்தார்கள். திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தம்மிடமிருந்த பாரதி கட்டுரைகளை பார்வையிட உதவியதோடு, பாரதியாரைப் பற்றித் தாம் அறிந்திருந்த செய்திகளை அன்போடு கூறினார்கள். பாலி சு. நெல்லையப்பரின் அன்பைப் பற்றி முன்பே குறித்திருக்கிறேன். பாரதியார் அவருக்கு எழுதிய கடிதங்களை வெளியிட அன்போடு அவர் உதவினர். இவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சக்தி கோவிந்தன் அவர்கள் பாரதியாரைப் பற்றித் தாம் வெளியிட்டுள்ள நூல்களையும் படங்களையும் பயன்படுத்திக் கொள்ளத் தாராளமாக அனுமதியளித்தார்கள். சிவாஜி ஆசிரியர் திருமலை சீதாராம் அவர்கள் பிளாக்குகள் உதவியதோடு இவ்வெளியீட்டில் பெரிதும் அக்கறை காட்டினார்கள். திருமதி செல்லம்மா பாரதி, திருமதி தங்கம்மாள் பாரதி ஆகிய இருவரும் பாரதியாரைப் பற்றிச் சில விவரங்களை எனக்குக் கூறியதோடு இந்நூல் வெளிவருவதிலே தமது ஆர்வத்தையும் கூறி எனக்கு ஊக்கமளித்தார்கள். அவர்களிடமிருந்து பாரதியாரைபற்றி இன்னும் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள எனக்கு ஒழிவு கிடைக்காமையால் இயலாது போயிற்று. காரைக்குடி ஹிந்து மதாபிமான சங்கத்தார் அங்கே எடுக்கப்பெற்ற பாரதியார் போட்டோவை வெளியிட அன்போடு அனுமதியளித்தனர். பாரதியார் தம் மனைவியாரோடு நிற்கும் போட்டோவை வெளியிட அனுமதித்ததோடு அதன் பிளாக்கையும் திரு. ஆக்கூர் அநந்தாச்சாரியர் அன்போடு உதவினர்கள். பாரதியாரைப்பற்றிப

பல ஆசிரியர்கள் எழுதியுள்ள நூல்களையும் கட்டுரைகளையும் நான் பயன்படுத்தி யிருக்கிறேன். இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரியது.

எனது நண்பர்கள் திரு கே எஸ். பெரியசாமி, டாக்டர் ல. கி. முத்துசாமி ஆகிய இருவரும் கல்லூரியிற் படிக்கின்ற காலத்தில் என்னுடன் கூட இருந்து பாரதியாரின் கட்டுரை களைச் சுதேசமித்திரனிலிருந்து பிரதியெடுக்க ஆர்வத்தோடு உதவி னார்கள். இந்நூலுக்கு அச்சுப் பிழை பார்ப்பதிலும் பொருளடக் கம் தயாரிப்பதிலும் 'எலலார்வி' அவர்கள் பெரிதும் உதவி செய்தார்கள். இவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்

விஜயதசமித் திருநாள்
அக்டோபர் 1953

பெ. தூரன்

பொருளடக்கம்

முன்னுரைப் பகுதி

முன்னுரை	1
பாரதியார் வாழ்க்கை வரலாறு	11
பாரதி தமிழ்	49
பாரதி இந்தியா	61

நூற் பகுதி

1	வங்கமே வாழிய	1
2	வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு கூறுதல்	5
3	வந்தேமாதரம்	8
4	விண்ணப்பம்	12
5	வந்தேமாதரம்	14
6	என்னே கொடுமை !	16
7	எனது தாய் நாட்டின் முன்னுட் பெருமையும் இந்நாட் சிறுமையும்	17
8	ஸ்வாமி அபேதானந்தர்	19
9	ஆலயங்கள்	23
10	யான்	28
11	சந்திரிகை	30
12	ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் காலஞ்சென்றதைப் பற்றிய இரங்கற் பாக்கள்	32
13	கஜேந்திரன்	34
14	பாரதியார் நடத்திய பத்திரிகைகள்	38
15	சென்னை வாசிகளின் நிதானமும் விபின சந்திரபாலரின் சந்நிதானமும்	47
16	திருவல்லிக்கேணி சுதேசிய விருத்தியம்	52
17	காங்கிரஸ் நாஷனலிஸ்டு டெலிகேட்டுகளுக்கு நோட்டீஸ்	53
18	ஸ்வதேச கீதங்கள்	56

19	ஜன்ம பூமி	58
20	ஞான ரதம்	61
21	மாதர் வாசகம்	63
22	பாஞ்சாலி சபதம்	65
23	மாதா மணி வாசகம்	67
24	எதிர் ஜாமீன் அல்லது மாப்பின்னா விலை	68
25	சித்தக் கடல்	70
26	கீச்சடி	71
27	ஐப்பான் தொழிற் கல்வி	75
28	வி.தோர் ஹியூகோ என்ற பிரெஞ்ச் ஞானியின் வசனங்கள்	80
29	பல	81
30	புதிய உயிர்	88
31	உல்லாஸ சபை	94
32	தமிழ்	101
33	பெண்கள் சர்வகலா சங்கம்	105
34	பாட்டு	108
35	புதுப் பேய்	110
36	சுய ஆட்சியைப்பற்றி ஒரு யோசனை	115
37	உடம்பு	116
38	உண்மை	116
39	ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்	117
40	சில கவியரசர்	120
41	வருங்காலம்	122
42	சக்தி தர்மம்	122
43	பூச்சித் தேவன்	123
44	வேத ரிஷிகளின் கவிதை	132
45	சக்தி தர்மம்	134
46	விதி	138
47	மாலை	141
48	மாலை	141
49	லோகோபகாரம்	142
50	நவராத்திரி	148
51	மாலை	149
52	ஐப்பானியக் கவிதை	150

53	ஏன்	156
54	புயற்காற்று	156
55	புதுச்சேரியில் புயற்காற்று	157
56	சங்கீத விஷயம்	163
57	காலம்	167
58	வனச் பிறை	170
59	தர்மம்	171
60	நாற்குலம்	172
61	பழைய உலகம்	172
62	கிளிக் கதை	172
63	குடிப்பாங்கு	173
64	நான விஷயங்கள்	176
65	நம்பிக்கை	176
66	தொழில்	177
67	பொழுதுபோக்கு	181
68	கடற் பாலத்தில் வாஞ்சிரம சபை	186
69	காமதேனு	197
70	விளக்கு	197
71	விடுதலை	201
72	தெய்வங்க மகா சபை	205
73	பெண்	211
74	அர்ஜுன சந்தேகம்	211
75	ப்ராயச்சித்தம்	212
76	பெண் விடுதலை	219
77	தாதாபாய் நௌரோஜி	220
78	மழை	225
79	ராகவ சாஸ்திரியின் கதை	225
80	கண்ணன் பாட்டு	226
81	கண்கள்	228
82	குழந்தைகள்	231
83	உள்ளருத்த விளக்கம்	234
84	பசு	237
85	நகரம்	239
86	செல்வம்	239
87	ஹிந்து தர்மம்	240

88	உயிரின் ஒளி	243
89	கத்திச் சண்டை	243
90	தமிழ் நாட்டின் விழிப்பு	244
91	கலியுக கடோற்கசன்	244
92	கோபந்தா	245
93	திருவிளக்கு	253
94	ஸ்வராஜ்யம்	253
95	பரலி சு. நெல்லையப்பருக்குக் கடிதம்	259
96	எட்டயபுரம் அரசருக்குச் சீட்டுக் கவிகள்	260
97	வேப்ப மரம்	261
98	காந்தாமணி	270
99	குறிப்புகள்	282
100	தேசீயக் கல்வி	289
101	இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை	290
102	சில குறிப்புகள்	291
103	ரஸத் திரட்டு	299
104	விநோதத் திரட்டு	308
105	சுதேசமித்திரன் பத்திரிகையும் தமிழ்நாடும்	313
106	விநோதக்கொத்து	319
107	வெறும் வேடிக்கை	326
108	விநோத விஷயங்கள்	332
109	உலக விநோதங்கள்	342
110	உலக விநோதங்கள்	348
111	உலக விநோதங்கள்	352
112	விசேஷக் குறிப்புக்கள்	358
113	பட்டணத்துச் செய்திகள்	364
114	ரஸத்திரட்டு	368
115	ரங்கூன் சர்வகலா ஸங்க பஹிஷ்காரம்	373
116	உலக நிலை	377
117	குறிப்புகள்	382
118	காலவிளக்கு	388
119	சில குறிப்புகள்	394
120	ஹாஸ்யம்	400
121	நேசக் கக்ஷியாரின் மூட பக்தி	407
122	பூகோள மஹா யுத்தம்	413

123	மணித்திரள்	419
124	தீப் பொறிகள்	426
125	புதுமைகள்	432
126	மஹா மகம்	441
127	புதுமைகள்	446
128	புதுமைகள்	451
129	காலக் கண்ணாடி	457
130	ரிஷிகள் கடன்	462
131	இந்தியாவின் அழைப்பு	467
132	ஐர்லாந்தும் இந்தியாவும்	470
133	என் ஈரோடு யாத்திரை	474
134	ஒரு கோடி ரூபாய்	477
135	ஸ்ரீ ரவீந்திர திக் விஜயம்	482
136	ஜாதி	488
137	சிறிதும் பெரிதும்	501
138	ஜப்பானுடைய ஆவி	545
139	கல்வி கற்பிக்கும் பாஷை	582
140	துணை நூல்கள்	613

முன்னுரை

1928-ஆம் ஆண்டு நான் சென்னையிலுள்ள மாகாணக் கல்லூரியில் இன்டர்மீடியட் முதல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுதே எனக்குப் பாரதிப் பைத்தியம் என்ற சிறப்புப் பெயர் உண்டு.

இத்தப் பைத்தியம் எனக்கு ஒரு துணிச்சலைக் கொடுத்தது. ஒரு நாள் தன்னந்தனியாகச் சுதேசமித்திரன் பத்திரிகாலயத்திற்குச் சென்று அதன் ஆசிரியரான திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்கள் முன்னிலையில் நின்றேன். "சுப்பிரமணிய பாரதியார் சுதேசமித்திரனில் எழுதத் தொடங்கியதிலிருந்து அதாவது 1905-ஆம் ஆண்டு முதல் 1921-ஆம் ஆண்டு முடிய உள்ள பழைய சுதேசமித்திரன் பத்திரிகையின் தொகுதிகளைப் பார்வையிட ஆர்வத்தோடு வந்திருக்கிறேன். பாரதியார் எழுதியவற்றை ஒன்றுவிடாமல் சேகரம் செய்யவேண்டும் என்பது எனது ஆசை" என்று கூறினேன்.

என்னை யாரென்று அவருக்குத் தெரியாது. அறிமுகக் கடிதம் ஒன்றும் என்னிடமிருக்கவில்லை. அவர் என்னிடத்திலே என்ன கண்டாரோ எனக்குத் தெரியாது. என்னைப்பற்றி அதிகம் விசாரித்து அறிந்து கொள்ளக்கூட அவர் உத்தேசம் செய்யவில்லை. உடனே எனது விருப்பத்திற்கு அன்போடு சம்மதம் தெரிவித்தார். பழைய தொகுதிகள் நிறைந்து கிடக்கும் அந்த அறைக்குள்ளேயே இருந்து வேண்டியவற்றை நகல் எடுத்துக் கொள்ளலாம்; தொகுதிகளை மட்டும் வெளியில் எடுத்துச் செல்லக் கூடாது என்ற ஒன்றைத் தவிர வேறு எந்தவிதமான நிபந்தனையும் இல்லை. என் விருப்பம்போலச் செல்லலாம்; திரும்பி வரலாம்.

இன்றைக்கு நினைத்தாலும்கூட எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. என்னிடத்திலே திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்களுக்கு அன்று எப்படி அவ்வளவு நம்பிக்கை பிறந்ததோ தெரிய

வில்லை. "என்னவோ சிறு வயசுப் பையன், கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கிறவன், பழைய தொகுதிகளிலிருந்து காகிதங்களைக் கிழித்துக் கொண்டுபோய்விட்டால் பிறகு அவற்றை ஈடுசெய்ய முடியாதே" என்ற மாதிரி சாதாரணமாக உண்டாகக்கூடிய எண்ணமே அவருக்கு உண்டாகவில்லை. என் உள்ளத்திலே குமுறிக் கொண்டிருந்த ஆர்வத்தை அவர் நுட்பமாக எடுத்த எடுப்பிலேயே உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவ்வளவு தாராளமாக, அன்போடு அநுமதி தந்திருக்க முடியாது. இத்தச் சம்பவத்தை நினைக்கும்போதெல்லாம் எனக்கு அவரிடத்திலே தனிப்பட்ட ஒரு நன்றியுணர்ச்சி பிறக்கின்றது. அதை எவ்வாறு வெளிப்படுத்துவதென்று எனக்குத் தெரியவில்லை.

பாரதியார் எழுதிய கவிதைகள், கதைகள், கட்டுரைகள் பலப்பல அந்தக் காலத்திலே புத்தக வடிவத்திலே வெளிவராமல் மறைந்து கிடந்தன. அவருடைய நூல்களில் மூன்றும் தொகுதியாக இப்பொழுதுள்ள கட்டுரைகள் என்னும் தொகுப்பு அப்பொழுது வெளியாகவில்லை. அவற்றிற் பல சுதேசமித்திரன் தினசரித் தாள்களில் புதைந்து கிடந்தன. அவையல்லாத வேறு கட்டுரைகளும் அவற்றில் இருந்தன. சுதேசமித்திரன் வார மும்முறைப் பதிப்பொன்றும் பல ஆண்டுகள் வெளியாயிற்று. அதிலும் பாரதியார் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் திரட்டிவிட வேண்டும் என்று நான் துடிதுடித்துக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது வனமலர்ச் சங்கம் என்ற ஒரு சங்கத்தைக் கல்லூரி மாணவர்களாகிய நாங்கள் ஆரம்பித்திருந்தோம். சென்னை, திருச்சி, மதுரை முதலிய நகரங்களிலும் பிற இடங்களிலும் அதற்குக் கிளைச் சங்கங்கள் இருந்தன. நாட்டு விடுதலை, சுதேசி இயக்கம், தமிழ் இலக்கியம் இவற்றில் ஆர்வம் உள்ள கல்லூரி மாணவர்களே வனமலர்ச் சங்கத்தின் அங்கத்தினர்களாக இருந்தார்கள். வனமலர்ச் சங்கத்தின் ஆதரவில் பித்தன் என்ற பத்திரிகை ஒன்றை நாங்கள் ஆரம்பித்தோம். முதலில் அது கையெழுத்துப் பத்திரிகையாக மாதம் ஒருமுறை வெளியாயிற்று.

அங்கத்தினர்கள் அதிகரிக்கவே கையால் எழுத முடியவில்லை. சைக்லோஸ்டைல் பிரதிகள் எடுத்து வெளியிட்டோம். விக்டோரியா ஹாஸ்டலில் எனது அறையில் சைக்லோஸ்டைல் வேலை சதா நடந்துகொண்டிருந்தது. பிறகு அந்த முறையாலும் சமாளிக்க முடியவில்லை. ஆதலால் 32 பக்கங்கள் கொண்ட அச்சுப் பத்திரிகையாக நடத்துவதென்று தீர்மானித்தோம்.

அந்தப் பத்திரிகை இரண்டாவது மாதத்திலேயே 64 பக்கங்கள் கொண்டதாக வளர்ந்தது. நூல் வடிவிலே வெளிவராத பாரதியாரது கட்டுரைகளை அதில் வெளியிடுவதென்றும், பிறகு நூலாகத் தொகுத்து வெளியிடுவதென்றும் நான் தீர்மானித்தேன்.

சுதேசமித்திரன் பழைய பிரதிகளின் தொகுதிகளுள்ள அறைக்குள்ளே மறைந்துகிடந்த பாரதியாரோடு நான் ஆர்வத்தோடு பல நாட்கள், மாதங்கள் அளவளாவிக் கொண்டிருந்தேன்.

பதினைறு ஆண்டுகளில் வெளியான தினசரிப் பத்திரிகை, வாரம் மும்முறைப் பத்திரிகை இவற்றின் தாள்களை ஒவ்வொன்றாகப் பரிசோதித்துப் பாரதியாரின் கட்டுரைகளை யெல்லாம் திரட்டிப் பிரதி எடுப்பது சுலபமான காரியமா? ஆனால் அது எனக்குக் கடினமான வேலையாகத் தோன்றவில்லை. எதிரிலே ஒரு பத்துப் பழந் தொகுதிகளை அடுக்கி வைத்து அவற்றையே மேஜையாக்கிக் கொண்டேன். அவற்றின் ஒரு பக்கத்திலே உட்கார்ந்து வேலை செய்யத் தொடங்கினேன்.

இப்படிப் பிரதி செய்யும் பணியில் எனது நண்பர்கள் திரு. கே. எஸ். பெரியசாமியும், டாக்டர் ல. கி. முத்துசாமியும் எனக்குப் பலநாள் உதவி செய்தார்கள். அவர்களுக்கும் பாரதிப் பைத்தியம் உண்டு. எங்களுடைய தோழமையிலேயே அது வளர்ந்ததாகையால் இந்தக் காரியத்தை உற்சாகமாகச் செய்தோம். பழம் பிரதிகள் நிறைந்த அறைக்கு ஒரு தனிப்பட்ட வாசனையுண்டு. அது எங்களுக்கு நறுமணமாக இருந்தது.

பாரதியார் கவிதை, கட்டுரை, கதை ஒவ்வொன்றையும் எழுதி வெளியிட்ட தேதி அவர் உபயோகித்த புனைபெயர்கள் முதலிய எல்லா விவரங்களையும் விடாமல் குறிக்கவேண்டும் என்பது என்னுடைய ஆசை.

பாரதியார் முதலில் மிஸ்டர் C. சுப்பிரமணிய பாரதி என்று தம் பெயரை வெளியிட்டிருக்கிறார். பின்னல் காளிதாஸன், சக்திதாஸன் என்ற புனைபெயர்களில் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். தமது உண்மைப் பெயரிலேயே எழுதும்போது ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி என்று குறித்திருக்கிறார். அந்தக் காலத்திலே கட்டுரை முதலியவற்றிற்குத் தமிழிலே தலைப்புக் கொடுப்பதோடு, ஆங்கிலத்திலும் தலைப்புக் கொடுப்பது ஒரு வழக்கமாக இருந்திருக்கிறது. பாரதியாருடைய கவிதைகள் சிலவே அவ்வாறு வெளியாகியிருப்பதை இந்நூலில் குறித்திருக்கிறேன். பிற்காலத்திலே பாரதியாரின் எண்ணங்கள் முதிர்ந்த போது ஆங்கிலத்தில் தலைப்புக் கொடுக்கும் பழக்கத்தைக் கண்டித்து எழுதியிருக்கிறார். இந்த மாறுதலை அவர் தமது பெயரை எழுதி வெளியிட்ட முறையிலுங்கூடக் காணமுடிகிறது.

கவிதை, கதை, கட்டுரை எழுதிய காலத்தை அறிந்து அந்த முறையிலே அவற்றை வெளியிட வேண்டும் என்பதும், அதன் மூலம் அவருடைய நடைவளர்ச்சி, கருத்து வளர்ச்சி, கவிதை வளர்ச்சி முதலானவற்றையெல்லாம் ஆராயவேண்டும் என்பதும் என்னுடைய ஆசை. ஆங்கிலத்திலே பல கவிஞர்களைப் பற்றிய இத்தகைய நல்ல ஆராய்ச்சிகளை நான் படித்திருக்கிறேன். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஆரம்பகால நாடகங்கள் என்றும், இடைக்கால நாடகங்கள் என்றும், முதிர்ச்சிக்கால நாடகங்கள் என்றும் அவற்றைக் குறித்து அவற்றின் சிறப்பை ஆராய்ந்திருக்கிறார்கள். ஆரம்பகால நாடகங்களில் சொல்லதிகம், கருத்தும் கவிதையும் குறைவு என்றும், இடைக்காலத்து நாடகங்களில் அவை சமநிலை பெறுகின்றன என்றும், முதிர்ச்சிக்கால நாடகங்களிலே கவிதைப் பெருக்கும், கற்பனைத் திறமும், கருத்தாழமும் சொற்களை மீறிக் கொண்டு பொங்குகின்றனவென்றும் சுவைத் தேர்ச்சியாளர்கள் கண்டிருக்கிறார்கள். அவ்வாறு பாரதியாரை ஆராயவேண்டுமென்று கவிதைகளுக்கும், கட்டுரை கதைகளுக்கும் அவை வெளியான தேதிகளைக் குறித்து வைத்தேன்.

முன்பே புத்தக வடிவில் வந்த பல கவிதை முதலியவற்றிற்கு அத்தொகுதிகளிலேயே தேதி குறித்திருக்கிறேன். அத்தொகுதிகள் எப்படியோ என் கையைவிட்டு நழுவிவிட்டன. நிச்சயமாகத் திருப்பிக் கொடுத்துவிடுவதாக வாக்குறுதியளித்து மறந்துபோன அன்பர்களின் அஜாக்கிரதையால் அவை கிடைக்காமற் போய்விட்டன என்பதை நினைத்தால் எனக்கு வருத்தமாக இருக்கிறது. ஆனால் நல்லவேளையாக இந்நூலில் வெளியிட்டுள்ளவைகளுக்கும் இன்னும் பலவற்றிற்கும் அவை வெளியான தேதிக் குறிப்புகள் அவறறை எழுதி வைத்துள்ள தாள்களிலேயே இருந்தன. அவற்றைக் குறித்திருக்கிறேன். பாடல்கள் பலவற்றிற்கும் அவ்வாறே செய்திருக்கிறேன். அவற்றிலிருந்து பாரதியாருடைய இலக்கியத் திறமையின் மலர்ச்சியை ஒருவாறு அறியலாம்.

அன்பர் பரலி சு. நெல்லையப்பர் பாரதியாரோடு தொடர்புடையவர்கள். பாரதியாரைப் பற்றிய பல விஷயங்களை அவர் பல தடவை என்னிடம் கூறியிருக்கிறார். பாரதியார் தமக்கு எழுதிய இரண்டு கடிதங்களை அவர் எனக்குக் கொடுத்தார். அந்த இரண்டு கடிதங்களும் பாரதியார் எழுதிய நூல்களை வெளியிடுவது பற்றியவை. அவையல்லாமல் குற்றாலத்திற்குச் சென்ற சமயத்தில் அந்த அருவியை வருணித்து நெல்லையப்பருக்குப் பாரதியார் ஒரு கடிதம் எழுதியிருந்தாராம். அந்தக் கடிதத்தைப் படித்தால் குற்றால அருவியின் அழகிய காட்சியைக் காண்பது போலவே இருக்குமென்று நெல்லையப்பர் கூறினார். அதையும் எனக்குக் கொடுக்கத் தேடியபோது அது கிடைக்கவில்லை. அவருக்கும் ஏமாற்றம்; எனக்கும் ஏமாற்றமாக முடிந்தது.

முன்னால் குறிப்பிட்ட கடிதங்கள் பதின்மூன்று ஆண்டுகள் என்வசமிருந்தன. பிறகு ஒருநாள் நெல்லையப்பரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அந்த இரு கடிதங்களும் ஏதோ ஒரு காரியத்திற்காக வேண்டியிருக்கின்றன என அவர் எழுதினார். "பன்னிரண்டு ஆண்டுகளுக்குமேல் உங்கள் வசம் இருக்கும் கடிதங்கள் உங்களுக்கேதான் சொந்தம். எனக்குக் கேட்க உரிமை கிடையாது. ஆனால் நீங்கள் விரும்பினால் கொடுத்துதவ

லாம்" என்று அவர் கடிதத்தில் தெரிவித்திருந்தார். அவரிடத்திலே பெரிதும் மரியாதை கொண்டுள்ள எனக்கு அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்யாமலிருக்க முடியுமா? கடிதங்களை அனுப்பி வைத்தேன். குழந்தை உள்ளம் படைத்த நெல்லியப்பர் அவற்றை யாரிடமோ கொடுத்து இழந்துவிட்டார். நாங்கள் சந்திக்கும்போது இன்றும் அதை நினைத்துத் துக்கப்படுவதுண்டு. ஆனால் நல்ல வேளையாக அவற்றில் ஒரு கடிதத்தை நான் அப்படியே பிளாக் செய்து பாரதியாருடைய கையெழுத்திலேயே ஒருசமயம் கலை மகளில் வெளியிட்டிருக்கிறேன். அது இப்பொழுது கிடைத்தது. மற்றது மறைந்துபோயிற்று.

இந்நூல் இதுவரை வெளியிடாததற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. கீட்ஸ் என்ற கவிஞனைப்பற்றி ஆங்கிலத்திலே நான் ஒரு ஆராய்ச்சி நூல் படித்தேன். அவருடைய வாழ்க்கையையும், கவிதைத் திறனையும் மிக விரிவாக ஆராய்ந்து அதில் எழுதி யிருந்தது. கீட்ஸின் தலைமுடியின் நிறம் தங்கநிறமானதா செம் பட்டையானதா என்பதைப் பற்றிக்கூட அதில் விரிவாக ஆராய்ச்சி செய்யப்பட்டிருந்தது. அவரைப்பற்றி என்னென்ன தெரிந்து கூறமுடியுமோ அத்தனையும் அந்த நூலிலே இருந்தது. அதைப்போலப் பாரதியாருக்கு ஒரு வாழ்க்கை வரலாறும், இலக்கிய ஆராய்ச்சியும் செய்து இவற்றை வெளியிடவேண்டு மென்று நான் கனவு கண்டுகொண்டிருந்தேன். அவருடைய வாழ்க்கையைப் பற்றிப் பல விஷயங்களைத் திரட்டவேண்டு மென்றும் திட்டமிட்டிருந்தேன்.

ஆனால் இதுவரை அவ்வளவு விரிவான ஆராய்ச்சி செய்ய ஒழிவு கிடைக்கவில்லை. இடையிடையே முயன்றும் காலக் குறைவால் பெரியதோர் அளவிற்கு ஒன்றும் சாதிக்க முடிய வில்லை. ஆகையால் இனிமேலும் ஒழிவுக்காகக் காத்திருந்து பாரதியாரின் இலக்கியத்தை மறைத்து வைத்திருப்பது சரியல்ல வென்று எனக்குத் தோன்றியது. ஆகவே பாரதியாரைப் பற்றிப் புதிதாக இதுவரை தெரிந்த விவரங்களையும், வெளிவராத அவ ருடைய கவிதை, கதை, கட்டுரை, மற்றக் குறிப்புக்களையும் வெளியிட்டுவிடுவதென்ற தீர்மானத்திற்கு வந்தேன்.

இவ்வாறு வெளியிடுவதற்கும் பாரதியாரைப் பற்றிய ஆராய்ச்சியில் முன்னர் வெளிவந்துள்ள நூல்களிலிருந்து மேற்கோள் குறிப்புக்கள் எடுத்துக் கொள்வதற்கும் அன்புடன் அநுமதி தந்த சுதேசமித்திரன் ஆசிரியர் திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்களுக்கும், சென்னை அரசாங்கத்திற்கும், ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த நூலிலே பாரதியாரின் கவிதை, கதை, கட்டுரை முதலியவற்றை அவை வெளிவந்த தேதிக்கிரமப்படி வெளியிட்டிருக்கிறேன். முன்பே நூல் வடிவில் வெளியான கட்டுரையானால் அது சுதேசமித்திரனில் வெளியான தேதி தெரிந்திருந்தால் அதை மட்டும் குறிப்பிட்டிருக்கிறேன். பாரதியார் எழுதியதாக அவர் பெயரில் சில கட்டுரைகள் சமீப காலத்தில் சில பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் அவை பாரதியாருடைய கட்டுரைகள்தாமா என்பதற்கு எனக்கு நிச்சயமான அத்தாட்சி கிடைக்காமையாலும் அவை முதல் முதலாக வெளிவந்த பழம் பத்திரிகைகளை நான் பார்க்க முடியவில்லை யாதலாலும் அவற்றை இத் தொகுதியில் சேர்க்க விரும்பவில்லை.

பழைய சுதேசமித்திரனிலும்கூட வேறு புனைபெயர்களில் வந்துள்ள ஒரு சில கட்டுரைகள் பாரதியார் எழுதியவைதாமோ என்று ஐயுறும்படி உள்ளன. ஆனால் நிச்சயமாகத் தெரியாத தால் அவற்றை நான் பிரதி செய்யவில்லை. இன்னும் ஊன்றிப் பார்த்திருந்தால் ஒரு சிலவாவது கிடைத்திருக்கும்.

இதுவரை நான் செய்த முயற்சி எனக்குப் பூரண திருப்தி யளித்திருப்பதாக யாரும் நினைக்கக்கூடாது. தமிழுக்குப் புத்துயிர் தந்த கவிஞரின் எழுத்தை ஒன்று விடாமல் தொகுத்து வெளியிடவேண்டும் என்றும், அவரது எழுத்துத் திறமையின் வளர்ச்சியைக் காலக்கிரமத்தில் ஆராய்ந்து புது முறையிலே வாழ்க்கை வரலாறும், இலக்கியத் திறனாய்வும் எழுதவேண்டும் என்றும் நான் கொண்டுள்ள ஆசையை ஓரளவிற்கே இந்த நிறைவேற்றி யிருக்கிறேன். இந்தியா, ஞானபானு, சக்ரவர்த்தினி, தேச பக்தன், லோகோபகாரி முதலான பல பத்திரிகைகளின் பழம்

பிரதிகளை இன்னும் நன்றாக ஆராயவேண்டும். சுதேசமித்திரனில் வெளியான கட்டுரை, கவிதைகளின் தேதியைக் குறித்து வைத்திருந்ததுபோலவே கவிதைகள் சிலவற்றை எழுதக் காரணமான நிகழ்ச்சிகளையும் குறித்து வைத்திருந்தேன். உதாரணமாக **பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்** என்ற பாடலைப் பாடுவதற்குத் தினபந்து ஆண்டுருஸ் எழுதிய கட்டுரையொன்று காரணமாக அமைந்தது. தினபந்து பிஜிக்குச் சென்று அங்கு இந்தியப் பெண்களின் நிலைமையை நேரிற் கண்டறிந்து அது பற்றி மாடர்ன் ரெவியூ பத்திரிகையில் உருக்கமாக எழுதினார். அதைப் படித்த பாரதியார் அப்பாடலை இயற்றினார். இந்த விவரம் அப்பாடல் வெளியான காலத்திலேயே அதனடியில் கொடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு குறித்து வைத்திருந்த காவிய நூல் கைகழுவிவிட்டதென்று முன்பே குறித்திருக்கிறேன். அந்த விவரங்களை மீண்டும் சேகரித்தால் பாரதியாரை இன்னும் நன்கு அறிந்து அநுபவிக்க உதவியாகவிருக்கும்.

பாரதியாரும் வ. வெ. சு. ஐயரும் சேர்ந்து ரவீந்திரநாத டாகூரின் சிறுகதைகள் பலவற்றை அழகாக மொழிபெயர்த்தார்கள். அவற்றின் தொகுப்பு நூல்களும் எப்படியோ என்னிடமிருந்து மறைந்துபோயின. வ. ரா. குறிப்பிடும் சின்னச் சங்கரன் கதை, எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு குறிப்பிடும் புதிய கட்சியின் கோட்பாடுகள், எங்கள் காங்கிரஸ் யாத்திரை முதலான சிறு வெளியீடுகள் முதலிய எல்லாவற்றையும் தேடிப் பிடிக்கவேண்டும்.

நெல்லையப்பர் ஒரு தங்கமான மனிதர். பாரதியாரிடத்திலே பேரன்புபூண்டவர்களில் ஒருவர். இவரைப்போலவே பாரதியாரை நேரில் அறிந்த திரு. எஸ். துரைசாமி ஐயர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதலியோர் அவரைப்பற்றி உண்மையான விவரங்கள் பலவற்றை அறிவார்கள். பாரதியாரைப்பற்றி உரிமையோடு பேசக்கூடிய அவர் மனைவியார் திருமதி செல்லம்மா பாரதி, குழந்தைகள் திருமதி தங்கம்மா பாரதி, சகுந்தலா பாரதி, அவருடைய மாமா சாம்பசிவ ஐயர், தம்பி திரு. விசுவநாத ஐயர் முதலியோர் நம்முடன் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் விசாரித்து வாழ்க்கை விவரங்கள் பலவும் தயாரிக்க

வேண்டும். ஒருசமயம் பாரதியார் கனம் கிருஷ்ணசாமி ஐயருடைய வீட்டிற்குச் சென்று தாம் பாடிய பாடலொன்றைப் பாடிக் காட்டினாராம். படுத்துக்கொண்டிருந்த கிருஷ்ணசாமி ஐயர் பாடலைக் கேட்கக் கேட்க அதிலே மெய்ம்மறந்து எழுந்து நின்றாராம். பாரதியாருக்கு நூறு ரூபாய் கொடுத்து அந்தப் பாடலை அச்சிட்டு வெளியிடுமாறு கூறினாராம். பாரதி விழாக் கொண்டாடிய ஒருசமயத்திலே இந்த விவரத்தைக் கனம் கிருஷ்ணசாமி ஐயர் அவர்களின் புத்திரர் திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர் கூற நான் கேட்டேன். இலக்கிய ரஸிகர் பி. ஸ்ரீ. அவர்கள் பாரதியாரைப்பற்றி அறிந்திருக்கிறார்கள். இவர்களிடமிருந்தெல்லாம் விஷயங்களை அறிந்து உண்மையான வாழ்க்கை வரலாறும பாரதி இலக்கியத் திறனாய்வும் செய்யவேண்டும், இதுவரை பாரதியாரைப்பற்றி எழுந்துள்ள நூல்களையும். முக்கியமாக வ. ரா., திருமதி செல்லம்மா பாரதி அவர்கள் எழுதிய நூல்களையும் துணைக்கொள்ள வேண்டும் என்பதை நான் கூறவேண்டுவதில்லை.

இவற்றில் சிலவற்றைத்தான் நான் ஓரளவு திருப்திகரமாகச் செய்ய முடிந்தது. பாரதியாரின் இலக்கிய வளர்ச்சியைக் காலக் கிரமத்தில் ஆராய்வதை நான் முக்கியமாக இந்நூலில் கொண்டிருக்கிறேன். அவருடைய வாழ்க்கை வரலாற்றையும் விரிவாக இல்லாமற்போனாலும் ஒருவாறு கால நிர்ணயத்தோடு எழுத முயன்றிருக்கிறேன். பாரதியாரின் நூல்களுக்கு ஆங்காங்கே குறிப்பாகத் திறனாய்வும் கண்டிருக்கிறேன். இன்னும் விரிவான முறையில் இந்த ஆராய்ச்சியைச் செய்யப் பாரதியன்பர்களும், தமிழன்பர்களும் வருங்காலத்திலே முன்வருவார்களென்று நம்புகிறேன். அவ்வாறு செய்தால் அது, தமிழ்நாட்டிற்கு ஒரு புது விழிப்பையும், தமிழுக்கு ஒரு புதிய சக்தியையும் ஊட்டிய பாரதியாருக்குச் செய்யும சிறந்த சேவை என்பதோடு தமிழுக்கும் சிறந்த சேவையாகும் என்று நான் கருதுகிறேன்.

சென்னை
செப்டம்பர் 11, 1953

பெ. தூரன்

பாரதியார் வாழ்க்கை வரலாறு

1904 - ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே ஒருநாள். அது மிக நல்ல நாள். தமிழன்னையின் உள்ளம் களிப்பெய்த மலர்ந்த ஒரு புனிதத் திருநாள் அது. அன்றுதான் பாரதியார் தமது உண்மையான இலக்கிய வாழ்வைத் தொடங்க மதுரையம்பதியை விட்டுச் சென்னைமாநகருக்குப் புறப்பட்டார். சென்னையை நோக்கி ரெயிலிலே வந்து கொண்டிருந்த அவருள்ளத்திலே என்னென்ன எண்ணங்கள் குமுறிக் கொண்டிருந்தனவோ யார் அறிவார்கள்! அந்த எண்ணங்களெல்லாம் தமிழைப் பற்றியும் பாரத தேசத்தைப்பற்றியும் தமிழுக்கும் பாரத தேசத்திற்கும் செய்ய வேண்டிய தமது சேவையைப் பற்றியுமே இருந்திருக்க வேண்டும் என்று மட்டும் நாம் நிச்சயத்தோடு ஊகிக்கலாம். எட்டையபுரத்தை விட்டு வந்து மதுரையிலே சிறிது காலத்திற்கு மேற்கொண்ட தமிழாசிரியர் வேலையை நினைத்துச் சிரிப்பும் இடையிடையே தோன்றி யிருக்க வேண்டும். தமிழாசிரியர் வேலை தாழ்ந்தது என்பதற்காக அல்ல. ஆனால் அவருடைய இயல்பிற்கும் அந்தக் காலத்திலே தமிழாசிரியர் தொழில் இருந்த நிலைமைக்கும் அவ்வளவு பொருத்தமில்லை என்பதை நினைத்தே அவர் புன்னகை செய்திருக்க வேண்டும். ஒரு சில மாணவர்களுக்குத் தமிழினிடத்தே பக்தியையும், தேசத்தினிடத்தே பக்தியையும் உண்டாக்குவதை விடுத்துத் தமிழ் நாட்டிற்கே அவ்வித பக்தியை உண்டாக்க அவர் புறப்பட்டுவிட்டார்.

பாரதியார் 1904–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று, மதுரையிலுள்ள சேதுபதி உயர்தரப் பள்ளியில் தமிழாசிரியரானார். அந்த ஆசிரியர் பணியை இரண்டு

மாதம் பத்து நாட்கள் அதாவது 1904 நவம்பர் 10–ஆம் தேதி வரை செய்துவிட்டுச் சென்னையை நோக்கிப் புறப் பட்டிருக்கிறார்.*

தமிழாசிரியராக அவருக்கு மாதம் 17½ ரூபாய் சம்ப ளம் கிடைத்தது.

பாரதியார் தமது இருபத்திரண்டாவது வயதிற்குள் சமஸ்தானப் புலவர், தமிழாசிரியர் ஆகிய இரண்டு பணி களிலே ஈடுபட்டு அவை இரண்டையும் தள்ளிவிட்டுப் பத்திரிகைத் தொழிலை நாடிச் சென்னைக்கு வந்தார்.

அவ்வாறு வருவதற்குச் சாதகமாக இருந்த நிகழ்ச்சி யைப் பற்றித் திரு. வ. ரா. அவர்கள் **மகாகவி பாரதியார்** என்ற தமது அழகிய நூலிலே கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார்.

---

* இந்த விவரத்தை எனக்குத் தெரிவித்தவர் இப்பொழுது சேதுபதி உயர்தரப் பள்ளியின் தலைமையாசிரியராக இருக்கும் திரு எஸ். நாராயண ஐயர் அவர்கள். எனக்கு அவர் எழுதி யுள்ள கடிதம் வருமாறு :—

மதுரை
30-3-1953

அன்புடையீர்,

தங்கள் 24-3-'53 தேதியுள்ள கடிதம் கிடைத்தது. அதிற் குறிக்கவாறு பழைய கன்சாவேஜிகளைத் தேடிப் பார்த்ததில் காலஞ்சென்ற அமரகவி திரு சுப்பிரமணிய பாரதியாரவர் கள 1-8-1904 முதல் 10-11-1904 வரை இப் பள்ளியில் தமி ழாசிரியராகப் பணியாற்றி யிருப்பதாகத தெரிகிறது. இச் செய்தியை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொளளுகிறேன்.

தங்கள்
எஸ். நாராயண ஐயர்,
தலைமை ஆசிரியர்.

இதே விவரத்தை அந்த உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி வரும் திரு. வீ. ஜி. சீனிவாசன் அவர்களும் கண்டறிந்து எனக்குத் தெரிவித்தார்கள். இருவருக்கும் என் நன்றி உரியது.

"இந்தச் சமயத்தில், சென்னையில் சுதேசமித்திரன் பத்திரிகையை நடத்தி வந்த காலஞ்சென்ற ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யர் மதுரைக்குப் போய்ச் சேர்ந்தார். அப்பொழுது சுப்பிரமணிய அய்யர் பாரதியாருக்கு அறிமுகமானர். பாரதியாரின் மேதையை அவர் உடனே தெரிந்து கொண்டார். உள்ளூர அவருக்கு ஆனந்தம். எப்படியாவது பாரதியாரைச் சென்னைக்குக் கொண்டு போய்விடுகிறது என்று அய்யர் தீர்மானங் கொண்டார். பாரதியாரின் மேதையை நேரில் கண்ட அய்யர், சென்னைக்கு வரும்படி பாரதியாரை வேண்டிக்கொண்டார்".

திரு. ஆக்கூர் - அனந்தாச்சாரி அவர்கள் **கவிச் சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதி சரிதம்** என்ற ஒரு நூலை 1936 லேயே வெளியிட்டுள்ளார்கள். அதிலே அவர் கூறுவதாவது

"எவருக்கும் கட்டுப்படும் சுபாவம் பாரதியாரிடம் இல்லாததன் காரணமாக 1904-ம் வருடம் எட்டையபுரம் சமஸ்தானத்திலிருந்து விலகிக்கொள்ள நேரிட்டது. பிறகு மதுரை சென்று அங்கு மூன்றுமாத காலம் சேதுபதி உயர்தரப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதராக இருந்தார். அவருக்கு வேறொத்தொழிலேனும் மேற்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் மேலிட்டது. சென்னைப் போதனு முறைக் கல்லூரி வைஸ் பிரின்சிபாலும் தம்மது உறவினருமான லக்ஷ்மண அய்யருக்கு இவ் விஷயத்தைப் பற்றி எழுதினர். லக்ஷ்மண அய்யர் தமது நண்பரொருவர் மூலம் சுதேசமித்திரன் காரியாலயத்தில் பாரதியாருக்கு வேலை ஏதாவது கிடைக்குமாவென விசாரித்தார். அவ்வமயம் உதவி ஆசிரியர் ஸ்தானம் காலியாக விருப்பதை அறிந்து பாரதியாரைச் சென்னைக்கு வரவழைத்து மிகுந்த சிபார்சின் பேரில் சுதேசமித்திரனில் வேலைக்கமர்த்தினர்".

எப்படியோ 1904-ல் பாரதியார் சென்னை வந்து சுதேசமித்திரன் காரியாலயத்திலே பணியாற்ற அமர்ந்துவிட்டார்

வங்க வாழ்த்துக் கவிகள் என்ற அவருடைய பாடல் சுதேச மித்திரனில் 15-9-1905-ல் வெளியாகியிருக்கிறது. சுதேச மித்திரனில் பாரதியார் எழுதிய முதற் கவிதை இது வென்றே எனக்குத் தோன்றுகிறது. அதற்கு முந்திய தேதியில் அவர் தமது பெயரிட்டுச் சுதேசமித்திரனில் எழுதியதாகக் கவிதையோ, கட்டுரையோ எனக்கு எதுவும் கிடைக்கவில்லை. சுதேசமித்திரனில் சேர்ந்த முதல் ஏழெட்டு மாதங்கள் அவர் சாதாரண உதவியாசிரியர் போன்றே தினசரிக் கடமைகளைச் செய்திருக்கலாம். தனியாக வேண்டுமானல் கவிதை எழுதி வைத்திருக்கக்கூடும்.

சமஸ்தானத்துப் புலவராக இருந்து சமஸ்தானத்துக்கு உகந்த பாடல்களை எழுதுவதில் தொடங்கித் தேசத்துப் புலவராக மாறித் தேசத்துக்கும் தமிழுக்கும் உகந்த பாடல்களை எழுதும் வாய்ப்பைச் சுதேசமித்திரன் பத்திரிகையின் வாயிலாகப் பாரதியார் பெற்றார். அவர் உள்ளத்திலே அரும்பி விட்டுக் கொண்டிருக்கும் தேசிய உணர்ச்சி மலருவதற்கும் சென்னை வாழ்வே ஏற்ற சூழ்நிலையாக அமைந்தது.

ஆனல் உதவியாசிரியராகவே இருப்பதில் அவருக்குத் திருப்தி யேற்படவில்லை. அவருடைய கருத்துக்களையும் புதிய தேசிய உணர்ச்சியையும் யாதொரு தடையுமில்லாமல் வெளியிடுவதற்குத் தாமே பிரதம ஆசிரியராகவிருந்து நடத்தும் பத்திரிகை வேண்டும் என்று தோன்றியது. ஆதலால் பாரதியார் சுதேசமித்திரனிலிருந்து கொண்டே சக்ரவர்த்தினி என்ற பத்திரிகை யொன்றை நடத்துவதை நாம் காண்கிறோம்.

பங்கிம் சந்திரபாபு எழுதிய "வந்தே மாதரம்" என்ற அமர கீதத்தின் தமிழ் மொழி பெயர்ப்போடு அக் கீதத்தைப் பற்றிய விளக்கம் தாங்கிய கட்டுரை யொன்று சக்ரவர்த்தினியின் 1905-ஆம் ஆண்டு நவம்பர் இதழில் வெளியாகியிருக்கின்றது.

1906 ஜனவரி 29-ஆம் தேதியில் சுதேசமித்திரனில் வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு கூறிக் கவி யெழுதும் அதே கை இரண்டு மாதங்களுக்கு முன்பு வந்தே மாதர கீதத்தைத் தமிழில் வரைந்திருக்கிறது. 1906 ஜனவரிக் கடுத்த பிப்ரவரியிலே "வந்தே மாதரம்" என்ற சொந்தப் பாடலைச் சுதேசமித்திரனிலேயே தீட்டியும் இருக்கிறது.

பாரதியாரின் தேசிய உணர்ச்சியின் மலர்ச்சிக்கு அவரது காசி வாழ்க்கையும் பெரிதும் உதவியிருக்க வேண்டும். அவர் இளமையிலே காசிக்குச் செல்ல நேரிட்டதையும் மற்ற விவரங்களையும் அறிந்து கொள்வதற்கு அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பிறப்பிலிருந்து தொடர்ச்சியாக அறிந்து கொள்வது நல்லது.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சிவலப் பேரியிலே சுப்பையர் என்பார் தமது நிலங்களைக் கவனித் துக்கொண்டு சுகமாக வாழ்ந்து வந்தார். அவருக்குக் குப்பம் மாள், சின்னசாமி அய்யர், சுந்தரராஜ அய்யர் என்ற மூன்று மக்கள் உண்டு.

சின்னசாமி அய்யர் தமது அறிவுத் திறமைக் கேற்ப நல்ல உத்தியோகம் வகிக்க ஆசை கொண்டு எட்டயபுரம் சமஸ்தானத்தை யடைந்தார். "அவரது கூரிய புத்தியையும் தமிழ்ப் புலமையையும் கண்ட மகாராஜா, அவருக்குத் தமது அரச சபையில் முதல் ஸ்தானம் அளித்துக் கௌர விக்தார். சின்னசாமி அய்யர் தமது தாய் மாமன் மகளான லக்ஷ்மியை மணந்து இல்லறம் நடத்தலானார். .....சின்னசாமி அய்யருக்கு இவ்வளவு நற்குணங்கள் அமைந்தும், முன் கோபம் பட்டும் அசாத்தியம். உறவினரோ மனைவியோ எதிர் நின்று பேசவும் நடுநடுங்குவார்கள்." (திருமதி செல்லம்மா பாரதி—பாரதியார் சரித்திரம்.)

சின்னசாமி அய்யருக்கும் லக்ஷ்மிக்கும் மைந்தராக 1882 ஆம் வருஷம் கார்த்திகை மாதம் மூல நக்ஷத்திரத்

தன்று எட்டயபுரத்தில் சி. சுப்பிரமணிய பாரதியார் பிறந் தார். அவர் பிறந்த தேதியை 11—12—1882 என்று கிறிஸ்துவ சகாப்தத்தை முழுதும் ஒட்டிக் கணக்கிட்டிருக் கிறார்கள்.

பாரதியாருக்கு ஐந்து வயது நிரம்பு முன்னரே அவருடைய தாயார் காலமாய்விட்டார்கள். அதனால் அவரையும் அவருடன் பிறந்த சகோதரி பாகீரதியையும் அவருடைய பாட்டியாராகிய பாகீரதியம்மாளே அன்புடன் வளர்த்து வந்தார்.

சின்னசாமி அய்யருக்கு எட்டயபுரம் சமஸ்தானத்திலே செல்வாக்கு அதிகம். அதனால் பாரதியாருக்கு அங்கே அதிகச் சலுகைகள் இருந்தன. சமஸ்தான வித்வான்களோடு தாராளமாகப் பழகவும் பேசவும் அவருக்கு உரிமையிருந் தது. வித்வான்களைப் போலப் பாடவும் வாய்ப்புண்டா யிற்று. பெரிய இடத்துப் பிள்ளையென்றால் அவனுடைய செயல்களுக்குச் சற்று அளவு கடந்தே புகழ்ச்சி ஏற்படுவது இயல்பு. அதனால் இயற்கையாகவே கவிதைத் திறமை பெற்றிருந்த இவருக்குப் "பாரதி" என்ற பட்டம் கிடைத்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. புலவர்களோடு அளவளாவுதலும், பாரதியென்ற பட்டமும் அவருக்குக் கவிதைத் துறையிலே நல்ல உற்சாக மளித்திருக்க வேண்டும்.

சின்னசாமி அய்யருக்குத் தம் மைந்தன் கணித சாஸ் திரத்திலும் யந்திரக் கலையிலும் வல்லவனாக வேண்டும் என்று ஆசை. பாரதியாருக்கு இயல்பான திறமை எதிலிருக்கிறதோ அந்தத் துறையிலே அவருக்கு எட்டய புர சமஸ்தான வாழ்வுதான் பெரிதும் உதவியாக இருந்தது என்று சொல்ல வேண்டும்.

சின்னசாமி அய்யர் தமது விருப்பத்திற்கேற்பப் பாரதி யாரைப் புத்தகமும் கையுமாகக் காலங் கழிக்க வேண்டு

மென்று விரும்பினர். தந்தையிடத்திலே மகனுக்குப் பயமும் அதிகம். அதனால் துள்ளித்திரிய விரும்பும் இளமைக் காலத்திலே பாரதியார் புத்தகத்தைத் தவிர வேறு தோழமையின்றி வருந்தினராம். இதை அவர் **ஸ்வசரிதை** என்ற பாடலிலே நன்றாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஆண்டோர் பத்தினி லாடியு மோடியும்
ஆறு குட்டையி னீச்சினும் பேச்சினும்
ஈண்டு பன்மரத் தேறி யிறங்கியும்
என்னை டொத்த சிறிய ரிருப்பரால்
வேண்டு தந்தை விதிப்பினுக் கஞ்சியான்
வீதி யாட்டங்க ளேதிலும் கூடிடேன்
தூண்டு நூற்கணத் தோடு தனியனாய்த்
தோழமை பிறி தின்றி வருந்தினேன்

என்று அவர் தமது இளமை ஏக்கத்தை விவரிக்கிறார்.

பாரதியாரின் தாயார் லக்ஷ்மியம்மாள் இறந்த இரண்டாண்டுகளின் பின் சின்னசாமி அய்யர் வள்ளியம்மாள் என்ற பெண்மணியை இரண்டாந் தாரமாக மணம் செய்து கொண்டார். அந்த அம்மாள் மூலமாக அவருக்கு ஆண் குழந்தை யொன்றும், பெண் குழந்தை யொன்றும் பிறந்தன.

பாரதியாருக்கு ஆங்கில உயர்தரக் கல்வி அளிக்க வேண்டு மென்றும், சீமைக்கு அவரை அனுப்ப வேண்டு மென்றும் சின்னசாமி அய்யருக்கு ஆசையிருந்தது. முதலிலே திருநெல்வேலிக்கு அனுப்பி ஹிந்து கலாசாலையில் படிக்க வைத்தார். திருநெல்வேலிக்குச் செல்லும்போது அவருக்கு வயது என்ன என்பது தெரியவில்லை. 1887 முதல் 1890 வரை அங்கு படித்ததாக யோகி சுத்தானந்த பாரதியார் தமது **பாரதி விளக்கம்** என்ற நூலில் கூறுகிறார். அவ்வாறானால் அவர் தமது ஐந்தாம் வயதில் அங்கு படிக்கச்

சேர்ந்ததாக ஆகிறது. இது சரியென்று தோன்றவில்லை. ஐந்தாம் பாரம் வரை அங்கு படித்ததாக ஏற்படுவதால் அவர் மணமாகும் வரையிலோ அல்லது அதன் பின்னருங் கூடவோ படித்திருக்க வேண்டும்.

பாரதியாருக்கு அந்தப் படிப்பும் பிடிக்கவில்லை.

செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது
தீதெ னக்குப் பல்லாயிரஞ் சேர்ந்தன
நலமொ ரெட்டுகீ ணுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற சொல்லுவேன்

என்று அவரே தமது திருநெல்வேலிப் படிப்பைப் பற்றிக் கூறுகிறார். ஐந்தாம் பாரம் வரையில்தான் பாரதியார் அங்கு படித்தார்.

இதன் மத்தியிலே பாரதியாருக்குக் கல்யாண ஏற்பாடாகி விட்டது. 1897 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கீழ்க்கடையத்தில் வாழ்ந்த செல்லப்பா அய்யரின் புதல்வி செல்லம்மாளுக்கும் இவருக்கும் திருமணம் நடைபெற்றது.

மணமாகும் போது பாரதியாருக்கு வயது பதினொன்று என்று அவர் மனைவியார் எழுதுகிறார்கள்; பதினைந்து என்று மற்ற நூல்கள் கூறுகின்றன. ஆனால் தமக்கு அப்பொழுது வயது 12 என்று பாரதியார் தமது **ஸ்வசரிதை** யில் இரண்டு முறை குறிப்பிடுகிறார். ஒரு வேளை அது அவர் ஞாபகப் பிசகாக எழுதியதாக இருக்கலாம். மணமாகும்போது திருமதி செல்லம்மாளுக்கு வயது ஏழு.

இந்தச் சந்தர்ப்பத்திலே **ஸ்வசரிதை** கூறும் மற்றொரு விஷயந்தான் நன்றாக விளங்கவில்லை.

பத்து வயதினிலே தோழமை யின்றிப் பாரதியார் **வருந்தியதைப்** பற்றி முன்பே குறித்தேன். அவ்வாறு **துன்பம்** உழன்ற காலத்தில் ஒன்பது வயதுள்ள ஒரு

அழகிய கன்னியைக் கண்டு காதலுற்றதாக அவர் **ஸ்வசரிதை** யில் கூறுகிறார்.

ஒன்ப தாயபி ராயத்த ளென்விழிக்
கோது காதைச் சகுந்தலை யொத்தனள்.

பிள்ளைக் காதலர்கள் இருவரும் "கானகத்தி லிரண்டு பறவைகள் காதலுற்றது போல" அன்பு கொண்டிருந் தனர். அவர்கள் காதலிலே உடலைப்பற்றிய எண்ணமே இல்லை.

ஊன கத்த துவட்டுறு மன்புதா
னென்று மின்றி யுயிர்களி லொன்றியே
தேன கத்த மணிமொழி யாளொடு
தெய்வ நாட்கள் சிலகழித் தேனரோ

என்று இவ்வாறு பாரதியார் பாடுகிறார்.

இந்த நிலையிலே பாரதியாருக்குத் திருமணம் நடந்தது.

ஆங்கொர் கன்னியைப் பத்துப் பிராயத்தில்
ஆழ நெஞ்சிடை யூன்றி வணங்கினன்;
ஈங்கொர் கன்னியைப் பன்னிரண்டாண்டனுள்
எந்தை வந்து மணம்புரி வித்தனன்

என்றும்,

கற்றுங் கேட்டு மறிவு முதிரு முன்
காதலொன்று கடமையொன் றுயின

என்றும் பாரதியார் கூறுவதிலிருந்து அவருடைய பிள்ளைப் பருவத்திலே ஏற்பட்ட ஓராழ்ந்த அன்புணர்ச்சியை நாம் அறிகிறோம்.

தக்க பருவமெய்தியவரிடையே தோன்றுவதும், சாதாரணமாகக் காதலென்ற சொல்லால் குறிக்கப்படுவது மான உள்ளுணர்ச்சியையே பாரதியார் தமது பத்தாவது வயதில் கொண்டிருந்தார் என்று நான் கருதவில்லை.

பத்து வயதுப் பாலகனுக்கு ஒத்த வயதினருடைய சேர்க்கையிலே எத்தனையோ ஆசையிருப்பது இயல்பு. அப்படிப்பட்ட தோழமை கிடைக்காது வருந்திய பாரதி யாருக்குத் தற்செயலாக அந்தப் பெண்ணின் தோழமை கிடைத்தது. அன்புணர்ச்சியை யெல்லாம் வெளியிட அவளே தனிப்பாத்திரமாக அமைகிறாள். அந்த ஆழ்ந்த அன்பைக் காதலென்றே கூறத் தோன்றுகிறது கவிஞருக்கு. சுமார் பதினேந்து ஆண்டுகள் கழித்து அதாவது 1910–ல் **ஸ்வசரிதை** எழுதும்போது இந்தத் தோழமை ஒரு பெரிய இன்பக் கனவாகத் தோன்றியிருக்க வேண்டும். லட்சியத் தெய்விகக் காதலாகவும் தோன்றியிருக்க வேண்டும். அவையே இத்தோழமையைக் காதல் என்று கூறத் தூண்டியிருக்க வேண்டும்.

பாரதியார் பிற்காலத்தில் இந்தக் காதலை நினைத்து ஏங்கினரென்று கூறுவதற்கில்லை. **ஸ்வசரிதை**யில் தவிர வேறு எங்கும் இதைப்பற்றி அவர் குறிப்பிடுவதாகத் தெரியவில்லை. 1905–ல் காசியில் நடைபெற்ற காங்கிரசுக் குப் பாரதியார் சென்றிருந்ததாகத் திருமதி செல்லம்மா பாரதி எழுதியுள்ளார்கள். அது சமயம் டம்டம் என்னும் ஊரிலிருந்த சகோதரி நிவேதிதா தேவியாரை அவர் சென்று தரிசிக்கிறார். அந்த அம்மையாரின் உபதேசத்திலே பாரதி யாரின் உள்ளம் லயித்து விடுகிறது. அவருடைய உள்ளத் திலிருந்த கலக்க மெல்லாம் அம்மையாரின் தரிசனத்தி லேயே அகன்று விடுகிறது. பாரதியார் அவரையே தமது குருவாக ஏற்றுக் கொள்ளுகிறார். அது முதல் அவருக்குப் பெண்களெல்லாம் பராசக்தியின் வடிவங்களாகவே காட்சி யளிக்கத் தொடங்குகின்றனர்.

1908–ல் பாரதியார் **ஸ்வதேச கீதங்கள்** என்ற நூலை வெளியிடுகிறார். இதுவே அவருடைய முதல் நூலென்று கொள்ளலாம். அந்நூலை அவர் நிவேதிதா தேவியாருக்கே

ஸமர்ப்பணம் செய்திருக்கிறார். "ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவ ரூபம் காட்டி ஆத்ம நிலை விளக்கிய தொப்ப, எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி ஸ்வதேச பக்தி யுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூலை ஸமர்ப்பிக்கின்றேன்" என்று அவர் எழுதியுள்ளார்.

1909-ல் வெளியான **ஜன்ம பூமி** என்ற நூலில் பாரதியார் தமது குருவின் பெயரைக் குறிப்பிட்டு அவருக்கே அந்நூலையும் ஸமர்ப்பிக்கிறார்.

"எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த் தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும் சொல்லாமலுணர்த்திய குருமணியும், பகவான் **விவேகானந்தருடைய** தர்ம புத்திரியும் ஆகிய **ஸ்ரீமதி நிவேதிதா** தேவிக்கு இந்நூலை ஸமர்ப்பிக்கிறேன்".

பாரதியார் தமது ஞான குருவைக் கீழ்க்கண்டவாறு துதி செய்து பாடியும் இருக்கிறார்.

அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்
கோயிலாய் அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறு மெமதுயர் நா
டாம்பயிர்க்கு மழையா யின்கு
பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப்
பெரும் பொருளாய்ப் புன்மைத் தாதச்
சுருளுக்கு நெருப்பாகி விளங்கிய தாய்
நிவேதிதையைத் தொழுது நிற்பேன்

பாரதியாரின் வாழ்க்கையிலே பக்தி யென்பது அடிப்படையாக இருந்தமைக்கு இவ்வம்மையாரின் அருளுபதேசம் மூக்கிய காரணங்களில் ஒன்றாக இருந்திருக்கிறது.

பாரதியாருக்கு மணமாகின்ற காலத்திலேயே அவருடைய தந்தை சின்னசாமி அய்யரின் செல்வ நிலை சீர்கேடடையத் தொடங்கிவிட்டதென்று கூறலாம்.

ஈங்கிதற்கிடை யெக்தை பெருந்துயர்
எய்தி நின்றனன் நீய வறுமையான்
ஒன்கினின்ற பெருஞ் செல்வம் பாவையும்
ஊணர் செய்த சதியி லிழந்தனன்

செல்வத்தையிழந்த தீந்தை மனமுடைந்து தளர்வெய்தலானூர்.

ஆர்ப்பு மிஞ்சப் பலபல வாணிகம்
ஆற்றி மிக்க பொருள் செய்து வாழ்ந்தனன்
நீர்ப்ப டுஞ்சிறு புற்புத மாமது
நீங்கவே யுளங் குன்றித் தளர்ந்தனன்

பாரதியாருக்கு மணமான ஓராண்டிற்குள்ளே சின்னசாமி அய்யர் நோயுற்றுக் காலமானூர்.

தக்தை போயினன் பாழ்மிடி சூழ்ந்தது
தரணி மீதினி லஞ்சலென் பாரிலர்

இவ்வாறு பாரதியார் துயருற்றிருக்கும்போது காசிக்கு வரும்படி அவருக்கு அழைப்புக் கிடைத்தது. அவருடைய அத்தை குப்பம்மாள் தம் கணவர் ஸ்ரீ கிருஷ்ணசிவனோடு அது சமயம் காசியில் வசித்து வந்தார்கள். அவர்கள் அழைக்கவே பாரதியார் அங்கு சென்றூர். எந்த ஆண்டிலே காசி சென்றூர் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. 1901-ல் சென்றதாக திரு. ஆக்கூர் அனந்தாச்சாரியார் கூறுகிறூர். ஆனால் 1902-ல் அவர் எட்டய புரத்திற்குத் திரும்பிவிட்டதாகத் திருமதி செல்லம்மா பாரதி எழுதுகிறூர். 1898 முதல் 1901 வரை காசியிலிருந்ததாக யோகி சுத்தானந்தர் எழுதுகிறூர் (பாரதி விளக்கம்). ஆகவே ஒன்றிரண்டு ஆண்டுகள் அவர் காசியில் வசித்திருக்கலாம். ஆங்கிலத்தோடு ஹிந்தியும் சம்ஸ்கிருதமும் படிக்க அவருக்கு அங்கே வாய்ப்புக் கிடைத்தது. மேலும் கல்கத்தா சர்வகலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்குப் படித்து அதில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றூர்.

வட நாட்டினரைப் போலவே திருத்தமான உச்சரிப் போடு பாரதியார் ஹிந்தியில் பேசுவாராம்.

பாரதியார் தமது பதினெட்டாவது வயது சமயத்திலே காசியில் வாழ்ந்திருக்கிறார். சம்பவங்களும், அநுபவங்களும் உள்ளத்திலே ஆழ்ந்து பதிகின்ற பருவம் அது. உயர்ந்த லட்சியங்களெல்லாம் ஓங்கியெழும் பருவமும் அது. வங்காளத்திலே குமிழி விட்டெழுந்து கொண்டிருக்கும் தேசிய உணர்ச்சி அவர் உள்ளத்தைத் தாக்கி யிருக்கவேண்டும். வெறும் சமஸ்தான வித்துவானாக நின்றுவிடாமல் தேசியக் கவியாக மாறுவதற்கு வேண்டிய உள்ளுணர்வைப் பெறக் காசி வாழ்க்கையும் பாரதியாருக்கு உதவிற்று என்று கூறலாம். அந்தத் தேசிய உணர்ச்சி பிற்காலத்திலே சென்னை வாழ்க்கையிலே நன்கு மலரலாயிற்று.

காசியிலிருந்தபோது பாரதியாருக்கு வடநாட்டிலேயே தங்கிவிடவேண்டுமென்ற எண்ணம் இருந்ததாம். ஆனால் டில்லி தர்பாருக்குச் சென்று திரும்பிய எட்டயபுரம் மகாராஜா காசிக்கு வந்தபோது பாரதியாரை எட்டயபுரம் வரும்படி அழைத்தாராம். அதற்கிணங்கிப் பாரதியார் ஊர் திரும்பினார். (திருமதி செல்லம்மா பாரதி—**பாரதியார் சரித்திரம்.**)

சுதந்தர உணர்ச்சி பெற்ற பாரதியாருக்குச் சமஸ்தான சேவை பிடிக்காது போனதில் ஆச்சரியமில்லை. சுதந்தரத்தோடு வாழ விரும்பி அவர் எப்படியாவது எட்டயபுரத்தைவிட்டு வெளியேற உத்தேசித்திருக்க வேண்டும். 1902 ஆம் ஆண்டில் காசியை விட்டு எட்டயபுரம் திரும்பியவர் 1904 ஆகஸ்டு முதல் தேதியிலேயே மதுரையில் தமிழாசிரியராகி விடுகிறார். இரண்டு ஆண்டுகள்கூட அவரால் சமஸ்தான வித்துவானாக இருக்க முடியவில்லை.

சமஸ்தான வித்துவானாக இரண்டாண்டுகள் இருக்க முடியவில்லை யென்றால் தமிழாசிரியராக மூன்று மாதங்கூட இருக்க முடியவில்லை.

சென்னை வாழ்விலும் அவருடைய சுதந்தரப் போக்கே வெளியாகிறது. சுதேசமித்திரனிலிருந்து கொண்டே சக்ரவர்த்தினி என்ற மாதப் பத்திரிகை நடத்தினார் என்று முன்பே குறிப்பிட்டேன். அதோடு நில்லாமல் அவர் **இந்தியா** என்ற வாரப் பத்திரிகையின் ஆசிரியராகித் தமது தேச பக்தி ஆவேசம் தமிழ் நாட்டில் பரவுமாறு செயல் புரியலானார்.

திருவல்லிக்கேணியிலிருந்த திருமலாச்சாரியார் ஒரு அச்சகம் வைத்து நடத்திக் கொண்டிருந்தார். அவருடைய ஆதரவிலே **இந்தியா** பத்திரிகை தொடங்கியது. ஸ்ரீ ராம கிருஷ்ணபரமஹம்சரின் சிஷ்யராகிய சுவாமி அபேதானந்தர் 1906 ஜூலை 15 ஆம் தேதியன்று சென்னைக்கு விஜயம் செய்தார். அவருடைய வருகையைப் பற்றியும் சொற்பொழிவைப் பற்றியும் பாரதியார் **இந்தியா** பத்திரிகையிலே 1906 ஜூலை 21ஆம் தேதி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார் (பக். 19). இதிலிருந்து **இந்தியா** பத்திரிகை 1906 ஜூலைக்கு முன்பே வெளியாகத் தொடங்கி விட்டது என்பதை அறியலாம்.

ஆனால் **இந்தியா** தோன்றியதும் பாரதியார் சுதேசமித்திரனைவிட்டு முற்றிலும் விலகிவிட்டதாகக் கொள்ள முடியாது. 1907 மே 18ஆம் தேதியன்று கூடப் பாரதியாரின் கட்டுரையொன்று மித்திரனில் வெளியாகியுள்ளது. **சென்னை வாசிகளின் நிதானமும் விபினசந்திரபாலரின் சந்நிதானமும்** என்ற அக்கட்டுரைதான் (பக். 47) அவர் புதுச்சேரி செல்லுமுன்பு மித்திரனில் எழுதிய கடைசிக் கட்டுரையென்று தெரிகிறது. அதன் பிறகு 1915 ஜூன் 15-ல் தான் மறுபடியும் மித்திரனில் அவருடைய கட்டுரை வெளியாகிறது.

1907 மே 18க்குப் பிறகு மித்திரனில் அவ்வாண்டு டிசம்பர் 17-ல் தான் சூரத் காங்கிரசுக்குச் செல்ல விரும்பும்

பிரதிநிதிகளுக்குப் பாரதியார் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அதனால் மே மாதத்திற்குப் பிறகே அவருக்கும் சுதேசமித்திரனுக்கும் இருந்த தொடர்பு நீங்கியிருக்குமென்று ஊகிக்கலாம்.

விபினசந்திரபாலரைப் பற்றிய கட்டுரையின் போக்குக்கும், பாரதியார் அதுவரை மித்திரனில் எழுதியவற்றின் போக்குக்கும் நல்ல வித்தியாசமிருப்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

விபினசந்திரபாலரின் சென்னை விஜயம், சூரத் காங்கிரஸ் ஆகிய இரண்டு சம்பவங்களும் பாரதியாரின் எழுத்திலும் கொள்கையிலும் மிகப் பெரிய மாறுதலை யுண்டு பண்ணியிருக்கின்றன. சூரத் காங்கிரஸ் பாரதியாரின் வாழ்க்கையில் ஒரு புதிய கட்டத் தொடக்கம் என்று கூறலாம்.

விபினசந்திரபாலர் வங்காளத்து தேசிய வீரர்களில் ஒருவர். உணர்ச்சிப் பெருக்கோடு பேசக்கூடிய நாவலர். அவருடைய பேச்சு மக்களின் உள்ளத்திலே புதியதோர் சுதந்தர ஆவேசத்தை வளர்த்தது. ஆந்திர நாட்டுக்கு வந்திருந்த அவரைச் சென்னைக்கும் வரும்படி செய்ததற்குப் பாரதியாரும் அவருடைய நண்பர்களுமே காரணஸ்தர் என்று வ. ரா. குறிப்பிடுகிறார்.

1907 மே 9 ஆந் தேதியன்று பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய் பர்மாவுக்கு நாடு கடத்தப்பட்டார். அதையொட்டி மே 17ஆந் தேதி சென்னை விக்டோரியா நகர மண்டபத்திலே நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விபினசந்திரபாலர் பேசினார். மற்றும் சில கூட்டங்களிலும் பேசினார். அவருடைய வீராவேச மொழிகளால் சென்னையில் தேசியக் கனல் ஓங்கி வளரத் தொடங்கவே சர்க்கார் அவரைப் பலவந்தமாக இம் மாகாணத்தை விட்டு வெளியேற்றியது.

லஜபதிராயைப் போற்றிப் பாரதியார் இந்தச் சமயத்திலே இரண்டு கவிதைகள் இயற்றியிருக்கிறார். நாடு கடத்தப்பட்ட லஜபதி,

தொண்டுபட்டு வாடுமென்றன் தூயபெரு நாட்டிற்
கொண்டு விட்டான் கென்னையுடன் கொன்றழுலு மின்புறுவேன்

என்று கூறுவதாகவும்,

ஒரு மனிதன் தனைப்பற்றிப் பலநாடு
கடத்தியவற் கூறுசெய்தல்
அருமையிலை; எளிதினவர் புரிந்திட்டா
ரென்றிடினும் அந்த மேலோன்
பெருமையை நன்கறிந் தவனைத் தெய்வமென
நெஞ்சினுளே பெட்பிற் பேணி
வருமனித ரெண்ணற்றார் இவரையெலாம்
ஓட்டியெவர் வாழ்வ திங்கே?

என்றும் உணர்ச்சி மிக்க வரிகள் பாரதியாருடைய வாக்கிலே அப்பொழுது பிறந்திருக்கின்றன.

சுதந்தரப் போராட்டத்திலே சூரத் காங்கிரஸ் மிக முக்கியமானது. 1906-ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசிலேயே மிதவாதிகளுக்கும் தேசியவாதிகளுக்கு மிடையே கருத்து வேறுபாடுகள் வெளிப்படையாகத் தோன்றலாயின. தாதாபாய் நௌரோஜி தலைவராக இருந்ததால் அவர் இவ்வேறுபாடுகள் மேலோங்காதபடி தம்முடைய வசீகர சக்தியால் நிலைமையைச் சமாளித்துவிட்டார். ஆனால் அடுத்த ஆண்டு காங்கிரஸ் கூடுவதற்குள் வேறுபாடுகள் மிகவும் வலுவடைந்துவிட்டன. நாகபுரியில் நடைபெற வேண்டிய காங்கிரசைச் சூரத்தில் நடத்திவிட ஏற்பாடு செய்தார்கள். மிதவாதிகள் தங்களிஷ்டம்போல் காரியங்களைச் சாதித்துக்கொள்வதற்காகவே இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தேசியவாதிகள் அவர்கள்மேல் குற்றம் சாட்டினார்கள். மிதவாதிகளும் தேசியவாதிகளும் தங்கள்

தங்கள் பலத்தைச் சோதனை செய்வதற்காகவே கூட்டுவது போல அமைந்தது இந்தக் காங்கிரஸ்.

பாரதியார் தேசியக் கட்சியை ஆதரித்தார். அதற்குப் பலம் திரட்டும் வேலையில் வ. உ. சிதம்பரம் பிள்ளையோடு சேர்ந்து நின்றார். சுதேசக் கிருஹத்திலிருந்து காங்கிரஸ் டெலிகேட்டுகளுக்குப் பாரதியார் அறிக்கை விடுவதை நாம் காண்கிறோம் (பக் 52, 53).

வ. உ. சி. கண்ட பாரதி என்ற நூலிலும் இது பற்றி விவரம் காணப்படுகிறது. "தூத்துக்குடியிலின்று நான் (வ. உ. சி.) சில நண்பர்களுடன் புறப்பட்டுச் சென்னை போய்ச் சேர்ந்தேன். மண்டையன் கூட்டத்தார் வீட்டில் 'சென்னை ஜன சங்க'த்தின் அங்கத்தினர்களாகிய இளந் தேசாபிமானிகளையெல்லாம் ஒரு கூட்டம் கூட்டி ஆலோசனை செய்தோம்.

"பாரதி மாமா (பாரதியாரை வ. உ. சி. அன்புடன் அழைப்பது) நூறு பிரதிநிதிகளுக்குக் குறையாமல் சென்னையிலிருந்து சூரத்துக்கு அழைத்துக்கொண்டு போக வேண்டுமென்று சொன்னார்.

"அப் பிரதிநிதிகளில் பணம் இல்லாதவர்களுக்குப் பணம் கொடுத்துக் கூட்டிக் கொண்டுபோக வேண்டுமென்றும், அவர்களைச் சூரத்திற்குக் கூட்டிப்போய் வருவதற்குரிய செலவுத்தொகையில் ஒரு பாதியை மண்டையன் கூட்டத் தலைவர் ஸ்ரீநிவாஸாசாரியும், மற்றொரு பாதியை நானும் கொடுக்க வேண்டுமென்றும் எங்களுக்குள் முடிவு செய்து கொண்டோம். சுமார் நூறு பிரதிநிதிகளைக் கூட்டிக்கொண்டு வருவதாகத் திலகருக்குத் தந்தி கொடுத்தோம்."

பாரதியார், வ. உ. சி. முதலியோர் மிகுந்த உற்சாகத்தோடு சூரத் போய்ச் சேர்ந்தார்கள். 1907 டிசம்பர் 27 ஆந்

தேதி தொடங்கிய காங்கிரஸ் மிதவாதிகளின் விருப்பம் போல நடைபெறவில்லை. ராஷ்பிகாரிகோஷைத் தலைவராகப் பிரேரேபணை செய்தது முதல் ஒரே குழப்பந்தான். அடுத்த நாள்வரை நடவடிக்கைகளைத் தள்ளி வைத்தார்கள். அடுத்த நாள் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. திலகர் தமக்குப் பேச உரிமை உண்டென்று தலைவர் அது மதியை எதிர் பார்க்காமல் மேடை மீதேறினர். ஆரவாரம், நாற்காலி வீச்சு, செருப்பு வீச்சு, தடியடி என்றிப்படிக் காங்கிரஸ் முடிந்தது.

குழப்பத்தில் முடிந்தாலும் சூரத் காங்கிரசால் நன்மை ஏற்படாமலில்லை. திலகர் கட்சியிலும், அவர் கொள்கை களிலும் பாரதியாருக்குப் பற்று மிகுந்தது. திலகரைப் போற்றியும், நிதானக் கட்சியாரை கையாண்டி செய்தும் பாரதியார் பாடல்கள் எழுதலானார்.

சென்னை திரும்பிய பிறகு அவர் இன்னும் தீவிரமாக இந்தியாவில் எழுதத் தொடங்கினார். "பாரதியாரின் இந்தியா பத்திரிகை சட்ட வரம்பை மீறி நெருப்பு மழை பொழியத் தொடங்கிற்று" என்று எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு குறிப்பிடுகிறார்.

அரசாங்கம் சும்மா இருக்குமா? இந்தியாவின் மீது தனது கண் போடலாயிற்று. அப் பத்திரிகை வெளியாவ தற்குக் காரணமானவர்களைக் கைது செய்ய உத்தரவும் பிறந்தது. இந்தியாவின் ஆசிரியராகப் பாரதியார் இருந்த போதிலும் அவருடைய பெயர் அதிலே ஆசிரியரெனக் குறிப்பிடப்படவில்லை. ஸ்ரீநிவாசன் என்பார் ஒருவரே அதன் ஆசிரியராகப் பதிவு செய்துகொண்டிருந்தார்.

ஆதலால் அவரையே போலீசார் கைது செய்தார்கள். பின்னல் பாரதியாருக்கும் பத்திரிகையின் சொந்தக்காரருக் கும் இதே கதி நேரும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. அவர்களும் அதை உணர்ந்து கொண்டார்கள்.

பாரதியார் ரகசியமாகப் புதுச்சேரி போய்ச் சேர்ந்தார். அவர் அங்கு சேர்ந்த ஒரு மாதத்திற்குள் மண்டையம் சீனிவாசாசாரியாரும் அங்கே வந்து சேர்ந்துவிட்டார்.

ஸ்ரீநிவாசனுக்கு ஐந்து வருஷ தீபாந்திர சிக்ஷை விதிக்கப்பட்டது. இது நியாயமல்ல வென்று 16-11-1908-ல் சுதேசமித்திரன் துணையங்கம் எழுதியுள்ளது (பக். 42).

இந்தியா பத்திரிகை 34, பிராட்வே, சென்னை என்ற விலாசத்திலிருந்து வெளியாயிற்று. அதன் வீர முழக்கம் 1908ஆம் ஆண்டு அக்டோபர் அல்லது நவம்பர் வரை சென்னையில் ஒலித்தது (பக். 44).

பாரதியார் புதுச்சேரிக்குச் செல்லத் தீர்மானித்ததைப் பற்றிச் சிந்திக்கும்போது அந்தச் சமயத்தில் நாட்டில் ஏற்பட்ட சில முக்கிய நிகழ்ச்சிகளையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதே ஆண்டிலே ஜூலை மாதம் 13-ஆம் தேதி கைது செய்யப்பட்டு ஐந்து நாள் விசாரணைக்குப் பின் திலகருக்கு ஆறாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பாரதியார் தமது தலைவராகக் கொண்ட பெரியார் மாண்டலேயுக்குக் கொண்டு போகப்பட்டார். தமிழ் நாட்டிலே பெரிய தேசிய வீரராக விளங்கிய கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அதே ஆண்டு மார்ச்சு மாதம் 12-ஆம் தேதி கைது செய்யப்பட்டார். திருநெல்வேலிக் கலெக்டர் வின்சின் அழைப்பை ஏற்றுக் கொண்டு அவரைக் காணச் சென்றவிடத்தில் அவரைக் கைது செய்தார்கள். கைது செய்யு முன் வின்சிற்கும் சிதம்பரனுருக்கும் நடந்த வாக்குவாதமாகப் பாரதியார் இரண்டுபாடல்களை எழுதினர். **ஆங்கிலேயன் ஒரு தேச பக்தனுக்குக் கூறுவது, தேச பக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி** என்ற தலைப்புக்களோடு அப் பாடல்கள் பாரதி நூல்கள்-முதல் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனல் 1909-ல் பாரதியார் வெளியிட்ட ஸ்வதேச கீதங்களின் இரண்டாம்

பாகமாகிய **ஜன்மபூமி** என்ற நூலில் இப் பாடல்களுக்குக் **கலெக்டர் வின்ச் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல், கலெக்டர் வின்சுக்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை சொல்லிய மறுமொழி** என்ற தலைப்புக்கள் கொடுக்கப்பட்டிருந்தன. சிதம்பரனாரின் சார்பிலே ஒரு சாட்சியாகப் பாரதியாரும் சென்றிருந்தார்.

1908 ஜூலை மாதம் 7–ஆந் தேதி சிதம்பரனாருக்கு அரசநிந்தனைக் குற்றத்திற்காக இருபது வருடமும், சுப்பிரமணிய சிவாவுக்கு உடந்தையாக இருந்ததற்காக மேலும் மோர் இருபது வருடமும் ஆக நாற்பது வருடம் தீவாந்தர தண்டனை விதிக்கப்பட்டது. சிவாவுக்குப் பத்தாண்டு தீவாந்தர தண்டனை.

இவ்வாறு நாடுகடத்தப்படுவதால் தேசத்திற்குச் செய்யக்கூடிய சேவையில் தடையேற்படும்; ஆதலால் அதை எவ்வகையிலாவது தவிர்த்துத் தாம் செய்யக்கூடிய சேவையை நாட்டிற்குச் செய்யவேண்டும் என்பது அக் காலத்தவரின் பொதுவான கருத்து. காந்தீய வழியிலே சத்தியாக்கிரகம் செய்து சிறை செல்லுவதே ஒரு தருமமாக அப்பொழுது ஏற்படவில்லை. இந்திய அரசியல் அரங்கிலே காந்தியடிகள் தோன்றுத காலம் அது.

ஆதலால் பாரதியார் புதுச்சேரிக்குச் செல்லுவது உசிதம் என்று அவருடைய நண்பர்கள் தூண்டியிருக்க வேண்டும். அவரும் புதுச்சேரி சென்றார். மண்டையம் ஸ்ரீநிவாசாச்சாரியாரும் அங்கு போய்ச் சேர்ந்தார். அச்சு யந்திரங்களும் போய்ச் சேர்ந்தன. **இந்தியா** பத்திரிகை புதுச்சேரியிலிருந்து வெளியாகத் தொடங்கியது. ஆகவே அரசாங்கத்தின் பிடியிலகப்படாமல் தொடர்ந்து தேச சேவை செய்ய முடியுமானால் அதற்கான முயற்சியைச் செய்யவேண்டுமென்பதே பாரதியாருக்கும் அவருடைய நண்பர்களுக்கும் எண்ணம் என்று தெரிகிறது.

புதுச்சேரி வாழ்க்கை இனிமையாக இருக்குமென்று நினைத்துப் பாரதியார் அங்கு சென்றதாகக் கொள்ளுவதற்கில்லை. அவருக்கு அங்கே வாழ்க்கை இன்பமாக நடை பெறவுமில்லை. எத்தனையோ தொல்லைகள், துன்பங்கள்.

"முதல் முதல் பாரதியார் புதுவை ஈசுவரன் கோவில் தெருவில் திரு. மு. இராஜபாதரின் இல்லத்திற்கு அடுத்த ஒரு சிறு வீட்டில் குடியிருந்தார். பிறகு அவ்வீட்டைக் காலி செய்து, அதே வீதியில் 28ஆம் எண்ணுள்ள ஒரு மாடி வீட்டில் குடியேறினர். அது ஒரு செட்டியாருக்குச் சொந்தம். அவர் பெயர் ஐயாக்கண்ணு செட்டியார். அவர் குள்ளமாக இருப்பார். தயாள குணம் உள்ளவர்..... இவரைப் பாரதியார் வேடிக்கையாக 'விளக்கெண்ணெய்ச் செட்டியார்' என்று அழைப்பதுண்டு" (திரு. ரா. கனக லிங்கம்—**என் குருநாதர் பாரதியார்**). சபாபதி செட்டியார் என்பது அவர் பெயரென்று திருமதி தங்கம்மாள் பாரதி எழுதுகிறார்கள் (**பாரதியும் கவிதையும்** பக். 58.).

"1908ஆம் ஆண்டில் பாரதியார் **இந்தியா** பத்திரிகை யைப் புதுவை மிஸியோம் எத்திரான் மேர் வீதியிலிருந்து நடத்தி வந்தார். 1910ஆம் ஆண்டில் அச்சுக்கூடத்தை டுப்ளே வீதிக்கு மாற்றிக் கொண்டார்" (திரு. ரா. கனக லிங்கம்—**பாரதியாரின் புதுவை வாழ்வு** என்ற கட்டுரை). ஆனால் எந்தத் தேதி வரையில் **இந்தியா** புதுச்சேரியில், நடந்து வந்தது என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. பொருள் நெருக்கடி ஒரு பக்கம். அரசாங்கத்தாரின் கோபம் ஒரு பக்கம். இந்த நிலையிலே தமிழ் நாட்டாரின் ஆதரவு புதுச் சேரிக்கு எட்டுவதிலும் எவ்வளவோ பிரமமிருந்தது. மேலும் **இந்தியா** பத்திரிகை பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் வரக்கூடாதென்று 1909ஆம் ஆண்டில் அரசாங்கம் தடை விதித்தது. மற்றக் காரணங்களைவிட அதுவே இப்

பத்திரிகையின் ஆயுளை ஒரேயடியில் போக்கிவிட்டதென்று கூறலாம்.

மாணிக்டோலா வெடிகுண்டு வீச்சு சம்பந்தமாக ஸ்ரீ அரவிந்தர்போில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அதில் அவர் விடுதலையடைந்தார். பிறகு அவர் **கர்மயோகின்** என்ற ஆங்கிலப் பத்திரிகையைக் கல்கத்தாவிலிருந்து கொஞ்சகாலம் நடத்திவந்தார். அந்தப் பத்திரிகையைத் தழுவிக் **கர்மயோகி** என்ற பத்திரிகையைப் பாரதியார் புதுச்சேரியில் தொடங்கினார். பின்னர் **விஜயா** என்ற தினசரித் தமிழ்ப் பத்திரிகை ஒன்றையும் தொடங்கினர். இவையெல்லாம் 1910ஆம் ஆண்டிற்குள்ளேயே மறைந்து போயின.

பத்திரிகைத் தொண்டு முடிவடைந்தது. பாரதியாரின் வறுமையும் துன்பமும் மட்டும் வளர்ந்து கொண்டேதான் இருந்தன. தமது பொழுதையும், மனத்தையும் கவரக்கூடிய பத்திரிகைகளும் நின்றுவிடவே அவர் வாழ்க்கை வெறிச் சென்று போயிருக்கவேண்டும்.

பாரதியார் புதுவைக்குத் தனியாகவே சென்றார். மனைவி திருமதி செல்லம்மா பாரதி சென்னையிலே யிருந்தார். பிறகு அவருடைய தமையனார் வந்து கடையத்துக்கு அவரை அழைத்துச் சென்றார்.

பின்னர் திருமதி செல்லம்மா பாரதியும் புதுச்சேரி வந்து சேர்ந்தார். குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பும் சேர்ந்து கொண்டது.

பாரதியார் எத்தனையோ துன்பங்களை அநுபவித்தார். அவருடைய நிலையினைச் **சித்தக்கடல்** என்ற சிறு பகுதியினில் அவர் எழுதியுள்ள கீழ்க்கண்ட வாசகத்திலிருந்து ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

''மண்ணையும், காற்றையும், கடலையும் எத்தனை யுகங்கள் ஒரே வடிவத்தில் வைத்துக் காப்பாற்றுகிறாய்! பரா

சக்தி, எனது கருவி கரணங்களிலே நீ பரிபூர்ணமாக ஸந்நிதி கொண்டு என்னையும் அங்ஙனமே காக்கவேண்டும்.

இன்பமில்லையா ?

பராசக்தி, இந்த உலகத்தின் ஆத்மா நீ.

உனக்கு அறிவில்லையா? உனக்குக் காது கேட்காதா? நாள்தோறும் உன்மீது பாட்டுப் பாடுகிறேன். நான் கேட்கும் வரங்களை யெல்லாம் கொடுத்துவிடக் கூடாதா?

முதலாவது, எனக்கு என்மீது வெற்றி தரவேண்டும். குழந்தைக்கு ஜ்வரம் வந்தது. தினது திருவருளால் குணமாய்விட்டது. இரண்டு மாத காலம் இரவும் பகலு மாக நானும் செல்லம்மாளும் புழுத்துடிப்பது போலத் துடித்தோம். ஊண் நேரே செல்லவில்லை, இருவருக்கும். உறக்கம் நேரே வரவில்லை—இருவருக்கும். எப்போதும் சஞ்சலம். பயம், பயம், பயம்! சக்தி, உன்னை நம்பித்தா னிருந்தோம். நீ கடைசியாகக் காப்பாற்றினாய். உன்னை வாழ்த்துகிறேன்.

கடன்காரர் தொல்லையும் அத்துடன் வந்து கலந்தது. வைத்தியனுக்குக் கொடுக்கப் பணமில்லை. குழப்பம், குழப்பம்—தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருஷங்கள்!

பராசக்தி, ஓயாமல் கவிதை எழுதிக் கொண்டிருக்கும் படி திருவருள் செய்யமாட்டாயா? கடன்களெல்லாம் தீர்ந்து, தொல்லை யில்லாதபடி என் குடும்பத்தாரும் என்னைச் சார்ந்த பிறரும் வாழ்ந்திருக்க, நான் எப்போதும் உன் புகழை ஆயிரவிதமான புதிய புதிய பாட்டுக்களில் அமைக்க விரும்புகிறேன். உலகத்தில் இதுவரை எங்கு மில்லாதபடி அற்புதமான ஒளிச் சிறப்பும், பொருட் பெருமையும் உடைய பாட்டொன்று என் வாயிலே தோன்றும்படி செய்யவேண்டும்.

தாயே, என்னைக் கடன்காரர் ஓயாமல் வேதனைப் படுத்திக் கொண்டிருந்தால், நான் அரிசிக்கும், உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால் – உன்னை எப்படிப் பாடுவேன் ?

மனைவியைப் பிரிந்து செல்லும்படி சொல்வதில் பயனில்லை. அவளும் உனது சரணையே நம்பி, என்னுடன் எப்போதும் வாழ்ந்து கொண்டு, உனது தொழும்பிலே கிடைக்கும் புகழில் பங்குபெற்று மேன்மையுற விரும்புகிறாள். இயன்ற வரை உண்மையோடுதானிருக்கிறாள். அவளையும் நீ ரக்ஷணை செய்யவேண்டும்.

அவளுக்கு நோயின்மை, கல்வி, கவலையின்மை, பக்தி, ஞானம் முதலிய சோபனங்களெல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

குழந்தையை உனது குழந்தையாகக் கருதி, இவ்வுலகத்தில் நீடித்துப் புகழுடன் வாழும்படி திருவருள் செய்ய வேண்டும். காசியிலிருக்கும் குழந்தையையும் நீதான் காப்பாற்ற வேண்டும்.

எனது குடும்ப பாரமெல்லாம் உன்னைச் சேர்ந்தது. உன்னைப் புகழ்ச்சி புரியும் தொழில் என்னைச் சேர்ந்தது. தாயே, லம்மதந்தானை ?

மஹா சக்தி ! என்னுள்ளத்தில் எப்போதும் வற்றாத கவிதையூற்று ஏற்படுத்திக் கொடு.

ஓயாமல் வியாதிபயம் கொண்டு உளைகின்ற நெஞ்சமே! தூ! தூ! தூ! கோழை.

புகையிலை வழக்கம் தொலைந்து விட்டது, பராசக்தியின் அருளால். இனிக் 'கஸரத்' வழக்கம் ஏற்படவேணும், பராசக்தியின் அருளால். தோள் விம்மி வயிரம் போலாக வேணும். நெஞ்சு விரிந்து, நிரண்டு வலிமையுடையதாக வேணும். இரத்தம் மாசு தீர்ந்து, நோயின்றி, நன்றாக ஓடி

உடலில் நன்கு காத்துக் கொண்டிருக்கவேணும்—பராசக்தியின் அருளால்.

செட்டி பணத்துக்கு எத்தனை நாள் பொய் சொல்லுகிறது? பொய் வாயிதா, பொய் வாயிதா, பொய்வாயிதா—நினம் இந்தக் கொடுமைதானு? ஓச்சி!

பராசக்தி—உன்னை நான் நம்புவதை முற்றிலும் விட்டு, நிச்சயமாக நாஸ்திகனுய் விடுவேன், நீ என்னை அற்பத் தொல்லைகளுக்கு உட்படுத்திக் கொண்டே யிருந்தால்.

மஹாசக்தி—நீ யிருப்பதை எவன் கண்டான்? உனக்கு அறிவுண்டென்பதை எவன் கண்டான்? இந்த உலகம்—சரி, சரி, இப்போது உன்னை வையமாட்டேன். என்னைக் காப்பாற்று. உன்னைப் போற்றுகிறேன்.

பிறருக்கு நான் தீங்கு நினையாதபடி நீ அருள் புரிந்தால் நல்லது. குஸ்டர்களைக்கூட நீ தண்டனை செய்து கொள். எனக்கு அதிலே ஸந்தோஷமில்லை. எனக்குப் பிறர் செய்யும் தீங்குகளை நீ தவிர்க்கவேண்டும். நான் உன்னையே சரணடைந்திருக்கிறேன்.

சொல்லு! மனமே, சொல்லு, பராசக்தி வெல்க!

பராசக்தி வெல்க."

இந்தக் குறிப்பு 1915 ஜூலை 2ஆந் தேதி எழுதப்பட்டுள்ளது. அதுசமயம் பாரதியாரின் இரண்டாவது குழந்தை சகுந்தலை மட்டும் அவருடன் இருந்தது. மூத்தக் குழந்தை தங்கம்மா காசியில் வாழ்ந்தது. சகுந்தலைக்குக் காய்ச்சலால் மிகவும் கவலைக்கிடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. இதே மாதத்தில் பரலி சு. நெல்லையப்பருக்கு எழுதியுள்ள கடிதத்திலும் இது விஷயம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தத் துன்பக் கனலில்தான் அவருடைய கவிதையும் எழுத்தும் படமேறி மெருகு பெற்றுயர்ந்தன. அவருடைய

மிகச் சிறந்த பாடல்களும் கதை கட்டுரைகளும் புதுச்சேரி வாழ்க்கைத் துயரினிடையே உருப்பெற்றன. பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு ஆகியவை இங்கே எழுதப்பெற்றவை. ஜீவசக்திநிறைந்த புதிய உரைநடையில் பல கதைகள், கட்டுரைகள் இங்கு உதயமாயின. பாரதியாருடைய கவிதையும் உரைநடையும் புதுச்சேரியில் மெருகேறிப் பூரண முதிர்ச்சியடைந்தன என்று பொதுவாகக் கூறலாம்.

பாரதியார் துன்ப வாழ்க்கை நடத்தினர் என்று சொல்லுவதால் அவருக்கு யாருமே உதவி செய்யவில்லை என்று தீர்மானித்து விடக்கூடாது. புதுச்சேரியிலேயே பொன்னு முருகேசம் பிள்ளை, அவர் மனைவி அண்ணியம்மாள் என்றழைக்கப்பெறும் சௌந்திரம்மாள், வளக் கெண்ணெய்ச் செட்டியார், குவளைக் கண்ணன், சுந்தரேசையர், கிருஷ்ணசாமி செட்டியார் (வெல்லச்சு செட்டியார்) போன்றவர்கள் அவரவர்களுக்கு இயன்ற வழியிலே பாரதியாருக்கு உபகாரமாக இருந்தார்கள். பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்தும், சில சமயங்களில் தென்னுப்பிரிக்காவிலிருந்தும் பொருளுதவி கிடைத்து வந்தது. அந்த உதவி கைக்கு வந்து சேருவதில் எத்தனையோ சிரமம் உண்டு.

ஏ. ரங்கசாமி ஐயங்கார் அவர்கள் சுதேசமித்திரன் பத்திரிகையை ஏற்று நடத்தத் தொடங்கிய பின் மறுபடியும் அப்பத்திரிகைக்கு எழுதும் சந்தர்ப்பம் பாரதியாருக்குக் கிடைத்தது. அரசியல் கலப்பில்லாதவாறு எழுதுவதென்று ஏற்பாடாயிற்று. அதற்காக மாதம் முப்பது ரூபாய் பாரதியாருக்குச் சம்மானம்.

"ரங்கசாமி ஐயங்கார் பாரதியாருக்கு மூப்பது ரூபாய்தானே கொடுத்தார் என்று யாரும் அசட்டுத்தனமாகக் கேட்க வேண்டாம். ஐயங்கார் சுதேசமித்திரனை வாங்கி நடத்துகையில், அது நஷ்டத்தில்தான் நடந்து

வந்தது. மேலும், அப்பொழுது முப்பது ரூபாய் என்பது இப்பொழுது நூறு ரூபாய்க்குச் சமானம். ஜீவாதாரமாக மாதம் முப்பது ரூபாய் பாரதியாருக்குக் கொடுத்து வந்து, அவரது பாடல்களைப் பிரசுரம் செய்த ரங்கசாமி ஐயங்காரைத் தமிழர்கள் எக்காலத்திலும் மறக்கலாகாது. அவரையும் அவரது ஜீவநாடியைப் போல் விளங்கி வந்த ஸி. ஆர். ஸ்ரீநிவாசனையும் தமிழ் நாடு முழுமனத்துடன் பாராட்டி வாழ்த்த வேண்டியதுதான் நேர்மையான கடமையாகும்" (வ. ரா. —**மகாகவி பாரதியார்**).

1097—ஆம் ஆண்டு செப்டம்பர் மாதவாக்கில் நின்று போன பாரதியாரது கட்டுரைகள் சுதேசமித்திரனில் 1915—ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் மறுபடியும் வெளிவரலாயின. 1915 ஜூன் 15—ல் **சதிர் ஜாமீன்** என்ற கதை வெளியாயிற்று. பிறகு அடுத்த ஆண்டு ஜனவரியில்தான் **கிச்சடி**யைப் பார்க்கிறோம். 1916 பிப்ரவரியிலிருந்து தொடர்ந்து கட்டுரைகள் வர ஆரம்பிக்கின்றன. அதற்கு மேலே தான் மாதா மாதம் முப்பது ரூபாயும் நிச்சயமாக வரத் தொடங்கியிருக்கும். இடையே கழிந்த பல ஆண்டுகளில் அன்பர்கள் உதவியும், பாஞ்சாலி சபதம் ஜன்மபூமி முதலான நூல்களின் வெளியீட்டாலும், லோகோபகாரி, ஞானபானு முதலிய பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளாலும் ஒரு வேளை கிடைத்திருக்கக்கூடிய பணமும் தவிர அவருக்கு வேறு வருவாய் இல்லை.

"எங்கேனும், எப்படியேனும் பணம் கண்டு பிடித்து ஒரு நண்பன் பெயரால் நமக்கனுப்புக. தம்பி, உனக்கேனடா இது கடமை என்று தோன்றவில்லை?" என்று 1915 ஜூலை 19—ல் பரலி நெல்லையப்பருக்கு அவர் எழுதியுள்ள கடிதவாக்கியத்தில் பாரதியாருடைய பண முடை மறைந்து நின்று மிக நன்றாகத் துன்பக் கோலத்தில் காட்சியளிக்கிறது.

ஆனால் பாரதியாரின் புதுச்சேரி வாழ்க்கை எல்லா அம்சங்களிலும் துன்பம் நிறைந்திருந்ததாக யாரும் நினைக்கக் கூடாது. அவருக்கு இரண்டு பெரிய மஹான்களின் தொடர்பும், நட்பும் அங்கே கிடைத்தன. "கலியப்தம் 5011 பங்குனி 21 ந் தேதி (1911 ஏப்ரல் 3) ஸ்ரீ அரவிந்த கோஷ் புதுவைக்கு வந்தார். வந்த வகையில் ஐந்தாறு மாத காலம் அவர் கோமுட்டித் தெருவில் ஸ்ரீமான் சங்கர செட்டியார் வீட்டில் தங்கி யிருந்தார் (பால பாரதி). ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் இவருக்குச் சற்று முன்பே வந்து சேர்ந்திருக்க வேண்டும். லண்டன் நகரத்தில் இந்திய விடுதியிலிருந்த மதன்லால் திங்கிரா என்னும் இளைஞன் 1909 ஜூலை 1—ஆம் தேதி கர்சான் வில்லி என்ற ஆங்கிலேயனைச் சுட்டு வீழ்த்தினன்; தானும் சுட்டுக்கொண்டு உயிர் துறந்தான். உடனே இந்திய விடுதியிலிருந்த சவர்க்கார், வ. வெ. சு. ஐயர் முதலியோரைக் கைது செய்ய ஏற்பாடாயிற்று. சவர்க்கார் பிடிபட்டார். ஐயர் மாறு வேடம் பூண்டு தந்திரமாகப் பல விபத்துக்களைச் சமாளித்துக் கொண்டு புதுச்சேரி வந்தடைந்தார்.

தேச பக்தியின் காரணமாகவே மூவரும் புதுச்சேரியிலே தஞ்சம் புக நேரிட்டது. ஸ்ரீ அரவிந்தர், ஐயருடைய கூட்டுறவு பாரதியாருக்குப் பெரிதும் இன்பமும் ஆறுதலும் அளித்திருக்க வேண்டும். பாரதியார் சிறந்த கவிஞராகப் பூரண மலர்ச்சி பெறவும், ஸ்ரீ அரவிந்தர் ஆத்ம ஞானியாகவும், ஸ்ரீ ஐயர் மிகச் சிறந்த ரஸிகராகவும் புதுச்சேரி உதவிற்று. மூன்று வேறு துறைகளிலே மூவரும் சிறப் பெய்தினர்கள்; ஆனால் மூவரும் கவிதை உள்ளம் படைத்தவர்கள். தேசபக்தி, கடவுள் பக்தி முதலியவற்றில் ஆர்வமுடையவர்கள்.

அவர்களுடைய கூட்டுறவு அவரவருடைய தனித்தனி லட்சியங்களையும் பக்தியையும் வலுவடையச் செய்திருக்க

வேண்டும். மனத்தை வெல்லவும், சோம்பலை ஒழிக்கவும், தெய்வ நம்பிக்கையிலே செயலாற்றவும் பாரதியார் புதிது புதிதாகச் சங்கற்பம் செய்து கொள்ளுகிறார்.

"இந்த மனமாகிய கடலை வென்று விடுவேன். பல நாளாக இதை வெல்ல முயன்று வருகிறேன். இந்த மனத்தை வெல்ல நான் படும்பாடு தேவர்களுக்குத் தெரியும். இதிலே ப்ராண பயம், வியாதி பயம், தெய்வ பக்திக் குறைவு, கர்வம், மமதை, சோர்வு முதலிய ஸம்ஸ்காரங்கள் மிகுதிப்பட்டிருக்கின்றன. இவற்றை ஒழித்துவிட வேண்டும்.

"புகையிலைச் சாற்றினால் தலை கிறுக்குகிறது. இருபது லக்ஷம் தரம் புகையிலையை நிறுத்தி விடுவதாக ப்ரதிக்ஞை செய்திருக்கிறேன். இது வரை கைகூடவில்லை....."
(**சித்தக் கடல்** 1915 ஜூலை 1)

நோயென்றால் பாரதியாருக்குப் பயம் அதிகம். நோய்க் கிருமிகள் அணுகக் கூடாதென்று நிரம்பவும் எச்சரிக்கை எடுத்துக்கொள்ளுவார். வெளியிலிருந்து வீட்டிற்குள் நுழையுமுன்னே யாராயிருந்தாலும் காலை அலம்பிச் சுத்தம் செய்து கொண்டுதான் வரவேண்டுமென்று கடுமையான உத்தரவு செய்திருந்தார். ஹோட்டல்களிலிருந்து புதாவது வாங்கி உண்ணக் கூசுவாராம். "ஓயாமல் வியாதி பயம் கொண்டு உளைகின்ற நெஞ்சமே! தூ! தூ! தூ! கோழை" என்று அவர் தம்மைப்பற்றிச் **சித்தக் கடலில்** எழுதியிருக்கிறார்.

பாரதியாருக்குக் கோபம் அதிகமாம். அவருடைய மனைவியோ நண்பர்களோ எதிர்த்துப் பேச முடியாது என்று வ. ரா. குறிப்பிடுகிறார்.

கற்பனை உலகத்திலே சதா சஞ்சரித்துக் கொண்டிருக்கும் கவிஞரோடு வாழ்க்கை நடத்துவது எளிதான காரிய

மல்ல. அவர் எந்தச் சமயத்திலே எதை எதிர்பார்க்கிறா ரென்று மற்றவர்கள் காண்பது மிகவும் சிரமம். அதனால் கவிஞர் பெரிதும் ஏமாற்ற மடைவதும் கேரபங் கொள் வதும் சகஜம். மேலும் சிறிய நிகழ்ச்சிகளெல்லாம் அவர் உள்ளத்திலே பெரியதோர் உணர்ச்சி வெள்ளத்தைத் தோற்றுவித்துவிடும். அதன் குமுறலை அவரே சகிக்க முடியாதென்றால் மற்றவர்கள் நிலைமையைச் சொல்ல வேண்டியதில்லை. கவிஞரின் உள்ளம் மிக மிக நுட்ப மானது. மற்றவர்களுக்குச் சாதாரணமாகத் தோன்று பவை எல்லாம் அவருடைய நுண்ணிய உள்ளத்திலே ஆழ்ந்து பதிந்து அலைமோதும்; கொந்தளித்து மேலெழும்— அனல் வீசவும் தொடங்கும். அவற்றின் எதிரொலியை அவரைச் சூழ்ந்து நிற்போர் அநுபவித்துத்தான் ஆக வேண்டும். விஷயம் உணர்ந்தவர்கள் இதை ஒரு பாக்கிய மாகக் கருதுவார்கள். மற்றவர்களுக்கோ பெரிய வேதனை தான்.

இவ்வாறு கோபமும் படபடப்பும் கவிதைத் துடிப்பும் மிகுந்த கணவருடன் வாழ்வதிலே திருமதி செல்லம்மாபாரதி எத்தனையோ துன்பங்களைச் சகித்துக்கொள்ள வேண்டி யிருந்திருக்கும். அதிலும் குடும்பம் நடத்துவதற்குவேண்டிய பொருளும் இல்லாமல் புதுச்சேரியில் மறைந்து வாழ்கின்ற போது அவருடைய நிலைமை எவ்வாறிருந்திருக்கும்? ஆனால் இங்கே கோபத்தையும் படபடப்பையும் மட்டும் கூறி விட்டு விடுதல் சரியல்ல. பாரதியாரின் அன்பு வழிந்தோடும் நிலையையும் கூறவேண்டாமா? அது கவிஞருடைய அன்பு. சாதாரண உள்ளங்கள் எட்ட முடியாத உயரத்தை அது அடைந்திருக்கு மல்லவா? அதன் பெருக்கையும் அவர் மனைவியாரும் மற்றவர்களும் அநுபவித்திருப்பார்க ளல்லவா? மேலும் பாரதியார் பெண்களுக்கு மிக உயர்ந்த ஸ்தானம் அளிக்க வேண்டு மென்ற கொள்கை யுடையவர்.

" ஜகத்திற்கு ஆதாரமாகிய பெருங் கடவுள் ஆண் பெண் என இரண்டு கலைகளுடன் விளங்குகிறது. இரண்டும் பரிபூர்ணமான சமானம். பெண்ணை அணுவளவு உயர்வாகக் கூறுதலும் பொருந்தும் " என்பது அவர் வாக்கு. பெண்களைப்பற்றிய அவருடைய கட்டுரைகளிலும் கவிகளிலும் அவருடைய உள்ளம் தெரிகின்றது. அதன் லட்சியக் கனவை உணர்ந்து அநுபவிக்கக்கூடிய வாய்ப்பும் அவருடைய மனைவியாருக்கு உண்டல்லவா ?

நிவேதிதா தேவியார் பாரதியாருக்கு முதற் குருவாக அமைந்தார் என்று முன்பே கூறினேன். ஆன்மிகத் துறையிலே ஆர்வத்தைப் பெருக்க ஸ்ரீ அரவிந்தரின் நட்பும் கிடைத்தது. மேலும் குள்ளச்சாமி, கோவிந்தஸ்வாமி, யாழ்ப்பாணத்துச் சுவாமி ஆகிய ஞானிகளின் தரிசனமும் உபதேசமும் தமக்குக் கிடைத்ததாகப் **பாரதி அறுபத்தாறு** என்னும் நூலில அவர் குறிப்பிடுகிறார். சித்தர்களின் வாக்குப் போல அந்நூல் அமைந்திருக்கிறது. குள்ளச் சாமியைப் பற்றிப் பாரதியார் சில கட்டுரைகளிலும் எழுதியிருக்கிறார். பராசக்தியினிடத்தே பாரதியாருக்கு இளமையிலிருந்தே பக்தியுண்டு. பராசக்தியின் மேல் அற்புதமான பல பாடல்கள் பாடியிருக்கிறார். கண்ணனும், முருகனும் அவர் உள்ளத்தை ஒருங்கே கவர்ந்திருக்கிறார்கள். **கண்ணன் பாட்டு** தமிழ் இலக்கியத்திலே தனியிடம் பெறுகின்றது. புதுவை மணக்குளப் பிள்ளையாரின் மேல் **விநாயகர் நான் மணிமாலை** பாடியிருக்கிறார். தோத்திரப் பாடல்களும், வேதாந்தப் பாடல்களும் அவர் பாடியன எத்தனையோ. இவை யெல்லாம் அவருக்கு ஆத்மிகத் துறையிலிருந்த ஆர்வத்தை நன்கு காண்பிக்கின்றன. வாழ்க்கையிலே துன்பம் உழன்ற பாரதியாருக்குப் பக்தியே வலிமையளித்திருக்கிறது. நாட்டுப் பற்றும் தாய் மொழிப் பற்றும்

அவருடைய மூச்சு நின்றுபோகாமல் உயிரளித்து வந்துள்ளன.

முதல் உலக யுத்தத்தின் இறுதியில் இந்தியாவுக்குப் பல நன்மைகள் ஏற்படும் என்று பலர் எதிர் பார்த்தார்கள். பாரதியாரும் அவர்களில் ஒருவர். யுத்தம் 1918 நவம்பரில் முடிவுற்றது. பாரதியாருக்கு அதற்கு மேலும் புதுச்சேரியில் தங்கியிருக்க மனமில்லை. ஏ. ரங்கசாமி அய்யங்காரின் ஆலோசனையின்படி அவர் பிரிட்டிஷ் இந்தியாவுக்குப் புறப்பட்டார். சூழ்நிலை அதற்குச் சாதகமாக இருந்தது.

இருப்பினும் புதுச்சேரி எல்லையைத் தாண்டியதும் அவரைக் கைது செய்து கடலூரில் சிறையிலிட்டனர். ஆனால் ரங்கசாமி ஐயங்காரின் முயற்சியால் விரைவில் விடுதலை கிடைத்தது. பாரதியார் சென்னைக்கு வந்து, பின் கடையம் சென்று அங்கு சில காலம் வாசம் செய்யலானார். கடையத்திலிருந்து அவர் ப்ரஸிடெண்ட் சு. நெல்லையப்பருக்கு 1918 டிசம்பர் 21 ஆம் தேதியிட்டு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். இதிலிருந்து அவர் 1918-டிசம்பரில் புதுச்சேரியை விட்டுப் புறப்பட்டுக் கடையம் அடைந்தார் எனக் கொள்ளலாம்.

கடையத்திற்கு வரும்போதே பாரதியாரின் உடல்நிலை மிகவும் சீர்குலைந்து விட்டது. உள்ளத்திலே உணர்ச்சி வேகம் மாறாதிருப்பினும் உடல் ஓடிந்துபோய் விட்டது. அவர் ஒரு புது மனிதராகக் காணப்பட்டார்.

புதுச்சேரியிலிருந்து திரும்பிய பாரதியாரைப்பற்றி திரு எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு 1921 செப்டம்பர் 17-ஆந் தேதி சுதேசமித்திரன் வார அநுபந்தத்தில் எழுதியுள்ள கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்:

"ஸ்ரீமான் பாரதியார் புதுச்சேரியினின்று வந்த பின்பு பழைய பாரதியின் உருவமேயில்லை. ஒரு வங்காளி போன்ற

உருவத்தோடு காணப்பட்டார். அதற்கானபடி தலைப் பாகையும் பிறவும் பொருந்தியிருந்தன. அவரது நடையும் கோலமும் யாவுமே மாறின. எல்லாம் புதுவிதமாக இருந்தது. ஒரு பிரம்ம ஞானி போன்றும் காணப்பட்டார். அவரைப் பார்த்தாலே உற்சாகந் தோன்றிவிடும். எவ்விதக் கர்வமும் இல்லை. அவர் படிப்பை அவர் அறியார். சிறு குழந்தை போன்றும் இருப்பார். தமக்கென்று ஒரு பெருமையை அவர் வைத்துக்கொள்ளவில்லை. எந்த இடத்தில் அவரை உட்கார வைத்துப் பாடச் சொன்னாலும் உடனே ஆனந்தத்துடன் பாட ஆரம்பித்து விடுவார். அவர் பாடுங்கால் கூட இருந்து கேட்ட பாக்கியம் நமக் குண்டு. அவர் பாடுகையில் அந்தப் பாட்டின் அத்தனை ரசங்களும் அவரது வதனத்தில் தத்ரூபமாய்த் தோன்றும்—ஜ்வலிக்கும். எவரையும் லக்ஷியம் பண்ணுகிற சிந்தை அவருக்கில்லை. எல்லோருக்கும் வணங்கிய உடம்பாகத் தாழ்ந்து பணிந்து நடந்து கொள்வார். ஆனால் ஏதேனும் நெஞ்சில் எண்ணம் குடிகொண்டு விட்டால் ரஸபுத்திர வீரனாகி விடுவார்."

பழைய கொள்கைகள் சற்று வலிமையாக வேரூன்றி நிற்கும் நாட்டுப்புறத்திலே அவருடைய போக்கு யாருக்கும் திருப்தியளிக்கவில்லை. மேலும் பதின்மூன்று, பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு கடையத்திற்குத் திரும்பிவரும் அவரை எத்தனை பேர் அறிந்து கொண்டிருப்பார்கள்? வறுமையின் பிடி வேறு அங்கேயும் தளராமல் இருந்தது.

இந்த நிலையில்தான் பாரதியார் எட்டயபுரம் ஜமீன் தாருக்கு இரண்டு சீட்டுக் கவிகள் 1919 மே 2ஆம் தேதியில் எழுதியிருக்கிறார்.

கிராமத்திலே அவரால் வசிக்க முடியவில்லை. மறுபடி யும் சென்னையை நோக்கிப் புறப்பட்டார். சுதேசமித்திரன்

மறுபடியும் அன்போடு அவரை ஏற்றுக்கொண்டது. மீண்டும் அதன் உதவியாசிரியரானார்.

இரண்டாம் முறை அவர் சுதேசமித்திரனில் சேர்ந்த காலம் நிச்சயமாகத் தெரியவில்லை. 1920 ஜூன் 20ஆம் தேதியன்று பொட்டல் புதூரிலே **இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை** என்ற பொருள்பற்றி அவர் பேசியதாகத் தெரிகிறது. கடையத்தில் வசித்தபோது இது நிகழ்ந்திருக்கலாம். 1920 ஏப்ரல் 9ஆம் தேதி ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் புதுச்சேரியிலிருந்து சென்னைக்கு வருகிறார். அன்று சென்னையில் அவருக்குப் பெரிய வரவேற்பு நடந்தது. பலர் அவரைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். பாரதியார் அது சமயம் சென்னையில் இல்லையென்றும் தெரிகிறது. 1920 நவம்பர் 15ஆம் தேதியிலிருந்து சுதேசமித்திரனில் தொடர்ந்து, அநேகமாக நாள்தோறும் குறிப்பு, ரஸத்திரட்டு, விநோதத் திரட்டு என்பன போன்ற தலைப்புக்களுடன் பாரதியார் எழுதுவதைப் பார்க்கும்போது அவர் அது சமயந்தான் மறுபடியும் உதவியாசிரியராக வேலை ஏற்றுக்கொண்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

இவ்வாறு அவர் எழுதும் குறிப்புகள் பொதுவாக இந்திய அரசியலைப்பற்றி மட்டுமல்லாமல் வேறு விஷயங்களைப் பற்றியும், ஐர்லாந்து, துருக்கி போன்ற பிற நாடுகளைப் பற்றியும், முதல் உலக யுத்தத்தின் விளைவாகத் தோன்றிய நிகழ்ச்சிகளைப் பற்றியும் இருக்கின்றன.

உலக விஷயங்களைப் பற்றி எழுதும்போதும் ஆங்கிலேயரைத் தாக்கியும், தாய்நாட்டு விடுதலைக்கு ஆர்வமூட்டக்கூடிய ஐரிஷ் சுதந்தரப் போராட்டம் போன்ற நிகழ்ச்சிகளைப் பற்றியும் அவர் முக்கியமாக எழுதுகிறார்.

இக் குறிப்புக்களெல்லாம் தனித்தனி இலக்கிய சிருஷ்டியல்லவென்றாலும், பாரதியாருடைய அரசியல் ஞான விரிவையும், கருத்துக்களையும், கொள்கைகளையும்

எழுத்துத் திறமையையும் இவை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றன. சக்தி வாய்ந்த எழுத்து நடையையும், வசையுரை, ஹாஸ்யம் முதலியவற்றையும் ஆங்காங்கு இவை நன்கு வெளிப்படுத்துகின்றன. அந்தக் காலத்து உலக நிலையையும் அவை நமக்கு ஒருவாறு புலப்படுத்து கின்றன.

இடையிடையே ரிஷிகள் கடன், மகாமகம் போன்ற அழகிய கட்டுரைகளும் எழுதி யிருக்கிறார்.

சென்னைக்கு மீண்டபின் பாரதியார் பழையபடி பல கூட்டங்களில் பேசுவதைக் காண்கிறோம். சில சமயங்களில் வெளியூர்களுக்குச் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்து வதுமுண்டு. 1921 மார்ச் 25–ல் அவர் கூடலூர் சென்றி ருக்கிறார். அடுத்த ஆகஸ்டில் ஈரோட்டிற்கடுத்த கருங்கல் பாளையத்தில் 'மனிதனுக்கு மரணமில்லை' என்ற பொருள் பற்றிப் பேசியிருக்கிறார். அது விவரம் **எனது ஈரோடு யாத்திரை** என்ற கட்டுரையில் கூறப்படுகிறது. அடுத்த நாள் ஈரோட்டில் 'இந்தியாவின் எதிர்கால நிலை' என்ற பொருள் பற்றிப் பேசியிருக்கிறார். அதைப்பற்றி வேறொரு கட்டுரையில் எழுதுவதாகக் குறித்த பாரதியார் அதை எழுதவேயில்லை. அதற்குள் அவர் பேனா ஓய்ந்து விட்டது.

பாரதியாரின் உடல்நிலை மிகவும் சீர்குலைந்து விட்ட தென்று முன்பே குறிப்பிட்டேன். அந்த நிலையிலே திரு வல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை அவரைக் கீழே தள்ளிக் காயமுண்டாக்கிவிட்டது.

இரண்டாம் முறை சென்னைக்குத் திரும்பியதும் பாரதியார் முதலில் தம்பு செட்டி தெருவில் சில மாதங் கள் வசித்தார். பிறகு திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவிலுள்ள ஒரு வீட்டிற்குக் குடி வந்தார். அடிக்கடி பார்த்தசாரதி சுவாமி கோயிலுக்குச்

செல்லுவார். கோயில் யானைக்குப் பழம் தேங்காய் அன்புடன் அளிப்பார்.

அந்தக் கோயில் யானைக்கு மதம் பிடித்திருந்த ஒரு நாளிலே அது பாரதியாரை இழுத்துக் கூடத்திற்குள் தள்ளிவிட்டது. குவளைக் கிருஷ்ணமாச்சாரியார் இதை எப்படியோ அறிந்து ஓரே பாய்ச்சலாக அங்கு வந்து பாரதியாரை வெளியில் எடுத்து வந்தார். பாரதியாருக்கு மண்டையிலும் உடம்பிலும் காயம்.

காயம் ஆறிப் பாரதியார் பிழைத்தார். ஆனால் இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அவர் நெடுநாள் உலகில் வாழவில்லை. வயிற்றுக்கடுப்பு நோய் அவரை மரணப்பிடியாகப் பிடித்தது. இளைத்துப் போயிருந்த அவருடைய உடம்பு அதன் பிடியை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ளச் சக்தியற்றுவிட்டது. அதற்குப் பணிந்து விட்டது. 1921 செப்டம்பர் 10ஆம் தேதி தேசபக்தன் ஆசிரியராகவிருந்த வ. வெ. சு. ஐயர் ராஜத்துவேஷத்திற்காகக் கைது செய்யப் பட்டார். கைது செய்யப்படு முன்பே அவர் ஆசிரியர் பதவியினின்றும் விலகிவிட்ட போதிலும் தேசபக்தனில் இவர் இருந்த காலத்தில் வெளி வந்த ஒரு கட்டுரைக்காகச் சிறை புக நேர்ந்தது. சிறைக்குப் போகுமுன் ஐயர் நோய்வாய்ப்பட்டுக்கிடந்த பாரதியாரைப் பார்க்க வந்தார். அடுத்த நாள் இரவு சுமார் 1-30 மணிக்குப் பாரதியாரின் தூல வாழ்க்கை முடிவுற்றது.

பாரதியாரின் பிரிவைக் குறித்துச் சுதேசமித்திரனில் 1921 செப்டம்பர் 12ஆம் தேதியில் ஒரு குறிப்பு வெளியாகியிருக்கிறது: "தமிழ்நாடு போற்றும் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் இவ்வுலக வாழ்வை நேற்றிரவு துறந்து விண்ணவருக்கு விருந்தாகிவிட்டார் என்ற செய்தியை அறிவிக்க நமது மனம் பதறுகிறது. சில தினங்களாக நோயினால் வருந்திக் கொண்டிருந்த அவரை மறுபடியும் ஸ்தூல

சரீரத்தில் பார்க்கப்போகிறதில்லை என்று நாம் நினைக்க வில்லை. திங்கட்கிழமையன்று மித்திரன் வேலைக்கு வந்து விடுவதாகச் சில தினங்களுக்கு முன் சொல்லியனுப்பிய அவர் அத்திங்கட்கிழமையன்று சாம்பராகி விட்டது என்ன கொடுமை !.....''

அதே காளில் நகரச் செய்தி என்ற தலைப்பின்கீழ் இன்னும் சில விவரங்கள் எழுதப்பட்டுள்ளன ''ஒரு வார மாக ஸ்ரீ சுப்ரமணிய பாரதி தேக நோய் கொண்டு திருவல்லிக்கேணியில் அசௌகரியமாய் இருந்து திடீரென்று நேற்று இரவு 1 மணிக்கு இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகமடைந்தார். அவர் இறந்த செய்தி தெரிந்த வுடன் ஸ்ரீமான்களான புதுச்சேரி ஸ்ரீனிவாசாச்சாரியார், திருமலாசாரியார், ஹரிஹர சர்மா, சின்னசாமி, நெல்லை யப்பர், நீலகண்டன் முதலான பலர் வந்தனர்..... ஹரிஹர சர்மா, கிருஷ்ணசாமி சர்மா, முதலானவர்கள் பிரேதத்தைத் தாங்கிக் கொண்டு சுடுகாடு சென்று அங்கு தகனத்துக்குச் சற்று முன்னர் ஸ்ரீமான் சர்க்கரை செட்டி யார், கிருஷ்ணசாமி சர்மா, ராமச்சந்திர அய்யர் இவர்கள் தமிழிலே பேசிய பிறகு, சுரேந்திரநாத் ஆர்யா தெலுங்கில் பேசினார். பாரதியார் இயற்றிய கீதங்கள் பாடிய பிறகு தீ மூட்டப்பட்டது. பாரதியார் ஆவி நற்கதியடையும்படி எல்லோராலும் பிரார்த்திக்கப்பட்டது.''

தமது எழுத்து வன்மையினாலே நாட்டிலே விழிப்பை யும் மொழியிலே மறுமலர்ச்சியையும் உண்டாக்கிய கவிஞர் தமது 38வது வயதிலேயே மறைந்து விட்டார். அவருடைய உள்ளத்தினின்று பொங்கிய உணர்ச்சிக் கனலை அவ ருடைய உடம்பு அதற்குமேல் தாங்கமுடியவில்லை. உடல் தாங்க முடியாததைத் தமிழ் தாங்கி நிற்கிறது. அதனால் புதிய உரம் பெற்று வளர்கின்றது.

பாரதி தமிழ்

பாரதி என்ற பட்டம் பெற்று சி. சுப்பிரமணிய பாரதியார் சமஸ்தானப் புலவராக இளமையிலேயே வாழ்க்கை தொடங்குகிறார். ஆனால் அந்த வாழ்க்கையில் அவருக்கு விருப்பம் நீண்டநாள் இருக்கவில்லை. அவருடைய இயல்பிற்கு அது ஒத்துக் கொள்ளுமா? தேச விடுதலையிலே ஆர்வமுள்ளவர் அவர்; இந்த ஆர்வத்தை அவருடைய காசி வாழ்க்கை ஓங்கச் செய்திருக்க வேண்டும். அவருடைய தேசியப் பற்றுதலுக்கு உகந்தவாறு சுதேசமித்திரன் பத்திரிகையில் உதவி ஆசிரியர் வேலை கிடைக்கிறது. கொஞ்ச நாட்களில் அவரே **இந்தியா** என்ற பத்திரிகையின் ஆசிரியராகிவிடுகிறார். அரசியல் கிளர்ச்சி மிகுந்த தலைநகர்ப் பட்டினமான சென்னை வாழ்க்கையும், பத்திரிகைத் தொழிலும் அவருடைய தேச பக்தியையும், மொழியன்பையும் மேலும் மேலோங்கச் செய்கின்றன. அவருடைய கவிதையுள்ளம் தேசபக்திக் கனலால் ஒளிவிட்டு மலரத் தொடங்குகிறது. சமஸ்தானத்திற்கு உகந்த பழைய சம்பிரதாயப் பாடல்கள் பாடிய கவிஞர் நாட்டு மக்களின் உள்ளத்திலே தேசபக்திக் கனலைத் தூண்டும் தேசியக் கவியாக மாறுகிறார். சமஸ்தானத் தொழிலிலே உலாவும் மடலும் பாடியதாக வ. ரா. குறிப்பிடுகிறார். அத்தகைய கவிதைகள் மறைந்து உணர்ச்சி மிக்க தேசியப் பாடல்கள் தோன்றுகின்றன. பாரதியார் மக்களிடத்தே ஒரு தளர்ச்சியையும், தோல்வி மனப்பான்மையையும் காண்கிறார். அவற்றைப் போக்கி மக்களைத் தட்டி எழுப்ப வேண்டுமென்று துடிக்கிறார். பாரத நாட்டின் பெருமையையும், தமிழ் நாட்டின் பெருமையையும், தமிழ் மொழியின் தனிப் பெருமையையும் பாடுகிறார். தாமாக

எழுதிய கவிதைகளோடு பங்கிம்சந்திரர் எழுதிய "வந்தே மாதரம்" என்ற அமர கீதத்தின் மொழிபெயர்ப்பும், மாஜினியின் பிரதிக்கினையை அடிப்படையாகக் கொண்ட வீரப் பாடலும் உருவாகின்றன.

மன்னும் இமய மலையெங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே

என்று பாரத நாட்டுப் பெருமையை விரிக்கிறார்.

வாழிய செந்தமிழ் வாழ்கதற் றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு

என்று நாட்டு வாழ்த்துப் பாடுகிறார்.

இப் பாடல்களெல்லாம் 1908 ஜனவரிக்கு முன்பே வெளிவந்தவை. 1904-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சென்னைக்கு வந்து சேர்ந்த பாரதியார் மூன்று ஆண்டு களிலே தேசியக் கவியாகப் பெரிதும் முன்னேறி விட்டார். இப்பாடல்களிலே நந்தனார் சரித்திரக் கீர்த்தனைப் பாடல் களின் மெட்டுக்களையும், (இவற்றை நந்தனார் கீர்த்தனை அநுகரணப் பாடல்கள் என்று பாரதியாரே குறிப்பிட் டிருக்கிறார்) ஆநந்தக் களிப்பு, கிளிக்கண்ணிகள் முதலான இசைப் பாடல் வகைகளையும் காணலாம். இப்பாடல்களை எழுதுவதற்கு முன்பே எழுதிய சில பாடல்களைப் பார்த்தால் அவைகளுக்கிடையேயுள்ள வேறுபாடு நன்கு தெரியும். 1906 செப்டம்பரில் எழுதிய "யான்", "சந்திரிகை" என்ற சானெட்டுக்களைப் படிக்கும்போது இந்த வேறுபாடு நன்கு தெளிவாகின்றது. 1906-ல் வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு கூறி எழுதிய ஆசிரியப்பாவில் "யாஅன்", "எறிவதூஉம்" என்பன போன்ற அளபெடைகளெல்லாம் வருகின்றன. ஆரம்பகாலப் பாடல் என்பதை அதிலே நன்கு காணலாம்.

இந்தியா பத்திரிகையில் தமது விருப்பம்போல் யாதொரு தடையுமின்றி எழுதத் தொடங்கிய காலத் திலேயே அவருடைய கவித் திறமை நன்கு அமைந்து விட்டது. அது புதுச்சேரி வாழ்விலே மெருகேறி, "குயில் பாட்டு", "கண்ணன் பாட்டு", "பாஞ்சாலி சபதம்" முதலிய பாடல்களில் பூரணமடைகிறது.

பாரதியாரின் கவிதையைப் படிக்கும்போது முதலிலே நமக்குத் தோன்றுவது அதன் எளிமையும் உணர்ச்சி வேகமுமேயாகும். அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டிற்கு விடுதலை வேண்டும் என்று அவர் உள்ளம் பொங்குகிறது. அவருக்கு இயல்பாக அமைந்துள்ள கவித்திறமையிலே அந்த உணர்ச்சி உண்மையான உருப் பெறுகிறது. உள்ளத்திலே தெளிவிருக்கும்போது அது தெள்ளிய எளிய முறையிலே அனைவருக்கும் புரியும்படியாக வெளியா கின்றது. அந்தத் தெளிவும் உணர்ச்சியும் இல்லாதபோது தான் வார்த்தைகள் நேராக வருவதில்லை; பின்னிக் கொள்கின்றன; மனப்பாடம் செய்த ஸ்கண்டுகளைத் தருகின்றன. ஆதலால்தான், "மடாலயங்களிலும், சமஸ்தா னங்களிலும், பண்டிதர்களிடையேயும் தேங்கி வளர்ச்சி குன்றிக்கிடந்த தமிழைக் காப்பாற்றி தேசிய வாழ்க்கை யின் முன்னணிக்குப் பாரதியார் கொண்டு வந்தார்" என்று அவரைப் புகழ்கிறார்கள். கவிதையைப்பற்றிப் பாரதியார் 'புனர் ஜன்மம்' என்ற கட்டுரையிலே தமது கருத்தைத் தெளிவாக விளக்கி யிருக்கிறார். "நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று, ருசி குறைந்தது. கரடு முரடான கல்லும் கள்ளி முள்ளும் போன்ற பாதை நமது கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவி ராயர் 'கண்' என்பதை 'சக்கு' என்று சொல்லத் தொடங் கினர். ரஸம் குறைந்தது; சக்கை அதிகப்பட்டது;

உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப் பட்டன.....கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்கவேண்டுமென்பது கம்பனுடைய மத மாகும். இதுவே நியாயமான கொள்கை.

"மேலும், நெடுங் காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்து பாஷையைத் தழுவினவை. காலம் மாற மாற, பாஷை மாறிக்கொண்டு போகிறது; பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமை யான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை."

பாரதியாருடைய கவிதைகளிலும் கட்டுரைகளிலும் இந்த எளிமையை நாம் காண்கிறோம். உணர்ச்சி நேராக உள்ளத்தைத் தொடுகிறது. அரண்மனையிலே அடைபட்டுக்கிடந்த தமிழ், மக்களின் பொது மேடைகளிலே புத்துயிர் பெற்று அவர்களுடைய உள்ளக் கிளர்ச்சிகளை வெளியிடும் வலிமை வாய்ந்த கருவியாக மலர்கிறது. நாடு விடுதலையடைவதற்கு அறிகுறியாகத் தமிழ் விடுதலை பெற்றது என்று அறிஞர்கள் மகிழ்ந்தார்கள்.

கவிதையைப் பற்றிப் பொதுவாக மேலே கூறும்போது கட்டுரையைப் பற்றியும் குறிப்பிட்டேன். உரைநடை யிலும் பாரதியார் சிறந்த இலக்கியம் உண்டாக்கியவர்.

சாதாரணமாக இக்காலத்திலே பாரதியாரைப்பற்றி நினைக்கும்போது அவருடைய கவிதையைத்தான் மனதில் வைத்துக் கொள்ளுகிறோம். ஒரு காலத்தில் பாரதியார் என்றால் அவருடைய தேசியப் பாடல்களே நினைவுக்கு வரும். அந்த நிலை மாறி அவருடைய மற்றக் கவிதைகளை யும் ஆராய்ந்து அனுபவிக்கும் காலம் வந்துவிட்டது. ஆனால்

இன்னும் அவருடைய உரைநடை இலக்கியத்தைப் பற்றி யாரும் அதிகமாக எண்ணுவதில்லை.

வேகமும், எளிமையும், நேருக்கு நேரான சம்பாஷணைப் போக்கும், இடையிடையே ஹாஸ்யமும் கலந்து ஒரு புதிய நடையில் பாரதியார் எழுதுகிறார். பேச்சு மொழியை அவர் கையாளுவதிலே ஒரு புதிய ஜீவன் இருக்கிறது. "ஞான ரத"த்தில் அமைந்துள்ள நடை ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. அதைக் கவிதை நடை என்றே கூறலாம். அவருடைய உரை நடையிலே இறந்துபட்ட சொற்கள் இல்லை; உயிருள்ள வழக்குச் சொற்கள் வலிமையோடு இடம் பெறுகின்றன. இதை அவருடைய கட்டுரைகள், கதைகள், குறிப்புகள் முதலிய எல்லாவற்றிலும் காணலாம். எழுதுவோனது முழுத் தோற்றத்தையும் அவனுடைய எழுத்து நடை வெளிப்படுத்திவிடும் என்று கூறுவதுண்டு. வலிமையும் உணர்ச்சி வேகமும் ஜீவனும் நிறைந்தது பாரதியின் நடை. அது பாரதியாரின் முழுத்தோற்றப் பொலிவையும் நன்கு காட்டுகிறது.

உரை நடையைக் கையாள்வதிலும் பாரதியாரின் கலை வளர்ச்சியை நாம் எளிதில் காண முடியும். 1906 பிப்ரவரியில் பாரதியார் ஒரு விண்ணப்பம் செய்துகொள்கிறார். பல ராலும் எழுதப்பட்டிருக்கும் சிறந்த தேச பக்திப் பாடல்களைத் தொகுத்து வெளியிட வேண்டுமென்பது அவர் நோக்கம். விண்ணப்பம் தொடங்குகிறது; "எமது தாய் நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றேனதலின் பல்லைடைத் தமிழ் நூல்களில் பாரத நாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர்

தெரிந்தனுப்புவார்களாயின், அவர் மாட்டு மிக்க கடப்பாடுடையவனாவேன்."

இதைப் படிக்கின்ற மூச்சிலேயே பாஞ்சாலி சபதத்திற்குப் பொருள் விளக்கக் குறிப்பாகப் பாரதியார் எழுதிய சூர்யாஸ்தமன வருணனையையும் படித்துப் பாருங்கள்.

"பார்! ஸூர்யனைச் சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவது போலத் தோன்றுகிறது! ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனை விதவிதவங்கள்! எத்தனை ஆயிர விதமான கலப்புகள்! அக்கினிக் குழம்பு! தங்கம் காய்ச்சி விட்டோடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்!

நீல ஏரிகள்! கரும் பூதங்கள்! எத்தனை வகை நீலம்! எத்தனை விதச் செம்மை! எத்தனை வகைப் பசுமை! எத்தனை வகைக் கருமை! நீல ஏரியின்மீது மிதக்கும் தங்கத் தோணிகள்; எரிகின்ற தங்க ஜரிகைக் கரை போட்ட கரிய சிகரங்கள்! தங்கத் திரிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கு பார்த்தாலும் ஒளித் திரள், வர்ணக் களஞ்சியம். போ, போ, என்னால் அதை வர்ணிக்க முடியாது."

அல்லது "கண்கள்" என்ற கட்டுரையில் நேரே உற்றுப் பார்ப்பதைப் பற்றிப் பாரதியார் கூறுவதைப் பாருங்கள். "நேரே பார்த்தால் விரோதக் குறியென்று யோக்யன் ஏன் நினைக்க வேணும்? அகத்தின் அழகு முகத்தில் தெரியும். உன் மனசில் என்ன இருக்கிறதென்று தெரிந்துகொள்ளும் பொருட்டாக உன் கண்ணை நேரே பார்க்கிறேன். விரோதமில்லை. அவமரியாதை யில்லை. சிநேயம் தெரிந்துகொள்ளும் பொருட்டு." (பக். 229.)

அல்லது "பெண்" என்ற கட்டுரையிலே 'இடிப் பள்ளிக்கூடத்திலே' பிரமராய அய்யருடைய கர்ஜனையைக் கேளுங்கள்; "துருக்கி தேசம் தெரியுமா? அங்கே நேற்று வரை ஸ்திரீகளை மூடி வைத்திருப்பது வழக்கம். கஸ்தூரி

மாத்திரைகளை டப்பியில் போட்டு வைத்திருக்கிறார்களோ இல்லையோ? அந்த மாதிரி. திறந்தால் வாசனை போய் விடும் என்று."

இவையெல்லாம் பிற்காலத்திலே புதுச்சேரியில் எழுதப் பட்டவை. இவற்றிலே சொல் தடுமாற்றம் கிடையாது. கருத்துக்களும், உணர்ச்சிகளும் நேராக, லாகவமாக வழக்கில் உள்ள சொற்களிலேயே வெளியாகின்றன. அவற்றை யெல்லாம் தமிழிலே சொல்ல முடியுமா என்று பெரிதும் ஐயங்கொண்டிருந்த காலத்தில் மிக அழகாகத் தமிழிலே கூறலாம் என்று பாரதியார் காட்டினார். அவருடைய கட்டுரைகளைப் படிக்கும்போது அவர் பலவேறு விஷயங்களைப் பற்றித் தெளிவாக விளக்கியிருப்பது புலனாகும். உலக அரசியல் விவகாரங்களாயினும் சரி, ரவீந்திரநாத தாகூரின் கவிதைகளாயினும் சரி, அவருடைய கவிதை நடை கொண்ட கதைகள், கட்டுரைகளாயினும் சரி எல்லாவற்றையும் தமிழிலே பாரதியார் சொந்த எழுத்துப் போல நல்ல முறையிலே மொழி பெயர்த்துத் தருவதையும் நாம் காண்கிறோம்.

பாரதியார் வாழ்ந்த காலம் சுதந்தர உணர்ச்சி அரும்பி மலர்த் தொடங்கிய காலம். விண்ணப்ப முறையை விடுத்து அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்ட காலம். தாதாபாய் கௌரோஜி யும், திலகரும் விடுதலைப் போராட்டத்தை உருவாக்கிய காலம் அது. சுவாமி விவேகானந்தர் ஒரு புதிய விழிப்பை யும், கௌரவத்தையும் உண்டாக்கிய காலம் அது. அரசியல், சமூகம் முதலியவற்றில் இப் பெரியார்களின் கருத்துக்களும், இவர்கள் விரும்பிய மாறுதல்கள், சீர்திருத்தங்களைப் பற்றிய பேச்சுக்களும் நாடெங்கும் ஒலித்தன. பாரதியாருடைய கவிதைகளிலும் கட்டுரைகளிலும் அவற்றின் தெளிவான, ஆழ்ந்த பிரதிபலிப்பைக் காணலாம். அவ

ருடைய கவிதைக் குரல் அக் கருத்துக்களுக்குப் புது வலி மையையும் அழகையும் கொடுக்கிறது. கவிஞரே அவற்றைப் புதிதாகக் கூறுவது போன்று உணர்ந்து மக்கள் அவற்றில் லயித்துவிடுகிறார்கள்.

பாரதியாரின் அந்திய காலத்தில்தான் காந்தியடிகள் தென்னப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வெற்றியுடன் திரும்பி வந்து இந்திய அரசியலில் பங்குகொள்ளத் தொடங்குகிறார். அன்பு, அஹிம்சை என்ற காந்தியக் கருத்துக்கள் அரசியல் விவகாரங்களிலே அதுவரை நாட்டில் பரவவில்லை. அரசியலிலே அவற்றைப் புகுத்தும் துணிச்சல் பெரியதோர் அளவிலே காந்தியடிகளுக்குத்தான் வந்தது. அதை அவர் அப்பொழுது தென்னப்பிரிக்காவிலே வெற்றிகரமாகச் சோதனை செய்துகொண்டிருந்தார். பாரதியாருக்கு அரசியல் தலைவர் திலகர், காந்தியடிகளல்ல. இந்த அடிப்படை உண்மையை மனதில் வைத்துக்கொண்டு பாரதியாருடைய தேசியப் பாடல்களைப் படிக்கவேண்டும்.

திலகரை ஆர்வத்தோடு பின்பற்றிய பாரதியார் ஆரம்ப காலத்தில் காந்தியடிகள் கூறிய கருத்துக்கள் சிலவற்றை ஆமோதிக்காததோடு தமது மாறுபட்ட கருத்துக்களை விளக்கி வெளிப்படையாக எழுதுவதையும் காண்கிறோம். அக்காலத்தில் மகாத்மா காந்தி வெறும் ஸ்ரீமான் காந்தியாகவே இருக்கிறார். இருப்பினும் பாரதியார் காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கத்தைக் கூர்ந்து கவனித்து வருகிறார். அடிகளின் அன்பிற்கு முன்னால் தென்னப்பிரிக்க வெள்ளையரின் கொடுமை பணிந்துவிடுவதைத் தமது **இந்தியா** பத்திரிகையில் சித்திரம் போட்டு விளக்குகிறார். பிற்காலத்திலே அவரைப் பற்றி "மஹாத்மா காந்தி பஞ்சகம்" என்ற பாடலில் போற்றும்போது நுட்பமான தமது கவிதா மேதையால் அவருடைய பெருமையையும், அவருடைய அஹிம்சா மார்க்கத்தின் தனிச் சிறப்பையும்

உணர்ந்து பாராட்டுகிறார். காந்தியடிகளால் நமது நாட்டிற்குக் கதி மோட்சம் பிறக்குமென்று அவர் காண்கிறார். ஆதலால்தான்

கொடியவெந் தாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவ னென்கோ ?

என்று அடிகளைப் போற்றுகிறார்.

ஜீவராசிகளெல்லாம் கடவுளின் வடிவம் என்பது உயர்ந்ததோர் உண்மை. அந்த உண்மையைக் காந்தியடிகள் கொலையும் போரும் நிறைந்த அரசியலில் புகுத்திடத் துணிந்தது கவிஞருக்குப் பேராச்சரியத்தை யளிக்கிறது.

இன்ன மெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்
கிழிபடு பேச்சு, கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியலதனிற்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான் !

என்று வியந்து பாராட்டிப் பாடுகிறார்.

மேலும் பாரதியார்,

தெருங்கிய பயன் சேர் 'ஒத்துழையாமை'
நெறியினால் இந்தியாவிற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே

என்று அப்பாடலை முடிக்கிறார். அறவிம்சா நெறியினால் இந்தியாவிற்கு விடுதலை கிடைக்குமாயின் அந்த வழியைப் பின்பற்றி வையகம் வாழவேண்டுமென்று அவர் உலகத்திற்கே இந்த வழியைச் சிபார்சு செய்கிறார்.

பாரதியாரின் கவிதைகளைத் தனித்தனியே ஆராய்வது இங்கே எனது நோக்கமல்ல. இந்நூலினிடையே ஆங்

காங்கு உரிய இடங்களில் சுருக்கமாக அதைச் செய்திருக் கிறேன். பொதுவாக அவருடைய கவிதை வளர்ச்சி, உரை நடை வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுவதே இங்கு எனது நோக்கம்.

முக்கியமான உலக மொழிகளிலே தேசியப் பாடல் களில்லாத மொழி ஒன்றும் இல்லை யென்றே கூறலாம். மேல்நாட்டு மொழிகளிலுள்ள பல தேசியப் பாடல்கள் அந்நாட்டு மக்களுக்கு என்றும் உணர்ச்சியூட்டும் சக்தி வாய்ந்தவையாக அமைந்திருக்கின்றன. அவற்றோடு சரி நிகராக வைத்துப் போற்றக்கூடிய தேசியப் பாடல்களைப் பாரதியார் நமக்குத் தந்திருக்கிறார். சிறந்த தேசியப் பாடல்கள் தமிழில் இல்லை என்ற குறையை நீக்கிய தனிப் பெருமை அவருக்கே உரியது. அவர் பாடிய தேசியப் பாடல்களில் சில அந்தக் காலத் தேவைக்காக உண் டானவையாக இருக்கலாம். அந்தத் தேவை மறைந்த பிறகு அவற்றின் முக்கியத்துவமும் மறைந்துவிடலாம். ஆனால் நாட்டைப்பற்றி நினைக்கும்போது என்றும் உணர்ச்சிப் பெருக்கோடு பாடி அநுபவிக்கும் பாடல்கள் பல அவற்றிலே இருக்கின்றன. அவை மக்களின் உள்ளத்தை என்றும் கவர்ந்து கொண்டே யிருக்கும்.

புதுச்சேரிக்குச் சென்று அங்கும் விடாமுயற்சியோடு தமது பத்திரிகைகளின் வாயிலாகத் தேசப்பற்றையும், சுதந்தர ஆர்வத்தையும் வளர்த்த பாரதியார் பத்திரிகைச் சட்டத்தின் மூலமாகத் தமது முயற்சிகளை பிரிட்டிஷ் அரசாங்கம் தடுத்துவிட்டதை உணர்கிறார். 1910–ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திலே அவருடைய பத்திரிகைகள் நின்று விடுகின்றன (இது பற்றிய விவரம் அடுத்த பகுதி யில் பார்க்க.). அதற்குப் பிறகு அவருடைய உள்ளம் தேசியப் பாடல்களும் அரசியல் கட்டுரைகளும் அல்லாத வேறு இலக்கியத் துறைகளிலே முக்கியமாகச் செல்லு

கிறது. அதற்கு முன்பும் அத்துறைகளிலே அவர் கவனம் செலுத்தாமலில்லை. முன்பே பல பக்திப் பாடல்களைப் பாடியிருக்கிறார். பராசக்தியும் கண்ணனும் முருகனும் அவர் சிந்தையிலே மாறாதிருக்கிறார்கள். மேலும் ஞானரதம் போன்ற நூல்களுக்கு அடிகோலி யிருக்கிறார். ஆனால் பெரியதோர் அளவிலே 1910-க்குப் பிறகுதான் அவருடைய உள்ளம் அந்தத் துறைகளிலே செல்லுகிறது. கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலான இலக்கியங்களும், கதைகளும், கட்டுரைகளும் தமிழுக்குச் சிறந்த புது அணிகளாகக் கிடைக்கின்றன. அவருடைய தேசிய உணர்ச்சி இந்த இலக்கிய சிருஷ்டிகளின் போதும் இடையிடையே மேலோங்குவதையும் நாம் காண்கிறோம். பாஞ்சாலி சபதத்திலே இதைத் தெளிவாகக் காணலாம். பாரதியாரின் இறுதி மூச்சு வரை இந்த உணர்ச்சியின் வேகத்தை நாம் உணர்கிறோம். அவரது வாழ்க்கையின் அந்திக் காலத்திலே சுதேசமித்திரன் உதவியாசிரியராக மறுபடியும் அமர்ந்தபோதும் இதை உணர்கிறோம். ஆனால் அது பழைய பாரதி இடிமுழக்கத்தின் எதிரொலி போலவே சற்று லேசாக நமக்குக் கேட்கின்றது. தேசத்திற்கும், தமிழுக்கும் செய்யவேண்டிய தமது கடமைகளை மிகச் சிறந்த முறையிலே என்றும் அழியாதவாறு முன்பே பாரதியார் செய்து முடித்துவிட்டார். உடலொடுங்கிச் சென்னைக்கு மீண்டும் வந்த பாரதியார் அந்த உடலோடு தாம் அதிக நாட்கள் உலகத்திலே இருக்கமுடியாது என்பதை உணர்ந்து கொண்டார்போலும். அதுவே மரணத்தைப் பற்றிய நினைவிலே அவரை அடிக்கடி இழுத்துச் சென்றிருக்கிறது.

காலா, உனைதான் சிறு புல்லென மதிக்கிறேன்; என்றன்
காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன்

என்று தொடங்கும் பாடலை அவர் 1919 டிசம்பர் இறுதி

யில் வெளியான சுதேசமித்திரன் ஆண்டு அநுபந்த மலரில் எழுதியிருக்கிறார். 1921 ஜூலை மாதம் இறுதியிலோ அல்லது ஆகஸ்ட் முதலிரண்டு தேதிகளிலோ பாரதியார் ஈரோட்டிற்குச் சென்றிருக்கிறார். அங்கே கருங்கல் பாளையம் என்ற ஊரிலுள்ள வாசகசாலையில் பேசியதைப் பற்றி எழுதும்போதும், ''எனக்கு ஒரு விஷயந்தான் முக்கிய மாகத் தெரியும். அதையே அங்கும் எடுத்துப் பேசினேன். அதாவது இந்த உலகத்தில் மானுடர் எக்காலத்திலும் மரணமில்லாமல் இருக்கக்கூடுமென்ற விஷயம்'' என்று கூறுகிறார். அடுத்த செப்டம்பர் 11-லேயே அவருடைய உடம்பு வீழ்ந்து விடுகிறது.

ஆனால் மரணமில்லாமல் வாழலாம் என்று பாரதியார் கூறியது அவரைப் பொறுத்த அளவிலே பொய்யாகவில்லை. அவருடைய பூதவுடல் அதன் இயல்புக்கு ஏற்றவாறு கலிந்து மறைந்துவிட்டாலும் பாரதியார் சாகவில்லை. அவருடைய எழுத்துக்களின்மூலம் அவர் சிரஞ்சீவியாக இருக்கிறார். தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ் சிறு கதைகள் பேசி, நரை கூடிக் கிழப் பருவமெய்தி கொடுங் கூற்றுக்கு இரை யெனப் பின் மாயும் வேடிக்கை மனிதரைப்போல அவர் வீழ்ந்துவிடவில்லை. அவருடைய தமிழின்மூலம் அவர் அமரர் ஆனார்.

பாரதி இந்தியா

பாரதியாரின் தேசபக்திக் கனல் எவ்விதமான தடையுமின்றிச் சுடர்விட்டெழுந்தது **இந்தியா** என்னும் அவருடைய வாரப் பத்திரிகையில்தான். நாட்டு விடுதலை இயக்கத்தில் தமிழ் மக்களைத் தூண்டிவிட அவர் எவ்வாறு முயன்றார் என்பதை அப்பத்திரிகையின் ஒவ்வொரு பக்கத்திலும் காணலாம்.

1904-ஆம் ஆண்டின் இறுதியில் பாரதியார் சுதேசமித்திரனில் உதவியாசிரியரானார். அடுத்த ஆண்டிலேயே அவர் **சக்கரவர்த்தினி** என்னும் மாதப் பத்திரிகை நடத்துவதைக் காண்கிறோம்.

இந்தியா 1906-ஆம் ஆண்டு ஏப்ரில் அல்லது மே மாதத்தில் ஆரம்பமாகியிருக்கிறது. ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸஹோதரத்வம் அதனுடைய லட்சியம். தனிப்பிரதி விலை அணா ஒன்று. ஆனால் பாரதியார் அதற்கு ஆண்டுச் சந்தா நிர்ணயித்த வழியே தனிப்பட்டது.

நமது பத்திரிகையின் சந்தா விவரம்

	ரூ.	அ.	பை.
எல்லா கவர்ன்மெண்டாருக்கும்	50	0	0
ஜமீந்தார்கள், ராஜாக்கள் முதலியவர்களுக்கு	30	0	0
மாதம் ரூ. 200-க்கு மேற்பட்ட வருமானம் உடையவர்களுக்கு	15	0	0
மற்றவர்களுக்கு	3	0	0

இந்தியா சென்னையில் 34, பிராட்வேயிலிருந்து 1908-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை வெளியாகி

யுள்ளது. முதல் இரண்டு தொகுதிகள் ஒரு அளவிலும் மூன்றும் தொகுதி தொடக்கத்திலிருந்து முன்பு வெளியான அளவைப்போல இரண்டத்தீன அளவில் அதாவது தினசரிப் பத்திரிகை அளவிலும் வெளியாகியுள்ளன.

புதுச்சேரிக்கு மாற்றப்பட்டு 1908 அக்டோபர் மத்தியி லிருந்து மறுபடியும் பழைய அளவில் வெளியாகிறது. இடையிலே சிறிது காலந்தான் இந்தியா நின்றிருக்கிறது. புதுச்சேரி சென்று பத்திரிகையைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று பாரதியாரும் அவர் நண்பர்களும் முன்பே தீர்மானம் செய்து கொண்டதுபோலவே தோன்று கிறது. அதன்படியே ஸ்ரீனிவாசாசாரியாரும் புதுச்சேரி செல்லுகிறார்.

1909 மார்ச்சு 27-ல் புதுச்சேரியிலிருந்து வெளியான இந்தியா தொகுதி 1 இதழ் 24-ல் பாரதியாரின் ஸ்வதேச கீதங்களின் இரண்டாம் பாகமாகிய **ஜன்ம பூமி** என்ற நூலைப் பற்றிப் பின்வருமாறு விளம்பரம் காணப் படுகிறது :

ஜன்ம பூமி

ஸ்வதேச கீதங்கள் என்ற நூல் வெளியேறியதற்கப் பால் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரால் எழுதப்பட்ட பாக் களும் கீர்த்தனங்கள் முதலியனவும் அடங்கியது. முதற் பாகத்தைவிட மாதுரியத்திலும் சுதேச பக்தியிலும் சிறப்பு வாய்ந்தது. அச்சடித்துத் தயாராகிவிட்டது. வேண்டியவர் கள் புதுச்சேரி இந்தியா ஆபீஸில் ஸ்ரீ ஸ்ரீனிவாசாசாரி யாருக்கு எழுதிப் பெற்றுக் கொள்க.

இதன் விலை அணை மூன்று.

இதே இதழில் ஞான ரதத்தில் கந்தர்வ லோகம் என்ற பகுதியில் கடற்கரை என்ற உட்பிரிவு தொடங்குகிறது.

ஆதலால் இந்நூலில் ஒரு சிறு பகுதியே சென்னையிலிருந்து வெளியாகியிருக்கலாம் அல்லது தொடக்கம் முதல் புதுச்சேரியிலிருந்து வெளியாகியிருக்கலாம் என்று தோன்றுகிறது. இந்தியாவின் இதழ்கள் அனைத்தையும் பார்க்க இயலாமையால் இதை நிச்சயமாகக் கூற முடியவில்லை.

இந்தியாவில் காரிபால்டியின் வாழ்க்கை வரலாறு, ராணி லக்ஷ்மிபாய் சரித்திரம், லண்டன் கடிதம் முதலானவற்றை வ. வெ. சு. ஐயர் லண்டனில் இருக்கும்போதே எழுதி வந்தார். தேசிய உணர்ச்சியைப் பெருக்கும் இத்தகைய விஷயங்களும் செய்திகளும் கட்டுரைகளுமே **இந்தியா**வில் அதிகமாக இடம் பெற்றன.

தேச விடுதலைக்கு யார் யார் தீவிரமாக உழைக்கவில்லையோ அவர்களையெல்லாம் தாக்கி எழுதுவதில் பாரதியார் கொஞ்சமும் தயங்கவில்லை. மிதவாதிகள் பலமுறை அவருடைய கூரிய சொல்லம்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள். அன்னி பெஸண்ட்-அம்மையாரைப் பற்றியும் அக்காலத்தில் பாரதியாருக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை. அவரையும் தாக்கி எழுதியிருக்கிறார்.

கார்ட்டூன் சித்திரம் வரைந்து, முக்கிய விஷயங்களை விளக்குதல் அல்லது யாரையாவது கேலி செய்தல் ஆகிய முறையைத் தமிழ்ப் பத்திரிகையில் பாரதியார் அப்பொழுதே கையாள்கிறார்.

ஸ்ரீ அரவிந்தர் ஓராண்டுக் காலம் பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டிருந்து பிறகு விடுதலை பெற்றபோது அச்சம்பவம் பற்றி சித்திரமும் சித்திர விளக்கமும் **இந்தியா**வின் 1909 மே 13-ஆம் தேதி இதழில் வெளியாகியுள்ளன. கிரஹண விமோசனம் என்பது அச் சித்திரத்தின் தலைப்பு.

"அரவிந்த சூரியனை விழுங்க வந்த போலீஸ் பாம்பு நீங்கிப் போய்விட்டது" என்று சித்திரத்தின் அடியிலே

எழுதியிருக்கிறார். இப் படத்துடன் கூடிய **இந்தியா** பத்திரிகையின் முதற் பக்கம் தனியே இந்நூலில் தரப்பட்டிருக்கிறது. அப் படத்திற்குக் கீழ்க்கண்ட விளக்கமும் வெளியாகியுள்ளது.

சித்திர விளக்கம்

"அரவிந்தர் என்ற ஞானச் சுடரை—அரவிந்தர் என்ற தர்ம சூரியனை 'அநீதியாகக் குற்றம் சுமத்துதல்' என்ற இராகு வந்து மறைத்திருந்தது. விழுங்கிவிடலாமென்பது அந்தப் போலீஸ் பாம்பின் எண்ணம். சூரியனை விழுங்கப் பாம்பால் முடியுமா? சிறிது காலம் மூடியிருந்து பின் தானே அகன்று போய்விட்டது. இதுவே இவ் வாரச் சித்திரத்தின் கருத்து."

மிதவாதிகளைக் கேலி செய்து பல சித்திரங்கள் வெளிவந்துள்ளன. அக்காலத்தில் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் நடத்திய சாத்விக இயக்கத்தைப் பாராட்டியும் சித்திரம் வந்துள்ளது.

பாரதியார் **விஜயா** என்ற தினசரிப் பத்திரிகை ஒன்றையும் நடத்தினரல்லவா? அப் பத்திரிகை முதலில் சென்னையில் 83, ஹைரோடு, திருவல்லிக்கேணி என்ற இடத்திலிருந்து வெளியாகியிருக்கிறது. அதைப்பற்றிய விளம்பரம் 1909 மார்ச்சு 27 **இந்தியா** இதழில் காணப்படுகிறது. அப்பொழுது அதற்கு யார் பத்திராதிபர் என்பது தெரியவில்லை. **இந்தியா** 1909 ஆகஸ்டு இதழில்தான் முதல் முதலில் **விஜயா** புதுச்சேரியிலிருந்து வெளிவருவது பற்றி விளம்பரம் வருகிறது. செப்டம்பர் 7-ஆம் தேதி கிருஷ்ண ஐயங்கார் முதல் அதைத் தொடங்கப் போவதாக விளம்பரம் கூறுகிறது.

அநேகமாக **இந்தியா** வெளிவந்துகொண்டிருந்தவரையிலும் இப் பத்திரிகையும் நடந்து வந்திருக்கிறது.

இந்தியா 1909 அக்டோபர் 2 இதழில் **கர்மயோகி** என்ற பத்திரிகை வெளிவருவது பற்றிய விளம்பரம் வந்துள்ளது. ஸ்ரீ அரவிந்தர் நடத்திய **கர்மயோகின்** என்ற பத்திரிகையை ஒட்டித் தமிழில் பாரதியார் நடத்திய மாதப் பத்திரிகை இதுவாகும். 1909 டிசம்பர் 4—ஆம் தேதிக்கு முன்பே இப் பத்திரிகை வெளியாகிவிட்டதாகத் தெரிகிறது. இதன் காரியாலயம் புதுவை வெள்ளாளத் தெருவில் இருந்திருக்கிறது.

1909 டிசம்பர் 4—ஆம் தேதியில் வெளியான **இந்தியா** இதழிலேயே **சித்ராவளி** என்ற மற்றொரு புதிய மாதப் பத்திரிகை **இந்தியா** காரியாலயத்திலிருந்தே விரைவில் வெளியாகப் போவதைப் பற்றி விளம்பரம் காணப்படுகிறது. இப்பத்திரிகை வெளியாயிற்றா இல்லையா என்பது தெரியவில்லை. வெளி வந்ததாக அறிவிப்பு ஒன்றும் **இந்தியா**வில் நான் பார்த்த அளவில் தென்படவில்லை. பெரும்பாலும் சித்திரங்களாகவே இருக்குமாறு இதை நடத்த வேண்டுமென்பது பாரதியாரின் திட்டம். சித்திரங்களின் விளக்கம் தமிழிலும் ஆங்கிலத்திலும் இருக்குமாம்.

தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பப் பாரதியார் கொண்டிருந்த ஆர்வத்தை 1909 ஏப்ரல் 10-ல் வெளியான **இந்தியா** இதழிலுள்ள கீழ்க் கண்ட இரண்டு குறிப்புக்களிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம்.

தேச பக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் கப்பலோட்டிய வீர வரலாறு அனைவருக்கும் தெரியும். அவர் சிறைப்பட்ட பின்பும் தொடர்ந்து சுதேசியக் கப்பல் விடுவதற்கான பெரு முயற்சி நடந்தது. அது பற்றி **தூத்துக்குடி சுதேசியக் கப்பல்** என்ற தலைப்பில் **இந்தியா**வில் வெளியாகியுள்ள குறிப்பாவது:—

" தூத்துக்குடி சுதேசியக் கப்பலுக்கு இருநூறு ரூபாய் வந்ததற்குப் பிறகு வரவு நின்றுவிட்டது. 'கப்பல் நிதி'

என்ற பெயரால் 150 ரூபாய் தூத்துக்குடிக்கு அனுப்பி விட்டோம். ஆறு பங்காயிற்று. என்ன வெட்கம்! என்ன வெட்கம்!! தமிழ் நாட்டு ஜனங்களிடம் அவர்கள் சொந்தக் காரியத்திற்காக இரண்டு லக்ஷம் ரூபாய் கேட்டதற்கு இரு நூறு வசூலாகியிருக்கிறது. கப்பலுக்கு ஓரிரண்டு உப காரிகள் உதவி செய்ய முன் வந்திருப்பதாகவும், இன்னும் இரண்டு வாரங்களிலே கப்பல் முன்போல நடக்குமென்றும் கேட்டு சந்தோஷமடைகிறோம். நமது பத்திரிகையைப் பார்த்துக் காசியில் ஒரு தேசாபிமானி இவ்விஷயத்தில் முயற்சி எடுத்து வருவதாய்த் தெரிவதும் திருப்திக்கிடமான சமாச்சாரம். ஆனால் தமிழ்நாட்டுப் பொது ஜனங்கள் உறங்கிக் கிடக்கும் அற்புதந்தான் வருத்த முண்டாக்கு கிறது. இவர்களை எப்படி விழிக்கச் செய்வது?"

அதே இதழில் **தேச பக்தி** என்ற தலைப்புடன் மற்று மோர் குறிப்பு.—

"துருவன், பிரஹ்லாதன் முதலியோர் விஷ்ணுவிடத் திலே செலுத்திய பக்தியை நாம் ஸ்வதேசத்தினிடத்திலே செலுத்த வேண்டுமென்று நமது பத்திரிகையில் பல முறை எழுதியிருக்கிறோம். பக்திப் பெருமை தெரியாத ஐரோப்பில் கூட ஜர்மானிய தேசத்தார் நமது தேசத்தில் சுதேசியத்தின் விருத்தியைப் பார்த்துவிட்டுத் தாமும் சுதேசியத்தை ஓர் பெரும் தர்மம் (மதம்) ஆக்கி நடத்த வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். சுவாமி விவேகா னந்தர், 'எனது பாரத புத்திரர்களே, இன்னும் ஒரு நூற் றாண்டுக்கு நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள் யாதெனில் பாரத தேசத்து முப்பது கோடி ஜனங்களே. இவர்களெல்லாம் மஹா சக்தியின் ஆவிற் பாகங்கள். இவர் களையே நீங்கள் ஆராதனை செய்ய வேண்டும். இவர்களுக்கே நீங்கள் தொண்டு செய்ய வேண்டும். இதைக் காட்டிலும்

கிறந்த மதம் வேறு கிடையாது' என்று அருளிச் செய்திருக்கிறார்.

"பாரத நாடு முழுமையும் இம் மதத்தை முற்றிலும் அங்கீகாரம் செய்து கொண்டிருக்கத் தமிழர்கள் மட்டிலும் கொஞ்சம் பின்னடைந்திருக்கிறார்கள். இங்ஙனம் பின் பட்டிருப்பது பிழை. தமிழர்களே, இப் பிழையை நீங்கள் சீக்கிரம் நிவிருத்தி செய்து கொள்ளாத விஷயத்தில் ஸர்வ நாசமடைந்து போவீர்கள். அறிவுடன் வாழுங்கள்"

1909 ஏப்ரில் 17-ஆம் தேதி இதழிலே சௌமிய என்னும் புது வருஷம் பிறந்ததை ஓட்டி **இந்தியா** கீழ்க் கண்ட தலையங்கம் எழுதியுள்ளது

புது வருஷம்

"பாரத வாஸிகளுக்குப் புதிய வருஷம் பிறந்திருக்கிறது. இவ்வருஷத்தில் நமது நாட்டிற்குப் பல நன்மைகள் விளையுமென்று சில சோதிட சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனால் சோதிட சாஸ்திரம் என்ன செய்யும்? ஒருவன் கண்மூடித்தனமாக அந்நிய தேச வஸ்திரம் வாங்கும்போது குறுக்கே வந்து நிற்குமா? நன்மையும் தீமையும் மனிதர்கள் தமக்குத் தாமே விளைவித்துக் கொள்ளுகிறார்களல்லாது அவை வெளியிலிருந்து வருவன அல்ல. தத்தம் கர்ம பலன்களையே எல்லா ஜீவராசிகளும் அநுபவிக்க வேண்டும். நமக்கு நன்மை வரவேண்டுமானால் நாம் செய்ய வேண்டிய விஷயங்கள் பின் வருவன :—

1. நமது தேசப் பொருள்களையே வாங்குதல்; அந்நிய சாமான்களை விலக்குதல்.

2. நாமாகப் பாடசாலைகள் வைத்துக் கொண்டு நமது குழந்தைகளுக்கு ஆரிய தருமங்களைப் போதிப்பித்தல், அந்நியருடைய கல்வியிலே யிருக்கும் நன்மைகளைக் கிரஹித்

துக்கொண்டு, தீயதை விலக்குவதற்குக் கூட்டு முயற்சிகள் செய்தல்.

3. நமது தேசத்தார் இப்போது மிகவும் ஹீனமான சரீர நிலை கொண்டிருப்பதை நீக்கும் பொருட்டாக சரீரப் பயிற்சிக்கூடங்கள் அத்யாவசியமாக ஏற்படுத்துதல்.

4. ஜாதீய பஞ்சாயத்துக்கள் வைத்தல்.

5. கிராமந்தோறும் பாரதமாதா கோயில் என்று ஓர் ஆலயம் ஏற்படுத்தி அநுதினம் பூஜை முதலிய கைங்கர்யங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

"மேலே கூறப்பட்டிருக்கும் தர்மங்களை நாம் சிரத்தையுடன் நடத்தி வருவோமானால் நமது ஜாதிக்கு க்ஷேமமுண்டு; இல்லாவிடின், இல்லை."

1910 ஜனவரி 22-ஆம் தேதி **இந்தியாவில் பால பாரத** என்ற ஆங்கில மாதப் பத்திரிகை வெளியிடுவது பற்றிய விளம்பரம் வந்துள்ளது. இதற்கும் பாரதியாரே ஆசிரியர்.

அதே இதழில் **விஜயா, இந்தியா** பத்திரிகைகளை அச்சிடும் ஸ்ரீ ஸரஸ்வதி அச்சியந்திரசாலையின் விலாச மாறுதல் தரப்பட்டுள்ளது. இனிமேல் அச்சகம் புதுவை வழுதாவூர் வீதி 10 நெ. வீடு என்ற இடத்தில் இருக்குமென்றும், பத்திரிகைகளின் அலுவலகங்களும் அங்குதானிருக்குமென்றும் அதில் தெரிகின்றன.

1909 நவம்பர் 20-ஆம் தேதி இதழிலிருந்து அதாவது புதுச்சேரியிலிருந்து வெளியாகும் **இந்தியாவின்** இரண்டாம் தொகுதி 5-ஆம் இதழிலிருந்து மறுபடியும் அது தினசரிப் பத்திரிகை அளவிலும் அதிகப் பக்கங்களுடனும் படங்களுடனும் வெளிவரத் தொடங்குகிறது. இவ்வாறு பத்திரிகை பெரிதாகியும் சந்தா மாறவில்லை. சந்தாவை உயர்த்துவது நியாயமென்றும், பத்திராதிபர் தமது தேச பக்தியால்

அவவாறு செய்யாதிருப்பினும் **இந்தியா** அபிமானிகள் சந்தாவைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் சிலர் கடிதமெழுதுகிறார்கள். சந்தாவை உயர்த்துவதோடு பத்திரிகையை வாரம் இருமுறை வெளியிட வேண்டுமென்று சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். குறைந்தது 1500 பேர் இதற்குச் சம்மதம் தெரிவித்தால் வாரம் இருமுறையாக்கத் தாம் உடன்படுவதாகப் பாரதியார் எழுதுகிறார்.

அவ்வாறு விருப்பம் தெரிவிக்கப்பட்டதோ என்னவோ, **இந்தியா** அடுத்த யுகாதியிலிருந்து வாரம் இருமுறையாக வெளியாகுமென்று 1910 ஜனவரி 24—ஆம் தேதி இதழில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் **இந்தியா** வாரம் இருமுறைப் பத்திரிகையாக வரவேயில்லை. இந்திய சர்க்கார் பிறப்பித்த பத்திரிகைச் சட்டம் பாரதியாரின் முயற்சிகளையெல்லாம் ஓரேயடியில் வீழ்த்திவிட்டது. இந்தச் சட்டத்தைப்பற்றி 1910 பிப்ரவரி 12-ஆம் தேதி **இந்தியா** இதழில் விவரமும், தலையங்கமும் வெளியாகியிருக்கின்றன. 1910 மார்ச் 5-ஆம் தேதி இதழில் 'சிற்பமும் கவிதையும்' என்ற பொருள் பற்றித் தலையங்கம் காணப்படுகிறது. அத்தலையங்கம் "இதைக் குறித்து எழுதினால் பத்திரிகைச் சட்டம் நம்மை அண்டாது. ஆகையால் இதையாவது நம் ஜனங்களுக்குச் சொல்வோம்" என்று ஆரம்பத்தில் கூறுகிறது. இதிலிருந்து அந்தச் சட்டத்தின் பிடிப்பு எவ்வளவு வலிமையாக இருந்திருக்குமென்று தெரிந்து கொள்ளலாம்.

இந்தியாவின் அடுத்த இதழையும் நான் பார்த்தேன். அதற்கு மேலே எத்தனை இதழ்கள் வந்தனவோ தெரியாது. அதிகம் வந்திருக்க முடியாது.

வாரம் இரு முறையாக **இந்தியா**வை வெளியிடத் திட்டமிட்ட பாரதியார் அதை ஒருமுறையாகக்கூட வெளியிட

முடியாது போயிற்று. பத்திரிகைச் சட்டத்தின்படி அவர் நடத்தும் பத்திரிகைகளை பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் நுழையவிடாமல் தடுத்து விட்டனர். அதனால் பாரதியாரின் பத்திரிகைப் பெருமுயற்சி ஒடுங்கியது.

அவருடைய பத்திரிகைகளை அடக்க முயன்றதோடு அவரையே கைது செய்யப் பல சூழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. 1910 பிப்ரவரி 26-ஆம் தேதி **இந்தியா** இதழில் 'எப்படி நம்புவது' என்ற தலைப்புடன் ஒரு சிறு கட்டுரை வெளியாகியுள்ளது. அதிலே ஒரு சி. ஐ. டி. பாரதியாரை ஆங்கிலேயரிடம் பிடித்துக் கொடுக்கச் செய்த தந்திரம் பற்றிய விவரம் வெளியாகின்றது. சென்னையிலே யிருந்த காலத்தில் ஏற்பட்ட பழக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவன் பாரதியாரிடம் அடிக்கடி வந்து கொண்டிருந்தான். **இந்தியா**வுக்கு விஷயம் திரட்டியளிக்கும் செயலிலும் ஈடுபட்டான். அவன் செய்த சூழ்ச்சி வெளியானபோது அவனைப் பக்கத்தில் அணுகவிடக் கூடாது என்று கூறிய நண்பர் ஒருவரிடம் பாரதியார், "நாம் அதற்கு தர்ம தேவதையின் ஸகாயமும் பாரதமாதாவின் அருளும் உள்ளவரை நமக்குத் தீங்கு வராதென்றும், நாம் யாருக்கும் கனவிலும்கூடத் தீங்கை எண்ணவில்லை என்றும் சொல்லி முடித்தோம்" என்று கூறியதாக அக்கட்டுரை கூறுகிறது.

பாரதமாதாவின் அருள் பாரதியாருக்கு நிச்சயமாக இருந்ததென்றுதான் கூறவேண்டும். இல்லாவிட்டால் அவருடைய பத்திரிகை முயற்சிகள் ஒடுக்கப்பட்டு அவர் மனம் குன்றியிருந்த சமயத்தில் அவருக்குப் புதிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்க வ. வெ. சு. ஐயரும், ஸ்ரீ அரவிந்தரும் தக்க சமயத்தில் புதுச்சேரி வந்து சேர்ந்திருக்க முடியுமா? ஐயர் 1910 அக்டோபர் இறுதியிலும் ஸ்ரீ அரவிந்தர் 1911 ஏப்ரல் தொடக்கத்திலும் புதுச்சேரியை அடைந்தனர்.

பத்திரிகை முயற்சிகள் ஓய்ந்த பிறகு பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு முதலிய சிறந்த இலக்கியங்களை உண்டாக்குவதில் பாரதியார் முக்கியமாக ஈடுபடுகிறார்.

குறிப்பு:—பாரதியார் நடத்திய பத்திரிகைகள் என்று இந்நூலில் காணப்பெறும் பகுதியை அச்சிட்ட பிறகே **இந்தியா** பத்திரிகையின் இதழ்கள் மிகப் பலவற்றைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அங்ஙனம் பார்த்த இதழ்களிலிருந்து **இந்தியா**வைப் பற்றியும் பாரதியார் நடத்திய வேறு பத்திரிகைகளைப் பற்றியும் சில ரசமான புதிய செய்திகள் கிடைத்தன. அவற்றையும் எழுதிஞல் பத்திரிகைகள் நடத்தப் பாரதியார் மேற்கொண்ட முயற்சிகள் கன்கு வெளிப்படுமென்று இக் கட்டுரையை எழுதியுள்ளேன். இரண்டு கட்டுரைகளையும் சேர்த்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மேலே கூறியவாறு **இந்தியா** இதழ்களைப் பார்வையிட எனக்கு உதவியவர் திரு. ரா. அ. பத்மநாபன் அவர்கள். பாரதியாரிடத்திலே அளவுகடந்த பக்தி கொண்டவர்களில் அவரும் ஒருவர். பாரதியாரைப் பற்றிய பல குறிப்புக்களும், படங்களும், அவர் நடத்திய **இந்தியா** இதழ்கள் பலவற்றையும், பாரதியார் எழுதிய கடிதங்கள் இரண்டையும் மிகவும் முயன்று அவர் சேகரித்து வைத்திருக்கிறார். ஆர்வத்தோடு அவற்றை யெல்லாம் எனக்குக் காட்டி உதவியதோடு இந்நூலை நல்ல முறையிலே வெளிக்கொணர முயலவேண்டுமென்று அவர் எனக்கு உற்சாகம் கொடுத்தார். அவருடைய அன்பை நான் ஒருநாளும் மறக்க முடியாது. அவருக்கு எனது மனமார்ந்த நன்றி உரியது.

பாரதி தமிழ்

வங்கமே வாழிய

வங்க வாழ்த்துக் கவிகள்

15 செப்டம்பர் 1905 — விசுவாவசு ஆவணி 31

நேற்று மாலை நடந்த கடற்கரைப் பெருங் கூட்டத்தில்
மிஸ்டர் சி. சுப்பிரமணிய பாரதியார் சொல்லியவை

அங்கமே தளர் வெய்திய காலையும்
அங்கோர் புன்னரி தந்திடு மூனுனுச்
சிங்கமே யென வாழ்தல் சிறப்பெனுச்
செம்மை கூறிநந் தாய்ப் பெருந் தேயத்தைப்
பங்கமே பெறு மிந்திலே தின்றுயர்
பண்டை மாண்பிடைக் கொண்டினி துய்த்திடும்
வங்கமே யென வந்தனை வாழிநீ
வங்கமே நனி வாழிய வாழிய 1

கற்பகத் தருப் போலெது கேட்பினும்
கடிது நல்கிடும் பாரத நாட்டினிற்
பொற்புறப் பிறந்தேம், நமக்கோர் விதப்
பொருளு மன்னிய நீதல் பொறுக்கிலேம்
அற்பர் போலப் பிறர்கர நோக்கியா
மவனி வாழ்தலா காதென நன்கிதை

வற்புறுத்திடத் தோன்றிய தெய்வமே
வங்கமே நனி வாழிய வாழிய 2

கண்ணினீர் துடைப்பாய் புன்னகை கொள்வாய்
கவினுறும் பர தப்பெருந் தேவியே
உண்ணிகழ்ந்திடுந் துன்பங் கனதியால்
உன்றன் மைந்தர்கள் மேனெறி யுற்றனர்
பெண்ணி னெஞ்சிற் கிதமென லாவது
பெற்ற பிள்ளைகள் பீடுறவே யன்றோ?
மண்ணினீ புகழ் மேவிடவாழ்த்திய
வங்கமே நனி வாழிய வாழிய 3

வங்கம்—தோணி

(இது சுதேசிய மாணவர் கடற்கரைக் கூட்டத்தில் பாடியது)

குறிப்பு : —1. திரு. எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு அவர்கள் தமது பத்திரிகையாகிய அமிர்த குண போதினியில் **சென்று போன நாட்கள்** என்ற தலைப்பின் கீழ் பாரதியாரைப் பற்றிச் சில குறிப்புக்கள் தொடர்ச்சியாக எழுதியுள்ளார். அதிலே, "மித்திரனில் எனது தாய் நாட்டின் முன்னுட் பெருமையும் இந்நாட் சிறுமையும் என்று தொடர்ச்சியாக (பாரதியார்) பாடல்கள் எழுதத் தொடங்கினர். மித்திரனில் இதுதான் அவரது முதற் பாடலாகும். இது இப்போது வெளிவந்துள்ள அவரது நூல்களில் சேர்க்கப் படவில்லை" என்று அவர் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடும் பாட்டு இந்நூலில் ஏற்ற இடத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதை எழுதுவதற்கு முன்பே **வங்கமே வாழிய** என்ற இப்பாடல் சுதேசமித்திரனில் வெளியாகியிருக்கிறது. அதேபோல இன்னும் நான்கு பாடல்கள் முன்னதாகவே வெளியாகியுள்ளன. நான் ஆராய்ந்த அளவில் **வங்கமே வாழிய** என்ற பாடலே சுதேசமித்திரனில் வெளியான முதற் பாடலாகக் காண்கிறது. இப்பாடல் வெளிவந்தபோது பாரதியாருக்கு வயது இருபத்துமூன்று. பாரதியார் 15 செப்டம்பர் 1905க்கு முன்பே பல பாடல்கள் இயற்றியுள்ளதாக அவரது வாழ்க்கை

வரலாற்றை எழுதியோர் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறு வயதிலேயே எட்டையபுரம் சம்ஸ்தானத்தில் இருந்தபோது இவர் மடல்களும் உலாக்களும் பாடியதாகவும் அவற்றோடு தனிப் பாடல்கள் பல பாடியதாகவும் அவை யனைத்தும் மறைந்துபோய் விட்டதாகவும் திரு. வ. ரா. எழுதி யிருக்கிறார். (மகாகவி பாரதியார் பக். 12). அந்தக் காலத்திலேயே இவருக்குப் பாரதியார் என்ற பட்டமளிக்கப்பட்டிருப்பதிலிருந்தும் இவர் இளமையிலேயே பல பாடல்கள் பாடி யிருக்கலாம் என்று அறியலாம். ஆனால் அப்பொழுது பாடிய பாடல்களில் ஏதாவது அவரது கவிதைத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளதா என்று நிச்சயிக்க முடியவில்லை. "அண்ணுமலை ரெட்டியாரைப் போல அழகாக யாராவது இக்காலத்தில் காவடிச் சிந்து பாட முடியுமா?" என்று எட்டையபுரம் சம்ஸ்தானப் புலவர்கள் ஒரு சமயம் கேட்டதாகவும், அவர்களுக்குப் பதில் கூறும் வகையில் பாரதியார் முருகக் கடவுளின்மேல் ஒரு காவடிச் சிந்தைப் பாடினரென்றும் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். அதில் ஒரு சரணம் மட்டும் கிடைத்துள்ளதாக வெளியாகியுள்ளது. அது வருமாறு :—

பச்சைத் திருமயில் வீரன்,
அலங் காரன், கௌமாரன் - ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன் - அடி
பணி சுப்பிர மணியர்க் கருள்,
அணி மிக்குயிர் தமிழைத் தரு
பக்தர்க் கெளியசிங் காரன் - எழில்
பண்ணு மணிசலத் தூரன்

வங்கமே வாழிய என்ற பாடலே முதல் முதலாகச் சுதேசமித்திரனில் வெளிவந்த பாரதியார் பாடல் என்று கொள்வது மட்டும் பொருத்தமாகத் தோன்றுகிறது.

அக்காலத்திலே வங்காளத்தில் பொங்கி எழுந்த தேசிய உணர்ச்சியெல்லோருடையஉள்ளத்தையும் கவர்ந்திருக்கிறது.மாணவர்களுடைய உள்ளத்தையும் அது கவர்ந்தது வியப்பில்லை. தேசிய உணர்ச்சி மிக்க மாணவர் கூட்டத்திலே வங்காளத்தை வாழ்த்திப்

பாரதியார் இப்பாடலைப் பாடி யிருக்கிறார். சுதந்திரப் போரில் முன்னணியில் நின்று பாரதநாட்டின் விடுதலைக்கு அடிகோலுவ தோடு இங்காடு மறுபடியும் பழம் பெருமையை அடையக் கொண்டு செல்லும் தோணியைப் போல வங்காளம் திகழ்கின்ற தென அவர் பாராட்டிப் பாடுகின்றார். வங்காளப் பிரிவினை சம்பந்தமான சட்டம் 1905 செப்டம்பர் 29-ல் ஏற்பட்டது; 1905 அக்டோபர் 16-ல் பிரிவினை செய்யப்பட்டது. ஆதலால் செப்டம்பர் 15-க்கு முன்பே அது பற்றிய பேச்சும் எதிர்ப்புக் குரல்களும் தோன்றி யிருக்க வேண்டும்.

குறிப்பு :—2. தலைப்புடன் கொடுக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவ சகாப்தத்தை ஒட்டிய தேதியும் அதற்குச் சரியான தமிழ்த் தேதியும் ஒரு கவிதை, கட்டுரை அல்லது கதை முதல் முதலில் சுதேசமித்திரனில் வெளியான காலத்தைக் குறிக்கும். வேறு பத்திரிகை அல்லது நூலில் வெளியாகி யிருந்தால் அது அங்கேயே குறிக்கப்படும்.

வேல்ஸ் இளவரசருக்குப் பரத கண்டத் தாய்

நல்வரவு கூறுதல்

(பாரத மாது தானே பணித்தன்று)

29 ஜனவரி 1906 விசுவாவசு தை 17

மிஸ்டர் சி. சுப்பிரமணிய பாரதி இயற்றிய

ஆசிரியப்பா

வருக செல்வ வாழ்கமன் னீயே !
வடமேற் றிசைக்கண் மாப்பெருந் தொகையினோர்
பொற்சிறு தீவகப் புரவலன் பயந்த
நற்றவப் புதல்வ நல்வர வுனதே.
மேதக நீயுநின் காதலங் கிளியும்
என்றனக் காணுமா றித்தனை காதம்
வந்தனிர் வாழ்திரென் மனமகிழ்ந் ததுவே.
செல்வகேள் ! என்னருஞ் சேய்களே நின்னுடை
முன்னோ ராட்சி தொடங்குறூஉ முன்னர்
நெஞ்செலாம் புண்ணுய் நின்றனன் யாஅன்.
ஆயிர வருட மன்பிலா வந்தியர்
ஆட்சியின் விகீர்த்த அல்லல்க ளெண்ணில
போனதை யெண்ணிப் புலம்பியிங் கென்பயன் ?
மற்றுன் நாட்டினோர் வந்ததன் பின்னர்
அகத்தினிற் சிலபுண் ஆறுத லெய்தின.
போர்த்தொகை யடங்கியென் னேழைப் புத்திரர்
அமைதிபெற் றுய்வ ராயினர். எனவே
பாரதி தேவி பழமைபோற் றிருவருள்

பொழிதர ஐற்றனன். பொருள்செயற் குரிய
தொழிற்கணம் பலப்பல தோன்றின பின்னும்
கொடுமதப் பாவிகள் குறும்பெலா மகன்றன.
பாற்றினிற் பெண்களே யெறிவ தூஉம், இரதத்
துருளையிற் பாலரை உயிருடன் மாய்த்தலும்
பெண்டிரைக் கணவர்தம் பிணத்துட னெரித்தலும்,
எனப்பல தீமைக ளிறந்துபட் டனவால்,
மேற்றிசை யிருளினே வெருட்டிய ஞான
ஒண்பெருங் கதிரின் ஒளிரு கிரணமென்
பாலரின் மீது படுதலுற் றனவே.
ஆயினு மென்னே ? ஆயிரங் கோடி
தொல்லைகள் இன்னும் தொகுந்தன வில்லை.
நல்குர வாதி நவமாந் தொல்லைகள்
ஆயிர மெனினவந் தடைந்துள நுமரால்.
எனினுமிங் கிவையெலா மிறையவ னருளால்
நீங்குவ வன்றி நிகழ்ப்பன வல்ல.
நோயெலாந் தவிர்ப்பான் நுமரே யெனக்கு
மருத்துவ ராக வந்தன ரென்பதூஉம்
பொய்யிலை. ஆதலிற் புகழ்பெறும் ஆங்கில
நாட்டின ரென்றும் நலமுற வாழ்கவே.
என்னருஞ் சேய்களு மிவருதட் பெய்தி
இருபான் மையர்க்கு மின்னலொன் றின்றி
ஒருவரை யொருவர் ஒறுத்திட லிலாது
செவ்விதின் வாழ்க! அச் சீர்மிகு சாதியின்
இறைவரு முந்தை இன்பொடு வாழ்க!
வாழ்க நீ! வாழ்கதின் மனமெனு மினிய
வேரிமென் மலர்வாழ் மேரிநல் லன்னம்.
மற்றென் சேய்கள் வாழிய! வாழிய!

குறிப்பு :—1901 முதல், 1911 வரை ஏழாம் எட்வர்டு சக்கர வர்த்தியாக இருந்தார். அவருக்குப் பின் ஐந்தாம ஜார்ஜ் சக்கர

வர்த்தியாகப் பட்டம் சூடியவர் அவர் காலத்தில் வேல்ஸ் இளவரசராக இருந்தார். அவரை வரவேற்றே இப்பாடல் பாடப் பெற்றுள்ளது. இணையற்ற உணர்ச்சி மிக்க தேச பக்திப் பாடல்களைப் பாடித் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய பாரதியார் வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு கூறிப் பாட்டியற்றி யிருப்பது ஆச்சரியமாகவே தோன்றும். முழு மனத்தோடு இதைப் பாரதியார் இயற்றினாரா என்பது சந்தேகந்தான். தாம் ஏற்றுக் கொண்டிருந்த வேலையினால் ஏற்பட்ட கடமையை நிறைவேற்றவே இதை அவர் செய்திருக்கலாம். என்றாலும் இப்பாடலிலும் பாரதியாரது தேச பக்தி ஒளிவிடுவதை நாம் காணலாம். ஆங்கிலேயரால் புதிய தொல்லைகள் பல நம் நாட்டிற்கு சேர்ந்துள்ளன என்பதைக் குறிப்பிட பாரதியார் தவறவில்லை. மேலும் இப்பாடல் "என் சேய்கள் வாழிய வாழிய" என்ற மொழிகளோடு முடிவதையும் கவனிக்க வேண்டும்.

வந்தேமாதரம்

28 டிசம்பர் 1905 விசுவாவசு மார்கழி 14

திருவல்லிக்கேணியில் பிரசுரமாகும் சக்ரவர்த்தினி என்ற மாதாந்தரப் பத்திரிகையில் அதன் ஆசிரியர் மிஸ்டர் சி. சுப்பிரமணிய பாரதியாரால் வரையப்பட்டிருப்பது.

இப்போது பெங்காள மாகாணத்திலிருக்கும் ஒவ்வொரு ஹிந்துவாலும் ஸாம கீதத்தைப் போல அத்தனை பக்தியுடன் பாடப்பட்டு வருகின்ற வந்தே மாதரம் என்ற திவ்ய கீதத்தை நான் மொழி பெயர்க்கத் துணிந்தமை, கர்வங்கொண்ட செய்கை யென்று பலர் கருதக்கூடும். இது கீதமெழுதிய பெங்காளி வித்வானாகிய பங்கிம் சந்திர பாபுவின் தைவிகச் சொற்களைத் தமிழ்ப்படுத்த எனக்குப் போதிய வன்மை யில்லாவிடினும் தமிழ்நாட்டா ருக்கு அச் செய்யுளின் பொருளுணர்த்த வேண்டு மென்ற ஆசைப் பெருக்காலேயே யான் இதனைத் துணிந்திருக்கிறேன். இவ் வந்தேமாதரம் என்ற கீதம் பங்கிம் சந்திர சாடர்ஜியின் நூல்களிலே மிகச் சிறப்புக் கொண்டதாகிய ஆனந்த மடம் என்ற நாவல் கதையினிடையே அமைக்கப்பட்டிருக் கின்றது.

ஆனந்த மடம் என்ற கதையானது உண்மை யாகவே நடந்த சரித்திரத்தைத் தழுவியது. வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலா யிருந்த காலத்தில்

சந்நியாசிகள் சேர்ந்து நடத்திய ஓர் பெருங் கலகத்தைப் பற்றியே இந்நூல் விரித்துக் கூறுகின்றது. பெங்காளத்தில் 1774–5 வருஷத்தில் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அதற்கப்பால் அனேக ஆயிரம் சந்நியாசிகள் ஒன்றுய்க் கூடி அந்நியர் களைத் தமது தாய்ப் பூமியிலிருந்து ஒழித்துவிட வேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் கலகஞ் செய்யத் தொடங்கினர்கள்.

இவர்கள் ரகசியமாகச் சந்திக்கும் பொருட்டு ஆள் நுழையக் கூடாத கருங்காட்டில் ஆனந்த மடம் என்பதோர் இடம் வைத்திருந்தார்கள். இவர்கள் மகமதியப் படைகளைப் பல இடங்களில் தோல்வி செய்ததுமன்றி ஓர் ஆங்கிலேயப் பட்டாளத்தையும் முறியடித்தார்கள். எனினும் பிரிட்டிஷார் விடாமல் தாக்கியதன்பேரில் இந்த வீர சந்நியாசிக் கூட்டத்தார் கடைசியாகப் பிரிந்து போயினர். இந்த வீரத் துறவிகளில் ஒருவராகிய பவானந்தர் வந்தே மாதரம் என்ற ஆரம்பங் கொண்ட அரிய கீதத்தைப் பாடியதாக பங்கிம் புலவர் தமது நூலில் அமைத்திருக்கிறார்.

25 வருஷங்களுக்கு முன் இவர் இந்தப் பெரு நூலைப் பிரசுரித்தபோது அந்தக் கீதத்தின் கண்ணே பெரும் பகுதி சம்ஸ்கிருதமாகவே யிருந்த படியால் அவருடைய நேயர்கள் பலர் அதைக் குறை கூறினர்கள். ஆனல் அம்மகான் அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பொருட்டாக்கவில்லை. எழுதி 25 வருஷங்களுக்குள்ளாக மேற்படி திவ்ய கீதம் பெங்காளத்து ஜனங்கள் எல்லோருடைய நாவிலும்

மிருக்கு மென்பதை அந்தக் கவியரசர் அறிந்திருந் தார் போலும். அதிலிருக்கும் சம்ஸ்கிருதம் வெகு எளிதாயிருப்பதால் எந்தப் பெங்காளிக்கும் வெகு சுலபமாகப் பொருள் விளங்கி விடும். அதுவுமின்றி அந்தக் கீதமானது பழமையில் முன்னோர்களால் வழங்கப்பட்டு வந்ததும் ஒப்பற்றதுமான சம்ஸ்கிருத பாஷையோடு தற்காலப் பாஷை கலப்புற்று அமைக் கப் பெற்றிருப்பதால் பூர்வ காலத்துடன் தற் காலத்தை இணைப்பதாக இருக்கின்றது. தாய்த் தேசத்தை அந்தப் பாடலில் தாயென்று வழங்கி யிருப்பது மிகவும் பொருத்தமுடைத்தே.

பலரால் இக்கீதத்திற்கு எழுதப்பட்டிருக்கும் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பானது பெங்காளி கீதத் திலிருந்து சில இடங்களில் மாறுபடுகின்றது. அவ்வாறு மாறுபட்ட இடங்களில் என்னால் கூடிய அளவு பெங்காளிச் சொற்களை அநுசரித்தே தமிழ் மொழிபெயர்ப் பெழுதி யிருக்கிறேன். எனது தமிழ் எத்தனை குறைவுபட்டிருந்த போதிலும் தெய்வப் புலவராகிய பங்கிம்பாபுவின் மதிப்பைக் கருதித் தமிழுலகத்தார் இதனை நன்கு ஆதரிப்பார் களென்று நம்புகிறேன்.

வந்தே மாதரம்

(முதல் மொழிபெயர்ப்பு—பார்க்க :
பாரதி நூல்கள் முதல் தொகுதி)

முப்பதுகோடிவாய் நின்னிசை முழங்கவும்—
பெங்காளிப் பாஷையிலே 7 கோடி யென்றே கூறி

யிருக்கின்றது. ஆனல் அது பெங்காள மாகா ணத்தை மட்டிலுமே குறிப்பிட்டது. 30 கோடி இந்தியா முழுமையின் ஜனத் தொகை.

(நவம்பர் இதழ் சக்ரவர்த்தினியில் வந்தது)

குறிப்பு :—வந்தே மாதர கீதத்தின் மொழி பெயர்ப்பை ஒட்டிய ரஸமான ஒரு சம்பவத்தைச் சமீபத்தில் திரு. வீ. கே. ராமனுஜ ஐயர் அவர்கள் என்னிடம் கூறினர்கள். இவர் மயிலாப்பூரிலே வக்கீலாக இருக்கிறார். இவர் மஹேச குமார சர்மாவுக்கு நெருங்கிய உறவினர். மஹேச குமார சர்மா ஆனந்த மடம் என்ற நூலைத் தமிழிலே பெயர்த்து அழகாக எழுதி யிருக்கிறார். அதிலே வெளியிடுவதற்காக வந்தேமாதர கீதத்தை மொழி பெயர்த்துத் தரும்படி பாரதியாரைக் கேட்டுக் கொண்டாராம். இரண்டு மூன்று மாதங்கள் அவருடைய வேண்டுகோள் நிறைவேறவில்லை. பிறகு ஒரு நாள் இரவு சுமார் பத்து மணிக்கு பாரதியார் மஹேச குமார சர்மாவின் வீட்டுக் கதவைத் தட்டினர். அவர் அப்பொழுது சென்னை ஜார்ஜ டவுனில் வசித்து வந்தார். பாரதியார் திருவல்லிக் கேணியிலிருந்தார். அந்நேரத்தில் பாரதியார் வந்தது சர்மாவுக்குச் சற்று ஆச்சரியத்தை விளைவித்தது. "சர்மா, பாட்டு வந்து விட்டது—எழுதிக் கொள். கடற்கரையிலே உட்கார்ந்திருந்தேன். நீ கேட்ட பாட்டு திடீரென்று உதயமாயிற்று. கடற்கரையோர மாகவே நேராக இங்கு வந்து விட்டேன்" என்று பாரதியார் கூறினராம்.

பாரதியார் இரண்டு விதமாக இக் கீதத்தை மொழிபெயர்த் திருக்கிறார். இங்குள்ள கட்டுரை அப்பாடலுக்கு நல்ல முன்னுரை யாக அமைந்துள்ளது.

இக் கட்டுரையிலிருந்து வேறொரு முக்கிய விஷயமும் தெளி வாகிறது. பாரதியார் சுதேசமித்திரனில் வேலை பார்த்துக் கொண்டே அக்காலத்தில் சக்ரவர்த்தினி என்ற மாதப் பத்திரிகை ஒன்றை நடத்தி யிருக்கிறார். அதன் ஒரு இதழ் 1905 நவம்பரில் வெளியாகியுள்ளது.

விண்ணப்பம்

13 பிப்ரவரி 1906 விசுவாவசு மாசி 2

எமது தாய் நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப் பெற்ற செய்யுள்மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றேனதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரத நாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்களாயின் அவர்மாட்டு மிக்க கடப் பாடுடையவனாவேன். தமிழ்ப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் நாட்டுப் படலங்களில் நிடதம் கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப் பட்டிருக்கும் வருணனைகள் பயன்படமாட்டா. தற் காலத்தே தமிழ்ப் புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேச பக்தி'ப் பாக்கள் புனைந்தனுப்புவாராயின் அவையும் நன்றியறிவுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

சிறிய ஆற்றலுடையேனாகிய யான் இப்பெரிய தொழிலை நிறைவேற்றுவதன் கண்ணே எவ்வாற்றானும் துணைபுரிய விரும்புவோர் கால பரியயம் செய்யலாகாதென்று பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

சி. சுப்ரமணிய பாரதி

விலாசம் :— சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

குறிப்பு:—இவ்விண்ணப்பம் மறுமுறையும் 28 பிப்ரவரி 1906-ல் 'ஓர் சுதேசிய விண்ணப்பம்' என்ற தலைப்புடன் வெளியாகியுள்ளது. தேச பக்திப் பாடல்கள் வேண்டும் என்கிற ஆவலை இது வெளிப்படுத்துகிறது. பிறரிடம் சிறந்த தேசிய கீதங்களை எதிர் பார்த்துப் பாரதியார் ஏமாற்றமடைந்திருக்க வேண்டும். இத்துறையில் சிறந்த பாடல்கள் இல்லாத குறையை அவர் அடுத்த ஒன்றிரண்டு ஆண்டுகளிலேயே தமது பாடல்களால் முற்றிலும் களைந்து விட்டார். பாரதியார் இயற்றிய சுதேச கீதங்கள் என்ற நூல் 1908-ல் வெளியாகியது. வங்க வாழ்த்துக் கவியின் மூலமும் அடுத்து வரும் வந்தேமாதரம் முதலிய பாடல்கள் மூலமும் பாரதியார் இப்பணியை 1905 லிருந்தே தொடங்கி விட்டார் என்பதை நாம் அறிகிறோம்.

வந்தேமாதரம்

24 பிப்ரவரி 1906 விஜய வருஷ 13

ஆரியமென்ற பெரும்பெயர் கொண்டவெ
மன்னையின் மீதுதிகழ்
அன்பெனு மென்கொடி வாடிய காலே
யதற்குயிர் தந்திடுவான்
மாரியெ னும்படி வந்து சிறந்தது
வந்தே மாதரமே
மாணுயர் பாரத தேவியின் மந்திரம்
வந்தேமாதரமே
வீரிய ஞான மரும்புகழ் மங்கிட
மேவி தாரியரை
மிஞ்சி வலீந்திடு புன்மை யிருட்கணம்
வீவுற வங்கமகா
வாரிதி மீதி லெழுந்த இளங்கதிர்
வந்தே மாதரமே
வாழிந லாரிய தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே 1
காரடர் பொன்முடி வானி மயந்தரு
கங்கை வரம்பினிலும்
கன்னியை வந்தொரு தென்திசை யரசுகலி
காதல் செயா யிடையும்
வீரர்கள் மிஞ்சி விளங்கு புனைமுதல்
வேறுள வூர்களிலும்

விஞ்சை யெனும்படி யன்புடன் யாரும்
வியந்திடு மந்திரமும்
பாரத தேச விரோதிகள் நெஞ்சு
பகைத்திடு மந்திரமும்
பாதக ரோதிநு மேதக வுற்றிடு
பண்புயர் மந்திரமும்
வார முறுஞ் சுவை யின்னற வுண்கனி,
வான மருத்தனவே
மாணுயர் பாரத தேவி விரும்பிடும்
வந்தே மாதரமே 2

—சி. சுப்ரமணிய பாரதி

கன்னி - கன்னியா குமரி.

குறிப்பு:— இப்பாடலின் இரண்டாவது செய்யுள் சுதேச மித்திரனில் 27 பிப்ரவரி 1906-ல் வெளி வந்துள்ளது. பங்கிம் சந்திரர் எழுதிய வந்தேமாதர கீதத்தைப் போற்றி மொழி பெயர்த்த பாரதியார் இப் பாடலில் வந்தே மாதரம் என்னும் மந்திரத்தின் பெருமையை எடுத்தோதுகிறார்.

என்னே கொடுமை!

4 ஏப்ரல் 1906 விசுவாவசு பங்குனி 22

பூர்வ காலத்தில் அர்ஜுனதிகள் செய்ததாகப் புராணங்களிலே கூறப்படும் அம்புத் தொழில் முறைகளைப் பின்பற்றி இரண்டு ரஜபுத்திரர்கள் செய்த அற்புதமான துப்பாக்கி வித்தைகளை நோக்கும் போது உள்ளத்திலெழுந்த சில எண்ணங்கள்.

மல்லார் திண்டோட் பாஞ்சாலன்
மகள் பொற்கரத்தின் மாலுற்ற
வில்லால் விஜயன் அன்றிழைத்த
விந்தைத்தொழிலை மறந்திலிரால்
பொல்லா விதியால் நீவிரவன்
போர்முன்னிழைத்த பெருந்தொழில்கள்
எல்லா மறந்தீ ரெம்மவர்கான்
என்னே கொடுமை யீங்கிதுவே! 1

வீமன் திறலு மவற்கினைய
விஜயன் திறலும் விளங்கிநின்ற
சேமமணிப்பூந் தடநாட்டில்
சிறிய புழுக்கள் தோன்றி வெறுங்
காம நுகர்தல் இரந்துண்டல்
கடையாம் வாழ்க்கை வாழ்ந்து பினர்
ஈமம் புகுத லிவைபுரிவார்
என்னே கொடுமை யீங்கிதுவே! 2

—சி. சுப்ரமணிய பாரதி

எனது தாய் நாட்டின் முன்னுட் பெருமையும் இந்நாட் சிறுமையும்

11 ஏப்ரல் 1906 விசுவாவசு பங்குனி 29

கண்ணிகள்

புன்னகையு மின்னிசையு மெங்கொளித்துப் போயினவோ
இன்னலொடு கண்ணீ ரிருப்பாகி விட்டனவே !
ஆணெல்லாம் பெண்ணுய் அரிவையரெலாம் விலங்காய்
மாணெலாம் பாழாகி மங்கிவிட்டதித் நாடே !
ஆரியர்கள் வாழ்ந்துவரும் அற்புதநா டென்பதுபோய்ப்
பூரியர்கள் வாழும் புலைத்தேச மாயினதே !
வீமாதி வீரர் விளிந்தெங்கு போயினரோ !
ஏமாறி திற்கு மிழிஞர்களிங் குன்னாரே !
வேதவுப நிடத மெய்ந்நூல்க ளெல்லாம்போய்
பேதைக் கதைகள் பிதற்றுவரிந் நாட்டினிலே !
ஆதி மறைக்கீதம் அரிவையர்கள் சொன்னதுபோய்
வீதி பெருக்கும் விலேயடிமை யாயினரே !
செந்தேனும் பாலும் தெவிட்டி நின்ற நாட்டினிலே
வந்தே தீப்பஞ்ச மரபாகி விட்டதுவே !
மாமுனிவர் தோன்றி மணமுயர்ந்த நாட்டினிலே
காமுகரும் பொய்யடிமைக் கள்வர்களும் சூழ்ந்தனரே !
பொன்னு மணியுமிகப் பொங்கிநின்ற விந்நாட்டில்
அன்னமின்றி நாளு மழிவார்க ளெத்தனேபேர் ?

—சி. சுப்பிரமணிய பாரதி

குறிப்பு:— இன்னும் வரும் என்று இப்பாடலின் இறுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு எஸ். ஜி. ராமானுஜலு நாயுடு அவர்களும் தமது சென்று போன நாட்கள் என்ற கட்டுரையிலே பாரதியார் இத்தலைப்பைக் கொண்டு தொடர்ச்சியாகப் பாடல்கள் எழுதினரென்று கூறுகிறார். ஆனால் மற்றப் பகுதிகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஸ்வாமி அபேதானந்தர்

21 ஜூலை 1906

(இந்தியா பத்திரிகைக் கட்டுரை)

இந்த வாரத்தில் சென்னையிலே நடந்த சமாசாரங்களுக்குள் வெகு முக்கியமானது ஸ்வாமி அபேதாநந்தரின் வரவேயாகும். பாரத நாட்டு மகரிஷிகளில் ஒருவரும் ஜகத் பிரசித்தருமாகிய ஸ்வாமி விவேகாநந்த பரமஹம்ஸரது ஸகபாடியும் ஸ்ரீமத் ராமகிருஷ்ண பரப்ரஹ்மத்தின் சிஷ்யருமான அபேதாநந்தர் பல வருஷ காலமாக ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களில் மண்ணுசையிலும் பொன்னுசையிலும் அமிழ்ந்து கிடக்கும் மனிதர்களிடம் வேதாந்த மார்க்கம் உபதேசித்து அவர்களுடைய இரும்பு நெஞ்சுகூட ஞானத் தீயில் இளகுமாறு செய்வித்துப் பெருங் கீர்த்தி பெற்று விட்டு, இப்போது தமது தாய் நாட்டிற்கு மீண்டு வந்திருக்கிறார்.

இவருக்குச் சென்னையிலே நடந்த உபசரணைகளையும், இவர் சென்னையிலே செய்த உபந்நியாசக் கருத்துக்களையும் பற்றி மற்றோரிடத்திலே பிரஸ்தாபம் செய்திருக்கிறோம். இவரும் இவரது கூட்டாளிகளும் கடல் மீது எத்தனையோ ஆயிரம் காதம் கடந்து போய் இத்தேசத்தின் பெயர் கேட்டவுடனே அந்நியர்கள் முடி வணங்குமாறு செய்யும்

நன்மைக்கு நம்மவர்களால் என்ன கைம்மாறு செய்ய முடியும்? இந்த மகான்கள் தாம் என்ன கைம்மாறை எதிர் பார்க்கிறார்கள்? யாதொரு பற்று மில்லாமல், இரந்து உண்பவர்களாய் உலகத்தாரின் ஞான விழிக்கு ஏற்பட்டிருக்கும் மாயையாகிய குருட்டுத் தன்மையை நீக்கி, ஒளியளிக்க வேண்டு வதே கடமையாகக் கொண்டு நாள் கழித்து வரும் இப்பெரியார்களுக்கு உலகம் அளக்கத் தகாதவாறு கடமைப்பட்டிருக்கிறது. ஆத்மாவே உண்மை யென்றும் அதனை மறைத்து நிற்கும் மற்றத் தோற்றங்களெல்லாம் வெறும் மயக்கமே என்றும் போதனை செய்யத் தலைப்பட்டிருக்கும் அபேதாநந்த ஸ்வாமிகள், அந்தப் பராமார்த்திக நிலைமை அறி யாமல் வியாவஹாரிக நிலையிலே உழலும் நம்மவர் களுக்குக் கூட மிகவும் பயன்படத் தக்க சில ஹிதோபதேசங்கள் தந்திருக்கின்றார். ஞாயிற்றுக் கிழமை மாலை டவுன்ஹால் வெளி மைதானத்திலே இவர் உபந்நியாசம் புரிந்த காலத்தில் நம்மவர்களின் பேடித் தன்மையையும் பயங்காளித் தன்மையையும் பற்றிப் பேசியது கொஞ்சமில்லை. "ஆண்மை இழந்து பள்ளத்தில் விழுந்து கிடக்கிறீர்களே! எழுந்து நின்று உங்களது புருஷத் தன்மையை நிரூபித்துக் கொள்ளுங்கள்" என்று இத்தேசத் தாரை நோக்கிக் கூறுவதில் விவேகாநந்தர் எம் மட்டு ஆத்திரம் கொண்டிருந்தாரோ அம்மட்டு அபேதாநந்தரும் கொண்டிருப்பதைக் காண்கிறோம். தீர புத்திரர்களாகிய ஆரியர்கள் ஏதோ ஒருவித மான மதி மயக்கத்தால் குழந்தைகளைப் போலவும்

பெண்களைப் போலவும் நடந்து கொள்வதைப்பார்த்தால் அனைத்தையும் துறந்த ஞானிக்குக்கூட ஒரு விதமான பரிதாபம் ஜனிக்குமல்லவா?

அபேதானந்தருக்கும் அவர் போன்ற ஞானிகளுக்கும் நாம் பெரிய உபசரணைகள் நடத்துவதால் மட்டும் அவர்களது பிரீதிக்கு உள்ளாய் விடமாட்டோம் பல்லக்குகள், புஷ்பவாரங்கள், வாத்தியங்கள் என்பவற்றைக் கொண்டு ஒரு ஞானியின் கிருபையைச் சம்பாத்தியம் செய்து விடுவதென்றால் அது எளிதான காரியமா? அவர்களது உபதேசத்தின் உண்மையைக் கிரகித்து நம்மால் இயன்ற மட்டும் அதன்படி நடக்க முயல்வதே நாம் அவர்களுக்குச் செய்யக்கூடிய கடமையாகும்.

தீரத் தன்மையைப்பற்றி மட்டிலு மல்லாமல் ஐக்கியம் முதலிய மற்ற விஷயங்களைப் பற்றியும் அபேதானந்தர் பேசி யிருக்கிறார். இந்தியாவில் 30 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள் ஆனால் ஒரு வனுக் கொருவன் சம்பந்த மில்லாமல் ஒவ்வொருவன் ஒவ்வொரு மாதிரி எண்ணங் கொண்டிருக்கிறான். ஆதலால் வெவ்வேறு வகைப்பட்ட 30 கோடி எண்ணங்கள் ஏற்பட்டுப் போய் விடுகின்றன. எனவே ஒரு காரியமும் எளிதாகச் சாதிக்க முடியாமல் போய் விடுகிறது. பிரிட்டிஷ் தேசத்தில் 4 கோடி ஜனங்கள் மாத்திரமே இருந்த போதிலும் அவர்களனைவரும் ஒரே விதமான எண்ணங் கொண்டிருப்பதனால் அவர்கள் காரியங்கள் மிகவும் எளிதாகக் கை கூடிவிடுகின்றன. இதனை விவேகானந்தர் வெகு தெளிவாக எடுத்துக் கூறி இருக்கிறார்.

இது நிற்க. அபேதாநந்தர் சென்னை மாகாணத்திலும், நகரத்திலும் பெற்ற உபசரணைகள் அவருக்கு இத்தேசம் முழுவதிலும் நடை பெறும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனல் அத்துடன் இவர் சென்ற இடமெல்லாம் ஜனங்கள் இவரது போதனைகளைப் பக்தியுடன் கேட்டுப் பயன் பெறுவார்களென்று நம்புகிறோம். இத்தகைய மஹான்கள் இந்நாட்டிலே தோன்றி வருவார்களானல் ஆரிய பூமியானது மறுபடியும் புராதன காலத்துப் பெருமையைக் காட்டிலும் மேற்பட்ட பெருமைக்கு வந்துவிடும்.

குறிப்பு:— ஸ்வாமி அபேதாநந்தர் 15 ஜூலை 1906-ல் சென்னைக்கு விஜயம் செய்தார்.

அபேதாநந்த ஸ்வாமிகள்மீது ஸ்தோத்திரக் கவிகள் என்ற பாடலும் இது சமயம் எழுதப்பட்டிருக்கும் என்று ஊகிக்கலாம்.

ஆலயங்கள்

ஆகஸ்டு 1906.

(இந்தியா பத்திரிகைக் கட்டுரை)

நம்முடைய ஆலயங்களின் மிகுதி, இதர தேசங்களின் உலக சம்பந்தங்களால் (மெட்டீரியலிஸம்) உண்டான சுகத்தையே பிரதானமாகக் கொண்டு அதில் உழன்றுடுகையில் இந்தியாவானது ஆரியர் இப் பரத கண்டத்தில் குடியேறினது முதல் எப்போதும் ஆத்ம சுத்திக்காகவே பாடுபட்டதென்பதற்கும் பரம புருஷார்த்தங்களையே நாடினதாய் இருக்கிறதென்பதற்கும் திருஷ்டாந்தம். அவ்வாலயங்களில் அனேகம் பூர்விகமாய் ஏற்பட்டவைகளாகவும், ஆழ்வார்கள் நாயன்மார்கள் என்று உலக உஜ்ஜீவர்த்தமாக ஏற்பட்ட பக்த சிரோமணிகளால் வைணவ சைவ நூல்களில் பாடல் பெற்றவைகளாகவும் இருக்கின்றன. பூர்விகக் கிரந்தங்களில் இவ்வாலயங்களின் மகிமைகளைப்பற்றி எழுதி யிருக்கப் பட்டவைகளே அநேகம் உள. இவ்வாலயங்களில் மகோற்சவங்கள் நடக்கிற காலங்களில் வெகு தூரங்களிலிருந்து விசேஷத் திரவியம் செலவு செய்து கொண்டு சுவாமி தரிசனத்தின் பொருட்டு ஜனங்கள் வருவது உலகப் பிரசித்தமான விஷயம்.

கவர்ன்மெண்டாரும் இவ்வாலயங்களின் மகிமையை உத்தேசித்தும், ஜனங்கள் அவைகளின்

மேல் வைத்திருக்கும் பக்தி விசேஷத்தைக் கருதியும் அநேக முக்கியமான ஸ்தலங்களுக்கு வருஷாந்திரப் பணமும் கொடுக்கிறார்கள். மேலும் இவைகளின் மகிமை எவ்விதத்திலும் குறைவுபடக்கூடாது என்ற எண்ணத்துடன், ஒரு சட்டமும் ஏற்படுத்தியிருக் கிறார்கள். அதற்கு தேவஸ்தான சட்டமென்று பெயர் ('ரிலிஜியஸ் எண்டோமெண்ட் சட்டம்'). அதன்றியும், இவ்வாலயங்களில் அநேகம் விசேஷ ஐசுவரியம் உடையவைகளாகவும் கோவில்களுக் கென்று கவர்ன்மெண்டாரால் கிஸ்தியில்லாமல் அளிக்கப்பட்ட கிராமங்களிலிருந்து வருஷாந்தர வரும்படி உடையவைகளாகவும் இருக்கின்றன. இவ் வரும்படியோடு கூடத் தரிசனம் செய்ய வரும் பிரயாணிகளால் பிரார்த்தனைக்காகக் கொடுக்கும் பணமும் சில ஸ்தலங்களில் விசேஷமாயிருக்கிறது.

இவ்வித வருமானங்களோடு ஏற்பட்ட இந்து ஆலயங்கள், எம்மாதிரியாக நிர்வகிக்கப்படுகின்றன வென்று பார்ப்போம். சாதாரணமாய்க் கோயில் தின பூஜை முதலான காரியங்களுக்கு வேண்டிய செலவுகள் கொஞ்சந்தான். வேலைக்காரர்களுக் காகக் கொடுக்க வேண்டிய சம்பளங்களும் ஒரு சிறு அளவாகத்தான் ஏற்படும். ஆனல், பெரிய உற்ச வாதிகளுக்காகச் செலவு செய்யும் பணம் உபயம் செய்வோர்களால் ஒத்தாசை செய்யப்பட்டபோதி லும், விசேஷமாகத்தான் இருக்கும். இச் செலவுக ளெல்லாம் போக மிகுதியாக இருக்கும் சில பெரிய ஆலயங்களின் பணத்தைப்பற்றி யோசிப்போ மாகில், சாதாரணமாய் வீணுகச் செலவு செய்யப்படு

கிறதென்று ஏற்படும். மத விஷயமான சண்டை சச்சரவுகளிலும், இன்னும் இதர துர் வியாச்சியங்களிலும் விசேஷப் பணம் விரயம் செய்யப்படுகிறது.

இவ்விடத்தில் நம்முடைய ஆலயங்களோடு ஆங்கிலேய சர்ச்சுகள் எப்படி வித்தியாசப்படுகின்றன என்று பார்ப்போம். அவைகளுக்கும் நம்முடைய ஆலயங்களுக்கு இருப்பதுபோல் வரவு செலவுகள் உண்டு. ஆனல் சர்ச்சுகளில் ஊழியம் செய்வோர்கள் படித்தவர்களாயும் பல விஷயங்களையும் தெரிந்தவர்களாயும் இருக்கிறார்கள். ஆங்கிலேயர்களில் கவர்ன்மெண்டு உத்தியோகம், வக்கீல், வியாபாரம் முதலான தொழில்களைப்போலச் சர்ச்சில் வேலைக்காரனுதல் ஒரு தொழிலாக ஏற்பட்டிருக்கிறது. கல்வி கற்றவர்களுக்கு வேறு வேலைகள் சரிப்படாத பட்சத்தில் சர்ச்சில் பிஷப்பாக ஏற்படுதல் ஒரு கௌரவமான தொழிலாக ஏற்பட்டிருக்கிறது. முற்காலத்தில் இங்கிலாந்தில் சர்ச்சுகள் கல்விக்கிடமாகவும் இருந்தது.

இந்தியாவில் அம்மாதிரியான வழக்கம் கிடையாது. முன் இந்து ராஜாக்கள் காலத்தில் பல கோவில்களில் பாடசாலைகள் ஏற்படுத்தித் தர்மமாகக் கல்வி கற்றுக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்த வழக்கம் இன்னும் சில ஆலயங்களில் வேதம் ஓதுதலிலும் சம்ஸ்கிருதம், தமிழ் முதலான சுதேச பாஷைகளைக் கற்றுக்கொடுத்தலிலும் விளங்குகிறது. ஆனல் அநேக பெரிய விசேஷ வரும்படியையுடைய ஆலயங்களில் மிகுந்த பணம் இதர வீண் செலவிற்கு உபயோகப் படுகிறதே

ஒழிய, கல்வி விருத்திக்கு உபயோகப்படுகிறதில்லை. கோவில்களில் ஊழியக்காரர்கள், படித்தவர்களாகச் சர்ச்சுகளில் இருப்பதைப்போல ஏற்படலாகுமோ வெனில், கல்வி விருத்தியால் ஜனங்கள் ஆலயங்கள் ஏற்பட்டதற்குக் காரணம் பக்தி விருத்திக்காகவே என்றும், கல்வியை விருத்தி செய்தால் பக்தி விருத்திப்படும் என்றும் உணருவார்களாகில், ஆலயங்களில் படித்தவர்களை ஊழியக்காரர்களாக ஏற்படுத்துவதற்கு ஆக்ஷேபணை என்ன?

பக்தியும் கல்வியும் ஒருவாறு புணர்ந்திருக்கப் பட்டனவென்பதை விளக்குவதற்காகக் கிறிஸ்தவப் பாதிரிகளைத் திருஷ்டாந்தமாகக் காண்பிக்கலாகும். அவர்கள் மதத்தை விருத்தி செய்வதற்காக வந்திருந்த போதிலும் பல இடங்களில் பெரிய பாடசாலைகளை ஏற்படுத்திக் கல்வி விருத்தியைச் செய்திருக்கிறார்கள். ஆதலால் நம்முடைய ஆலயங்களில் மிகுந்த பணத்தை வீண் செலவு செய்யாமல் கல்விக்காக உபயோகப்படுத்தினால் ஜனங்களுக்கு அபரிமிதமான திருப்தியை உண்டாக்கும். திருப்பதியில் கோவில் பணத்தின் கொஞ்சம் பாகத்தை மகந்து பள்ளிக்கூடத்திற்காக செலவழிக்கிறார்கள். அதைப் போல் பெரிய ஸ்தலங்களில் ஸம்ஸ்கிருதம், தமிழ் முதலிய பாஷைகளைக் கற்றுக் கொடுக்கப் பெரிய பாடசாலைகளை ஏற்படுத்திச் சம்பளம் கொடுக்கச் சக்தியற்றவர்களுக்குச் சம்பளம் இல்லாமல் கல்வி கொடுப்பாராகில் ஜனங்களை நாகரிகத்திலும் புத்தியிலும் விருத்தி செய்ய எவ்வளவு உபயோகமாயிருக்கும்.

ஆலயங்களில் அன்னம் அளிப்பது அதிக மூடத்தனமென்பது சிலருடைய வாதம். ஒரு விதத்தில் அது புத்திசீனமாகத்தான் இருக்கிறது. ஏனெனில் அநேக ஸ்தலங்களில் சோம்பேறிகளாய்க் கண்ட இடத்தில் சாப்பிட்டுக் காலம் போக்குகிறவர்களுக்குத்தான் அன்னம் அளிக்கிறார்கள். அப்படிச் செய்வதால் சில வேளைகளில் புதிதாகச் சுவாமி தரிசன காரணமாய் வந்தவர்களுக்குச் சாப்பாடு அகப்படாமல் போய்விடுகிறது. இது எவ்வளவு விகாரமாக இருக்கிறது? ஆலயங்களில் வெளி ஊரிலிருந்து உதவியற்றுச் சுவாமி தரிசனத்திற்காக வந்தவர்களுக்கு அன்னம் அளிக்கும் பொருட்டு ஏற்பாடு செய்திருக்கிறது. அப்படிக் கன்றி, சோம்பேறிகளை விருத்தி செய்யக் கோவில் பணம் உபயோகிக்கப்பட்டால் எவ்வளவு விகாரமாயிருக்கிறது? ஆனல் கோவில்களில் அன்னமே அளிக்கக்கூடாது என்று சொல்வதும் அதர்மம். பிரயாணிகளாய்ச் சுவாமி தரிசனத்தின் பொருட்டு வருபவர்களுக்கு அன்னமளிப்பது நியாயமே.

யான்

17 செப்டம்பர் 1906 பராபவ புரட்டாசி 2

அருளா லெவையும் பார் என்றான் — அதை
அறியாதே சுட்டியென் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால் — கண்ட
என்னையுங் கண்டிலே னென்னடி தோழி!

—தாயுமானவர்

ஆயிரங் கோடி அறிஞர்கள் பற்பல
ஆயிர யுகங்க ளாராய்ந் தறிகிலர
'யான்' உடை யியற்கை யாரே அறிவன்!
மீனுணர்ந் திடுங்கொல் வியன்கடற் பெருமை?
அருள்வழிக் காண்கென் றருளினர் பெரியோர்:
மருள்வழி யல்லான் மற்றொன் றுணர்கிலேன்!
அகிலமும் 'யான்' என ஆன்றோ ரிசைப்பர்
மதிதலத் திருளின் மண்டிய மனத்தேன்
யானதை யொரோவழிக் கண்டுளேன்; எனினும்
மானத ஒளியது மங்குமோர் கணத்தே
யானெனும் பொருள்தான் என்னைகொல்? அதனையிவ்
வூனெனக்கொள்வ ருயிரிலார் சிலரே.
*பிரமமே யானெனப் பேசுவர் பேசுக!
†பிரமமே யானெனப் பேசினர் பெரியோர்.

—சி. சுப்பிரமணிய பாரதி

---

* பரம்மம் அல்லது ப்ரமை. 'நான்'னும் உணர்ச்சியே தப்புணர்ச்சி.

† ப்ரம்மம் அல்லது மூதற் பொருள்.

குறிப்பு :—பாரதியார் இப்பாடலை சானெட் (Sonnet) என்று தலைப்பில் கூறுகிறார். இதுவும் அடுத்த பாடலும் Sonnet I, II என்று ஆங்கிலத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. சானெட் என்பது நம் நாட்டு யாப்புவகை யல்ல. அது மேல்நாட்டு யாப்பு வகை. இது முதலில் இத்தாலி மொழியில் தோன்றிப் பிறகு இதன் சிறப்பின் காரணமாக ஐரோப்பிய மொழிகள் பலவற் றிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூறுவார்கள்.

சானெட் பதினான்கு வரிகள் கொண்டது. இந்த யாப்பின் அமைப்பிற்குத் தனிப்பட்ட இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. பாரதியார் எழுதி யிருக்கும் இப்பாடலில் பதினான்கு வரிகள் உள் ளன. சக்திரிகை என்ற பாடலில் பதினான்கு வரிகளோடு தனிச் சொற்கள் இரண்டிடங்களில் வருகின்றன. வரிக் கணக்கைத் தவிர வேறு வகையில் மேல் நாட்டு இலக்கணம் தமிழ்ப் பாடலில் இல்லை. ஏனெனில் அந்நாட்டு யாப்பு முறையும் தமிழ் யாப்பு முறையும் வேறானவை.

ஆங்கிலத்திலே ஷேக்ஸ்பியர் முதலிய பல சிறந்த கவிஞர்கள் அமரத்துவம் பெற்ற சிறந்த சானெட்டுக்களை இயற்றி யுள்ளார் கள். அவற்றைப் படித்துப் பாரதியார் பெரிதும் மகிழ்ந்திருக்க வேண்டும். அதனாலே இந்த யாப்பு முறையைத் தமிழில் புகுத்த அவர் விரும்பி யிருக்கிறார்.

சந்திரிகை

25 செப்டம்பர் 1906 பராபவ புரட்டாசி 10

யாணர்க் குறையுளா மித்து நாடதனிற்
காணற் கினிய காட்சிகள் பலவினு
மாணப் பெரிய வனப்பமைத் தின்கவி
வாணர்க் கமுதா வயங்கிடும் பொருளிதென்
றூணப் புலவோ னுரைத்துளன் முன்னுள்

அஃதுதான் :—

கருமையிற் படர்ந்த வானமாங் கடலிடை
ஒருமையிற் றிகழு மொண்மதித் தீவினின்
றெல்லாத் திசையினு மெழில்பெற வூற்றுஞ்
சொல்லா வினிமைகொள் சோதியென் றேதினன்.
ஒர்முறை

கடற்புற மணன்மிசைத் தனியே கண்ணயர்த்
திடைப்படு மிரவி னினிதுகண் விழித்துயான்
வானக நோக்கினேன் மற்றதன் மாண்பினை
யூனமா நாவினி னுரைத்தலும் படுமோ?
நினைவதுந் தெய்விகக் கனவிடைக் குளித்தேன்
வாழிமதி!

—சி. சுப்பிரமணிய பாரதி

யாணர்—அழகு. ஊணப்புலவன்—ஆங்கிலப் புலவன்.

குறிப்பு:—இதுவரை வந்துள்ள பாடல்களைப் படிக்கும்போது கவிதைத் தொழிலிலே பாரதியாரின் ஆரம்ப நிலை மனத்திலே

தெளிவாகப் புலனாகும். இப் பாடல்களில் புகுத்துள்ள சில சொற் களுக்குப் பொருள் எழுத வேண்டியது அவசியமென்று கருதிப் பாரதியாரே பாடலின் கீழ் அவற்றை விளக்கி யிருக்கிறார். இவ்வாறு தொடங்கிய கவிதை ஒன்றிரண்டு ஆண்டுகளிலே ஆச் சரியமான முறையிலே முழு மலர்ச்சி பெறுகின்றது. அவ்வாறு மலரும் பாரதியாரின் கவிதா சக்தி இப்பாடல்களிலும் மின்ன லிடுவதைக் கண்டு ரசிக்கலாம்.

ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் காலஞ்சென்றதைப் பற்றிய

இரங்கற் பாக்கள்

26 நவம்பர் 1906 பராபவ கார்த்திகை 11

பார்க்க: பாரதி நூல்கள் – முதல் தொகுதி – ஸ்வசரிதையும் பிற பாடல்களும்.

யாரையும் வணங்கிப் பிழைக்கும் சுபாவம் பாரதியாருக்கு இல்லை. ஆனால் அவர் சங்கீதத்திற்குத் தலை தாழ்த்து வந்ததை இப்பாடலில் அறியலாம்.

"மன்னரையும் பொய்ஞ் ஞான மதக்குறவர்
தங்களையும் வணங்கலாதேன்
தன்னுளைய புகழுடையாய், நினைக்கண்ட
பொழுதுதலை தாழ்த்து வந்தேன்;
உன்னருமைச் சொற்களையே தெய்வமகா
மெனக் கருதி வந்தேன்"

என அவர் சுப்பராம தீக்ஷிதரைக் குறித்துப் பாடுவதிலிருந்து அவருக்கு இசையிலே உள்ள ஆர்வம் வெளியாகின்றது.

ஸங்கீத விஷயம், பாட்டு முதலிய அவர் எழுதிய கட்டுரைகளிலிருந்தும் இசை சம்பந்தமான அவருடைய கருத்துக்களை அறியலாம்.

சுப்பராம தீக்ஷிதர் அவர்களைப் பற்றிப் பின் வரும் குறிப்பு சுதேசமித்திரனில் காணப்பட்டது.

சங்கீத வித்தையிலே தேவாம்சம் பெற்று விளங்கிய முத்துசாமி தீக்ஷிதரின் சகோதரரான பாலசாமி தீக்ஷிதரின் குமாரர். இராகமாலிகை, தான வர்ணம் முதலிய சிறந்த உருப்படிகள் செய்திருக்கிறார். ஆந்திர பாஷையில் மஹா தேர்ச்சி. சங்கீதத்திலும் அப்படியே. சங்கீத சம்பிரதாய பிரதர்சினி என்ற நூல் வெளியிட்டார். காலமாகும்போது அவருக்கு 68 வயது.

ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் எட்டயபுரம் சமஸ்தான வித்வானுக இருந்தார். இவரை முத்துசாமி தீக்ஷிதரின் புதல்வர் என்பது தவறு. முத்துசாமி தீக்ஷிதருக்கு மக்கட்பேறு வாய்க்கவில்லை.

கலை

8 டிசம்பர் 1903

(இந்தியா பத்திரிகைத் தலையங்கம்)

கலையென்னும் சொல் தமிழிலே மிகவும் பரந்த பொருளுடையது. எனினும் இங்கே மேற்படி சொல்லை ஆங்கிலேயர்கள் "ஆர்ட்" (Art) என்ற மொழியை உபயோகிக்கும் அர்த்தத்திலே பயன் படுத்துகின்றோம். அழகு, சுவை, ரம்மியம் என்ப வற்றுக்கிடமாகி மனிதர்கள் புளகமுறும்படி செய் யும் தொழில்களையெல்லாம் ஆங்கிலேயர்கள் "மதுர கலைகள்" (Fine Arts) என்று கூறுகிறார்கள். இதனைப் பொதுப்படையாக, "கலை" என்று சுருங் கச் சொல்வதுமுண்டு. சங்கீதம், கவிதை, சிற்பம், சித்திரம் என்பவை இவ்வினத்தைச் சேர்ந்தவை. இக்கலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான பழக்கத்தின் மேலும், பயிற்சியின் மேலும் ஏற்படக் கூடியதென்றாலும், பொதுவாக இவை ஆழ்ந்த மனக் கிளர்ச்சியுடையோரும், வரப் பிரசாதிக ளென்று கருதப் படுவோருமாகிய பெரியோர் களுக்கே இனிது சாத்தியமாகின்றபடியால், ஆங்கி லேயர்கள் இவற்றை ஒரு வர்க்கத்திலே சேர்த்திருக் கிறார்கள்.

இம் மதுரகலைகளின் நிலைமை தற்காலத்திலே தமிழ் நாட்டிலே எவ்வாறு இருக்கிறதென்பதைப்

பற்றியும், அதன் காரணத்தைப் பற்றியும் இங்கே ஆராயப் புகுந்திருக்கின்றோம். தமிழ் நாட்டைப் பற்றிக் கூறுவது இந்தியாவின் மற்றப் பகுதிகளுக்கும் பெரும்பான்மையும் பொருத்தமுடையதே யாகும். பெங்காளத்திலும் மஹாராஷ்டிர தேசத்திலும் மேற்படி கலைகளிலே சில, சிறிது சிறிது தளிர்த்து வருகின்றன வென்றாலும், இந்தியாவிலுள்ள மற்ற நாடுகளிலெல்லாம் அவை உயிரின்றி நிற்கின்றன.

இப்போது திருஷ்டாந்தமாகத் தமிழ் நாட்டை எடுத்துக் கொள்வோம். இங்கே கம்பனைப்போன்ற கவிஞர்கள் இக்காலத்தில் யார் இருக்கின்றார்கள்? கம்பனைப் போன்ற கவிஞர் அடிக்கடி தோன்றுவதில்லையென்பதைச் சிலர் ஆக்ஷேபமாகக் கொண்டு வரலாம். கம்பனுடைய பெருமையில் நூற்றில் ஒரு பங்குகொண்டோர் யாவர் இருக்கிறார்கள்? பாண்டித்தியம் உடையோர்களும், பாண்டித்தியம் இருப்பதாக நினைத்துக் கொள்வோர்களும் கவிகள் கூறத் தொடங்கி விடுகின்றார்கள். கவித்திறமை இருப்பதற்குப் பாண்டித்தியம் ஒருவாறு அவசியமென்றாலும், பாண்டித்தியம் இருப்போர்களுக்கெல்லாம் கவிதா சக்தி இருப்பதில்லை யென்பதை நம்மவர்கள் மறந்து விட்டார்கள். இலக்கண வித்துவான்கள்கூடத் தாம் கவி பாடாமல் இருந்தால் அது மதிப்புக் குறைவென்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். இங்ஙனமாக, உண்மையான கவிதை இந்நாட்டிலே மறைந்து போய்விட்டது.

இது போலவே மற்ற மதுரகலைகளும் மழுங்கிப் போய்விட்டன. சிற்பக் கலையிலே அரிய "வரப் பிரசாதம்" கொண்டோர் இப்பொழுது காணப்பட வில்லை. சித்திர லேகனத்திலே ரவிவர்மா ஒருவர் தன்னந்தனிச் சுடராக இருந்து மறைந்துவிட்டார். சங்கீதத்திலே கடல் போன்ற ஆழங்கொண்ட கீர்த் தன கர்த்தர்களைக் காணோம். தியாகையர், தீக்ஷிதர் என்போரைப் போன்ற இசைவல்லார்கூட இந்தச் சமயத்தில் கிடையாது. டம்பக்காரர்களும் வேஷக் காரர்களும் ஆயிரக்கணக்காக இருக்கிறார்கள்.

இவ்வாறு கலைப் பஞ்சம் தோன்றியிருப்பதன் முகாந்திரம் என்ன என்பதைப் பற்றிச் சிறிது ஆராய்ச்சி புரிவோம். உண்மையான கலை தோன்ற வேண்டுமானால் அது இருவகையாகத் தோன்று மென்பதாக மெஸீனி (Mazzini) என்னும் இத்தா லிய ஞானி கூறுகிறார். அதாவது, "ஒரு வகைப் பட்ட காலசகம் முடிவு பெற்ற போதிலும், ஒரு வகைப்பட்ட காலசகம் வருந்தறுவாயிலும் உண்மை யான கலைத்திகழ்ச்சி ஏற்படுகின்றது" என்றார். இதை ஒருவிதமாக உண்மையெனக் கொள்ளலாம். பொதுவாகக் கூறுவோமாயின், ஒரு தேசத்து ஜனங்கள் மெய்யான உற்சாகமும் வீரத் தன்மை யும் புகழும் கொண்டிருக்கும்போது அங்கே பெரிய கலையெழுச்சி ஏற்படுகின்றது. அழிவுக் காலங்களி லேயும், தாழ்ச்சிக் காலங்களிலேயும் இடையிடையே ஜனங்கள் தாழ் நிலையைச் சபிக்கும் பொருட்டு மஹான்கள் தோன்றுவார்களே யல்லாமல் கலையின் வளர்ச்சி ஏற்படமாட்டாது.

தமிழர்களாகிய நமக்குள்ளே ஆண்மை போய் விட்டது. வீரியம் போய்விட்டது. நமக்குத் தேசம் கிடையாது; ராஜ்யம் கிடையாது; சுயாதீனம் கிடையாது. இந்த நிலைமையில் "ஸரஸ்வதி" இங்காட்டிலே வந்து அவதரிப்பாளா?

பாரதியார் நடத்திய பத்திரிகைகள்

பாரதியார் 1905-ல் சுதேசமித்திரனில் உதவி யாசிரியராக இருந்துகொண்டே சக்கரவர்த்தினி என்ற மாதப் பத்திரிகை ஒன்றை நடத்தி வந்தார். 1905 நவம்பர் மாதத்தில் வெளியான அதன் இதழி லிருந்து **வந்தேமாதரம்** என்ற கட்டுரை 28—12—1905 சுதேசமித்திரன் இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. இப்பத்திரிகை எவ்வளவு காலம் நடைபெற்ற தென்று தெரியவில்லை. இதில் பாரதியாரால் எழுதப்பட்ட "வியாசங்களும் பாடல்களும் புது மணம் கமழ்ந்து யாவராலும் விரும்பப்பட்டன" என்று திரு எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு சென்ற **போன நாட்கள்** என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

1906-ல் **இந்தியா** என்ற வாரப் பத்திரிகை வரத் தொடங்கிவிட்டது. **இந்தியா** பத்திரிகையைப் பற்றி திரு இராமாநுஜலு நாயுடு கூறுவதாவது: "அந்தக் காலத்தில் பாரதியார் தீவிர தேச பக்தராயிருந்தார். எதிலும் நிதானத்தையே அனுசரித்து நின்ற ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமண்ய ஐயரின் கொள்கைகளில் பாரதியார் வேறுபட்டுப் பிரிந்து, **இந்தியா** என்ற தமிழ் வாரப் பத்திரிகையைத் தொடங்கி அதற்கு ஆசிரியராய் அமர்ந்தார். அந்தப் பத்திரிகையின் சொந்தக்காரர் வேறொருவராவர். பாரதியாரின்

தமிழ் நடை அது முதற்கொண்டு ஒரு புது வழியில் மாறியது. அதற்கு முன்னர் எவரும் அவ்வழியில் பத்திரிகை நடத்தவில்லை என்று சொல்லும் வாறுக வெகு சிறப்புடனும் திறமையுடனும் எழுதிவரத் தொடங்கினர். சிறு சிறு பதங்களுடன் கூடிய ஒரு நவீன கம்பீர நடை. இந்தியா பத்திரிகை சனிக் கிழமை தோறும் வெளியாகி வந்தது. நாலாயிரம் பிரதிகள் வரை போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு பத்திரிகையிலும் அவ்வார வர்த்தமானத்தின் சார்பாய் ஒரு பெரிய சித்திரம் கண்ணுக்கினிய காட்சியாய் மிக்க அழகுடன் பிரசுரிக்கப்பட்டு வந்தது. அந்தப் படம் இன்னின்னவாறு இருக்க வேண்டுமென்று சித்திரகருக்குப் பாரதியார் சொல்லுங்காலையில் அப்படத்தின் அம்சங்களை யெல்லாம் தமது முகத்திலும் அபிநயங்களிலும் காண்பித்து விடுவார். சித்திரகரின் மனத்தில் அந்தப் பாவனைகள் நன்கு பதிந்து விடும். அவ் விதமே சித்திரமும் தயாராகும்.

"இந்தியா பத்திரிகை பிரபலப்பட்டபொழுது அது மிகவும் உக்கிர வாசக முள்ளதா யிருந்தது. சிறிதும் அச்சமின்றி எழுதப்படலானது. அந்த அம்சம்தான் கடைசியில் அப்பத்திரிகைக்கு ஆபத்தாய் முடிந்தது. பத்திரிகை என்றைக்கும் நடக்கும் படியான நீதியில் சாந்தமாய் சட்ட வரம்புக்கு உட்பட்டு நடக்கும்படி பல நண்பர்கள் கூறியும் பாரதியாரின் எழுதுகோல் பழையபடியே இருந்தது. பத்திரிகைக்கு ஆபத்து நிச்சயமென்று பலர் கூறினர். ஒரு சமயம் பாரதியார் டிராம் வண்டியில்

செல்லுகையில் இந்தியா பத்திரிகையைப் படித்த ஒரு உத்தியோகஸ்தர் மிக்க கோபாவேசமாய் இப் பத்திரிகையின் ஆசிரியரை அவசியம் தண்டிக்க வேண்டுமென்று பாரதியாரிடம் கூறினர். பாரதி யார், 'அப்படியா?' என்றார். இந்த சம்பவத்திற்குப் பிறகு இந்தியா பத்திரிகை தனக்கென்று ஒரு புதுக் காரியாலயமும் அச்சுக் கூடமும் அமைத்துக் கொண்டு வேறாய் விட்டது. பத்திரிகையே வேறு கை மாறினும் அதன் கொள்கை எப்போதும் போல் இருக்கும் என்று ஒரு தனிக் குறிப்பும் வெளி யிடப் பட்டது.

இந்தியா பத்திரிகை வர வரக் 'கார'மாகி விட்டது. சிவாஜி தன் சைன்யத்தாருக்குக் கூறியது என்று அகவல் ரூபமாய் பாஞ்சாலி சபதம் போல் பெருங் காவியமாகத் தொடர்ச்சியாய்ப் பத்திரிகையில் எழுதி வந்தார். அது முற்றும் வீர ரஸமாய் இருந்தது. அதனைத் தனிப் புத்தக உருவமாய் வெளியிடுவதற் குப் பாரதியார் விரும்பினர். அது ஆபத்தென நண்பர்களால் தடுக்கப்பட்டது. இந்தியா பத்திரி கைக்குப் பாரதியார் அந்தரங்கத்தில் ஆசிரியராக இருந்தாரே யன்றி வெளிப்படையாய் அன்று. ஸ்ரீ. ஸ்ரீனிவாசன் என்பவர் ஆசிரியரும் பிரசுரிப் பவருமென்று பத்திரிகைகளில் வெளி வந்து கொண்டிருந்தது. பாரதியார் ஒரு கிருப நேயர் போன்று இந்தியா பத்திரிகையில் பாடல்களை மட்டும் தமது பெயருடன் வெளியிட்டு வந்தார்.

" அவ்வப்போது நடந்தேறிய சம்பவங்களுக் கெல்லாம் சிறு சிறு பாடல்களை இந்தியா பத்திரிகை

யில் தமது பெயருடன் வெளியிடுவதானார். வந்தே மாதர கீதத்திற்கு, 'இனிய நீர்ப் பெருக்கினை இன் கனி வளத்தினை' என்று தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றும் வெளியிட்டார். அப்பாடல்களின் மூலமாக மட்டும் அவர் பெயரைத் தமிழ் நாட்டினர் அறிந்து வந்தனர்

"இந்தியா பத்திரிகைக்குப் பாரதி ஆசிரிய ரென்று எவருமே அறியார். பாரதியாருக்குத் தமிழ் நாட்டிலிருந்த பெயர் இவ்வளவுதான். சென்னையி லுள்ளார் மட்டும், அதிலும் சில மூக்கியஸ்தர்கள் மட்டும் உண்மையை உணர்ந்திருந்தனர். தமது பாடல்களை யெல்லாம் ஒன்று சேர்த்து **ஸ்வதேச கீதங்கள்** என்று இரண்டணு விலையில் ஒரு புத்தக மாக வெளியிட்டார். அதைக் குறித்து இந்தியா பத்திரிகையில், 'சுப்பிரமணிய பாரதியாரின் பாடல் கள் அடங்கிய **ஸ்வதேச கீதங்கள்** வரப் பெற்றோம்' என்று தம்மை அந்நியர் போலக் கொண்டு அதற்கு ஒரு மதிப்புரையும் வரைந்தார்.

"பாரதியின் இந்தியா பத்திரிகை சட்ட வரம்பை மீறி நெருப்பு மழை பொழியத் தொடங் கிற்று. இது பாரதியாரைப் பிடித்த கெட்ட காலம் தான். இந்தியா பத்திரிகையின் ஆசிரியரைக் கைது செய்ய வாரண்டும் பிறந்தது. போலீசார் இந்தியா பத்திரிகையின் காரியாலயத்துள் பிரவேசித்து பாரதியாருக்கு வாரண்டைக் காண்பித்தனர். தாம் ஆசிரியரல்ல வென்றும், தமது பெயர் வாரண்டில் இல்லை யென்றும் கூறிக்கொண்டிருக்கையில் இந்தியா பத்திரிகையை வெளியிடுபவரான **ஸ்ரீனி**

வாசன் என்பவர் அங்குற்று, 'என்ன' என்றார். போலீசார் அவரே ஆசிரியராகப் பதிவு செய்யப் பெற்றவரென்று அறிந்து அவரைக் கைது செய்தனர் விசாரணைக் காலத்தில் ஸ்ரீநிவாசன் தாம் ஆசிரியரல்லவென்றும், பாரதியாரே உண்மை ஆசிரியரென்றும், தாம் ஒரு குமாஸ்தா போலவே இருந்து வந்ததாயும், தமக்கு வியாசம் எழுதச் சக்தி கூடக் கிடையாதென்றும் தெரிவித்துக் கொண்டார். ஆயினும் அவருக்கு ஐந்து வருஷ கடின காவல் விதிக்கப்பட்டது. பாரதியாருக்கும் வாரண்டு பிறந்தது. அதற்குத் தப்பிப் பாரதியார் புதுச்சேரி போய்ச் சேர்ந்தார்.

"இது சம்பந்தமாகச் சுதேசமித்திரன் 16—11—1908-ல் துணையங்கத்தில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. 'சென்னையிற் பிரசுரமாய் வந்த இந்தியா என்ற வாராந்தரத் தமிழ்ப் பத்திரிகையில் சென்ற மார்ச்சு மாதம் முதல் ராஜத் துவேஷமான வியாசங்கள் தோன்றி வருவதாக அதன் பேரில் ராஜத் துவேஷக் குற்றஞ்சாட்டி அதை அச்சிட்டுப் பிரசுரப்படுத்துவோரான ஸ்ரீநிவாசய்யங்காரைக் கைதிப்படுத்தி விசாரணை செய்ததில், ஜகோர்ட்டில் அவருக்கு ஐந்து வருஷ தீபாந்திர சிக்ஷை விதிக்கப்பட்டது. இப்படி விதிக்கப்படுமென்றே பொதுவாக எதிர்பார்க்கப் பட்டிருந்தது. ராஜத் துவேஷக் குற்றம் செய்ததாகக் கவர்மெண்டார் யாரை நினைக்கிறார்களோ அவர்களைப் பிடித்து விசாரணைக்குக் கொண்டு வருவதும், ஜட்ஜுகள் கொடுந் தண்டனை விதிப்பதும் இப்போது சாதாரண

மாய் விட்டது. குற்றஞ் செய்தவர்களைத் தண்டித்தல் அவசியம் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள்; ஆனல் ராஜத் துவேஷக் குற்றஞ் செய்கிறவர்கள் படித்தவர்களாயும், கௌரவமான நிலைமையில் இருப்பவர்களாயும் இருப்பதால், அவர்களிடத்தில் கவர்ன்மெண்டாரும், ஜட்ஜிகளும் அவ்வளவு கொடுமை காட்டாமல் இருக்கக் கூடும். ஸ்ரீநிவாசையங்கார் குற்றமுள்ள வியாசங்களை எழுதினவரல்ல; எழுதினவரும், அந்தப் பேப்பருக்குச் சொந்தக்காரரும் அகப்படாமல் மறைந்துபோனர்கள். ஸ்ரீநிவாசையங்கார் பெயர் போலீஸ் கமிஷனர் ஆபீசில் பதிவு செய்யப்பட்டிருந்ததால் அவர் அகப்பட்டுக் கொண்டாரேயன்றி குற்றத்துக்கு முதல் உத்தரவாதம் அவர் பேரில் தங்கியதல்ல. இந்த ஒரு காரணத்தினலேயே அவருக்குக் கொடுந் தண்டனை விதிக்காமல் இலகுவான தண்டனை விதித்திருக்கக் கூடும். அல்லது இந்தியா பத்திரிகையில் ராஜத்துவேஷக் குற்றமுள்ள வியாசங்கள் தோன்றின துவக்கத்திலேயே கவர்ன்மெண்டார் எச்சரித்திருந்தார்களானல் இப்போது ஓடிப்போயிருக்கிற எடிடரும் புரொப்ரைட்டரும் அப்படிப்பட்ட வியாசங்கள் தோன்ற இடங் கொடுத்திருக்க மாட்டார்கள். அவைகளால் விளையும் தீங்கும் குறைந்திருக்கும்.

"தண்டனை யடைந்த ஸ்ரீநிவாசன் என்பவர் சிறையில் நன்னடக்கையுடன் நடந்து கொண்டாரென்று ஒரு வருஷத்திற்குப் பிறகு விடுவிக்கப்பட்டதாக வதந்தி. பாரதியார் சென்னையை விட்டுப்

போனதற்குப் பிறகு இந்தியா பத்திரிகையும் சென்னையில் நின்று விட்டது.''

திரு. எஸ். ஜி. இராமதுரை நாயுடு மேலும் தரும் விவரங்களாவன: '' இந்தியா பத்திரிகையுடன் பால பாரதம் என்ற ஆங்கில வாரப் பத்திரிகையும் வெகு திறமையுடன் நடத்தினர்.''

புதுச்சேரியிலும் இந்தியா பத்திரிகை நின்று விட்ட பிறகு, '' ஸ்ரீ அரவிந்தர் கர்மயோகின் என்ற பத்திரிகை நடத்துவதைப் பார்த்து அதன் கருத்துக்களைத் தமிழில் தெரிவிக்க கர்மயோகி என்ற மாதப் பத்திரிகையைப் பாரதியார் ஆரம்பித்தார். மிக்க நன்முக நடந்தது. அதன் பின் விஜயா என்ற தினசரித் தமிழ்ப் பத்திரிகையைத் தொடங்கினர். அப் பத்திரிகை முற்றும் சித்திரங்கள் நிறைந்திருந்தன. அதுவும் எங்கும் வியாபகமாயிற்று. அதன் பின் படங்களைப் பிரசுரித்து அதன் விளக்கம் வரைந்து அவ்விதமாக ஒரு மாத சஞ்சிகையை வெளியிடுவதென்று ஏற்பாடு செய்தார். அந்தச் சமயத்தில் இந்தியா பத்திரிகை பறிமுதலாகி விடவே அவரது பத்திரிகா முயற்சிகளும் அத்துடன் நின்று விட்டன.''

சென்னையில் இந்தியா பத்திரிகை 34, பிராட்வே என்ற காரியாலயத்திலிருந்து வெளி வந்தது. ஸ்வதேச கீதங்கள் என்ற தமது நூலைப்பற்றி 9 செப்டம்பர் 1908 வரையில் சுதேசமித்திரனில் விளம்பரம் செய்திருக்கிறார். அதிலே அந்நூல் இந்தியா பத்திரிகையின் மேலே குறிப்பிட்ட காரியாலயத்தில் கிடைக்குமெனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விளம்பரத்திலிருந்து இந்தியா பத்திரிகை சென்னையில் எதுவரை நடந்தது என்பதை ஊகிக்க முடியும். 16 நவம்பர் 1908-ல் ஸ்ரீநிவாசய்யங்காருக்குத் தண்டனை கிடைத்த விவரம் வெளியாகியுள்ளது. ஆதலால் இந்த இரண்டு தேதிகளுக்கு இடையே ஒரு நாள் வரை இந்தியா பத்திரிகை சென்னையிலிருந்து தனது வீர முழக்கத்தைச் செய்து கொண்டிருந்தது.

இந்தியா பத்திரிகையின் சொந்தக்காரர் திரு. ந. திருமலாச்சாரியார். பாரதியார் புதுச்சேரி சேர்ந்த ஒரு மாத காலத்திற்குள் இவரும் அங்கு வந்து சேர்ந்தார். பத்திரிகையைப் புதுவையிலிருந்தே வெளியிடுவதென்று இருவரும் ஏற்பாடுகள் செய்தனர். "பிரெஞ்சுச் சட்டப்படி புதுவையில் ஒரு பத்திரிகை நடத்த வேண்டுமானால், அதற்குப் பொறுப்பாளியாகப் பிரெஞ்சு இந்தியக் குடி ஒருவர் இருந்தாக வேண்டும். வில்வநல்லூரில் வசித்து வந்த ஸ்ரீ எஸ். லக்ஷ்மிநாராயணையர் என்பவர் அந்தப் பொறுப்பை ஏற்க ஒப்புக் கொண்டார். ஸ்ரீ திருமலாச்சாரியார் சென்னையில் வைத்திருந்த அதே அச்சுக்கூடத்தின் சாமான்கள் புதுவை போய்ச் சேர்ந்தன. இந்தியா முன்னைவிட அருமையாய், நிர்ப்பயமாய், புதுவையிலிருந்து வெளிவரலாயிற்று" (தி. ஜ. ர., புதுமைக் கவி பாரதியார்)

"1908-ம் ஆண்டில் பாரதியார் இந்தியா பத்திரிகையைப் புதுவை மிஸியோம் எத்திரான் ழோர் வீதியிலிருந்து நடத்தி வந்தார். 1910-ம் ஆண்டில் அச்சுக் கூடத்தை டூப்ளே வீதிக்கு மாற்றிக்கொண்டார்"

(பாரதியாரின் புதுவை வாழ்வு என்ற கட்டுரையில் திரு ரா. கனகலிங்கம்)

ஆனால் இந்தியா நீண்ட நாள் தொடர்ந்து நடை பெறவில்லை. மக்களின் ஆதரவு புதுவைக்கு எட்டு வதில் உள்ள சிரமம், அதன் விளைவான பொருளா தார நெருக்கடி, அரசாங்கத்தாரின் கோபம் இவை யெல்லாம் இதன் ஆயுளைக் குறைத்து விட்டன. பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் இப்பத்திரிகை வரக் கூடாதென்று 1909-ஆம் ஆண்டில் ஆங்கில அரசாங் கம் செய்த தடையே இதன் முடிவுக்கு முக்கிய காரணமாகும்.

சென்னை வாசிகளின் நிதானமும் விபின சந்திரபாலரின் சந்நிதானமும்

18 மே 1907 பிலவங்க வைகாசி 5

சென்னை வாசிகளின் நிதானமெல்லாம் சந்திர பாலரின் சந்நிதானத்திலே பறந்து காற்றாய்ப் போய்விட்டது. நேற்று மாலை விக்டோரியா நகர மண்டபத்தில் லாலா லஜபதிராய் தீபாந்தரத்திற் கேற்றி அனுப்பப்பட்ட விஷயமாக மஹாஜன சபையாரால் கூட்டப்பெற்ற பெருங் கூட்டத்தில் நடந்த செய்திகளை நேரே வந்து கண்டவர்களெல் லாம் இனி மயிலாப்பூர் வக்கீல்கள் ஜனத் தலைவர்க ளென்று மூச்சுவிடக்கூட இடமில்லை யென்பதை நன்றாக அறிந்திருப்பார்கள்.

நேற்று மாலை மீட்டிங்கிலே முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பின் வருவன வாகும் :—

1. இதுவரை பழைய கட்சிக்காரருக்கு முக்கிய தர்மமாக இருந்த விண்ணப்ப முறைமையை நேற்று அவர்கள் தாமாகவே பேதமையாகுமென்று நிறுத்தி விட்டனர்.

2. அப்படி அவர்கள் விண்ணப்பம் செய்ய விரும்பாதபோதிலும் வெறுமே இந்தியா மந்திரிக்கு

மீட்டிங்கைப்பற்றித் தகவல் கொடுக்க வேண்டு மென்று மிஸ்டர் பி. ஆர். சுந்தரய்யர் சொன்ன தைக்கூட ஜனங்கள் அங்கீகரிக்காமல் கோபமடைந் தார்கள்.

3. மயிலாப்பூர் வக்கீல்கள் தாம் ஜனத் தலை வர்கள் என்று கனவு கண்டு கொண்டிருந்தது பொய்க் கனவென்பதை அறிந்து கொண்டார்கள்.

4. ஸர்க்காரிலே ஸர் என்றும் உர் என்றும் பட்டம் பெற்றுத் திரிந்தவர்களை யெல்லாம் ஜனங் கள் மதிப்புடன் நடத்திய காலம் போய் இப்போது அவர்களைப் பகிரங்க ஸ்தானங்களிலே பேசவொட் டாத நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்கள்.

5. இங்கிலீஷிலே பேசக் கூடாது. தமிழ் நாட்டிலே ஜனத் தலைவர்கள் என்று பெயர் வைத் துக்கொண்டு வருவோர் பொது விஷயங்களைப் பற்றித் தமிழிலேயே பேசவேண்டுமென்று ஜனங் கள் வற்புறுத்தினர்கள்.

6. ஸர். வி. கி. தேசிகாச்சாரியாருக்கும் மிஸ்டர் பி. ஆர். சுந்தரய்யருக்கும் ஜனங்கள் சரியான பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். சென்னை மாணைக்கர்களிலே பெரும்பாலார் வெளியூருக்குச் சென்றிருந்தபடியால் பழைய கட்சியார் இம்மட் டோடு பிழைத்தார்கள். ஒரு வாரத்திற்குமுன் இந்தப் பொதுக் கூட்டம் நடந்திருக்குமானால் நமது மயிலாப்பூர் நண்பர்களின் ஸ்திதி இன்னும் வேடிக் கையாக முடிந்திருக்கும். லாலா லஜபதிராய் தீபாந் திரத்துக்குப் போனதைப்பற்றி ஜனங்கள் மனது கொதித்துக்கொண்டிருக்கும்போதுகூட இவர்கள்

சர்க்காராரை ஸஹஸ்ரநாமம் சொல்லி அர்ச்சனை செய்வதுதான் சரியான பாதை யென்று நினைப்பது விநோதமாயிருக்கிறது.

இவர்கள் என்ன நினைத்தாலும் சரியே. இனி அதைப் பகிரங்கமாக வெளியிட்டுக் கூறத் துணிய மாட்டார்கள் என்று நேற்றே தெளிவாய்விட்டது.

சி. சுப்ரமணிய பாரதி

குறிப்பு:— 1. விபின சந்திரபாலர் வங்காளத்து தேசிய வீரர் களில் ஒருவர். சிறந்த பேச்சாளர். இந்தியாவின் ஒரு கோடியி லிருந்து மற்றொரு கோடி வரையில் அந்தக் காலத்தில் அவரது பேச்சு ஒலித்தது. மக்கள் அதைக் கேட்டுப் புது உணர்ச்சி பெற்றனர். பகிஷ்காரம், சுதேசி, தேசியக் கல்வி என்ற விஷயங் களை அவர் உணர்ச்சியோடு மக்களுக்குப் போதித்தார். 1907-ல் அவர் சென்னையில் பேசிய பேச்சு மக்கள் மனத்தில் தேசிய நெருப்பை ஓங்கி வளர்த்தது. அதனால் சென்னை மாகாணத்தை விட்டு வெளியேறும்படி சர்க்கார் அவரை வலுக்கட்டாயப் படுத்தியது.

அவருடைய பேச்சும், நியூ இந்தியா, வந்தேமாதரம் என்ற பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் இளைஞர்களின் உளளத்தைப் பெரிதும் கவர்ந்தன. இதையே பாரதியார் இக்கட்டுரையில் குறிப்பாக எடுத்துக் கூறுகிறார்.

2. பஞ்சாப்கேஸரி என்று போற்றப்பட்ட லாலா லஜபதி ராய் 1907 மே 9 ஆந் தேதி பர்மாவுக்கு நாடுகடத்தப்பட்டார். ஸர்தார் அஜித் சிங்கும் அவரோடு நாடு கடத்தப்பட்டவர். லாலா லஜபதியை நாடு கடத்தியதை ஒட்டியே விக்டோரியா நகர மண்ட பத்தில் கூட்டம் கூடியிருக்கிறது.

லாஜபத்ராய்துதி, லாஜபத்ராய் பிரலாபம் என்று பாரதியார் பாடியுள்ள இரண்டு அழகிய கவிதைகளும் இந்தத் தேசப் பிரஷ்டத்தைக் குறித்தே எழுந்தவை.

1907 டிசம்பர் 27ஆந் தேதி தொடங்கிய சூரத் காங்கிரசுக்குச் சற்று முன்பே லஜபதிராய் விடுதலை யடைந்து நாடு திரும்பினர். அவரை அந்தக் காங்கிரசுக்குத் தலைவராக்க வேண்டுமென்று தேசியவாதிகள் விரும்பினர். ஆனால் அடங்கிய சுபாவமுள்ள லஜபதிராய் அந்தப் பெருமையை ஏற்றுக்கொள்ள இசையவில்லை. மிதவாதிகளும் தேசியவாதிகளும் மாறுபட்டு நின்ற சமயத்தில் தலைமை வகிக்க அவர் விரும்பவில்லை.

லஜபதி விடுதலையாகி யிருந்தாலும் இரகசியப் போலீஸின் (சி. ஐ. டீ.) கண்காணிப்பிலேயே இருந்து வந்தார். அதன் தொந்தரவு பொறுக்க முடியாமல் அவர் வெளி நாடுகளிலேயே இருக்க விரும்பினர். முதல் உலக யுத்தத்தின்போது அவர் எத்தனையோ இன்னல்களுக்கிடையில் மனம் சோரா மல் அமெரிக்காவில் காலம் தள்ளினர். இந்தியாவுக் காக அவ்விடத்திலும் சேவை செய்வதையே அவர் நோக்கமாகக் கொண்டார். கடைசியில் பிரிட்டிஷ் ஆட்சியாளர் மனம் இளகி அனுமதி தந்ததன் பிறகு லஜபதி 1920 பிப்ரவரி 20-ஆம் தேதி இந்தியா திரும் பினர். அதே ஆண்டு செப்டம்பரில் கல்கத்தாவில் நடந்த விசேஷ காங்கிரசுக்கு அவர் தலைமை வகித்தார்.

லஜபதிக்குக் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் அவ்வளவு பற்றுதல் இல்லை. இருந் தாலும் அடிகள் போர் தொடங்கியவுடன் அதில் முக்கிய பங்கு கொள்ள அவர் தயங்கியதில்லை. இப் போரின் காரணமாக அவருக்கு ஒன்றரை

வருஷம் சிறைத் தண்டனை கிடைத்தது. சிறையிலே அவருக்குக் காச நோய் பற்றியது.

சைமன் கமிஷன் 1927-ல் ஏற்பட்டதும், அதைப் பகிஷ்கரிப்பதெனக் காங்கிரசு முடிவு செய்தது. 1928 அக்டோபர் 30-ஆந் தேதி இக் கமிஷன் லாகூருக்கு வந்தபோது அதை வரவேற்கப் பொது மக்கள் யாருமே இல்லை. "சைமனே திரும்பிப் போ" என்ற கோஷ மிடவும், கறுப்புக் கொடி பிடிக்கவுமே அவர்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டார்கள். பஞ்சாப் சிங்கம் காந்தியடிகளின் சாந்த மொழியைக் கடைப் பிடித்து அமைதியாய்க் கூட்டத்தின் முன்னணியிலே காட்சி அளித்தார். போலீசார் தடிகொண்டு தாக்கத் தொடங்கினர். அந்தச் சிங்கத்தையும் அடித்தார்கள். போலீஸ் சூபரின்டென்டெண்டு ஸ்காட் இரண்டு அடி அடித்தான். மேலும் எங்கிருந்தோ இரண்டடி; ஒன்று நெஞ்சின் மேலே. அந்த அடிகளின் காரணமாகவே அவர் அகால மரணமடைந்தார். போலீஸ் தடி கொண்டு தாக்கியபோது அவர் வீராவேசத்துடன், "தேசத் தொண்டர்களை அடிக்கும் ஒவ்வொரு அடியும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சவப் பெட்டியை மூடுவதற்கு அடிக்கப் படும ஓர் ஆணியாகும்" என்று முழங்கினர்.

திருவல்லிக்கேணி சுதேசிய கிருஹியம்

17 டிசம்பர் 1907 பிலவங்க மார்கழி 2

சூரத்தில் நடக்கிற காங்கிரசுக்கு நாங்கள் எல்லோரும் இவ்விடமிருந்து நாளது டிசம்பர் மாதம் 20-ஆந் தேதி வெள்ளிக் கிழமை மாலையில் ரிசர்வ் வண்டிகள் மூலமாய்ச் செல்லுகிறபடியால் இந்த ராஜதானியிலிருந்து காங்கிரசுக்குச் செல்லும் பிரதிநிதி (டெலிகேட்ஸ்)களும் பார்ப்பவர்களும் (விசிட்டர்ஸ்) இது பார்த்தவுடன் அவர்கள் புறப்படும் விவரத்தைத் திருவல்லிக்கேணி தளசிங்கப் பெருமாள் கோயில் தெரு 87-வது நம்பர் சுதேசிய கிருஹத்தாருக்குத் தெரிவிக்கும்படிக்கும் நாளது மாதம் 20-ஆம் தேதி காலையில் மேற்படி கிருஹத்திற்கு வந்து சேரும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சி. சுப்பிரமணிய பாரதி

காங்கிரஸ் நாஷனலிஸ்டு டெலி கேட்டுகளுக்கு நோட்டீஸ்

19 டிசம்பர் 1907 பிலவங்க மார்கழி 4

இதற்குமுந்திய நோட்டீஸ் 17ந்தேதி மித்திரனில் போட்டதிலிருந்து அனேக நாஷனலிஸ்டு டெலி கேட்டுகள் சென்னைக்கு சனிக்கிழமையன்று வந்து அன்று சாயந்திரமே சூரத்துக்குப் புறப்பட்டுப் போகக்கூடுமென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் இந்த மாகாணத்திலிருந்து போகும் நாஷனலிஸ்டு டெலிகேட்டுகளுக்கு நாம் தெரிவிக்கிறதென்னவென்றால் நாம் காங்கிரசுக்கு இரண்டு பிரிவாகப் போகவேண்டியிருக்கிறது. அதாவது நாளை 20-ம் தேதி சாயந்திரம் போகிறவர்கள் ஒரு பிரிவு, 21ம் தேதி சாயந்திரம் போகிறவர்கள் மற்றொரு பிரிவு. டெலிகேட்டுகளோ விஸிட்டர்களோ தங்களுடைய விருப்பத்தை 87, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை சுதேசகிருஹத்திற்குத் தெரிவித்தால் எந்தப் பிரிவோரும் போகலாம்.

சி. சுப்பிரமணிய பாரதி.
சுதேசக்கிருஹம்

குறிப்பு :—இந்த இரண்டு அறிக்கைகளிலிருந்து சூரத் காங்கிரசுக்குத் தமிழ்நாட்டு டெலிகேட்டுகளை அழைத்துச் செல்வதில் பாரதி

யார் உற்சாகமாக முனைந்து நின்றிருக்கிறார் என அறியலாம். தேச விடுதலைப் போரிலே சூரத் காங்கிரஸ் குறிப்பிடத்தக்க ஒரு கட்டம். காங்கிரசிற்குள்ளேயே மிதவாதிகள் என்றும் தேசிய வாதிகள் என்றும் இரண்டு கட்சிக்காரர்கள் தோன்றினர். மித வாதிகள பழைய விண்ணப்பமுறை, வேண்டுகோள் முறையையே பின்பற்ற விரும்பினர்கள். இவர்களைத்தான் பாரதியார் பழைய கட்சியார் என்று அழைக்கிறார். இவர்களுக்குக் கோகலே போன் றோர் தலைவர்கள். தேசியவாதிகள் தீவிரமான கொள்கைகளை அனுசரிக்கவேண்டுமென்று விரும்பியவர்கள். இவர்களுக்கு லோகமான்ய பாலகங்காதர திலகர் தலைவர். 1896 முதற் கொண்டே அவர் காங்கிரசில் கண்டிப்பான முறைகளைப் புகுத்த முயன்றுவந்தார். 1906 ல் நடந்த கல்கத்தா காங்கிரசிலேயே மிதவாதிகளுக்கும் தேசியவாதிகளுக்குமிடையே கருத்து வேறு பாடுகள் வெளிப்படையாகத் தோன்றலாயின. ஆனல் அதில் தலைமை வகித்த தாதாபாய் நௌரோஜியின் திறமையால் அவை ஒருவாறு சமாளிக்கப்பட்டன. 1907 ல் இவ்வேறுபாடுகள் இன் னும் வலுவடையவே நாகபுரியில் நடைபெறவேண்டிய காங்கிரசை மிதவாதிகள் சூரத்திற்கு மாற்றினர். சூரத்திற்கு மாற்றுவதால் தங்கள் விருப்பம்போல் காரியங்களைச் சாதித்துக்கொள்ளலாம் என்று மிதவாதிகள் கருதியிருப்பதாகத் தேசியவாதிகள் அவர் கள் மேல் குற்றம் சாட்டினர்.

ஆனல் 1907 டிசம்பர் 27 ந் தேதி தொடங்கிய சூரத் காங்கிர சில் மிதவாதிகளின் விருப்பம்போல் எல்லாம் நடைபெறவில்லை. ராஷ்பிகாரிகோஷைத் தலைவராகப் பிரேரேபணை செய்தது முதல் காங்கிரசில் ஒரே குழப்பம்தான். அதனல் மேற்கொண்டு அன்று ஒன்றும் செய்யமுடியாமல் அடுத்தநாள்வரை நடவடிக்கைகளைத் தள்ளிவைத்தார்கள். அடுத்தநாள் நிலைமை இன்னும் மோசமாகி விட்டது. தலைவர் அனுமதி கொடுக்காவிட்டாலும் தமக்குப் பேச உரிமையுண்டென்று திலகர் மேடைமீதேறினர். கூச்சலும் குழப் பமும் ஓங்கின. மிதவாதிகளின் தலைவர்களில் ஒருவரான சுரேந் திரநாத் பானர்ஜியை நோக்கி யாரோ செருப்பை வீசினர்கள். நாற்காலிகள் தாராளமாகப் பறந்தன. தடியெடுத்தார்கள் சிலர். இவ்வாறு அன்றும் காங்கிரசு கலகத்தில் முடிவாயிற்று.

தேசபக்தி உணர்ச்சி மிகுந்த பாரதியாரின் உள்ளப்போக்கை இக்தக் காங்கிரசு மிகவும் மாறுதலடையச் செய்திருக்கவேண்டும். திலகரின் தரிசனமும், அவருடைய வீரக்கனலும் நமது கவிஞரை முற்றிலும் கவர்ந்துவிட்டன என்று துணிந்து கூறலாம். விபின சந்திரபாலரின் வீராவேசப் பேச்சுக்களும் பாரதியாரை ஒரு தேசியக் கவியாக மாற்ற உதவியிருக்கின்றன.

"ஸ்வராஜ்யம் எனது பிறப்புரிமை; நான் அதைப்பெற்றே தீருவேன்" என்று கர்ஜனை செய்த திலகரிடம் பாரதியாருக் கிருந்த மிகுந்த பக்தியை அவர் இயற்றிய, **வாழ்க திலகன் நாமம், சோகமான்ய பாலகங்காதர திலகர்** என்ற இரு பாடல்களிலிருந்தும் அறிந்துகொள்ளலாம். பின்னைய பாட்டு திரு. எம். வி. ஈசுவர ஐயர் 1908 ல் வெளியிட்ட **ஸ்ரீ திலகரின் ஜீவிய சரித்தம்** என்ற நூலில் வந்தது.

அதேபோல மிதவாதிகளின் கொள்கை பாரதியாருக்குச் சம்மதமில்லை என்பதை **கோக்கலே சாமியார் பாடல், மேத்தா திலகருக் குச் சொல்லுவது, நிதானக்கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்** முதலிய பாடல்களிலிருந்து தெரியலாம்.

ஸ்வதேச கீதங்கள்

இத்தலைப்புடன் வெளி வந்த நூலே பாரதியாரின் முதல் நூலாகக் கொள்ளலாம். பலரும் எழுதிய தேசபக்திப் பாடல்களைத் தொகுத்து வெளியிட விரும்பி அது குறித்து 13-2-1906-ல் சுதேசமித்திரனில் விண்ணப்பம் விடுத்து அநேகமாக ஏமாற்றமடைந்த பாரதியார் தாமே இயற்றிய சிறந்த தேசபக்திப் பாடல்கள் அடங்கிய இந்நூலை 1908ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே வெளியிட்டிருக்கிறார். இந்நூலின் முகவுரை பாரதியாரால் 10 ஜனவரி 1908-ல் எழுதப் பெற்றிருக்கிறது. இது பற்றி முதல் விளம்பரம் 22-1-1908-ல் மித்திரனில் வெளிவந்ததிலிருந்து இப் பாடல்களெல்லாம் 1907லும் அதற்கு முன்பும் எழுதப்பட்டவை என்று தெரியலாம். இந்நூலின் விலை இரண்டணாவாக இருந்தது.

இந்நூலில் இடம் பெற்றிருந்த பாடல்களாவன :—

1. வந்தே மாதரம்
2. வந்தே மாதரம்
3. நாட்டு வணக்கம்
4. எங்கள் நாடு
5. நடிப்புச் சுதேசிகள்
6. தொண்டு செய்யும் அடிமை
7. மேத்தா நிலைகருக்குச் சொல்வது
8. லாஜபத்ராய் துதி
9. லாஜ பத்ராய் பிரலாபம்

10. தாதாபாய் நவுரோஜி
11. பூபேந்திர விஜயம்
12. சுதந்திரப் பெருமை
13. மாஜினியின் பிரதிக்ஞை
14. புது வருஷம்

1907-1908-ல் பாரதியார் எழுதி வெளியிட்ட வேறு நூல்களாவன. "ஸ்ரீ திலகர் 1907-ம் வருஷத்தில் புதிய கக்ஷியைத் தழுவிப் பிரசங்கங்கள் செய்ய, அதில் முதல் பிரசங்கத்தைப் **புதிய கட்சியின் கோட்பாடுகள்** என்ற பெயருடன் நூல்வடிவமாக ஆங்கிலமும் தமிழுமாய் ஒரு அணா விலையில் வெளியிட்டார்.....சூரத்தில் நடந்த காங்கிரசுக்குப் பாரதியாரும் சென்றிருந்தார். சூரத்தில் காங்கிரஸ் பிளவுபட்டது. பாரதியார் தாம் சென்னையிலிருந்து பிரயாணப்பட்டது முதல் மறுபடியும் சென்னை வந்து சேர்ந்த வரையில் நடந்த விஷயங்களைக் கோவையாகத் தொகுத்து இந்தியா பத்திரிகையில் வெளியிட்டு **எங்கள் காங்கிரஸ் யாத்திரை** என்று ஒரு புத்தகமாகவும் இரண்டணா விலையில் பிரசுரம் செய்தார். ஒவ்வொன்றும் புதுச்சுவை, புது நடை, புதிய அழகு கொண்டு இலங்கின" (திரு. எஸ். ஜி. இராமநுஜலு நாயுடு-சென்று போன நாட்கள்.)

ஜன்ம பூமி

1909-ல் ஸ்வதேச கீதங்களின் இரண்டாம்பாக மாக ஜன்மபூமி என்ற நூல் வெளியாயிற்று. அதன் முகவுரையிலே பாரதியார் தேசபக்தி என்னும் புதிய மார்க்கத்தால் உள்ளக் கிளர்ச்சி பெற்றுத் தாம் அப்பாடல்களைப் பாடியதாகக் கூறுகிறார். மேலும் அவர் எழுதுவதாவது: "சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் பூஜைசெய்தேன். நான் எதிர் பாராத வண்ணமாக மெய்த் தொண்டர்கள் பலர் 'இம்மலர்கள் நல்லன' என்று பாராட்டி மகிழ்ச்சி யறிவித்தார்கள். மாதா வும் அதனை அங்கீகாரம் செய்து கொண்டாள். இதை லல் தணிவு மிகுதியுறப் பெற்றேனகி, மறுபடியும் தாயின் பத மலர்க்குச் சில புதிய மலர்கள் கொணர்ந்திருக்கிறேன். இவை மாதாவின் திருவுள் ளத்திற்கு மகிழ்ச்சி யளிக்கு மென்றே நினைக்கின் றேன். 'குழலினிது யாழினி தென்பர் தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்' என்பது வேத மாதலின்."

இந்நூலில் இடம் பெற்றிருந்த பாடல்களா வன:—

1. ஜாதிய கீதம் (வந்தே மாதர கீதத்தின் முதல் மொழி பெயர்ப்பு.)
2. ஜய பாரத!
3. பாரத தேவியின் திருத்தசாங்கம்

4. மாதாவின் துவஜம்
5. எங்கள் தாய்
6. தொண்டு செய்யும் அடிமை
7. நிதானக்கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்
8. ஆங்கிலேயன் ஒரு தேச பக்தனுக்குக் கூறுவது
9. தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி
10. பாரத தேவியின் அடிமை
11. அபேதாநந்த ஸ்வாமிகளின் மீது ஸ்தோத்திரக் கவிகள
12. சுதந்திரப் பெருமை
13. சுதந்திர தாகம்
14. சுதந்திரப் பள்ளு
15. சுதந்திர தேவியின் துதி
16. ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்

"என்று தணியுமிந்த சுதந்திர தாகம்" என்று தொடங்கும் ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம், இந்தியா பத்திரிகையில் வெளி வந்த போது அதுவும் பாரதியார் மீது அரசாங்கம் கோபம் கொள்ளக் காரணமாக இருந்தது என்று ஸ்ரீ வ. ரா. குறிப்பிடுகிறார். (மகாகவி பாரதியார் பக். 33.)

மேலே குறிக்கப்பட்டுள்ள பாடல்களில் சில வற்றிற்கு ஜன்மபூமியில் வேறு தலைப்புக்கள் கொடுக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஏழாம் பாடலுக்கு 'நிதானக்கட்சியார் கூட்டம்' என்பது தலைப்பு.

எட்டாம் பாடலுக்கு கலெக்டர் வின்ச் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல் என்பது தலைப்பு. இத்தலைப்புடன் பின் வரும் குறிப்பும் இப்பாடலுக்கு எழுதப் பட்டுள்ளது.

நந்தன் சரித்திரத்திலே ஆண்டை நந்தனுடைய சிதம்பர வாஞ்சையை மற்றப் பறையர்கள் வந்து சொல்லக் கேட்டு மஹா கோபங் கொண்டு நந்தனை நோக்கி, "சேரி முற்றுஞ் சிவபக்தி பண்ணும்படி விட்டையாம் அடியிட்டையாம்" என்பது முதலான வார்த்தைகள் கூறிப் பயமுறுத்துகிறான். அதன் குறிப்பைத் தழுவித் திருநெல்வேலி ஜில்லா கலெக்டராகிய வின்ச், ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குக் கூறியதாகப் பின்வரும் கண்ணிகள் எழுதப்பட்டுள்ளன

ஒன்பதாவது பாடலுக்கு, கலெக்டர் வின்சுக்கு ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை சொல்லிய மறுமொழி என்பது பழைய தலைப்பு.

ஞான ரதம்

தமிழுக்கே புதிதான ஓர் அழகிய உரைநடையில் மிக அற்புதமாக இந்நூலைப் பாரதியார் 1910 ஆம் ஆண்டில் வெளியிட்டிருக்கிறார். இதற்கு எழுதிய முகவுரையில் புதுச்சேரி, ஸௌம்ய, தை, 15 (1901 ஜனவரி 28) என்று தேதி குறிக்கப்பட்டுள்ளது. இந்நூலைப் பற்றி திரு. எஸ். ஜி. இராமாநுஜ ஆயுடு சென்றபோன நாட்கள் என்ற கட்டுரையில் கூறுவதாவது: "ஞானரதம் என்ற தலைப் பெயருடன் தமிழ் நாடு என்றும் கண்டிராத துள்ளிக குதிக்கும் ஒரு புதிய கந்தர்வ நடையில் இயற்கையின் அழகுகளைப் பற்றியும், தேசச் செய்திகளைப் பற்றியும், நெருங்கிய நண்பர்களின் மன மாறுபாடுகளைப் பற்றியும் அற்புதமான கல்பனையுடன் வாரந்தோறும் இந்தியாவில் எழுதி வந்தார். அவற்றை ஒருங்கு சேர்த்து ஞானரதம் என்று புத்தகமாக வெளியிட்டார். அதற்கு இணையான நூல் தமிழ் மொழியில் இல்லை. சொற் சுவை பொருட் சுவை நிரம்பியது. பாச்சுவை பரவிய நடையால் அமைந்தது."

இந்நூல் சென்னையிலே தொடங்கப் பெற்றிருக்கிறது. திருவல்லிக்கேணியிலே வீரராகவ முதலி தெருவில் ஒரு மாலை நேரத்தில் பாரதியார் சிரம பரிகாரத்தின் பொருட்டு ஒரு மஞ்சத்தில் படுத்திருப்பதாக நூலின் பீடிகை தொடங்குகிறது. ஞான

ரதத்திலேறிப் பல உலகங்களுக்குப் பறந்து சென்ற அவர் தர்மலோகத்திலிருந்து தவறி விழுந்து மூர்ச்சை போட்டுப் பழைய திருவல்லிக்கேணி இல்லத்திலேயே கண் விழித்ததாக நூல் முடிகிறது.

மாதர் வாசகம்

1910 நவம்பரில் பாரதியார் பாடல்களின் மற்றொரு தொகுப்பு நூல் வெளியாயிற்று. அதன் பெயர் மாதர் வாசகம் என்றும், அது பாரதியாரின் மூன்றாவது கீத நூல் என்றும் திரு. எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு குறிப்பிடுகிறார்.

இந்நூலில் இடம் பெற்றிருந்த சில பாடல்களாவன:

1. மகாசக்தி
2. மகா சக்திக்கு விண்ணப்பம்
3. காளிக்கு ஸமர்ப்பணம்
4. மஹாசக்திக்கு ஸமர்ப்பணம்
5. நான்
6. மனத்திற்குக் கட்டளை
7. தெளிவு
8. ஸ்வ சரிதை
9. ஜாதீய கீதம் (புதிய மொழிபெயர்ப்பு)
10. பாரதமாதா திருப்பள்ளி யெழுச்சி
11. கிருஷ்ணன் மீது ஸ்துதி

ஸ்வ சரிதை என்ற பகுதிக்கு முக்கியமாக ஏற்பட்ட முகவுரையிலே பாரதியார் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்:—

"இச் சிறிய செய்யுள் நூல் விஞ்ஞாபார்த்தமாக எழுதப்பட்டது. ஒரு சில பாட்டுக்கள் இன்பமளிக்

கக் கூடியனவானாலும் பதர் மிகுதியாகக் கலந்திருக் கக்கூடும். இதன் இயல்பு தற்கூற்றெனப்படும். அதா வது கதாநாயகன் தன் சரிதையைத் தான் நேரா கவே சொல்லும் நடை."

இது வினோதார்த்தமாக எழுதிய பாடலா அல் லது உண்மையான வாழ்க்கை நிகழ்ச்சியை வெளி யிடுகின்றதா என்பதை ஆராயவேண்டும்.

"என்னை யின்றெனக் கைத்து பிரியத்தில்
ஏங்கவிட்டு விண்ணெய்திய தாய்"

என்ற வரிகளும்,

"தெல்லி யூர்சென்றவ் வூணர் கலித்திறன்
நேருமாறெனை எந்தை பணித்தனன்"

என்ற வரிகளும் உண்மையான வாழ்க்கைச் சம்பவங் களைக் கூறுகின்றன.

ஆங்கிலக் கல்வியின் மேலும் பால்ய விவாகத் தின் மேலும் பாரதியாருக்கிருந்த வெறுப்பினையும் இப் பாடல்கள் உண்மையாக எடுத்துரைக்கின்றன. ஆனால் பாரதியாருக்கு அவருடைய பதினைந்தாம் வயதில் கல்யாணமாயிற்றென்று அவருடைய சரித் திரமெழுதியோர் கூறுகின்றனர். ஆனால்,

"ஈங்கொர் கன்னியைப் பன்னிரண்டாண்டினுள்
எந்தை வந்து மணம்புரி வித்தனன்"

என்று ஸ்வ சரிதை கூறுகின்றது.

பாஞ்சாலி சபதம்

1912-ல் **பாஞ்சாலி சபதம்** முதற் பாகம் புதுச்சேரியிலுள்ள வித்யாவிவர்த்தினி அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இந்நூலின் முகவுரையில் காணப்படும் கருத்துக்கள் தமிழில் புதிய இலக்கியம் எவ்வாறு உருவாக வேண்டும் என்று பாரதியார் விரும்பினர் என்பதை நன்கு காட்டுகின்றன. "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஒரிரண்டு வருஷத்து நாற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்தல் வேண்டும்."

"காரியம் மிகப் பெரிது; எனது திறமை சிறிது. 'ஆசையால்' இதனை எழுதி வெளியிடுகின்றேன். பிறருக்கு ஆதர்சமாக அன்று, வழிகாட்டியாக."

திறமை சிறிது என்று அவர் அடக்கத்தோடு கூறிக் கொண்டாலும் எடுத்த காரியத்தை அற்புதமாக, ஓர் அம்சத்திலும் குறைவு நேரிடாதபடி வெற்றியோடு செய்து முடித்திருக்கிறார்.

இந் நூலைப்பற்றி திரு. எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு கூறுவதாவது: "அதன் பின்னர் பாஞ்சாலி சபதம் என்ற அரிய நூலை வெளியிட்டார். அதிலுள்ள ரஸத்தை என்னென்று புகழ்வேம்! அதற்கு அதுவே நிகர். அதை முதற் பாகமாகத்தான் வெளியிட்டார். இரண்டாம் பாகம் பார்க்கத் தமிழ் நாட்டிற்குப் பாக்கியமில்லை."

1921-ஆம் ஆண்டு வரை இந் நூலின் இரண்டாம் பாகம் வெளியாகவில்லை என்று அவர் கூறுவதிலிருந்து தெரிகிறது. இப்பொழுது பாஞ்சாலி சபதம் முழுவதும் இரண்டு பாகங்களாக நமக்குக் கிடைத்துள்ளது.

மாதா மணி வாசகம்

1914-இல் இப்பெயருடன் தென்னப்பிரிக்காவில் பாரதியாரின் நூல் ஒன்று வெளியாயிற்று என்று பாரதி நூல்கள் முதல் தொகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அந்நூலில் அடியிற்கண்ட பாடல்கள் வந்துள்ளன:—

1. சரஸ்வதி தேவியின் புகழ்
2. ஸோமய தரிசனம்
3. வெண்ணிலா
4. ஹே காளி!
5. மகா காளியின் புகழ்
6. மகா சக்தி பஞ்சகம்
7. மகா சக்தி வாழ்த்து
8. வெற்றி
9. அச்சமில்லை
10. சங்கு
11. அறிவே தெய்வம்
12. பரசிவ வெள்ளம

எதிர் ஜாமீன்
அல்லது
மாப்பிள்ளை விலை

15 ஜூன 1915 *நள ஆனி 22*

இது பாரதி நூல்கள், மூன்றும் தொகுதியில் வந்துள்ளது.

ஆனால் அநேகமாகப் பாதிக் கட்டுரையாகிய பின் பாகம் அதில் இல்லை. ஆதலால் அப்பகுதியைத் தருவதோடு தொடர்ச்சியை எளிதில் அறிந்து கொள்ளும் பொருட்டு முன் பகுதியின் சுருக்கத்தையும் இங்கு தருகிறோம்.

முன் பகுதிச் சுருக்கம்: நம் நாட்டிலே வறுமை அதிகம். இந்த நிலையிலே நமக்குள்ளே பலர் பல விதமான இழிந்த காரியங்கள் செய்வது வியப்பில்லை. பிராமணருக்குள் விவாக காலங்களிலே எதிர் ஜாமீன் கேட்கும் வழக்கம் இருந்து வருகிறது. மாப்பிள்ளைகளுக்கு விலைத் தரங்கள் போட்டு இத்தனை ரூபாய் கிரயம் என்று முடிவு செய்து விவாகம் நடத்தும் வழக்கம் மானமுள்ள நாடுகளிலே இல்லை.

மாப்பிள்ளைகள் உயர்ந்த கிரயம் கொடுத்தால் ஒழிய அகப்படுவதில்லை. காலிலந்து பெண்களைப் பெற்று விட்டால் ஏழைகள் என்ன செய்வார்? திருநெல்வேலி ஜில்லாவிலே ஒரு கிராமத்திலே ஒரு பெண்ணுக்கு விவாகம் நடந்தபோது அவளுடைய பெற்றோர் மாப்பிள்ளைக்குப் பணம் கொடுத்தார்

கள். பிறகு ருதுசாந்தியின்போது அந்த மாப்பிள்ளை, "ஐந்நூறு ரூபாய் கொடுத்தால்தான் ருது சாந்தி செய்து கொள்ளுவேன். இல்லாவிட்டால் பெண் உங்கள் வீட்டோடே இருக்கட்டும்" என்று சொல்லி ஐந்நூறு ரூபாய் தண்டம் வாங்கிக் கொண்டான்.

வெளியாகாத பகுதி:—

இதுபோலவே சீமந்தத்துக்கும் கிரயம் வாங்கிக் கொண்டான். பிறகு அந்தப் பெண்ணை விலக்கி வைத்து விட்டு, வேறொரு பெண்ணை விவாகம் செய்து கொண்டு புது மாமனாரிடத்திலும் முன்னைப் போலவே 'பண வசூல்கள்' செய்து வருகிறான். பணம் கொடுக்க வழியில்லாத குடும்பத்தாரும் அவர் களைப் பார்த்துப் பரிதவிக்கும் சிலரும், இந்த விஷயத்தில் ஏதேனும் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். கல்யாணமாகாமல் காலேஜிகளில் படிக்கும் பிரமசாரிப் பிள்ளைகள் தமக்குள் சபை கூடி இனிமேல் மாமனாரிடம் தண்டம் வாங்குவதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொள்ள வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். பிள்ளையின் தகப்பனன்றோ பணம் வாங்குகிறான்? அதற்குப் பிள்ளை சபதம் செய்து கொண்டால் என்ன பிரயோஜனம்? நியாயத்திலே கூடத் தகப்பன் வார்த்தையை மீறி நடக்கும் பிள்ளைகள் நமது நாட்டிலே பலரில்லை. இது வெல்லாம் வீண் வார்த்தை. பெண்களுக்கு விடுதலை யுண்டானால் ஒழிய விவாக சம்பந்தமான ஆயிரத்தெட்டு ஊழல் கள் நீங்க வழியில்லை.

சித்தக் கடல்

1 ஜூலை 1915

2 ஜூலை 1915

பாரதி நூல்கள் — இரண்டாம் தொகுதி.

பாரதியாரின் உள்ளத்தையும் உள்ளத்தில் குமுறிய ஆர்வத்தையும், அவருடைய புதுச்சேரி வாழ்க்கைத் துன்பத்தையும் ஒரு கூணம் இங்கே காண்கிறோம். பராசக்தியிடம் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியையும் இதில் உணரலாம்.

கிச்சடி

காளிதாஸன்

19 ஜனவரி 1916 ராக்ஷஸ தை 6

சமீபத்திலே, பம்பாயில் கூடிய காங்கிரஸ் சபை, முஸ்லீம் சங்கம், முதலியவற்றில் நடந்த உபந்நியாசங்களை வாசித்துப் பார்த்தேன். பெரும் பாலும் ரஸமாகத்தான் இருந்தது. இவை போன்ற பிரசங்கங்களை யெல்லாம் தமிழில் தெளிவாக மொழி பெயர்த்து அப்போதைக்கப்போது குட்டிப் புத்தகங்கள் போட்டால் நல்லது. இந்த விஷயத்தில் ஸ்ரத்தை யெடுத்தால், தமிழ் நாட்டுக்கும் உபகாரம்; அவர்களுக்கும் நல்ல லாபமேற்படும். சபைகளிலே இரண்டு விதமுண்டு. சபை முடிந்தவுடனே செய்கை தொடங்குவதற்கு ஆகவேண்டிய விஷயங்களை முடிவு செய்யும் சபை ஒரு வகை. பொதுப்படையாக நியாய நிர்ணயங்கள் செய்து விட்டுக் கலையும் சபை மற்றொரு வகை. முதல் வகுப்பில் சேர்ந்த சபைகளில் மேற்கோள் எடுத்துக் காட்டுதல் குறைவாக இருக்கும். இரண்டாவது வகுப்பு சபைகளில், அந்தப் பண்டிதர் இப்படிச் சொன்னார்; இந்தப் பண்டிதர் அப்படி எழுதி யிருக்கிறார் என்று மேற்கோள் வசனங்கள் மிகவும் அதிகமாக நடைபெறும். பம்பாயில் நடந்த சபைகள் பெரும்பாலும் கெடி இரண்டு லக்ஷணங்களும் சேர்ந்தவையாதலால்

அங்கே பழையவரும் புதியவருமாகிய இங்கிலீஷ் பண்டிதரின் வசனங்களை அடிக்கடி மேற்கோள் காட்டிப் பேசினார்கள். திருஷ்டாந்தமாக :—

"ஸ்வதந்திரமே மனிதரை ஸ்வதந்திரத்திற்குத் தகுதியாக்குகிறது" (அதாவது நீரிலே இறங்கித் தான் ஒருவன் நீச்சுப் படிக்க முடியும்; இல்லாவிட்டால் முடியாது என்பதுபோல).

இந்த வாக்கியம் மகா கீர்த்தியுடன் நெடுங்காலம் இங்கிலாந்தில் முதல் மந்திரியாக இருந்த க்ளாட்ஸ்டன் என்பவர் சொல்லியது. நல்ல ராஜ்யத்தைக் காட்டிலும் ஸ்வராஜ்யம் நல்லது; இது கூறிய பானர்மான் என்பவரும் இங்கிலீஷ் முதல் மந்திரி ஸ்தானம் வகித்தவரேயாம். ஸம்ஸ்கிருதம் முதலிய புராதன பாஷைகள் படித்த வைதிகப் பண்டிதர்களைப் போலவே, நமது தேசத்தில் இங்கிலீஷ் படித்த வித்வான்களும் பெரும்பான்மையாகப் புத்தகப் பழக்கம் அதிகமாகவும் லௌகிகப் பழக்கம் குறைவாகவும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் காளடைவில் சீர்படுமென்று நம்புகிறேன்.

ஓகோ! இந்த மேற்கோள் சங்கதி எடுத்ததிலிருந்து என்னையும் இன்று அந்தக் குணம் பலமாகப் பிடித்துக் கொண்டது.

லார்ட் ஹால்டேன் என்று ஒரு இங்கிலீஷ் மந்திரி இப்போது பென்ஷன் வாங்கிக் கொண்டிருக்கிறார். இவர் நல்ல மேதாவி. இவர் சொல்லுகிறார்:—

"இந்த யுத்தம் முடிந்தவுடனே ஜனாதிகாரம் வந்து நம் முன்னே நிற்கும். (அதாவது பொது

ஜனங்கள் கையிலே அதிகாரம் வந்து தங்கும்) நம் முடைய யஜமான்கள் பொது ஜனங்கள் நம் மீது அதிகாரம் செலுத்த வருமுன்பாகவே அவர்களுக் குக் கல்வி கற்றுக் கொடுப்பதற்கு நம்மால் இயன்ற அளவு பாடுபட வேண்டும்.'' பள்ளிக்கூடம் என்ற வார்த்தை எடுத்ததிலிருந்து ஆஸ்திரேலியா தேசத் துப் பெண் பள்ளிக்கூடம் ஒன்றைப் பற்றிய கதை ஞாபகத்துக்கு வருகிறது. அதில் வாசித்துக் கொண் டிருந்த ஒரு ஆஸ்திரேலியப் பெண்ணை இன்ஸ்பெக் டர் வந்து பரீக்ஷை நடத்தியபோது பின்வரும் கேள்வி கேட்டாராம்:—

இந்தியா தேசத்து ஜனங்களின் சாதாரண போஜனம் எது?

அந்தப் பெண் சொல்லிய மறுமொழி:—''பஞ் சம்.'' வேடிக்கையான கதை.

கல்வி சம்பந்தமாக இன்னுமொரு மேற்கோள்: இன்று கிச்சடியே ''மேற்கோள் கிச்சடி'' தானே? மிஸ்டர் ஆர்ச்சர் என்ற ஒரு ஆங்கிலேயர் சில தினங்களின் முன்பு லண்டன் பத்திரிகை யொன் றில் கல்வியைப் பற்றி எழுதிக்கொண்டு வரும் போது, ''இங்கிலாந்திலே இப்போது கல்விக்கு மூலாதாரமாக வசன காவியங்களையும், செய் யுட் காவியங்களையும், வைத்திருப்பது சரியில்லை. ஸையன்ஸ் (இயற்கை நூல்) படிப்புத்தான் மூலா தாரமாக நிற்கவேண்டும்'' என்கிறார்.

இவருடைய கொள்கை பலவித ஆக்ஷேபங் களுக்கிடமானது ஆனால், தனிப் பள்ளிக்கூடங்கள்

எந்த முறைமையை அனுசரித்த போதிலும், ராஜாங்கப் பள்ளிக்கூடத்தார் இவருடைய கொள்கையைத் தழுவியே படிப்பு நடத்த வேண்டுமென்று நான் நினைக்கிறேன். கற்பனையும் அலங்காரமும் எனக்குக்கூட மிகவும் பிரியந்தான். ஆனால், ''நெல் எப்படி விளைகிறது?'' என்பதைக் கற்றுக் கொடுக்காமல், ''அன்மொழித் தொகையாவது யாது?'' என்று படிப்புச் சொல்லிக் கொடுப்பதை நினைக்கும் போது கொஞ்சம் சிரிப்புண்டாகிறது. அன்மொழித் தொகை நிலைச் காப்பாற்றும். ஊர் முழுதையும் காப்பாற்றுது நெல்லுத் தான் ஊர் முழுதையும் காப்பாற்றும். அன்மொழித் தொகையைத் தள்ளி விடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் அன்மொழித் தொகையைப் பயிர் செய்து நெல்லை மறந்துவிடுவது சரியான படிப்பில்லை யென்று சொல்லுகிறேன்; அவ்வளவுதான்.

ஜப்பான் தொழிற் கல்வி

சக்திதாஸன்

12 பிப்ரவரி 1916 ராக்ஷஸ தை 30

சக்தி வேண்டும்

தெளிந்த அறிவும் இடைவிடாத முயற்சியும் இருந்தால் சக்தியுண்டாகும். தெளிந்த அறிவென்பது இரண்டு வகைப்படும் - ஆத்ம ஞானம் லௌகிக ஞானம் என. ஆத்ம ஞானத்தில் நமது ஜாதி சிறந்தது. லௌகிக ஞானத்தில் நம்மைக் காட்டிலும் வேறு பல தேசத்தார் மேன்மை யடைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேசங்களில் ஜப்பான் ஒன்று. புத்தகங்களாலும், பத்திரிகைகளாலும், யாத்திரைகளாலும் நாம் ஜப்பான் விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளுதல் பயன்படும். கூடியவரை பிள்ளைகளை ஜப்பானுக்கு அனுப்பிப் பலவிதமான தொழில்களும் சாஸ்திரங்களும் கற்றுக் கொண்டு வரும்படி செய்வதே பிரதான உபாயமாகும். தொழிற் கல்வியிலும் லௌகிக சாஸ்திரப் பயிற்சியிலும் நாம் மற்ற ஜாதியாருக்கு ஸமானமாக முயலுதல் அவசரத்திலும் அவசரம்.

தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து ஒரு தமிழ் வாலிபர் சில வருஷங்களாக ஜப்பானிலே போய் நூல் நூற்றல், துணி நெய்தல், சாய மேற்றுதல் முதலிய தொழில்கள் படித்துக் கொண்டிருக்கிறார்.

இங்கிருந்து புறப்படு முன்பாக அந்தப் பிள்ளை வெகு சாதாரணராக இருந்தார். அங்கே போய் மூன்று, நான்கு வருஷங்கள் வாசம் செய்ததிலி ருந்து அவருக்கு ஏற்பட்டிருக்கும் அறிவுப் பயிற்சி, ஊக்கம், தைரியம், ஸ்வஜனாபிமானம் முதலிய குணங்கள் வியக்கும்படியாக இருக்கின்றன. திருவ்ட் டாந்தமாக, சில தினங்களின் முன்பு அவர் இங் குள்ள தமது தமையனருக்கு ஒரு கடிதம் எழுதியிருந் தார். அந்தக் கடிதம் எனக்கு வாசித்துக் காட்டப் பட்டது. மிகவும் ரஸமாக யிருந்தபடியால் அதன் ஸாராம்சங்களை இந்தப் பத்திரிகை படிப்பவருக்குத் தெரிவிக்கிறேன்.

ஜப்பானில் தொழிற் கல்வி பழகும் ஒரு தமிழ் வாலிபர் தம்முடை தமையனருக்கு எழுதிய கடிதத் தின் ஸாரம்சங்கள் :—

அண்ணாவுக்கு நமஸ்காரம் :

சாயத்தொழில் விஷயமாக ஏற்கனவே கேட்ட பாடங்களை அனுபவத்தில் சோதனை செய்து வரு கிறோம். மிகவும் தூரிதமாக வேலை நடந்து வரு கிறது. சாயமருந்துகள், மாதிரித் துணிகள் முதலிய சாமான்களெல்லாம் போதுமான அளவு சேகரஞ் செய்துவிட்டேன். ஆனால் இன்னும் செய்யவேண்டிய காரியம் எவ்வளவோ இருக்கிறது. துணி சம்பந்த மான பரிபூரண ஞானம் ஏற்பட வேண்டுமானால், சாயம், (துணியில்) அச்சடித்தல், இரண்டிலும் இன்னும் பல பல சோதனைகள் செய்து பார்க்க வேண்டும். ராஜாங்க சர்வகலா சங்கத்து விவசாயக் கலாசாலையில் போய்ப் பட்டுப் பூச்சி வளர்க்கும்

தொழில் படிக்கவேண்டும். டோக்கியோ (ஜப்பான் ராஜதானி) நகரத்திலும், பக்கங்களிலும் உள்ள தொழிற்சாலைகள் எல்லாம் பார்த்தாய் விட்டது. வெளி நகரங்களுக்கு சீக்கிரத்தில் போய் வருவேன்.

நெசவு சம்பந்தமான பலவகைத் தொழில் களிலே நான் பாரத தேசத்திற்குத் திரும்பி வந்த பிறகு அங்கே என்ன தொழில் தொடங்கலாமென் பதைக் குறித்து இங்கிருந்து எவ்விதமான தீர் மானமும் செய்ய முடியாது. அங்கு வந்தபிறகு தான் பார்க்கவேண்டும். நமது நாட்டு முதலாளிகள் கொடுக்கும் உதவிக்குத் தகுந்தபடிதான் தொழில் செய்ய முடியும்.

ஒரு ஜப்பானிய சாஸ்திரியின் உபதேசம். இந்த விஷயமாக எனது கலாசாலைத் தலைவரிடம் ஆலோசனை செய்தேன். அவர் சொல்லிய தென்ன வென்றால்:

"நூற்புத் தொழிலுக்கு நல்ல முதல் போட்டுப் பெரிதாக நடத்தினால் தான் லாப முண்டாகும். வேலையும் ஸௌகரியமாக நடக்கும். நெசவுத் தொழில் அப்படியில்லை. அதிலே, சரக்கு நயத் துக்குத் தக்கபடி தொழிற்சாலையைப் பெரிதாகவோ சிறிதாகவோ தொடங்கி விடலாம். இந்தியாவிலே தொழிற் பண்டிதரும் கை தேர்ந்த தொழிலாளி களும் கிடைப்பது அருமையாதலால், ஆரம்பத் திலேயே நீராவி, மின்சாரம் முதலிய சக்திகளைக் கொண்டு வேலை தொடங்குதல் ஸௌகரியப் படாது. சேதமும், உற்பத்திக் குறைவும் அதிக மாக உண்டாகும். விசேஷமாகப் பட்டுத் தறிகள்

வைப்போர் இவ்விஷயத்தில் ஜாக்ரதையாக இருக்க வேண்டும்.

ஆரம்பத்திலே உயர்ந்த கைத்தறிகள் வைத்து மெல்லிய, சாதாரண, அல்லது கனமான எந்த மாதிரி வேண்டு மென்றாலும்—துணிகள் நெய்து கொள்ளலாம். ஒருவருஷத்துப் பழக்கத்திலே தொழிலாளிகளுக்குப் போதுமான தேர்ச்சி யுண்டாய்விடும். இரண்டாவது அல்லது மூன்றாவது வருஷத்தில் சக்தி யந்திரம் (பவர்) உபயோகப் படுத்திக் கொள்ளலாம். ஜப்பானில் வந்து நெசவுத் தொழில் படிக்கும் ஹிந்து வாலிபர்கள் எங்களு டைய ராஜாங்கத் தொழிற்சாலையைப் பார்வையிட்டு வருவதுடன் சாதாரணத் தொழிற்சாலை யொன்றில் சேர்ந்து ஒரு வருஷம் வேலை செய்து பழகவேண்டும். அப்போதுதான் தறிகளுடைய ஆக்கம், பயன், ஆட்சி இவை நன்றாக மனதில் படியும்.''

இங்ஙனம் கூடி ஜப்பானிய சாஸ்திரி நெசவுத் தொழில் விஷயமாக மந்த்ராலோசனை செய்து சாயத் தொழில் சம்பந்தமாகவும் எனக்கு நல்ல போதனை கள் சொன்னார். சாயத்தொழில் சொல்லிக் கொடுக் கும் வகுப்புகளிலே அன்னிய தேசத்துப் பிள்ளைகள் வந்து சேர்தல் இன்னும் சிறிது காலத்திற்குள் சிரம மாகிவிடும். ஆகையால் சீக்கிரத்திலேயே பல தமிழ்ப் பிள்ளைகள் இங்குவந்து மிகப் பயனுள்ளதாகிய இத் தொழில் பழகிக் கொண்டு போகும்படி செய்ய வேண்டும்.

இத் தொழில்களில் ஏதேனும் ஒரு சாகை யிலே மட்டும் விசேஷ பாண்டித்யம் ஏற்படுத்திக்

கொள்ள முயற்சி செய்கிறேன். நான் இருக்கும் இடத்திற்கும் பள்ளிக்கூடத்துக்கும் 2½மைல் தூரம் இருக்கிறது. நடந்துதான் போகிறேன். வண்டி யேறுவதில்லை. இடைப்பகல் ஆஹாரம் கையிலேயே கொண்டு போய் விடுகிறேன். சந்தோஷத்தோடு தான் இருக்கிறேன். என்னைப் பற்றிக் குடும்பத் தாருக்கு எவ்விதமான கவலையும் வேண்டியதில்லை.

பிறந்த நாடு

நமது ஜாதியாருக்கும் தேசத்தாருக்கும் என் மேலே ஆனவரை ஊழியம் செய்ய வேண்டு மென்று விரதம் கொண்டிருக்கிறேன். செட்டுக் குடித்தனம், ஆனால் திருந்திய ஜீவனம் நமது ஜனங்களுக்கு அவசிய மென்று நினைக் கிறேன். நல்ல காற்று, நல்ல நீர், சுத்தமான, பயனுடைய, ருசியான தகுந்த அளவுள்ள ஆஹாரம், சுத்தமான உடை இவையெல்லாம் திருந்திய ஜீவனத்திற்கு லக்ஷணங்கள். இதற் கெல்லாம் படிப்பு அவசியம்.....சோறில்லாமல் சோர்ந்து கிடக்கும் ஜனக் கூட்டத் தாருக்கு கர்மோப தேசங் கள் பண்ணுவதிலே எனக்கு ஸந்தோஷமில்லை. அது பாவ மென்பதை நான் அறிவேன் ஆனாலும், என்ன செய்வது? மனதிலிருப்பதைச் சொலலித் தானே ஆகவேண்டும்? ஜனகோடிகள் படித்தா லொழிய நாகரிகப் படுவதற்கு வேறுவழியில்லை. நமது காங்கிரஸ் சபை விஷயத்தில் எனகு அஸ்ரத்தை கிடையாது. ஆனாலும், அந்த சபையா ரிடம் எனக்குச் சிறிது அதிருப்தியுண்டு. அவர்கள்

ஒரு சார்பையே கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். முதலாவது ஆஹாரத்திற்கு வழிதேட வேண்டும். அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். நியாயந்தான். அது கிடைக்கும் வரை பிழைத்திருக்க வேண்டுமே? உண்டாலன்றே உயிரோடிருக்கலாம்? படிப்பு, கைத்தொழில் இவற்றை காங்கிரஸ் சபையார் போதுமானபடி கவனிப்பதாகத் தோன்றவில்லை. நமது ஜனங்களிலே பெரும்பாலோர் ஏழ்மையிலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடப்பதைக் கல்வியாளர் சும்மா பார்த்துக் கொண்டு ஒன்றும் செய்யாமலிருப்பது மடமையிலும் மடமை. கைத்தொழில் வளர்ச்சிக்காக உழைப்போரும் உண்மையான தேசபக்தரே யாவர்.

விக்தோர் ஹியூகோ என்ற பிரெஞ்ச் ஞானியின்

வசனங்கள்

சக்திதாஸன்

24 பிப்ரவரி 1916 ராக்ஷஸ மாசி 12

பார்க்க: பாரதி நூல்கள்—மூன்றும் தொகுதி

பல

காளிதாஸன்

8 மார்ச் 1916 ராக்ஷஸ மாசி 25

பல துளி பெருவெள்ளம். பல உயிர் பெருந் தெய்வம். தேசத்தின் மேன்மைக்குப் பலர் பல விதங்களிலே தொழில் செய்து வருவதைக் கண்டு ஸந்தோஷமுண்டாகிறது.

ஸ்ரீமான் காந்தி

நமது தேசத்தார் ஆப்பிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு "ஒப்பந்தக்கூலி" க்காரராகப் போவதை எந்த விதத்திலும் தடுத்துவிட வேண்டு மென்று ஸ்ரீ காந்தி பாடுபடுகிறார். "ஒப்பந்தக் கூலி" யென்பது விலையடிமையைத் தவிர வேறொன்று மில்லை. இந்த விஷயம் நமது தேசத்துப் பண்டிதர் களுக்கும், செல்வர்களுக்கும் நெடுங் காலமாகத் தெரியும். ஆனாலும் ஆத்ம சக்திக் குறைவினால் இது வரை தடுக்க முடியவில்லை. லார்டு ஹார்டிஞ்ச் வைஸ்ராய் வேலையை விட்டுப் போகுமுன்பு, இந்த "ஒப்பந்தக் கூலி" கூடாதென்று சட்டஞ் செய்து விடவேண்டு மென்பதாக ஸ்ரீ காந்தி மன்றாடுகிறார். நமது தேசத்து மானஸ்தரெல்லோரும் இந்த விஷ யத்தில் தத்தமக்கு இயன்றவரை முயற்சி செய்யும் படி வேண்டுகிறேன்.

ஸ்ரீமதி மங்களம்மாள்

சென்னப் பட்டணத்தில் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ சதாசிவய்யருடைய புத்திரியாகிய ஸ்ரீமதி மங்களம்மாள் திருவல்லிக்கேணி ஸம்ஸ்கிருதப் பெண் பள்ளிக்கூடத்திலே சில தினங்களின் முன்பு செய்த உபந்யாஸத்தில் நம்மவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன.

ஹிந்துக்களுடைய நாகரிகத்துக்குத் தலைமைக் களஞ்சியம் ஸம்ஸ்கிருத பாஷையாதலால் நமது நாட்டில் பாண்டித்யம் பெற்று விளங்க வேண்டு மென்ற எண்ணமுடைய எல்லோரும்—பிராமணரும், சூத்திரரும், ஆணும், பெண்ணும்—ஸம்ஸ்கிருத பாஷையில் தேர்ச்சி பெற முயலவேண்டு மென்று ஸ்வாமி விவேகானந்தர் சொல்லி யிருக்கிறார். ஸ்ரீமதி மங்களம்மாளும் அதே கொள்கையையுடைய வரென்று புலப்படுகிறது.

பிராம்மணர்களிலே ஸ்திரீகளுக்கு வேத மந்திரம் படிக்க அதிகாரம் கிடையாதென்ற வார்த்தையை ஸ்ரீமதி மங்களம்மாள் ஒப்புக் கொள்ளவில்லை. அந்த வார்த்தை இடைக் காலத்திலே ஏற்பட்டது. வேத மந்திரங்களிலேயே பல பெண்களால் எழுதப்பட்டன.

மேலும் விவாகம் செய்யும்போது பெண்ணுடைய இஷ்டத்தை அறிந்து செய்வது அநாகரிக வழக்கமென்பதை இவர் நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். "பெண்களாகிய நாம் ஆப்பிரிக்கா அடிமைகளில்லை. குடும்பத்து யஜமானிகள்'

என்று ஸ்ரீ மங்களம்மாள் சொல்லியதை எங்கள் வீட்டுப் பெண் குழந்தைக்கு வாசித்துக் காட்டினேன். குழந்தைக்கு ஸந்தோஷம் பொறுக்க முடியவில்லை. தனக்குத் தெரிந்த வீடுகளுக்கெல்லாம் போய் இந்த வார்த்தையை எல்லோரிடத்திலும் முழங்கிவிட்டுவர வேண்டுமென்று குழந்தை தீர்மானம் செய்திருக்கிறது.

தமிழ்

தமிழ் நாட்டில் உண்மையான கல்வி பரவ வேண்டுமானால், சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை நமக்குள்ளே அறிவுடையோர் எல்லோரும் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதை அனுஸரணைக்குக் கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை. ஐரோப்பிய ஸ்திரீயாகிய மிஸ்ஸஸ் பெஸண்ட் கூடச் சில தினங்களின் முன்பு பெங்களூரில் செய்த பிரசங்கமொன்றிலே தமிழ் பாஷையை மிகவும் வியந்து கூறி, நாமெல்லோரும் தமிழ்ப் பயிற்சியில் தக்கபடி சிரத்தை செலுத்தாமல் இருப்பது பற்றி வருத்தப் பட்டதாகத் தெரிகிறது. இப்படி நம்மைப் பார்த்துப் பிறர் இரக்கப்படும்படியான அவமான நிலை விரைவில் நீங்கவேண்டுமென்று தேவர்களை வணங்குகிறோம்.

ஹிந்து மகம்மதிய ஒற்றுமை

இந்த விஷயத்தைப் பற்றி ஒங்கோல் என்ற ஊரில் வக்கீல் வேலை பார்க்கும் ஸ்ரீ நாராயண

சாஸ்திரி என்பவர் 'ஹிந்து' பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறார். ஹிந்து—மகம்மதியருக் கிடையே பரஸ்பர மதிப்பும் அன்பும் அதிகப்படும் படி செய்வதற்கு அவர் சில வழிகள் குறிப்பிடுகிறார்.

அவற்றுள் முக்கியமானவை பின் வருமாறு:—

1. ஹிந்துக்களிலே சிலர் மஹம்மதிய வேத சாஸ்திரங்களைப் படித்து அவற்றிலே தேர்ச்சி பெறவேண்டும்.

2. அங்ஙனமே, மஹம்மதியர்களில் சிலர் ஸம்ஸ்கிருதம் படித்து ஹிந்துக்களுடைய வேத சாஸ்திரங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

3. ஹிந்துக்களுடைய மனத்திலே மஹம்மதியர் நமது தேசத்தார் என்பதும், இஷ்ட தேவதை வேறாக இருப்பதைப் பற்றி அவர்களை மிலேச்ச ரென்று நினைப்பது கூடப் பிழை யென்பதும் நன் றாக ஞாபகமிருக்க வேண்டும்.

4. மஹம்மதியரும் அங்ஙனமே ஹிந்துக்களை காபிர் (அவிசுவாஸிகள்) என்று நினைப்பது பெரிய தவறென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

5. விவாகம் முதலிய சோபன காலங்களில் ஹிந் துக்கள் மஹம்மதியரையும், மஹம்மதியர் ஹிந்துக் களையும் அழைத்து உபசாரங்கள் செய்து தனியாக விருந்துகள் செய்து வைக்க வேண்டும். ஹிந்துக் களுக்குள்ளே ஜாதிக் கட்டுகள் இருப்பதைப் பற்றி மஹம்மதியர் அருவருப்புக் கொள்ளக்கூடாது

இங்ஙனம் ஸ்ரீ நாராயண சாஸ்திரி சொல்வதை நாட்டிலுள்ள ஹிந்து மஹம்மதியத் தலைவர்கள் கவ

னித்து அந்தந்த இடங்களிலேயே இயன்ற வரை இருதிறத்தாருக்குள்ளேயும் ஸஹோதர உணர்ச்சி மேன்மேலும் பெருகி வருவதற்கு வேலை செய்தால் தேசத்துக்கு அளவிறந்த நன்மை யுண்டாகும்.

தமிழ் நாட்டில் நாடகம்

தமிழ் நாட்டில் நாடகப் பாட்டுக்கள் நாள் தோறும் நூற்றுக்கணக்காக அதிகப்பட்டு வருகின்றன. ஆனால், இவற்றிலே தெளிவு, அறிவு வளம், கல்விப் பயிற்சி, சொல் நயம், ரஸ வொளி முதலிய லக்ஷணங்கள் கொஞ்சமேனும் காணப்படவில்லை. வண்டிக்காரன் பாட்டு, பாம்புப் பிடாரன் பாட்டு, குறத்திப் பாட்டு முதலிய பாமரப் பாட்டுக்களிலே இலக்கணப் பிழைகள் இருந்தபோதிலும் கவிதா ரஸம் அமைந்திருப்பது காண்கிறோம். இந்த நாடகப் பாட்டுக்கள் வெறும் பாமரமாக இருப்பதுடன் கவிதா ருசி அணுகூடக் கலக்காமல் பெரிய பீடையாக ஏற்பட்டிருக்கின்றன. மேலும் தமிழ்ப் பாஷையின் இயல்புக்குப் பொருந்தாத மெட்டுக்களில் நாடகக் காரருக்கு எப்படியோ பிரியமுண்டாகி யிருக்கிறது. "இதற்கெல்லாம் விமோசனம் என்ன?" என்று ஒரு தமிழ்க் கவிஞரிடம் கேள்வி போடப்பட்டது. அதற்கு அவர் சொல்லிய மறு மொழியை இங்கெழுதுகிறேன்.

"இந்த விஷயத்தில் நாடகக்காரரைக் குற்றஞ் சொல்வது நியாயமில்லை. பெரும்பாலும் நமது நாட்டில் ஏழை வாலிபர்கள் ஸங்கீதத்திலும் உல்லாஸத்திலும் பிரியமுடையவர்களாக இருக்கும்போது

ஜீவனத்துக்காகவும், சில சமயங்களில் உல்லாஸத்தின் பொருட்டாகவும் நாடகங்களிலே சேர்கிறார்கள். இவர்களுக்கு ஏராளமான பாட்டு வேண்டியிருக்கிறது. பழைய மெட்டுக்களும், அர்த்தம் தெரியாத கடுஞ் சொற்களும் இவர்களுக்கு அவசியமில்லை. 'தமிழ்ப் புலவர்'களிடம் போனால் நிகண்டுக்குக்கூட அர்த்தம் தட்டும்படியான வார்த்தைகள் எழுதிக் கொடுப்பார்கள். ஸாமான்ய பாஷையில் எழுதும் தொழில் புலவர்களுக்குத் தெரியாது; பெரும்பாலும் இவர்களுக்கு ஸங்கீதமும் தெரியாது.

"தீவிரமான தாள கதியும், மதுரமான இசையும் உடையதாய் நர்த்தனத்திற்கு உதவக் கூடிய பாட்டுக்கள் நாடகக்காரர்களுக்கு வேண்டும்.

"தவிரவும், தமிழ் சங்கீதம் பல வருஷங்களாகப் புதுமையும் உல்லாஸமும் இழந்து சோர்ந்து கிடக்கிறபடியால், நாடகக்காரரும் நாடகம் பார்க்கும் பொது ஜனங்களும், ஹிந்துஸ்தானி, பார்ஸி மெட்டுக்களையே விரும்புகிறார்கள். ஆகவே இப்படிப் பட்ட மெட்டுக்களுக்குச் சரியான பதங்கள் சேர்த்துக் கொடுப்போர் எவ்வளவு மூடர்களாக இருந்த போதிலும், அவர்களை நாடகக்காரர் ஆவலுடன் ஏற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. கவிதா ரஸங்களைப் பற்றி யோசனை செய்து கொண்டிருந்தால் அன்றன்றைக்கு நாடகம் நடக்கவேண்டுமே அதற்கென்ன செய்வது?.....புதிய கவிதை புலவர்களிடம் தோன்ற வேண்டும். புதிய மெட்டுக்கள், தமிழ்நாட்டு சங்கீத வித்வான்கள் ஏற்படுத்த வேண்டும். அப்போது தமிழ் நெறிக்கு இசையாத பார்ஸி

மெட்டுக்களும், காதைத் தொளைக்கும் பாமரமான பத வரிசைகளும் நாடகத்தை விட்டு நீங்கும்."

குறிப்பு:— பல ஆழ்ந்த கருத்துக்கள் இக்கட்டுரையிலே இடம் பெற்றிருக்கின்றன. 1916-ல் பாரதியார் வெளியிட்ட இக்கருத்துக்களில் பலவற்றை இன்று நாம் நடைமுறைக்குக் கொண்டுவந்தாலும் அவற்றுல் பெரிதும் நன்மை ஏற்படும்.

காந்தியடிகளைப் பற்றி முதல் முதலாக இக்கட்டுரையில் தான் பாரதியார் குறிப்பிடுகிறார் என்று கொள்ளலாம் என்று தோன்றுகிறது. அவரைப் பற்றிப் பாடியுள்ள மஹாத்மா காந்தி பஞ்சகம் என்ற அழகிய பாடல் பிற்காலத்திலே பாடப்பெற்றது. அந்தக் காலத்திலே அவர் மஹாத்மா என்று போற்றப்படவில்லை; அன்று அவர் வெறும் ஸ்ரீமான் காந்திதான்.

தாய் மொழியின் மூலமாகவே சகல சாஸ்திரங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும்; அதுதான் உண்மையான கல்வி பரவுவதற்கு வழி என்பதைப் பாரதியார் அன்றே கூறியிருப்பதை இன்றுகூட நம்மவர்களிற் பெரும்பாலோர் உணர்ந்து கொள்ளாமலிருக்கிறார்கள்.

நாடகப் பாட்டு விஷயமாக அன்றிருந்த பிரச்சினை இன்றும் இருக்கின்றது. ஆனல் பெயர் மட்டும் மாறிவிட்டது. அதை இன்று சினிமாப்பாட்டு என்று கூறுகிறோம். பிரச்சினை ஒன்றே தான். இதுபற்றிப் பாரதியாருடைய கருத்துக்களை எல்லோரும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். முக்கியமாக சங்கீத வித்வான்கள் இதை நன்கு மனத்திற்கொண்டு கச்சேரிகளிலேயும், ரேடியோவிலும், பிற இடங்களிலும் திருப்பித் திருப்பி ஒரு பத்துப் பன்னிரண்டு பாட்டுக்களையே பாடிக்கொண்டிருக்காமல் புதுப் பாடல்களைப் பாடவேண்டும்; மக்களுக்குப் புரியும்படியாகவும் அவர்களுடைய உள்ளத்திலே சுலபத்தில் உணர்ச்சிகளை எழுப்ப உதவும்படியான தாய் மொழியிலும் பாடவேண்டும்.

புதிய உயிர்

17 மார்ச் 1916 ராகூஸ பங்குனி 5

"இவ்வுலகத்தில் மனிதனுக்கு ஏற்படக் கூடிய வலிமைகளை யெல்லாம் நான் எனக்கு உண்டாக்கிக் கொள்வேன். மனிதனுக்கு வசப்படக் கூடிய செல்வங்களை யெல்லாம் எனக்கு வசமாக்கிக் கொள் வேன்; மனிதனுக்கு விளையக் கூடிய அறிவுகளை யெல்லாம் என்னிடம் விளைவித்துக் கொள்வேன். மனிதனுக்குக் கிடைக்கக் கூடிய இன்பங்களை யெல் லாம் நான் தேடி யனுபவிப்பேன்; ஸர்வ சக்தி பெறுவேன்"

என்று மனத்திலே ஒரு நிச்சயம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மாக்ஷமை பெறுவதற்குத் தீராத விருப்பமும் துணிவுமே வழி. வேறுவழி யில்லை. ஒருவன் தெய்வ பக்தியுள்ளவனாக யிருந் தாலும் அல்லது நாஸ்திகனாக இருந்தாலும் இந்த வழியை அனுசரிக்கலாம். நாஸ்திகன் அறியக் கடவது யாதெனில்;

இவ்வுலகம் நமது தாய் என்பது.

"உலகம் என்னிடம் பகைமை யுடைய வஸ்து வில்லை. உலக வனத்தில் நான் ஒரு மலர்.....உலகம் என் அறிவுக்கு வசப்படுவதை அனுபவத்திலே கண்டிருக்கிறேன். உலகம் என்னிடம் அன்பு பூண்டது". இந்தச் செய்தியை ஸாமான்ய

மதியுடைய எவனும் தன் உள்ளத்திலே பதியச் செய்து கொள்ளுதல் சிரமமில்லை. உலகம் நமக்குப் பிரதிகூலமாக இருந்தால், இங்கே மூன்று க்ஷணங்கள் கூட உயிருடன் வாழ முடியாது; "ஆனால், உலகம் நமக்கு நோய் உண்டாக்குகிறதே. இறுதியில் நம்மைக் கொன்றுவிடுகிறதே; இதை நம்மிடம் அன்பு பூண்டதாக எங்ஙனம் சொல்லலாம்?" என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம்.

உலகம் நம்முடைய தாய். அது நமக்குத் துன்பங்கள் விளைவிக்கும்போது நமக்குப் பாடங்கள் கற்றுக் கொடுக்கிறது. மூடக் குழந்தையைத் தாய் அடிப்பது போலவும், கட்டி புறப்பட்ட சதையை ரண வைத்தியன் அறுத்தெறிவது போலவும், உலகம் நம்மைத் துன்பப்படுத்துகிறது. பெருந் துன்பமடைந்து அதனால் பரிசுத்த நிலை பெற்ற மேதாவிகள் எல்லோரும் இவ்வுண்மையைக் கண்டு கூறியிருக்கிறார்கள். திருஷ்டாந்தமாக, ஏழைத் தனம் பெரிய துன்பங்களிலே ஒன்றென்பது மனித ஜாதியின் பொது அநுபவம். எனினும் இதைக் குறித்து விக்டர் ஹ்யூகோ என்ற பிரான்ஸ் தேசத்து ஞானியொருவர் பேசும் போது, "வறுமைத்தீயிலே ஸத்தில்லாத மனிதர் அழிந்து போகிறார்கள். ஸத்துடையவர்கள் பத்தரை மாற்றுத் தங்கம் போல் தேறிச் சுடர் வீசி மாண்பு பெறுகிறார்கள்" என்று குறிப்பிடுகிறார்.

நோயிலே செத்தவன் போக, அதிலிருந்து நன்றாகத் தேறியெழுந்தவன் அறிவிருந்தால் முன்னைக் காட்டிலும் தான் அதிக சுகநிலையில் இருப்பதை

உணர்ந்து கொள்வான். வெளிப்படையாகத் தோன்றும் நோய்க் குறிகள் எல்லாம் உடலுக்குள் இருக்கும் விஷத்தை வெளியேற்றிச் சுகந்தரும் பொருட்டாக இயற்கையால் செய்யப்படும் உபாயங்களே யாகுமென்று சிறந்த வைத்தியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஸூக்ஷ்ம ஞானத்திலே நாட்டமில்லாத ஐரோப்பிய 'ஸயன்ஸ்'காரர்கூட அடியிலே பூச்சி நிலையிலிருந்து உயிர் மேன் மேலும் படிப் படியாக ஏறி மனித நிலை பெற்றிருப்பதை நோக்கும் போது உயிர்களை மேன்மைப் படுத்த வேண்டும் என்பதே இயற்கையின் உட்கருத்தென்பது தெளிவாகிற தென்று சொல்லுகிறார்கள். ஜந்துக்கள் செய்யும் போராட்டங்களும், அவைபடும் துன்பங்களும் அவற்றின் உயர்வுக்காகவே ஏற்படுத்தப் படுகின்றன என்பதையும் அங்கீகாரம் செய்து கொள்கிறார்கள். இங்ஙனம் நம்மை உயர்வுறச் செய்ய வேண்டும் என்ற நோக்க முடைய இயற்கைக்கு நாமும் அறிவுத் துணிவிலே உதவிபுரிவோ மாலில், அவ்வுயர்வு விரைவிலே கைகூடும்.

வீணாக அஞ்சுவதிலே பயனில்லை. இவ்வுலகம் நம்மிடம் கருணையுடையது என்பதை நாஸ்திகரும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஒப்புக் கொண்டால் அவர்களுக்கு நல்லது.

தெய்வ பக்தி யுடையோர்

இனி, தெய்வ பக்தி யிருப்பதாக வாயிலாலே சொல்லிக் கொண்டு, வெள்ளிக் கிழமை தோறும்

கோயிலுக்கு அபிஷேகம் பண்ணி வைப்பவர் களிலேயும் பெரும் பான்மையோர் உண்மையான பக்தி கொண்டவரில்லை. தெய்வ பக்தி உண்மையா பொய்யா என்பதை அறிந்து கொள்ள ஒரு சுலப மான வழியிருக்கிறது. தீராத தைரியம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். எதற்கும் அஞ்சாத தைரியமே உண்மையான தெய்வ பக்திக்கு லக்ஷணம். அஃதில்லாத பக்தி தேங்காய்க்கும் சர்க்கரைப் பொங்கலுக்கும் வீண் செலவு.

தெய்வம் உண்டா?

தெய்வம் உண்டென்று நீ நம்புகிறாயா? உண் டானால் அது சர்வ சக்தியுடையது. அது என்னைப் படைத்தது. நானாக என்னை உண்டாக்கிக் கொள்ள வில்லை. அது என்னைக் காக்கின்றது. எனது செய்கையாலே நான் உயிர் பிறக்கவில்லை. அதையே சரணடைவேன். இனி எதற்கும் பயமில்லை. அதை நான் பரிபூர்ணமாகச் சரணடைந்தால் அதன் சக்திகளெல்லாம் என்னிடத்திலே தோன்றும். 'மேருவைச் சார்ந்த காக்கையும் பொன்னிறமடை யும்.' அதனால் அமரத் தன்மை பெறுவேன். இவ்விதமாக ஒருவன் மனத்தை உறுதி செய்து கொண்ட பிறகு அவ்வுறுதிக்கு இணங்கும்படி தன் செய்கைகளை யெல்லாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.

அடிப்படை

முதலாவது, நோய் தீர்த்துக் கொள்ள வேண்டும். நோயுள்ள உடம்பு பயனில்லை. நோயை ஒருவன்

தனது மனை பலத்தாலே நீக்கி விடலாம். நல்ல காற்று, நல்ல நீர், ஒளி, வெயில், இவற்றிலே உடம்பு பழகவேண்டும். நாள்தோறும் ஏதேனும் ஓர் காரியத்திலே உடல் வெயர்க்கும்படி உழைக்க வேண்டும். இது புதிய உயிர் கட்டுவதற்கு அடிப் படை.

உணவு

இரண்டாவது, நல்ல உணவு தேடி உண்ண வேண்டும். சுத்தமாகவும் ருசியாகவும் வயிறு நிறைய உணவு கொள்ள வேண்டும். "மிகினும் குறையினும் நோய் செய்யும்." நமது தேசத்து ஜனங்களுக்கு உணவைக் குறைக்கும்படி உபதேசஞ் செய்தல் அவசியமில்லை. உணவுமிகுதி யால் நோய்ப்படும் கூட்டத்தார், நமது தேசத்தி லில்லை. உணவுக்குறைதான் இங்கே யிருக்கும் ஸங்கடம். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்ற ஆங்கில சாஸ்திரி கல்வியைப் பற்றி ஒரு நூல் எழுதியிருக கிறார். அதிலே குழந்தைகளுக்கு ஊண் மிகுதியால் உண்டாகும் நோய்களைக் காட்டிலும் ஊண்குறை வால் உண்டாகும் நோய்களே மிகவும் கொடியன என்று சொல்லுகிறார். ஊண்மிகுதிக்கு இயற்கை யிலே மாற்றுண்டு. ஊண்குறைவுக்கு மரணந்தான் மாற்று. "உண்டவன் உரஞ்செய்வான்." பரிசுத்த மான உணவுகளை நிறைய உண்ணுதல் வேண்டும். இனிய பழங்கள் நாள்தோறும் உண்ணத்தக்கன. உணவுக்குப் பணம் எந்த உபாயத்தாலேனும் தேடிக் கொள்ளவேண்டும். தேகத்திலே உழைப்பும் மனத்திலே தைரியமும் இருந்தால் பணந்தேடுவது

கஷ்டமில்லை. சோம்பேறியாக ஒருவன் நிறையப் பணத்தைக் குவித்து வைத்துக் கொண்டு அக்கம் பக்கத்து ஜனங்கள் பட்டினி கிடந்து சாவதைப் பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் கொடிய பாவம்.

செல்வர் கடமை

நமது நாட்டுச் செல்வர்கள் இவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டும். உன் சொத்தை எல்லாருக்கும் பங்கிட்டுக் கொடுத்து விட்டு, நீ ஏழையாக வேண்டு மென்று நான் சொல்லவில்லை. கைத்தொழில்களும் வியாபாரங்களும் ஏற்படுத்தி அக்கம் பக்கத்தாரிடம் சரியானபடி வேலை வாங்கிக் கொண்டு சரியானபடி கூலிகொடு. உனக்கும் நல்ல லாபம் கிடைக்கும். கூலி குறையக் கொடுக்கும் முதலாளி லக்ஷ்மிதேவி யைக் காலால் உதைக்கிறான். அவன் மகன் தரித் திரத்திலும் நோயிலும் வருந்துவான் ஸகல ஜனங் களுக்கும் வயிறு நிறைய உணவு கிடைக்காத ஊரில் வாழும் செல்வர்களெல்லாம் திருடர். அங்கே குருக்க ளெல்லாம் பொய்யர். பண்டிதரெல்லாம் மூடர். மேன்மை நிலைபெற வேண்டுமானால் கைத்தொழில் கள் பெருகும்படி செய்ய வேண்டும். சாத்தியமில்லை யென்று சொல்லி ஏங்குவதிலே பயனில்லை. எப் படியேனும், எப்படியேனும், எப்படியேனும் செல் வத்தை வளர்க்க வேண்டும். நிச்சயம் மற்றொரு முறை சொல்லுகிறேன்.

உல்லாஸ சபை

காளிதாஸன்

29 மார்ச் 1916 ராக்ஷஸ பங்குனி 17

[ராக்ஷஸ வருஷம் பங்குனி மாதம் 10-ந் தேதி புதன்கிழமை யன்று மாலே வேதபுரம் உல்லாஸ சபையில் நடந்த செய்தி.]

சபைக்கு வந்திருந்த பேர்:—

(1) ஜிந்தாமியான் ஸேட் (2) வெங்கட்டராவ் (3) குண்டு ராயர் (4) குமாரசாமி வாத்தியார் (5) எலிக்குஞ்சு செட்டியார் (6) காளிதாஸன் (7) மண வாளன் செட்டியார்.

வராத பேர்:—கோமதி நாயகம் பிள்ளை, மாரப்ப முதலியார்.

எலிக்குஞ்சு செட்டியார்:—இன்று சபாநாயகராக இருக்கும்படி காளிதாஸரை வேண்டுகிறேன்.

காளிதாஸன்:—எனக்குச் சம்மதமில்லை. வெங்கட் ராவைப் போடுங்கள்.

எலிக்குஞ்சு செட்டியார்:—காளிதாஸரே சபாநாயக ராக வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜிந்தாமியான் சேட்:—எனக்கு அதுவே சம்மதம்.

குமாரசாமி வாத்தியார்:—எனக்கும் அப்படியே.

சபையாரின் பொது வேண்டுகோளின்படி காளிதாஸன் அக்கிராசனம் வஹித்தார்.

எலிக்குஞ்சு செட்டியார்:—சபாநாயகரே, விவகாரம் ஆரம்பிக்கலாமா?

சபாநாயகர்:—அப்படியே செய்யலாம்.

எலிக்குஞ்சு செட்டியார்:—இந்தக் காளிதாஸரை நமது சபையைவிட்டு நீக்கிவிடவேண்டு மென்று நான் விரும்புகிறேன். இதைச் சபையார் அங்கீகாரம் செய்ய வேண்டும்.

குமாரசாமி வாத்தியார்:—ஏன் காணும், செட்டியாரே என்ன காரணம்?

ஜிந்தாமியான் சேட்:—செட்டியார் மனத்தில் இந்தக் கருத்திருக்கும்போது அவர் காளிதாஸரை இன்று சபாநாயகராக இருக்கும்படி கேட்டது கேலிதானே? நமது சபையில் இப்படி நாணயக் குறைவான கேலிகள் செய்வதைப் பார்த்தால் எனக்கு அரு வருப்புண்டாகிறது.

எலிக்குஞ்சு செட்டியார்:—நாணயக் குறைவா? யாருக் குக் காணும் நாணயக் குறைவு? சாஹப், உம்மு டைய மஹம்மதிய குணங்களை நம்மிடம் காட்ட வேண்டாம் தெரியுமா?

ஜிந்தாமியான் சேட்:-செட்டியாரே, அதிக வார்த்தை பேசிவிட்டீர். ஒரு தரம் பொறுத்தேன். ஹோஷ் யார்! (ஜாக்ரதை!)

எலிக்குஞ்சு செட்டியார்:—என்ன ஸாஹப், தாடியை உருவுகிறீரே, அடித்துப் போடுவீரோ?

ஜிந்தாமியான் சேட்:—ஹோஷ்யார்!

எலிக்குஞ்சு செட்டியார்:—நம்முடைய கடையிலே உம் மைப் போலவே நாலு முரடர் வேலைக்கு வைத்திருக் கிறேன். ஞாபகமிருக்கட்டும்.

ஜிந்தாமியான் சேட்:—ஹோஷ்யார்! ஹோஷ்யார்!

எலிக்குஞ்சு செட்டியார்:—என்ன காணும், வெகு பய முறுத்துகிறீரே. யாரென்று நினைத்தீர் நம்மை? (என்று சொல்லிக் கொண்டு எலிக்குஞ்சு செட்டியார் எழுந்து நின்று கையை ஒங்கினார்.)

சபையார் கலீரென்று சிரித்தார்கள். ஏனென்றால், எலிக்குஞ்சு செட்டியார் $4\frac{3}{4}$ அடி உயரம். ஜிந்தாமியான் ஸேட் $6\frac{3}{4}$ அடி உயரம். செட்டியார் $1\frac{1}{4}$ அடி அகலம். ஸேட் $3\frac{1}{4}$ அடி அகலம். செட்டியாருக்கு வயது 55. ஸேட்டுக்கு வயது 33.

இந்தச் சமயத்தில் காளிதாஸன் எழுந்து "உல்லாஸத்திற்கு ஒரு அளவிருக்கவேணும். வரை கடந்து போகலாகாது. செட்டியாரே உட்காரும்,.... என்னைச் சபையிலிருந்து நீக்க வேண்டும் என்று பிரேரணை செய்தீர். முகாந்தரங்கள் சொல்லும்" என்றார்.

குமாரசாமி வாத்தியார்:—ஆமாம், காரணம் சொல்லும் காரணம்

எலிக்குஞ்சு செட்டியார்:—நமது சபையின் காரியங்களை வாரந்தோறும் சென்னப்பட்டணத்துப் பத்திரிகையில் பிரசுரம் செய்யும்படி நாம் காளிதாஸரை நியமித்தோம். அதன்படியே அவர் முதலாவது கூட்டத்து விவஹாரங்களைச் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு எழுதினர். அதற்கப்பால், நடந்த கூட்டங்களில் ஒன்றைப்பற்றியேனும் எழுதவில்லை. இன்று நடப்பது ஆறுவது அல்லது ஏழாவது கூட்டமென்று நினைக்கிறேன். இவர் இத்தனை அஜாக்கிரதையுடன் நமது சபையாருக்கு வாக்குத் தவறியது பற்றி

இவரை நீக்கிவிட வேண்டுமென்று சொல்லுகிறேன்.

காளிதாஸன்:—சபையார் என்னை மன்னிக்கவேண்டும். நமது சபை விவகாரங்கள் ரஸமாக இருக்கும் சமயங்களில் பத்திரிகைக்கு எழுதலாம். அப்படி விசேஷமொன்றும் சென்ற கூட்டங்களில் நடக்கவில்லை. ஆகையால் எழுதவில்லை.

எலிக்குஞ்சு செட்டியார்:—ரஸம், ரஸமில்லை. அதெல்லாம் நீர் சொல்ல வேண்டிய அவசியமில்லை. சபையில் நடக்கும் விஷயங்களை நீர் அப்படியே எழுதிவிட வேண்டும். பத்திரிகைக்காரர் போடாவிட்டால் நீர் ஜவாப்தாரி இல்லை.

(இங்ஙனம் சிறிது நேரம் வாதங்கள் நடந்தபின் கடைசியாக சபையார் செய்த முடிவு:—காளிதாஸரை நீக்கிவிட வேண்டுமென்று செட்டியார் சொல்லியது பிழை. சபையில் என்ன நடந்த போதிலும் அதை அப்படியே காளிதாஸர் பத்திரிகைக்கு எழுதி விடவேண்டும். கொஞ்சங்கூட ரசமில்லாத வார்த்தைகள் ஒரு கூட்டத்தில் பேசப்பட்டதாகக் காளிதாஸருக்குத் தோன்றுமானால் அவர் சபையாரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு எழுதாமலிருக்கலாம்).

குமாரசாமி வாத்தியார்:—மேலே விசாரணைகள் செய்வோம்.

குண்டு ராவ்:—பெல்ஜியம் தேசத்திலே எமீல் வெர் ஹேரன் (Emile Verhaeren) என்று ஒரு கவி இருக்கிறார். அவருடைய கவிதை புது வழியாக

இருக்கிறதென்று ஒரு பத்திரிகையில் வாசித்தேன். எப்படியென்றால், இதுவரை உலகத்துக் கவிகள் நமது நவீன நகரங்களிலேயுள்ள யந்திர ஆலைகள், மோட்டார் வண்டிகள் முதலிய வஸ்துக்களைத் தமது கவிதையிலே சேர்ப்பதில்லை. இந்த வஸ்துக்களிலே அழகில்லையாதலால் கவிதையிலே சேர்க்கத் தகாதன என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். வானம், காற்று, நீர், வனம், மலை, பெண், செல்வம், மது, தெய்வம், தவம், குழந்தை முதலிய அழகுடைய வஸ்துக்களையே கவிகள் வர்ணிப்பது வழக்கம். எமீல் வெர் ஹேரன் என்பவருடைய கொள்கையாதென்றால்: — "வலிமையே அழகு. ஒரு பொருளின் வெளியுருவத்தைப் பார்த்து அது அழகா இல்லையா என்று தீர்மானம் செய்யலாகாது. யந்திரங்களிலே வலிமை நிகழ்கின்றது. ஆதலால் அவை அழகுடையன. அவற்றைக் கவி புகழ்ச்சி செய்தல் தகும்.

காளிதாஸன்:—வலிமை ஓர் அழகு. அழகு ஒரு வலிமை. யந்திர ஆலை, நீராவி வண்டி, நீராவிக் கப்பல், வானத்தேர், பெரிய பீரங்கி எல்லாம் அழகுதான். உயர்ந்த கவிகள் வலிமையுடைய பொருள்களை அவ்வக் காலத்தில் வழங்கிய வரையிலே வர்ணனை செய்துதான் இருக்கிறார்கள். இதிலே புதுமையொன்றுமில்லை. வலிமைக் கருவிகள் இப்போது சில புதுமையாகத் தோன்றியிருக்கின்றன. இவற்றை ஐரோப்பியக் கவிகள் விலக்கி வைத்தது பிழை. ஆனால் பழைய தெய்வத்தையும், இயற்கையையும் மறந்து யந்திரங்களைப் பாடத் தொடங்கினால் விதை செத்துப் போய்விடும்.

எலிக்குஞ்சு செட்டியார்:—அது கிடக்கட்டும். நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதை ஆலோசனை பண்ணுங்கள். காக்கைக்கு 100 வயதென்று சொல்லுகிறார்கள். அது வாஸ்தவமானல், தெய்வத்துக்குப் புத்தியில்லை யென்று நான் சொல்லுகிறேன். காக்கைக்கும் 100 வயது, மனிதனுக்கும் 100 வயதா? அதிலேகூட மனிதனைவிடக் காக்கையின் வயது கொஞ்சம் அதிக நிச்சயமாகத் தோன்றுகிறது. இதென்ன படைப்பு?

குமாரசாமி வாத்தியார்:—எலிக்குஞ்சு செட்டியாரே, உமக்கு இப்போது வயசு 55 ஆகிறது. இதனல் என்ன பிரயோஜனம்? காக்கை ஊரிலுள்ள அசுத்தங்களை யெல்லாம் நீக்கி இயன்றவரை வியாதிகளைக் குறைத்து மனிதருக்கும் மற்ற ஜந்துக்களுக்கும் நன்மை செய்கிறது. நீர் பை, பையாகப் பணத்தை உள்ளே போட்டு மூடி வைத்திருக்கிறீர். போன மாதம் ஒரு அவஸரத்துக்காக 50 ரூபாய் கடன் கேட்டேன். பொய் முகாந்தரம் சொல்லி மழுப்பி விட்டீர். உம்மால் யாருக்கென்ன பிரயோஜனம்?

எலிக்குஞ்சு செட்டியார்:—உம்மாலே உலகத்துக்கு என்ன நன்மை காணும், குமாரஸாமி வாத்தியாரே? அதை முதலாவது சொல்லும்.....

இப்படி வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கும் போது, எலிக்குஞ்சு செட்டியார் வீட்டு வேலைக் காரன் ஒருவன் வாயில் நுரை தள்ளும்படி ஓடி வந்து, "ஐயா, நம்ம வீட்டு வைக்கோல் போரிலே நெருப்புப் பற்றிக் கொண்டு எரிகிறது" என்று சொன்னன்.

"நெருப்பா?" என்று செட்டியார் உடனே எழுந்து ஓடினார். சபையைக் கலைத்துவிட்டு நாங்க ளெல்லோரும் செட்டியாருக்கு உதவி செய்யம் பொருட்டு அவர் வீட்டுக்குப் போனோம். அங்கே போய்ப் பார்க்கும்போது.....அது மற்றொரு நாட் கதை. இன்று கதை இத்துடன் முடிகிறது.

குறிப்பு:—பாரதியாரின் நகைச் சுவையையும், நேருக்கு நேர் பேசுவது போன்ற உயிருள்ள வசன நடையையும் இம்மாதிரி யான கட்டுரைகளிலே நன்கு காணலாம்.

எலிக்குஞ்சு செட்டியார், விளக்கெண்ணெய் செட்டியார், வெல்லச்சு செட்டியார், பிரமராய ஐயர் எல்லாம் பாரதியார் தமது புதுவை நண்பருக்குக் கொடுத்த செல்வப் பெயர்கள்.

தமிழ்

சி. சுப்ரமணிய பாரதி

3 ஏபரில் 1916 ராக்ஷஸ பங்குனி 22

கல்கத்தாவிலிருந்து வெளிப்படும் 'மாடன் ரெவ்யூ' என்ற மாதப் பத்திரிகையின் தை—மாசி ஸஞ்சிகையை நேற்றுப் பொழுது போக்கின் பொருட்டாகத் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதிலே திருநெல்வேலி ஹிந்து காலேஜ் சரித்திர பண்டிதர் ஸ்ரீ நீலகண்டையர் ஒரு சிறிய கடிதமெழுதியிருக்கிறார். ஏற்கனவே மேற்படி பத்திரிகையில் ஸ்ரீயதுநாத ஸர்க்கார் என்ற வித்வான் எழுதியிருந்த சில வார்த்தைகளைக் குறித்து ஸ்ரீ ஐயர் தமது கருத்துக்களை வெளியிடுகிறார்.

கலாசாலையிலே சரித்திரப் பாடங்களை இங்கிலீஷில் கற்றுக் கொடுப்பது பயனில்லாத வீண் தொல்லையாக முடிகிறதென்றும் தேச பாஷைகளிலே கற்றுக் கொடுத்தால் நல்ல பயன் விளையுமென்றும் ஸ்ரீ ஸர்க்கார் தமது அனுபவத்திலே கண்ட செய்தியைச் சொன்னார். அதற்கு நமது திருநெல்வேலிப் பண்டிதர் சொல்கிறார்:- "பாஷைத் தொல்லை பெருந் தொல்லையாகவே இருக்கிறது. ஆனால் எனது ஜில்லா, எனது காலேஜ் சம்பந்தப் பட்ட வரையிலே பிள்ளைகளுக்குச் சரித்திரப் பாடம் இங்கிலீஷிலே கற்றுக்கொடுப்பதைக் காட்டிலும்

தேச பாஷையில் கற்றுக் கொடுப்பது அதிக பயன் படுமென்று சொல்வதற்கில்லை. எனது மாணாக்கர் களிலே பெரும்பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும் வழக்குப் பிழைகளும் நிறையச் செய்த போதிலும் மொத்தத்திலே தமிழைக் காட்டிலும் இங்கிலீஷை நன்றாக எழுதுகிறார்கள். சரித்திர விஷயங்களை வியவஹரிக்கும்போது எனக்கும் இங்கிலீஷ்தான் தமிழைக் காட்டிலும் நன்றாகச் சொல்ல வருகிறது.''

இங்ஙனம் எழுதுகிற ஸ்ரீ நீலகண்டையரின் நிலைமையை நினைத்து நான் மிகவும் வருத்தப் படுகிறேன். சொந்த பாஷையை நேரே பேசத் தெரி யாதவர்கள் சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோ தத்தை இந்தத் தேசத்திலேதான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!!

மேலும் இவர் தமக்குத் தாய் மொழி தெரியா தென்ற செய்தியை வங்கப் பத்திரிகைக்கு ஏன் எழுதப் போனார் என்பது எனக்கு அர்த்தமாக வில்லை. ஜப்பானியர், சீனர், நார்வேக்காரர், ஸ்விஸ் ஜாதியார், இத்தாலி தேசத்தார், ஹாலந்துக் காரர் முதலிய உலகத்து ஜாதியாரெல்லாம் நம்மை அறிவிலும் சாஸ்திரங்களிலும் பாஷைத் திறமையி லும் தாழ்வென்று நினைத்து வந்தார்கள். இப் போது தான் ஹிந்து ஜாதியாராகிய நாம் காட்டு மனிதரில்லை, வாலில்லாத குரங்குகளில்லை, நமக்குப் பாஷைகள் இருக்கின்றன; நமக்குள்ளே சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கிறார்கள்; கவிகள் இருக் கிறார்கள் என்று நம்மவரிலே சிலர் வெளியுலகத்

தார் தெரிந்துகொள்ளும்படி செய்து வருகிறார்கள். இதற்குள்ளே தமிழ் வகுப்பு மற்ற ஹிந்துஸ்தானத்து வகுப்புக்களைக் காட்டிலும் குறைவுபட்ட தென்று நம்மிலே சிலர் முரசடிக்கத் தொடங்குவது எனக்கு நகைப்புண்டாக்குகிறது.

என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் சொல்லிவிடுகிறேன்.

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம் போல் விளங்குகிறோம் எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப் போல வலிமையும், திறமையும். உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப் போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அதுவரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச் சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக் கொண்டு வெறுமே இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள்

சொல்லாதிருக்க வேண்டும். இவ்வளவுதான் என் னுடைய வேண்டுகோள்.

குறிப்பு:—பாரதியாரின் அளவு கடந்த தாய் மொழிப் பக்திக்கு இக்கட்டுரை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தாழ்வு மனப்பான்மை யுற்றுச் சோர்ந்து கிடந்த தமிழரைப் பாரதியார் இது போன்ற வசனங்களாலும், "யாமறிந்த மொழிகளிலே" என்று தொடங்கு வது போன்ற பல பாடல்களாலும் தலை நிமிர்ந்து நிற்கச் செய்த தோடு தமிழினிடத்தே மிகுந்த பற்றும் பெருமையும் கொள்ளு மாறு செய்தார்.

பெண்கள் சர்வகலா சங்கம்

சக்திதாஸன்

26 ஏப்ரில் 1916 நள சித்திரை 14

நமது தேசத்தில் இப்போது புதிதாக யோசனை செய்யப்படும் காரியங்களில் பூனாவில் ஸ்ரீ கார்வே என்பவர் ஏற்படுத்தப் போகிற ஸ்திரீகளின் சர்வ கலா சங்கம் பிரதான வகுப்பைச் சேர்ந்தது. இந்த முயற்சிக்குச் சர்க்காரின் உதவி கிடைத்தால் அதனை ஸ்ரீ கார்வே மிகவும் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்ளக் காத்திருக்கிறார். அவ்வுதவி பின்னிட்டுத்தான் கிடைக்குமென்றால் அதுவரை தமது காரியத்தை இவர் நிறுத்திவைக்கப் போகிறதில்லை. ஜனங்களின் சஹாயத்தை மாத்திரமே வைத்துக் கொண்டு இந்தச் சர்வகலாசங்கத்தை ஸ்தாபனம் செய்து விடலாமென்ற நம்பிக்கை இவருடைய மனத்தில் பரிபூரணமாக ஏறியிருக்கிறது. ஆனால் இவர் ஒரு விஷயத்தை முன்யோசனை யில்லாமல் தொடங்கிப் பின்னிட்டு அதன் கஷ்டங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் இடைமுறிந்து போகும் தன்மையுடையவரல்ல. தம்மால் நிர்வகிக்க முடியாத காரியத்தைப் படபடத்த விருப்பத்தாலே கைக கொள்ளக் கூடியவரல்ல. இவர் ஒன்றைத் தொடங்கி னால் அக்காரியம் தெய்வங்கள் எதிர்த்து நாசஞ் செய்தாலொழிய மனிதர் எதிர்ப்பினாலே நின்று

போய்விடாது. முதிர்ந்த அறிவு, வயது, அநுபவம் இவற்றினால் காரியசித்திக்குத் தகுதி பெற்றவர். வீண் படாடோபமும் ஆடம்பரமும் இல்லாதவர். உண்மையான தேசாபிமானி. அகாதைக் கைம் பெண்களுக்கு இவர் செய்திருக்கும் நிலையான உபகாரம் நம்மவர்களால் மறக்கக் கூடியதன்று.

ஸ்திரீகளுக்கென்று தனியான யூனிவர்சிடி இதற்கு முன் பூமண்டலத்திலேயே இரண்டுதான் இருக்கின்றன. ஜெர்மனியில் லேப்ஜிக் பட்டணத்திலே ஒன்றிருக்கிறது. ஜப்பானில் ஒன்றேறற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே இந்தக் காரியத்தை முதலாவது ஸ்ரீ கார்வேதான் ஆரம்பம் செய்தார்.

ஒரு காரியத்தைத் தொடங்குவோன் அதன் சம்பந்தமான விஷய நுட்பங்கள் தெரிந்தவனாகவும் விடாமுயற்சி யுடையவனாகவும் இருந்தால் அந்தக் காரியம் எப்படியும் கைகூடிவிடும். பொதுவாக எல்லா தேசங்களிலும் அதிக நற்காரியங்கள் பணமில்லாமல் முறிந்து போவது வழக்கம். அதிலும் நமது தேசம் உலக முழுவதிலுமுள்ள எல்லா காடுகளைக்காட்டிலும் இப்போது அதிக ஏழைமைகொண்டிருப்பதால் இங்கே பணமில்லாமல் உடைந்து போன காரியங்களுக்கு அளவில்லை. இருந்தபோதிலும் தர்மசீலர் இதைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். அறிவும் மன உறுதியும் சேர்ந்தால் வானத்தை வெல்லலாம். லௌகிக காரியங்கள் சாதிப்பது எம்மாத்திரம்? ஸ்ரீ கார்வேயின் பிரயத்தனத்திற்குப் பணம் போதுமான வரை சேர்ந்து

கொண்டுதான் வருகிறது. பூனாவிலே ஒருவர் தமது வீட்டை விற்று 10,000 ரூபாய் கொடுத்ததாகத் தெரிகிறது. ஸ்ரீ கார்வே ஏற்படுத்தப்போகிற சர்வகலா சங்கத்தில் தேசபாஷைகளின் மூலமாகவே சகல சாஸ்திரங்களும் கற்றுக் கொடுக்கப்படும். இவருடைய சர்வகலாசங்கம் ஸ்தாபனமாகிப் பத்து வருஷம் நடக்குமாஞல் அதுவரை நம் நாட்டு ஆண் பள்ளிக்கூடங்களில் இங்கிலீஷ் பாஷை மூலமாகவே கல்விப் பயிற்சி நடந்து வருமாஞல் பிறகு நமது நாட்டில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் உயர்ந்த கல்வியும் அறிவுத் திறமையும் சாஸ்திரப் பழக்கமும் பெற்றிருக்கும்படி நேரிடும். அந்த நிலை ஏற்படு முன்னுகவே ஆண் பள்ளிக்கூடங்களிலும் தேசபாஷைகளின் பழக்கம் அதிகப்பட்டு விடுமென்று நம்புகிறேன்.

பாட்டு

குறிப்பு:— சக்கிதாஸன் என்ற புனை பெயரில் இத் தலைப்பிலே பாரதியார் தொடர்ச்சியாக ஆறு கட்டுரைகள் எழுதி யிருக்கிறார். இவை வெளியான தேதிகளாவன :—

1. 3 மே 1916 — ஞான சித்திரை 21
2. 4 மே 1916 — ஞான சித்திரை 22
3. 11 மே 1916 — ஞான சித்திரை 29
4. 27 மே 1916 — ஞான வைகாசி 14
5. 10 ஜூன் 1916 — ஞான வைகாசி 28
6. 19 ஜூலை 1916 — ஞான ஆடி 5

நவ ரஸங்களைப் பற்றியும் இக்காலத்துச் சங்கீதத்தைப் பற்றி யும் பல ஆழ்ந்த கருத்துக்களைப் பாரதியார் இக் கட்டுரைகளிலே தந்திருக்கிறார்.

"ரஸ ஞானமில்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடு வோர் ஸங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்து ஸங்கீத வித்வான் களிலே பலர் ஸங்கீதத்துக்கு நவரஸங்களே உயிர் என்ற செய்தியை அறியாதவர்கள்.

முத்துசாமி தீக்ஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர் முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை அதிக 'ஸங்கதி'களுடன் பாடுவோரே 'முதல்தர வித்வான்கள்.' இந்தக் கீர்த்தனங்களெல்லாம் ஸம்ஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையி லிருக்கின்றன. ஆகவே, முக்காலே மும்மாகாணி 'வித்வான்' களுக்கு அந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக் களையும் பதங்களையும் கொலை செய்தும் விழுங்கியும் பாடுகிறார் கள். அர்த்தமே தெரியாதவர்களுக்கு 'ரஸம்' தெரிய நியாய மில்லை."

* * *

"நானும் பிறந்தது முதலாக இன்றுவரை பார்த்துக் கொண்டு வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராம நீ ஸமான மெவரு', 'மரியாத காதுரா', 'வரமு லொஸகி'..... ஐயையோ, ஐயையோ, ஒரே கதை.

"எந்த 'வித்வான்' வந்தாலும் இதே கதைதான். தமிழ்நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால், திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களே வருஷக் கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தோற்காதுள்ள தேசங்களிலே இத்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்."

பாரதியார் இவ்வாறு கூறி முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. நிலைமை மட்டும் அநேகமாக அப்படியே இருக்கிறது!

பூர்வீக மகான்களுடைய பாட்டுக்களை மறந்துவிட வேண்டு மென்பது பாரதியாருடைய கட்சியல்ல. "பத்து முப்பது கீர்த் தனங்களையே ஓயாமல் பாடி ஸங்கீதத்தை ஒரு தொல்லையாகச் செய்துவிடக் கூடாது" என்பது அவர் கருத்து. தமிழிலே புதிய புதிய நல்ல பாடல்கள் உண்டாக வேண்டும்; அவை இசையரங்கு களிலே முக்கிய இடம் பெறவேண்டும் என்பதும் அவர் ஆசை.

"வித்வான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால் தமிழ் சபைகளிலே எப்போதும் அர்த்தந் தெரியாத பிற பாஷை களில் பழம் பாட்டுக்களை மீட்டு மீட்டும் சொல்லுதல் நியாய மில்லை. அதனால் நமது ஜாதி ஸங்கீத ஞானத்தை யிழந்து போகும் படி நேரிடும்."

இக் கட்டுரைகள் பாரதி நூல்கள் மூன்றும் தொகுதியில் கலைகள் என்ற பகுதியில் ஸங்கீத விஷயம், பெண்ணின் பாட்டு என்ற தலைப்புக் களுடன் வெளியாகியுள்ளன.

புதுப் பேய்

ஒரு சிறிய கதை

13 மே 1916 *கள சித்திரை* 31

காளிதாசன்

வேதபுரம் எலிக்குஞ்சு செட்டியார் மகளுக்குப் பேய் பிடித்திருக்கிறது. பெயர் காந்திமதி. பெண் நல்ல அழகு. சிவப்பு நிறம். முகத்தில் ஒரு மாசு மறு இல்லாமல் நிலாவீசும். மென்மையான பூங் கொடியைப் போல் இருப்பாள். இரண்டு மூன்று பாஷைகள் தெரியும்.

நேர்த்தியாகப் பாடுவாள். வீணை வாசிப்பாள். தினந்தோறும் வர்த்தமானப் பத்திரிகைகள் படித்து உலகத்தில் நடைபெறும் செய்திகளை வெகு நுட்பமாகத் தெரிந்துகொள்ள முயற்சி செய்வாள். யாரேனும் ஒரு மந்திரி, அல்லது ஒரு பெரிய ராஜ்ய தந்திரி, அல்லது பெரிய ஞானசார்யர், கணக்கதிகாரர் ஆகிய இவர்கள் பேசும் வார்த்தைகளுக்குள்ளே தொனித்துப் பார்த்துக் கால்மைல் தூரம் அர்த்தம் கண்டுபிடிப்பாள். உபந்நியாசம் செய்வோர் சொல்லக் கூடாதென்று மறைத்துவைக்கும் வார்த்தையைக்கூடக் கண்டுபிடித்துச் சொல்லுவாள். பெண் நல்ல புத்திசாலி.

இவளுக்குப் போன மாசம்வரையிலே ஒருகுறையும் கிடையாது. ஸாதாரணமாக இருந்தாள். திடீ

ரென்று ஒரு வெள்ளிக்கிழமை மாலை தலை சுற்றி ஆடத் தொடங்கிவிட்டாள்.

'ஹா' என்று கத்துவதும், சிரிப்பதும், பிதற்றுவதும் பெரிய அமளியாய் விட்டது. செட்டியார் என்னை வந்து கூப்பிட்டார். நான் பார்க்கப் போனேன். என்னைக் கண்டவுடன் காந்திமதி கட கட வென்று சிரித்தாள். கண்ணைப் பார்த்தால் வெறி பிடித்தவளைப்போலிருந்தது.

"காந்திமதி, உனக்கு என்ன செய்கிறதம்மா?" என்று கேட்டேன். மறுமொழியில்லை. இரண்டு மூன்றுதரம் வற்புறுத்திக கேட்டபிறகு, "ஹா, காளிதாசனா? வா வா, தூங்குகிறாயா? எழுப்பவந்தேன், காளிதாசனா? ஓஹோ; கவியெங்கே, என்மேலே பாட்டுப்பாடு நான் புதுப்பேய்..... ஆஹா வெனைஜெலோஸ், மடாதிபதி, தென் ஆப்பிரிகா, வீணை, திருச்சிலுப்பள்ளி பாட்டுப்பாடு" என்று எதெதலாமோ சொன்னாள். நான் திகைத்துப் போய்விட்டேன்.

"எப்படியிருந்த புத்தி!" என்று சொல்லி எலிக்குஞ்சு செட்டியார் கண்ணீருதிர்த்தார். "ஏனம்மா? பிதற்றுகிறாயே, உனக்கு உடம்பு என்னசெய்கிறது?" என்று மறுபடியும் கேட்டேன்.

"எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. நான் புதுப் பேய். உங்களுக்கெல்லாம் நோய் பிடித்திருக்கிறது. நான் அதை நீக்கிவிடவந்தேன். விபூதிகொண்டுவா" என்று காந்திமதி அலறத் தொடங்கினாள். எலிக்குஞ்சு செட்டியார் ஒரு பித்தளைத் தட்டிலே விபூதி கொண்டுவந்து என்கையிலே கொடுத்தார். நான்

பெரிய மந்திரவாதி என்று அவருடைய அபிப்பிராயம். ஏதாவது வியாதி சாதாரணமாக நரம்புகளைப் பற்றியதாக இருந்தால் மந்திரம் செய்து நோயாளியின் மனத்தை உறுதியாக்கி வியாதியை விரைவிலே ஒழித்துவிடலாம். பேய்க்கு மந்திரம் செய்யும் வழி எனக்குத் தெரியாது. தவிரவும் எனக்குப் பேய் பிசாசுகளில் நம்பிக்கை கிடையாது.

எதற்கும் ஒரு கை பார்க்கலாமென்று உத்தேசித்து விபூதித் தட்டைக கையிலே வாங்கிக்கொண்டேன். காந்திமதி படீரென்று பாய்ந்து என் கையிலிருந்த தட்டைப் பிடுங்கிக்கொண்டாள்.

"ஹா, ஹா, ஹா! எனக்கா விபூதி போடவந்தாய்? சும்மா இரு. அப்படியே கண்ணை மூடிக்கொள்ளு. நான் உனக்கு விபூதி போடுகிறேன். எலிக்குஞ்சு, நீயும் வா, அப்படியே உட்காரு, உனக்கும் விபூதி போடுகிறேன். இன்னும் உங்கள் கூட்டத்தையெல்லாம் அழைத்து வா. எல்லாருக்கும் விபூதி போடுகிறேன். தென் ஆப்பிரிகா ரஜூலில் முஸ்லிம் சங்கம், மதன்மோஹன் மாளவியா, திருச்சிலுப்பள்ளி பண்டார, 'டாக்டர்;' கிழநரி, சென்னப்பட்டணம், கொண்டுவா, கொண்டுவா. எல்லோருக்கும் நான் விபூதி போடுகிறேன்" என்றாள்.

எலிக்குஞ்சு செட்டியார் விம்மி விம்மி அழத் தொடங்கினர்.

"அழாதே, கோழையே, போ, வெளியே போ" என்றாள் காந்திமதி.

எலிக்குஞ்சு செட்டியார் வெளியே போய்விட்டார். அவராலே துக்கம் பொறுக்கமுடியவில்லை.

"பேய், பிசாசுகளே கிடையாது. எல்லாம் பொய்" என்று சொன்னேன். காந்திமதி சிரித்தாள்.

"பேயில்லே" என்று மறுபடி சொன்னேன்.

"புதுப் பேய்" என்றாள்.

யான்:— என்ன வேண்டும் ?

அவள்:—விளக்கு.

யான்:—என்ன விளக்கு ?

அவள்:—நெய் விளக்கு.

யான்:—என்ன நெய் ?

அவள்:—புலி நெய்.

யான்:—எங்கே கிடைக்கும் ?

அவள்:—காட்டிலே.

யான்:—எந்தக் காட்டிலே ?

அவள்:—பொதியமலைக் காட்டிலே.

எனக்குக் கோபம் வந்துவிட்டது.

"காந்திமதி, உனக்குப் புத்தி சரியில்லே. நான் மந்திரத்தால் உன்னைக் குணப்படுத்தப்போகிறேன். கொஞ்ச நேரம் பேசாமலிரு; பேசினால் இந்தப் பிரம்பாலே அடிப்பேன்" என்று பயமுறுத்தினேன். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து என் கையிலிருந்த பிரம்பைப் பிடுங்கி முறித்தெறிந்துவிட்டாள்.

பிறகு மறுபடியும் அலறத் தொடங்கினாள்:—

"நெய், நெய், நெய் கொண்டுவா. கட, கட. தூங்காதே, எழுந்திரு. நான் புதுப் பேய். எல்

லோரும் நெய் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பெண்ணை மிகவும் கஷ்டப்படுத்துவேன்" என்றாள்.

"காந்திமதி, நீ சொல்லும் வார்த்தை அர்த்தமாகவில்லையே" என்றேன். "அர்த்தமா தெரியவில்லை? காளிதாசன், காளிதாசன்! கதை கதை" என்று சொல்லி எதெல்லாமோ பிதற்றிப் பின்பு 'ஹா' என்று மற்றொருமுறை அலறி, அப்படியே மூர்ச்சைபோட்டு விழுந்தாள். நான் பெரு மூச்சுடன் வெளியேறினேன். சுமார் அரைமணி நேரம் கழிந்தபின்பு, செட்டியார் மறுபடிவந்து கூப்பிட்டு, "காந்திமதிக்குத் தெளிந்துவிட்டது" என்றார். பின்புபோய்க் கேட்டபோது, பேயாடிய விஷயம் ஞாபகமில்லை யென்று சொல்லுகிறாள். இப்படி இரண்டு மூன்று வெள்ளிக்கிழமையாய் நடந்து வருகிறது.

இதனுடைய ரஹஸ்யம் தெரியவில்லை. எனக்குப் பேய் பிசாசில் நம்பிகை கிடையாது.

சுய ஆட்சியைப் பற்றி ஒரு யோசனை

25 மே 1916 — கள வைகாசி 12

பாரத நாட்டுக்கு உடனே சுய ஆட்சி கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் ஒரு பெரும் விண்ணப்பம் தயார் செய்து, அதில் மாகாணந்தோறும் லக்ஷக் கணக்கான ஜனங்கள் கையெழுத்துப் போட்டு இந்த க்ஷணமே ப்ரிடிஷ் பார்லிமெண்டுக்கு அனுப்ப வேண்டும்.

ஐரோப்பாவில் நடக்கும் யுத்த நெருக்கடியிலே நாம் உள்நாட்டுத் திருத்தங்களுக்கு மன்றாடுவதனால் நாம் ப்ரிடிஷ் ராஜாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கடமை தவறிப் போகுமென்று சொல்லி நமது முன்னேற்றத்தைத் தடுக்க விரும்புவோரின் அர்த்தமில்லாத வார்த்தையைக் கருதி இக்காரியத்தை நிறுத்தி வைக்கலாகாது.

அயர்லாந்து, போலந்து என்ற தேசங்களின் திருஷ்டாந்தத்தைக் காட்டலாம்.

புதுச்சேரி
அநலம் வைகாசி 7

சி. சுப்பிரமணியபாரதி

குறிப்பு :—முதல் உலகயுத்தம் நடந்து கொண்டிருந்தபோது பாரதியார் இந்த யோசனையைக் கூறியிருக்கிறார். அயர்லாந்து, போலந்து தேசங்கள் தங்கள் விடுதலைக்காக அந்தச் சமயத்திலும் முயற்சி செய்து கொண்டிருந்தன. யுத்தம் முடப்பதால் இம் முயற்சியை அவை நிறுத்தி வைக்கவில்லை.

உடம்பு

சக்திதாஸன்

22 ஜூன் 1916 — ஸ ஆனி 9

குறிப்பு :—இக்கட்டுரை பாரதிநூல்கள் மூன்றும் தொகுதியில் வெளியாகியிருக்கிறது.

உண்மை

சக்திதாஸன்

26 ஜூன் 1916 — ஸ ஆனி 13

குறிப்பு :—இக்கட்டுரை பாரதிநூல்கள் மூன்றும் தொகுதியில் வெளியாகியிருக்கிறது.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்

சி. சுப்ரமணியபாரதி

7 ஜூலை 1916 — ஸ ஆனி 24

சுதேசமித்திரன் பத்திராதிபர் அவர்களுக்கு :—

சென்னப்பட்டணத்தில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தமது பெண்ணை ருதுவான பிறகு விவாகம் செய்து கொடுத்த செய்தி எனக்கு சந்தோஷம் தருகிறது.

நமது ஜன ஸமூகத்தில் மாறுதல்கள் நடக்க வேண்டும். மாறுதலே உயிர்த்திறமையின் முதற் குறியாகும். மேன்மேலும் சௌகரியத்தை விரும்பித் காலைகளே புதிய புதிய மாறுதல்கள் செய்து கொள்ளாத ஜந்துவை, இயற்கைத் தெய்வம் வலிய வந்து கீழ்நிலைமைக்கு மாற்றுகிறது. புராதன ஆசாரங்களில் நல்லதைக் கடைப்பிடித்துக் கெட்டதை நீக்கி விடவேண்டும். "புராண மித்யேவ நஸாது ஸர்வம்." பழமை என்ற ஒரே காரணத்தால் எல்லாம் நல்லதாய் விடாது.

மேலும் விவாக சமயத்தில் சொல்லப்படும் சில வேதமந்திரங்களைக் கொண்டே பூர்வ காலத்தில் பிராமணர்கூட ருதுவான பிறகுதான் பெண்களுக்கு மணம் செய்வித்தார்கள் என்று ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தாம் அவ்விஷயத்தைப்

பற்றி ஏற்கனவே எழுதி வெளியிட்டிருக்கும் புத்தக மொன்றில் ருஜுப்படுத்தியிருக்கிறார். ஆகவே குழந்தைக் கல்யாணம் வேதோக்தமென்றும், தெய்வக் கட்டளை யென்றும் இவர் நம்பவில்லை. இடைக் காலத்தில் நம் ஜாதியார் அறிவும், தைரியமும், சக்தியும் இழந்துவிட்ட பிறகு வந்து நுழைந்த அசம்பாவித வழக்கங்களில் இது வொன்றென்பது ஸ்ரீ சாஸ்திரியாரின் கொள்கை. இந்தக் கொள்கையை நமது நாட்டில் எத்தனையோ ஜனங்கள் மனதிற்குள்ளே அங்கீகாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இவ்வளவும் ஒப்புக் கொண்ட பிறகும் புதிய சீர் திருத்தத்தை நடைமுறையிலே கொண்டு வருவதற்கு தைரியமில்லை.

பொதுவாக இங்கிலீஷ் படித்தவர்களிலே பலரும், இங்கிலீஷ் படிக்காவிட்டாலும் விஷயங்களைத் தாமாகவே யோசனை செய்து பார்க்கும் வழக்க முடைய வேறு பலரும் நமது ஜனக்கட்டிலே எத்தனையோ குற்றங் குறைகள் இருப்பதாக ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவனவனுக்கு நியாயமாகத் தெரிந்ததை அவனவன் தனது அனுஷ்டானத்தில் காட்டும் முறைமை நமது நாட்டில் நன்றாக ஏற்படவில்லை. தர்மத்துக்காகத் தாங்கள் ஸங்கடப்படுவதிலே பெரும்பாலோருக்கு ஸம்மதமில்லை. அதுவும் இங்கிலீஷ் படித்த கூட்டத்தாரில் மனோதைரிய முடையவர்களின் தொகை மிகவும் சொற்பமென்பது என்னுடைய அபிப்பிராயம். உள்ளும் புறமும் ஒன்றுபோல நடக்கவேண்டும். படித்த வித்வான்

கள் வஞ்சக நடை நடந்தால் அந்த தேசம் சூன்ய மாகிவிடும். மனுதைரிய மில்லாவிட்டால் பய னுடைய செய்கை எதுவுமே செய்ய முடியாது.

விதி வசத்தால் நமது ஜனங்களுக்கு இந்த ஸ்தானத்திலே பல விஷயங்களிலும் வழி காட்டக் கூடிய திறமை இங்கிலீஷ் படித்த சிலரிடத்திலே தான் காணப்படுகிறது. அதற்குக் காரணம் பூமண் டலத்தின் சாஸ்திரங்களும் நவீன யோசனைகளும் நமது பாஷையில் மொழிபெயர்க்கப் படாமல் இருப்பதொன்று; நம்மவர் அன்ய தேசங்களில் யாத்திரை செய்து தற்கால அனுபவங்கள் திரட்டிக் கொண்டு வராமலிருப்பது இரண்டு; நமக்குள் வந்து புகுந்திருக்கும் கோரமான வறுமை மூன்றாவது.

எனவே, இந்தக் கூட்டத்தாரில் சிலர் கொஞ் சம் துணிவாகச் செய்கைகள் செய்வதைக் காணும் போது ஆரம்பத்தில் சொல்லியபடி எனக்கு ஸந்தோஷமுண்டாகிறது. இப்படி நம்மவர் எல்லா விஷயங்களிலும் நியாயத்தைத் துணிவுடன் செய்து காட்டி நாட்டில் புதிய உயிரை நிலை நிறுத்தும்படி தேவர் கருணை செய்க.

சில கவியரசர்

காளிதாஸன்

10 ஜூலை 1916 *ஸ ஆனி 27*

குறிப்பு:—இக்கட்டுரையில் பாரதியார் **போத்தன்ஞ** என்ற தெலுங்கக் கவிராயரைப் பற்றியும் **கம்பர், திருவள்ளுவர், இளங்கோ** என்னும் தமிழ்க் கவிஞரைப் பற்றியும் பேசுகிறார். ஆந்திர தேசத்தார் போதன்ஞவுக்கு ஆண்டுதோறும் விழா நடத்தவேண்டுமென்று விரும்புவதுபோலத் தமிழ்நாட்டார் சிறந்த தமிழ்க் கவிகளின் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்றும் அவ்வாறு கொண்டாடுவதால் புதிய கவிஞர்களும் இலக்கியமும் தோன்றும் என்றும் எடுத்துரைக்கிறார்.

இக் கட்டுரை பாரதியார் நூல்கள் மூன்றும் தொகுதியில் **கலைகள்** என்ற பகுதியில் **கவி** என்ற தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இக் கட்டுரையில் உள்ள இரண்டு பத்திகள் அதில் இல்லை. இதில் இல்லாத சில பத்திகள் உள்ளன. ஒரு வேளை பாரதியார் இக் கட்டுரையைப் பின்னல் திருத்தி அமைத்திருக்கலாம்.

கவி என்ற கட்டுரையில் வராத இரு பத்திகளை மட்டும் இங்கு தருகிறோம்.

போத்தன்ஞவைப் பற்றிய குறிப்பின் கடைசிப் பத்தியாகக் கீழ்க்கண்ட வாக்கியங்கள் உள்ளன.

"மஹான்கள் கவிகளாயினும், சாஸ்திரக்காரராயினும், வேறு எவ்வகையிலே தேசத்துக்கு உபகாரம் செய்திருந்த போதிலும், அவருடைய ஜன்ம தினத்தைக் கொண்டாடி சபைகள் நடத்தி, ஆராய்ச்சிகள் செய்வது தேசத்தின் அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணையாகும்."

கவி என்ற கட்டுரையிலே திருவள்ளுவர், இளங்கோ என்பவர்களைப் பற்றி அவர்கள் பிறந்த ஊர், அவர்கள் ஜன்ம தினத்தைக் கண்டறிய வழி ஆகிய விஷயங்கள் பேசப்படுகின்றன. ஆனல் கம்பரைப் பற்றி இவ்விதக் குறிப்புக் காணப்பெறவில்லை. அது சில கவியரசர் என்ற கட்டுரையிலே திருவள்ளுவரைப் பற்றிய குறிப்புக்குப் பின் கீழ்க் கண்டவாறு ஒரு பத்தியாக உள்ளது.

"கம்பநாடர் மாயவரத்துக்கு ஸமீபத்திலுள்ள திருவெழுந்தூரில் பிறந்தவர். அந்த ஊரிலே அவருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று சில வருஷங்களின் முன்பு ஒருவர் முயற்சி செய்தார். ஜனகமில்லாமையால் அம்முயற்சி நிறைவேறவில்லை. கம்பனுடைய ஜன்ம திதி நிச்சயமாகத் தெரியவில்லை."

வருங்காலம்

சக்திதாஸன்

11 ஜூலை 1916 — ஸ்ரீ ஆனி 28

குறிப்பு:—பார்க்க: பாரதி நூல்கள் மூன்றும் தொகுதி—சமூகம்.

சக்தி தர்மம்

சக்திதாஸன்

24 ஜூலை 1916 — ஸ்ரீ ஆடி 10

குறிப்பு:—இக் கட்டுரை பாரதி நூல்கள் மூன்றும் தொகுதியில் தத்துவம் என்ற பகுதியில் வெளியாகியுள்ளது. ஆனால் இது சக்தி என்ற பகுதியோடு முடிந்து விடுகிறது. மூன்றும் தொகுதிக் கட்டுரையில் கணபதி என்ற பகுதியொன்று அதிகமாகக் காணப் படுகிறது.

சக்தி தர்மம் என்ற இதே தலைப்புள்ள மற்றொரு கட்டுரை சுதேசமித்திரனில் வெளியாகி இருக்கிறது. அது பாரதி நூல்களில் காணப்படவில்லை. அதை உரிய இடத்தில் இந்நூலில் சேர்த்திருக்கிறோம்.

பூச்சித் தேவன்

ஒரு சிறிய கதை

காளிதாஸன்

27 ஜூலை 1916 ஸ்ரீ ஆடி 13

திருநெல்வேலி வட்டத்தில் குட்டையூர் என்றொரு ஜமீன் உண்டு. அங்கே ஜனங்களெல்லாம் மிகவும் ஏழைகள். மறவர் குடி 200, 300 வீடுகளுண்டு. மற்றக் குடிகளைக் காட்டிலும் இந்த மறவர் அதிக ஏழைகள். இவர்களில் சிலர் ஜமீன்தாருக்குப் பல்லக்குச் சுமப்போர். அடைப்பக்காரர் சிலர். வெளியே பருத்தி நிலங்களிலே வேலை செய்து பிழைப்பவர் சிலர். அநேகருக்கு வேலை கிடையாது. பக்கத்துக் கிராமங்களிலே போய்த் திருடிக் கொண்டு வருவார்கள். அதிலும் அதிக வரும்படி கிடைப்பதில்லை. இந்த இலாகாவே ஏழை இலாகா. ஒரிரவு திருடிக் கொண்டுவந்த பொருளில் ஊர்க் காவல் சேவகருக்குப் பாதி கொடுத்ததுபோக மிச்சம் ஐந்தாறுநாள் ஜீவனத்துக்குக் கூடப் போதாது. சுமார் 25 வருஷங்களுக்கு முன்பு அங்கே ஜமீன்தாராக இருந்த வெள்ளையப்ப நாய்க்கர் இறந்துபோன சமயத்தில், அவருடைய மகனுக்கு 12 வயதுதான் ஆயிருந்தது. ஆதலால், அவனைச் சென்னைப் பட்டணத்திலுள்ள ஜமீன்தார்ப் பிள்ளைகளின் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டு, அவனுக்குத்

தகுந்த வயதாகும் வரை ஜமீன் அதிகாரத்தைக் 'கோட்டா வாசுக்' (கோர்ட் ஆப் வார்ட்ஸ்) காரர் நடத்த வேண்டுமென்று ஸர்க்கார் அதிகாரிகள் தீர்மானம் செய்தார்கள். திருச்சிலுப்பள்ளியிலே டிப்டிகலெக்டராகவிருந்த துரைசாமி அய்யரைக் 'கோட்டா வாசுக்' கார்யஸ்தராக நியமனம் செய் தார்கள். பழைய ஜமீன்தாரை அடுத்துப் பிழைத் தவர்களிலே அநேகருக்குச் சம்பளம் நின்றுபோய் விட்டது ஊரிலே கஷ்டம் அதிகப்பட்டது. மறவர் தரித்திரத்தில் மூழுகிப் போயினர்; களவுகள் அதி கப் பட்டன; உள்ளூரிலேயே திருடத் தொடங்கி விட்டார்கள். இந்த மறவரில் நமது பூச்சித்தேவன் ஒருவன்.

பூச்சித்தேவன் களவுகள்

பூச்சித்தேவன் உடம்பில் நல்ல வலிமையுடைய வன். ஆனல் களவிலே நல்ல தேர்ச்சி பெறவில்லை. ஆகையால் பெரிய திருடர் இவனைச் சேர்த்துக் கொள்வதில்லை. சிறு சிறு களவுகளிலே இவன் திருப்தி கொண்டிருந்தான். நாளைக்கு வேண்டுமே யென்ற கவலை இவனுக்குக் கிடையாது. அந்தந்த நாள் ஆகாரத்துக்குக் கிடைத்தால் போதும். பெரிய களவுகளிலே சேராதபடியால் இவனை டாணைக்காரர் தொல்லைப்படுத்துவதில்லை. பிராமண வீதிகளுக்கு வருவான். வெளிப்புறத்திலே வேஷ்டிகள், பாட்டி மாருடைய சேலைகள் உலரப் போட்டிருக்கும். ஏதேனுமொன்றை அவிழ்த்துக் கொண்டுபோய் எங்கேனும் ஒன்றரையணவுக்கு விற்று அன்று பகல் போஜனத்துக்கு வழி தேடிக் கொள்ளுவான்.

இராக் கொள்ளை

மேலத் தெருவின் ஓரத்தில் புன்செய் வெளியை அடுத்த வீட்டில் ஒரு கிழவி தனது பிள்ளையுடனே குடித்தனம் பண்ணிக் கொண்டிருந்தாள். இவ்விருவருக்கும் அந்த ஊர் சத்திரத்திலிருந்து நாளொன்றுக்கு மூன்று படி அரிசியும், மேல் சாமானும், படிச் செலவாகக் கொடுக்கும்படி பழைய ஜமீன்தார் காலத்தில் ஏற்பாடாயிருந்தது. அது 'கோட்டா வாசு'க் காலத்திலேகூட நிற்கவில்லை. இவர்கள் வீட்டிலே மண் பாண்டங்களைத் தவிர வேறொரு சாமானும் கிடையாது. இங்கேதான் பூச்சித்தேவன் அடிக்கடி திருட வருவான். நடு நிசியில் கொல்லைக் கதவை எளிதாகத் திறந்து கொண்டு உள்ளே நுழைவான். கூடத்திலே பழஞ் சோற்றுப் பானை வைத்திருக்கும். அதைத் திறந்து பழையதை எடுத்துக் கொண்டு போவான். சத்தத்திலே கிழவி கண்விழித்து விடுவாள். "அது யாரடா அங்கே, பாடையிலே போவாய், படக்கென விழுவாய், யாரெங்கே!" என்று கத்துவாள். "நான் தானம்மா, பூச்சித்தேவன். பானையைத்தொடவில்லை, கோலாலே கை படாமல் சோற்றை மாத்திரம் துணியிலே கவிழ்த்துக் கொண்டு போகிறேன். போய் வருகிறேனம்மா" என்று சொல்லிவிட்டுப் போவான். கிழவி வைது கொண்டே மறுபடி கதவை நேரே அடைத்துவிட்டு வந்து படுத்துக்கொள்ளுவாள்.

சுந்தரய்யங்கார் வீட்டுச் செம்பு

ஒரு நாள் பகல் 2 மணியிருக்கும்; மாடத் தெரு சுந்தரய்யங்கார் வீட்டிலே அவருடைய தாயார் மாத்

திரம் தனியாகக் குடியிருந்தாள். அய்யங்காரும் அவருடைய மனைவியும் வெளியூருக்குப் போயிருந் தார்கள். கிழவி வெளித் திண்ணையிலே உட்கார்ந்து ராம ஜபம் பண்ணிக் கொண்டிருந்தாள். அப் போது பூச்சித்தேவன் அங்கே போய், "தாகத்துக் குத் தண்ணீர் கொடுங்களம்மா" என்று கேட்டான். கிழவி உள்ளே போய், ஒரு செம்பிலே ஜலம் கொண்டு வந்து வைத்தாள். அதை இவன் எடுத்துக் குடித்துக் கொண்டிருக்கையில், கிழவி சூத்திரன் தொட்ட பாத்திரத்தைத் தான் தொடக் கூடாதாகையால் அதைக் கழுவும் பொருட்டு மற்றொரு பாத்திரத்திலே ஜலம் கொண்டு வருவதற் காக உள்ளே போனாள். திரும்பி வந்து பார்க்கை யிலே பூச்சித் தேவனையும் காணவில்லை; செம்பை யும் காணவில்லை. கிழவி கூவே கூகூவே கூ என்று கத்துகிறாள். இந்தக் கூக்குரலைக் கேட்டுப் பக்கத்து வீட்டு சுப்பா சாஸ்திரி குடுகுடுவென்று வெளியே ஓடிவந்து, "என்ன ஸங்கதி?" என்று கேட்டார்.

"அந்தப் படுபாவி பூச்சித்தேவன் வந்து குடிக் கத் தீர்த்தம் கேட்டான். செம்பிலே கொண்டுவந்து கொடுத்துவிட்டு உள்ளே போய்ப் பாத்திர சுத்திக்கு வேறே தீர்த்தம் கொண்டு வருமுன்னே ஆளைக் காணவில்லை. செம்பைக் கொண்டு போய்விட்டான். நான் என்ன செய்வேன்? நல்ல செம்பு. வாங்கி மூன்று மாதங்கூட ஆகவில்லை" என்று கிழவி சொன்னாள்.

"எவ்வளவு நாழிகை யாச்சுது?" என்று கேட்டார் சுப்பா சாஸ்திரி. அதற்குக் கிழவி, "இப்போதான். ஒரு நிமிஷங்கூட ஆகவில்லே" என்றாள்.

சாஸ்திரி திரும்பிப் பார்த்தார். ஏறக்குறைய 15 வீடுகளுக்கப்பால் எதிர்ப் பத்தியிலே யிருந்த ஒரு கடையின் முன்பு பூச்சித்தேவன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு, ஒரே ஓட்டத்தில் கடைக்குப் போய்ச் சேர்ந்தார்.

அங்கே பூச்சித்தேவன் பாத்திரத்தைக் கடைச் செட்டியிடம் கொடுத்து, "இதை வைத்துக்கொண்டு கால் ரூபாய் கொடும், செட்டியாரே. நாளைக் காலையில் வந்து பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டுச் செம்பை வாங்கிக்கொண்டு போகிறேன்" என்று சொன்னான். செட்டி செம்பைக் கையிலே வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பூச்சித்தேவன் கோபத்துடன், "என்ன செட்டியாரே, செம்பை அழகு பார்க்கிறீரோ? இதை வைத்துக்கொண்டு கால் ரூபாய் கொடுக்க வலிக்கிறதோ? ஸம்மதமுண்டானால் பாரும். இல்லாவிட்டால் செம்பைக் கொடும் இங்கே. பக்கத்துத் தெரு சோணசலஞ் செட்டியார் நல்ல மனுஷ்யன். அவர் நமக்குச் செம்பு, கிம்பு வைக்காமல் சும்மா கடன் கொடுப்பார். அவரிடம் வாங்கிக் கொள்கிறேன். நீட்டும். செம்பை நீட்டும் இங்கே" என்றான். கடைச் செட்டி, "பொறு, தம்பி, பொறு. இதோ கொடுக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தான். இந்த சந்தர்ப்பத்திலே தான் சுப்பா சாஸ்திரி அவ்விடம் போய்ச் சேர்ந்தார்.

பூச்சித்தேவனை நோக்கி அதன் மகனே இதன் மகனே என்று சுப்பா சாஸ்திரி சோணமாரியாக வையத் தொடங்கினர்.

பூச்சித்தேவன், "என்ன சாமி, பயித்தியம் கியித்தியம் பிடிச்சுக் கொண்டதா? சங்கதி என்ன? ஏன் வைகிறீர்? சொல்லும்" என்றான். "அட அயோக்கியப் பயலே! சுந்தரய்யங்கார் வீட்டுச் செம்பைத் திருடிக் கொண்டு வந்து கடையிலே விற்கப் போகிறாய்! ஏன் வைகிறேனென்று வேறே கேட்கிறாயா? என்னோடு வாடா நீ. டாணாவுக்குப் போகலாம். வா. வாடா நீ, வா" என்று அட்டகாஸம் பண்ணினர் சுப்பா சாஸ்திரி.

பூச்சித்தேவன் கலகலவென்று சிரித்துக் கொண்டு, "சாமி, நீர் கூப்பிட்டால் உம்மோடு நாலை டாணாவுக்குப் போய் மாட்டிக் கொள்ள வேண்டுமென்று எனக்கு ஆத்திரமா? புத்தியில்லாமல் பேசுகிறீரே. நடக்க வேண்டிய சங்கதியைச் சொல்லும்" என்றான். சுப்பா சாஸ்திரி மஹா கோபத்துடன், "செம்பை யேனடா திருடிக் கொண்டு வந்தாய்?" என்றுகேட்டார்.

பூச்சித்தேவன், "ஐயரே, திருட்டுக் கிருட்டென்று பேசக்கூடாது, தெரியுமா? ஜாக்கிரதை! பெரிய களவு கண்டுபிடித்து விட்டார், இவர்! உம்! செட்டியாரே! பார்ப்பான் கையிலே செம்பைக் கொடுத்துப் போகச் சொல்லும். களவு கண்டுபிடிக்க வந்தார்! பெரிய களவு!" என்று நகைத்துக்கொண்டே அங்கிருந்து போய்விட்டான். செம்பு சுந்தரய்யங்கார் வீடு போய்ச் சேர்ந்தது.

பூச்சித்தேவனுக்குச் செல்வம் உண்டானது

பூச்சித்தேவன் கண்ணுக்கு நல்ல லக்ஷணமாக இருப்பான். ஜில்பாக் குடுமி; கொம்பு மீசை; பிருகவுடம்பு;— பொதுவிலே அழகுள்ளவன். இப்படியிருக்கையில், 'கோட்டாவாசு'க் காலம் போய், அடுத்த ஜமீன்தார் பட்டத்துக்கு வந்தார். அவருக்கு அழகான சேவகர் வைத்துக் கொள்வதிலே பிரிய மதிகம். இவனை வேலைக் கமர்த்திக் கொண்டார். நாளாக நாளாக இவன் மேல் அவருக்கு எந்தக் காரணத்தினாலோ அளவு கடந்த அபிமான முண்டாய்விட்டது. எனவே, இவனுக்கு மற்றக் கூட்டத்தில் கவுரவமதிகப்பட்டது. டாணாக்காரர் இவனைக் கண்டால் இரட்டை ஸலாம் போடுவார்கள். எங்கேனும் பெரிய கொள்ளைகள், வழிப்பறிகள் நடந்தால் இவனுக்குப் பங்கு கொடுப்பதென்ற நியதியேற்பட்டது. ஆபத்து வந்தால், ஜமீன்தாருடைய தயவு மூலமாக இவன் காப்பாற்றுவானென்ற எண்ணம் திருடருக்கெல்லாம் உண்டாய்விட்டது. அக்காலத்தில் மதுரையிலே ஒரு பெரிய மிராசுதார் வீட்டில் களவு நடந்து பணமும் நகைகளுமாக ஐம்பதினாயிரம் ரூபாய் போய்விட்டது. டாணாக்காரர் எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தும் துப்புத் துலங்கவில்லை. அதிலே பூச்சித்தேவன் சம்பந்தப்பட்டதாகக் குட்டையூரிலே மாத்திரம் சிலருக்குச் சந்தேகமிருந்தது. ஆனால் அதை யாரும் அதிகாரிகளிடம் சொல்லத் துணியவில்லை. பூச்சித்தேவனுக்கு விரோதமாக சாக்ஷி சொன்னால் தலை போய்விடுமென்ற பயம் எல்லாருக்கு மிருந்தது. என்ன

காரணத்தாலோ, பூச்சித்தேவன் பெரிய செல்வ னாகிவிட்டான். அரண்மனை வேலையிலிருந்தபடி யாலும், ஜமீன்தார் இவனிடம் மிகுந்த பக்ஷம் பாராட்டின படியாலும் இவனுக்குப் பணம் பெருகிய விஷயத்தில் யாருக்கும் ஆச்சரியமுண்டாகவில்லை. ஊரிலே பூச்சித்தேவர் என்ற பெயருண்டாயிற்று.

"அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரி குடை பிடிப்பான்." பூச்சித்தேவனுக்குக் கண், தலை தெரியவில்லை. ஊரில் யாரேனும் தன்னிடம் அவ மதிப்புக் கொண்டதாகச் சந்தேக மேற்பட்டால், அவர்களைத் தன் வீட்டுக்கு இழுத்துக் கொண்டு வரச் சொல்லி அடிப்பான். தெருவில் யாரேனும் "பூச்சி" என்று சொன்னால் தன்னைத்தான் சொல்லுகிறார்களென்று சண்டைக்குப் போய் அவர்களை வாய்க்கு வந்தபடி திட்டுவான். 'அந்தப் பாப்பாரப் பயல்" 'இந்த முதலிப் பயல்' என்று யாரையும் இழிவாகப் பேசுவான். டம்பத்துக்காக ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தினான். அங்கே காலையில் பிள்ளைகளெல்லாம் "பூச்சியப் பத்தேவர் நீடூழி வாழ்க" என்று சொல்லிப் பிள்ளை யாரைக் கும்பிட்ட பிறகு தான் பாடஞ் சொல்லலா மென்று விதியேற்படுத்தினான். கிராமத்துப் பெண் களைக் கெடுக்கலானான். ஏழைகள் பணத்தை நாலு விதங்களிலே அபகரித்தான். ஊர் முழுதும் இவ னைப் "பாவி" என்று பேசத் தலைப்பட்டார்கள்.

(பு. இ. ம.)

இப்படியிருக்கையில், அந்தவூர் வடக்குத் தெரு மறவருக்கும் தெற்குத் தெரு மறவருக்கும் ஏதோ

ஒரு விஷயமாக ஒரு பெருஞ் சண்டை யேற்பட்டது. தடிகள் கத்திகளுடன் இரண்டு பக்கத்திலுமிருந்து 100, 150 பேர் வந்து கலகம் பண்ணினார்கள். அதிலே பூச்சித்தேவனும் போனதில் விலாப்புறத்திலே பெரிய குத்துக் காயம் ஏற்பட்டது. இதற்கிடையிலே ஸர்க்கார் அதிகாரிகள் இரண்டு பக்கத்தலைவர்களையும் பிடித்து வைத்தார்கள். சிறைச்சாலை வைத்தியர் பூச்சித்தேவனுடைய விலாப்புண்ணைத் தீர்த்து விடுவதற்கு மூன்று மாதங்களாயின. திருநெல்வேலி நியாயஸ்தலத்தில் விசாரணை நடந்து இவனுக்கு ஏழு வருஷ கடுங்காவல் விதிக்கப்பட்டது. சென்னைப் பட்டணத்திலுள்ள பெரிய நியாயஸ்தலத்தில் மூறையீடு (அப்பீல்) செய்துகொண்டான். வக்கீல்களுக்கும் மற்றவர்களுக்குமாகப் பதினாயிரம் ரூபாய் செலவாயிற்று. இறுதிவரை இவனுக்கு விடுதலை கிடைக்கவில்லை. கீழ் ஸ்தலத்தின் தீர்ப்பையே பெரிய நியாயஸ்தலத்தில் உறுதிப்படுத்திவிட்டார். ஏழு வருஷம் சிறையிலிருந்து பிறகு திரும்பி வந்தான். சிறையிலிருந்து வந்தபின் இவனை ஜாமீன்தார் கவனிக்கவில்லை. மிஞ்சியிருந்த சொற்பப் பொருளை வைத்துக்கொண்டு இப்போது மறுபடியும் பூச்சித்தேவன் என்ற பெயருடன் கூடிய வரை யோக்கியனாகவே ஜீவனம் செய்து வருகிறான்.

வேதரிஷிகளின் கவிதை

அதிதி - பராசக்தி

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி

2 ஆகஸ்டு 1916

(குறிப்பு :—அதிதி என்ற சொல்லை உச்சரிக்கும்போது முதற் 'தி' கரத்தை 'உந்தி' என்பதுபோல் மெல்லோசையாகச் சொல்லுக. இரண்டாவது 'தி' கரத்தை 'திங்கள்' என்பதுபோல வல்லோசையாக்க வேண்டும்.)

மாக்ஸ்முல்லர் (Max Muller) எழுதுகிறார்:—

"உண்மையில் 'அதிதி' என்ற தெய்வப் பெயரே 'அநந்தம்' அல்லது எல்லையில்லாமை என்ற கருத்தைக் குறிப்பிடுவதற்கு மனித பாஷைகளில் உண்டான பதங்கள் எல்லாவற்றிலும் முந்தியது. 'திதி' என்றால் கட்டுப்பட்டது, பிரிவுபட்டது, எல்லையுடையது என்று அர்த்தம்.

'அதிதி' கட்டுப்படாதது, பிரிவுபடாதது, எல்லையில்லாதது."

இந்த அதிதி என்ற அநந்த சக்தி தேவர்களுக்கெல்லாம் தாய். எல்லாப் பொருள்களும், எல்லா உலகங்களும் இதனிடத்திலே தோன்றின. அஞ்ஞானக் கட்டுகளிலிருந்து விடுதலை பெற விரும்புவோன் அதிதியையே துணையாகக்கொள்ளவேண்டுமென்று வேதம் சொல்லுகிறது.

பிரமனுடைய முதற்கடவுளுக்குத் தாயென்றும் மகளென்றும் சொல்லப்படும் இந்த அதிதியைக் குறித்து ரிக் வேதத்திலே காணப்படும் சில மந்திரங் களை இங்கு மொழி பெயர்த்துக் காட்டுகிறேன்.

(ரிக் வேதம் 1 - மண்டலம்; 89 - ஸூக்தம்; 10 ரிக்.)

அதிதியே வானம். அதிதி இடைவெளி. அதிதி தாய். அதிதியே தந்தையும் மகனும். அதிதி தேவர்கள் எல்லாம். அதிதி ஐந்து மண்டலத்து மனிதர். சென்றதெல்லாம் அதிதி. இனிவருவதும் அதிதியே.

(5 - 79 - 3)

காலையில் தேவியாகிய அதிதியை அழைக்கி றேன். நடுப்பகலிலும், மாலையிலும் அவளையே அழைக்கிறேன்.

(10 - 63 - 9)

அதிதியையும் அவள் மக்களாகிய இந்திரன், வாயு, வருணன், மித்திரன், அர்யமான் என்ற தேவ ரையும் அழைக்கிறோம். இவர்கள் மண்ணிலும் வானிலும் நீரிலும் கலந்து நிற்கின்றனர்.

குறிப்பு :— வேதரிஷிகளின் கவிதை என்ற நூலிலே அதிதி என்ற பகுதியில் மேலேயுள்ள விஷயம் ஆரம்பத்தில் இருக்கவேண்டும். அது விட்டுப் போயிருக்கிறது.

சக்தி தர்மம்

சக்திதாஸன்

5 ஆகஸ்டு 1916 ஈஸ ஆடி 22

கடவுளை ஆணென்றும் பெண்ணென்றும் இரண்டு கலைகளாக வழங்குதல் புராதன தேசங்கள் யாவற்றிலுமே உண்டு. சிலவிடங்களில் சக்தியே பிரதானமென்று கொள்கையிருந்தது.

உதாரணமாகக் கிறிஸ்துநாதரின் மாதாவுக்கு 'மாரி' என்று பெயர். (இதனை ஆங்கிலேயர் 'மேரி' என்று பிழையாக உச்சரிக்கிறார்கள்.) இந்த மாரியென்னும் பெயர் பாலஸ்தினு தேசத்தில் கிறிஸ்து பிறப்பதற்கு முன் எத்தனையோ நூற்றாண்டுகளாக வழங்கிவந்தது. அங்கு மாத்திரமன்று, அங்கிருந்து வடக்கே நெடுந்தூரம் கருங்கடல்வரையிலுமுள்ள நிலமுழுவதிலும் மிகவும் பழமைக் காலங்களிலே 'மாரி' என்பதோர் தெய்வப் பெயர் வழங்கிற்று. கருங்கடலுக்கும் தர்தானெல் (இங்கிலீஷ் - டார்டனெல்ஸ்) ஐல சந்திக்குமிடையே ('ஸங்கரியுஸ்' என்று கிரேக்க பாஷையில் சொல்லப்படும்) சங்காரிநதிக் கரையில் முற்காலத்திலே பிஸ்கேனு (Piscenus) என்றதோர் பெரிய நகரமிருந்தது. அங்கு பெருங் கோயிலொன்று கட்டி 'மாரியம்மா' என்ற தெய்வத்தை வணங்கினர்கள். அதற்கருகே மாரியாந்தினி என்றோர் நகரிருந்தது. இந்த

மாரியை உலகத்தின் தாயென்றும் எல்லா தேவர்களுக்கும் ஆதாரமான மகாசக்தி என்றும் அந்த நாட்டிலும் அதன் சுற்று வட்டங்களிலுமிருந்தோர் கொண்டாடினர்கள். இயற்கைத் தெய்வமே மஹா சக்தி என்று சொல்லப்படுகிறது. அதனையே பூர்வ காலத்தில் பல்வேறு தேசத்தார் பலபெயர் கூறி 'ஈஸிஸ்' (ஈசி) என்றும், 'மாரி' யென்றும் 'துர்க்கை' யென்றும் வணங்கிவந்தார்கள்.

அதனை அரசர் வீரதேவதையாகவும், சில இடங்களில் ஸம்ஹார தேவதையாகவும் கொண்டாடினர். பொது ஜனங்கள் அரசர் வழியை அனுசரித்தனர். யோகிகளும், ஞானிகளும், கவிகளும் அதனைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூத்தொழிலுக்கும் ஆதியான மோனவெளி யென்று போற்றினர். எல்லாம் ஒன்றுதான். "வாக்கையும் மனதையும் கடந்த பரம்பொருளை" ஆணென்று சொன்னலென்ன, பெண்ணென்று சொன்னலென்ன? தாயென்றலென்ன, தந்தையென்றலென்ன? எனினும் தெய்வத்தைக் கருதும்போது "வாக்கையும் மனதையும் கடந்த பரம்பொருள்" என்றுமாத்திரம் நினைப்பது பிரயோஜனமில்லை. அது உண்மையன்று.

"சுத்த அறிவே சிவம்" வாஸ்தவந்தான். ஆனால் இந்த உலகம் என்ன? இதுவும் சிவமே. அறிவுக் கெட்டாதது; பெயர் சொல்லமுடியாதது; ஆதலால் அப்பொருளுக்கு வெறுமே, 'தத்' (அது) என்ற பெயர்காட்டி வேதரிஷிகள் போற்றினர். பின் அதையே அதிதி யென்றும், விஷ்ணுவென்

றும், ருத்ர னென்றும், ப்ரம்மணஸ்பதி என்றும், இந்திரன், வாயு, ஸூர்யன், அக்நி, மித்ரன், வருணன், பூமி, சிந்து என்றும் பலவகைகளிலே வணங்குகிறார்கள். தெய்வம் உண்டென்பதை எப்படியறிந்தோம்? உலகமிருப்பதாலே அறிந்தோம். தெய்வம் உயிர்; உலகம் அதன்வடிவம். உலகந் தெய்வந்தான். உலகத்துச் செய்கைகளெல்லாம் தெய்வத்தின் செய்கைகளே. உலகத்தின் நடைகளிலும் விதிகளிலும் தெய்வத்தை உணரவேண்டும். இந்த வழியறியாதோர் உலகத்துக்குப் பயப்படுகிறார்கள். இவ்வுலகத்தைவிட்டுத் தப்பிஓடல் இன்பமுண்டாகுமென்று நினைக்கிறார்கள். அதிலிருந்து பல்வேறு பிழைகளும் தொல்லைகளும் விளைகின்றன. இந்த உலகம் நாராயணனுடைய லீலை. அவன் தனது சக்தியுடன் விளையாடும் விளையாட்டு. சக்தி மார்க்கத்தில் இந்த உலகத்து ஞானம் அதிகப்படவேண்டும். பராசக்தி தெய்வம். ஆத்மஞானத்தைக் காட்டும் நூல்கள் அவளுடைய வேதம். லௌகிக சாஸ்திரமும் அவளுடைய வேதந்தான். பௌதிக சாஸ்திரம் (ஸயன்ஸ்) சக்தி தர்மத்துக்கு மூலமாவது வேதம் - வேதாரம்பம். ஸ்தூலத்தை அறிந்தாலொழிய ஸூக்ஷ்மத்தை நன்கு தெரிந்து கொள்ளமுடியாது. இஹலோக ஞானத்தை இகழ்ச்சியாகப் பேசும் "ஆத்ம சாஸ்திரம்" பொய். உண்மையான ஆத்ம சாஸ்திரம் இஹலோக ஞானத்தை வளர்க்கும். வான சாஸ்திரம் இல்லாத நாட்டில் ஞானவாசிட்டம் பயன் தரமாட்டாது. எந்த மதமும் ஆரம்பத்தில் லௌகிக ஞானத்தை இகழவில்லை.

எல்லாரும் கண்ணை மூடிக்கொண்டு எப்போதும் சிவனைத் தியானம் செய்துகொண்டிருந்தால் சிவன் கோயில் கட்டியிருக்கமுடியாது. ஒருவேலையும் நடக்காது. கண்ணைத் திறந்து உலகக் காரியங்கள் செய்துகொண்டே சிவனை அறிய முயல்வதுதான் சரியான ஞானம். எல்லா மதங்களிலும் இதுதான் உண்மை. உள்ளத் துறவுடன் இன்பங்களைத் துறந்திடுக என்று ஈசோபநிஷத்துக் கூறுகின்றது. ஆனால் கிறிஸ்து மதம், மகம்மதிய மதம், பௌத்த மதம் முதலிய புறமதங்களிலும் நமது தேசத்து மதங்கள் சிலவற்றிலும், பிற்காலத்துப் பாதிரிகளும் பக்கிரிகளும் பிக்ஷுக்களும் ஸந்நியாசிகளும் ஒரே மூழக்கமாக லௌகிக ஞானத்தையும், லௌகிக அனுபவத்தையும் பழிக்கத் தொடங்கி விட்டார்கள். சக்தி தர்மம் சிலவகையான வார்த்தைக்கே இடங்கொடுக்காது. ஏன்?

பராசக்தியை முதலாவது இவ்வுலகத்திலே கண்டு வணங்குதல் வேண்டும். நக்ஷத்திரங்கள் எல்லாம் அவளுடைய விழிகள். தீயும் காற்றும் அவளுடைய வேகம். மண் அவளுடைய திருமேனி. இருப்பதெல்லாம் அவளுடைய கலைதான். அவளை இகத்திலே கண்டு போற்றி நலமடைய வேண்டும்.

குறிப்பு :— இதே தலைப்பில் 24-7-1916 - ல் மற்றொரு கட்டுரை வெளியாகியிருக்கிறது. அது மட்டும் பாரதி நூல்கள் மூன்றும் தொகுதியில் வெளியாகியுள்ளது. இக் கட்டுரை அதில் சேரவில்லை.

விதி

சக்திதாஸன்

9 செப்டம்பர் 1916 கள ஆவணி 25

விதி மூன்று வகைப்படும்:—

1. தெய்வ விதி
2. சாஸ்திர விதி
3. நாட்டு விதி

தெய்வ விதி

இந்த மூன்றிலே தெய்வ விதியை மாற்ற முடியாது. காற்றிலே வீசிய கல் இடையிலே தடுக்கா விட்டால் மண் மேலே வந்து விழும். தீ சுடும். பனி குளிரும். மின்னல் அழிக்கும். வெயில் ஒளி செய்யும். இவற்றைப் பிற விதிகளால் சிறிது நேரம் தடுத்தாலும் தடுக்கலாம். இயற்கை விதிகளை மாற்றிவிட வழியில்லை. நன்மை நினைத்தால நன்மை விளையும். தீமை நினைத்தால் தீமை விளையும். பொய் இழிவு தரும். உண்மை கைதூக்கும். இவை மாறாத விதிகள். இக்காலத்து இயற்கை விதிகளை ஒன்றொன்றாக ஆராய்ந்து கண்டுபிடித்துப் பின் அவற்றை அனுசரித்து வாழவேண்டும். இந்த விதிகளிலே மனித ஜாதியார் இன்றுவரை "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு." இவற்றின் ஞானம் வளர வளர மனித ஜாதி மேன்மை பெறும்.

சாஸ்திர விதி

சாஸ்திரம் மனிதனால் எழுதப்பட்டது. ஆதலால் இன்னும் நிறைவு பெறவில்லை. தெய்வ விதிகளைக் கூடியவரை பின்பற்றியே சாஸ்திரக்காரர் எழுத முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால் காலதேச வர்த்தமானங்கள் மாறுபடுகின்றன. தெய்வ விதிகளைப் பற்றிய புதிய வித்தைகள் வழக்கப்படுகின்றன. அப்போது சாஸ்திர விதிகளை மாற்றுதல் அவசியமாகிறது. திருஷ்டாந்தமாக வைத்திய சாஸ்திரத்தைப் பாருங்கள். கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி விதிகள் மாறுகின்றன. பூர்விக ஐரோப்பிய வைத்தியர்கள் பெரும்பான்மை எல்லா வியாதிகளுக்கும் நோயாளியின் உடம்பைக் குத்தி ரத்தத்தைக் கொஞ்சம் வெளியேற்றினால், அதுவே நல்ல முறையென்று நினைத்திருந்தார்கள். தலை நோவு, ஜ்வரம் எது வந்தாலும் உடம்பைக் குத்தி ரத்தத்தைக் கொட்டித் தீரவேண்டும். இந்த மடமையாலே, பலர் ரத்த நஷ்டமே மூலகாரணமாய் அகியாயமாக மடிந்து போனார்கள். இக்காலத்தில் அந்தக் கொள்கை மாறிவிட்டது. ஜ்வரம் வந்தால் பத்தியம் மதுரையில் ஒரு மாதிரி, வேலூரிலே மற்றொரு மாதிரி.

இலக்கணத்தை எடுங்கள்:—

"பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே" என்று பவணந்தி முனிவரே சொல்லுகிறார்.

தர்ம சாஸ்திரத்தை எடுங்கள் :—

பஞ்சபாண்டவர் காலத்தில் ஒரு ஸ்திரீ பல புருஷரை விவாகம் செய்து கொள்ளலாம். வேத வியாஸர் காலத்தில் தமையன் பிள்ளையில்லாமல் இறந்துபோனால் தம்பி அவனுக்கு ஸந்ததி ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

விசுவாமித்திரர் காலத்தில் க்ஷத்திரியர் அறிவினால் பிராமணராகி விடலாம். மனுஸ்மிருதியின் விதிகள் வேறே. பராசரர் விதிகள் வேறே. நடப்பிலுள்ள வைத்தியநாத தீக்ஷிதர் விதிகள் வேறே. இங்கிலாந்துக்கு வேறு ஸ்மிருதி. ப்ரான்ஸ் தேசத்துக்கு வேறு. பாரஸீகத்துக்கு வேறு. நமக்கு வேறு. நமக்குள் வடநாட்டில் வேறு. தென்னாட்டில் வேறு. வைஷ்ணவருக்கு வேறு. ஸ்மார்த்தருக்கு வேறு.

சாஸ்திரங்களை யெல்லாம் காலத்துக்குத் தகுந்தபடி மாற்றிக் கொண்டு போகிறோம். வேதத்தைத் தான் மாற்ற முடியாது. உண்மையான வேதமாக இருந்தால்.

நாட்டு விதி

நாட்டு விதி என்பது அர்த்த, நீதி சாஸ்திரங்களின் விதி. இதனைத் தற்காலத்தோர் அரசியல் விதியென்று சொல்லுகிறார்கள். இதுவும் சாஸ்திர விதியோடு சேர்ந்ததுதான். ஆனால் மற்ற இலக்கணம் முதலிய சாஸ்திரங்களின் விதிகளைக் காட்டிலும் அரசியல் விதிகள் மிகவும் விரைவுடன் மாறுபடுவதால் இதனைத் தனியாக ஒரு பகுதியாக்கும்படி நேரிட்டது. எனவே, தெய்வ விதிக்குப் பரிபூரண

மாக உட்பட்டு சாஸ்திர விதிகளையும் நாட்டு விதி களையும் மேன்மேலும் புத்திசாலித்தனமாகச் சீர் திருத்திக் கொண்டு வந்தால், மனுஷ்ய ஜாதிக்கு க்ஷேமமுண்டாகும்.

மாலை

காளிதாஸன் தொடுத்தது

15 செப்டம்பர் 1916 நள ஆவணி 31

குறிப்பு:—பார்க்க: பாரதி நூல்கள் மூன்றும் தொகுதி—பகுதி—சமூகம்.

மாலை

காளிதாஸன் தொடுத்தது

19 செப்டம்பர் 1916 நள புரட்டாசி 4

குறிப்பு:—பார்க்க: பாரதி நூல்கள் மூன்றும் தொகுதி. பகுதி—கலைகள்—மாலை (1) விக்டர் ஹ்யூகோ என்ற பிரஞ்சு ஞானியின் வசனங் கள் என்ற கட்டுரையும் இக்கட்டுரையோடு சேர்க்கப்பட்டுள்ளது.

லோகோபகாரம்

சக்திதாஸன் எழுதியது

22 செப்டம்பர் 1916 ஈள புரட்டாசி 7

ஏற்கெனவே 'சக்தி தர்மம்' என்ற மகுடத்தின் கீழ் ஒரிரண்டு விஷயங்கள் எழுதியிருக்கிறேன்.

'லோகோபகாரம்' என்றாலும் அதே அர்த்தம் தான். லோகோபகாரமாவது லோகத்துக்கு உபகரணம் அல்லது கருவியாக நடத்தல்.

லோகத்துக்கு உபகாரத்தை அதாவது இனிய செய்கையைச் செய்தல். லோகத்துக்கு இனியது செய்வேன், லோக சக்திக்கு ஒரு கருவியாகவே தொழில் செய்கிறேன். சக்தியின் கருவியாக இருந்து தொழில் செய்வதையே சக்தி தர்மம் என்றும் சொல்லுகிறோம். பிறருக்கு நாம் செய்தல் இலேசாயாம்.

லோகத்துக்கு இனியது செய்வோன் தன் உள்ளத்தில் பயம் வைத்துக் கொண்டிருக்கலாகாது. பயம் தீர்வதற்கு வழியென்ன? பகை தீர்ந்தால் பயந் தீரும். பகை தீர்க்கும் வழியென்ன? நம்முடைய மனத்தில் பிறர்மீது பகையெண்ணம் தோன்றுமலிருக்கவேண்டும். பாம்பினிடத்திலே நாம் விரோத புத்தி கொள்ளாவிட்டால் அது நம்மைக் கடிக்காது. இந்த வார்த்தையைப் பரிஹாசம் பண்ணுதல் எளிது. யாரும் செய்யலாம். ஆனால் அது உண்மை.

பாம்பைப் பழக்கி வைக்கும் திறமை அன்புக்குண்டு; பாம்பினிடத்தில் கருணை செய்யும் ஞானியைப் பாம்பு கடிக்காது. லோகோபகாரத்தைக் கருதி அந்த ஞானி மனதிலே அன்புடன் அந்தப் பாம்பைக் கோபித்தால் அது அவ்விடம் விட்டு ஓடிப் போய்விடும்.

எல்லா ஜீவராசிகளிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். இதுவே புத்தன் சொல்லிய தர்மம். மஹான்களெல்லாம் காட்டிய வழி இதுதான். தற்காலத்தில் மனித ஜாதி கூடியவரை நாகரிகப் பட்டிருப்பதால், மிருகங்கள், பக்ஷிகள், பூச்சி, புழு இவற்றால் மனிதனுக்குள்ள பயம் அநேகமாகத் தீர்ந்துபோய் விட்டது.

இப்போது மனிதர் ஒருவருக்கொருவர் பயப் படுவதுதான் அதிகம். இதற்கு இதுவரை மனித ஜாதியார் கண்டுபிடித்து அனுசரணையில் வழங்கி வரும் மருந்து உபயோகமில்லை. பயத்தினால் விரோதம் வளர்கிறது. விரோதத்தால் போர் உண்டாகிறது; மனித ஜாதி வீணாக அழிகிறது. எல்லோருக்குமே நஷ்டமுண்டாகிறது. பரஸ்பர பயம் நீங்க வேண்டுமானால் அதற்குப் போர் சரியான மருந்தில்லை. உலகம் தோன்றிய காலமுதல் இன்றுவரை போர்கள் நடந்துதான் வருகின்றன. இது மட்டிலும் மனித ஜாதியிலே ஒருவருக்கொருவர் பயப் படுவது துளிகூடக் குறையவில்லை.

அன்பிருந்தால் பயம் தெளிந்துபோகும். ஒரே குடும்பத்திலே ஒருவரை யொருவர் கண்டு மரண பயங்கொள்வதில்லை. உலக முழுதும் ஒரே குடும்பத்

தைப்போல் வாழக்கூடாதா? எளியவன் அன்பு தொடங்கி வலியவன் சும்மா இருந்தால் ஒன்றும் நடக்காது. எளியவன் வலிமையை விரும்பி நடக்க வேண்டும். வலியவன் எளியவனிடம் அன்பு செலுத்த வேண்டும்.

யாரிடத்திலும் அன்புடன், யாரிடத்திலும் பயமின்றி நல்லோன் லோகோபகாரஞ் செய்கின்றான்; பராசக்தியின் கையிலே தன்னை ஒரு கருவியாக ஒப்புவித்து விட்டு, அவள் சித்தப்படி தொழில் செய்து வருகிறான். உலகத்தை ஆக்குதல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழிலுக்கும் பராசக்தி வெவ்வேறுவிதமான கருவிகளை வழங்குகிறாள். காற்றும் ஒளியும், வெம்மையும், மண்ணும், நீரும், சித்தமும் உயிரை ஆக்குவதற்குக் கருவிகளாகின்றன.

காற்றும், ஒளியும், வெம்மையும், மண்ணும், நீரும், சித்தமும், பிற உயிர்களும் உயிரைக் காப்பதற்குக் கருவிகளாகின்றன.

இவையனைத்தும் காலமும் சேர்ந்து நாசத்திற்குக் கருவிகளாகின்றன. மனித உயிராகிய நான் மற்ற மனித உயிர்களைக் காக்கும் கருவியாகத் தொழில் செய்வது நன்றா? அழிக்கும் கருவியாகப் போவது நன்றா? காப்பது நன்று.

மேலும் கர்ம விதியை மறக்கலாகாது. காக்க விரும்புவோன் காக்கப்படுவான்; அழிக்க விரும்புவோன் அழிக்கப்படுவான். நன்மை விரும்பினால் நன்மை விளையும்; இல்லாவிட்டால் விளையாது.

ஒருவன் லோகோபகாரத்தை மாத்திரமே விரும்பி நடக்கத் தொடங்கினால் அவனுடைய சொந்த வியாபாரங்களுக்குச் சேதமுண்டாகு மென்று சிலர் நினைக்கிறார்கள். இது பிழை. தனது இன்பத்தை விரும்புவோன் முதலாவது செய்ய வேண்டிய காரியம் லோகோபகாரம்.

"நன்றி யாருவருக்குச் செய்தக்கால் அந் நன்றி" நமக்குத் திரும்பி வந்தே தீரும். அடுத்த ஜன்மத்திலன்று; இந்த ஜன்மத்திலேயே திரும்பி வரும். இது கண்ணாலே கண்ட உண்மை. செல்வம், புகழ், தனம், வினையேற்றம் முதலிய எந்த நலத்தை ஒருவன் விரும்பினபோதிலும், பிறர்க்கு நன்மை செய்யாவிட்டால் அது கைகூடாது. அனுபவத்திலே பார்த்துக் கொள்ளலாம். குடும்பத்தைக் காப்பவன், ஊருக்கு நலஞ் செய்வோன் இவர்கள் உண்டு வாழ்ந் திருப்பதனால் உலகத்துக்கு நன்மையன்றோ? நீ பிறரைக் காப்பாற்றினால் தெய்வம் உன்னைக் காப் பாற்றும்.

தெய்வம் உண்டு. "நலஞ் செய்வோன் என்றும் கெட்டவழி சேரமாட்டான்" என்று நீதி சொல்லு கிறது. அவனுக்குக் கெடுதி சேரிடாதபடி அவ னுடைய யோக க்ஷேமத்தைத் தான் சுமப்பதாகத் தெய்வம் வாக்களித்திருக்கிறது. ஆனால் ஆரம்பத் திலே சோதனைகள் நேரிடும். மனந்தளராமல் லோகோபகாரம் செய்துகொண்டே போனால் பிறகு சோதனைகள் நின்றுபோய் நன்மை உதயமாகும். லோகோபகாரத்திலே "ஆரம்பத்தில்" மனத் தளர்ச்சி ஏற்படுவது சகஜம்.

"ஏதடா இது! தெய்வத்தை நம்பி, தெய்வமே கர்த்தா, நாம் கருவி யென்று நிச்சயித்து மற்றவர் களுக்கு நன்மை செய்யப்போன இடத்தில் நமக்குத் தீமையுண்டாகிறதே! கிணறு வெட்டப்போன இடத்தில் பூதம் புறப்படுகிறதே! உலகத்தைக் கெளி யென்று நினைத்து அதன் பசி தீரப் பால் வார்க்கும் படி போனால் அது கழுகாக மாறி நம்மைக் கொத்து கிறதே!' என்று திகைத்துப் போய் மனிதன் லோகோபகாரத்தைக் கைவிடக்கருதல் ஸாமான் யம். இது தவறு. தெய்வம் நமக்குத் தகுதி யேறும் பொருட்டாக நம்மைச் சோதனை செய்கிறது. உள்ளம் பதறுதிருந்தால் விரைவிலே வானந் தெளியும்.

லோகோபகாரம் எப்போது, எந்த வயதில் தொடங்கலாம்? இப்போது, இந்த நிமிஷத்திலே தொடங்க வேண்டும். யார் தொடங்கலாம்? ஆண், பெண், அலி, வலியவன், எளியவன், கிழவன், குழந்தை, குருடன், நொண்டி எல்லோரும் தொடங்க வேண்டும்.

பிறருக்கு இனியது செய்தலாவது யாது? நோய் தீர்த்தல், உணவு கொடுத்தல், அறிவு கொளுத்துதல் முதலிய செய்கை.

பிறரென்றால் அதற்கெல்லையுண்டா? சக்திக் குத் தக்கபடி எல்லை குடும்பத்தைக் காத்த பிறகு நாட்டைக் காக்கவேணும். பிறகு மனித ஜாதி முழு தையும் காக்கவேணும்.

லோகோபகாரத்தினால் மனிதன் என்ன பயனடைவான்? எப்போது?

லோகோபகாரத்தையே பரிபூரணமாகச் செய்வோன் மனிதநிலை கடந்து அமரநிலை பெறுவான். இவ்வுலகத்தில் இந்தப் பிறவியில் பயன் அடைவான். செய்கையின் வேகத்துக்குத் தக்கபடி பயனின் வேகம்.

சக்தி காக்கும்

நவராத்திரி

சி. சுப்பிரமணிய பாரதி

4 அக்டோபர் 1916 ஸ்ரீ புரட்டாசி 19

இத் தலைப்புடன் இரண்டு கட்டுரைகள் மூன்றாம் தொகுதியில் வெளிவந்துள்ளன. பகுதி—தத்துவம்.

கீழ்க்கண்ட பகுதி கடைசிப் பத்தியாக இரண்டாம் கட்டுரையில் இருக்கவேண்டும். ஆனால் அது வெளியாகவில்லை.

"அறிவு தான் விரும்பும் பொருளின் இயற்கையைப் பெற்றுவிடுமென்பதை அனுபவத்தில் தெரிந்து கொள்வதும் எளிது. ஆதலால், நவராத்திரி பூஜை தொடங்கியிருக்கும் இக்காலத்தில் எல்லா வஸ்துக்களையும் எல்லா அணுக்களையும் இயக்குகின்ற பராசக்தியை ஸ்தாபனம் செய்துகொள்ளுவோம். அகண்டத்தில் விளங்கும் தேவியைப் போற்றுவோம். உலகமே அவள் வடிவமாதலால் உலகத்தை வணங்குவோம். இமயமலையிலே பார்வதியாகவும், தெற்கு முனையிலே கன்யாகுமரியாகவும் திருக்கோயில் கொண்டவளை மஹாலக்ஷ்மி தேவியை, அறிவை, சக்தியை, ப்ரதிஷ்டை செய்து பூஜிப்போம். ஓம்."

மாலை

காளிதாஸன் தொடுத்தது

18 அக்டோபர் 1916 ஸ்ரீ ஜெயங்கி 8

குறிப்பு:— இக் கட்டுரை மாலை (2) என்ற தலைப்புடன் மூன்றாம் தொகுதியில் கலைகள் என்ற பகுதியில் வெளியாகியுள்ளது.

மூன்றாம் தொகுதியில் கனி என்ற தலைப்பில் உள்ள கட்டுரையின் முதற்பகுதி மாலை என்ற இக்கட்டுரையின் பாகமாக முதலில் வந்திருக்கிறது.

சமூகம் என்ற பகுதியில் ஹிந்துக்களின் கூட்டம் என்ற கட்டுரையில் ஜாதிப் பிரிவு என்ற பகுதியாக வந்துள்ள பாகமும் மாலை என்ற இக்கட்டுரையிலே கடைசிப் பாகமாக முதலில் வந்திருக்கிறது.

ஜப்பானியக் கவிதை

மிஸ்டர் சி. சுப்பிரமணிய பாரதி

18 அக்டோபர் 1916 கள ஐப்பசி 3

குறிப்பு :— இக்கட்டுரை பாரதி நூல்கள் மூன்றும் தொகுதியில் கலைகள் என்ற பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும் அது சரியானபடி முழு உருவத்துடன் இல்லை. கட்டுரையின் ஒரு பகுதியும், இடையிடையே சில சில வாக்கியங்களும் அதில் காணப்படவில்லை. ஆதலால் சுதேசமித்திரனில் வெளியாகியுள்ளபடி முழுக் கட்டுரையையும் இங்கு தருகிறோம்.

ஸமீபத்திலே "மாடர்ன் ரிவ்யூ" என்ற கல்கத்தாப் பத்திரிகையில் உயோநே நோகுச்சி என்ற ஜப்பானியப் புலவர் ஒரு லிகிதம் எழுதியிருக்கிறார். அதிலே அவர் சொல்வதென்ன வென்றால் :- இங்கிலாந்து அமெரிக்கா என்ற தேசங்களிலுள்ள இங்கிலீஷ் கவிதையைக் காட்டிலும் ஜப்பானியக் கவிதை சிறந்தது. காரணமென்ன ?

மேற்குக் கவிதையில் சொல்மிகுதி. எண்ணத்தை அப்படியே வீண் சேர்க்கையில்லாமல் சொல்லும் வழக்கம் ஐரோப்பியக் கவிதையிலே இல்லை. எதுகை, சந்தம் முதலியவற்றைக் கருதியும், சோம்பற் குணத்தாலும், தெளிவில்லாமையாலும், பல சொற்களைச் சேர்த்து வெறுமே, பாட்டை அது போகிற வழியெல்லாம் வளர்த்துக்கொண்டே போகும் வழக்கம் ஐரோப்பாவிலும் அமெரிக்கா

விலும் அதிகமிருக்கிறது. தம்முடைய மனதிலுள்ள கருத்தை நேரே வெளிப்படுவதில் மேற்குப் புலவர் கதைகளெழுதுவோரைக் காட்டிலும் சக்தி குறைந்திருக்கிறார்கள்.

ஜப்பானில் அப்படியில்லை. வேண்டாத சொல் ஒன்றுகூடச் சேர்ப்பது கிடையாது. கூடைகூடை யாகப் பாட்டெழுதி அச்சிடவேண்டும் என்ற ஒரே ஆவலுடன் எப்போதும் துடித்துக்கொண்டிருப் பவன் புலவனுகமாட்டான். கவிதை யெழுதுபவன் கவியன்று; கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி. புலவனுக்குப் பணம் ஒரு பொருளன்று. வானத்து மீன், தனிமை, மோனம், பலர்களின் பேச்சு இவற்றிலே ஈடுபட்டுப்போய், இயற்கை யுடனே ஒன்றுகி வாழ்பவனே கவி.

★

ஜப்பானிய பாஷையில் பதினேழுசை கொண்ட 'ஹொக்கு' என்ற பாட்டு ஒரு தனிக் காவியமாக கிற்கும். மூப்பத்தோரசையுள்ள 'உத்தா' (உக்தம்) என்பதும் அங்ஙனமே. உயோடோ நோகுச்சி தமது கருத்தை விளக்கும் பொருட்டுச் சில திருஷ்டாந்தங் கள் காட்டியிருக்கிறார். அமெரிக்காவில் மிஸ் ரீஸ் (Miss Lizette Woolworth Reese) என்பதோர் கவிராணி பிருக்கிறார். வேண்டாதவற்றைத் தள்ளி விடுவதில் அந்த மிஸ் ரீஸ் என்ற பெண் புலவர் பெயர் வாங்கியிருக்கிறார். அநாவசியமான பதச் சேர்க்கை, அநாவசியமான கருத்து—விளக்கம் என்ற இரண்டுமில்லாமல் முத்துப்போலே பதங்கள்

கோக்கும் நல்ல தொழிலாகிய, அக் கவிராணி இங்கிலீஷ் பாஷையில் எழுதியிருக்கும் அடிகள் சில வற்றை நோகுச்சி எடுத்துக்காட்டுகிறார்.

மழை

(மிஸ் ரீஸ் எழுதியதன் மொழிபெயர்ப்பு மாதிரியடிகள்)

ஓ! வெண்மையுடையது; மழை இனியது. கூரைமேலே சொட்டுச் சொட்டென்று விழுகிறது; வீட்டுக்குள் நூறு வஸ்துக்கள் ஒடி வருகின்றன. பூண்டுகளின் மணம். பழமையின் நினைவு. இவை யெல்லாம் புல்லாந்தரையிலே குணந் தெரிகிறது. உடைந்த கண்ணாடித் துண்டு போலே. (1)

சிறிய வெளிக்கதவு புடைக்கிறது பார். அது வரை செவந்த கொடிப்பூண்டுகள் நேரே ஓடிச் செல்லுகின்றன. (2)

ஓ! வீட்டுக்குள் நூறு வஸ்துக்கள் வந்து நுழை கின்றன. கற்பூரச் செடியின் மணம். பழய மகிழ்ச்சி, பழய துன்பம்; இனிய வெண்மழையிலே கிடைத்தன. (3)

மேற்கூறிய பாட்டை எடுத்துக்காட்டிவிட்ட பிறகு நோகுச்சி சொல்லுகிறார்:—

"வெண்மையுடையது; மழை இனியது" என்ற முதலடியில் வியப்பில்லை. அதிஸாமான்யமான வார்த்தை. கடைசி விருத்தம் வயிரம்போலிருக்கி றது. அதை மாத்திரம் தனிக் கவிதையாக வைத் துக்கொண்டு மற்றதையெல்லாம் தள்ளிவிடலாம். ஜப்பானியப் புலவன் அப்படியே செய்திருப்பான்

சிறிய பாட்டுப்போதும். சொற்கள், சொற்கள், சொற்கள்-வெறும் சொற்களை வளர்த்துக்கொண்டு போய் என்ன பயன் ?

ஜப்பானிலே பதினெட்டாம் நூற்றாண்டில் "பூஸோன் யோஸாஹோ" என்ற ஜப்பானியக் கவிராயர் ஒரு 'ஹொக்கு' (பதினெழுசைப்பாட்டு) பாடியிருக்கிறார். அதன் மொழிபெயர்ப்பு :—

"பருவமழையின் புழையொலி கேட்பீர், இங் கென் கிழச் செவிகளே." இந்த ஒரு வசனம் ஒரு தனிக் காவியம். பாட்டே இவ்வளவுதான்.

மேற்படி ஹொக்குப் பாட்டைப் படித்துவிட்டுத் திரும்பத் திரும்ப மனனம செய்யவேண்டும். படிப் பவனுடைய அனுபவத்திற்குத் தக்கபடி அதி லிருந்து நூறு வகையான மறைபொருள் தோன் றும். பல பல பதங்களை அடுக்கி ஏடுகளைப் பெருக்கு வது சிறந்த கவிதையன்று. கேட்பவனுள்ளத்திலே கவிதை யுணர்வை எழுப்பி விடுவது சிறந்த கவிதை.

★

மற்றுமொரு நேர்த்தியான "ஹொக்குப்" பாட்டு. வாஷோ மத்ஸுவோ (Basho Matsuso) என்றொரு ஜப்பானியக கவி யிருந்தார். இவர் வறுமையே விரதமாகப் பூண்டிருந்தாராம். ஒரு சீடன் இவரிடம் கல்வி கற்று முடிந்து வீட்டுக்குத் திரும்புகையிலே இவரிடம் மூன்று ரியே (அதாவது ஏறக்குறைய மூப்பது வராகன்) காணிக்கையாகக் கொடுத்தான். இவர் ஒருநாளுமில்லாதபடி புதிதாக

வந்த இந்தப் பணத்தை வைத்துக் காப்பது தமக்குத் தொல்லையாதலால் வேண்டியதில்லை என்று திரும்பக் கொடுத்து விட்டாராம்.

இவருக்கு காகா (Kaga) என்ற ஊரில் ஹொகுஷி என்றொரு மாணாக்கர் இருந்தார். இந்த ஹொகுஷியின் வீடு தீப்பட்டெரிந்துபோய் விட்டது. அந்தச் செய்தியை ஹொகுஷிப் புலவர் தமது குரு வாகிய "வாஷோ—மத்ஸுயோ" என்பவருக்குப் பின்வரும் பாட்டில் எழுதியனுப்பினர்.

"தீப்பட்டெரிந்தது :
விழு மலரின்—அமைதியென்னே !"

மலர் தனக்கு வாழுங்காலம் மாறிக் கீழே விழும் போது எத்தனை அமைதியுடனிருக்கிறதோ அத்தனை அமைதியுடன் மனிதனுக்கு வரும் துன்பங் களை நோக்குகிறான். 'வீடு தீப்பட்டெரிந்தது. ஆனால் அது பற்றித் தன் மனம் அமைதி யிழந்து போக வில்லை' என்ற விஷயத்தை ஹொகுஷி இந்தப் பாட்டின் வழியாகத் தெரிவித்தார்.

★

"சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்" ஜப் பானியக் கவிதையின் விசேஷத் தன்மையென்று நோகுச்சிப் புலவர் சொல்வதுடன், ஆங்கிலேயரின் கவிதை இதற்கு நேர்மாறாக நிற்கிறதென்றும் சொல்லுகிறார். நமக்குள்ளே திருக்குறள் இருக் கிறது. "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்." கிழக்குத் திசையின் கவிதையிலேயே இவ்விதமான ரஸம் அதிகந்தான்.

தமிழ் நாட்டில் மூற்காலத்திலே இது மிகவும் மதிப் பெய்தி நின்றது. ஆனலும், ஒரேயடியாய் கவிதை சுருங்கியே போய்விட்டால் நல்லதன்று. ஜப்பா னிலே கூட எல்லாக் கவிதையும் "ஹொாக்குப்" பாட்டன்று. நோகுச்சி சொல்வதிலே அருமையான உண்மை யிருக்கிறது.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்டினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

ஏன்

கா. வி. தாஸன்

1 நவம்பர் 1916 — நள ஐப்பசி 17

பார்க்க :—பாரதி நூல்கள் மூன்றும் தொகுதி. பகுதி—சமூகம்

புயற் காற்று

22 நவம்பர் 1916 — நள கார்த்திகை 8

குறிப்பு:—இப் பாடல் **பாரதி நூல்கள்** முதல் தொகுதியில் **ஸ்வ சரிதையும் பிற பாடல்களும்** என்ற பகுதியில் வந்துள்ளது. இதுவும் அடுத்து வரும் புதுச்சேரியில் புயற்காற்று என்ற கட்டுரையும் பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட இயற்கை கிகழ்ச்சியைக் குறிக்கின்றன.

புதுச்சேரியில் புயற் காற்று

சி. சுப்பிரமணிய பாரதி எழுதியது

27 நவம்பர் 1916 — ஸ்ரீ கார்த்திகை 13

இரவு

ஸ்ரீ வருஷம் கார்த்திகை மாதம் 8-ம் தேதி புதன்கிழமை இரவு புதுச்சேரியில் யுகப் பிரளயத்தைப் போலே யிருந்தது.

நெடும் பொழுதாக — புதன்கிழமை மாலை தொடங்கியே — மழையும் காற்றும் கடுமையாகத் தான் இருந்தன. இடைவிடாத மழை. இடைவிடாத காற்று.

இரவு பதினொரு மணிக்குமேல் பெரிதாக வளர்ந்து விட்டது. ஊழிக் காற்று; படல், படல், படல்.

வீடுகள் இடிந்து விழுகின்றன; மரங்கள் சாய்கின்றன; காந்த விளக்குக் கம்பி அறுந்து போகிறது. நான்கு சுவர்களும் மேலே விழுந்து விடும் போலிருந்தன; நல்ல கோட்டை போன்ற வீட்டிலே இருந்தேன். இருந்தாலும் சத்தம் பொறுக்க முடியவில்லை. ஊழிக் காற்று. மருத்துக்களின் களியாட்டம். பேரச்சம்.

வெளியே என்ன நடக்கிறதென்று சாளரத்தைத் திறந்தால் மழைநீர் சரேலென்று வெள்ள

மாக உள்ளே பாய்கிறது. ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லை. ஒரே பேரிருள். திறந்த சாளரத்தை மூடுவது பிரமப் பிரயத்தனம்.

காலைப் பொழுது

கார்த்திகை மாதம் 9-ம் தேதி வியாழக்கிழமை நல்ல பொழுது விடிந்தது. புயற்காற்று நின்றது.

ஊர்க்காரர் வெளியேறி வீதிக்கு வந்தார்கள். புதுச்சேரிப் பட்டணத்தை நேற்றுப் பார்த்த கண்ணுக்கு இன்று அடையாளம் தெரிய இடம் இல்லை. தெருவெல்லாம் ஒடிந்த மரங்கள். தென்னையும் பூவரசும் வீதிகளில் அதிகம். நூற்றில் எண்பது முறிந்து கிடந்தன. ஓடுகளும், மாடங்களும், கூரைகளும் சேதப்படாத வீடு நான் ஒன்றுகூடப் பார்க்கவில்லை. சில கூரைகள் நெடுந்தூரம் தள்ளி விழுந்து கிடந்தன. காலையிலே தபால் வரவில்லை. தந்திக் கம்பிகளும் காந்த விளக்குக் கம்பிகளும் அறுந்துபோய் விட்டன. காந்த விளக்குத் தொழிற் சாலையின் தலை விழுந்து விட்டது. ஈசுவரன் கோயிலில் சிகரம் விழுந்து விட்டது. சுற்று வீதியில் ஏழைக் குடிசைகள் அழிந்து போய்விட்டன. உயிர்ச் சேதமும் நிகழ்ந்திருக்கிறது. தொகை தெரியவில்லை.....

இதுவரை கிடைத்த தகவல் :—

முத்தியால் பேட்டையில் 6000 வீடு நெசவுகார ருண்டு. அநேகமாக அத்தனை வீட்டிலும் தறி, சாமான் எல்லாம் சேதம். பெரும்பாலும் வீடுகளே

சேதம். மொத்த நஷ்டம் கணக்கிட முடியவில்லை. ஜனச்சேதம் அதிகமில்லை.

பாக்கமுடையான் பேட்டையில் கிராமத்தில் பெரும்பகுதி அழிந்து போய்விட்டது. ஜனச்சேதம் அதிகம்.

அரியாங்குப்பம், குறிச்சிக்குப்பம் முதலிய பக்கத்துக் கிராமங்களிலெல்லாம் ஜனச் சேதமும் வீடு நஷ்டமும் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

பல வாலிபர்கள் ஜனக் கஷ்டத்தை இயன்ற வரை நீக்கும் பொருட்டாக அன்னதானம் செய்து வருகிறார்கள். இன்றுகூட ஊதலடிக்கிறது.

புயற்காற்றுத் தேவரை வணங்குகிறோம். அவர்கள் உலகத்தில் சாந்தி யேற்படுத்துக.

(வெள்ளி நவம்பர் 24, புதுச்சேரி)

புதன்கிழமை ராத்திரி அடித்தது புயற்காற்றில்லை. அது மருத்துத் தேவர்களின் களியாட்டம். தெருவெல்லாம் ஒடிந்த மரம். காடு தோட்டமெல்லாம் அழிந்த வனம். பயிரெல்லாம் வெள்ளம் போனதரை.

வீடெல்லாம் இடி சுவர்; பல கிராமங்களிலே கூரை வீடுகள் அநேகமாக ஒன்றுமில்லை யென்று சொல்லுகிறார்கள். கடற்பாலத்திலே போட்டிருந்த ஆஸனப் பலகைகளைக் காற்றுக் கொண்டு போய் விட்டது. கலவை காலேஜில் பெரிய மகிழ மரம் ஒடிந்து விழுந்துவிட்டது. ஜன்னல்கள் சேதம். இன்று வெள்ளிக்கிழமையான போதிலும் காற்றுக் காக ரஜா. பெரிய காலேஜிலும் ரஜா.

அனேகமாக எல்லாக் கச்சேரிகளிலும் ராஜா வாகவே நடந்து வருகிறது. காந்த விளக்குக் கம்பி களை இப்போதுதான் ஒரு ஓரத்தில் ஒட்டத் தொடங்கியிருக்கிறார்கள். தெருவில் வெட்டுண்டு கிடக்கும் மரங்களை இன்னும் எல்லா இடங்களிலும் எடுக்கத் தொடங்கவில்லை. பல இடங்களில் காக்கை கள் விழுந்து செத்துக் கிடக்கின்றன. இந்த மாதிரி உற்பாதம் எந்தக் காலத்திலும் பார்த்தது கிடை யாது என்று பெரிய பெரியவர்களெல்லாம் சொல்லு கிறார்கள்.

ராஜாத் தோட்டம்

இந்த ஊரில் ராஜாத் தோட்டம் ஒன்றிருந்தது. ஆஹா! என்ன சோர்த்தியான உபவனம். வாயு அந்தத் தோட்ட முழுவதையும் அழித்துவிட்டான். மரங்களெல்லாம் கையாலே ஒடிக்கப்பட்ட கரும் பைப் போலே ஒடியுண்டிருக்கின்றன. ஊரைச் சுற்றிலும் காலுக்குக் கிராமங்கள் ஜலத்துக்குக் கீழே. இங்கே பஞ்சம். வாழைத் தோட்டங்களை இழந்தார் பலர். வெற்றிலைத் தோட்டமிழந்தவர் பலர். மேற்குப் பகலில் சலவைப் பங்களாவுக்கு எதிரே வயல் நடுவிலுள்ள ஒரு திட்டை மேலே ஏழெட்டுப் பேர் நின்றுகொண்டிருந்தார்கள். சுற்றிலும் தண் ணீர். ராத்திரி மழைகெல்லாம் அந்தத் திட்டை வெளியிலே நின்று விறைத்தார்கள். பகலிலே ஆட்கள் போய் நீரிலே நீந்தி இழுத்துக் கொண்டு வந்தார்கள். தண்ணீரில் எத்தனை ஜனங்கள், எத்தனை ஆடுமாடுகள் மிதந்து போயிருக்கக் கூடுமோ? கணக்குத் தெரிய இடமில்லை. விறகு

வெட்டிகளுக்கு கல்லாபம். ஒரு தென்னை மரத்தை வெட்டித் தள்ளினால் இரண்டு ரூபாய் கூலி. வீடு காப்புக்காக அபாயமாகத் தோன்றும் தென்னை மரங்களையெல்லாம் வெட்டுகிறார்கள்.....

அன்னதானம்

அன்னதானம் பல இடங்களில் நடக்கிறது. கஞ்சி விடுகிறார்கள். கஷ்ட நிவர்த்தி போதாது. ஏழை ஜனங்களின் கஷ்டங்கள் பொறுக்கக் கூடிய நிலைமையிலே யில்லை. தெய்வந்தான் ரக்ஷிக்க வேண்டும்.

குறிப்பு —இந்தக் கடுமையான புயற்காற்றைப் பற்றி கவிர் சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதி சரித்தம் என்னும் தூலில் திரு ஆக்கூர் அனந்தாச்சாரி அவர்கள் கீழ்க் கண்டவாறு எழுதியுள்ளார்:-

"ஓர் காளிரவு முழுதும் பாண்டியில் கடும் புயலும் மழையும் மாறி மாறி அடித்தன. வெள்ளைக் காரத் தெருவில் பாபு அரவிந்த கோஷ்ம், ஈசுவரன் கர்ம ராஜா கோவில் தெருவிலுள்ள வீடொன்றில் ஸ்ரீமான் பாரதியாரும், மற்றொன்றில் வ. வெ. சு. அய்யரும் குடியிருந்தனர். ஏறக் குறைய எல்லா வீடுகளும் புயலுக்கும் மழைக்கும் சரணாகதி யடைந்து தரையோடு தரையாய்ப் போயின. ஜனங்கள் மழை குளிர் இவற்றால் நடு நடுங்கிப் போயினர். வ. வெ. சு அய்யர் வீட்டில் முழங்கால் வரை ஜலம். தமது குழந்தைகளைத் தோளின் மேல் சுமந்து நின்றவண்ணமாகி இரவெல்லாம் இருந்தார். பாரதியார் அதற்கு முந்தின நாள்

குடியிருந்த வீடு திடீரென்று விழுந்தது. ஆனால் அன்று புதிதாய்க் குடி புகுந்த வீடோ அப் பெரும் புயல் மழை இவற்றை லக்ஷியம் செய்யாமல் ஒரு வாறு தாங்கியது. ஆனால் நெற்குவியல் மாத்திரம் நனைந்துவிட்டது. பாரதியார் வீட்டுக் கண்ணாடி ஜன்னல்களைச் சுவரில் ஓயாமல் மோதவைப் பதே காற்றின் வேலையாயிருந்தது. கண்ணாடி உடைந்து தூள் படுத்திருக்கும் அவரது குழந்தை கள் மீது விழுந்தது. அப்போது அவைகளுக்கு எவ்வித ஆபத்தும் வரக் கூடாதெனப் பராசக்தி யைப் பிரார்த்தித்தார். இச் சம்பவத்தால்

> 'காற்றடிக்குது கடல் குமுறுது' முதல்
> 'தனக் குழந்தைகள் துன்பப்படா நிங்கு
> தேவியருள் செய்ய வேண்டுகின்றோம்.'

வரை உள்ளதோர் ஸ்வாரஸ்யமான கீதம் பிறந்தது.

"நள வருஷம் கார்த்திகை மாதம் 8வது புதன் கிழமை இரவு முழுதும் பிரளய காலமாகவே இருந்து ஜனங்களுக்குப் பெரிதும் பீதியை உண்டாக்கியது. பொழுது விடிந்தது. புயலும் மழையும் அஸ்த மித்தன. வெளியே வந்து பார்த்தால் அலங்கோல மாகக் கிடந்தது. பாரதி, அய்யர், அரவிந்தர் முதலியோர் பண வசூல் செய்து கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவினர்."

குறிப்பு:- ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி அவர்கள் எழுதிய பாரதியும் கவிதையும் என்னும் நூலில் இந்தப் புயற்காற்றில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு நேர்ந்த கொடிய அநுபவமும் மற்ற விபரங்களும் தரப்பட்டுள்ளன.

சங்கீத விஷயம்

சி. சுப்பிரமணிய பாரதி எழுதுகிறார்

19 டிசம்பர் 1916 கள மாகழி 15

பொதுப் பள்ளிக்கூடத்தில் சங்கீதம் கற்றுக் கொடுக்கவேண்டும். இது மற்ற நாகரீக தேசங்களில் சாதாரணமாக நடந்து வருகிறது. உயிரிலே பாதி ஸங்கீதம். சாஸ்திரத்தை யாருமே பேணாமலிருந்தால், பாடகர்கூட அதைக் கைவிட்டு விடுவார்கள். ஆதலால் சுதேசமித்திரன் (விசேஷ அனுபந்தம்) பத்திரிகையில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் ஸங்கீதம் சீர்திருத்த வேண்டுமென்ற கருத்துடன் எழுதிய விஷயத்தைப் படித்தபோது எனக்குச் சந்தோஷ முண்டாயிற்று.

இங்கிலீஷ் பாஷையிலே ஒரு பெரிய கவிராயன் ஸங்கீத ஞானமில்லாதவரைக் கள்ளரென்றும் சூறும்பரென்றும் சொல்லிப் பழிக்கிறான். பாட்டு ஸகலருக்கும் கல்லது. தொண்டையும் எல்லோருக்கும் கல்ல தொண்டைதானென்பது என் மதம். கூச்சத்தாலும் பழக்கக் குறைவாலும் பலர் தமக்கு கல்ல குரல் கிடையாதென்று வீணே நினைத்துக் கொள்கிறார்கள்.

பாட்டுக் கற்க விரும்புவோர் காலையில் சூரியனுக்கு முந்தியே எழுந்து பச்சைத் தண்ணீரிலே குளித்துவிட்டுக் கூடியவரை சுருதியும் லயமும் தவறு

தபடி ஸரளி வரிசை முதலியன பழகவேண்டும். உச்ச ஸ்தாயிதான் எப்போதும் கல்லது. உடம்பை நிமிர்த்து முகத்தை நேரே நிறுத்தி முகத்திலும் வாயிலும் கோணல் திருகலில்லாதபடி வாயை ஆவென்று சிங்கம் போலே திறந்து பாடவேண்டும். தொண்டையிலே கரகரப்பிருந்தால் வெறு மிளகைத் தின்னவேண்டும். கற்கண்டு சேர்ப்பது நல்ல தில்லை.

பாட்டுக் கச்சேரி நடத்தும்போது, நடுவிலே மற்ற வாத்தியக்காரரை வாசிக்கச் சொல்லிவிட்டுப் பாடகர் வெறுமே இருப்பதும், தெம்மாங்கு முதலான வேடிக்கைப் பாட்டுக்கள் பாடுவதும் தமக்கு ரஸப்படவில்லை யென்று ஸ்ரீநிவாசய்யங்கார் சொல்லுகிறார். அதை நான் ஒரு பகுதி ஆக்ஷேபிக்கிறேன். வீணை, குழல் முதலிய இசைக் கருவிகளும், மத்தளம் முதலிய தாளக் கருவிகளும் வாய்ப்பாட்டின் உதவியில்லாமல் தனியே இன்பந் தருகின்றன.

வாத்யம் எட்டாத ஸ்வரத்தைத் தொடப்போய்க் கஷ்டப்படாது. தொண்டையிலே கரகரப்பும், அடைப்பும் இருக்கும்போது கச்சேரி நடத்த வராது. சரியானபடி கருதி சேர்ந்த பிறகுதான் தொழில் செய்யத் தொடங்கும்.

வீணையும் குழலும் பறையும் வாய்ப்பாட்டில்லாமல் தனியே ஒலிப்பது பழைய நாளிலும் உண்டு. கண்ணன் குழலுக்கு இடைப்பெண் ஒத்தூப் பாடியது முண்டு. எம்பெருமான் தனியே இசைப்பது

மூண்டு. தெம்மாங்கு முதலியன ஹாஸ்ய ரசத்தை உடையவை. அவற்றை முழுதும் நிறுத்திவிடக் கூடாது. ஆனல் ஒரே மெட்டை வளைத்து வளைத்துப் போன இடமெல்லாம் சொல்லிப் பயனில்லை. கமிழ் பிரையாகவும் பொருள் ரஸமில்லாமலும் பாட்டுக்கள் இருந்தால் அவற்றை மன்றிலே கொண்டு வருதல் நியாயமில்லை.

இருந்தாலும் மத்தளக்காரனுக்குப் பாட்டுக் காரன் பயந்து கட்டுப்பட்டு நடக்கும் விபரீதம் சில இடங்களிலே காணப்படுவதைக் கண்டனை செய்து ஸ்ரீநிவாஸய்யங்கார் சொல்லும் வார்த்தை ஒப்புக் கொள்ளத்தக்கது.

ஏனென்றால் பாட்டுக்காரன் தனது பாட்டுக் களுக்குத் தவருமல் தாளம் போட்டு வரவேண்டும். இவ்வளவு தாள ஞானம் இருந்தால் பாடகனுக்குப் போதும். அதிகமிருந்தால் நிச்சம். இந்த விஷயம் தெரியாமல் மத்தளக்காரனுக்குப் பாட்டுக்காரன் பயப்படுவது மிகவும் வேடிக்கை.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் ராகப் பழக்கம், வர்ணங்கள், கீர்த்தனங்கள் முதலிய விஷயங்களைப் பற்றி எழுதியிருப்பதெல்லாம் (பெரும்பகுதி) கேட்டவுடன் நியாயமென்று கொள்ளத்தக்கது. கீர்த் தனங்கள் பழகுவது மாத்திரம் அவரவரிஷ்டப்படி போகவேண்டும். எது எப்படியாயினும் யாராவது ஒரு வித்வான் இந்தத் தமிழ்நாட்டுக்குப் புதிய கீர்த்தனங்கள் ஏற்படுத்தும் வழிகாட்டிக் கொடுத்

தால், ஆயிரம்பேர் அதைப் பின்பற்றி மேன்மை பெறுவார்கள்.

குறிப்பு:—இதே தலைப்புடன் பாரதி நூல்கள் மூன்றும் தொகுதியில் மற்றொரு கட்டுரை இருக்கிறது. அக்கட்டுரை பாட்டு எனும் தலைப்புடன் சுதேசமித்திரனில் வெளியானதை முன்பே குறித்துக் காட்டியிருக்கிறோம். இக்கட்டுரை அதன் தொகுதியில் சேர்க்கப்ப

காலம்

காளிதாஸன்

26 டிசம்பர் 1916 — நல மார்கழி 22

'ஜாதி' என்ற சொல் இரண்டர்த்தமுடையது. முதலாவது, ஒரு தேசத்தார் தமக்குள் ஏற்படுத்தி வைத்துக் கொள்ளும் பிரிவு. வேளாள ஜாதி, பிராமண ஜாதி, கைக்கோள ஜாதி என்பதுபோல். இரண்டாவது, தேசப் பிரிவுகளைத் தழுவிய வேற்றுமை ஜப்பானிய ஜாதி, சீன ஜாதி, பார்ஸீ ஜாதி, பாரத ஜாதி, ஆங்கிலேய ஜாதி, ஜர்மானிய ஜாதி. ருமானிய ஜாதி என்பதுபோல். இவ்விரண்டும் அதிக அனுகூலம் இல்லையென்பது ஸ்ரீமான் ரவீந்திரநாத டாகூருடைய சக்ஷி.

"அமெரிக்காவிலே பிறந்தவன் தன்னை அமெரிக்க ஜாதியென்பதும், இங்கிலீஷ் ஜாதி இல்லையென்றும் நினைத்துக் கொள்ளுகிறான். இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயனுக்கும் குடியரசுத் தலைவன் வில்ஸனுக்கும் நடை, உடை, ஆசாரம், மதம், பாஷை எதிலும் வேற்றுமை கிடையாது. ஆனால் தேசத்தை யொட்டி வேறு ஜாதி, நேஷன். இந்த தேச ஜாதிப் பிரிவு மேற்குப் பக்கத்தாரால் ஒரு தெய்வம் போலே ஆதரிக்கப்படுகிறது. அங்கு, யுத்தங்களுக்கு இக்கொள்கை ஒரு முக்கிய காரணம். எல்லா தேசத்தாரும் ஸகோதரரென்றும், மனுஷ்ய

ஜாதி முழுதும் ஒன்றே யென்றும், ஆதலால் தேச வேற்றுமை காரணமாக ஒருவரை யொருவர் அவமதிப்பதும் அழிக்க முயல்வதும் பிழைகளென்றும் ஸ்ரீ டாகூர் சொல்லுகிறார்.

அமெரிக்காவில் ஒரு சபையிலே இவர் மேற்படி கொள்கையை எடுத்துக் காட்டுகையில், அந்த தேசத் தாரெருவன் இவரை நோக்கி, "இவ்விதமான கொள்கையிலிருந்தது பற்றியே உங்கள் தேசத்தை அன்னியர் வென்று கைப்பற்றிக் கொள்ள நீங்கள் தோற்றுக் கிடக்கிறீர்கள்" என்றான்.

"நாங்கள் இப்போது புழுதியோடு புழுதியாக விழுந்து கிடந்தாலும் எங்கள் பூமி புண்யபூமி. உங்களுடைய செல்வத்தின்மேலே தெய்வசாப மிருக்கிறது" என்று ரவீந்திரநாத டாகூர் அவருக்கு மறுமொழி சொன்னராம். அதாவது, இந்த நிமிஷத்தில் செல்வத்திலும், பெருமையிலும் நம்மைக் காட்டிலும் அமெரிக்கா தேசத்தார் உயர்வு பெற்றிருந்த போதிலும், இந்த நிலைமை எப்போதும் மாறாமலிருக்குமென்று அமெரிக்கர் நினைப்பது பிழை. நாங்கள் தெய்வத்தையும் தர்மத்தையும் நம்பியிருக்கிறோம். கீழே விழுந்தாலும் மறுபடி எழுந்து விடுவோம். அமெரிக்கா விழுந்தால் அதோகதி. ஆதலால், இனிமேலேனும் ஹிந்து தர்மத்தை அனுசரித்து உலக முழுவதிலும் எல்லா தேசத்தாரும் உடன் பிறப்பென்றும், சமானமென்றும் தெரிந்து கொண்டு, பரஸ்பரம் அன்பு செலுத்தினால் பிழைக்கலாமென்று ரவீந்திரர் அவர்களுக்குத் தர்மோபதேசம் செய்கிறார்.

வெளித் தேசத்தாருக்குத் தர்மோபதேசம் செய்கையில், நமது நாட்டில் குற்றங்கள் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா? இங்கே, அநாவசியமான ஜாதி விரோதங்களும், (அன்புக் குறைவுகளும்) அவாந்திப்புக்களும். வளரவிடலாமா? அவற்றை அழித்து உடனே அன்பையும், உடன் பிறப்பையும் நிலைநாட்டுவது நம்முடைய கடமை யன்றோ?

எது எப்படியானாலும், இந்த தினத்தில் இந்த க்ஷணத்தில் நாமெல்லோரும் (பறையர், பார்ப்பார், எல்லாரும்) ராஜ்யாங்க விஷயத்தில் ஒரே ஜாதி. இப்போது எங்களுக்கு அதிகாரிகள் தயவுசெய்ய வேண்டிய விஷயம் என்னவென்றால்;

எல்லா ஜாதியாரும் சீட்டுப் போட்டுப் பிரதி நிதிகள் குறிக்க வேண்டும். அந்தப் பிரதிநிதிகள் சேர்ந்ததொரு மஹாசபை வேண்டும். ராஜ்யத்தில் வரவு செலவு உட்பட எல்லா விவகாரங்களும் மேற்படி மஹாசபையார் இஷ்டப்படி நடக்க வேண்டும். அவ்வளவுதான். மற்றப்படி ஆங்கிலேய சாம்ராஜ்யத்தை விட்டு விலகவேண்டு மென்ற யோசனை எங்களுக்கில்லை. மேற்படி பிரார்த்தனை பிராமணர் மாத்திரம் செய்வதாக அதிகாரிகள் நினைக்கலாகாது. எல்லா ஜாதியாரும் சேர்ந்து விண்ணப்பம் செய்கிறோம். விடுதலை விண்ணப்பத்துக்கு நல்ல உத்தரவு கொடுக்கவேண்டும்.

குறிப்பு:—இக்கட்டுரை பாரதியார் நூல்கள் மூன்றும் தொகுதியில் சமூகம் என்னும் பகுதியில் தேசிய கல்வி என்ற கட்டுரையின் ஒரு

பகுதியாகத் தவறுகச் சேர்க்கப்பட்டுள்ளது. தேசிய க் கல்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். இது தனிக் கட்டுரையாக இருக்கவேண்டும் என்பதற்காகவே முழுவதையும் இங்கு வெளியிடுகிறோம்.

வளர் பிறை

கோவிந்தராஜன்

11 ஜனவரி 1917 ஸ்ரீ ஜய வருஷம் கழி 28

பார்க்க:—பாரதி நூல்கள் இரண்டாம் தொகுதி. பகுதி—கதைக் கொத்து.

தர்மம்

சக்தி தாஸன்

16 ஜனவரி 1917 கள மலர் 1

இக்கட்டுரை மூன்றாம் தொகுதியில் வெளிவந்துள்ளது. பகுதி - தத்துவம்.

ஆனால் இதன் கடைசி இரு பத்திகளாகிய மீழ்க்கண்டவை அதில் வெளியாகவில்லை. அவற்றை இங்கு தருகிறோம்.

இவருடைய கேள்விகள் சற்று விசேஷமாகத் தோன்றியபடியால் அவற்றைப் பற்றி இத்தனை தூரம் எழுதும்படி நேரிட்டது. மேற்படி விசாரணைக்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டுமானால் தர்க்க சாஸ்திரத்தில் வல்லவர்கள் வேண்டும்.

பொதுவாக எனக்குள்ள புராதனக் கொள்கையை மாத்திரம் நான் தெரிவித்துக கொள்ளுகிறேன். கல்லொழுக்கமாவது என்னவென்றால் தெய்வத்தை நம்பிப் பிறருக்குத் தீங்கு நினைக்காமல் நம்மிஷ்டப்படி நடத்தல்.

நாற்குலம்

சக்தி நாவலன்

13 ஜனவரி 1917 — நாள் எண் 6

பார்க்க :—மூன்றும் தொகுதி. பகுதி—சமூகம்.

பழைய உலகம்

காளிதாஸன்

19 ஜனவரி 1917 — நாள் எண் 7

பார்க்க :—மூன்றும் தொகுதி. பகுதி—சமூகம்.

கிளிக் கதை

காளிதாஸன்

26 ஜனவரி 1917 — நாள் எண் 14

பார்க்க :—இரண்டாம் தொகுதி. பகுதி—கதைக் கொத்து.

குடிப் பாங்கு

கானிதாஸன்

2 பிப்ரவரி 1917 கள தை 21

இங்கிலாந்திலுள்ள "ந்யூ ஸ்டேட்ஸ்மன்" என்ற பத்திரிகையில் ஷெ தேசத்துக் குடியுரிமைக் காப்பு மஹாசபையின் கிளையாகச் சேர்ந்த வியாபார ஐக்யப் பகுதிச் சங்கத்தின் கௌரவ காரியதரிசி ஒரு கடிதமெழுதி யிருக்கிறார். அதில் ஒரு பகுதி இங்கு மொழிபெயர்க்கப் படுகிறது. ஷெ மஹாசபையின் நோக்கங்கள் என்னவென்றால்:—

1. 1916-ஆம் வருஷத்து ராணுவச் சேவக விதிகளை நீக்கிவிடும்படி வேலை செய்வதும், நமது (ஆங்கிலேய) ஜாதிக்கு ராணுவச் சேவகம் எப் போதும் கட்டாயமாகாதபடி தடுப்பதும்;

2. சொல்லுரிமை, குடிவிசாரணை (படை விசாரணை யல்லாதது) முதலிய ப்ரிடிஷ் ஜாதி யாரின் மற்றக் குடியுரிமைகளையும் காப்பாற்றிக் கொள்ளுதல்;

3. குடி விடுதலைக்கு இடர் விளைவிக்கக்கூடிய ராணுவச் சேவகச் சட்டம், பூமி ரக்ஷணைச் சட்டம் முதலிய சட்டங்களின் அமலைக் கவனித்துக் கொண்டு வருதல்;

4. ஷெ சட்டங்களின் குண காரியங்களை வளரவிடாதபடி எதிர்த்தல் என்பன.

உள்நாட்டு மந்திரியாகிய மிஸ்டர் ஸாமுயெல் ஹோர் சபையின் நோக்கங்களைக் குறிக்குமிடத்தே தாம் விரோதப்படுவதாகவும், ஹோர் சபையின் காரியம் தேச நன்மைக்குக் கேடு விளைவிக்கு மென்றும் சொல்லுகிறார். ஆனால் இந்த சபையின் தலைவரோ ராபர்ட் ஸ்மில்லி, பண்டித க்ளிபோர்டு, மாஸிங்ஹாம், ப்ரெய்ல்ஸ்போர்டு முதலிய கீர்த்தியுள்ள பண்டிதர். இவர்களுடைய கார்டிப் நகரத்துக் கூட்டத்திற்குக் கிரயச் சீட்டு வாங்கி வந்த ஜனங்களைத் தவிர்த்து மற்றப் பிரதிநிதிகளின் விவரம் பின்வருமாறு:—

வியாபார ஐக்கியக் கிளைகள் - 220 பிரதிநிதி. வியாபார சபைகளும் ஸ்தலத் தொழிற் சங்கங்களும் அனுப்பிய பிரதிநிதிகள் 37.

ஸமூஹ (ஸோஷலிஸ்ட்) கக்ஷி சபைகளும் ஸமாதான சபைகளும் அனுப்பிய பிரதிநிதிகள் 100. மதாபிமான சங்கத்தார்களின் பிரதிநிதிகள் 13. கூட்டுறவு சபையார்களின் பிரதிநிதிகள் 16. ஸ்திரீ சபையாரின் பிரதிநிதிகள் 29. பகுதிப் படாதோர் 34.

இந்த மஹா சபையுடன் 500 சபைகள் வரை சேர்ந்திருக்கின்றன.

மேற்படி காரியதரிசி சொல்லியிருப்பதிலிருந்து ஹோர் சபையின் காரியங்கள் உள்நாட்டு மந்திரிக்கு ஸம்மதமில்லை யென்று தெரிகிறது. அப்படியிருந்தும், உள்நாட்டு மந்திரி அவர்களுடைய கூட்டத்தைத் தடுக்காமலிருந்தது அவருடைய பெருந்

தன்மையை விளக்குகிறது. ஜனங்களின் உரிமைகளை எதிர்த்தால் பிரமாத முண்டாகுமென்ற நிர்மானத்தினால் உள்நாட்டு மந்திரி மேற்படி கூட்டத்தை அதிகாரிகள் தடுக்காதபடி நியமித்திருக்கலாமென்று மேற்படி காரியதரிசி தமது கடிதத்தில் சொல்லுகிறார். அதை நாம் நம்பவில்லை. பிரிடிஷ் மந்திரிகள் இயற்கையிலேயே குடியுரிமைகளைத் தடுக்க மனதில்லாதவர்கள். இது நிற்க. "எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்று திருவள்ளுவர் சொல்லுகிறார்.

ஆதலால், மேடை குடியுரிமைக் காப்புச் சபையார் தேசப் பொதுமைக்கு விபத்து நேர்ந்திருப்பதைத் தடுத்து வெற்றி பெறுவதாகிய ஒரே நோக்கத்துடன் எல்லாக் காரியங்களும் செய்யாதபடி சில்லரைச் சட்டங்களின் மெதுவான ப்ரயோகங்களைக் கண்டனம் பண்ணிக் கொண்டிருப்பது லௌகிகமில்லை யென்றாலும், இந்த விஷயத்தில் அவர்களுடைய செய்கை விபரீதமென்பது மெய்யேயானாலும், அவர்களுடைய வார்த்தையில் எத்தனை குன்றுமணி உண்மை சேர்ந்திருக்கிறதென்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

யுத்தம் நடப்பது காரணமாக ஜனங்களுடைய ஸாதாரண உரிமைகளை அதிகாரிகள் புறக்கணிப்பது சில ஸமயங்களில் அவசியமாக ஏற்பட்ட போதிலும், ஒரேயடியாக ஜன தர்மங்களைப் படுகுழியிலே கொண்டு அமிழ்த்து விடும்படி ஜனத் தலைவர் பார்த்துக் கொண்டிருக்கலாமா? யுத்த

காலத்தில் ஜன உரிமை எவ்வளவு தூரம் வளைய இடம் கொடுக்கலாம்? அதை எல்லைப்படுத்த வேண்டிய காரியம் இப்போது ஐரோப்பியப் பண்டிதர்களின் வந்து சூழ்ந்திருக்கிறது.

நான விஷயங்கள்

காளிதாஸன்

13 பிப்ரவரி 1917 *நவ பாரதி* 2

குறிப்பு:—இக்கட்டுரை மூன்றும் தொகுதியில் சமரசம் என்ற பகுதியில் வெளியாகியுள்ளது.

இதில் உள்ள ஒரு பகுதியான **பருவ நிலைப்பு** என்னும் பாகம் **பஞ்சாங்கம்** என்ற தலைப்பின் கீழ் **கலைகள்** என்னும் பகுதியில் தனிக் கட்டுரையாக இருக்கிறது.

நம்பிக்கை

13 பிப்ரவரி 1917 *நவ பாரதி* 2

பார்க்க:—மூன்றும் தொகுதி. பகுதி—தத்துவம்.

தொழில்

5 மார்ச் 1917 ஈள மழசி 22

I

(வசனதிரட்டு—"ஆர்ய" பத்திரிகை)

1. மனுதர்ம சாஸ்திரம் சொல்லுகிறது :—தொழிலாளியின் கை தொழில் செய்யும்போது பரிசுத்தமாகிறது.

2. சீ-கிங் என்ற சீன ஞானி :—தர்மிஷ்டன் எப்போதும் முயற்சியோடிருப்பான்.

3. (கபீ) ஸலோமான் என்ற யூதஞானி :—சோம்பேறியின் மனவிருப்பம் அவனையே கொல்லுகிறது.

4. தோல்ஸ்தோய் என்ற ருஷிய ஞானி :—தொழில் எத்தனை அசுசியாக இருந்தாலும், அதைச் செய்வதில் அவமானமில்லை. சோம்பலொன்றுதான் அவமானம்.

5. உத்தம ஸூக்தம் என்ற பௌத்த நூல் சொல்லுகிறது :—சோம்பல் ஒரு குற்றம். தொழிலின்றி வாழ்தல் ஒரு மலம்.

6. தோரோ என்ற அமெரிக்க ஆசிரியர் :—உடம்பை சோம்பலுக்கும் சொகுசுக்கும் இரையாக்கி வைத்திருப்பவனை ஞானியாகக் கொள்ளலாகாது. ஆத்மாவுக்கு உடம்பே முதலாவது சீடன்.

7. கார்லில் என்ற ஆங்கிலேய ஆசிரியர் :— சந்தேகம், விசனம், மனச்சோர்வு, கோபம், ஏக்கம், இந்தப் பிசாசுகளெல்லாம் மனிதனை அடிக்கும் பொருட்டுப் பதுங்கி நிற்கின்றன. அவன் சோம்பலுக் கிடங்கொடுக்கும்போது இவையெல்லாம் அவனை வந்து தாக்குகின்றன. தீவிரமாக உடம்பை உழைப்பதே இந்தப் பிசாசுகள் அடிக்காமல் தன்னைக் காத்துக் கொள்ளுவதற்கு நிச்சயமான வழி. தொழிலைக் கைக்கொண்டால், பிறகு எந்தப் பிசாசும் பக்கத்தில் நெருங்காது. மிஞ்சி வந்தால், தூரத்திலிருந்து உறுமும். அவ்வளவுதான்.

8. மோந்தாஞ் என்ற ப்ரான்ஸ் தேசத்துப் பண்டிதர் :—சோம்பலை நரகவாதனைகளில் ஒன்றாகக் கணக்கிடவேண்டும். அதைச் சிலர் சொர்க்க இன்பங்களில் ஒன்றாக நினைக்கிறார்கள்.

9. நபி ஸாலேமான் :-சோம்பேறியே, எறும்பினிடம் போ. அதன் நெறிகளைப் பார். உனக்குப் புத்திவரும்.

II

விளக்கம்

கார்ல் மார்க்ஸ்

மேலே மொழிபெயர்த்திருக்கிற வசனங்களில் தொழிலில்லாதவனுக்கு ஆத்ம ஞானமில்லையென்று தோரோ (6) சொல்லுகிறார். ஆத்மாவுக்கு முதலாவது சிஷ்யன் சரீரமென்பது அவர் கொள்கை. ஆத்ம

ஞானி சோம்பேறியாக இருக்கமாட்டானென்ற இவ ருடைய கொள்கை பகவத்கீதையின் கருத்துக்கு இணங்கியதேயாகும். தொழிலின்றியிருப்பவனுக்கு விடுதலையில்லை, ஞானமில்லை, பக்தியில்லை. அவ னுக்குச் சோறு கிடையாது; தண்டச் சோறு தின்று தொழில் செய்யாதிருப்பவன் கொழுத்து நோய் கொண்டு சாவான். இந்த விஷயங்கள் பகவத்கீதை யில் மிகவும் தெளிவாகச் சொல்லப்படுகின்றன.

கார்லில் (7) என்ற ஆங்கிலேய ஆசிரியர் தொழி லின்றியிருப்பவனைச் சந்தேக முதலிய பிசாசுகள வந்து தாக்குமென்று சொல்லிய வார்த்தை பொது அனுபவத்திலே காணத்தக்கது. சந்தேகம், பயம் முதலிய பிசாசுகள் வந்து தாக்காமலிருக்கும் பொருட்டாகவும், அங்ஙனம் தாக்கும் போது அவற்றை மடிக்கும் பொருட்டாகவும் தொழிலென்ற மருந்து கடவுள் கொடுத்திருக்கிறார்.

பூஜை, கல்வி, போதனை முதலியனவும் சரீர உழைப்புப் போலவே கவலையை நீக்கி உடம்பைப் பேணும். உண்மையாகச் செய்யப்படும் பூஜையும், உபதேசமும் எல்லாத் தொழில்களைக் காட்டிலும் சிறந்தன. பொய்ப் பூஜையும், காசைப் பெரிதாக நினைத்துச் செய்யும் ஞானோபதேசமும் மிகவும் இழிந்த தொழில்களாகும். பல இடங்களில் வியா பாரிக்குள்ள மதிப்புப் பூசாரிக்கும் குருக்களுக்கும் இல்லாதிருக்கக் காண்கிறோம். இவர்களுக்கு மதிப் புக் குறைவுண்டாகும் காரணம் உண்மைக் குறைவு தவிர வேறொன்றுமில்லை. அறிவை நல்ல வழிகளில் உழைப்பவனுடைய உடம்பு முயற்சி யில்லாமல்

சோம்பிப் படுத்திருக்க நியாயமில்லை. சோம்பேறியின் விருப்பங்கள் கவலைகளாக மாறுகின்றன. கையினால் உழைக்காமல் மனத்தால் விரும்புவோன் தன்னைத்தானே தின்று கொள்ளுகிறான். சோம்பேறியின் மனத்தைக் கவலைகள் சூறையாடுவது போல், அவனுடம்பை வியாதிகள் சூறையாடுகின்றன. முயற்சியினாலே செல்வம் வருமென்றும் முயற்சியில்லாவிட்டால் வறுமை வருமென்றும் திருவள்ளுவர் சொல்லுகிறார். முயற்சியில்லாதவருக்கு நோய்வரும், பந்தங்கள் வரும்; அவர்கள் மோந்தாஞ் ஆசிரியர் (8) சொல்வது போல் இவ்வுலகத்திலேயே நரகவாதனைப்படுவார்கள். ஆதலால் ஹிந்துக்களாகிய நாம் முயற்சியைக கைவிடாமல் நடத்தவேண்டும். முயற்சியுண்டானால் உடம்பிலே வலிமையுண்டு. உள்ளத்திலே மகிழ்ச்சியுண்டு, கல்வியுண்டு, செல்வமுண்டு. நீண்ட வயதும் புகழும் இன்பங்களுமுண்டு. முயற்சி யிருந்தால் பயமில்லை. முயற்சி யுண்டானால் வெற்றியுண்டு. முயற்சி உடையவனுக்கு விடுதலை கைகூடும்.

பொழுது போக்கு

28 மார்ச் 1917 — ஸ்ரீ பங்குனி 15

(காளிதாஸனுக்கும் ஸந்தோஷராயருக்கும் நடந்த சம்பாஷணை)

காளிதாஸன் எழுதியது

ஸந்தோஷராயர் :—காளிதாஸரே, பத்திரிகைகளில் ஏதேனும் இன்று புது விசேஷங்களுண்டா?

காளிதாஸன்:—ஒன்றுமில்லை.

ஸந் :—ருஷியாவில் ராஜ்யம் புரண்டு போனதாகவும், இரண்டே சில்லரை ஜார் ராஜினமாக் கொடுத்ததாகவும் போட்டிருந்ததே; அதற்கப்பால் என்னாயிற்று?

காளி:—இரண்டே சில்லரை ஜார் என்கிறீரே அதென்ன?

ஸந் :—பழைய ஜார் நிக்கொலஸ் ஒன்று; அவருடைய ரகஸ்யப் பிள்ளைதான் சில்லரை; ஆக ஒன்றே சில்லரை. பின்பு சக்கரவர்த்தியின் தம்பியாகிய மைக்கேல்; ஆக இரண்டே சில்லரை.

காளி :—சரிதான்.

ஸந் :—ருஷியாவில் நிரங்குசமாகப் பத்திரிகைச் சுதந்திரமில்லாமலும், பேச்சுச் சுதந்திரமில்லாமலும், தம்மிஷ்டப்படி அரசாண்டுவந்த ஜார் சக்கரவர்த்திகளின் அதிகாரம் தொலைந்து ஜனங்களின்

அதிகாரம் ஏற்பட்டதைப்பற்றி உமக்கு சந்தோஷமுண்டாகவில்லையா?

காளி:—வாஸ்தவந்தான்.

ஸந்:—என்ன ஓய் வாஸ்தவந்தானென்று இலேசாகச் சொல்லுகிறீரே? ஜனதிகாரத்துக்குத்தானே ஐரோப்பாவில் இத்தனை பெரிய சண்டை நடக்கிறது? அதற்காகத்தானே நம்முடைய பிரிட்டிஷ் சிநேகிதர்களும் மற்ற தேச ராஜ்யத்தாரும் கோடி கோடியாகப் பணத்தை வாரி இறைக்கிறார்கள்? லக்ஷக்கணக்கான மனிதர்களைப் பலியிடுகிறார்கள்? பூமண்டல முழுதும் ஜனதிகாரமும், விடுதலையும் நிலைபெறும். அப்போதுதான் நம்முடைய தேச ராஜ்யங்களின் நோக்கம் முழுதும் நிறைவேறி, இவர்களுடைய கீர்த்தி எக்காலத்திலும் அழியாமலிருக்கும். ருஷியாவில் பழைய ராஜாங்கத்தை எதிர்த்து, அதன் பொருட்டாகச் சிறைப்பட்டிருந்த தேசாபிமானிகளையெல்லாம் விடுவித்துவிட்டு, அவர்களுக்குப் பதிலாக ரஹஸ்யப் போலீஸாரைச் சிறைக்குள்ளே தள்ளிவிட்டார்களென்று பத்திரிகையில் வாசித்தேன். இதில் எனக்குண்டான ஸந்தோஷம் சொல்லி முடியாது.

காளி:—சரிதான்.

ஸந்:—ருஷியாவிலே இதுவரை தேசாபிமானிகள் பட்டுவந்த கஷ்டங்களை ஆதிசேஷனாலேகூட வர்ணிக்க முடியாது. போலீஸ்காரரின் சந்தேகத்துக்குட்பட்டவர்கள் ஸைபீரியாக் காடுகளிலும், உள்நாட்டுச் சிறைகளிலும் தண்டிக்கப்பட்டு மடிந்த கொடுமைகளையெல்லாம் நீர் சரியாகக் கேள்விப்

பட்டதில்லையென்று நினைக்கிறேன். கேள்விப்பட்டிருந்தால் இப்போது நீர் அதிகமாக ஸந்தோஷமடைவீர்.

காளி :—சரிதான். ஆனால் நீர் போன மாஸம் என்னைப் பார்த்தபோது ஸார் சக்ரவர்த்தியையும் அவருடைய மந்திரிகளையும் புகழ்ந்து பேசினதாக ஞாபகமிருக்கிறது.

ஸந்.—ஒயாமல், ஹிந்துக்களைப் புகழ்ந்து கொண்டிருந்தால் நீர் மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருப்பீர். போன மாஸம் நான் ஸார் சக்ரவர்த்தியைப் புகழ்ந்த காரணம் வேறு. ராஜ்யத்தில் எத்தனை கஷ்டங்களிருந்தபோதிலும், ரஸ்புதீன் முதலிய துர்மந்திரிகளின் வார்த்தையைக் கேளாமல், அவர் நம்முடைய நேச ராஜ்யங்களின் விஷயத்தில் உண்மை செலுத்தி வந்ததன் பொருட்டாக அவரைப் புகழ்ந்தேன். இப்போது.....

காளி :—சரி; சரி; நிறுத்தும். வேறேதேனும் கதை சொல்லும் கேட்கிறேன்.

ஸந் :—ஏழெட்டு நாளைக்கு முன்பு நம்மூருக்கடுத்த பிள்ளைப்பட்டியென்ற கிராமத்தில் ஒருவன் கோபத்தால் தன் மனைவி வயிற்றில் மிதித்தானும். அவள் செத்துப்போய் விட்டாளாம். அந்த விஷயம் இப்போது போலீஸ் விசாரணையிலிருக்கிறதாம். நீர் கேள்விப்பட்டீரா?

காளி :—ஆம்.

ஸந்:—அதிலிருந்து, அந்தக் கிராமத்து ஜனங்களெல்லாம் ஆலமரத்தடியில் ஒரு கூட்டம்கூடி இனி

மேல் யாரும் பெண்டாட்டியை அடிக்கக் கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டார்களாம். அது கிடக்கட்டும், காளிதாஸரே, உம்மிடம் நான் ஒரு முக்கியமான விஷயம் கலந்து பேசவில்லையே?

காளி :—சங்கதி யென்ன?

ஸ் :—ஏப்ரல் மாதம் 22-ந் தேதி ஒரு வால் நக்ஷத்திரம் எரிநக்ஷத்திரம் ஒன்றைத் தன் வாலில் கவ்விக்கொண்டுவந்து பூமியின்மேல் மோதப் போவதாகவும் அதனல் இந்த பூமண்டலம் தூள் தூளாக நொறுங்கிவிடப் போவதாகவும் சொல்லுகிறார்களே? அது வாஸ்தவமாக இருக்குமா?

காளி :—பொய்க் கதை.

ஸ் :—உமக்கெப்படித் தெரியும்? அமெரிக்கா தேசத்தில் யாரோ ஒரு பெரிய வான சாஸ்திரப் பண்டிதர் சொல்லியிருக்கிறாரே? அது பொய் யென்று நீர் எப்படிக் கண்டீர்?

காளி :—பொய்க் கதைதான், எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஏப்ரல் மாதம் 23-ம் தேதி நீர் என்னிடம் வந்து சேரும். அப்போது காரணங்கள் சொல்லுகிறேன்.

ஸ் :—பூமி தூளாய்ப்போன பிறகு நான் உம்மிடம் வந்து கேட்பதெப்படி? நீர் விடை சொல்வ தெப்படி?

காளி :—இந்த பூமியில் இன்னும் நாமே நெடு காளிருந்து பலவித நியாயங்கள் நடந்து நிறை வேறுவதைப் பார்க்கப் போகிறோம். பூமியில் நல்ல யுகம் தோன்றப் போகிறது. மனித ஜாதி முழு

மைக்கும் விடுகலை யுண்டாகப் போகிறது. நீர் சொல்லிய ருஷிய ராஜ்யப் புரட்சியானது இனி வரப்போகிற கற்காலத்தின் முன்னடையாளங் களில் ஒன்று. பூமி தூளாகாது. மனிதர் ஒருவருக் கொருவர் செய்யும் அநீதி தூளாகும்.

ஸந் :—சரி; சரி; உம்முடைய ஞானமூட்டையை நம்மிடம் அவிழ்க்கத் தொடங்கிவிட்டீர்.....எனக குக் காபி சாப்பிட நேரமாகிறது. நான் போய் வருகிறேன்.

இவ்வாறு சொல்லி ஸந்தோஷராயர் எழுந்து போய்விட்டார். ஸந்தோஷராயர் வெளிக்கு எப் படிப் பேசியபோதிலும் மனதுக்குள் தெய்வபக்தி யுடையவர். மனுஷ்ய ஜாதியின் முதுகின் மேலே பல்லாயிர வருஷங்களாகச் சுமந்துபோயிருக்கும் அநீதியாகிய மலை இறக்கிப் போகவேண்டுமென்பதே அவருடைய கருத்து.

கடற் பாலத்தில் வர்ணாசிரம சபை

காளிதாஸன்

7 ஏப்ரல் 1917 ஸ பங்குனி 25

வஸந்த காலத்தில், ஒரு நாள் காலையில் இள வெயில் அடிக்கும் நேரத்தில் வேதபுரத்திலுள்ள கடற்பாலத்தின் கடைசியில், நடுக் கடலின் மீது, ஒரு செம்படவன் உட்கார்ந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தான். அங்கே நானும், எனது நண்பர் சக்ரவர்த்தி சேஷய்யங்காரும். சரீர சுகத்திற்காக நடை பழகப் போனேம். அங்கு புதிதாகச் செய்து வைக்கப்பட்டிருந்த ராஜாங்கத் தோணிகளின் நிழலிலே போய்ச் சிறிது நேரம் உட்கார்ந்து ஆயாஸம் தீர்த்துக் கொள்ளலாமென்று சேஷய்யங்கார் சொன்னார். அந்த நிழலிலே போய் உட்கார்ந்தோம். என் கையில் சில வர்த்தமானப் பத்திரிகைகள் கொண்டு போயிருந்தேன். அவற்றை யெடுத்து வாசித்துக் கொண்டிருந்தேன். சேஷய்யங்காருக்குப் போது போகவில்லை. அவர் அந்த மீன் பிடிக்கும் செம்படவனிடத்திலே போய்ப் பேச்சுக் கொடுத்தார். அவனோ மீன் சரியாகக் கிடைக்க வில்லை யென்ற கோபத்திலிருந்தான். சிறிது நேரம் கழிந்த பிறகு சேஷய்யங்கார் என்னை நோக்கி, "வீட்டுக்குக் கிளம்பலாம்; புறப்படும்" என்றார்.

நான் சொன்னேன் :—

" ஸ்வாமி, நான் காலையில் காபி குடித்துவிட்டுத் தான் வீட்டிலிருந்து புறப்பட்டேன். எனக்கு இங்கே சிறிது நேரம் தனியே யிருப்பதில் பிரிய மூண்டாகிறது. நீர் அவஸரமானால் வீட்டுக்குப் போம். நான் கொஞ்சம் இங்கே இருந்துவிட்டு வருகிறேன் " என்றேன்.

அப்போது சேஷய்யங்கார் புன்சிரிப்புடனே, " நான் ஆஹாரமில்லாமல் வெளியே புறப்படும் வழக்கம் எப்போதுமே கிடையாது. எனக்கும் பசியில்லை. ஆதலால், நானும் இங்கேயே உம்மோடு சிறிது நேரம் பொழுது போக்கத் தயாராக இருக்கிறேன். இந்த இடத்தில் ஒரு சபை கூடிப் பேசினால் மிகவும் நன்றாக இருக்கும். என்ன செய்யலாம்? அந்தச் செம்படவன் பேச வரமாட்டான். அவன் மீன் கிடைக்கவில்லை யென்று என் மேலே கோபித்துக் கொள்ளுகிறான். நீரோ பத்திரிகையிலுள்ள அண்டப் புளுகுகளையெல்லாம், வேத வுண்மை போலே கருதி, மஹா சிரத்தையுடன், நுழைந்து நுழைந்து வாசித்துக் கொண்டிருக்கிறீர். விடுங் காணும்! பத்திரிகையை அப்பாலே போடும். காற்று மிகவும் ரஸமாக வீசுகிறது. எனக்கு இந்த இடத்தை விட்டுப் போக மனதாகவில்லை. ஏதாவது பேச்செடும்" என்று சொன்னார்.

விதியே சேஷய்யங்கார் ரூபமாக வந்து நம்மைப் பேச்சுக்கிழுக்கிற தென்பதை நான் தெரிந்து கொண்டு பின்வருமாறு சொல்லலானேன் :—

"ஸ்வாமீ, என்னுல் வஞ்சனையில்லை. சபை போடுவோம், அதைப்பற்றி யாதொரு ஆக்ஷேபமு மில்லை. ஆனுல் உபந்யாஸ மெல்லாம் நீர் தான் செய்ய வேண்டும். நீர் உபந்யாஸி; நான் தான் சபைக் கூட்டம். நடத்தும்" என்றேன்.

அதற்கு சேஷய்யங்கார் சொல்கிறார்:—

"நாம் உபந்யாஸ கர்த்தா; நீர் அக்ராஸனுதிபதி; அந்தச் செம்படவன் தான் சபை" என்றார்.

அப்போது, சற்று தூரத்திலே யிருந்த அந்தச் செம்படவன் சொல்லுகிறான்:—

"சாமிமாரே, நீங்கள் வந்தாலும் வந்தீர்கள். எனக்கு மூன்று மீன் கூட முழு மீனைக் கிடைக்க வில்லை." சேஷய்யங்கார் இதைக் கேட்டவுடனே கால் ரூபாயை அவன் கையிலே கொண்டு போய்க் கொடுத்து அவனை யழைத்து வந்து நாங்களிருந்த நிழலிலே உட்காரும்படி செய்தார். இவருடைய படாடோபத்தைக் கண்டு ஆரம்பத்திலே அவன் கொஞ்சம் பயந்தான். பிறகு அவர் சொன்னபடி கேட்டால் காசு கிடைக்குமென்று தெரிந்து கொண்டு, அவன் எங்கள் பக்கத்தில் வந்து உட் கார்ந்தான்.

சேஷய்யங்கார் உபந்யாஸிக்கலானார்:—

"நாலு ஜாதி தான் உண்டு. பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ரர். படித்தவன் பிராமணன்; வீரன் க்ஷத்திரியன்; தந்திரசாலி வைசியன்; தொழிலாளி சூத்திரன். இது எந்த தேசத்திலும் உண்டு. எந்தக் காலத்திலும் உண்டு. இதை மாற்றவே முடியாது."

செம்படவன்:—"மெய்தான் சாமி; மெய்தான் சாமி" என்றான்.

சேஷய்யங்கார்:—"இந்தச் செம்படவன் மகன் படித்து சாஸ்திரத் தேர்ச்சி யடைந்து பிரமஞானி யாய் விட்டால் அவனுக்கு என் பெண்ணை விவாகம் செய்து கொடுப்பேன். அதில் தோஷமில்லை" என்றார்.

செம்படவன் நடுங்கிப் போனான். ஐயங்காருக்கு புத்தி ஸ்வாதீனமில்லை யென்று நினைக்கத் தொடங் கினான்.

சேஷய்யங்கார் மொழிகிறார்:—"ஆனால் குலத் தையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். குலத்தளவே யாகும் குணம் என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள். அம்பட்டனுடைய குழந்தை சிறு பிள்ளையாக இருக்கும்போதே ஒருவரும் சொல்லிக்கொடுக்காமல் தானாகவே சிரைக்கக் கற்றுக்கொள்ளுகிறது. கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்; ராஜா வீட்டுப் பிள்ளை இயற்கை யாகவே சைன்யம் வகுத்து விளையாடிப் பழகுகிறது. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால் பிறவி ஒருவனுடைய குணத்தையும் தொழிலையும் நிர்ணயிக்கத்தான் செய்கிறது. ஆதலால் இப்போதுள்ள ஜாதிப் பிரிவை அதிக மாக மாற்றக் கூட வேண்டியதில்லை. 'எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும் அக்குடியிற் கற் றோரே மேல் வருக' என்று சொல்லி பிராமணப் பதவியிலே சேர்க்க வேண்டும். இதற்கிடையே

திருவ்டி தோஷம் புத்திசாலித் தனமில்லை. அதை உடனே நிறுத்திப் போடவேண்டும். 'தீண்டாத ஜாதி' என்ற பேச்சே கூடாது. அது வெறும் பயித்தியம். நந்தன் சிலையை அறுபத்து மூன்று நாயன்மாருக்கு நடுவிலே வைத்து குருக்கள் மணியடித்துக் கும்பிடவில்லையா? ஜாதியாவது குலமாவது! இவையெல்லாம் லௌகிகம். இதனாலே மனுஷ்ய ஸமத்வத்துக்குக் குறைவு நேரிடக் கூடாது. ராம்தாஸ், கபீர்தாஸ், அவர்கள் சொன்னதெல்லாம் பொய்யா?"

இவ்வாறு சேஷய்யங்கார் நெடுந்தூரம் சொன்னார். போகப் போக அவருடைய பிரசங்கத்தில் நான் கொஞ்சம் கவனக் குறைவாக இருக்கும்படி நேரிட்டது. ஏனென்றால் இவர் பேசிக் கொண்டிருக்கும் போதே எங்கள் பக்கத்தில் ஒரு கிழவன் வந்து நின்றான். அவனுக்கு சுமார் அறுபது வயதிருக்கும் போலே தோன்றிற்று. ஆனால் நிடகாத்திர முடையவன். அவன் சேஷய்யங்காருடைய பிரசங்கத்தை மிகவும் ஜாக்கிரதையாகக் கேட்டுக் கொண்டு வந்தான். சேஷய்யங்கார் சொல்லும் வார்த்தைகளிலே ஒன்றிரண்டைக் கேட்டுப் புன்சிரிப்புச் சிரித்தான். ஒரிரண்டு வார்த்தைகள் அவன் முகத்திலே கோபக் குறி விளைவித்தன. நான் அவனைக் கையினால் சமிக்கை காட்டி என்னருகே வரும்படி சொன்னேன். ஸமீபத்தில் வந்தான். "நீ என்ன ஜாதி?" என்று கேட்டேன். "பறையன்" என்றான். இதைக் கேட்டவுடன் சக்ரவர்த்தி சேஷய்யங்கார் திரும்பிப் பார்த்தார்.

II

சக்ரவர்த்தி சேஷய்யங்கார் கிழச் சாம்பானை உட்காரச் சொன்னார். அவன் உட்கார்ந்தான். "நான் சொல்லிய வார்த்தைகளை நீ மிகவும் கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாயே, நீ யார்? உன் பெயர் என்ன?" என்று சேஷய்யங்கார் சொன்னார்.

அப்போது கிழச்சாம்பான் சொல்லுகிறான்:—

"சாமிகளே, நான் பஞ்சம ஜாதி. என் பெயர் லக்ஷ்மணன். பிராம்மணரே எங்களுக்கு குரு. முன் பொரு மாட்டுக் கொட்டகையில் எங்கள் தாயாகிய ஆதியை பகவன் என்ற பிராம்மணன் மணவியாகச் செய்து கொண்டான். பிராம்மண ஜாதி எங்களுக்குத் தகப்பன் முறை. இக்காலத்தில் பலர் எங்களுக்கு உபகாரம் பண்ண வருகிறார்கள். எல்லா மனிதரும் சரிசமான மென்றும் மனிதருக்குள் எவ்விதமான பேதமும் கிடையாதென்றும் பலர் சொல்லுகிறார்கள். எல்லாம் வாய்ப் பேச்சாகத் தானிருக்கிறது. நடத்தையில் ஒன்றையும் காணவில்லை. ஹிந்து மதத்தில் எங்களுடைய நிலைமை தாழ்ந்திருக்கிறதென்றும், கிறிஸ்து மதத்தில் சேர்ந்தால் எங்களுடைய நிலைமை மேன்மைப்படுமென்றும் சொல்லிக் கிறிஸ்தவப் பாதிரிகள் எங்களிலே சிலரைக் கிறிஸ்து மதத்தில் சேர்த்தார்கள். அதில் யாதொரு பயனையும் காணவில்லை. நூற்றிலொரு வனுக்குப் பத்துப் பதினைந்து ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை கிடைக்கிறது. மற்றவர்களெல்லாரும் துரைமாரிடத்தில் சமையல் வேலை பண்ணுதல், பயிரிடுதல், குப்பை வாருதல் முதலிய பழைய

தொழில்களைத்தான் செய்து வருகிறார்கள். எனக்கு முன்னேருடைய மதமே பெரிது. கிறிஸ்தவர்களுடன் எங்களுக்குக் கொடுக்கல், வாங்கல், சம்பந்தம், சாப்பாடு ஒன்றுமே கிடையாது. என்ன கஷ்டமிருந்தாலும் நாங்கள் ஹிந்து மதத்தை விடமாட்டோம். உங்களைப் போலே எல்லாப் பார்ப்பாரும் எங்களிடம் அன்பு பாராட்டினால், பிறகு எங்களுக்கு யாதொரு குறையுமில்லை. தொழில் ஒதாயிருந்தாலும் குற்றமில்லை. ஒரே தேசத்தில் பிறந்து, ஒரே மதத்தைச் சேர்ந்து, ஒரே கூட்டமாக இருக்கும் ஹிந்துக்கள் ஒருவருக்கொருவர் அன்போடிருக்க வேண்டாமா? எங்கள் ஜாதிக்காரருக்குச் சோறும் துணியும் நேரே கிடைத்து வருகிறதா என்பதைக்கூட மற்ற ஹிந்துக்கள் கவனியாமலிருப்பது நியாயமா? எந்தத் தொழில் செய்து பிழைத்தாலும் தெய்வ பக்தி இருந்தால் இஹத்தில் மேன்மையும் பரத்திலே மோக்ஷமும் உண்டு. திருவள்ளுவர் எங்கள் குலத்தில் வளர்ந்தார்."

இங்ஙனம் அவன் பேசிக்கொண்டு போகையில் சக்ரவர்த்தி சேஷய்யங்கார் அவனை நோக்கி "உனக்கு வயதென்ன?" என்று கேட்டார்.

"நீங்களே சொல்லுங்கள். எனக்கு வயதெவ் வளவிருக்கலாம்?" என்று கிழச் சாம்பான் திருப்பிக் கேட்டான்.

"அறுபதிருக்கும்?" என்றார் அய்யங்கார்.

"என்னைப் பார்த்தவர்களெல்லாம் ஐம்பதறுபது வயதென்றுதான் மதிக்கிறார்கள். ஆனால் எனக்கு எண்பது பிராயமாய் விட்டது. இந்தப் பாலம்

கட்டினபோது எனக்குத் தெரியும். அந்தக் காலத்தில் நான் இருவது வயதுப் பிள்ளை. நானும் இதில் வேலை செய்தேன். நித்தம் மூன்றணாக் கூலி" என்று கிழவன் சொன்னான்.

"இப்போது உனக்கு ஜீவனம் சுகமாக நடந்து வருகிறதா?" என்று அய்யங்கார் கேட்டார்.

"சுகந்தான் சாமி. இரண்டு பெண்ணும் ஒரு பிள்ளையும் கடவுள் கொடுத்திருக்கிறார். இரண்டு பெண்ணையும் சரியான இடத்தில் கட்டிக்கொடுத்து விட்டேன். மகன் பயிர்த்தொழில் செய்கிறான். நான் மாட்டு வண்டி வைத்திருக்கிறேன். கடலோரத்துக்குக் கிடங்குகளிலிருந்து சரக்கேற்றி வந்தால் வியாபாரிகள் கூலிகொடுப்பார்கள். அதில் எனக்குக் கூடியவரை சரியான வரும்படி கிடைத்து வருகிறது. இப்போது சண்டையினால் மணிலாக் கொட்டை ஏற்றுமதி குறைந்திருக்கிறது. அதனால் எனக்கு வரும்படியில்லாமலிருக்கிறது. இருந்தாலும், கடவுள் கிருபையால் போஜனத்துக்குக் கஷ்டமில்லை" என்று கிழச் சாம்பான் சொன்னான்.

"இவ்வளவு படிப்பு நீ எங்கே படித்தாய்?" என்று நான் அந்தக் கிழச் சாம்பானிடம் கேட்டேன். அதற்குக் கிழச்சாம்பான் சொல்லுகிறான்:—

"என்னுடைய பிதாவுக்கு வாத்தியார் வேலை. அவர் தமிழிலே மேலான படிப்புள்ளவர். நானும் திருக்குறள் முதலிய சாஸ்திரங்கள் படித்திருக்கிறேன். படிப்பிலே என்ன பயனுண்டு, சாமி? பெரியோர்களுடைய சேர்க்கையால் தெய்வபக்தி

ஏற்பட்டது. அதையே ஊன்றுகோலாகக் கொண்டு பிழைத்து வருகிறேன்" என்றான்.

அப்போது சேஷய்யங்கார் அவனை நோக்கி,—

"இந்த தேசத்து ஜாதிக்கட்டு அநியாயமென்று உனக்குத் தோன்றவில்லையா? தெருவுக்குள் உபகளவர் வரக்கூடாதென்று மற்ற ஜாதிக்காரர் ஏற்பாடு செய்திருப்பது பற்றி உனக்கு வருத்தமுண்டாகவில்லையா? உன்மனம் அதை நினைத்து நினைத்துக் கொதிக்கவில்லையா?" என்று கேட்டார்.

அதற்குக் கிழச் சாம்பான் :—

"இல்லை, சாமீ; என் மனம் அதிலே கொதிப்படையவில்லை. மனிதருடைய இஷ்டப்படி இந்த உலகம் நடப்பதாக மூடர் நினைக்கிறார்கள். நீங்கள் சொல்லிய அநியாயம் என்கண்ணுக்குத் தெரியத்தான் செய்கிறது. அதிலே வருத்தமில்லை. விதிப்படி எல்லாம் நடக்கிறது. அநியாயம் உலக முழுதையும் சூழ்ந்திருக்கிறது. சீக்கிரம் அழிந்து போய் விடும். உலகத்தில் அநியாயம் குறைவுபடும்போது எங்கள் ஜாதிக்கும் நியாயம் கிடைக்கும். அதைப் பற்றி எனக்குக் கொஞ்சமேனும் பயமில்லை. எந்த அநியாயமும் உலகத்தில் நீடித்து நிற்காது. ராவணர்கள் இப்போதிருக்கிறார்களா? அவர்கள் காலத்தில் என்ன அநியாயம் நடந்தது! பிராமணர்களுடைய யாகத்தை அழிக்க வில்லையா? மனிதர்களைப் பிடித்துப் பிடித்துத் தின்னவில்லையா?.....

கேட்டீர்களா சாமிமாரே? என் தகப்பனார் இறந்துபோய் இப்போது நாற்பது வருஷமாகிறது. அவர் தொண்ணூற்றிரண்டு வயதிருந்தார். சாகும்

வரையில் பேச்சு வார்த்தை தள்ளாடவில்லை. உறுதி யாகவே யிருந்தார். அவர் செத்துப் போவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னே ஒரு நாள் பாதி ராத்திரியில் என்னை எழுப்பிப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு பல செய்திகள் சொன்னார். அதில் ஒரு வார்த்தை இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. கேட்டீர்களா, சாமிமாரே? என்று தகப்பனார் சொன்னார்: 'அடே, லக்ஷ்மணா, நான் எப்போ செத்துப் போவேனே தெரியாது. ஆனால் என்னுடைய குரு எனக்குச் சொல்லி வைத்த ஆச்சரிய மொன்றை உனக்குச் சொல்லிவிட்டுப் போகிறேன். கலியுகம் ஐயாயிரம் வருஷத்துக்குப் பிறகு ஒரு புது யுகம் பிறக்கும். அதுதான் கலியுகத்துக்குள்ளே கிருதயுகம். அப்போது இந்த உலகமே மாறும். அநியாயங்களெல்லாம் நொறுங்கித் தவிடுபொடி யாகி விடும். நாலு குலம் மறுபடியேற்படுமே. அந்த நாலு குலத்தாரும் வெவ்வேறு தொழில் செய்து பிழைத்தாலும், ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யமாட்டார்கள். துரோகம் செய்யமாட்டார்கள். அன்பே தெய்வமென்று தெரிந்து கொள்ளுவார்கள். அன்பிருந்தால் குழந்தையும் தாயும் ஸமானம்; ஏழையும் செல்வனும் ஸமானம்; படித்தவனும் படியாதவனும் ஸமானம்; அன்பிருந்தால் மனிதனும் தெய்வமும் ஸமானம்: அன்பு பூமியிலே மேலோங்கி நிற்கும். அப்போது மாதம் மூன்று மழை நேரே பெய்யும். பஞ்சம் என்ற வார்த்தையே இராது. தெற்கு தேசத்தில் பிராமண குலத்தில் கபில முனி வரும் அகப் பேய்ச் சித்தரும் திரும்பி அவதாரம்

செய்வார்கள். அவர்கள் ஊரூராகப் போய் ஜனங்களுக்கு தர்மத்தைச் சொல்லி ஜாதி வழக்கையெல்லாம் தீர்த்து வைப்பார்கள். அப்போது தர்மம் நிலை பெற்று நிற்கும். நீ இருக்கும்போதே இந்தப் புதிய யுகம் ஆரம்பமாய்விடும். உன் கண்ணாலே பார்ப்பாய்' என்று என் தகப்பனார் சொன்னார்."

இங்ஙனம் அந்தக் கிழச் சாம்பான் சொல்லி முடித்தான். பிறகு கோரமாய் விட்டபடியால் சபையைக் கலைத்து விடலாமென்று நான் சொன்னேன். சேஷய்யங்கார் அந்தக் கிழச் சாம்பானைப் பல வார்த்தைகள் சொல்லிப் புகழ்ந்தார். பிறகு அவ்விருவரும் தனியாகப் போய் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பால் சேஷய்யங்கார் செம்படவன் கையில் இன்னும் கால் ரூபாய் கொடுத்து, "என்னால் உனக்கு நஷ்டமேற்பட்டதற்குச் சரியாய்ப் போய்விட்டது" என்றார். கிழச் சாம்பானும் விடைபெற்றுக் கொண்டு போனான். நானும் சேஷய்யங்காரும் திரும்பி வீட்டுக்கு வருகையிலே அவர் என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஏதோ தன் மனதுக்குள் தீர்க்கமான யோசனை செய்து கொண்டு வந்தார். இடையிடையே அவர் முணு முணுவென்று சொல்லிய வார்த்தைகளில் இரண்டொன்று என் காதில் பட்டது.

"ஹிந்து தேசமே! உன்னுடைய மஹிமையை நான் என்னென்று புகழ்வேன்?" என்றார்.

குறிப்பு:—இக் கட்டுரையின் இரண்டாம் பாகம் 17-4-1917-ல் வெளியானது.

காமதேனு

7 மே 1917

பார்கக : மூன்றும் தொகுதி-பகுதி-தத்துவம்.

விளக்கு

சக்தி தாஸன்

10 மே 1917 பிங்கள சித்திரை 28

"எழுத்தறி வித்தவன் இறைவனுகும்."

வாத்தியாரும் சரி, தெய்வமும் சரி. கோயிற் குருக்களைக் கொண்டாடுவது போலே பள்ளிக் கூடத்து வாத்தியாரையும் கொண்டாட வேண்டும். பர்மாவில் ஆயிரம் ஆண் பிள்ளைகளில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 376 பேர் என்றும்; அதே மாதிரிக் கணக்கு பரோடாவில் 1000-க்கு 175; திருவாங்கூரில் 248; கொச்சியில் 243; வங்காளத்தில் 140 என்றும், சென்னை மாகாணத்தில் எழுத்து வாஸனையுடையவர்கள் 100-க்கு 138 பேரென்றும் 1911-ம் வருஷத்து ஜனக் கணக்கில் தெரிகிறது. பர்மாவில் புத்த குருக்கள் படிப்புச் சொல்லிக் கொடுப்பதை ஒரு கடமையாக வைத்துக் கொண்டிருப்பதால் கொஞ்சம் நல்ல நிலைமையிலிருப்பதாகத் தோன்றுகிறது. பரோடாவில் கல்வி விருத்திக்கு

வேண்டிய ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. திருவாங்கூர், கொச்சி ஸமஸ்தானங்களில் உள்ள சுதேசி அதிகாரிகள் தமது கடமையை பரோடாவுக்கு மூன்றியே படிப்பு விஷயத்தில் கொஞ்சம் அதிக சிரத்தையுடன் செலுத்தத் தொடங்கியிருக்கவும் ஏற்படுகிறது. இந்த விஷயத்தில் நம்மவர் சர்க்கார் அதிகாரிகளுடைய உதவியை எதிர் பார்ப்பது பயனில்லாத முறை. நாட்டை ஆளுவதிலே மிகுந்த செலவு உண்டாவதால் படிப்பை விருத்தி செய்யப் பணமில்லை யென்று அதிகாரிகள் எத்தனையோ தரம் ஸாங்கோ பாங்கமாகச் சொல்லி விட்டார்கள். "படிப்புச் செலவுக்கென்று தனித் தீர்வை போடுங்கள்; ஜனங்கள் ஸந்தோஷத்துடன் செலுத்துவார்கள்" என்று கோகலே விளக்கி விளகிச் சொன்னார். அது சர்க்காருக்கு சம்மத மில்லை. ஆகவே, நமது தேசத்து ஜனங்களை ஐரோப்பாவிலுள்ள ஜாதியாரைப் போலவும் ஜப்பானியரைப் போலும் படிப்பு மிகுந்த ஜனங்களாகச் செய்வதற்கு சர்க்கார் அதிகாரிகளிடமிருந்து பணம் பிடைக்கு மென்று நம்பி யிருப்போர் நெடுங்காலம் படிப்பில்லாமலே யிருப்பார்களென்பது "உள்ளங் கை நெல்லிக்கனி போல" விளங்குகிறது. திருவள்ளுவர் சொன்னார்:—

> "விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
> கற்றாரோ டேனை யவர்."

படியாதவனுக்கும் படித்தவனுக்கும் தாரதம்யம் எத்தனை யென்றால், மிருகத்துக்கும் மனிதனுக்கும் உள்ளதத்தனை.

கூடித் தொழில் செய்

இங்கிலீஷ், ஸம்ஸ்க்ருதம், தமிழ் என்ற பாஷைகளில் ஏதேனும் ஒன்று படித்து யாதொரு உத்தியோகமுமில்லாமல் சும்மா இருக்கும் பிள்ளைகளுக்கு நான் ஒரு யோசனை கண்டுபிடித்துக் கொடுக்கிறேன். இஷ்டமானால் அனுசரிக்கலாம். அனுசரித்தால் லாபமுண்டு.

கூடி விளை செய்வோர்
கோடி விளை செய்வார்

கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து, கிராமந்தோறும் யாத்திரை செய்யுங்கள். ஊரூராகப் போய்ப் பள்ளிக்கூடங்கள் போடுவதே கைங்கரியமாக வைத்துக் கொள்ளுங்கள். ஆரம்பத்தில் வண்டிச் செலவுக்குப் பணமில்லையானால் நடந்துபோக வேண்டும். மற்றபடி ஆஹார வ்யவஹாரங்களுக்கு நமது பூர்வ மதாசார்யர்களும், தம்பிரான்மாரும், ஞானிகளும், சித்தர்களும், பக்தர்களும் செய்த படியே செய்யுங்கள். எங்கே போனாலும் உயர்ந்த மதிப்பும், உபசாரங்களும் ஏற்படும். கூட்டத்துக்கு விருந்து காட்டிலேகூடக் கிடைக்கும். அங்கங்கே திண்ணைப் பள்ளிக்கூடங்களும், குடிசைப் பள்ளிக்கூடங்களும் போட்டுத் திறமையுடையோரை வாத்தியாராக நியமித்துக் கொண்டு போகலாம். யாத்திரையின்பம், தேசத்தாரின் ஸத்காரம், வித்யாதான புண்யம், சரித்திரத்தில் அழியாத கீர்த்தி இத்தனையும் மேம்படி கூட்டத்தாருக்குண்டு. படிப்பு எல்லா மதங்களுக்கும் பொது. எல்லா தேசங்களுக்கும் பொது. எல்லா ஜாதிகளுக்கும் பொது. திருஷ்

டாந்தமாக, ஐரோப்பியர் அதிகப் பயிற்சி செய்திருக்கும் ரஸாயணம் முதலிய சாஸ்த்ரங்கள் நமக்கு மிகவும் அவஸரம். எவ்விதமான பயிற்சிக்கும் தேச பாஷைகள் எழுதவும் படிக்கவும் செய்விப்பதே ஆதாரமாகும். அதை முதலாவது வேரூன்றச் செய்ய வேண்டும். ஹிந்துப் பிள்ளைகளே, உங்களுக்குக் கோடி புண்யமுண்டு. கூட்டங் கூடி காட்டைச் சுற்றுங்கள். தமிழ் வளர்ந்தால் தர்மம் வளரும். பிராமணர் முதலாகப் பள்ளர் வரையிலும், எல்லா ஜாதிகளிலும், எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் மிகுதிப்பட்டால், அநாவஸியப் பிரிவுகள் நிச்சயமாகக் குறைவுபடும். நமக்குள் கைச்சண்டை மூட்டிவிடுவோரையும், பாஷைச்சண்டை, ஜாதிச்சண்டை மூட்டி விடுவோரையும் கண்டால் ஜனங்கள் கைகொட்டிச் சிரிப்பார்கள். ஹிந்துக்களாகிய நாமெல்லாரும் ஒரே கூட்டம், ஒரே மதம், ஒரே ஜாதி, ஒரே குலம், ஒரே குடும்பம், ஒரே உயிர் என்பதை உலகத்தார் தெரிந்து கொள்ளுவார்கள். அதனால் பூமண்டலத்துக்கு க்ஷேமமுண்டாகும்.

விடுதலை

காளிதாஸன்

26 மே 1917 பிங்கள வைகாசி 13

திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்கிற மூன்று புருஷார்த்தங்களையும் ஆயிரத்து முந்நூற்று மூப்பது குறளுக்குள் பாடிக் காட்டிய திறமையைக் கண்டு வியந்து சிலர் ஔவையாரிடம் சொன்னார்களாம். ஔவையார் நான்கு புருஷார்த் தங்களையும் ஒரே வெண்பாவுக்குள் பாடிக காட்டினளாம்.

ஈதல்அறம்; தீவினை விட்டீட்டல் பொருள்; எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம்; பரனினைனந் தின்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

கொடுப்பது தருமம.

பாட்டைக் கொடுத்தாலும் சரி; நாட்டைக் கொடுத்தாலும் சரி; பணம், கல்வி, மருந்து, தைரி யம், ஏதேனுமொரு நல்ல பொருளை உடையவன் வேண்டியவனுக்குக் கொடுத்தால் அஃதறம். உலகத் தில் ஸாமான்ய மனிதனைச் சூழ்ந்து மிக்கோர், ஸமானஸ்தர், தாழ்ந்தோர் என மனிதர் மூன்று வகையாகக் காணப்படுகிறார்கள். இந்த மூன்று திறத்தாருக்கும் அவன் கொடுக்க வேண்டிய கொடைகள் காலம், தேசம், இவற்றுக்குத் தக்க

படி அந்தந்த விதமாக மாறி நிற்கும். இன்னின்ன காலத்தில் இன்னின்னருக்கு இன்னின்ன பொருள் கொடுக்க வேண்டுமென்பது தர்மிஷ்டனுக்கு ஸ்வபாவத்திலேயே தெரியும். சேர்க்கப்படுவது செல்வம். மனிதனுக்கு இன்பம்தரும் பண்டங்களையும் அவற்றைக் கொள்வதற்கு நல்ல கருவியாகிய பொன்னையும் சேகரித்து வைக்க வேண்டும். இடைவிடாமல் சேர்க்க வேண்டும். கை பற்றினபடியாகவே இருக்க வேண்டும். ஆனால் தீயகாரியம் செய்து; கெட்ட தொழில் செய்து சேர்த்த செல்வம் நிற்காது. செல்வம் சேர்ந்த பிறகு அதன் உரத்தால் பிறருக்குத் தீங்கு செய்வாரும் விரைவிலே கெடுவார். "அல்லற் பட்டாற்றாது அழுதகண்ணீ ரன்றேசெல்வத்தைத் தேய்க்கும் படை" என்று திருவள்ளுவரும் சொன்னார். துன்பப்பட்டார் அது பொறுக்காமல் அழும் கண்ணீரானது, அந்தத் துன்ப முண்டாக்கியவனுடைய ஐசுவரியத்தை அறுத்தெறியும் ஆயுதமாகும். செல்வம் இனிது. அது முயற்சியினால் சேர்க்கப்படுவது. பயனுள்ள தொழிலே மேன்மேலும் ஊக்கத்துடனும் அறிவுடனும் செய்வதால் பொருள் பெருகும். தீயதுசெய்தாலன்றிப் பொருள்சேட முடியாதென்று மூடர் நினைக்கிறார்கள். தீயது செய்யாதபடி சேகரிப்பதே பொருளென்றும், மற்றையது பல துன்ப முண்டாக்கி விரைவிலே அருந்து போவதோர் மருளென்றும் ஔவை சொல்லுகிறாள்.

பெண்ணும், ஆணும் அன்பு கொண்டு வாழ்வதே இன்பங்களிலெல்லாம் சிறந்த இன்பம். உணவும், ஸ்நானமும், பூவும், சந்தனமும் முதலிய இன்

பங் களெல்லாவற்றைக் காட்டிலும் காதலின்பமே சிறந்தது. காதலுடைய இருவர் கருத்திலே ஒன்று பட்டவராய் ஆதரவு கொள்ளும் நிலையை மனிதர் கட்டுப்பாடுகளாலும், பணச் செருக்காலும், அதிகாரத்தாலும் பெற விரும்புகிறார்கள். ஆண் பெண் உறவினால் வரும் துன்பந்தான் மனிதருக்கு இவ்வுலகத்தில் மற்றெல்லாத் துன்பங்களைக் காட்டிலும் அதிகமாக ஏற்பட்டு விட்டது. விவாக முறையைச் சில தேசங்களில் நாகம்போலே செய்து விட்டார்கள். தெய்வம் கொடுக்கும் இன்பத்தை மனிதர் அறியாமையாலும், பாபசிந்தையாலும் துன்பமாக மாற்றிக் கொள்ளுகிறார்கள்.

தெய்வத்தை நம்பி மேற்படி மூன்றனுள் எதுவும் இன்றியமையாத தில்லையென்று கொண்டு, வருவதுதானே வருமென்று சொல்லி, எல்லாம் தெய்வத்தின் செய்கை யாதலால் நமக் கெவ்வித மான பொறுப்புமில்லை யென்று நடப்பதே விடுதலை இன்பம். துன்பம் எது நேர்ந்தாலும் சரியென்று மனக்கவலையை ஒரேயடியாக நெருப்பிலே போட்டுக் கொளுத்தி விட்டு தெய்வத்தின் நினைப்பே கதி யென்று நிற்பது விடுதலை. "எல்லாத் தருமங்களையும் விட்டு, என்னையே சரணடைக" என்று கீதையும் சொல்லிற்று.

இந்த விடுதலை பெற்றவன் பண்டாரமாகிக் கந்தையுடுத்துப் பிச்சை வாங்கித் தின்பானென்று சில பாமர ஜனங்கள் நினைக்கிறார்கள். அது முற்றிலும் தவறு. ஆயிரத்திலொரு ஜீவன்முக்தன் பண்டார வழியிலே சென்றாலும் செல்லக்கூடும்.

ஆனால் அதுவே மார்க்கமென்று நினைத்துவிடக் கூடாது. ஜனகன் ஜீவன் முக்தி பெற்று ராஜ்ய மாண்டான். அர்ஜுனனும் அப்படியே. ரிஷிக ளெல்லாரும், பெண்டு பிள்ளைகளுடன் சுகமாக வாழ்ந்தார்கள். விடுதலை பெற்றவர் ஏந்தத்தொழில் செய்தாலும் செய்வார்கள். ஆனால் அந்தரங்க நம்பிக்கை தெய்வ மொன்றினிடத்தேயே செலுத்தி வாழ்வார்கள். "எத்தொழிலைச் செய்தாலும், ஏதவத் தைப் பட்டாலும், முக்தர் மனமிருக்கு மோனத்தே" என்பது முன்னோர் வாக்கு. பரனை நினைந்து முன் மூன்றையும் விட்டு விடுதல் இன்பமென்று ஔவை கூறினள். பற்று விட்டிருப்பதே விடுதலை. உள்ளத் துறவே துறவு. உள்ளத்துறவுடைய மனிதனை நாம் என்ன அடையாளத்தாலே கண்டு பிடிக்கலாம்? பக்தி முதிர்ச்சிக்கு எது தவறாத லக்ஷணம்? "அஞ்சாதே!" என்றது வேதம். பயம் நீங்கி யிருப் பதே விடுதலைக்கு லக்ஷணம். ஒருவன் உண்மை யாகவே தெய்வத்தை நம்பினனை, வீணுக்குச் சொல்லு கிறனை என்பதை அறிய வேண்டுமானால் ஆபத்து வேளையிலே பார்க்க வேண்டும். ஆபத்து நேரும் போது நெஞ்சு நடுங்காம லிருப்பவன் ஞானி, பக் தன், முக்தன். மரணத்துக் கஞ்சாதவன் தெய் வத்தை உண்மையாகச் சரணடைந்தவன். தெய் வத்தை நம்பினால் தீமை நமக்கு வாராதென்பதை ப்ரத்யக்ஷ ஞானமாகக் கொண்டு ஜீவன் முக்தர் எந்தப் பதவியிலிருந்த போதிலும் நிகரற்ற வீரராக விளங்குவார்.

தெலுங்க மஹா சபை

சக்திதாஸன்

9 ஜூன் 1917 பிங்கள வைகாசி 27

சென்ற வெள்ளிக்கிழமை (ஜூன் 1) யன்று நெல்லூரில் கூடிய ஆந்திர மஹாசபையில் சபா நாயகர் ஸ்ரீ வெங்கடப்பய்ய பந்துலு செய்த உபந்யாஸம் கவனிக்கத்தக்கது. ராஜநீதி சாஸ்த்திரத்தில் தெலுங்கர் நெடுங்காலத்துப் பெருமையுடையார். பாடலீபுத்ர நகரத்தில் நடந்த ஆந்திர ராஜ்யமும் பிற்காலத்தில் தமிழ் நாட்டைக் கட்டியாண்ட விஜய நகரத்து ராஜ்யமும் கீர்த்தி மிகுந்தனவன்றே? தெலுங்கர் தமிழரை ஆண்ட அடையாளங்கள் நமது பாஷையிலும் ஆகாராதிகளிலும் அழிக்க முடியாத படி பதிந்து கிடக்கின்றன. நமது ஸங்கீதமும் நாட்டியமும் தெலுங்கிலேயே இன்றுவரை முழுகிக் கிடக்கின்றன. பாடகர்கள் பாடும் கீர்த்தனங்களில் உயர்தரமெல்லாம் தெலுங்குக் கீர்த்தனங்கள். தாசிகள் ஆட்டத்தில் பாடும் வர்ணங்கள் ஜாவளிகள் முதலியவற்றில் கல்ல உருப்படியெல்லாம் தெலுங்கு. நமது கிராமங்களிலுள்ள தெலுங்க ரெட்டிகளும், நாயுடுமாரும், ஆந்த்ரபிராமணப் புரோகிதர்களும், தெலுங்க தாசிகளும் ராயர் சம்ஸ்தான காலத்தில் இங்கே உறுதி பெற்றவர்கள். நமது விவாக காலங்களில் பாடும் பத்யம், லாலி முதலானதெல்லாம்

தெலுங்குமுறை. நமது பாஷையில் "கவனம்" (ஆழ்ந்துநோக்குதல்), "ஜாகுஸ்", "எச்சரிக்கை", "தூரை", "வாடிக்கை," "கொஞ்சம்" முதலிய பதிற்றுக்கணக்கான தெலுங்குச் சொற்கள் சேர்ந்திருக்கின்றன. தெலுங்கர் தமிழ் நாட்டை ஆண்டபோது, அநீதியே நடையாது. தமிழருக்கு வேறு நீதி தெலுங்கருக்கு வேறு நீதி என்ற பேதம் நடையாது. தெலுங்கு ஜாதி, ராஜ நீதியிலே நிபுணத்தன்மை உடையது.

மேற்படி கொள்கைக்கு நல்ல திருஷ்டாந்தமாக, இக்காலத்திலும்கூடத் தெலுங்கு தேசத்தார் தமிழரைக் காட்டிலும் ராஜாங்க வ்யவஹாரங்களில் தீவிர புத்தி செலுத்துகிறார்கள். ஆனால் நமகுள் ஜாதி பேதமிருகிறதே என்றால் ஜாதிபேதம் இந்தியாவில் மாத்திரமில்லை, உலகத்தில் எல்லா தேசங்களிலும் இருகிறது. இந்தியாவில் கொஞ்சம் தீவிரமாகவும், விநோதமாகவும், மாற்றுவது கஷ்டமாகவும் இருக்கிறது. இப்போது பூமி முழுவதிலும் நடந்து வரும் மஹாப்ரளயத்தில் இந்த ஜாதிபேதம் தவிடு பொடியாய்ப் போய்ப் புதிய மாதிரி உண்டாகும். இது வெல்லாம் ஏன் சொல்ல வந்தேனென்றால், தமிழ் நாட்டு ஜனங்கள் வீண் சண்டைகளிலே பொழுது போக்குகிறார்கள். தெலுங்கர் ஜனபிவிருத்திக்கு வழியாகிய நல்ல உபாயங்களிலே புத்தி செலுத்தி வருகிறார்கள். சுதேசிய விஷயத்தில் இப்போது தெலுங்கருக்குள் இருக்கும் பக்தி சிரத்தையிலே நாலிலொரு பங்குகூடத் தமிழ் ஜனங்களிடம் இல்லை. சென்ற வெள்ளிக்கிழமையன்று கூட

மேற்படி நெல்லூர் ஆந்த்ரமஹாசபைப் பந்தலில் வந்தேமாதரம் என்ற கோஷம் அபரிமிதமாக இருந்ததென்று தந்தி சொல்லுகிறது. கொஞ்ச காலத்துக்கு முன்பு கூடலூரில் கூடிய மாஹாநாசபையில் "வந்தேமாதரம்" பாட்டுக்கூடப்பாடவில்லை யென்று கேள்விப்பட்டேன். தெலுங்கு ஜில்லாக்களில் ஒரு சபைகூட அப்படி நடந்திராது. இது நிற்க,

மேற்படி சபையில் ஸ்ரீ வேங்கடப்பய்யா சபாநாயகராகப் பேசிய வார்த்தைகளின் ஸாரம் பின் வருமாறு :—

1. தெலுங்கு தேசத்தைத் தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டும்.

2. இந்தியாவுக்குத் தன்னாட்சி கொடுக்க வேண்டும்.

3. இயன்றவரை, இந்தியா முழுதையும், பாஷைகளுக்குத் தக்கபடி வெவ்வேறு மாகாணமாக்க வேண்டும். அதாவது, மதராஸ், பம்பாய், ஐக்ய மாகாணம், மத்ய மாகாணம், பஞ்சாப், பங்காளம் என்ற பிரிவுகளை மாற்றித் தமிழ்நாடு, தெலுங்கு நாடு, மாராட்டிய நாடு, கன்னட நாடு, ஹிந்துஸ்தானம், வங்க நாடு என்று பாஷைக்கிரமப்படி வகுக்க வேண்டும்

4. ஸ்வபாஷைகளில் கல்விப் பயிற்சி செய்விக்க வேண்டும். ராஜ்ய காரியங்களும் இயன்றவரை ஸ்வபாஷையில் நடக்க வேண்டும்.

மேற்படி நாலம்சங்களில் முதலாவது, மூன்றாவது, நாலாவது இம்மூன்றும் ஒரு பகுதி; இரண்டா

வது மற்றொரு பகுதி. இரண்டாவது தாய்ப் பகுதி; மற்றவை கிளைப் பகுதிகளாகும்.

என்னுடைய அபிப்ராயத்தில் மேற்கண்ட கொள்கை யெல்லாம் நியாயமென்றே தோன்று கிறது. ஆனாலும், இந்த ஸமயத்தில் ஆந்திரரைத் தனிப் பிரிவாக ருஜுப்படுத்துவதைக் காட்டிலும், ஆஸேது ஹிமாசல பர்யந்தம் உள்ள ஹிந்துக்க ளெல்லாம் ஒன்று என்ற மூல மந்திரத்தை நிலை நாட்டுவதே அவசியமென்று என் புத்திக்குத் தோன்றுகிறது. ஹிந்துக்களெல்லாம் ஒரே கூட்டம். வேதத்தை நம்புவோரெல்லாம் ஸஹோதரர். பாரத பூமியின் மக்களெல்லாம் ஒரே தாய்வயிற்றுக் குழந்தைகள். நமக்குள் மதபேதம் ஜாதிபேதம் குலபேதம் பாஷாபேதம் ஒன்றுமே கிடையாது. இந்தக் கொள்கைதான் இந்தக் காலத்துக்கு யுக்த மானது. ஹிந்து மதத்தை உண்மையாக நம்புவோ ரெல்லாம் ஒரே ஆத்மா, ஒரே உயிர், ஒரே உடம்பு, ஒரே ரத்தம், ஒரே குடர், ஒன்று.

ஹிந்துக்கள் உயர்ந்த நிலைமைக்கு வர வேண் டுமானால் ஐக்யநெறியை உடனே அனுசரிக்க வேண் டும். போன வருஷம் கீழ்க்கடலோரத்திலே பெரிய புயற்காற்றடித்தது. ஒன்று கூடியிருந்த வீடுகள் பிழைத்தன. தனிக் குடில்களெல்லாம் காற்றிலே பறந்து போயின. உலகத்தில் புதிய ஞானம், புதிய வாழ்க்கை, புதிய அறம், புதிய நெறி தோன்றக் கூடிய காலம் பிறந்து விட்டதென்று மேதாவிக ளெல்லாரும் ஒருங்கே சொல்லுகிறார்கள். இங்ஙனம் புதிய ஞானம் பிறக்க வேண்டுமானால் அதற்கு

ஹிந்து மதமே முக்ய ஸாதனமென்று நாம் சொல்லுகிறோம். ஸ்வாமி விவேகாநந்தர், ரவீந்த்ர நாத டாகூர், ஜகதீச சந்திரவஸு முதலிய பெரியோர்களும் அங்ஙனமே சொல்லுகின்றார்கள். இந்த ஸமயத்தில் ஹிந்துக்கள் பிரிவு பேசலாமோ? ஹிந்துக்கள் பிரிந்து கிடந்தால், ஹிந்து தர்மத்தின் மஹிமையை உலகத்தார் காண்பதெப்படி?

ஹிந்து தர்மம் பெருமாள் கோயிலைப் போலே; நிற்பது எங்கே நின்றாலும் அத்தனை பேருக்கும் ப்ரஸாத முண்டு. பகவத் ஸந்நிதியில் ஜாதிபேத மில்லை. அத்தனைபேரும் கலந்து நிற்கலாம். ஹிந்து தர்மம் சிதம்பரத்தைப் போலே. அதனுள்ளே, பறையரும் ஒளியில் கலந்து விடலாம். மேலும் தெலுங்கருக்குத் தெலுங்கு பாஷையில் பிறந்திருக்கும் உண்மையான அபிமானம் தமிழருக்குத் தமிழினிடமில்லை. தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்தாலே ஒருவன் தமிழபிமானியாக மாட்டான். பள்ளிக்கூடத்து சாஸ்திரங்களெல்லாம் தமிழ்ப் பாஷையில் கற்றுக் கொடுக்கும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழராகப் பிறந்தோர் கூடியிருக்கும் சபைகளிலேயும், தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கொருவர் பேசும் போதும், இதர பாஷைகள் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்கள், புதிய உயிர், தோன்றும்படி செய்வோன் தமிழபிமானி. தமிழிலபிமான முள்ளவன் ஹிந்து தர்மத்தைக் கைக்கொண்டு

நிற்பவன். அதுவே தமிழபிமானியைச் சோதிக்கும் வழி. ஏனென்றால் தேவாரத்திலும், திருவாசகத்திலும், திருவாய் மொழியிலும், திருக்குறளிலும், கம்பராமாயணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்குத் தமிழபிமானம் உண்மையிலே பிறக்க நியாயமில்லை. மேற்படி நூல்களை நன்றாக உணர்ந்தவன் ஹிந்து தர்மத்தாலேயே இந்த உலகம் நிலைபெற்று நிற்கு மென்பதை அறிவான். ஸர்வ தர்மங்களுக்கும் ஹிந்து தர்மமே வழிகாட்டி யென்பதைக் காண்பான். ஹிந்து தர்மத்தை நிலைநிறுத்தினால் ஆந்திரர், கன்னடர், மராட்டியர், ஹிந்துஸ்தானிகள், குஜராத்திகள், வங்காளிகள், தமிழர், மலையாளர் எல்லாருக்கும் நல்ல காலம் பிறக்கும். ஆதேசம் சொல்லுகிறது :— "வேத வழியே வழி. வேறு வழியில்லை."

பெண்

12 ஜூன 1917 பிங்கள வைகாசி 30

பார்க்க :— மூன்றும் தொகுதி - பகுதி - மாதர்.

அர்ஜுன சந்தேகம்

காளிதாஸன்

16 ஜூன் 1917 பிங்கள ஆனி 3

பார்க்க :— இரண்டாம் தொகுதி - பகுதி - கதைக் கொத்து.

ப்ராயச்சித்தம்

காளிதாஸன்

21 ஜூன 1917 பிங்கள ஆனி 8

என்னுடைய ஸ்நேஹிதர்களில் ஒருவராகிய ராமராயர் இங்கிலாந்துக்குப் போயிருந்தார். திரும்பி வேத புரத்துக்கு வந்தார். அவருக்கு ஒருவிதமான வேதாந்தப் பயித்தியம். ப்ரம்மமே ஸத்தியம். லோக மெல்லாம் மித்தை. ஆதலால் எல்லாரும் ஸந்யாஸம் வாங்கிக்கொள்ள வேண்டும். தலையை மொட்டை யடித்துக்கொள்ள வேண்டும். சடைக ளாகத் திரித்து விடலாம். அப்படிச் செய்தாலும் குற்றமில்லை. எப்போதும் ஓம், ஓம் என்று சொல் லிக்கொண்டிருக்க வேண்டும். அல்லது ஐம்புலன் களையும், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற நான்கு அந்தக் கரணங்களையும் உள்ளே இழுத்துக் கொண்டு சுத்த ப்ரம்ம நிலையோ, அல்லது அதற்குப் போகிற பாதையோ, ஆகிய நிர்விகற்ப ஸமாதியில் நிற்க வேண்டும். இது அவருடைய மதம்; ஆனால் இவ ருடைய நடை மற்ற மனுஷ்யர்களைப் போலேதான்.

ஸந்யாஸம் வாங்கவில்லை; தலை மொட்டையு மில்லை; சடையுமில்லை; ஓங்காரத்தைத் தவிர வேறு வார்த்தைகளும் சொல்லிக் கொண்டு தான் வருகிறார். நிர்விகற்ப ஸமாதியிலே அவர் இருப்பதை நான் பார்த்ததே கிடையாது.

மேற்படி ராமராயர் இங்கிலாந்தில் இருக்கும் போது, ஐரோப்பியர் கண் பார்க்காமல் கை எப்படிச் சமைக்கும்? ஐரோப்பியர் சமையல் பண்ணின பதார்த்தங்களை நாளொன்றுக்கு நான்கு முறையாகப் பத்து வருஷ காலம் நிர்விக்நமாக போஜனம் செய்து கொண்டு வந்தார். (இந்த விஷயத்தில் அவர் மேலே அதிகக் குற்றம் சொல்ல இடமில்லை. ஐரோப்பாவில் ஐரோப்பியர் சமையல் பண்ணினதைத் தின்னுமல் எப்படிப் பிழைக்க முடியும்? இங்கிருந்து பிராமணப் பரிசாரகர்களில் நூறு நூற்றைம்பது பேரைக் கொண்டு லண்டன் பட்டணத்தில் குடியேற்றினால் நம்மவர்கள் போய் ஜாதியாசாரங்களுக்கு விரோதமில்லாதபடி அங்கிருந்து படித்து வைதிகக் கலெக்டர்களாகவும் வைதிக பாரிஸ்டர்களாகவும் திரும்பி வர இடமுண்டாகும். ஸ்வாமி விவேகானந்தர் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஸஞ்சரித்த காலத்தில் பசுக் கறி முதலியவற்றை யதேஷ்டமாக சாப்பிட்டதாகப் பாதிரிகள் இந்தியாவில் கூக்குரல் போட்டதைப் பொறுக்க முடியாமல், சென்னப் பட்டணத்திலிருந்து சில வைதிக சிஷ்யர்கள் வருத்தப்பட்டு விவேகானந்தருக்குக் காயிதம் போட்டார்கள். அடுத்த கப்பலில் ஒரு வைதிக பரிசாரகனும், வைதிக போஜனங்களும் இந்தியாவிலிருந்து அனுப்பினால், தான் வைதிகமாக உண்பதில் ஆக்ஷேபமில்லை யென்று விவேகானந்தர் மறுமொழி எழுதினராம்.) ராமராயர் இங்கிலாந்தில் போய்ப் பத்து வருஷ காலம் இருந்து வியாபாரம் பண்ணிவிட்டுக் கொஞ்ச காலத்

துக்கு முன்பு, வேத புரத்துக்கு வந்து சேர்ந்தார். இங்கே அவர் கையில் கொஞ்சம் காசிருப்பதைக் கண்டு சில வைதிகர்கள் அவரைப் பிராயச்சித்தம் செய்து கொள்ளும்படி சொன்னார்கள். அவர் பண்ணிக்கொள்ள வில்லை. ஆனல் இங்கு வந்த பிறகு சுத்தமான பிராமணர் சமையல் தான் சாப்பிடுகிறார். பிராமண ஆகாரம் அவருக்கு நன்றாக ஒத்து வருகிறது. உடம்புக்கு ஒன்றும் செய்வதில்லை. மற்ற நடைகளும் அப்படியே தான். மூன்று வேளையும் ஸந்த்யாவந்தன, மாத்யான்ஹிகங்கள் தவறுவதில்லை. அமாவாசை தோறும் சரியான தர்ப்பணம்; வருஷத்தில் ஐந்தாறு சிராத்தம். எல்லாம் கிரமமாகவே நடத்தி வருகிறார். ஒரே ஒரு புரோஹிதரும் அனேக லௌகிகரும் இவரை ஜாதியில் சேர்த்துக் கொண்ட மாதிரியாகவே நடந்து வருகிறார்கள். பல புரோஹிதரும், சில லௌகிகரும் கொஞ்சம் ஒட்டியும் ஒட்டாமலும், தாமரை நீர் போலிருக்கிறார்கள். சிலர் ஒட்டாமலே விலகியிருக்கிறார்கள். போன மாஸம் மேற்படி ராமராயர் என்னிடம் ஊர்க்காரருடைய திருப்தியை உத்தேசித்துத் தான் ப்ராயச்சித்தம் பண்ணிக் கொள்ள இஷ்டப்படுவதாக அறிவித்தார். நான் உடனே மேற்படி விஷயத்தை இந்த ஊர் வைதிகர்களுக் கெல்லாம் சிரோமணியாகிய ரங்கநாத சாஸ்திரிகளிடம் போய்ச் சொன்னேன். இந்த ரங்கநாத சாஸ்திரிகளுடைய மாப்பிள்ளை ஒருவன் ரங்கூனிலே போய்க் காபிக் கடை வைத்திருக்கிறான். தமிழ்த் தேங்குழல், தமிழ் முறுக்கு, தோசை, வடை, கட

லச் சுண்டல் முதலிய பக்ஷணங்களைக் கொஞ்ச மேனும் வட இந்தியா ஆர்ய சம்பந்தமில்லாதபடி நன்றாகப் பண்ணிக் கொடுத்து அங்குள்ள தமிழ் மக்களெல்லாம், இந்த பிராமணனை மிகவும் அருமையாகப் பாராட்டினபடியால் நல்ல பணக் காரனாகி, அங்கே தனது மனைவியாகிய மேற்படி சாஸ்திரிகளுடைய பெண்ணும், தானும் நாலைந்து குழந்தைகளுமாக சௌக்கியத்தோடு வாழ்ந்து வருகிறான். இந்தக் காரணத்தை யொட்டி மேற்படி ரங்கநாத சாஸ்திரிகள் மாப்பிள்ளையுடன் எவ்வித மான சம்பந்தமு மில்லாமல் கத்தரித்து விட்டார். இவருடைய மனைவி மூலமாகக் காயிதப் போக்கு வரவு நடக்கிறது. அதில் கூட இவர் கவனம் செலுத்துவதில்லை. இதே காரணத்தை யனுசரித்து அதாவது இவருடைய மாப்பிள்ளை ரங்கூனுக்குப் போனதை உத்தேசித்து இந்த சாஸ்திரிகள் தம்முடைய வைதிகத்தை மிகவும் விஸ்தாரப்படுத்தி வைத்திருக்கிறார். மற்றவர்களுடைய வைதிகம் ஆறு முழமென்று வைத்துக் கொண்டால் இவருடைய வைதிகம் பன்னிரண்டு முழம். இந்த ப்ராமணர் இங்கே வைதிகர்களுக்குத் தலைவர். இவரிடம் நான் போய் ராமராயருக்குப் பிராயச்சித்தம் செய்து வைக்கவேண்டு மென்று சொன்னேன்.

அப்போது மேற்படி ரங்கநாத சாஸ்திரிகள் என்னைப் பார்த்து, "நீர் இந்த விஷயத்தை ஏன் கவனிக்கிறீர்?" என்று கேட்டார். நான் வைதிக மென்று அவர் நினைத்துக்கொண்டிருக்கிறார். அவர் கேள்விக்கு நான் மறுமொழி சொல்லாமல்,

"ஸமுத்ர யாத்திரை செய்தவன் பண்ண வேண்டிய ப்ராயச்சித்த மெப்படி?" என்று கேட்டேன்; (இது வரைக்கும் சொன்ன கதை யெல்லாம் பீடிகை. இனிமேல் எழுதப் போகிற வசனங்களே நான் சொல்ல வந்த விஷயம். ப்ராயச் சித்தம் கடல் யாத்திரைக்கு எப்படி நடத்த வேண்டு மென்று நான் கேட்டதற்கு ரங்கநாத சாஸ்திரி சொல்லிய மறுமொழி கொஞ்சம் தர்க்க சாஸ்த்ர ஹானியாக இருந்த போதிலும் எனக்கே கேட்க ரஸமாக இருந்தபடியால், பிறருக்கும் தெரிவிப்போம் என்ற எண்ணத்துடன் இங்கெழுதலானேன்.) ரங்கநாத சாஸ்திரிகள் சொல்லுகிறார்:—

"இங்கிலிஷ் படித்தவன் பண்ணுகிற ப்ராயச் சித்த மெல்லாம் 'ஹம்பக்' (பொய் வேஷப்) ப்ராயச் சித்தம். இங்கிலிஷ் படித்தவனுக்கு இந்த விஷ யத்தில் கொஞ்சமேனும் நம்பிக்கை கிடையாது. ருஷ்யாவிலே ராஜ்யம் புரண்டு போச்சுதாமே. ஜாதிகுல மெல்லாம் லோக முழுதிலும் தலைகீழாகக் கவிழ்ந்து போமென்று ஆனிபெஸண்ட் பத்திரிகை யில் போட்டிருந்ததாமே! 'தன் மத்யே' இன்னு மொரு பேச்சு உம்மிடத்தில் கேட்க வேண்டு மென்று நினைத்துக் கொண்டே யிருந்தேன். ஆனி பெஸண்டுக்கு அஷ்டமாசித்திகளும் வருமென்று தஞ்சாவூரில் ஒரு பெரிய யோகீசுவரர் என்னிடம் நேரில் சொன்னார்....உமக்குத் தெரியாதா? போகட் டும் போம்....மொத்தத்தில் உத்தம ஸ்த்ரீ. வெள் ளைக்கார ஜாதியில் பிறந்து நம்முடைய ஹிந்து மதத்தைச் சேர்ந்து விட்டதாக வாயினலே எப்

போது சொன்னாளோ, அவள் நம்மைச் சேர்ந்தவளாகவே நினைக்க வேண்டும். இந்த விஷயத்தில், காளிதாஸரே, நம்முடைய அபிப்பிராயமென்னவென்றால், எந்தக் குலமாக, எந்த ஜாதியாக இருந்தபோதிலும் நமது ஆலயத்தில் வந்து கும்பிட்டால் அவர்களை நாம் ஹிந்துவாக நினைத்து ப்ரேமை செலுத்த வேண்டும். இந்த ஆனிபெஸன்ட்கூட பூமி முழுதிலும் ஸஹோதரத்வமும் ஸமத்துவமும் ஏற்படப் போகிறதென்று சொல்லுவதாகக் கேள்வி. அந்த வார்த்தை ஸத்தியமாகத்தான் இருக்கும். அந்தம்மாள் வெகு தூரம் படித்தவளாமே? அவ்டமாவித்தி யென்கிற வார்த்தை வந்தால் அஸாதாரணமான புத்தியாவது உண்டென்பது நிச்சயந்தானே? நம்முடைய சாஸ்த்திரங்களும் அப்படியே தான் சொல்லுகின்றன. கலி மேலே போகப் போக ஜனங்களுக்குள்ளே கலப்பு மிகுதிப் பட்டுக் கடைசியில் ஒரே குலமாய்விடுமென்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. ஆனால் அது கெட்ட அர்த்தத்திலே சொல்லுகிறது. எல்லாரும் ஒரே குலமாய்க் கெட்டுப் போவார்களென்று சொல்லுகிறது. யதார்த்தம் அப்படியில்லை. ப்ரஹ்மாண்ட புராணத்தில் நான் ஒரு சுலோகம் படித்தேன். அது இப்போது ஞாபகமில்லை. அதிலே என்ன போட்டிருக்கிறதென்றால் கலியுகத்திலேயே ஒரு கிருதயுகம் வரும் என்று போட்டிருக்கிறது. கலி முற்றி உலகம் நாசமாய்ப் போகுமென்ற வாக்யங்களை நான் சோதனை போட்டுப் பார்த்திருக்கிறேன். அவற்றை யெல்லாம் காட்டிலும் மேற்படி ப்ரஹ்

மாண்ட புராண வாக்யமே ப்ரமாண மென்று நான் நிச்சயமாக ரூஜுப்படுத்துவேன். காளிதாஸரே, நீரும் அதை நம்பும். இதெல்லாம் ஏன் சொல்லுகிறேனென்றால் உம்முடைய ஸ்நேஹிதர் ராமராயர் ப்ராயச்சித்தம் பண்ணிக் கொள்ளப் போகிறதாகச் சொன்னீரே? அது அவசியமில்லை. இன்னும் கொஞ்ச காலத்தில் கிருதயுகம் வந்து விடுமானால், அவருக்கு யாதொரு சிரமமுமில்லை. எல்லாரும் ஸமானம். அட, க்ருத யுகம் வரவேயில்லை; இந்தக் கலியுகமே சாசுவதமாக இருக்கப் போகிறதாக வைத்துக் கொள்வோம். அதிலும், அதிகமாகப் பொய் சொல்லாமல் இருப்பது விசேஷம். கலி தானுகவே முற்றுவது போதாதென்று நாம் ஒரு பக்கம் அதைப் பொய் சொல்லிப் பழுக்க வைப்பதில் என்ன சுகம்? கடல் யாத்திரை பண்ணினால் என்ன குடி முழுகிப் போச்சு? ஏன் காணும், காளிதாஸரே, உம்மைத்தான் கேட்கிறேன். கடல் யாத்திரை பண்ணினால் என்ன? இருக்கிற பிராமணர்களெல்லாரும் ஸ்மிருதி வாக்யம் தவறுதபடி தான் நடக்கிறார்களோ? நம்முடைய மாப்பிள்ளை ரங்கூனுக்குப் போய் அங்கே நல்ல கோடீசுவரனாக வாழ்கிறான். மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, பங்களூர், திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர், புதுச்சேரி, கும்பகோணம் இத்யாதி க்ஷேத்ரங்களில் வஸிக்கும் இங்கிலிஷ் பிராமணர்களுக்குள்ளே ஸந்த்யா வந்தனம் எவ்வளவு சொற்பம்? தீர்த்த பானம் கூட நடக்கத்தான் செய்கிறது. ராமராமா! இந்த ரிஷிகளெல்லாரும் என்ன ப்ராயச்சித்தம் பண்ணுகிறார்கள்?

என் மாப்பிள்ளை ரங்கூனில் நித்ய கர்மானுஷ்டானங்கள் தவறாமல் நடத்தி வருகிறானென்று கேள்வி. அவன் வந்தால் ஜாதி ப்ரஷ்டன்தானே? ப்ராயச்சித்தம் பண்ணினால் கூட நான் சேர்த்துக் கொள்ள மாட்டேன். தள்ளுங்காணும்! ப்ராயச்சித்தமாவது, வெங்காயமாவது! நான் ஏதோ உதர நிமித்தமாக இந்த வைதிகத்தை விட முடியாமல் கட்டுப் பட்டுக் கிடக்கிறேன். இதில் மற்றவர் வந்து சேர்வதிலே எனக்கு ஸம்மதமில்லை. ராமராயர் ப்ராயச்சித்தம் பண்ணிக் கொள்ளுவதில் எனக்கு இஷ்டமில்லை. ரூபாய் ஐந்நூறு கொடுத்தால் செய்து வைக்கிறேன். ஆக்ஷேபமில்லை. அப்படியே அவர் ப்ராயச்சித்தம் செய்தாலும் நான் அவருடன் பந்தியிலிருந்து சாப்பிட மாட்டேன்" என்றார். இதை நான் ராமராயரிடம் வந்து சொன்னேன். ராமராயர் ப்ராயச்சித்த யோசனையை நீக்கி விட்டார்.

பெண் விடுதலை

காளிதாஸன்

25 ஜூன் 1917 பிங்கள ஆனி 12

பார்க்க:—மூன்றும் தொகுதி. பகுதி—மாதர். இப்பகுதியில் **பெண் விடுதலை (1)** என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.

தாதாபாய் நௌரோஜி

சி. சுப்பிரமணிய பாரதி

4 ஜூலை 1917 — பிரஜா மணி 21

தாதாபாய் நௌரோஜி ஜீவதசைமாறி ஆத்ம தசை யடைந்து விட்டார். 92 வருஷம் இந்த உலக வெள்ளத்திலே எற்றுண்டு பயன் மாறிப் போன மண் தோணியைக் கரைந்துபோய் விட்டார். அவருடைய புகழுடம்பிலிருந்து ஹிந்துஸ்தானத்தின் கார்யங்களை ஆத்ம ஸ்வரூபியாகி நடத்தி வருவார். "தாதாபாய் நௌரோஜி இறந்து போனர். தாதாபாய் நௌரோஜி நீடுழி வாழ்க."

★

தாதாபாய் நௌரோஜி இறந்து போகவில்லை. அதனாலேயேதான் நீடுழி வாழ்கவென்று சொல்ல இடம் உண்டாகிறது. நம்பிக்கைக்குப் பெயர் தாதாபாய் நௌரோஜி; அதற்கு மரணம் இல்லை. நம்பின காரியம் கைகூடும் என்ற வசனத்தை ஹிந்துக்கள் நம்பும்படி செய்வதற்காகத் தோன்றிய பெரியோர்களில் தாதாபாய் ஒருவர். தன்னை மறந்து குற்றுயிரோடு கிடந்த ஹிந்து தேசம் மறுபடியும் உயிர் கொண்டு, ஸ்மரணைபெற்று வலிமை காட்டும் என்று தாதாபாய் ஒரு நாளா, இரண்டு நாளா, 70 வருஷம் இடைவிடாது நம்பினர்.

அவர் சாகுமுன்னே ஹிந்துஸ்தானம் பிழைத்து விட்டது. ஹிந்துக்களுடைய சக்தி ஏறுவதைக் கண்ணாலே பார்த்த பிறகுதான் அந்தக் கிழவனுடைய பிராணன் பிரிந்தது. ஹிந்துக்களுக்கு இந்தியாவில் அதிகாரம் கிடைக்க வேண்டுமென்று 70 வருஷங்களுக்கு முன்னே தாதாபாய் நௌரோஜி கண்டுபிடித்தார். 11 வருஷங்களுக்கு முன்னே கல்கத்தா காங்கிரஸ் சபையில் ஹிந்துக்களுக்கு ஸ்வராஜ்யம் வேண்டும் என்று தாதாபாய் முரசடித்தார். இந்தியா முழுதும் அந்த வார்த்தை பரவி அசைக்க முடியாமல் நிலைபெற்றதைக் கண்ட பின் உயிர் துறந்தார். 1905-ம் வருஷத்தில் சென்னப்பட்டணத்தில் சுதேசமித்திரன் ஜி. சுப்ரமணிய அய்யர் என்னிடம் ஒரு நாள் தாதாபாய் நௌரோஜியின் 80-வது பிறந்த நாள் விசேஷம் கொண்டாட வேண்டும் என்று சொன்னார். "பார்லிமெண்ட் சபைக்கும், மந்திரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் மூச்சு விடாமல் விண்ணப்பம் எழுதி தாதாபாய் ஒரு பயனும் அறியாமல் கிழத் தன்மை முற்றிக் கிடக்கிறார். இவருக்குப் பிறந்த நாள் கொண்டாடி நாம் என்ன பயன் பெறப் போகிறோம்?" என்று கேட்டேன்.

அப்போது ஜி. சுப்ரமண்ய அய்யர் சொன்னார்: "தாதாபாய் உறுதியுடைய மனிதன். அவர் நினைத்த காரியங்கள் கடைசிவரை சேடறத் தான் செய்யும். ஹிந்து ஜனங்கள் பசியாலும் பிணியாலும் அழிந்து போகாமல் காக்கவேண்டுமென்றும் அதற்கு ஆங்கிலேயர் நமக்குத் தண்ணீட்சி

கொடுப்பதே உபாயம் என்றும் தாதாபாய் நௌரோஜி சொல்லிக் கொடுத்தார். நமக்கெல்லாம் தேச பக்தி அவர் கொடுத்த பிச்சை. அவரை நாம் ஆசார்யராகக் கொண்டாட வேண்டும்" என்று சொன்னர்.

★

பல வருஷங்கள் கடந்தன. இன்று தாதாபாய் நௌரோஜியை உயிர் பெற்ற ஹிந்துஸ்தானம் ஆசாரிய ஸ்தானத்தில் கொண்டாடி ஊரூராகப் புகழ்ச்சி பேசுவதைக் காணும்போது ஜி. சுப்ர மண்ய அய்யர் போட்ட மதிப்பு சரியென்று விளங்கு கிறது. வைஸ்ராய்களும் கவர்னர்களும் இப்போது நௌரோஜிக்குப் பெருமை சொல்லுகிறார்கள். உயிரோடிருக்கும்போதே அவரை ராஜாங்கத்தார் மிகவும் மேன்மைபடுத்தி உபசரிக்கத் தொடங்கி விட்டார்கள். ஸ்வராஜ்யக் கொள்கைக்கு மேன்மை யும் வெற்றியும் உண்டென்பதை தாதாபாய் பல விதங்களிலே காண்பித்தார்.

★

தாதாபாய் நௌரோஜியினுடைய விண்ணப்ப உபாயம் நமக்குக் கைகூடி வருமோ என்பது ஒரு சந்தேகம். நாமே பல விண்ணப்பங்கள் ராஜாங்கத் தாருக்கு எழுதிப் பயனே இதுவரை பெறாமல் இன்றும் எதிர்பார்த்த நிலைமையில் இருக்கிறோம். நம்முடைய விண்ணப்பங்களை அதிகாரிகள் உடனுக் குடனே கவனித்தால் நமக்கும் நல்லது; அவர்களுக் கும் நல்லது. ஜனங்களுக்குள்ளே அதிருப்தி பரவாமல் நம்முடைய நோக்கம் நிறைவேறும்.

தாதாபாய் போன்ற ஸ்வராஜ்யத் தலைவர்களிடம் அதிகாரிகள் நேருக்கு நேராக மந்திராலோசனை செய்தால் நல்லது. நம்மிடத்திலே தோன்றியிருக்கும் புதிய சக்தியை அதிகாரிகள் கண் திறந்து பார்க்காமல் புறக்கணித்திருப்பது தந்திர சாஸ்திரத்துக்குப் பொருந்திய செய்கை யன்று.

தாதாபாய் தெய்வ பக்தியுடையவர். அதனாலே தான் நான் அவருக்கு ஷே புகழ்ச்சியுரை எழுதத் துணிந்தேன். ராஜ்ய விஷயங்களிலே கலந்து காங்கிரஸ் சபைக்குப் போன மாத்திரத்திலேயே ஒருவன் மதிப்புக்கிடமாக மாட்டான். தெய்வ பக்தியை மூலபலமாகக் கொண்டதனாலேயே தாதாபாய் கார்ய ஸித்தி பெற்றார். ஆதலால் பக்தியே தாரகம். ஒவ்வொருவனும் தெய்வ பக்தி பண்ணலாம். வியாபாரி, தச்சன், அம்பட்டன், ராஜா, மந்திரி, பிராமணன், பறையன் எல்லோரும் தெய்வபக்தியாலே மேன்மை பெறுவார்கள். எந்தத் தொழிலும் தெய்வ பக்தியால் வெற்றி யடையும். தாதாபாயினுடைய பூத சரீரத்திலிருந்த சக்தியைக் காட்டிலும் ஆயிர மடங்கு அதிக சக்தி அவருடைய நாமத்தில் புகுந்து, அப்பெயர் கிணைப்பினாலே ஹிந்து ஜாதி மேன்மை பெறும்படி நேரிடலாம். பராசக்தியின் இஷ்டப்படி உலகம் அசைகிறது. பராசக்தி இப்போது நம்பிக்கையை உலகம் முழுதும் பரப்புகிறாள். சில தினங்களின் முன்பு ஒரு இங்கிலீஷ் சாஸ்திரி கடவுளைப்பற்றி எழுதி யிருக்கும் புஸ்தகமொன்றை வாசித்துக் கொண்டிருந்தேன். சரணாகதி தர்மத்தை அந்த நூல், நமது விசிஷ்டாத்வைதி

களைப்போல் அத்தனை தெளிவாகச் சொல்லுகிறது. ஹிந்து மதம் உலக முழுமையும் வியாபித்துக் கொண்டு வருகிறது.

நம்பிக்கையின் ஸஹஸ்ரநாமங்களில் காதா பாய் நௌரோஜி என்ப தொன்று. நம்பிக்கை வெற்றி பெறும். நம்பிக்கை நீடுழி வாழ்க.

குறிப்பு:—காதாபாய் நௌரோஜி 30—6—1917-ல் காலமானார்.

அவரைப் புகழ்ந்து அவருடைய எண்பதாவது ஆண்டு நிறைவுக் காலத்தில் பாரதியார் தாதாபாய் நவ்ரோஜி என்ற பாடல் பாடியிருக்கிறார். அப்பாடல முதல் தொகுதியில் வெளியாகியுள்ளது.

மழை

காளிதாஸன்

12 ஜூலை 1917 *பிங்கள ஆனி 29*

குறிப்பு:—இக் கட்டுரை இரண்டாம் தொகுதியில் **கதைக் கொத்து** என்ற பகுதியில் வெளியாகியுள்ளது. முதல் தொகுதியில் **ஸ்வ சரிதையும் பிற பாடல்களும்** என்ற பகுதியில் **மழை** என்ற தலைப் புடன் உள்ள பாட்டு இக் கட்டுரையில் வந்ததே யாகும்.

கட்டுரையும் பாட்டும் பாரதியார் தாம் நேராகப் புதுச்சேரி யில் அனுபவித்த ஒரு நிகழ்ச்சியிலிருந்து அற்புதமாக உருவாகி யுள்ளன. காற்று வேகத்தையும், மின்னல் வீச்சையும், இடி முழக்கத்தையும், மழை ஆரவாரத்தையும் பாட்டிலேயும் அதன் சொற் சேர்க்கையிலேயும் நாம் பிரத்யட்சமாகக் காண் கிறோம்.

ராகவ சாஸ்திரியின் கதை

காளிதாஸன்

13 ஜூலை 1917 *பிங்கள ஆனி 30*

பார்க்க:—மூன்றும் தொகுதி. பகுதி—கலைகள். இந்த ராகவ சாஸ்திரியை வைத்து பாரதியார், மலையாளம் (1), மலையாளம் (2), நம்பூரிகளும் நீயரும், மலையாளத்துக் கதை என்று மேலும் மூன்று கட்டுரைகள் எழுதியுள்ளார். அவையும் மூன்றும் தொகுதியில் உள்ளன.

கண்ணன் பாட்டு

1917-ல் அதாவது பிங்கள வருஷம் ஆவணி மாதத்தில் பாரதியார் எழுதிய கண்ணன் பாட்டின் முதற் பதிப்பு வெளியாகி யிருக்கிறது.

திரு. பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் பிங்கள ஆவணி 1 என்று தேதியிட்டு இதற்கு ஒரு முகவுரை எழுதி யுள்ளார்கள். அதிலே, "ஸ்ரீமான் பாரதியார் ஒரு பெரிய மேதாவி; மகா பண்டிதர்; தெய்விகப் புலவர்; ஜீவன் முக்தர். இவர் தமிழ் நாட்டு ரவீந்திரநாதர். இவர் எனது தமிழ் நாட்டின் தவப் பயன்" என்றும், "இந்த ஆசிரியன் காலத்திற்குப் பின், எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின், இவர் பாடல்களைத் தமிழ்நாட்டு மாதர்களும் புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை யான் இப்பொழுதே காண்கின்றேன்" என்றும் திரு. நெல்லையப்பர் எழுதி யிருக்கிறார்.

'கண்ணன் – என் அரசன்' என்ற பாடல் இந்த முதற் பதிப்பில் காணப்படவில்லை.

முதற் பதிப்பு வெளியாகி இரண்டு ஆண்டுகளில் இதன் இரண்டாம் பதிப்பு வந்திருக்கிறது. அதற்கு வ. வெ. சு. ஐயர் சித்தார்த்தி ஆவணி 22 என்ற தேதியிட்டு ஒரு அழகிய முன்னுரை எழுதி யிருக்கிறார்.

"கவிதா ரீதியாகப் பார்க்கும்போது, இக் கீர்த்தனங்களுள பெரும்பாலவையிலுள்ள சுவை தேனினும் இனிதா யிருக்கிறது.

"இன்னொன்று: கவிதை அழகை மாத்திரம் அனுபவித்து விட்டு, இந்நூலின் பண்ணழகை மறந்துவிடக் கூடாது. இதிலுள்ள பாட்டுக்களிற் பெரும்பாலவை தாளத்தோடு பாடுவதற்காகவே எழுதப்பட்டவையா யிருக்கின்றன. கடற்கரையில், சாந்தி மயமான சாயங்கால வேளையில், உலகினத்தையும்

மோஹ வயப்படுத்தி நீலக் கடலையும் பாற்கடலாக்கும் நிலவொளியில், புதிதாகப் புனைந்த கீர்த்தனங்களைக் கற்பனை கர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியன் தன்னுடைய கம்பீரமான குரலில் பாடினதைக் கேட்ட ஒவ்வொருவரும் இந் நூலிலுள்ள பாட்டுக்களை மாணிக்கங்களாக மதிப்பர்.''

இவ்வாறு வ. வெ. சு. ஐயர் தமது முன்னுரையிலே குறிப்பிடுகிறார்.

கண்கள்

சி. சுப்பிரமணிய பாரதி

19 அக்டோபர் 1917

'கண்கள் சிவந்து பெரியவாய்' என்றார் நம் மாழ்வார்.

எம்பெருமானுடைய கண்களைச் சொல்லுகிறார். விடுதலை பெற்ற ஜீவன் முக்தர்களுடைய கண்ணும் நிருமானுடைய கண்ணைப் போலவே இருக்கும். தாமரைப் பூவைப் போலே கண் வேண்டும் என்பர் திறந்த பார்வை வேண்டும்.

மூடின கண் மறைந்த ஒளியைக் காட்டுகிறது. யோகி கண்மூடி ஜபம் பண்ணுகிறானே அதை நான் சொல்லவில்லை. ஸாமான்ய ஜனங்கள் கண்ணை முழுதும் விழித்துப் பார்க்காமல் அரைப் பார்வையும் கோணற் பார்வையும் பார்க்கும்படி செய்கிற அஞ்ஞானத்தையும் பயத்தையும் பழிக்கிறேன். இது நிற்க.

நான் சென்னப்பட்டணத்தில் இருந்தபோது ஒரு சாமியாருடன் ஸ்நேகப்பட்டேன். அவர் சுதேசியம், அன்னிய வஸ்து பகிஷ்காரம், ஸ்வராஜ்ய ஸ்தாபனம் என்ற விஷயங்களைப் பற்றி ஆத்திரத்தோடு பேசுவார். அவர் கண்களை இமைக்காமலே நெடுநேரம் இருப்பார்; மனிதர் இமைக்காமலே

இருந்து விடலாம் என்று அந்தச் சாமியார் சொல் லுவதுண்டு. அது நல்ல பழக்கம். ஸௌர்யனையே பார்த்துக் கொண்டிருந்தால் ஞான திருஷ்டி உண் டாகும். கண்ணில் வீரம் ஏற்படும்.

ஸாதாரணமாக இருவருடைய கண்கள் ஸந்தித் தால், "இவன் ஏனடா நம்மை மூறைச்சுப் பார்க் கிறான்?" என்கிற எண்ணம் இருவர் மனசிலும் உண்டாகிறது. ஒருவன் கண்ணைச் சாய்த்துக் கொள்ளுகிறான். அல்லது இருவரும் சாய்த்துக் கொள்ளுகிறார்கள். நேருக்கு நேர் கண்ணுக்குக் கண் பார்த்து இரண்டு பேர் நெடுநேரம் பேசிக் கொண் டிருப்பது துர்லபம்.

பொய் இல்லாவிட்டால் பார்வை நேராகும்!

கவனி!

பொய் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்.

பயம் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்.

கவனி!

பொய் தீர்ந்தால் பயம் தீரும்.

பயம் தீர்ந்தால் பொய் தீரும்.

நேரே பார்த்தால் விரோதக் குறி யென்று யோக்யன் ஏன் நினைக்க வேணும்? அகத்தின் அழகு முகத்தில் தெரியும். உன் மனசில் என்ன இருக்கிறதென்று தெரிந்து கொள்ளும் பொருட்

டாக உன் கண்ணை நேரே பார்க்கிறேன். விரோத மில்லை. அவமரியாதை யில்லை. விஷயம் தெரிந்து கொள்ளும் பொருட்டு.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு நாள் முழுதும் ஸூர்யனை இடைவிடாமல் பார்த்து உபாசனை செய்தாராம். இது நல்ல வழக்கம். கண் இருக்கும் போது ஸூர்ய நமஸ்காரம் செய்வோம். அதனால் ஞான திருஷ்டி யேற்படும்.

குழந்தைகள்

காளிதாஸன்

25 அக்டோபர் 1917

ஐரோப்பாவில் பல தேசங்களில் சண்டையினால் ஆள் மிகவும் சேதப்படுவதிலிருந்து அங்கே பல பண்டிதர் இனி வரப்போகும் ஜனத் தொகையாகிய குழந்தைகளை நேரே பாதுகாக்கும் விஷயத்தில் அதிக சிரத்தை பாராட்டி வருகிறார்கள். மேல் வகுப்புக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் அளவு கீழ் ஜாதிக் குழந்தைகளுக்கு அங்கே படிப்பு இதுவரை கற்றுக் கொடுக்கவில்லை. கீழ் வகுப்புக் குழந்தைகளை அதிபால்யத்திலேயே தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வேலை செய்யச் சொல்லி வருவதால் அவர்களுடைய அறிவு விசாலமடையாதொரு வழியுமில்லாமற் போகிறது.

யந்திரத் தொழிற்சாலைகள் மனிதரை மிருகங்களுக்கு ஸமானமாகச் செய்து விடுகின்றன. காலை முதல் மாலை வரை ஒருவன் ஒரு மனையின் மேலிருந்து கொண்டு, நரக வாதனை போன்ற கோர யந்திரச் சத்தத்தினிடையே, யந்திரத்துக்குள் கொஞ்சங் கொஞ்சமாகப் பஞ்சை நுழைத்துக் கொண்டிருந்து விட்டு, ஸாயங்காலம் வீட்டிற்கு வந்தவுடன் குடித்து மதிமயங்கிக் கிடந்து, மறுநாள் காலை பொழுது விடியுமுன்னே மறுபடி பஞ்சு போடப் போய்விடுகிறான். இவன் தன்னுடைய

அறிவை விசாலப்படுத்தவும், உலக இன்பங்களை அநுபவிக்கவும், தியானம் பூஜை முதலிய தெய்வக் காரியங்கள் செய்யவும் நேரமெங்கே?

எப்போதும் இடைவிடாமல், அவன் காதில் யந்திரத்தின் பேய்க் கூச்சலும், கண்முன் இரும்பும் பஞ்சும் மாறுமல் இருப்பதால் அந்த மனிதன் நாளடைவில் மனிதத் தன்மை மாறித் தான் ஒரு இரும்பு யந்திரம் போலாய் விடுகின்றான். இந்தத் தொழிலுக்குச் சிறு குழந்தைகளைக் கொண்டு விட்டால் அவற்றின் கதி என்னாகும்?

இங்ஙனம் பாழடைந்து குட்டிச்சுவராய்ப் போகும் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டுமென்றும், மேல் ஜாதிக் குழந்தைகளைப் போலே கீழ் ஜாதிக் குழந்தைகளுக்கும் தக்க வயதாகும் வரை படிப்பும் நாகரிகமும் கற்றுக் கொடுத்துத் தொழிற் சாலைகளில் சேராமல் தடுக்க வேண்டுமென்றும் மேற்குத் திசையாரில் பல பண்டிதர் முயற்சி செய்து வருகிறார்கள். படிப்பாளிகளில் அநேகர் இந்த யுத்தத்தில் மடிந்து போவதால், சண்டை முடிந்த பிறகு ஐரோப்பாவில் கல்வியின் நிலைமை மிகவும் சீர்கெட்டுப் போயிருக்கு மென்பதில் ஸந்தேகமில்லை. இதுநிற்க.

நமது தேசத்தில் எல்லாருக்கும் ஆரம்பப் படிப்பு ஸர்க்கார் செலவில் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீ கோகலே வைஸ்ராய் சபையில் கூகூ என்று கத்திப் பார்த்தார். செலவுக்குப் பணம் இல்லை என்று சொல்லி அதிகாரிகள் கையை விரித்து விட்டார்கள். இது சண்டைக்கு முந்தி! இப்போதோ கேட்கவே வேண்டியதில்லை. இனி

மேல் போகப் போகச் சண்டைச் செலவும், சண்டை முடிந்தால் வாங்கின கடனுக்கு வட்டிச் செலவும் அதிகப்பட்டுக் கொண்டு போகும். ஆதலால் நாம் ராஜாங்கத்தாரிடம் இவ்விஷயத்தில் அதிக உதவி எதிர்பார்க்க இடமில்லை.

ஆண், பெண், அடங்கலாக நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இனம் படிப்புக் கட்டாயமாய்ச் சொல்லி வைக்கவேண்டும். இது ராஜாங்கத்தாருடைய கடமை. ஆனால் நம்முடைய ராஜாங்கத்தார் இப்போதுள்ள நிலைமையில் அவர்கள் இந்தக் காரியம் செய்ய மாட்டார்கள்.

நமக்கு நல்ல காலம் எப்போது வருமோ தெய்வத்துக்குத்தான் தெரியும். அதுவரை அதிகாரிகள் எப்படியிருந்த போதிலும், அதைப் பொருட்டாக்காமல் நாட்டிலுள்ள பணக்காரர் மற்றெல்லாவித தர்மங்களைக் காட்டிலும், ஜனங்களுக்கு அறிவு விருத்தியும், தைரியமும், தேச பக்தியும் உண்டாக்கத் தகுந்த சுதேசியக கல்வி ஏற்படுத்திக் கொடுப்பதைப் பெரிய தர்மமாகக் கருதி, அதிலே பணம் செலவிட முற்படும்படி மேற்படி பணக்காரருக்கு நல்ல புத்தி ஏற்படுத்திக் கொடுக்குமாறு தெய்வத்தை வேண்டுகிறோம். ஒரு நாட்டில் உள்ள எல்லாவிதமான குறைகளுக்கும் புத்திக் குறையே ஆதாரம். இது படிப்புக் குறைவினால் உண்டாவது. இந்தக் குறையை நீக்குவதில் நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் மிகவும் அவஸரம்.

''கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.''

உள்ளுருத்த விளக்கம்

காளிதாஸன்

26 அக்டோபர் 1917

1. **உச்சரி** - சொல்.

உச்சரி என்பதை உத்-சரி என்று பிரித்தால் மேலே (உயர்ந்த படியில் நட) என்று பொருள் படுகிறது. சொல்லும்போது மேல் நிலையில் நின்று சொல்க.

2. 'கை' என்பதற்குத் தெலுங்கில் 'செய்' என்று பெயர். க, ச மாறுதல் இயல்பு. 'கை' என்ற சொல்லுக்கே செய் என்று பொருள். தொழில் செய்யாமல் இருக்கும் கையை நெருப்பிலே வை; கரியாவது கிடைக்கும் என்றர்த்தம்.

3. காக்கை ஒரு பறவையின் பெயர்.

காக்கை என்றால் காப்பாற்றுதல் என்றும் அர்த்தம். தெருவில் நாம் பண்ணுகிற அசுத்தங்களை யோசிக்கும் போது காக்கை யில்லாமல் போனால் நாமெல்லோரும் நாற்றமெடுத்துச் செத்துப் போவோம் என்பதில் சந்தேகமில்லை.

காக்கைகள் பிதிர்க்களுடைய வாஹனங்கள் என்றும் அவற்றுக்கு சிராத்காதி ஸமயங்களிலும், தினந்தோறும், வாயஸாந்தம் போடவேண்டும் என்றும் நமது முன்னோர் சொல்லி யிருக்கிறார்கள். காக்கைக்கு நூறு வயது. அது எளிதிலே சாகாது.

புயற்காற்றில் பதினுயிரக்கணக்கான காக்கைகள் மடிந்தன. தெருவெல்லாம் காக்கை செத்து விழுந்து கிடந்தது. பார்த்தவர்கள் அழுதார்கள். இரண்டு காக்கையோ மூன்று காக்கையோ மிஞ்சி யிருப்பது போலே தோன்றிற்று. இப்போது பார்த்தால் ஏறக்குறைய பழைய ஜனத்தொகை காக ஜாதியில் உண்டாய் விட்டது. காக்கை வலிய பறவை; அது நம்மைக் காக்கிறது; அதை நாம் கும்பிடவேண்டும்.

4. வருஷம் என்பது மழை; ஆண்டுக்கும் பெயர்.

5. திருப்பதி என்பது ஒரு க்ஷேத்திரத்துக்கும், ஸௌபாக்ய நிலைமைக்கும் பெயர்.

6. அன்னம் என்றால் உணவு.

அன்னம் என்பது வஸ்து.

ஸத்தியத்துக்கும், ப்ரஹ்மத்துக்கும் அன்னம் என்று பெயர். பிராம்மணர் "ஸத்யந்த்வர்த்தேந பரீ ஷிஞ்சாமி" என்று சொல்லி அன்னத்தை ஜலத் தில் சுற்றுகிறார்கள். அங்கு ஸத்யம் என்றது ஆகா ரத்தை; ரிதம் என்றது ஜலத்தை; ஸத்யம் என்பது உண்மைக்கும், ரிதம் நேர்மைக்கும் பெயர். நேர்மை யாவது தைர்யம். நாம் அறிந்த உண்மைப்படி நடக்கும் துணிவு. உண்மை ப்ருதிவியினுடைய அம்சம்; துணிவு ஜலத்தினுடைய அம்சம் என்று வேதாந்த சாஸ்திரம் சொல்லுகிறது.

அன்னம் அமிர்தம்.

வைஷ்ணவர், 'போஜனமாயிற்று?' என்பதற்கு 'அமுது செய்தாயிற்று?' என்கிறார்கள். அன்னம் அமிர்தமென்பதே ராமானுஜருடைய சித்தாந்தம். உண்மையை நேர்மையாலே காக்க வேண்டும்.

ஆதலால் அன்னத்தைக் காப்பாற்றத் தெரியாதவன் மூடன்.

பசு

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி

8 நவம்பர் 1917

பசுவின் சாணத்துக்கு நிகரான அசுத்த நிவாரண மருந்து உலகத்தில் அக்நியைத்தான் சொல்லலாம். வீட்டையும், யாகசாலையையும், கோவிலையும் நாம் பசுவின் சாணத்தால் மெழுகிச் சுத்தப்படுத்துகிறோம். அதனைச் சாம்பர் ஆக்கி அச்சாம்பரை விபூதி என்று ஜீவன் முக்திக் குறியாக வழங்குகிறோம்.

பசு வென்பது ஒளிக்குப் பெயர்.

பசுமாடு பத்தினிக்கும் மாதாவுக்கும் ஸமானம்.

அதன் கண்ணைப் பார்!

அதன் சாணமே விபூதி; அதன் பால் அமிர்தம்.

வைத்தியரும் யோகிகளும் பசுவின் பாலை அமிர்தம் என்கிறார்கள். வேதமும் அப்படியேதான் சொல்லுகிறது.

பசுவை ஹிந்துக்களாகிய நாங்கள் தெய்வமாக வணங்குவதால், நாங்கள் பெரும் பகுதியாக வாழ்வதும், எங்களுடைய பூர்வீக சொத்துமாகிய இந்த தேசத்தில் பஹிரங்கமாகப் பசுவின் கொலை யாரும் செய்யாமல் இருப்பதே மரியாதை யாகும்.

இதைத்தான் ஆப்கானிஸ்தானத்து அமீர் சாஹெப் நமது தேசத்து முஸல்மான்களிடம் சொல்லிவிட்டுப் போனார். ஹிந்துக்களின் கண் ணுக்குப் படாமல் என்ன இழவு வேண்டுமானாலும் செய்து கொண்டு போங்கள்.

பகிரங்கமாக எங்கள் நெஞ்சை உடையும்படி செய்வதில் உங்களுக்கு லாபமென்ன? பேகாரில் கலகம் நேர்ந்தது போல் மொஹரம் பண்டிகை சம யத்தில் நாட்டில் வேறெந்தப் பக்கத்தில் எவ்விதமான கலகமும் நடக்காமல், மொஹரம் பண்டிகை சுபமாக முடிவெய்தி, ஹிந்து மஹமதிய ஸஹோதரத்வம் ஸ்தாபனமாய்விட்டது பற்றி நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன்.

ஒரே, ஓரிடத்தில் மாத்திரம் கலகம்! அதுவும் நடக்காமல் இருந்திருக்க வேண்டும்! அந்தப் பக் கத்து ஜனத் தலைவருடைய குற்றம்; போனால் போகிறது. ஹிந்து முஸ்லிம் ஒன்று; இணங்கி வாழ்வது நன்று.

பசுவையும், காளையையும் ஹிந்துக்கள் தெய்வ மென்று கும்பிடுவது போல், கஷ்டப் படுத்தாமல் மரியாதையாக நமது முன்னோர் நடத்தியபடி இப் போது நடத்துவதில்லை. வண்டிக்காரன் மாட்டைக் கொல்லுகிறான். இடையன் பசுவுக்குப் பொய்க் கன்றுக்குட்டி காட்டி, அதன் சொந்தக் கன்றைக் கொல்லக் கொடுக்கிறான். ஹிந்துக்களாகிய நாம் பார்த்துக் கொண்டு சும்மாதானே இருக்கிறோம்? வெறுமே பூவைப் போட்டுக் கும்பிட்டால் மாத்திரம் போதுமா?

நம்முடைய பக்தியை நாம் செய்கையில் காண்பிக்க வேண்டும். காண்பித்தால் பிறரும் நமது கொள்கைகளுக்கு அவமதிப்புச் செய்யாமல் மரியாதையாக நடந்து கொள்வார்கள்.

நகரம்

சக்திதாஸன்

20 நவம்பர் 1917

பார்க்க :—மூன்றும் தொகுதி. பகுதி - சமூகம்.

செல்வம்

சக்திதாஸன்

28 நவம்பர் 1917

பார்க்க :—மூன்றும் தொகுதி. பகுதி - சமூகம். செல்வம்(1) என்ற தலைப்பில் இக்கட்டுரை வந்துள்ளது.

ஹிந்து தர்மம்

காளிதாஸன்

29 கவடபா 1917

வாரீர் நண்பர்களே. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஹிந்து தர்மத்தைப் பரவும்படி செய்ய வேண்டுமானால் அதற்கு இதுவே மிகவும் ஏற்ற தருணம். ஆஹா! ஸ்வாமி விவேகானந்தரைப் போலே பத்துப் பேர் இப்போதிருந்தால் இன்னும் ஒரு வருஷத்துக்குள் ஹிந்து தர்மத்தின் வெற்றிக் கொடியை உலகமெங்கும் நாட்டலாம். அந்தக் கண்டங்கள் யுத்தமாகிய சுழற் காற்றுக்குள்ளே அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கையிலே, ஹிந்து தர்மத்தை எவன் கவனிப்பான் என்று கூறிச் சிலர் ஆக்ஷேபிக்கலாம். அந்த ஆக்ஷேபம் சரியன்று. சண்டைக் காலந்தான் நமக்கு நல்லது. இந்த ஸமயத்திலேதான் மனுஷ்ய அஹங்காரத்தின் சிறுமையும் தெய்வத்தினுடைய மஹிமையும் மனுஷ்யனுடைய புத்திக்கு நன்றாக விளங்கும். இவ்வுலக இன்பங்களை தர்மத்தினாலே பெற்றாலொழிய அவை இன்பங்கள் போலே தோன்றினாலும் துக்கமாகவே முடியும். அவரவர் கர்மத்தின் பயனை அவரவரே அனுபவிக்க வேண்டும். வினை விதைத்தவன் வினையறுப்பான். தினை விதைத்தவன் தினையறுப்பான். நாம் இன்று நாறு ஸப்மரீன் வைத்துக்

கொண்டு பிறருடைய கப்பல்களைத் தகர்த்தால் நாளை மற்றொரு ஜாதியார் ஆயிரம் ஸப்மரீன் கட்டி நம்முடைய கப்பல்களை நொறுக்கிப் போடுவார்கள். பாம்பைக் கொல்ல ஒரு கீரிப் பிள்ளையுண்டு; பகை பகையை வளர்க்கும். நாம் மற்றவரை அடிமைப் படுத்தினால் நம்மை அடிமைப்படுத்த வேறு யாரேனும் முளைப்பார்கள்.

இவ்வுலகத்தில் நாம் செய்கிற ஒவ்வொரு செய்கையும், ஸ்வப்ரயோஜனத்தைக் கருதாமல், லோகோபகாரத்தை முன்னிட்டுக் கொண்டு செய்ய வேண்டும். தீராத ஆவலும், அவஸரமும், ஓயாத பரபரப்பும் உள்ள ஜ்வர வாழ்க்கை நாகரிகமாக மாட்டாது. சரியான நாகரிகத்துக்கு சாந்தியே ஆதாரம். யந்திரப் பீரங்கிகளும் ஸப்மரீன்களும் நாகரிகத்துக்கு அடையாளமல்ல. நிலக்கரிச் சுரங்கங்களும் ஆகாச வெடிகுண்டுகளும் அபிவிருத்திக்கு லக்ஷணமல்ல. அவை மனுஷ்யனுக்குப் பலமல்ல, தூணையல்ல; அவை மனிதனுக்குப் பகை. மனுஷ்யனையும் அவனுடைய நாகரிகத்தையும் அழிக்கும் குணமுடையன.

கர்வத்தினாலே மரணம் உண்டாகும். அடக்கம் பொறுமை ஜீவகாருண்யம் என்ற குணங்களே உண்மையான நாகரிகத்தையும் நித்ய ஜீவனையும் விளைக்கும். இப்படி நூற்றுக் கணக்கான ஹிந்து தர்மக் கொள்கைகளை நாம் உலகத்தார் கேட்க முழங்குவதற்கு இதுவே நல்ல தருணம். இந்த ஸமயத்தில் மனுஷ்ய ஸமூகம் அழிந்து போகாமல் அதைக் காப்பாற்றி நல்ல வழியிலே சேர்க்கக் கூடிய ஜாதியார் நம்மைத் தவிர வேறு யாருமில்லை.

கண்ணைத் திறந்து பூமண்டல முழுதையும் ஒரே பார்வையாகப் பார்த்தால் நான் சொல்வதுண்மை யென்பது தானே விளங்கும். இவ்விஷயத்தை ஆழ்ந்து யோசனை பண்ணி இங்கிருந்து வெளி நாடு களுக்கு நூற்றுக் கணக்கான பிரசங்கிகளை அனுப் பும்படி ராஜாக்களையும் ஜமீந்தார்களையும் செட்டி யார்களையும் மடாதிபதிகளையும் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறேன்.

உயிரின் ஒளி

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி

26 டிசம்பர் 1917

பார்க்க :— மூன்றும் தொகுதி. பகுதி - தத்துவம்.

மிளகாய்ப் பழச் சாமியார் என்ற கதை 29—11—1917 க்கும் 29—12—1917 க்கும் இடையே வெளியாகியுள்ளது. அந்தத் தேதி எனது குறிப்பில் விழுந்து போயிருக்கிறது. இக்கதை இரண்டாம் தொகுதி கனகக் கொத்து என்னும் பகுதியில் சேர்க்கப் பட்டிருக்கிறது.

கத்திச் சண்டை

காளிதாஸன்

10 ஜனவரி 1918 சிங்கள மார்கழி 27

பார்க்க :—இரண்டாம் தொகுதி. பகுதி - கதைக் கொத்து.

தமிழ் நாட்டின் விழிப்பு

சக்திதாஸன்

25 ஜனவரி 1918 பிங்கள ஆண்டு 13

பார்க்க:— மூன்றும் தொகுதி. பகுதி - கலைகள்.

இக்கட்டுரையின் முடிவிலே 'இன்னும் வரும்' என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதே தலைப்புடன் வேறு கட்டுரை வந்ததாகத் தெரியவில்லை.

கலியுக கடோற்கசன்

26 ஜனவரி 1918 பிங்கள ஆண்டு 14

பார்க்க:— இரண்டாம் தொகுதி. பகுதி - கதைக்கொத்து.

கோபந்நா

காளிதாஸன்

20 பிப்ரவரி 1918 பிங்கள ஆசி 9

காலை ஒன்பது நாழிகை யிருக்கும். இள வெயில் காய்கிறது. வீதியில் வரிசையாக நிற்கும் தென்னை மரங்களில் கிளிகள் இணையிணையாகப் பறந்து விளையாடுகின்றன. வானெளியாகிய வெள்ளத்தில் புறாக் கூட்டங்களும், கொக்கு சபைகளும் தனி ராஜப் பருந்துகளும், நீந்திக் களிக்கின்றன சிறு குருவிகள் ஊசலாடுகின்றன. காக்கைகள் ஓடிப் பறந்து நிரந்து ஜீவன உத்யோகத்தை மிகவும் சிரத்தையுடன் நடத்தி வருகின்றன. வான முழுதிலும் பக்ஷிகளின் ஒலி நிரம்பிக் கிடந்தது.

அந்த ஸமயத்தில் தெருவிலே ஒரு தென்னை மரத்தில் ஒரு வண்ணன் இரண்டு கழுதைகளைக் கொண்டு கட்டினன். தென்னை மரத்தின் மேலிருந்து மைனா பக்ஷி ஆச்சரியமாகக் கூவிக் கொண்டிருந்தது. இதைக் கேட்ட கழுதைகள் தாமும் ஊளையிடத் தொடங்கின. இதைக் கேட்டு வீதி வழியே போய்க் கொண்டிருந்த பாலர் இருவர் மேற்படி கழுதைகளின் ஒலியை அனுசாரணம் பண்ணித் தாமும் ஊளையிடலாயினர். இதைக் கேட்ட கழுதைகளில் ஒன்றுக்கு மிகவும் ஸந்தோஷ மூண்டாய், ஸாதாரணக் கழுதைகள் போல "வாள்! வாள்!"

என்று கத்தாமல் ஹ்ரீ, ஹ்ரீ, ஹ்ரீ என்று வெற்றிச் சங்கூதுவது போல கோஷிக்கலாயிற்று.

இந்த வேடிக்கையை நான் கவனித்துக்கொண்டிருந்தேன். அப்போது அஸாதாரண அப்ராக்ருத ஒலி யொன்று காதில் வீழுந்தது.

ஒரு குருடன் பிச்சைக்கு வந்தான். அவனை ஐந்து வயதுள்ள ஆண் குழந்தை யொன்று கோலைப் பற்றி அழைத்துக் கொண்டு வந்தது. அவனுடன் ஒரு ஸ்திரீயும் வந்தாள்.

அந்தக் குருடனுக்குக் கண் தெரியுமோ, அதாவது அவன் மெய்க் குருடில்லையோ, வேஷக் குருடு தானே என்று எனக்கொரு சந்தேகம். அவனுடைய கண்ணைத் திறந்துகொண்டு தானிருந்தான். அதாவது, விழிக் கண் குருடு என்ற வகுப்பைச் சேர்ந்தவன் போலேயிருந்தான். அந்தக் கண்களை நான் பார்த்தேன். அவற்றில் புத்திக் குறிப்பு தகதகவென்று ஜ்வலித்துக் கொண்டிருந்தது. 55 வயதுள்ள கிழவன். சுக்குப் போலே, பனங் கிழங்கு போலே, ஒற்றை நாடியான, மிகவும் உறுதி கொண்ட உடம்பு. இடுப்புக்கு மேலே ஒட்டகத்தில் பாதிப் பங்கு கோணல் காணப்பட்டது. ஆனால் இயற்கையிலேயே கோணலா அல்லது அந்த மனிதன் வேண்டுமென்று தன்னுடம்பைக் கோணலாகச் செய்து கொண்டானோ, என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. செம்பட்டை மயிர். நெற்றியிலே பட்டை நாமம். ஆஹா! அவன் முகத்தின் அழகை — அதாவது குழிகள் விழுந்த, மேடு பள்ளமான, வெயிலில் மழையில் காற்றில்

அடிபட்டு முதிர்ந்து, சதைப்பற்றுக் கொஞ்சமேனு மில்லாமல், ஆனாலும் சக்திக் களஞ்சியமாக விளங் கிய அவன் முகத்தின் அழகை—நான் எப்படி வர்ணிப்பேன்? நான் சித்திரமெழுதிப் பழகாதது பற்றி மிகவும் வருத்தப்படுகிறேன். ஹரா ஹிந்துஸ் தானத்து ஏழை, பரதேசி, பண்டாரம், யோகி, பிச்சைக்கார வகுப்புக்களில் சில அற்புதமான முகங்கள், எத்தனையோ அற்புதமான முகங்கள் நாள்தோறும் என் கண்ணில் படுகின்றன. அள விறந்த துயரத்தாலோ, கஷ்டங்களாலோ, தவத் தாலோ, யோக சித்திகளாலோ இவர்களிலே பல் லோர் அழுக்குப் படிந்த தேவ விக்ரகங்களின் முகங் களை யுடையோராக விளங்குகின்றனர். அதை யெல்லாம் பார்த்தெழுதி வைக்க எனக்குச் சித்திரத் திறமையில்லை. புகைப் படம் பிடித்து வைக்க லாமா என்று யோசனை பண்ணுகிறேன். இதுநிற்க.

மேற்படி குருடன் போட்ட சத்தத்தைத்தான் மேலே அப்ராக்ருதமென்றும் அஸாதாரணமென் றும் சொன்னேன். இந்த ஸம்ஸ்கிருத பதங்களின் பொருள் என்னவென்றால் அந்த மாதிரிச் சத்தம் நான் இதற்கு முன்பு கேட்டதே கிடையாது. ஆனால் அந்தக் குரல் எந்த ஜாதியென்பதைக் கூறமுடியும். கல்லுளி மங்கான், தெருப் புழுதியிலே உருண்டு உருண்டு, ஏழுமலையானென்று கூவிக் கையில் உண்டியல் செம்பு கொண்டு பணம் சேர்க்கும் ஏழுமலையாண்டி முதலியவர்களின் குரலைப் போன் றது. ஆனால் ஒரு மூன்று மாஸத்துப் பச்சைக் குழந்தையின் சத்தத்தைக் காட்டிலும், மூப்பது

வருஷத்துத் தேர்ச்சி கொண்ட கல்லுளி மங்கா னுடைய சத்தம் எத்தனை மடங்கு கடினமாக இருக்குமோ, அத்தனை மடங்கு அந்தக் கல்லுளி மங்கானுடைய சத்தத்தைக் காட்டிலும் நமது கதா நாயகனுடைய சந்தேகக் குருடனுடைய குரல் கடின மானது. எனவே 32 மூங்கிற் கழிகளைச் சேர்ந்த படியாக அறுக்கும் சத்தத்தைப் போலே, மேற்படி குருடனுடைய சத்தம். உன்னுடைய காதைத் தொளைத்துவிட வில்லையோ என்று என்னிடம் கேட்பீர்களானால், அப்படித் தொளைக்கவில்லை. அதாவது அவனுடைய சத்தம் கர்ணகடூரமில்லை. சிங்கத்தின் ஒலி கடினமாக இருந்தாலும், பயங்கர மாக இருந்தாலும் கல்லுளி மங்கானுடைய சத்தத் தைப் போல் அருவருப்புக்கிடமாகாது. நெஞ்சிலே மூச்சுப் பலம் இருந்தால் எவ்வளவு கடினமான சத்தமும் காதுக்கு சுகமாகவே கேட்கும்.

மேற்படி குருடனுடைய — அதாவது ஸம்சயக் குருடனுடைய சத்தம் என் காதுக்கு சுகமாகத்தா னிருந்தது. காலம் சென்ற ஸ்ரீ வில்லிப்புத்தூர் முத்தையா பாகவதருடைய பாட்டைத் தமிழ் நாட் டிலே பலர் கேட்டிருக்க மாட்டார்கள். கொப்பூழி லிருந்து, ஹாகார, ஹூம்காரங்கள் கொண்டு வருவதில் அந்த பாகவதர் மஹா சமர்த்தர். ஆகாச வாணம் ஏறும்போது "ஹ்விஸ்" என்று கம்பீரமாக ஒரு சத்தம் உண்டாகிறதே, அந்தச் சத்தம் மேற்படி பாகவதர் பாட்டில் எப்போதுமே யிருக்கும். அவர் பெரிய குஸ்திக்காரரும்கூட. மூச்சையடக்கி வேலை செய்வதில் பெரிய பெரிய

ஹைதரபாத்து பஹல்வான் கூட அவருக்கு சமான மாகமாட்டார்கள். அந்த பாகவதர் செத்த பிறகு, அந்த மாதிரிக் குரலிலே ஹகாரம் பேசுவது மேற் படி குருடனிடத்திலே தான் கண்டேன். ஆனல் இந்தக் குருடன் பாடவில்லை. கூவினன். அந்தக் கூவுதலுக்கும் சந்தமிருந்தது. இவனுடைய சத்தத் தின் கனமோ என்றல் மேற்படி பாகவதர் தொண் டையைவிட 90 மடங்கு வலிமையுடையது. குழந் தைப் பிராயத்திலே இவன் சங்கீதப் பயிற்சி செய் யாமல் பிச்சைத் தொழிலைக் கைக்கொண்டானே என்றெண்ணி வருத்தப்பட்டேன்.

அந்தக் குருடன் கூவுகிறன் :— "தீராத வினை தீர்த்து வைப்பேன், கோபந்தா!" அவனுடன் பிச்சைத் தகரப் போகணி யெடுத்துக் கொண்டு வந்த ஸ்திரீ எதிர்மொழி சொல்லுகிறள்:— "கோவிந்தா!"

அந்தக் குருடன் கூவுகிறன்:— "ஆறாத புண்ணை ஆற்றி வைப்பேன், கோபந்தா!"

ஸ்திரீ:— "கோவிந்தா!"

குருடன்:— "சனிக்கிழமை, கோபந்தா!"

ஸ்திரீ:— "கோவிந்தா!"

குருடன்:— "நல்ல நாள் கோபந்தா!"

ஸ்திரீ:— "கோவிந்தா!"

குருடன்:— "திருப்பதி வேங்கடாசலத்தைப் பார்த்து வந்தேன், கோபந்தா!"

ஸ்திரீ:— "கோவிந்தா!"

குருடன்:— "ஏழுமலையான் தீர்த்து வைப்பான் கோபங்கோ!"

ஸ்திரீ:— "கோவிந்தா!"

குருடன்:— "ஹா! ஹா! மாறுத் தலைவலி மாற்றி வைப்பேன், கோபங்கோ!"

ஸ்திரீ:— "கோவிந்தா!"

குருடன்:— ஹா! ஹா! கண்ணில்லாதவருக்குக் கண் கொடுப்பேன், கோபங்கோ!"

ஸ்திரீ:— "கோவிந்தா!"

கடைசி வாக்கியத்தைக கேட்டவுடன் எனக்கு விநோதமாகத் தோன்றிற்று. கண்ணில்லாக் குருடன் பிறருக்குக் கண் கொடுப்பேன் என்று சொன்னால் யாருக்குமே வேடிக்கையாகப் புலப்படாதா?

அப்போது என்னுடன் குள்ளச்சாமி என்ற யோகீசுரர் இருந்தார். அவர் என் மன நிலையை நான் சொல்லாமலே தெரிந்து கொண்டு பின்வருமாறு சொல்லலாயினர்:—

"இதோ, போகிறானே, இவன் போன ஜன்மத்தில் திருதராஷ்ட்ர ராஜனாக இருந்தான். இவனுடன் போகிறாளே, அவள் காந்தாரியாக இருந்தவள்.

"போன ஜன்மத்தில், தம்பி மக்களுடைய சொத்தைத் தன் பிள்ளைகள் சூதினால் அபஹரிக்கையிலே தான் ஒன்றும் கடுத்துச் சொல்லாமல் பிள்ளை துரியோதனன் பக்கம் சேர்ந்து கொண்டு வேடிக்கை பார்த்த குற்றத்துக்காக விதி இவனை இந்த ஜன்மத்தில் பிச்சைக்காரனாகவும் பிறவிக்

குருடனுகவும் செய்தது. காந்தாரி பதிவிரதையாகை யாலே தானும் கூடவந்தாள். ஐந்து வயதுக் குழந்தை கோலப் பிடித்துக்கொண்டு போகிறானே அவன்தான் விகர்ணன்" என்றார்.

அப்போது நான்:— "ஐயோ, திருதராஷ்டிரன் மஹாவித்வானயிற்றே. அவனுக்கிந்த கதி வர லாமோ?" என்று சொல்லி வருத்தப்பட்டேன்.

அப்போது குள்ளச்சாமி சொல்லுகிறார் :— "போன ஜன்மத்தில் ராஜாவாகவும் பண்டிதனுகவும் இருந்தான். ஆனல் இந்த ஜன்மத்தில் ஏழையாகப் பிறந்து பலவிதக் கஷ்டப் பட்டுப் பிறகு பூர்வ புண்ணிய சேஷத்தால சதுரகிரியில் ஒரு மஹரிஷி யிடம் பகவந் நாமத்தின் மஹிமையைத் தெரிந்து கொண்டு, உண்மையான பக்தி மார்க்கத்தில் சேர்ந்த படியால் இவன் இப்போது ஜீவன் முக்தனுய் விட்டான்.

"அவனுடைய தகரப்போகணி தூக்கிக் கொண்டு போகிற காந்தாரி 'கோவிந்தா! கோவிந்தா!' என்று கத்துகிறளே அதன் பொருள் தெரியுமா? .....சொல்லுகிறேன் கேள். தன்னுடைய கணவன் பரம பதத்தைக் கண்டு கோவிந்த ஸ்தானத்தை அடைந்து விட்டானென்பதை அவள் உலகமறிய முழங்குகிறாள். அவளுடைய பாதிவ்ரத்ய மஹிமை யினல் இவன் இந்தப் பதவி யடைந்தான்" என்று சொன்னர்.

நான் அப்போது குள்ளச் சாமியிடம்:—"ஜீவன் முக்தி பெற்றும் பிச்சைத் தொழில் ஏன் செய் கிறான்?" என்று தவறுதலாகக் கேட்டேன்.

அவர் அதற்கு மேலே மறுமொழி கூறாமல் தாம் முன்பு கூறி வந்ததற்குத் தொடர்ச்சி சொல்வது போல:— "ஆகையால், இவன் போன ஜன்மத்தில் இருந்ததைக் காட்டிலும் இப்போது கோடி மடங்கு மேலான நிலைமையிலிருக்கிறான். இவனைக் குறித்து நீ கவலைப்பட வேண்டிய அவசியமில்லை" என்றார். அப்போது நான் குள்ளச் சாமியை நோக்கி:— "எனக்குப் பூர்வ ஜன்ம விஷயத்தில் இன்னும் நிச்சயமான நம்பிக்கை ஏற்படவில்லை" என்றேன். இதைக் கேட்டவுடன், அந்த யோகீசுரர் எனக்கு மறுமொழி கொடுக்காமல், "அரே! ராம், ராம்" என்று சொல்லி சகைப்புக்காட்டி ஓடிப்போய் விட்டார்.

பின்பு, குருடன் போன திசையிலே திரும்பினேன்.

மறுபடி குருடன் கத்துகிறான்:— "தென்னை மரத்திலே கிளி பறக்குது, கோபந்தோ!"

ஸ்திரீ:— "கோவிந்தா!"

குருடன்:— "சிதம்பரத்திலே கொடி பறக்குது கோபந்தோ!"

ஸ்திரீ:— "கோவிந்தா!"

குருடன்:— "தென்னை மரத்திலே கிளி பறக்குது கோபந்தோ!"

ஸ்திரீ:— "கோவிந்தா!"

இங்ஙனம் உருவங்களும் ஒலியும் எனது புலனெல்லையைக் கடந்து சென்று விட்டன.

திரு விளக்கு

காளயுக்தி சித்திரை 31-ந் தேதி அதாவது 13 மே 1918 தேதியன்று புதுச்சேரியில் பாரதியார் வீட்டில் நடக்த திருவிளக்குப் பூஜையைப் பற்றி இக்கட்டுரை கூறுகிறது. ஆகவே அந்தத் தேதிக்குச் சற்று பிந்தி இது எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இக் கட்டுரை மூன்றும் தொகுதியில் மாதர் என்னும் பகுதியில் வெளிவந்துள்ளது.

ஸ்வராஜ்யம்

சக்திதாஸன்

5 அக்டோபர் 1918 காளயுக்தி புரட்டாசி 20

சென்னை "ஹிந்து" பத்திரிகையின் லண்டன் நிருபர் எழுதிய கடிதமொன்றில் "அமெரிக்காவும், ஐர்லாந்தும், இந்தியாவும்" என்ற மகுடத்தின் கீழே ஒரு குறிப்பெழுதியிருக்கிறார். அதில் அமெரிக்கா ஸ்வாதீனமடைந்த திருநாளாகிய ஜூலை நாலாந் தேதி கொண்டாட்டங்கள் ஆங்கிலேயர்களாலேயே இங்கிலாந்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப் பட்ட செய்தியைக் குறித்துப் பேசுகிறார். [இங்கி

ஸ்வீஷ் ராஜ்யத்தை எதிர்த்துப் போர் புரிந்து வெற்றி பெற்று (யுனைடெட் ஸ்டேட்ஸ்) அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1776-ஆம் வருஷம் ஜூலை மாஸம் நாலாந் தேதியன்று விடுதலைக் கொடி நாட்டின.] மேற்படி லண்டன் நிருபர் எழுதுகிறார்.

"இன்று ஜூலை நாலாந் தேதியன்று (ஆங்கிலேயராகிய) நாமெல்லோரும் நம்முடைய அமெரிக்க ஸகோதரருடன் கலந்து ஐக்யநாடுகளின் விடுதலையை ஆவலுடன் கொண்டாடுகிறோம்."

இன்று ஆங்கிலேயர் சொல்லும் வார்த்தைகளையும், செய்யும் செய்கைகளையும் 142 வருஷங்களுக்கு முன்பு சொல்லியும், செய்துமிருப்பார்களாயின் தேசத் துரோகிகளென்றும், கலகக்காரரென்றும் சொல்லி மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும். இதனைப் பல ஆங்கிலேயர் இப்போது நினைத்திருக்கக்கூட மாட்டார்கள். அதே ஆங்கிலேயரில் சிலர் இக்காலத்தில் "விடுதலைபெற நியாயமாகப் போராடும்" வேறு சில ஜாதியார் விஷயத்தில் என்ன மாதிரியான வார்த்தை சொல்லுகிறார்கள்?

இங்கு ஒரு முக்யமான பேதத்தை மேற்படி லண்டன் நிருபர் மறந்து விட்டார். ஐக்ய நாடுகள் விடுதலைக்காகப் படை சேர்த்துப் போர் புரிந்து ப்ரான்ஸ் தேசத்தின் உதவியால் இங்கிலாந்தை வென்றன. ஐர்லாந்து கலகங்கள் செய்து விடுதலை பெற முயன்று வருகிறது.

இந்தியாவோ அப்படியில்லை. ஆங்கிலேயரிடமிருந்து ஸமாதானமாகவே ஸ்வராஜ்யம் சட்டத்துக்கிணங்கிய முறைகளால் பெற விரும்புகிறது.

"உபாயத்தால் ஸாதிக்கக் கூடிய கார்யத்தைப் பராக்கிரமத்தால் ஸாதிக்க முடியாது" என்று பஞ்சதந்திரம் கூறுகிறது. மேலும் நமக்கு ஆங்கிலேயர் ஸமாதானமாகவே ஸ்வராஜ்யம் கொடுத்து விடுவார்கள் என்று நினைப்பதற்குக் காலதேச வர்த்தமானங்கள் மிகவும் அனுகூலமாகவே யிருகின்றன.

எங்ஙனமெனில் மந்திரி மிஸ்டர் மான்டேகுவும், ராஜப்ரதிநிதி லார்டு செம்ஸ்போர்டும் சேர்ந்து தயார் செய்திருக்கும் சீர்திருத்த ஆலோசனைப் புஸ்தகத்தில் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றனர். "இந்தியாவின் எதிர்கால நிலை டில்லி நகரத்திலேனும் ஸிம்லாவிலேனும் வைட்ஹாலிலேனும் நிச்சயிக்கப் படுவதன்று. ப்ரான்ஸ் தேசத்துப் போர்க்களங்களிலே நிச்சயிக்கப்படும்" என்கிறார்கள்.

இங்ஙனம் மந்திரியும் ராஜப்பிரதிநிதியும் கூறுவதன் பொருள் நமக்குத் தெளிவாக விளங்கவில்லை. எனினும், நேசக் கக்ஷியாருக்கு வெற்றி கிடைத்தால் நமக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க முடியுமென்று அவர்கள் சொல்வதாகவே நாம் பொருள் கொள்ள நேர்கிறது.

இதனிடையே இந்தியாவில் இந்து-மஹமதிய பேதங்களிருப்பதாகக் காட்டி அதினின்றும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கத் தகாதென்று சொல்லும் ஆங்கிலோ இந்தியப் பத்திராதிபர் முதலிய வெளிநாட்டு, உள்நாட்டு துரோகிகள் எல்லார் வாயிலும் ஸ்ரீமான் ஸய்யது ஹஸன் இமாம் - நமது விசேஷ ஜனசபைக் கூட்டத்தின் அதிபதி -

மண்ணைக் கொட்டிவிட்டார். "எல்லா வகுப்புகளும் இப்போது கொண்டிருக்கும் ஐக்ய புத்தியையும், எல்லார் நலமும் ஒன்றென்ற கருத்தையும் எதிர்க்க முடியாது" என்று அவர் சொல்லுகிறார்.

மேலும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் மிகவும் அவசியமென்பதை விளக்கிக் காட்டும் பொருட்டாக நீதி நிபுண ஸய்யது ஹஸேன் இமாம் ஸாஹப் சொல்லும் பின்வரும் வாக்யங்களுக்கு ஆங்கிலோ இந்தியப் பத்திராதிபர் என்ன மறுமொழி சொல்லக் கூடும்? ஹஸேன் இமாம் கூறுகின்றார்:—

"எல்லாவிதமான அன்னியாதிபத்தியங்களைக் காட்டிலும் ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தார் மீது செலுத்தும் அன்னியாதிபத்தியம் மிகக் கொடியது என்று மக்காலே சொன்னார். இது மக்காலே காலத்தில் எத்தனை உண்மையோ அத்தனை இக் காலத்திலும் உண்மையே. அவர் வார்த்தை மற்ற தேசங்களுக்கு எவ்வளவு பொருந்துமோ அத்தனை இந்தியாவுக்கும் பொருந்தும். அன்ய நுகத்தடியின் கஷ்டத்தை இந்தியா உணர்கின்ற தென்பதை மறுத்தல் மூலஸத்யங்களைப் பார்க்க மாட்டோ மென்று கண்ணை மூடிக் கொள்வதேயாகும். இந் தியாவில் ப்ரிடிஷ் ராஜ்யத்தை ஆதரித்துப் பேசு வோர் இந்நாட்டிற்கு ப்ரிடிஷார் பரோபகார சிந்தனை கொண்டு மட்டும் வந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்நாட்டு ஜனங்கள் தமக்குத் தாமே தீங்கு செய்து கொள்ளாமல் காக்கும் பொருட்டாகவும், நம்மவரின் தர்ம ஞானத்தை உயர்த்தும் பொருட்டாகவும், நம்ம வருக்கு லௌகிகச் செல்வம் ஏற்படுத்திக் கொடுக்கும்

பொருட்டாகவும், இது போன்ற பல காரணங்களின் பொருட்டாகவும் அவர்கள் இங்கு வந்ததாகச் சொல்லப் படுகிறது ; இவையெல்லாம் பகுஷபாதிகள் வழக்கமாகச் சொல்லும் அரைமொழிச் சொற்களேயாம். உண்மை யாதெனிலோ, ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஏற்படுத்தப்பட்டது, இந்தியாவின் நன்மைக்காக அன்று. இந்தியாவினின்றும் பணத்தை ஏராளமாய்த் திரட்டிக் கொண்டு போய் ப்ரித்தானியாவுக்கு நன்மை செய்யும் பொருட்டாக ஏற்பட்டது. பொன்னுசையுடன் மண்ணுசையும் கலந்தது. பிறகு கம்பெனியாரிடமிருந்து அரசு மகுடத்தின் கீழே கொண்டுவரப்பட்ட பின் பொருளாசையும் அதிகார ஆவலும் ஆட்சி செய்வோருக்குக் குறைவுபடவில்லை. பேதம் யாதெனில், யதேச்சாதிகாரத்தை இப்போது ஒழுங்குப்படி நடத்துகிறார்கள். அந்தக கொள்ளை சாஸ்த்ர தோரணையில் நடந்து வருகிறது !" என்று நம்முடைய ஜனசபைத் தலைவர் சொல்லுகிறார். "இஃதெல்லாம் ஜனங்களுக்குத் தெரியும். இது அவர்கள் நெஞ்சை உறுத்துகிறது. எனவே பண்டைச் செயல்களுக்கெல்லாம் இப்போது (ஆங்கில அதிகாரிகள்) பரிகாரம் அல்லது ப்ராயச் சித்தம் செய்ய வேண்டுமென்று ஜனங்கள் கேட்கிறார்கள்" என்று கூறி ஸய்யது இமாம் முடிக்கிறார்.

இதுதான் விஷயம் முழுதும்.

இவ்வித அதிகாரிகளின் கையினின்று நம்மை மீட்டு நமக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்ர

வர்த்திமிடம் அழுத்தமாகப் ப்ரார்த்தனை செய்கிறோம்.

எங்களுக்கு உடனே ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று வணக்கத்துடனும் எங்களுடைய பரிபூரண ஜீவபலத்துடனும் ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறோம்.

பரலி சு. நெல்லையப்பருக்குக் கடிதம்

21 டிசம்பர் 1918

குறிப்பு :—பாரதியார் புதுச்சேரியிலிருந்து வெளி வந்த பிறகு கடையம் சேர்ந்த விஷயத்தை இக் கடிதம் குறிப்பிடுகிறது. கடையம் சேர்ந்த காலத்தையும் உத்தேசமாக இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். கடிதம் பாரதியாருடைய கையெழுத்திலேயே தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

எட்டயபுரம் அரசருக்குச் சீட்டுக் கவிகள்

2 மே 1919

குறிப்பு :—இச் சீட்டுக் கவிகள் இரண்டும் முதல் தொகுதியில் ஸ்வசரிதையும் பிற பாடல்களும் என்ற பகுதியில் சேர்க்கப் பட்டுள்ளன.

புதுச்சேரியிலிருந்து கடையம் வந்து அங்கு சில காலம் பாரதியார் வசித்தார். அந்தச் சமயத்தில் இவை எழுதப் பெற்றிருக்கின்றன.

வேப்ப மரம்

(ஒரு சிறிய கதை)

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி

21 ஜூன 1919 சித்தார்த்தி ஆனி 7

இளவேனிற்காலத்தில் ஒரு நாள். காலை வேளையில் நான் மலயகிரிச் சார்பிலே தனியாக உலாவிக் கொண்டிருந்தேன். நெடுந்தூரம் சுற்றிய பிறகு என் உடம்பில் சற்றே இளைப்புண்டாயிற்று. அந்த இளைப்புத் தீரும் பொருட்டாக அங்கொரு தோப்புக்குள்ளே போய் ஒரு வேப்பமரத்தடியில் படுத்துக் கொண்டேன். இன்பமான காற்று வீசிற்று. சிறிது நேரத்துக்குள் கண்ணயர்ந்து நித்திரையில் ஆழ்ந்து விட்டேன். அப்போது நான் கண்ட அபூர்வமான கனவை இங்கெழுதுகிறேன்.

நான் தூங்கிக்கொண்டிருக்கையில், "ஏ மனிதா, ஏ மனிதா, எழுந்திரு; எழுந்திரு" என்று அமானுஷிகமாக ஒலி யொன்று கேட்டது. இந்த ஒலியைக் கேட்டவுடன் கண்ணை விழித்தேன். உண்மையாகவே விழிக்கவில்லை. கனவில் விழித்தேன். அதாவது விழித்துக் கொண்டதாகக் கனவு கண்டேன்.

விழித்து, "யார் கூப்பிட்டது?" என்று கேட்டேன்.

"நான்தான் வேப்பமரம்; நான்தான் கூப்பிட்டேன்; எழுந்திரு" என்று மறுமொழி உண்டாயிற்று.

உடனே நான் யோசிக்கலானேன்:—

"ஓஹோ, ஓஹோ! இது பேயோ, பிசாசோ, யக்ஷர், கிந்நரர், கந்தர்வர் முதலிய தேவ ஜாதியாரோ, வன தேவதைகளோ, யாரோ தெரியவில்லை. இல்லாவிட்டால் வேப்பமரம் எங்கேனும் பேசுவதுண்டோ? அட, போடா, பேயாவது? அதெல்லாம் சுத்தக் கட்டுக்கதை யன்றோ? நாம் உண்மையாகவே கண்ணை விழித்து ஜாக்ர நிலையடையவில்லை. இன்னும் கனவு நிலையிலேதானிருக்கின்றோம். இந்த ஒலி கனவில் கேட்கும் கற்பனை யொலி"—இங்ஙனம் நான் யோசனை செய்து கொண்டிருக்கையில், "ஏ மனிதா, ஏ மனிதா, எழுந்திரு" என்று மறுபடி சத்தமுண்டாயிற்று.

"நீ யார்?" என்று பின்னும் கேட்டேன்.

"நான் வேப்பமரம். என் அடியிலேதான் நீ படுத்திருக்கிறாய். உனக்குச் சில நேர்த்தியான விஷயங்கள் கற்றுக் கொடுக்கும் பொருட்டாக எழுப்புகிறேன்" என்று மறுமொழி வந்தது.

அப்போது நான்:—"சரி, நமக்குத் தெரியாத விஷயங்கள் உலகத்தில் எத்தனையோ உண்டென்று ஷேக்ஸ்பியரே சொல்லியிருக்கிறார். அந்தப்படி மரங்களுக்குப் பேசும் சக்தி இருக்கலாம். அவ் விஷயம் நமக்கு இதுவரை தெரியாமலிருக்கலாம். ஆதலால், இந்த மரத்துடன் ஸம்பாஷணை செய்து

விஷயத்தை உணர்ந்து கொள்வோம்" என்றெண்ணிக் கண்ணைத் திறந்துகொண்டெழுந்து நின்றேன்.

(உண்மையாகவே எழுந்து நிற்கவில்லை. எழுந்து நின்றதாகக் கனவு கண்டேன்.)

எழுந்து நின்று கொண்டு :—"வேப்பமரமே. உனக்கு மனித பாஷை எப்படித் தெரிந்தது? மனிதரைப்போல் நெஞ்சு, வாய், தொண்டை, அண்ணம், நாக்கு, பல், உதடு என்ற கருவிகளில்லாதபோது மனித பாஷை பேசுவது ஸாத்யப்படாதே? எங்களிலே பல் மாத்திரம் விழுந்தவர்களுக்கும் உச்சரிப்பு நேரே வராமல் போகிறதே. அடி நாக்கில்லாதவர்கள் ஊமையாய்ப் போகிறார்களே. அப்படியிருக்க நீ மனித சரீரமேயில்லாமல் மனித பாஷை எங்ஙனம் பேசுகிறாய்?" என்று கேட்டேன்.

அப்போது வேப்பமரம் சொல்லுகிறது:—

"கேளாய், மானுடா, மனிதனுக்கு ஒரே வாய்தானுண்டு. எனக்கு உடம்பெல்லாம் வாய். மனித பாஷை பேசுவதற்கு வாய் முதலிய புறக் கருவிகள் மனிதரைப் போலவே யிருத்தல் அவசியமென்று நீ நினைக்கிறாய். ஸாதாரண ஸ்திதியில் அவை அவசியந்தான். ஆனால், நான் ஸாதாரண மரமில்லை. நான் அகஸ்த்ய முனிவரின் சிஷ்யன். தமிழ் பாஷையில் எனக்குள்ள ஞானம் இக்காலத்தில் அகஸ்த்யரைத் தவிர வேறு யாருக்குமே கிடையாது....."

வேப்பமரம் பின்னுஞ் சொல்லுகிறது :—

"நடந்த கதையை அடியிலிருந்து சொல்லுகிறேன். மானுடா, கவனத்துடன் கேள். எனக்கு

இப்போது மூப்பது வயதுதானகிறது. நான் இள மரம். பதினைந்து வருஷங்களின் முன்பு ஒரு நாள் வஸந்த காலத்தின்போது இராவேளையில் ஆச்சர்ய மான நிலா வீசிக் கொண்டிருந்தது. நான் விழித் துக் கொண்டிருந்தேன். ஸாதாரணமாக மரங்கள் மனிதரைப் போலவே பகல் முழுவதும் விழித்துக் கொண்டிருக்கும். இரவானவுடனே தூங்கும். அன் றிரவு எனக்கு எந்தக் காரணத்தாலோ தூக்கமே வரவில்லை. நிலாவையும், வானத்தையும், சூழ்ந்திருக் கும் மரங்களையும் பார்த்துக் கொண்டு பிரமானந்தத் தில் முழுகியிருந்தேன். அப்போது பதினறு வய துடைய, மிகவும் அழகான மனித ஆண் பிள்ளை யொருவனும், அவனைக் காட்டிலும் அழகான பன்னிரண்டு வயதுடைய மனிதப் பெண் ஒருத்தியும் அதோ தெரிகிற நதியில் விளையாடிக் கொண்டிருப் பதைக் கண்டேன். சிறிது நேரத்துக்குள்ளே அவ் விருவரும் ஸாமான்ய மனிதரில்லை யென்பது எனக் குத் தெளிவாய் விட்டது. சிறகுகளில்லாமல் அவர் கள் வானத்தில் பறந்து விளையாடுவது கண்டேன். பிறகு ஒருவருக்கொருவர் பேசிய வார்த்தைகளி லிருந்து அவர்கள் இன்னரென்று தெரிந்து கொண் டேன். அவ்விருவரும் யாரெனில் அகஸ்த்ய மஹரிஷியும் தாம்ரபர்ணியம்மனும். அகஸ்த்யர் ஸாதாரண காலத்தில் கட்டை விரலளவுடைய வடி வந் தரித்திருப்பது வழக்கம். ஆனல் அவர் காமரூபி. அதாவது, நினைத்தபோது நினைத்த வடிவந் தரிக் கும் திறமை படைத்தவர். தாம்ரபர்ணி யம்மனும் அப்படியே. ஆதலால் அவ்விருவரும் அப்போது

அதி சுந்தரமான மனுஷ்ய ரூபந்தரித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கிரீடை பொழுது விடியும் வரை நடந்தது. அப்பால் தாம்ர பர்ணி மறைந்து விட்டாள்.....''

வேப்பமரம் சொல்லுகிறது :—''கேளாய், மானுடா, கவனத்துடன் கேள். தாம்ரபர்ணியம்மன் பகலைக் கண்டவுடன் மறைந்து சென்று விட்டாள். அகஸ்த்யர் மாத்திரம் தனியாக வந்து எனதடியில்- இப்போது நீ நிற்குமிடத்திலே - படுத்துக் கொண்டு யோக நித்திரையில் ஆழ்ந்தனர். எனக்கு அந்த ஸமயத்தில் அகஸ்த்யருடைய சக்திகளெல்லாம் நன்றாகத் தெரியாது. ஆதலால், அவர் யோகத்திலிருக்கிறாரென்பதை அறியாமல் ஜலக்கிரீடையின் சிரமத்தால் ஸாதாரண நித்திரையிலிருக்கிறாரென்று நினைத்தேன். பொழுது விடிந்து ஏறக்குறைய ஒரு ஜாமமாயிற்று. அப்போது அதோ, உனக்கெதிரே ஒரு புளியமரம் நிற்கிறது பார்—அந்த மரத்தின் கீழேயுள்ள புற்றிலிருந்து ஒருபெரிய நல்ல பாம்பு 'ஹா—ஸ்' என்று சீத்காரம்செய்து கொண்டு அகஸ்தியர் படுத்திருந்த இடத்தை நோக்கிப் பாய்ந்து பாய்ந்து வரலாயிற்று. அதைக் கண்ட மாத்திரத்தில் நான் திடுக்கிட்டுப் போனேன். ஐயோ! இந்தக் கொடிய பாம்பு இந்த மஹா புருஷனைக் கொன்றுவிடப் போகிறதே! இவரை எப்படியேனும் கண் விழிக்கும்படி செய்வோமானால் தம்முடைய தவ வலிமையினால் பாம்பை அடக்கி விடுவார்' என்றெண்ணி அவரை விழிக்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் என் இலைகளை

அவர் மீது சொரிந்தேன். அவர் விழிக்கவில்லை. இதற்குள் பாம்பும் அவரை நெருங்கி வந்து அவருடைய பாதத்தில் இரண்டு முறை கடித்தது. மூன்றும் முறை கடிக்கும் பொருட்டும் படத்தைத் தூக்கிற்று. அத்தருணத்தில் அவர் கண்ணைத் திறந்து பார்த்துக் கயிற்றைத் தூக்குவதுபோல் எளிதாக அந்தப் பாம்பைக் கையால் எடுத்துக் கழுத்தில் வளைய வளையச் சுற்றிக் கொண்டார். அந்தப் பாம்பும் கயிற்றைப் போலவே ஒன்றும் செய்யாமல் பரம ஸாதுவாக அவர் கழுத்தில் கிடந்தது. கடியுண்ட இடத்தில் இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. அதில் அவர் கொஞ்சம் மண்ணை யெடுத்துப் பூசினர். புண் உடனே ஆறிப்போய் சாதாரணத் தோலாய் விட்டது. இதைக் கண்டு நான் மிகவும் ஆச்சர்யமடைந்தேன். இப்படிப்பட்ட மஹானிடம் ஒரு வார்த்தை பேசக்கூட யோக்கியதை யில்லாமல், ஊமை மரமாய்ப் பிறந்து விட்டோமே என் றெண்ணித் துயரப்பட்டேன். எப்படியேனும் எனது கருத்தை அவருக்குத் தெரிவிக்க விரும்பி அவர் காலின் மீது சில மலர்களையும் இலைகளையும் சொரிந்தேன். அவர் தலையை நிமிர்த்து என்னை நோக்கி :—

'வேப்பமரமே' என்று கூப்பிட்டார்.

வேப்பமரம் பின்னும் கதை சொல்லுகிறது :— "கேளாய், மானுடா, கவனத்துடன் கேள். இங்ஙனம் என்னை அகஸ்த்யர் கூப்பிட்டவுடனே என்னை யறியாமலே என் கிளைகளிலுள்ள வாய்களினின்றும், 'என் முனிவரே?' என்ற தமிழ்ச் சொற்

கள் உதித்தன. என் உடம்பு முழுவதும் புளகித மாய் விட்டது. மாற்றிப் பிறக்க வகையறிந்து கொண்டேன். வேப்பமரப் பிறவி போய் எனக்கு மனிதப் பிறவி யுண்டாயிற்றென்று தெரிந்து கொண்டேன். உடம்பு மாறவில்லை. உடம்பு மாறினலென்ன, மாறுவிட்டாலென்ன? நான் உடம் பில்லை. நான் ஆத்மா. நான் போதம். நான் அறிவு. திடீரென்று வேப்பமரச் சித்தம் மாறிப் போய் எனக்குள் மனுஷ்ய சித்தம் சமைந்து விட்டது. மனுஷ்ய சித்தம் ஏற்பட்டாலன்றி மனித பாஷை பேச வருமா? கோடி ஜன்மங்களில் நான் பெற்றி ருக்க வேண்டிய பயனை அந்த முனிவர் எனக்கு ஒரே கணத்தில் அருள் செய்தார். எனக்கேற்பட்ட ஆனந்த மிகுதியால் என் பூக்களையும் இலைகளையும் கணக்கில்லாமல் அவருடைய பாதத்தின் மீது வர்ஷித்தேன். அவர் மிகவும் மகிழ்ச்சி பூத்தவராய், 'ஏ, வேப்ப மரமே, நேற்றிரவு நானும் தாம்ரபர்ணி யும் இங்கு ராம நதியில் ஜலக்ரீடை செய்து கொண் டிருந்த காலத்தில் நீ பார்த்துப் பெரு மகிழ் வெய்திப் பல ஆசீர்வாதங்கள் கூறினாய். அதை நான் ஞான திருஷ்டியால் உணர்ந்தேன். அப்பால், சிறிது நேரத்துக்கு முன்பு நான் யோக ஸமாதியிலிருந்த போது இந்தப் பாம்பு வருவதைக் கண்டு நீ என்னைக் காக்க விரும்பி என்னை எழுப்பும் பொருட்டாக என் மீது நின் இலைகளையும் பூக்களையும் சொரிந்தாய். இங்ஙனம் நீ என்னிடம் காட்டிய அன்பிற்குக் கைம் மாறாக உனக்கு நான் நிவிபோதம் கொடுக்கிறேன். இதனால் உனக்கு ஸகல ஜந்துக்களின் பாஷைகளி

லும் சிறந்த ஞானம் இயல்பாகவே உண்டாய்விடும். எல்லா ஜந்துக்களினிடத்திலும் ஸமமான பார்வையும் ஸமமான அன்பும் உண்டாகும். எல்லா உயிர்களிடத்திலும் தன்னையே காண்பதாகிய தேவ திருஷ்டி ஏற்படும். இவற்றால் நீ ஜீவன் முக்தி பெறுவாய்' என்றார். அது முதல் நான் அவர் கூறிய சக்திகளெல்லாம் பெற்று, யாதொரு கவலையுமில்லாமல் யாதொரு பயமுமில்லாமல் ஜீவன் முக்தி பதமடைந்து வாழ்ந்து வருகிறேன்" என்று வேப்ப மரம் சொல்லிற்று. உடனே நான் அந்த வேப்ப மரத்தடியில் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணினேன். "உனக்கென்ன வேண்டும்?" என்று கேட்டது. அப்போது நான் அந்த வேப்ப மரத்தை நோக்கி:— "உனக்கெப்படி அகஸ்த்யர் குருவோ அப்படியே நீ எனக்கு குரு. அந்த முனிவர் உனக்கருள் புரிந்த ஜீவன் முக்தி பதத்தை நீ எனக்கருள் புரிய வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தேன்.

"கொடுத்தேன்" என்றது வேப்ப மரம்.....

இந்த ஸமயத்தில் நான் உண்மையாகவே தூக்கம் தெளிந்து கண்ணை விழித்தெழுந்து நின்றேன்; எழுத்தாணிக் குருவிகளும், சிட்டுக் குருவிகளும் வேறு பலவிதமான குருவிகளும் பறந்து கூவி விளையாடிக் கொண்டிருந்தன. அணில்களும் ஓந்திகளும் ஆடியோடிக்கொண்டிருந்தன. காக்கைகளும், கிளிகளும், பருந்துகளும், தட்டான் பூச்சிகளும், வேறு பலவகை வண்டுகளும் ஒளிக்கடலிலே களித்தோணி கொண்டு நீந்துவது போல் உலாவி வந்தன. கண்ணுக்குப் புலப்படாத மறைவிலிருந்து ஓராண்

குயிலும் ஒரு பெண் குயிலும் ஒன்றுக் கொன்று காதற் பாட்டுக்கள் பாடிக் கொண்டிருந்தன.

ஆண்குயில் பாடுகிறது :—

"குஹூ, குஹூ, குஹூ
குஹூ, குஹூ, குஹூ
ராதா ரே."

[இதன் பொருள் :—

கீ, கீ, கீ.
கீ, கீ, கீ.
ராதை யடீ.]

பெண் குயில் பாடுகிறது :—

"குஹூ, குஹூ, குஹூ
ராதா க்ருஷ்ண, க்ருஷ்ண, க்ருஷ்ண".

வேப்பமரம் தனது பசிய இலைகளை வெயிலில் மெல்ல மெல்ல அசைத்துக் கொண்டிருந்தது. "என்ன ஆச்சர்யமான கனவு கண்டோம்!" என்றெண்ணி யெண்ணி வியப்புற்றேன். இதற்குள் வெயிலேறலாயிற்று. எனக்கும் பசியேறத் தொடங்கிற்று. வேப்ப மரத்துக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டுத் தோப்பினின்று புறப்பட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

காந்தாமணி

(ஒரு சிறு கதை)

ஸ்ரீமான் எஸ். சுப்பிரமணிய பாரதி எழுதியது.

14 செப்டம்பர் 1919

"காந்தாமணி, உங்கப்பா பெயரென்ன?" என்று பாட்டி கேட்டாள். ஒரு இணற்றங்கரையில் நடந்த ஸங்கதி. கோடைக் காலம். மாலை வேளை. வானத்திலே பால ஸூர்யன் கிரணங்களை ஒழிவில்லாமல் பொழிந்து விளையாடுகிறான். எதிரே நீலமலை; பச்சை மரங்கள்; பசுக்கள்; பல மனிதர்; சில கழுதைகள்; இவற்றின் தொகுதி நின்றது. வெயிலொளி எந்தப் பொருள் மீது பட்டாலும் அந்தப் பொருள் அழகுடையதாகத் தோன்றுமென்று ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிராயன் சொல்லுகிறான். எனக்கு எந்த நேரத்திலும் எந்தப் பொருள்களும் பார்க்க அழகுடையனவாகத் தோன்றுகின்றன.

ஆனால் காலை வேளையில் மனிதக் கூட்டத்தில் கொஞ்சம் உற்சாகமும் சுறுசுறுப்பும் அதிகமாகக் காணப்படுவதால் அப்போது உலகம் மிகவும் சந்தோஷகரமான காட்சியுடையதாகிறது.

தோட்டத்துக்கு நடுவே ஒரு இணறு. அத் தோட்டத்தில் சில அரளிப்பூச் செடிகள்; சில மல்லிகைப்பூச் செடிகள்; சில ரோஜாப்பூச்

செடிகள். அக் கிணற்றிலிருந்து அதற்கடுத்த வீதியி லுள்ள பெண்களெல்லாரும் ஜலம் எடுத்துக் கொண்டு போவார்கள்.

இந்தக் கதை தொடங்குகிற அன்று காலையில் அங்கு காந்தாமணியையும் பாட்டியையும் தவிர ஒரு குருட்டுக் கிழவர் தாமே ஜலமிறைத்து ஸ்நானத் தைப் பண்ணிக் கொண்டிருந்தார். போலீஸ் உத்தியோகத்திலிருந்து தள்ளுபடியாகி அதிலிருந்து அந்தக் கிராமத்துக்கு வந்து தமது வாழ்நாளின் மாலைப் பொழுதை ராமநாமத்தில் செலவிடும் பார்த்தசாரதி அய்யங்கார் அங்கு பக்கத்திலே நின்று கிழவியைப் குறிப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மேற்படி கிணற்றுக்கருகே ஒரு குட்டிச்சுவர். அதற்குப் பின்னே ஒரு வேப்பஞ் சோலை. அங்கு பல மூலிகைகளிருக்கின்றன. அவற்றுள் ஒன்று மிகுந்த பசி உண்டாக்கு மென்று என்னிடம் ஒரு சாமியார் சொன்னார். அது கொண்டு நான் மேற்படி மூலிகையைப் பறித்து வரும் பொருட்டாக அந்தச் சோலைக்குப் போயிருந்தேன். வானத்தில் குருவி கள் பாடுகின்றன. காக்கைகள் 'கா, கா' என்று உபதேசம் புரிகின்றன. வானவெளியிலே ஒளி கர்த்தனம் பண்ணுகிறது. எதிரே காந்தாமணியின் திவ்ய விக்ரஹம் தோன்றிற்று.

"உங்கப்பா பெயரென்ன?" என்று பாட்டி காந்தாமணியிடம் கேட்டாள்.

"எங்கப்பா பெயர் பார்த்தஸாரதி அய்யங்கார்" என்று காந்தாமணி புல்லாங்குழலைப் போல் ஊதிச்

சொன்னாள். கிழவி, போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்காரை நோக்கி, ஒரு முறை உருட்டி விழித்தாள். போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்கார் கையுங் காலும் வெலவெலத்துப் போனார். அவருக்கு முகமும் தலையும் வெள்ளை வெளேரென்று நரைத்துப் போய்த் தொண்ணூறு வயதுக் கிழவனைப் போலே தோன்றினாலும் உடம்பு நல்ல கட்டு மஸ்துடையதாகப் பதினெட்டு வயதுப் போர்ச் சேவகனுடைய உடம்பைப் போலிருக்கும். அவர் ஆண் புலி வேட்டைகளாடுவதில் தேர்ச்சி யுடையவ ரென்று கேள்வி. பாம்பு நேரே பாய்ந்து வந்தால் பயப்பட மாட்டேனென்று அவரே என்னிடம் பத்துப் பதினைந்து தரம் சொல்லியிருக்கிறார்.

அப்படிப் பட்ட சூராதி சூரனாகிய பார்த்த ஸாரதி அய்யங்கார் கேவலம் ஒரு பாட்டியின் விழிப்புக்கு முன்னே இங்ஙனம் கைகால் வெலவெலத்து மெய் வெயர்த்து முகம் பதறி நின்றதைக் கண்டு வியப்புற்றேன்.

அப்பால் அந்தப் பாட்டி காந்தாமணியிடம் மேற்படி போலீஸ் அய்யங்காரைச் சுட்டிக்காட்டி:— "இதோ நிற்கிறாரே, இந்தப் பிராமணன், இவரா உங்கப்பா?" என்று கேட்டாள்.

அதற்குக் காந்தாமணி தன் இரண்டு கைகளையும் வானத்திலே போட்டு, முகத்திலே வாளெளியை நகைக்கத் தக்க ஒளியுடைய நகை வீச:— "ஏ, ஏ, இவரல்லர்; இவர் கண்ணங்கரேலென்று ஆசாரியைப் போலிருக்கிறாரே! எங்கப்பா செக்கச் செவேலென்று எலுமிச்சம் பழத்தைப் போலிருப்பார்.

இவர் நரைத்த கிழவரன்றோ? எங்கப்பா சின்னப் பிள்ளை" என்று காந்தாமணி உரைத்தாள்.

அப்போது போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்கார் காந்தாமணியை நோக்கி:— "உங்கப்பாவுக்கு எந்த ஊரிலே வேலை?" என்று கேட்டார்.

"எங்கப்பா சங்கர நாதன் கோயில் ஸப்-இன்ஸ்பெக்டர்" என்று காந்தாமணி சொன்னாள். பார்த்தஸாரதி அய்யங்கார் தலையைக் கவிழ்த்துக் கொண்டார். அவருக்கு "ஸப்—இன்ஸ்பெக்டர்" என்ற பெயர் பாம்புக்கு இடி போல். அப்போது காந்தாமணிக்கும் பாட்டிக்கு மிடையே பின்வரும் ஸம்பாஷணை நிகழலாயிற்று.

"நீங்கள் அக்கா, தங்கை எத்தனை பேர்?" என்று பாட்டி கேட்டாள். அப்போது காந்தாமணி சொல்கிறாள்:—"எங்கக்காவுக்குப் பதினெட்டு வயது. போன மாஸந்தான் நிரட்சி நடந்தது; ஸ்ரீவைகுண்டத்திலே. எனக்கு அடுத்த மாஸம் நிரட்சி. என் தங்கை ஒரு பெண் நிரள நிற்கிறது. நாங்கள் மூன்று பேரும் பெண்கள். எங்கப்பாவுக்குப் பிள்ளைக் குழந்தை இல்லையென்று நீராத மனக் கவலை. என்ன செய்யலாம்? பெருமாள் அநுக்ரஹம் பண்ணினால் என்றோ தாழ்வில்லை? அதற்காக அவர் சோதிடம் பார்த்தார். எங்கம்மாவுக்கு இனி மேல் ஆண் குழந்தை பிறக்காதென்று பாழாகப் போவான் ஒரு ஜோதிடன் சொல்லி விட்டான். அதை முத்திரையாக முடித்துக் கொண்டு இந்த அநுதவிப் பிராமணன், எங்கப்பா அடுத்த மாஸம் மன்னர் கோவிலில் ஒரு பெண்ணை இளையாளாகக்

கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறார். முகூர்த்த மெல்லாம் வைத்தாய்விட்டது" என்றாள்.

"மன்னர் கோவிலில் உங்கப்பாவுக்குப் பெண் கொடுக்கப் போகிற மாமனுடைய பெயரென்ன?" என்று அந்தப் பாட்டி கேட்டாள். அதற்குக் காந்தாமணி:— "அவர் பெயர் கோவிந்தராஜய்யங் காராம். அந்த ஊரிலே அவர் பெரிய மிராசாம். அவருக்கு ஒரே பெண் தானும். கால் முதல் தலை வரை அந்தப் பெண்ணுக்கு வயிர நகை சொரிந்து கிடக்கிறதாம். தேவரம்பையைப் போல் அழகாம் அந்தப் பெண்" என்றாள்.

"அப்படிப்பட்ட அழகான பணக்கார இடத்துப் பெண்ணை இளையாளாகக் கொடுக்கக் காரண மென்ன?" என்று பாட்டி கேட்டாள். "அந்தப் பெண் திரண்டு மூன்று வருஷங்களாய் விட்டன. அதன் தாயும் இறந்துபோய் விட்டாள். அதன் நடையுடை பாவனைகளெல்லாம் ஐரோப்பிய மாதிரி. ஆதலால் இதுவரை அதற்குக் கலியாணத்துக்கு யாரும் வரவில்லை. எங்கப்பா அந்த ருதுவான வார்த்தை யெல்லாம் வீண் பொய் யென்று சொல்லித் தாம் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஸம்மதப் பட்டுவிட்டார். மேலும் இவருக்கு மனதுக்குள்ளே ஸந்தோஷந்தான், தமக்கு ருதுவான பெண் கிடைப் பதுபற்றி. இன்றைக்குக் காலையிலேகூட அவரும் எங்கம்மாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் இந்த ஊர்ச் சத்திரத்திலே தான் ஒரு வாரமாக இறங்கி யிருக்கிறோம். எங்கப்பாவும் அம்மாவும் பேசிக் கொண்டிருந்தபோது அம்மா சொன்னாள்:—

'மன்னர்குடிப் பெண் திரண்டு மூன்று வருஷமாய் விட்டதாக இந்த ஊரிலே கூடப் பலமான ப்ரஸ்தாபம். ஆண், பெண் எல்லோரும் ஒரே வாக்காகச் சொல்லுகிறார்கள்' என்றாள். அப்பா அதற்கு:— 'நெவர் மைண்ட். அந்தக் குட்டி திரண்டிருப்பதைப் பற்றி நமக்கு இரட்டை ஸந்தோஷம். நமக்குப் பணம் கிடைக்கும். ஆண் பிள்ளை பிறக்கும். குட்டி ஏராளமான அழகு. இந்த மாதிரி இடத்திலே ஐ டோன் கோ எடேம் எபௌட் சாஸ்த்ரங்கள். நாம் சாஸ்திரங்களைப் புல்லாக மதிக்கிறோம்' என்றார்....." என்று காந்தாமணி சொன்னாள்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிற சத்தம் என் காதில் விழுந்தது. என்னுடைய பார்வை முழுவதும் போலீஸ் பார்த்தஸாரதி ஐயங்கார்மேல் நின்றது. அவரைப் பார்த்துக் கொண்டேயிருக்கையிலே என் மனதில் திடீரென்று ஒரு யோசனை பிறந்தது. அங்கிருந்தவர்களில் எனக்குக் காந்தாமணியின் முகந்தான் புதிது. பார்த்தஸாரதி ஐயங்காரையும் தெரியும்; அந்தக் கிழவியையும் தெரியும். அந்தக் கிழவி அய்யங்காரிச்சியில்லை; ஸ்மார்த்தச்சி. அந்த கிராம முன்சீபின் தங்கை. அவளுக்கும் போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்காருக்கும் பால்யத்தில் பலமான காதல் ஏற்பட்டு வந்ததென்றும், அதனால் போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்காருக்கும் மேற்படி கிராம முன்சீபுக்கும் பல முறை யுத்தங்கள் நடந்தன வென்றும், அந்த யுத்தங்களிலே ஒன்றின் போதுதான் பார்த்தஸாரதி அய்யங்காருக்கு ஒரு கண்ணில் பலமான

காயம் பட்டு அது பொட்டையாய் விட்டதென்றும் நான் கேள்விப்பட்டதுண்டு. அந்தக் கேள்வியையும் மனதில் வைத்துக் கொண்டு இப்போது மேற்படி ஸ்திரீகளின் ஸம்பாஷணையின் போது மேற்படி ஐயங்காரின் முகத்தில் தோன்றிய குறிப்புகளையும் கவனித்தவிடத்தே என் மனதில் பின் வரும் விஷயம் ஸ்பஷ்டமாயிற்று.

கிழவியினிடத்தில் பழைய காதல் தனக்கு மாறுமல் இன்னும் தழல் வீசிக் கொண்டிருக்கிற தென்ற செய்தியை ஐயங்கார் கிழவியினிடம் ஸ்திரப்படுத்திக் காட்ட விரும்புகிறா ரென்றும், காந்தாமணி முதலிய யுவதிகளின் அருகேகூடத் தனக்கு அக்கிழவியின் வடிவே அதிக ரம்யமாகத் தோன்றுகிற தென்றும் உணர்த்த விரும்புகிறா ரென்றும் தெரியலாயிற்று. ஆனால் அவருடைய முகக் குறிப்புகளிலே பாதி பொய் நடிப்பென்பதும் தெளிவாகப் புலப்பட்டது.

ஏனென்றால், காந்தாமணியையும் அக்கிழவியையும் ஒருங்கே தன் கையால் படைத்து, இருவருக்கும் பிதாவாகிய பிரமதேவன் கூடக் காந்தாமணியின் ஸந்நிதியில் அந்தக் கிழவியைப் பார்க்கக் கண் கூசுவான். அப்படியிருக்கக் கிழவியின்மீது அங்ஙன காதற் பார்வையை அசைவின்றி நிறுத்த முயன்ற போலீஸ் பார்த்தஸாரதி ஐயங்காரின் முயற்சி மிகவும் நம்பக்கூடாத மாதிரியில் நடைபெற்று வந்தது.

இந்த ஸங்கதியில் மற்றொரு விசேஷமென்ன வென்றால் மேற்படி அய்யங்காரை நான் விருக்ஷ

மறைவிலிருந்து கவனித்துக் கொண்டு வந்தது போலவே காந்தாமணியும் கிழவியும் அவரை அடிக்கடி கடைக் கண்ணால் கவனித்துக் கொண்டு வந்தார்கள். பெண்களுக்குப் பாம்பைக் காட்டிலும் கூர்மையான காது; பருந்தைக் காட்டிலும் கூர்மையான கண். எனவே பார்த்தஸாரதி அய்யங்காருடைய அகத்தின் நிலைமையை நான் கண்டதுபோலவே அந்த ஸ்திரீகளும் கண்டு கொண்டனரென்பதை அவர்களுடைய முகக் குறிகளிலிருந்து தெரிந்து கொண்டேன்.

என்னை மாத்திரம் அம்மூவரில் யாரும் கவனிக்கவில்லை. நான் செடி கொடிகளின் மறைவில் நின்று பார்த்தபடியால் என்னை அவர்களால் கவனிக்க முடியவில்லை.

இப்படி யிருக்கையிலே அங்கு இருபது வயதுள்ள ஒரு மலையாளிப் பையன் பெருங்காயம் கொண்டு வந்தான். சில்லறையில் பெருங்காயம் விற்பது இவனுடைய தொழில். இவன் பலமுறை அந்தக் கிராமத்துக்குப் பெருங்காயம் கொண்டு வந்து விற்பதை நான் பார்த்திருக்கிறேன். இவனைப் பற்றி வேறொன்றும் நான் விசாரித்தது கிடையாது. இவன் பார்வைக்கு மன்மதன் போலிருந்தான். கரிய விழிகளும், நீண்ட மூக்கும், சுருள் சுருளான, படர்ந்த உச்சிக் குடுமியும் அவனைக் கண்டபோது எனக்கே மோஹமுண்டாயிற்று.

அந்த மலையாளி இரண்டாந்தரம் வந்துட்காரந்து கொண்டு கிழவியிடம் தாஹத்துக்கு ஜலம் கேட்

டான். அவனைப் பார்த்த மாத்திரத்தில் காந்தாமணி நடுங்கிப் போனதைக் கவனித்தேன். அப்பால் அந்த மலையாளி காந்தாமணியை ஒருமுறை உற்றுப் பார்த்தான். அவள் தன் இடுப்பிலிருந்த குடத்தை நீரோடு நழுவ விட்டுவிட்டாள். அது தொப்பென்று விழுந்தது. காந்தாமணி அதைக் குனிந்தெடுத்து :—"ஐயோ, நான் என்ன செய்வேனம்மா? குடம் ஆறங்குல ஆழம் அமுங்கிப் போய் விட்டதே? எங்கம்மா எனக்குத் தூக்குத் தண்டனை விதிப்பாளே?" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள்.

மார்புத் துணியை நெகிழ விட்டாள். பொதியை மலைத் தொடரை நோக்கினாள்.

இந்தக் காந்தாமணி மேற்படி மலையாளிப் பையனிடம் காதல் வரம்பு மிஞ்சிக் கொண்டவ ளென்பதை நான் தொலைவிலிருந்தே தெரிந்து கொண்டேன். பின்னிட்டு விசாரணை பண்ணியதில் காந்தாமணியின் பிதாவாகிய பார்த்தசாரதி ஐயங்கார் பூர்வம் நெடுநாள் மலையாளத்தில் உத்தியோகம் பண்ணிக் கொண்டிருந்தாரென்றும் அங்கு மிகச் சிறிய குழந்தைப் பிராய முதலாகவே காந்தாமணிக்கும் அந்த மலையாளிக்கும் காதல் தோன்றி அது நாளுக்குநாள் வளர்ந்து வருகிறதென்றும் வெளிப்பட்டது. ஸப்-இன்ஸ்பெக்டர் அய்யங்கார் திரவிய லாபத்தை உத்தேசித்துக் காந்தாமணியைப் பென்ஷன் டிப்டி கலெக்டரும் கூந்தலாபுரம் ஜில்லா நிவாணுமாகிய ஐம்பத்தைந்து வயதுள்ள கோழம்பாடு ஸ்ரீநிவாஸாசார்யர் என்பவருக்கு விவாகம்

செய்து கொடுத்து விட்டார். அந்த ஸ்ரீநிவாஸாசார் யருடன் வாழக் காந்தாமணிக்கு சம்மதமில்லை. இந்தச் செய்தி யெல்லாம் எனக்குப் பின்னிட்டுத் தெரிய வந்தது.

அன்று கிணற்றங் கரையில் என் கண் முன்னே நடந்த விஷயத்தை மேலே சொல்லு கிறேன். காந்தாமணி குடத்தை இடுப்பில் வைத் துக் கொண்டு, "எங்கம்மா வைவாளே, நான் என்ன செய்வேனம்மா?" என்று அழுது கொண்டே போனாள். ஆனால் அவள் தன்னுடைய தாய் தந்தையர் இருந்த சத்திரத்திற்குப் போகவில்லை. நேரே, அந்த ஊருக்கு மேற்கேயுள்ள நதிக்குப் போனாள். தாகத்துக்கு நீர் குடித்த பின்பு மலை யாளியும் அந்த ஆற்றங்கரையை நோக்கிச் சென் றேன். இதற்குள்ளே எனக்கு ஸந்தியாவந்தன காலம் நெடுந்தூரம் தவறி விட்டபடியால் நான் அந்தக் கிணற்றடியை விட்டு வீட்டுக்கு வந்து சேர்ந் தேன். அன்று மாலை என் வீட்டுக்கு மேற்படி கிராமத்து வாத்தியார் சுந்தர சாஸ்திரி வந்தார். வந்தவர் திடீரென்று :—"கேட்டீர்களோ, விஷ யத்தை; வெகு ஆச்சர்யம்! வெகு ஆச்சர்யம்!" என்று கூக்குரலிட்டார்.

"என்ன ஓய் ஆச்சர்யம்? நடந்ததைச் சொல்லி விட்டுப் பிறகு கூக்குரல் போட்டால் எனக்குக் கொஞ் சம் ஸௌகர்யமாக இருக்கும்" என்றேன். "சத்திரத் திலே ஸப்-இன்ஸ்பெக்டர் பார்த்தஸாரதி அய்யங் கார் சங்கரநாதன் கோவிலிலிருந்து வந்து இறங்கி யிருக்கிறாரோ, இல்லையோ? அவர் ஒரு பெண்ணை

யுங் கூட்டிக் கொண்டு வந்தார். அவருடைய மகள். அந்தக் குட்டி வெகு அழகாம். திலோர்த்தமை, ரம்பை யெல்லாம் இவளுடைய காலிலே கட்டி அடிக்க வேண்டுமாம். அதற்குப் பெயர் காந்தாமணி யாம். சொல்லுகிறபோதே நாக்கில் ஜலம் சொட்டு கிறது. காந்தாமணி, காந்தாமணி, என்ன நேர்த்தி யான நாமம். ரஸம் ஒழுகுகிறது....."

இங்ஙனம் ஸுந்தர சாஸ்திரி காந்தாமணியை வர்ணித்துக் கொண்டு போவதை நான் இடையே மறித்து:—"மேலே நடந்த சரித்திரத்தைச் சொல் லும்" என்றேன்.

"அந்தக் காந்தாமணியைக் காணவில்லை யென்று விடியற்கால மெல்லாம் தேடிக் கொண்டி ருந்தார்கள். இப்போதுதான் அம்பாசமுத்திரத்தி லிருந்து ஒரு தந்தி கிடைத்ததாம். இன்று பகல் 3 மணிக்கு மேற்படி காந்தாமணியும், ஒரு மலையா ளிப் பையனும் நிறிஸ்துவக் கோவிலில் விவாகம் செய்து கொண்டார்களென்று அந்தத் தந்தி சொல்லுகிறதாம்" என்றார்.

சில தினங்களுக்கப்பால் மற்றொரு ஆச்சர்யம் நடந்தது. கிராமத்து மாஜி போலீஸ் சேவகர் நரைத்த தலைப் பார்த்தஸாரதி அய்யங்காரும், அன்று நிணற்றங் கரையில் அவருடைய காதற் பார்வைக்கிலக்காயிருந்த கிழவியும் ரங்கூனுக்கு ஓடிப் போய் விட்டார்கள். பின்னிட்டு அந்தக் கிழவி தலை வளர்த்துக் கொண்டு விட்டாளென்றும் பார்த்தஸாரதி ஐயங்காரும் அவளும் புருஷனும்

பெண்ஜாதியுமாக வாழ்கிறார்களென்றும் அய்யங்கார் அங்கொரு நாட்டுக்கோட்டை செட்டியிடம் வேலை பார்த்துத் தக்க சம்பளம் வாங்கிக் கொண்டு க்ஷேமமாக வாழ்கிறரென்றும் ரங்கூனிலிருந்து செய்தி கிடைத்தது.

குறிப்புகள்

சக்திதாஸன்

21 ஜனவரி 1920 ரௌத்திரி தை 9

எளிதாக ஸம்ஸ்க்ருதம் படிக்கும் வழி

1921 ஜனவரி 11-ஆந் தேதி சுதேசமித்திரனில் 'ஒளிர்மணிக் கோவை' என்ற மகுடத்தின் கீழே எழுதப்பட்டிருந்த குறிப்புக்களில் "இந்தியாவுக் கொரு பொதுப் பாஷை" என்ற தலைப்பின் கீழுள்ள குறிப்பைப் பார்த்துவிட்டு, நம் சந்தாதார் ஒருவர்:— "(1) பண்டாரகரால் வெளியிடப்பட்டுத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட புஸ்தகம், (2) பஞ்ச தந்திரம்-தமிழ் மொழி பெயர்ப்புடன்-ஆகிய இவ்விரண்டும் எங்கே கிடைக்கும்?" என்று நம்மைக் கேட்கிறார். வடமொழியும் இங்கிலீஷும் கலந்து பண்டாரகர் வெளிப்படுத்தியிருக்கும் மூல நூல் சென்னையில் பெரிய பாடசாலைப் புஸ்தக வியாபாரி எவரிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம். அதன் தமிழ் மொழி பெயர்ப்பு, திருவண்ணாமலை டேனிஷ்மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதருக்கெழுதினால் கிடைக்குமென்று தெரிகிறது. பஞ்ச தந்திரம், வடமொழியிலுள்ள மூல நூலுக்கு நேரான தமிழ் மொழி பெயர்ப்பு இதுவரை யாவராலும் செய்யப்படவில்லையென்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். தாண்டவராய முதலியார் எழுதியிருக்கும்

தமிழ்ப்பஞ்ச தந்த்ரம் ஸம்ஸ்க்ருதத்திலிருந்து நேராக மொழி பெயர்க்கப்பட்டதன்று. மஹாராஷ்ட்ர பாஷையில் பஞ்ச தந்திரக் கதைகளை மட்டும் ஒரு வாறு தொகுத்திருந்ததொரு நூலினின்றும் கதை களைத் திரட்டித் தமிழில் அந்த முதலியார் வெளிப் படுத்திவிட்டா ரென்று தெரியவருகிறது. எனவே பூமண்டல முழுமையிலும் தனக்கொரு நிகரில்லாத ராஜ்ய நீதி சாஸ்த்ரமும், ஹிந்துக்களின் அறிவு நுட்பத்துக்குப் பெரும் புகழுமாகி விளங்கும் ஸம்ஸ் க்ருத பஞ்சதந்தரம் தமிழில் இயற்கையாக மொழி பெயர்க்கப்படவில்லை. அதன் அழகான நீதி வச னங்களில் பெரும்பான்மை தமிழ் மொழி பெயர்ப் பிலேயில்லை. மேலும் தமிழ்ப் பஞ்ச தந்தரத்தைப் படித்தால், இஃதொரு ஸாமான்யமான கதைப் புஸ்தகமென்று தோன்றுகிறதேயன்றி, உலகத்து ராஜ்ய தந்த்ர சாஸ்த்ரங்களுள்ளே இது சிரோ மணி யென்பது துலங்கவில்லை. இப்போது தமிழ் நாட்டில் புதியதோர் அறிவுக் கிளர்ச்சி எழுச்சி கொண்டிருப்பதினின்றும், இனி, விரைவிலே அந் நூல் தமிழில் நேராக மொழிபெயர்க்கப்படு மென் பது நிச்சயந்தான். ஆயினும் தற்காலத்தில் அவ் விதமொழிபெயர்ப்பில்லை. எனினும், இதுபற்றி மனஞ்சலிக்க வேண்டாம். அன்றைக் குறிப்பில் எழுதியிருந்தபடி, முதல் நூல், (பஞ்ச தந்த்ரம்) வடமொழியில் மிக மிக எளிய, மிக ஸரளமான, மிகத் தெளிந்த, ஸாமான்ய நடையில் அமைந்திருக் கிறது. அதன் பொருள் எத்தனை அபூர்வமாகவும், ஆழமாகவும், நுட்பமாகவும், ஆச்சரியமாகவும்

அமைந்திருக்கிறதோ அத்தனை எளிமையாகவும் ஸாதாரணமாகவும் அதன் வாக்யநடை அமைந்துளது. எனவே, அன்று தெரிவித்தபடி, பண்டாரகர் முதற்பாட புஸ்தகத்தையும், இரண்டாம் பாட புஸ்தகத்தில் ஒரு பகுதியையும் ஏழெட்டு மாதங்களுக்குள் படித்துணர்ந்து கொண்டால், பிறகு பஞ்ச தந்த்ரத்தை மூலத்திலேயே, பிறருதவி வேண்டாமல் வாசித்து யாரும் பொருளறிந்து கொள்ளலாம்.

தொழிற் கக்ஷியின் உதவி

"ஹிந்து" பத்திரிகையில் சாந்த நிஹள ஸிங் எழுதியிருக்கும் வ்யாஸ மொன்றில், இந்தியா விடுதலை பெறும் விஷயத்தில் ப்ரிட்டிஷ் தொழிற் கக்ஷியாரின் ஸஹாயத்தை எத்தனை தூரம் எதிர் பார்க்கக் கூடுமென்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறார். இவ்விஷயமாக இவர் மேரே தொழிற் கக்ஷித் தலைவருள்ளே முக்யஸ்தரைக்கண்டு ஸம்பாஷணை செய்திருக்கிறார். ஸ்ரீ நிஹள ஸிங் சொல்லியிருப்பதன் ஸாரமான கருத்துப் பின்வருமாறு:— தொழிற் கக்ஷியில் இரண்டு பகுதிகளிருக்கின்றன. இப்போதுள்ள கவர்ன்மெண்ட் மாறித் தொழிற் கக்ஷி கவர்ன்மெண்ட் ஏற்பட்டால் மந்திரி ஸ்தானங் கொளைய்தக்கூடிய மிஸ்டர் க்ளான்ஸ் (பொதுத் தொழிலாளிகளின் தேசிய ஐக்ய ஸங்கத் தலைவர்), மிஸ்டர் ஆர்தர் ஹெண்டர்ஸன் (தொழிற் கக்ஷியின் கார்யதர்ஸி), மிஸ்டர் ஆடம்ஸன் (பார்லிமெண்ட் தொழில் ஸமிதியின் அதிபர்) முதலியவர்களும் இவர்களைச் சேர்ந்தோரும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கிடைக்க

வேண்டுமென்றும், அதில் தொழிற் கக்ஷியார் இயன்றமட்டுந் துணைபுரிய வேண்டுமென்றும் கருது வோரே யாவர். ஆனால், அதற்கு மாண்டேகு செம்ஸ்போர்ட் திருத்தங்களை அங்கீகாரம் செய்து கொண்டு, அதனால் எய்தக்கூடிய நலங்களை யெல் லாம் பாடுபட்டெய்தி, அப்பால் அதிக உரிமைகள் கேட்பதே தக்கவழி யென்பது இவர்களுடைய கருத்து. இத்தக் கருத்தையொட்டி இந்தியர் நடந்து கொண்டால் மாத்திரமே மேற்கூறிய தொழிற் கக்ஷித் தலைவர்கள் நமக்குத் துணைபுரிவார்களென் றும், நம்மவர் ஒத்துழையாமையைக் கைப்பற்றினால் பிறகு, அவர்களுடைய உதவியை எதிர்பார்க்க வேண்டியதில்லை யென்றும் ஸ்ரீமான் நிஹள ஸிங் சொல்லுகிறார். ஆனால் மேற் கூறிய தலைவர்கள் சேர்ந்த பகுதியைத் தவிர ஆங்கிலத் தொழிற் கக்ஷிக்குள்ளேயே மற்றொரு பகுதியிருக்கிறது. அந்த மற்றொரு பகுதியார், பார்லிமெண்ட் அனுஷ் டானங்களைக் கடைப்பிடித்தொழுகி, அவற்றின் மூலமாகத் தொழிற் கக்ஷியின் நோக்கங்களை நிறை வேற்றிக் கொள்ளாமல், பலாத்காரமான புரட்சி முறையாலே தொழிலரசு ஸ்தாபிக்கவேண்டுமென்ற நோக்க முடையவர்கள். இந்தியா ஒத்துழையாமை யைக் கைக்கொள்ளுமிடத்தே, பிற்கூறிய தொழிற் பகுதியினரின் ஆதரவை மட்டுமே எதிர்பார்க்கலா மென்று ஸ்ரீநிஹள ஸிங் தெரிவிக்கிறார். இங்ஙனம் ஸ்ரீநிஹள ஸிங் வரையறுத்துப் பாகுபாடு செய்திருப் பதில் ஒரு சிறிதுண்மையிருத்தல் மெய்யே யெனி னும், இது முற்றிலும் சரியென்று நாம் நினைக்க

இடமில்லை. ஏனென்றால், ஒத்துழையாமை முறை பலாத்காரச் செயல்களை மறுக்குமியல்புடையது; புரட்சி மார்க்கத்தைச் சார்ந்ததன்று. எனவே, ஆங்கிலத் தொழிலாளிகளில் மனுஷ்ய ஜாதியின் ஸ்மத்வத்தையும், ஸ்வாதீனத்தையும் வேண்டும் இயல்புடையோர், பலாத்கார முறைகளை வேண்டாத ஸமாதானப் பிரியராகிய போதிலும், இந்தியர் ஒத்துழையாமையைக் கைக் கொண்டதுபற்றி மன வருத்த மெய்த மாட்டார்கள். தம்மால் இந்தியாவுக்குச் செய்யக்கூடிய உதவியை அவர்கள் எப்போதும் செய்வார்கள். திருஷ்டாந்தமாகக் கர்னல் வெட்ஜ்வுட் தொழிற் கக்ஷித் தலைவருள்ளே புரட்சி வகுப்பைச் சேராதவரென்றே கொள்ளவேண்டும். மேலும், இவர் நம் நாட்டில் எழுந்திருக்கும் ஒத்துழையாமைக் கிளர்ச்சியில் அபிமான மில்லாதவர். புதிய சட்ட சபைகளை நாம் உபயோகப்படுத்தியே விடுதலைக்கு வழிதேட வேண்டுமென்ற கருத்துடையவர்.

அப்படியிருந்தும், காங்கிரஸ் ஸபையில் இவரை நோக்கி, ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி அய்யர்:— "ருஷியாவுக்கும், ஐர்லாந்துக்கும் பரிந்து பேசும் தாங்கள் இந்தியா ஒத்துழையாமையைக் கைக் கொண்ட போதிலும் பார்லிமெண்டில் எங்கள் சார்பாக நின்று போராட மாட்டீர்களோ?" என்று கேட்டபோது, என்ன மறு மொழி சொன்னார்?

"இந்தியா ஒத்துழையாமையைக் கைக்கொண்டாலும், வேறென்ன செய்தாலும் நான் இந்தியர்

விடுதலை பெறும் பொருட்டு வேலை செய்வதை நிறுத்த மாட்டேன்" என்று விடையளித்தார்.

தொழிற்கக்ஷியில் புரட்சிக்காரரல்லாதாரிடையேயும் இந்தக் கர்னல் வெட்ஜ்வுட் போன்றோர் பலர் இருக்கக் கூடுமென்றே எதிர் பார்க்கிறோம்.

இதன் பெயரென்ன?

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில், ஸர் வாலன்டைன் கிரால் பின்வருமாறு பரிதபிக்கிறார்:—

"பத்து வருஷங்களின் முன்னே, டில்லி நகரத்துக்கு வெளியே, இந்தியாவில், பண்டு இஸ்லாமிய ஆதிக்க மிருந்ததற்குச் சிறந்ததொரு சின்னமாகிய குதுப்மினர் என்ற கோரியின் கீழே ஒரு நாள் காலையில் சில மஹமதிய கண்பர்கள் என்னோடு ஸம்பாஷணை செய்து கொண்டிருந்தனர். இனி இந்திய ஸ்வராஜ்யமும், ஹிந்து ஆதிக்கமும் சேர்ந்தால் இந்திய மஹமதியரின் கதி என்ன ஆகுமோ என்றெண்ணி அவர்கள் பெருமூச்செறிந்தார்கள். இன்றைக்கு அவர்களில் சிலர் ஸ்ரீமான் காந்தியின் பரமசிஷ்யராக இருக்கிறார்கள். இன்றைக்கு எங்கு பார்த்தாலும் "ஹிந்து முஸ்லிம் கீ ஜய்" என்ற சத்தம் பிறந்து விட்டது. மஹமதியரின் மனுதிகளுக்குள் ஹிந்துக்கள் உபன்யாஸகராய் முஸ்லீம்களுக்கு ஸ்வராஜ்ய உபதேசம் பண்ணுகிறார்கள். டில்லி நகரத்தில், சில தினங்களின் முன்பு உலே மாக்களின் ஸர்வபாரத ஸங்கம் நடைபெற்றபோது அங்கு ஸ்ரீ காந்தி விருந்தாளியாகச் சென்றிருந்தார். இதைக் காட்டிலும் விநோதமான செய்தி ஹிந்துக்

களின் கொள்கைக் கிணங்கி முஸல்மான்கள் முக்ய மான உத்ஸவ காலங்களில் பசுக்களை விட்டு ஆடுகளைக் கொல்ல உடம்பட்டவாறு. ஆனல் இப்படிச் செய்யலாமென்று அக்பர் சக்ரவர்த்தி விதித்திருக்கிறார்."

என்று மேன்மேலும் ஸர் வாலண்டைன் தமது மனவருத்தத்தை விஸ்தரித் தெழுதிகொண்டு போகிறார். பொறுமையும் வயிற்றெரிச்சலும் இந்த வார்த்தைகளில் கொழுந்து விட்டெரிகின்றன. இப்படிப்பட்ட மனோபாவ விலாஸங்களை இந்நிலாந் தில் ப்ரகடனம் செய்வதனல் யாருக்கென்ன பயன் விளையுமென்று "டைம்ஸ்" பத்திரிகை அதிகாரிகள் நினைக்கிறார்கள் என்பதை நம்மால் ஊஹிக்க முடிய வில்லை.

வரம்பு கடந்து விட்டமை

ஆனல் தேசீயப் பாடசாலைகளில் ஹிந்துமத கிரந்தங்களுக்குத் தக்கபடி கல்வி கற்பிக்கப்படு மாதலால் அப்பாடசாலைகள் முஸல்மான்களுக்குப் பயன்பட மாட்டாவென்று ஸர் வாலன்டைன் சொல் லும் போதுதான், அவர் நம்பிக்கையின் வரம்புக்கு வெளியே பஹிரங்கமாக வந்து நிற்கிறார். ஏனெனில் தேசீயப் பாடசாலைகளில் முஸ்லிம் பிள்ளைகளுக்கு முஸ்லிம் மத நூல்களே உபதேசிக்கப்படு மென்பது ஸகலருக்கும் தெரிந்த விஷயம்.

தேசீயக் கல்வி

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி

13 மே 1920	ரௌத்திரி சித்திரை 31
18 மே 1920	ரௌத்திரி வைகாசி 5
20 மே 1920	ரௌத்திரி வைகாசி 7
21 மே 1920	ரௌத்திரி வைகாசி 8
28 மே 1920	ரௌத்திரி வைகாசி 15

மேலே குறிப்பிட்ட தேதிகளில் இக்கட்டுரை தொடர்ச்சியாக வெளியாகியிருக்கிறது.

இது பாரதி நூல்கள் மூன்றும் தொகுதியில் சமூகம் என்னும் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இத் தொகுதியில் உள்ளது சுதேசமித்திரனில் வெளியானதைவிடச் சற்று விரிவாக இருக்கிறது.

மேலும் தேசீயக் கல்வி (2) என்ற தலைப்பில் மற்றொரு கட்டுரையும் மூன்றும் தொகுதியில் உள்ளது.

இந் நூலில் காலம் என்ற கட்டுரையின் கீழ் உள்ள குறிப்பையும் பார்க்க.

இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை

20 ஜூன 1920

பார்க்க :—மூன்றும் தொகுதி. பகுதி தத்துவம். இக் கட்டுரை ஒரு சொற்பொழிவின் ஸாரமாகும். கடையத்திற்கு அருகிலுள்ள பொட்டல் புதூரிலே பாரதியார் ஒரு முஸ்லிம் சபையில் இதை நிகழ்த்தியிருக்கிறார். பொட்டல் புதூர் முஸ்லிம்கள் பாரதியாரிடம் குர்ஆன் உபதேச மொழிகளைக் கேட்டின்புறுமுகை ஸ்ரீமதி செல்லம்மா பாரதியும் குறிப்பிட்டுள்ளார்கள்

சில குறிப்புகள்

கானிதாஸன்

15 நவம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 1

ஐர்லாந்து

ஐர்லாந்து விஷயமாகவும், உள்நாட்டுத் தொழிலாளர் கிளர்ச்சி விஷயமாகவும் இங்கிலாந்து தேசத்தாரின் மனம்மிகவும் குழம்பிப்போயிருக்கிறதென்று லண்டன் "டைம்ஸ்" முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளைப் பார்த்தால் மிகத் தெளிவாக விளங்குகிறது. முக்யமாக, ஐர்லாந்தில் அதிகாரிகள் செய்யும் "எதிர்ச் செயல்கள்" உலக முழுதிலும் ஜரிஷ் ஆட்சிக்குப் பேரவமானம் விளைக்கக் கூடிய விஷயமாகலால், அதன் ஸம்பந்தமாக ஆங்கிலேயர் மனதில் மிகுந்த அதிர்ச்சி யுண்டாயிருக்கிறது. போலீஸாரையும் ராணுவத்தாரையும் எவ்விதத்திலேனும் கஷ்டப்படுத்தியவர்கள் அல்லது கஷ்டப்படுத்தக் கூடியவர்களாகிய "ஸீன்ரீன்" கக்ஷியாரை மாத்திரமே அதிகாரிகள் அழிக்கவில்லை. பல மாஸங்களாகவே, இவ்விடமான வீடுகளில் பிரவேசிப்பதும், வீட்டாரைச் சுட்டுக் கொல்வதும், வீடுகளையும் பண்ணைகளையும் கிராமங்களையும் கொளுத்துவதுமாக விளையாடிக்கொண்டு வருகிறார்களென்று சொல்லப்படுகிறது. இந்த நிலைமையிலே கொண்டு சேர்த்ததாகிய ராஜதந்த்ர முறைமைக்கு லாய்ட்

ஜ்யார்ஜ் முதலிய மந்திரிகள் ஆரம்பத்திலேயே ஸம்மதமளித்ததாகவும் சிலர் தெரிவிக்கிறார்கள். லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை பிற்போக்குடையது. இன்றைக்கும் ஐர்லாந்து ஸ்வாதீன மடையும் விஷயத்தில் "டைம்ஸ்" பத்திரிகைக்குக் கொஞ்சமேனும் அனுதாபம் கிடையாது. ஐர்லாந்து தேசத்தார் தாங்கள் ஸ்தாபித்திருக்கும் குடியரசை எப்படியேனும் காப்பாற்ற வேண்டுமென்று பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டு வருகையிலே, லண்டன் "டைம்ஸ்" :— "காலக் கிரமத்தில் ஐர்லாந்து தேசத்தாரையும் சேர்த்துக்கொள்ளக் கூடியதான ஓராட்சி முறை ஐர்லாந்தில் விளைவதற்குரிய சட்ட திட்டங்களை ஏற்படுத்திவிட வேண்டும்" என்று ஆசீர்வாதம் பண்ணுகிறது. அந்த பாஷையைக் கவனித்தீர்களா? ஸ்வராஜ்ய விஷயத்தில் ஐர்லாந்துவாஸிகளுக்குள்ள தாகத்தின் வேகத்தையும் இப் பத்திரிகையின் ஆமை யெழுத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வெகு விநோதமாகத் தோன்றும். இப்படிப்பட்ட லண்டன் "டைம்ஸ்" கூடப் 'பழி வாங்குதல்' என்ற பெயரை வைத்துக்கொண்டு ஆங்கிலேயத் துருப்புகள் ஐர்லாந்தில் நடத்தும் சட்டத்துக்கும் மனிதநாகரிகத்துக்கும் விரோதமான கொடுஞ் செயல்களை மிகவும் உக்ரமாகக் கண்டிக்கிற தென்றால் அக் கொடுஞ் செயல்கள் எத்தனை கொடுமையாக இருந்திருக்க வேண்டுமென்பதை நேசர்களே ஊஹித்தறிந்து கொள்ளலாம். மேலும் இந்த விஷயத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் முதலிய ஆங்கில மந்திரிகளின் உபந்யாஸங்கள் கடிதங்கள் முதலியவற்றைப்

படித்துப் பார்க்கும்போது, நிலைமை கை கடந்து போய் விட்டதென்றும், இந்த ஐர்லாந்தின் ஸம்பந்தமாக இன்னதுதான் செய்ய வேண்டுமென்பதே ஆங்கில ராஜதந்திரிகளுக்குத் தெரியவில்லை யென்றும் விளங்குகிறது.

துருக்கியின் நிலை

துருக்கிக்கும் தேசக் கக்ஷியாருக்கும் நடந்த உடம்பாட்டைத் துருக்கி இன்னும் உறுதி செய்ய வில்லை. மறுபடியும் ஒரு முறை தேசியக் கக்ஷியாரால் துருக்கிக்குச் சற்றே ஸௌகர்யம் ஏற்படலா மென்று தோன்றுகிறது. பால்கன் யுத்த முடிவில் துருகி தோற்றுப் போய் விட்டது. தேசியக் கக்ஷிக்கு விரோதமான மனிதர் துருக்கியில் ஆட்சி செலுத்தி வந்தனர். அவர்களுடைய கொள்கை எப்படி யிருந்ததென்றால்:—உள்நாட்டில் தேசியக் கக்ஷியாரின் சக்தியைக குறைக்கும் பொருட்டு, அன்னியரின் உதவி பெற்று அதனால் அந்த அன்னியர்கள் நம்மைக் குதிரையேறக் கூடிய நிலைமை ஏற்பட்டாலும் பெரிதில்லை; நாட்டை அன்னியர் கொண்டு போனாலும் போகுக; ஆனால் தேசியக் கக்ஷியார் ஆளக் கூடாது. இங்ஙனம் கருதும் மனிதர் செய்து கொண்ட உடம்பாடு எப்படி யிருக்கும்! மேலும், லண்டன் நகரத்தில் பால்கன் தேசத்தார்களுக்கும் துருக்கிகும் உடம்பாடு கையெழுத் திடப்பட்டது. அதில், மற்ற நிபந்தனைகளுடனே, அட்ரியானோபிள் ஜில்லாவைத் துருக்கி விட்டு விட வேண்டு மென்ற நிபந்தனையும் சேர்ந்திருந்தது. அக்காலத்

தில், அன்வர்பாஷா முதலிய தேசியக் கக்ஷித் தலை வர்கள் துணிவாகவும் தைர்யமாகவும் வேலை செய்த படியால் துருக்கிக்கு அட்ரியா நோபிள் நஷ்டமா காமல் மிஞ்சிற்று. திடீரென்று அன்வர்பாஷா மூன்னிருந்த கோழை மந்திரிகளைத் தூக்கி எறிந்து விட்டு, அதிகாரத்தைக் கைவசப் படுத்திக் கொண்டு, அட்ரியா நோபிளை இழக்கப் போவதில்லை யென்று தெரிவித்து விட்டார். இதற்குள், பால்கன் தேசங்கள் ஒன்றுக் கொன்று போராடத் தொடங்கித் தங்கள் பிணக்குகளைத் தீர்ப்பதற்குப் பிறர் மத்யஸ் தத்தை வேண்டக் கூடிய நிலைமைக்கு வந்துவிட்ட படியால் அவற்றால் துருக்கியை வற்புறுத்த முடிய வில்லை. ஆனால், "லண்டன் உடம்பாட்டை நாங்க ளன்றே கூட இருந்து முடித்து வைத்தோம்? அப்படியிருக்க அவ்வுடம்பாட்டுக்கு மாறாக அட்ரியா நோபிள் துருக்கி வசத்திலிருப்பதை நாங்கள் அங்கீ காரம் செய்ய மாட்டோம்" என்று ஆங்கில மந்திரி கள் சொன்னார்கள். அதற்கு அன்வர்பாஷா:— "தங்கள் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் ஆனால் அட்ரியா நோபிளை கொடுக்கமாட்டேன்" என்று சொல்லி விட்டார். ஒன்றும் நடக்கவில்லை. துருக்கிக்கு அட்ரியா நோபிள் மிஞ்சிற்று. அதுபோல் இப்போது ஆசியா மைனரிலுள்ள அனடோலியாவின் ராஜதானி யாகிய அங்கோரா நகரத்தில் கமால் பாஷா தேசிய கக்ஷிப் படைகளையும், தக்க உபபலங்களையும் வைத் துக் கொண்டு கான்ஸ்டாண்டி நோபிள் நகரத்தி லுள்ள துருக்கிய அதிகாரிகளிடம் த்ரேஸ், ஸ்மர்ன

மாகாணங்களை இழந்து விடாமல் இருக்கும்படி வற்புறுத்தி வருகிறார். இப்போது ஸெவர் உடம்பாட்டை உறுதி செய்யுமாறு நேசக் கக்ஷியார் வற்புறுத்தியதற்கு உத்தரமாகத் தூருக்கி கவர்மெண்டார் அவ்விஷயம் இப்போது அத்தனை அவஸரமில்லை யென்று கமால் பாஷாவின் கூட்டத்தாரை ஸமாதானப்படுத்தும் பொருட்டாக அதைச் சற்று மெதுவாகவே கவனிக்கும்படி நேர்கிற தென்றும் தெரிவித்திருக்கிறார்கள். நேசக் கக்ஷியாருக்குள்ளேயே ஸமாதான நிபந்தனைகளைப் பற்றிய பூர்ண மன வொற்றுமை யில்லாம லிருப்பதை யறிந்தே தூருக்கிய அதிகாரிகளுக்கு இங்ஙனம் சொல்ல தைர்யம் ஏற்பட்டிருக்கக் கூடுமென்று நினைக்கிறேம். ஜெர்மனி விஷயத்திலேயே ப்ரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் மேன் மேலும் அபிப்பிராய பேதங்கள் தோன்றி வருகின்றன. அமெரிக்காவோ சொல்ல வேண்டியதில்லை; "இங்கிலாந்தினிடம் எனக்கு விரோதம் கிடையாது" என்று அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக நியமனம் பெற்றிருக்கும் ஹார்டிங் என்பவர் சொல்லுகிறார். நம்முடைய ப்ராண ஸ்நேஹிதராக உயிர்த்துணையாக இருந்த ஒருவன் இப்போது நமக்கும் தனக்கும் விரோதமில்லை யென்று சொல்ல நேர்ந்தால் முன் இருந்த ஸ்நேஹ நிலை எத்தனை தூரம் குறைந்து போய் விட்டதென்பது சொல்லாமலே விளங்கும். இத்தாலியோ மிகவும் அபாயகரமான உள்நாட்டுக் குழப்பத்தில் அழுந்திக் கிடக்கிறது. இந்த நிலையில் தாமேன் தமது கழுத்திலே அவசரமாகச் சுருக்குப்

போட்டுக் கொள்ள வேண்டும் என்று துருக்கி நினைத்தே இங்ஙனம் வாயிதா போடுகிறதென்று தோன்றுகிறது. ஆனால் இங்ஙனம் துருக்கி கொடுத்த உத்தரத்தில் நேசக் கக்ஷியாருக்குக் கோபமுண்டாய் அவர்கள் இதுவரை துருக்கி ராஜாங்கப் பொக்கிஷத்துக்குச் செய்து கொண்டு வந்த பண உதவியைக குறைத்து விடப் போகிறார்களென்றும் அதன் மேலும் துருக்கி சரிப்பட்டு வராவிட்டால் இறுதிச் சீட்டுப்பிறப்பிக்க நேருமென்றும்நேற்றுக் கிடைத்த ராய்ட்டர் தந்தியொன்று சொல்லுகிறது. இதனின்றும், துருக்கி மந்திரிகள் என்ன விதமான செய்கையை மேற்கொள்வார்களென்பது தெரியவில்லை.

ஆனால், நேசக் கக்ஷியாரின் இறுதிச் சீட்டு (எங்கள் வார்த்தையை அங்கீகாரம் செய்யாவிட்டால் யுத்தந் தொடங்குவோமென்ற சீட்டு) துருக்கியரை நடு நடுங்கச் செய்துவிடுமென்று தோன்றவில்லை.

ஸர்வதேச ஸங்கம்

நேசக் கக்ஷியாரால் மிகவும் ஆரவாரத்துடன் நடத்தப்பட்டு வரும் "ஸர்வ தேச ஸங்கம்" செத்துப் போய்விட்டதென்று அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி மிஸ்டர் ஹார்டிங் சொல்லியதாகத் தெரிகிறது. ஆரம்பத்தில், அநேகமாகப் பெரும்பகுதி, ஜனாதிபதி வில்ஸனுடைய வேண்டுதல்களை முன்னிட்டே இந்த ஸங்கம் அமைக்கப்பட்டது. இங்ஙனம் அமெரிக்காவின் முயற்சியால் ஏற்பட்ட இந்த ஸங்கத்தை இப்போது அமெரிக்காவே சாபமிடுதல், காலத்தின் மாறுபடும் குணத்தையும், அந்த ஸங்கத்தின் மாற்ற

முடியாத துர்க்குணத்தையும் ஒருங்கே விளக்குகிறது. நிறைவேற்ற முடியாத, நிறைவேற்ற வழியில்லாத பல பல தீர்மானங்களில் பொழுது செலவிட்டுக் கொண்டிருக்கும் அந்த ஸங்கத்தை அமெரிக்கா இனி ஒரு கிறிதேனும் பொருட்படுத்தப் போவதில்லை யென்பது மேலே காட்டிய மிஸ்டர் ஹார்டிங்கின் வாக்கிலிருந்து நன்கு விளங்குகிறது. ஸமீப காலத்தில் ஐரோப்பாவில் ப்ரஸ்ஸல்ஸ் நகரத்தில் நடந்த திரவிய ஸங்கத்தின் முன்பு ஒரு அமெரிக்க ராஜ தந்திரி பேசுகையில்:— "வேலை செய்ய மனமில்லாத நாடுகளுக்கு ஆஹாரம் கொடுக்கமாட்டோம்; ஸமாதானம் செய்துகொள்ள மனமில்லாத ராஜ்யங்களுக்குப் பணம் கடன் கொடுக்கமாட்டோம். இதுவே அமெரிக்காவின் நியாயமான கொள்கை" என்று சொன்னார். இதைக் குறித்துப் பேசுமிடத்தே, 'நியூ இந்தியா' பத்திரிகை சொல்லுகிறது:— "இங்கிலாந்தில் ஒரு பொது எலெக்ஷன் நடந்து அதினின்றும் உதார குணமுடையவர்கள் அதிகாரம் பெற்று அதனால் ருஷியாவுடன் ஸமாதானமும், ஐர்லாந்துக்கு ஸமாதான வாழ்க்கையும் ஏற்படுமாயின், பிறகு உலகத்து தேசங்களில் மிகச் செல்வமுடையதாகிய அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு நிறையப் பணமும் உணவும் வர இடமுண்டாகும்" என்கிறது. இதை நோகுமிடத்து அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கே, போதிய அளவு கடனுதவி கிடைப்பது நிறுத்தப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலும் தமது செல்வத்தை

யெல்லாம் மஹாயுத்தத்தில் இழந்துபோயின. அமெரிக்காவிடம் கடன் கேட்கப்போனால், "ஸமாதானத்தை வேண்டாத தேசங்களுக்குப் பணம் கொடுக்கமாட்டேன்" என்று சொல்லுகிறது. ஒவ்வொரு சிறு ராஜ்யத்துக்குங்கூட விடுதலை யேற்படுத்திக் கொடுப்பதற்காக மஹாயுத்தம் நடத்துகிறோமென்று உருப்போட்டுக் கொண்டிருந்த ஆங்கிலேய மந்திரிகள் இப்போது ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க மறுப்பதைப் பார்த்து அமெரிக்காவில் பலர் ஆச்சரியப்படுகிறார்கள். இப்படிப்பட்ட மந்திரிகளின் ஆதிக்கத்தின் கீழ் நடைபெறுவது கொண்டே "ஸர்வ தேச சங்க"த்தினிடம் அமெரிக்காவுக்கு நம்பிக்கை போய்விட்டதென்று தோன்றுகிறது.

ரஸத் திரட்டு

காளிதாசன்

19 வைபவ 1920 ரௌத்திரி கார்த்திகை 5

"ஸ்லாந்துக்கு ஸ்வதந்த்ரம் கொடுக்க மாட்டோம்."

இந்த மாதிரி தர்ம ஸமாசாரங்களைக் கொஞ்சம் மறை பொருளாக மூடின பாஷையில், சற்றே இரண்டர்த்தம் தோன்றும்படியாகப் பேசுவது இது வரை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் போன்ற "ராடிகல்" (வேர்த்திருந்த) ராஜ தந்திரிகளின் வழக்கமாக இருந்தது. அதிலும், அமெரிக்காவிடம் யுத்த ஸமயத்தில் ஏராளமாகப் பணம் கடன் வாங்கவேண்டியிருந்தபடியாலும், மற்றப்படி ஆஹார வஸ்துக்கள், ஸைனிக்கு வேண்டிய பண்டங்கள், மனித பலம் முதலிய வேறுபல உதவிகளும் அவசியமாக இருந்தபடியாலும், விடுதலை விஷயத்தில் ஏராளமான பக்தி, ஆவேசம் காட்டுவதும், விடுதலை மறுப்புக் கொள்கைகளை மிகவும் ஜாக்கிரதையாக, இரண்டு பொருளுடைய, மொழிகளில் மறைத்துச் சொல்வதும் ஆங்கில மந்திரிகளுக்கு அவஸரமாகவும் இன்றியமையாதன ஆகவும் ஏற்பட்டன. இப்போது சண்டை முடிந்துவிட்டது. அமெரிக்கா மேலே கடன் கொடுக்கக் கூடிய மனமில்லாது போய்விட்டது மல்லாமல் ஜெர்மானியருக்காக ஓதப்பட்ட தர்ம ஸூத்ரங்களை

யெல்லாம் இங்கிலாந்தும் அயர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று பல அமெரிக்கத் தலைவர் வற்புறுத்துகிறார்கள். கடன் கொடுக்கவும் மாட்டானும். நம் கிழேயிருக்கும் தேசத்தைவேறு வெட்டிவிட வேண்டுமென்று வற்புறுத்த வருவானும். தர்ம ஸித்தர்களாம்! தர்ம ஸித்தர்கள் நம்முடைய எதிரிகளிடமுள்ள குற்றங்களை உலகத்தாருக் கெடுத்துக் காட்டுவதற்கு உதவியாகப் பாதிரிகளாலும் பண்டிதர்களாலும் அமைக்கப்பட்டன. நாம் செய்யும் அநியாயங்கள் நம்முடைய ஸௌகர்யத்துக்கு அவசியமானவை. ஸௌகர்யத்தைக் குறைத்துக்கொண்டு தர்ம ஸித்தரங்களைக் கவனிப்பது நமக்குப் பொருந்தாது. இந்நாணம் பர்யாலோசனை செய்து ஆங்கிலேய மந்திரிகள் விடுதலை மறுப்பு விஷயத்தை முன்போல் இன்பமான பாஷையால் மறைத்துவைக்கும் சடங்கைக் கூடக் கைவிட்டு விட்டு முரட்டு பாஷையில் கெட்டியாக, ஐர்லாந்துக்கு விடுதலை கிடையாதென்று சாதிக்கத் தொடங்கிவிட்டார்கள் ஐர்லாந்து விஷயமான ரஸமிகுந்த லண்டன் ராய்ட்டர் தந்தியொன்று நேற்று வந்தது. அதன் விவரமான வடிவத்தை நேற்றை மித்திரன் தந்திப் பக்கங்களிலே காணலாம். மிஸ்டர் ஆஸ்க்வித் (மாஜி ப்ரதம மந்திரி) இங்கிலாந்துக்கு ராணுவ விபத்துகள் ஏற்படாதபடி தடைகளேற்படுத்திக் கொண்டு மற்றப்படி ஸம்பூர்ணமான ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று பார்லிமெண்ட் ஸபையில் சொன்னார்.

எழுந்தார் லாய்ட் ஜ்யார்ஜ் மந்திரி. கத்தியைச் சுழற்றத் தொடங்கிவிட்டார். மெய்யான உருக்குக் கத்தி யன்று; பாஷைக் கத்தி; வாக்கு வாள். ஐர்லாந்துக்கு ஸ்வாதீனம் கொடுத்த பிறகும்கூடப் பழைய புண்களை மறந்து ஐர்லாந்து இங்கிலாந்திடம் நட்புச் செலுத்துமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் நம்பவில்லை. அவரால் நம்ப முடியவில்லை. குற்றமுள்ள நெஞ்சு குறு குறு குறு குறு என்னுமாம். அவருடைய இனத்தார் பண்ணிய பிழைகளெல்லாம் அவருக்குத் தெரியாதா? எனினும், ஆங்கிலேயர் தம்மைப் போலே பிறரையும் கிணைத்து ஸித்தாந்தங்கள் ஏற்படுத்துவது தவறென்றும் ஐரிஷ் ஜாதியாருடைய சரித்திரத்தை நோக்கு மிடத்தே, அவர்கள் நெடுங் காலமாகக் கஷ்டப்பட்டுப் பரிசுத்தமடைந்த கூட்டத்தாராதலால், அவர்களுடைய மனம் கல்மனதாக இராமல் நன்றாகக் குழைந்து, பக்குவப்பட்டு, தெய்வ பக்திக்கு வசப்படுவதாகச் சமைந்திருத்தல் விளங்குகிற தென்றும், ஆதலால், ஐர்லாந்து தனக்கு ஸ்வாதீனம் கிடைத்தால், விரைவிலே இங்கிலாந்தின் பழைய பிழைகளை மறந்து, இங்கிலாந்துடன் உண்மையான நட்புப் பாராட்டியே வருமென்றும் நான் நினைக்கிறேன். ஐர்லாந்துக்கு ஸ்வாதீனம் கொடுத்தால், அந் நாட்டிற்கும், இங்கிலாந்துக்குக் கேடு சூழும் பிற நாடுகளுக்கும் அரசாங்கார் தூண்டுதலாகுமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுகிறார். ஐரிஷ் துறைமுகங்களின் பரிபாலனம் இங்கிலாந்தின் கையினின்றும் நழுவுமாயின், அதனால் இங்கிலாந்தின் ராஜ்ய சக்திக்கு பங்கம் நேருமென்கிறார்.

அங்ஙனம் நேரும்படி செய்யக்கூடிய எந்த ஏற்பாட்டையும் இங்கிலாந்து அங்கீகரிக்க முடியாதென்கிறார்.

மற்றக் குடியரசு நாடுகளுக்குள்ள ஸ்தானம ஐர்லாந்துக்குக் கொடுக்க வேண்டுமென்று மிஸ்டர் ஆஸ்க்வித் வாயினல் சொல்லிய போதிலும், அவருடைய உட்கருத்து அப்படியில்லே யென்பதை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் எடுத்துக் காட்டுகிறார். ஏனென்றால், ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுப்பதில் கடற் சண்டைத் தயாரிப்புக்களுக்கு ஸ்தலங்களாகக் கூடிய துறை முகங்களின் மேற்பார்வை ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரிடம் வைத்துக்கொள்ளலாமென்று மிஸ்டர் ஆஸ்க்வித் சொல்லுகிறார். அப்படியானல், கானடா, ஆஸ்த்திரேலியா முதலிய குடியேற்ற அரசுகளின் ஸ்தானத்தை ஐர்லாந்துக்குக் கொடுப்பதாக மாட்டாது. ஏனென்றால், கானடா, ஆஸ்த்திரேலியா முதலிய குடியேற்ற நாடுகள் தம் துறை முகங்களின் மீது பரிபூர்ணமான, வகுக்கப்படாத தனியதிகாரம் செலுத்தி வருகின்றன.

மேலும், 1918-ஆம் வருஷத்தில் ஐர்லாந்து தேசத்து "ஸின்பீன்" கக்ஷியார் ஜெர்மனியுடன் கலந்து ப்ரிடிஷ் அரசாட்சிக்கு விரோதமாக நடத்திய சூழ்ச்சியைப் பற்றிய அறிக்கை யொன்று சீக்கிரத்தில் ஸர்க்காரால் ப்ரசுரம் செய்யப்படுமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தெரிவித்தார்.

ஐர்லாந்து தேசத்துக் கடல் துறைகள் ப்ரிடனுக்கு எத்தனை விபத்தாக மாற்றத்தக்கன வென்பதும், "ஸின்பீன்'கள் அவற்றை எங்ஙனம் பயன்

படுத்தச் சதியாலோசனை நடத்தினர்களென்பதும், அவர்கள் அங்ஙனம்பயன் படுத்த முடியாமற்போயினதெப்படி யென்பதும், அவர்களை இங்கிலாந்து தன் கைக்குள் இறுகப் பிடித்துக் கொண்டிரா விட்டால் இன்னும் அப்படியே வேலை செய்வார்களென்பதும் ஸர்க்கார் ப்ரசுரம் செய்யப் போகிற அறிக்கையில் நன்றாக விளங்குமாம். ஆதலால், ஐர்லாந்தை இறுகப் பிடித்துக்கொண்டிருக்கும் கைப்பிடியை நெகிழ விடப் போவதில்லை யென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுகிறார்.

இங்கு,

"மீ தெழும் மொக்குளன்ன யாக்கையை விடுவ தல்லால்
ஸீதையை விடுவ துண்டோ, இருபது திண் தோள் உண்டா(க)?"

(நீர் மீதெழும் குமிழி போன்ற இந்த சரீரத்தை விட்டாலும் விடுவேனேயல்லாமல், என் உறுதியான தோள் இருபது மிருக்கையிலே, நான் ஸீதையை விடுவேனென்று நினைக்கவுஞ் செய்யலாமோ?)

என்று ராவணன் சொல்லியதாகக் கம்பர் எழுதியிருக்கிற வரிகள் எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றன. ராவணனுடைய கதி மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும் வரக் கூடாதென்று நான் மனப் பூர்வமாகக் கடவுளை வேண்டுகிறேன். ஐர்லாந்து தன் கடற் படையையும் நிலப்படையையும் தன் இஷ்டப்படி சமைத்து நடத்துவதென்ற அம்சம்

சேர்ந்த எந்த ஏற்பாட்டையும் ப்ரிடிஷ் கவர்ன் மெண்டார் எந்தக் காலத்திலும் ஒப்புக் கொள்ள முடியாதென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தெரிவிக் கிறார். இந்த விஷயத்தை ஐயந்திரிபற, மிகத் தெளி வாக, எல்லோரும் உணரும்படி அழுத்திச் சொல்ல விரும்புவதாகவும் அவர் தெரிவிக்கிறார். எந்தக் காலத்துக்குமா? அதாவது, யுகாந்தம் வரைக்குமா? உலக முடிவு வரை, எப்போதுமே, ஐர்லாந்துக்குத் தன் இஷ்டப்படி படை சமைத்துப் பராமரிப்ப தாகிய, மற்றக் குடியேற்ற நாடுகளுக்குள்ள, உரிமை கிடைக்கக் கூடாதென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுவது எனக்கு ஒரு பக்கத்தில் வருத்தத்தை யும் மற்றொரு பக்கத்தில் நகைப்பையும் விளைவிக் கிறது. விரைவில் ஐர்லாந்தின் விஷயத்துக்கு ஒரு முடிவேற்பட வழியில்லாமலிருப்பது பற்றி வருத்த மும், இப்படிப்பட்ட மந்திரிகள் வசம் இங்கிலாந்து அகப்பட்டுக் கொண்டு தாழ்வடைகிற தென்று வருத் தமும், மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் உலக முடிவுவரை ஐர்லாந்தை அடிமைப்படுத்தி ஆளமுடியு மென்று நம்புவதை எண்ணுமிடத்தே பெரு நகைப்பும் தோன்றுகின்றன. இரும்புருவையா, நம் இஷ்டமான வரை நமது காலடியிலே போட்டிருப்பதற்கு! மனி தர் கூட்டமன்றே? உலகமெங்கும் ஸமத்வ ஞானத்தை வற்புறுத்துவதாகிய கல்வித் தீ ஓங்கிக் கொண்டிருக்கையிலே ஒரு கூட்டத்தார் மற்றொரு பிரமாண்டமான லக்ஷக்கணக்கான ஜனக் கூட் டத்தை எத்தனை காலம் தாழ்ந்த நிலையிலே அழுத்தி வைத்துக் கொண்டிருத்தல் ஸாத்யப்படும்?

குடியேற்ற நாடுகளைப் போன்ற ஸ்தானம் ஐர்லாந்துக்குக் கொடுத்தால் உடனே மிகவும் எளிதாக, ஆறு லக்ஷத்துக்கு மேல் ஏழு லக்ஷம் வரை கட்டாய ராணுவ ஸேவகம் விதித்து ஐர்லாந்தியர் பெரிய ஸேனை அமைத்துக் கொள்வார்களென்றும், அதினின்றும் இங்கிலாந்திலும் கட்டாய ராணுவ ஸேவகம் விதிக்க நேரு மென்பதைத் தொழிற் கக்ஷியார் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் எச்சரித்தார். இதில், மிகவும் ரஸமான உபகதை யொன்று கிளைக்கிறது. அதாவது, கட்டாய ஸேவகம் வருமென்று பயமுறுத்துவதில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தொழிற் கக்ஷியாரை மட்டும் பெயர் குறிப்பிட்டுப் பேசியதின் நியாயமென்ன? ஐர்லாந்துக்கு விடுதலை வேண்டுமென்பதில் அனுதாப முடையோர், இங்கிலாந்தில் தொழிற் கக்ஷியாரிடையே மாத்திரந்தானே இருக்கிறார்கள்? மற்றக் கக்ஷியாரிடையே கிடையாதா? திருஷ்டாந்தமாக, ஸர்க்கார் உத்யோகம் கிடைக்கும் வரை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தாமே, ஐர்லாந்தின் விடுதலைக்காக மனமுருகிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்க வில்லையா? எனவே, தொழிற் கக்ஷியாரைப் பெயர் சொல்லிக் குறிப்பிட்டதன் காரணம் யாதென்றால், கட்டாய ராணுவ ஸேவகம் சட்டமாகும் பக்ஷத்தில் அது மற்ற திரவிய வந்தர், வியாபாரிகள், உபாத்தியாயர், மந்திரிகள் முதலிய வகுப்பினரைத் தீண்டுவதைக் காட்டிலும் ஏழைத் தொழிலாளிகளையே அதிகமாகத் தீண்டு மென்ற விஷயம் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜின் மனதிலிருந்து, அது

அவரை மீறியே, வேறொரு விஷயத்தைப் பற்றிப் பேசுகையில், அவர் நாவிற்கு வந்து விட்டது. இது நிற்க, ஐர்லாந்தின்விஷயமாக மந்திரி லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லும் விஷயங்களை மட்டும் கவனிப்போம்.

மேலும், ஐர்லாந்திலேயே, (ப்ராடஸ்டெண்ட்) வர்க்கத்தாரின் தொகையும் செல்வாக்கும் மிகுதிப் பட்டதுவும், இங்கிலிஷ் ஆட்சிக்குச் சார்பாக நின்று பொது ஜனங்கள் விடுதலையை எதிர்ப்பதுவுமாகிய அல்ஸ்டர் மாகாணத்தை அதன் ஸம்மதத்துக்கு மாறுக எந்தப் பார்லிமெண்டுக்கும்(அதாவது, ஐரிஷ் பார்லிமெண்டுக்கு) உட்படுத்துவதாக உத்தேசங் கிடையாதென்பதை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் அழுத்திக் கூறினர். அல்ஸ்டர் மாகாணத்துக்குத் தனிப் பார்லிமெண்ட் கொடுப்பதே, ஒற்றுமையை நிலை நிறுத்துவதற்குத் தக்க உபாயமென்று தெரிவித்தார். எந்த ஒற்றுமையை? ஐரிஷ் ஒற்றுமையையா! ஒரு தேசத்துக்கு இரண்டு பார்லிமெண்ட் கொடுத்து, அந்த தேசத்தை ஒற்றுமைப் படுத்துவது விநோதமான வழிதான். லண்டனில் ஒரு பார்லிமெண்ட், மாஞ்செஸ்டரில் ஒரு பார்லிமெண்ட் வைத்து இங்கிலிஷ் ஒற்றுமையை அதிகப் படுத்தலாமென்ற யோசனையை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் அங்கீகாரம் செய்வாரா? ஐரிஷ் சுங்கத் தீர்வையும் வருமான வரியும் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரின் ஆதிக்கத்தின் கீழேதான் வைத்துக் கொள்ளப் போகிறார்களாம். அதுவும் இன்றியமையாததுதானென்பதற்கு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஏதேதோ கொண்டி முகாந்தரம் சொல்லுகிறார்.

இந்தக் கொள்கைகளுடனே இவர்கள் செய்யப் போகிற ஸ்வராஜ்யச் சட்டத்தை ஐர்லாந்து வாஸிகள் தடி முனையாலே கூடத் தீண்டமாட்டார்கள். இதை ஐர்லாந்தில் யாரும் சிறிதேனும் அங்கீகாரம் செய்து கொள்ள மாட்டார்களென்பதை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் காமே அங்கீகரிக்கிறார். அங்ஙனே அவர் அங்கீகாரம் புரிந்தும், அவரும் அவருடைய கூட்டத்தாரும் பார்லிமெண்டில் ஸ்வராஜ்ய மசோதா வொன்றைக் கொண்டு விட்டுக் கொண்டு, முதல் வாதம், இரண்டாம் வாதம் முதலிய விளையாட்டுகளில் ஏன் வீணாக நேரத்தைச் செலவிடுகிறார்களென்ற விஷயம் எனக்கர்த்தமாகவில்லை. ஒரு வேளை ஒரு நிஷ்ப்ரயோஜனச் சட்டத்தை மிகவும் படாடோபங்களுடன் செய்து முடித்துக் கையில் வைத்துக் கொண்டே :—"நாங்களென்ன செய்வோம்? ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கப் போனோம். அவர்கள் வாங்கிக்கொள்ள மறுக்கிறார்கள். எனவே எங்கள் பொறுப்புக் கழிந்தது" என்று சொல்லித் தங்கள் மனஸாக்ஷிக்கும் அமெரிகர் முதலியவர்களின் கூக்குரலுக்கும் ஒரு கழிப்புக் கழித்துவிடலாமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜும் அவருடைய நண்பர்களும் நினைப்பதாகத் தோன்றுகிறது.

ஆனால், இங்ஙனம் நாடகம் காட்டுவதிலிருந்து ஐர்லாந்து வாஸிகள் ஸமாதான மெய்த மாட்டார்களென்பதையும், ஐர்லாந்தில் ஸமாதான மேற்படும் வரை, இங்கிலாந்திற்கு ஸமாதானம் ஏற்பட வழியில்லை யென்பதையும் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஒருங்கே மறந்து விட்டது பற்றி வருத்தப்படுகிறேன்.

விநோதத் திரட்டு

சக்திதாஸன்

19 நவம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 5

(1) ஐரிஷ் நிலைமை

ஐர்லாந்துக்கு விடுதலை கொடுக்கும் பக்ஷத்தில் அது ஐர்லாந்து இங்கிலாந்துக்கு விரோதமான செய்கைகள் செய்வதுமன்றி, இங்கிலாந்துக்குப் பகையான மற்ற நாடுகளும் தீங்குகள் செய்வதற்கோர் தூண்டுதலாக இருக்குமென்ற அர்த்தத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சில தினங்களின் முன்பு காமன்ஸ் ஸபையில் பேசியதைக் குறித்து ஏற்கெனவே நமது பத்திரிகையில் எழுதி யிருக்கிறேன். வேறு பல ப்ரிடிஷ் ராஜதந்திரிகளும் ஐர்லாந்தைக் குறித்துப் பேசுமிடத்தே அந்நாடு இங்கிலாந்தின் பாரிசத்திலுள்ளதொரு சத்துருவென்று சொல்லி வருகிறார்கள். "ஐரிஷ் குடியரசின்" ஜனாதிபதியாகி, அமெரிக்காவுக்குப் போய் வஸிக்கும் மிஸ்டர் டி-வலேரா என்பவருடைய ஸ்தானத்தில் வேலை பார்த்துவரும் மிஸ்டர் ஆர்தர் (g) க்ரி (f) பித்ஸ் என்பவர் ப்ரசுரம் செய்திருக்கும் அறிக்கை யொன்றில் நாம் எதிர்பார்த்த வண்ணமே மேற்கூறிய ப்ரிடிஷ் ராஜ்ய தந்திரிகளின் கொள்கையை மறுத்துப் பேசுகிறார். "நீங்கள் உங்களுடைய கொள்கைகளாலேயே ஐர்லாந்தைப் பகையாகச் செய்து

கொண்டு விட்டீர்கள். உங்களுடைய ராஜ்ய முறையை மாற்றி விடுங்கள். ஐர்லாந்து தேசத்தார் தங்களுக்கிஷ்டமான ராஜாங்க முறைமையை ஏற் படுத்திக் கொள்ளும் உரிமையுடையோ ரென்பதை அங்கீகாரம் செய்து கொள்ளுங்கள். உடனே ஐர்லாந்து உங்களிடம் கட்புள்ள தேசமாய்விடும். உங்களுடன் ஸமாதானத்தோடும் அன்போடும வாழத் தொடங்கும் என்று மிஸ்டர் ஆர்தர் க்ரிபித்ஸ் சொல்லுகிறார். "ஸின்பீன்" கக்ஷியின் தலைவர்களுடைய கருத்து இங்ஙனமிருக்கிறது. எனினும், இந்த முறைப்படி ஐர்லாந்தைத் தனக்குப் பகையென்ற நிலைமையினின்றும் பெயர்த்துத் தோழியாகச் செய்து கொள்ளுதற்குரிய தீர்க்க லோசனை ப்ரிடிஷ் மந்திரிகளுக்கு இப்போதேதற் படுமோ என்பது எனக்கு மிகவும் ஸந்தேஹமாகத் தான் இருக்கிறது.

(2) கிரேக்க தேசத்தின் ஸ்திதி

கிரேக்க தேசத்து ஜனங்கள் ஸமீபத்தில் நடந்த "எலெக்ஷன்"களில் வாக்குக் கொடுத் திருக்கும் மாதிரியைப் பார்க்கையிலே அவர்கள் முன்னிருந்த கான்ஸ்டன் டைன் ராஜாவே திரும் பிப் பட்டத்துக்கு வரவேண்டுமென்று விரும்புகிறார் களென்பது நிச்சயமாகத் தெரிகிறது. இந்தக் கான்ஸ்டன் டைன் ராஜா கெய்ஸர் சக்ரவர்த்தியின் ஸஹோதரிக்குக் கணவரென்பதையும், யுத்த காலத்தில் கெய்ஸருக்கனுகூலமாக இருந்தாரென் பதையும் கருதி, முன்னர் அவரை ராஜ பதவியி

னின்றும் தள்ளியவர்களாகிய இங்கிலாந்து முதலிய நேசக் கக்ஷியார் அவர் மீளவும் கிரேக்க தேசத்து ராஜாவாகக் கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். கான்ஸ்டன் டைனுக்கப்பால் நேசக் கக்ஷியாரின் கைப்பொம்மையாகிய வெனிஜிலாஸ் என்ற கிரேக்க மந்திரியின் உதவியுடனே, கிரேக்க ஆட்சியைத் தங்களிஷ்டப்படி மாற்றிக் கான்ஸ்டன் டைனுடைய இளைய மகனொருவனைப் பட்டத்தில் வைத்திருந்தார்கள். இந்தப் பிள்ளை ஸர்பத்தில் குரங்கு கடித்ததனால் இறந்துபோய் விட்டார். எனவே கிரேக்க தேசம் இப்போது ராஜா இல்லாமல் இருக்கிறது. கான்ஸ்டன் டைன் அரசரின் மற்றொரு குமாரரைப் பட்டத்துக்கிருக்கச் சொல்லியும் தமது பிதாவே ராஜா ஆகவேண்டுமென்று கருதி அவர் ராஜ பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். கிரேக்க ஜனங்கள் கான்ஸ்டன் டைன் ராஜாவையே மறுபடி ஸிம்ஹாஸனத்துக் கழைக்கிறார்கள். எலெக்ஷனில் வெற்றி பெற்ற கக்ஷிக்குத் தலைவராகிய ஸ்ரீமான் குனாரிஸ் என்பவர் கான்ஸ்டன்டைன் ராஜாவுக்கே மறுபடி பட்டங் கொடுக்க வேண்டுமென்ற நிச்சயத்தோடிருக்கிறார். அந்தந்த தேசத்தாரிஷ்டப்படி அந்தந்த ராஜ்யம் ஆளப்பட வேண்டுமென்று நேசக் கக்ஷியார் வாயால் மாத்ரம் சொல்லுகிறார்களேயன்றிக் கார்யத்தில் வரும்போது, உலகத்து ராஜ்யங்களில் பலஹீனத் தோடிருப்பனவற்றை யெல்லாம், இவர்களுடைய ஸௌகர்யங்களுக்கிசைந்தபடி இந் நேசக் கக்ஷியார் களின் அபிப்பிராயங்களுக்கு, பலாத்காரமாக

வேனும் உட்படுத்த முயற்சி செய்கிறார்கள். கிரேக்க தேசத்து ஜனங்கள் தங்களிஷ்டப்படி ராஜா ஏற்படுத்திக் கொள்வதைக்கூடத் தடுத்துப் பேசத் தங்களுக்கதிகாரமுண்டென்று நேசக் கக்ஷியார் நினைக்கிறார்கள். இதினின்றும் கிரேக்கர் நேசக் கக்ஷியின் கூட்டத்தை விட்டுப் பிரிந்து செல்லவும் விரும்பக் கூடுமென்று கருதுகிறேன்.

(3) பாரஸீகத்துக்கு ஸௌக்ய காலம்

பாரஸீகத்திலுள்ள ப்ரிடிஷ் துருப்புகள், இந்தியத் துருப்புகள் முழுதையும் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் அங்கிருந்து மீண்டு வரும்படி கட்டளை பிறப்பித்து விட்டார்களென்று ஸமீபத்தில் வந்த லண்டன் தந்தியொன்றினால் விளங்குகிறது. இது போலவே, மெஸபடோமியாவில் ப்ரிடிஷாரால் அமைக்கப்பட்டுவரும் அராபிய ஆட்சியின் வசம் அக்காட்டை ஒப்புவிப்பதாகிய நோக்கத்துடன் அங்குள்ள இந்திய, ப்ரிடிஷ் ஸைன்யங்களையும் மிகவும் குறைத்துவிடும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சிறிது காலத்தின் முன்பு மடமேற்குப் பாரஸீகத்திலிருந்து போல்ஷவிக் கரைத் துரத்தும் பொருட்டாக ப்ரிடிஷ் படைகள் உபயோகப்படுத்தப் பட்டனவென்று இந்தியா கவர்ன்மெண்டார் வெளியிட்ட அறிக்கையிலிருந்து லண்டன் "டைம்ஸ்" முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளுக்குக் கோபமுண்டு அவை ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரைக் கண்டித்தெழுதுகின்றன. "அந்த அறிக்கை உண்மையா, பொய்யா? பொய்யானால்

அதனை உடனே ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் மறுக்க வேண்டும். அதனை வெளியிட்டது பற்றி இந்தியா கவர்ன்மெண்டாரைக் கண்டிக்கவும் வேண்டும்" என்று லண்டன் "டைம்ஸ்" சொல்லுகிறது. எது எப்படியாயினும், பாரஸீகத்திற்கு இவ்விஷயம் பெரியதோர் நிவர்த்தியாகவே கருதத் தக்கது. ஆரம்பத்தில் இதனால் பாரஸீகத்துக்கு அன்னியர்களிடமிருந்து இடையூறுகளும், கஷ்டங்களும் நேரிடலாம். எனினும், காலக்கிரமத்தில், இதினின்றும் பாரஸீகத்துக்கு வயிற்றுப்பூச்சி வெளியேறியதால் மனிதனுக்கு நலமேற்படுதல்போல முற்றிலும் நன்மைதானேற்படுமென்பது எனக்கு நிச்சயம்.

சுதேசமித்திரன்
பத்திரிகையும் தமிழ் நாடும்

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி

30 நவம்பர் 1920 — விளத்திரி கார்த்திகை 16

வடக்கே, ஸ்ரீ காசியினின்றும், தெற்கே தென் காசியினின்றும், இரண்டு தினங்களின் முன்னே, இரண்டு கடிதங்கள் என் கையில் சேர்ந்து கிடைத்தன. அவை யிரண்டும் சிறந்த நண்பர்களால் எழுதப்பட்டன. அவற்றுள் ஒன்று "பஹிரங்கக் கடிதம்." மற்றது ஸாதாரணக் கடிதம். ஆனல் இரண்டிலும் ஒரே விஷயந்தான் எழுதப்பட்டிருக் கிறது; ஒரே விதமான கேள்விதான் கேட்கப் பட்டிருக்கிறது. அதே கேள்வியைச் சென்னை யிலுள்ள வேறு சில நண்பர்கள் என்னிடம் நேராக வும் கேட்டனர். இந்த நண்பர்களுக் கெல்லாம் இங்கு பொதுவாக மறு மொழி யெழுதிவிடுதல் பொருந்து மென்றும், அவர்களுக்கு இஃது திருப்தி தருமென்றும் நினைக்கிறேன். இவர்களெல்லாரும் என்னிடம் கேட்கும் கேள்வியின் சுருக்கம் பின்வருமாறு:—

"ஒத்துழையாமை விஷயத்தில் உம்முடைய முடிவான கொள்கை யாது? சுதேசமித்திரன் பத்திரிகை ஒத்துழையாமையை பகிரங்கமாகவும்

முடிவாகவும் எதிர்க்காவிடினும், அதில் உள்ளூர அபிமான மில்லாதது போல் காணப்படுகிறதே? அப்படியிருக்க, நெடுங்காலத்து தேசாபிமானியாகிய நீர் இந்த ஸமயத்தில் அப்பதவிகளில் வேலை செய்ய அமர்ந்தது நியாயமா?" என்று கேட்கிறார்கள்.

இவர்களுக்கு நான் தெரிவிக்கும் உத்தரம் பின் வருமாறு. தென் இந்தியாவில் தேசியக் கக்ஷிக்கு மூலபலமாக சுதேசமித்திரன் பத்திரிகையொன்று தான், ஆரம்பமுதல் இன்று வரை, ஒரே நெறியாக, நிலை தவறாமல் நின்று, வேலை செய்துகொண்டு வருகிற தென்ற செய்தியைத் தமிழ் நாட்டில் யாரும் அறியாதாரில்லை. ஸமீபத்தில் நடந்த கல்கத்தா விசேஷ காங்கிரஸ் தீர்மானங்களில் ஒன்றின் விஷயத்தில் மாத்திரம் ஸ்ரீமான் சுதேசமித்திரன் பத்திராதிபர், பெரும் பகுதியாரின் தீர்மானம் இப்போது கார்யத்தில் நிறைவேற்ற முடியாதென்று சொல்லும் ஸ்ரீயுத விபின சந்த்ரபாலர், சித்த ரஞ்ஜனதாஸர் முதலிய பழுத்த தேசாபிமானத் தலைவர்களின் கொள்கையை ஆமோதிக்கிறார். ஒத்துழையாமையைத் தவிர தேச விடுதலைக்குச் சரித்திர பூர்வாங்கமான வேறு வழிகள் இருக்கின்றன. இந்த ஒத்துழையாமை முறையையே மிகவும் உக்ரமாகவும், 'தீர்வை மறுத்தல்' முதலிய அதன் இறுதிப் படிகளை உடனே உட்படுத்தியும், அனுஷ்டித்தால், ஒரு வேளை அன்ய ராஜ்யாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்வதாகிய பயன் அதனால் விளையக் கூடும்.

எனினும் இப்போது காண்பிக்கப் பட்டிருப்ப தாகிய முதற் படியின் முறைகளால் அந்தப் பயன் எய்துவது ஸாத்தியமில்லை. தேசாபிமானிகள் மாத்திரமே சட்ட ஸபை ஸ்தானங்களை பஹிஷ் காரம் செய்ய மற்ற வகுப்பினர் அந்த ஸ்தானங் களை யெல்லாம் பிடித்துக்கொள்வதினின்றும் இந்தி யாவில் ஆங்கில ஆட்சியை ஸ்தம்பிக்கச் செய்தல் அரிதென்று தோன்றுகிறது. இங்ஙனமே வக்கீல் களை தம் உத்தியோகங்களையும், பிள்ளைகள் படிப்பை யும் விடும்படி செய்தல் இப்போது நம்மால் முற்றி லும் ஸாதிக்க முடியாத விஷயமாகத் தோன்றுவ தோடன்றி, அதனால் குறிப்பிட்ட பயனெய்திவிடு மென்று தீர்மானிக்கவும் இடமில்லை.

என்னுடைய சொந்த அபிப்பிராயப்படி, ஸ்வ தேசியக் கொள்கைகளை மேன் மேலும் தெளிவாக வும், உறுதியாகவும், ஜனங்களுக்குள்ளே ப்ரசாரம் புரிவதும், ராஜரீகச் சதுரங்க விளையாட்டில், ஸமா தானமாகவே, எதிரி கலங்கும்படியான தோர் ஆட்ட மாடி, ஸரியான ஸமயத்தில் ஸ்வராஜ்யத்தைக் கட்டி யெடுத்துக் கொள்ள முயற்சி புரிவதுமே—சரித்திர ஸம்மதமான உபாயங்களாகும். இந்த முறையில் ஜனங்கள் சட்டத்தை யுடைக்கவும், அதிகாரிகள் யந்திர பீரங்கிகளை வைத்துக்கொண்டு ஜனங்களைச் சூறையாடுவதும் நேருமென்ற ஸம்சயத்துக் கிட மில்லாமலே வேலை செய்ய முடியும். ஏனைய முறை கள் காட்டைக் குழப்பத்திலே கொண்டு சேர்க்கவும் கூடும். ராஜ வீதி யிருக்கையிலே சந்து, பொந்து களின் வழியாக ஏன் செல்ல வேண்டும்? குழப்பம்

சிறிதேனும் நேராத படிக்கே, நமக்கு ஸ்வராஜ்யம் கிடைக்கும்படி காலதேச வர்த்தமானங்களும், தெய்வ சக்தியும் நமக்கனுகூலமாக இருப்பது வெளிப்படையாகவும் நிச்சயமாகவும் தெரியும் போது, பல இந்தியருக்குப் பிராணச் சேதமும் மற்றப் பெருஞ் சேதங்களும் விளைக்கக் கூடிய குழப்ப வழியில் நாமேன் போக வேண்டும்? ஸ்ரீமான் காந்தியின் கூட்டத்தாரும் உண்மையாகவே தேச நலத்தை விரும்புகிறார்களாதலால், சுதேசமித்திரன் பத்திரிகை அவர்களை எவ்வகையிலும் புண் படுத்த மனமில்லாமல், ஸ்வ ஜனங்களென்ற அன்பு மிகுதியால் அவர்களை இயன்ற வரை ஆதரித்துக் கொண்டும் வருகிறது. அபிப்ராய பேத மூடையவர்களும் தேசாபிமானிகளாக இருப்பாராயின், அவர்களை நாம் மிக மதிப்புடன் நடத்த வேண்டுமென்ற நியாயத்துக்கு, இத்தருணத்தில், சுதேசமித்திரன் பத்திரிகை ஓரிலக்கியமாகத் திகழ்ந்து வருகிறது. இங்ஙனம் பெருந்தன்மை பாராட்டும் பத்திரிகையைக் கூட மஹாத்மா காந்தியின் புது முறையை முற்றிலும் அனுஷ்டித்துத்தீர வேண்டுமென்ற கருத்துடைய என் நண்பர் சிலர் பொதுமையும், தீர்க்காலோசனையுமின்றிப் பல வழிகளிலே பழி கூறி வருவதைக் காணுமிடத்து எனக்கு மிகுந்த மன வருத்த முண்டாகிறது. தேச பக்தர்களுக்குள்ளே மூடிவான கொள்கைகளைப் பற்றியன்று; வெறுமே தற்கால அனுஷ்டானங்களைப் பற்றி- அபிப்பிராய பேத முண்டாகும் போது, உடனே பரஸ்பரம் ஸம்சயப் படுதலும்

பழி தூற்றுதலும் மிகக் கொடிய வழக்கங்களென்று நான் நிச்சயமாகவே கூற வல்லேன். இந்த நிலைமை என் மனதில், சில வைஷ்ணவர்களுக்குள்ளே வடகலை, தென்கலைச் சண்டைகள் நடப்பதையும், வீடு வெள்ளை பூசுதல் விஷயமான ஒரபிப்பிராய பேதத்தைக் கொண்டு தமக்குள்ளே சண்டை செய்து பிரியும் மதி கெட்ட ஸ்திரீ புருஷரின் நடையையும் நினைப்புறுத்துகிறது.

இந்தக் குணத்தை நம்மவர் அறவே விட்டொழித்தாலன்றித் தற்காலம் இந்தியா இருக்கும் நிலையில், நாம் விடுதலைக்காகப் பொது முயற்சி செய்வதில் பல இடுக்கண்கள் விளையக் கூடும். எடுத்ததற்கெல்லாம் ஜாதிப்ரஷ்டம் செய்யத் தீர்மானிக்கும் குணத்தை நாம் ராஜாங்க விஷயங்களில் செலுத்தினால், பெருங் கேடுகள் வந்து சூழுக்கிடும். "உன்வழி உனக்கு; என்வழி எனக்கு; இந்தியாவுக்கு உடனே ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற லக்ஷ்யத்தில் நீயும் நானும் ஒன்று பட்டிருக்கிறோம். எனவே நாம் பரஸ்பரம் இயன்ற வரையிலெல்லாம் உதவி செய்து கொள்ளக் கடவோம். உதவி புரிதல் இயலாத இடத்தே வெறுமே இருப்போம். ஆனால், எக்காரணம் பற்றியும், நம்முள் பகைக்க வேணும், பழி கூறவேணும், ஸம்சயப்பட வேணும், வேறெவ் வகையிலும் இடுக்கண் புரிய வேணும் ஒரு போதும், மாட்டோம்" என்ற பரஸ்பர உணர்ச்சி தேச பக்தர்களுக்குள் எப்போதும் குன்றாதிருக்க வேண்டும்.

இவ்வித உணர்ச்சி நம்மவருள் பலப்பட்டு சுதேசமித்திரன் முதலிய மேன்மையார்ந்த கருவி

களைப் போற்றிக் கையாண்டு, நம்மவரெல்லாரும் கூடி முயன்று, பாரதமாதாவின் ராஜரீக விலங்கு களை நீக்கி, விடுதலை யேற்படுத்திக் கொடுக்கப் போகிற ஸுதினம்—நல்ல நாள்—எப்போது வரப் போகிறதென்பதை ஒவ்வொரு நிமிஷமும் மிக ஆவலுடன் எதிர் பார்த்து நிற்கிறேன்.

விநோதக் கொத்து

சக்திதாஸன்

30 நவம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 16

"மார்னிங் போஸ்ட்" பத்திராதிபரின் கற்பனைசக்தி

"மார்னிங் போஸ்ட்" பத்திராதிபர் மன ஸாக்ஷிப் படி எழுதும் விஷயத்தில் அத்தனை கீர்த்தி யடைந்த வரல்லர். எனினும் அவருடைய ஸமீபக் கற்பனை யொன்றைப் படித்துப் பார்க்கையிலே, அவர் அபாண்டக் கதைகளெழுதும் வித்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அபிவிருத்தி செய்து வருகிறரென்று புலப்படுகிறது. மந்திரி மாண்டேகு இந்தியாவில் ஒத்துழையாமைக் கிளர்ச்சியை அழித்துவிடும் பொருட்டு அடக்கு முறைகளை யதேஷ்டமாக அனுஷ்டித்து, அக்நி மழை பெய்யும் படி இந்தியாவிலுள்ள அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்பது அப்பத்திராதிப ருடைய கருத்து. அங்ஙனம் மாண்டேகு கட்டளை செய்யாமலிருப்பதன் காரணம் யாதென்று அப் பத்திராதிபர் ஆராய்ச்சி செய்து பார்க்கிறார். அந்த ஆராய்ச்சியில் அவர் கண்ட முடிவு மிக மிக விநோத மானது. உலக முழுமையிலுமே ராஜாங்கப் புரட்சி யேற்படுத்த வேண்டுமென்ற கருத்துடைய ருஷிய ஜகாதிபதி ஸ்ரீமான் லெனினுடைய கொள்கைகளில்

மந்திரி மாண்டேகு ஒரு வேளை அனுதாபம் செலுத்துகிறாரோ, எப்படியோ என்று அப்பத்திராதிபர் ஊஹிக்கிறார். உள் நாட்டு ராஜீக விஷயங்களில் ஏற்பட்ட கக்ஷி பேதத்தைக் கருதி இங்ஙனம் படாப் பழிகள் ஏற்படுத்தி விடுவது மேற்றிசையில் சில கீழ்த்தர ராஜ தந்திரிகளுக்குள்ளே வழக்கமாக இயல்பெற்று வருகிறது. அந்த வழக்கம் நம்மவருக்குள்ளேயும் பரவிவிடாமலிருக்க வேண்டு மென்பதே என் ப்ரார்த்தனை.

வெனிஜிலாஸின் கதி

நேசக் கக்ஷியாருக்குச் சார்பாக நின்று, யுத்த காலத்தில் கான்ஸ்டன்டைன் ராஜாவை யவன (கிரேக்க) ஸிம்ஹாஸனத்தினின்றும் தள்ளி, அதனால் உள் நாட்டில் தோன்றிய கிளர்ச்சியை வெளி யுதவியால் நசுக்கித் தம்மைத் தாமே கிரேக்கரின் ஸ்வேச்சாதி பதியாகச் சமைத்துக் கொண்ட மந்திரி வெனிஜிலாஸுக்குக் காலம் சரியான கூலி கொடுத்து விட்டது. கிரேக்க ராஜதானியாகிய அத்தேனியா (ஏதென்ஸ்) நகரத்திலிருந்து, நவம்பர் 18 ஆம் தேதி புறப்பட்ட தந்தியொன்றில், இவர் அந் நாட்டினின்றும், ப்ரிட்டிஷ் போர்க் கப்பல்களின் பாதுகாப்பில் வெளியேறிச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. நேசக் கட்சியார் ஆட்டியபடி யெல்லாம் ஆடும் பொம்மையாகத் தான் இருந்து கொண்டு, அவர்களுடைய பட்டாள உதவியால் தன் இஷ்டப்படி யெல்லாம் யவன தேசத்தை ஒரு பொம்மை போல்

ஆட்டிக்கொண்டு வந்த வெனிஜிலாஸ் இப்போது, ஸமீபத்தில் நடந்த எலெக்ஷனில் தோல்வியடைந்தது மன்றி, எந்த ராஜாவை வீழ்த்துவதில் இந்த மஹான்(!) அன்ய ராஜாங்கத்தாருக்கு உதவி செய்து தன்னுடைய யஜமான விசுவாஸத்தை உலக சரித்திரத்தில் நிலை நிறுத்தி வைத்தாரோ, அந்தக் கான்ஸ்டன்டைன் ராஜாவே மீளவும் பட்டத்துக்கு வர வேண்டுமென்று தேசத்தில் பெரும் பகுதியார் உறுதி செய்து விட்டார்கள். இந்த விஷயத்திலும் நேசக் கக்ஷியின் முக்கிய வல்லரசுகளுக்குள்ளேயே, தெளிவான அபிப்பிராய பேதங்கள் தோன்றியிருக்கின்றன. யுத்தம் முடிந்து, யுத்தத்திலே தாமடைந்த வெற்றியின் லாபங்களைப் பங்கிடத் தொடங்கிய கால முதல் நேசக் கக்ஷி ராஜ்யங்களுக்குள்ளே அபிப்பிராய ஒற்றுமைகளைக் காட்டிலும் அபிப்பிராய பேதங்களே அதிகமாக ஏற்பட்டு வந்திருப்பதைக் கவனிக்கு மிடத்து, அவற்றுடன் இப்போது புதியதோர் ஸங்கடம் நேர்ந்திருப்பதொரு மிகையாகத் தோன்றுது. முழுகக் குளித்தால் பிறகு குளிரில்லை யென்பது தமிழ் வசனம். சில தினங்களின் முன்பு பார்லிமெண்ட் ஸபையில் மிஸ்டர் போனர்லா பேசிய போது, கிரேக்க தேசத்தின் ஸம்ராஜ்ய பதவியைப் ப்ரான்ஸும், இங்கிலாந்தும் கைவிட்டு விட்டதாகவும், ஆதலால் இப்போது அந்நாட்டின் உள் விவகாரங்களில் குறுக்கிடும் அதிகாரம் அவ்வல்லரசுகளுக்குக் கிடையாதென்றும் தெரிவித்தார். ப்ரான்ஸ் தேசத்து மந்திரிகளோ கான்ஸ்டன்டைன்

ராஜாவை மறுபடி கிரேக்க ஜனங்கள் பட்டத்துக்கு வைக்கக் கூடாதென்று பலரிரங்கமாக ஆக்ஷேபித்து வருகிறார்கள். இனி நேசக் கக்ஷியைச் சேர்ந்த மூன்றாவது ஐரோப்பிய வல்லரசாகிய இத்தாலியின் அபிப்பிராயத்தைக் கவனித்தால், பிரான்ஸ் சொல்வதற்கு நேர் விரோதமாக இருக்கிறது.

கான்ஸ்டன்டைன் ராஜா பட்டத்துக்கு வாராமல் தடுக்கும் எந்தக் கார்யங்களிலும் தான் ஸம்பந்தப்பட முடியாதென்று இத்தாலி ஸ்பஷ்டமாகத் தெரிவித்துவிட்டது. அமெரிக்கா—ஐக்யநாடுகளின் இன்னும் நேசக் கக்ஷியுடன் சேர்த்துக் கணக்கிடலாமோ, எப்படியோ, என்றால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. எனினும் அமெரிக்காவை இப்போதும் நேசக் கக்ஷியினருடனே சேர்த்துக் கணக்கிடுதல் பெருங் குற்றமாகாதென்றே நினைக்கிறேன். அந்த அமெரிக்கா இத்தருணத்தில் கிரேக்க ஜனங்களின் ஸ்வ நிர்ணயத்துக்கு மாறான ப்ரான்ஸ் தேசக் கொள்கையை ஆதரிக்குமென்று நான் நினைக்கவில்லை. நேசக் கக்ஷியாரின் பொது நிலைமை இவ்வாறிருக்க, நேற்று வரை அந்தக் கட்சிக்கு கிரேக்க தேசம் ஒரு அலங்காரமாக இருந்தது. தருக்கியின் உடைமைகளிற் சிலவற்றை நேசக் கக்ஷியார் கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தது போல், தனக்குக் கீழ்படுத்திக் கொடுக்கப்பெற்ற கிரேக்க தேசத்து ஜனங்கள், இப்போது மற்ற நேசக் கக்ஷியாரின் அபிப்பிராயங்களைக் குறித்து என்ன நினைக்கிறார்களென்பதைக்

கவனிப்போம். அவர்கள் நேசக் கக்ஷியாரின் எண்ணங்களைச் சிறிதேனும் பொருட்டாக்கவில்லை யென்று தெரிகிறது.

நேற்று மித்திரனில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கும் ராய்ட்டர் தந்தி யொன்றில், கிரேக்க ஜனங்களும், கவர்ன்மெண்டாரும், கான்ஸ்டன்டைன் ராஜா திரும்ப வருவதைக் குறித்து ஸந்தோஷக் கொண்டாட்டங்கள் நடத்தி வருகிறார்களென்றும், எல்லா ஸர்க்கார் கச்சேரிகளிலும், நியாய ஸ்தலங்களிலும் கான்ஸ்டன்டைன் ராஜாவின் சித்திரங்களைத் தொங்கவிட்டு வைக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் கட்டளை பிறப்பித்திருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. மேலும் லண்டனிலுள்ள கிரேக்க ராஜாங்கத்தின் முக்ய ஸ்தானாதிபதியாக வேலை பார்த்தவரும், சென்ற பதினேழு வருஷங்களாக லண்டனிலிருந்து, கிரேக்க தேசத்துக்கும் இங்கிலாந்துக்கும் நட்புறுதியுண்டாகுமாறு பாடுபட்டு வந்தவருமாகிய ஸர் ஜான் ஸ்டவ்ரிட் என்பவர் வெனிஜிலாஸுக்கு ஒரு அனுதாபத் தந்தியனுப்பியது காரணமாக அந்த ஸ்தானாதிபதியை இப்போதுள்ள கிரேக்க கவர்ன்மெண்டார் உத்யோகத்தைவிட்டு நீக்கியதாயும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வெனிஜிலாஸ் மந்திரியைப் போலவே ருஷியாவை நேசக் கக்ஷிக்கு வாலாக்கிவிட முயற்சி செய்த கெரன்ஸ்கி என்ற ருஷிய மந்திரியை மித்திரன் நேயர்கள் மறந்திருக்க மாட்டார்களென்று நம்புகிறேன். ஒரு காலத்தில், கெரன்ஸ்கியை ருஷியா தேசத்து நெப்போலியன் என்று

சில ஆங்கிலேயப் பத்திராதிபர் முதலியோர் சொல்லி வந்தனர். இன்று அந்தக் கெரன்ஸ்கியின் பெயரையே உலகத்தார் மறந்துவிடக்கூடிய நிலைமை வந்துவிட்டது. மிஸ்டர் வெனிஜிலாஸ், மிஸ்டர் கெரன்ஸ்கி இவ்விருவரில் ஸ்வதேசாபிமானப் பரிசு யாருக்கு கொடுக்கலாமென்று யோசித்தால் அந்த யோசனையில் ஒரு முடிவுக்கு வருதல் ஸாத்யமில்லை யென்றே தோன்றுகிறது.

ஜெர்மனியை ஸர்வதேச ஸங்கத்தில் சேர்த்துக் கொள்ளலாமா?

ஸர்வ தேச ஸங்கத்தில் ஜெர்மனியைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று, நார்வே, ஸ்வீடன், தென் ஆபிரிகா, ஸ்விட்ஜர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், தென் அமெரிக ராஜ்யங்களிற் பல, இங்கிலாந்து என்ற தேசங்கள் சொல்லுவதாகவும், ஜப்பான், சீன தேசங்கள் இங்கிலாந்தின் கருத்தையே தழுவி நிற்குமென்று நம்பப்படுவதாகவும், ப்ரான்ஸ், பெல்ஜியம், போர்த்துகல், போலந்து, ஆஸ்த்ரேலியா, நியூஜிலாந்து, கானடா, ஜெக்கோஸ்லாவியா என்னும் அரசுகள் ஜெர்மனியைச் சேர்க்கலாகாதென்று தடுப்பதாகவும், ஸமீபத்தில் கிடைத்த ராய்ட்டர் தந்தியொன்று சொல்லுகிறது. இதனிடையே, தமக்குள் பரஸ்பரம், "அதிகாரப் பத்திரம்" கொடுத்துக் கொண்டு நேசக் கக்ஷியார் தம் இஷ்டப்படி வெளிநாடுகளை ஆண்டுவர முயல்வதில் அனுஷ்டிக்கப்படும் தற்கால முறைமையை ஜெர்மனி எதிர்ப்பதாகவும், தானிழந்த குடியேற்ற

நாடுகளின் எதிர்கால நிலை தற்காலத்தில் அவற்றைக் கைப்பற்றி யாள்வோரால் நிர்ணயிக்கப்படத் தக்கதன்றெனவும், ஸர்வதேச ஸங்கத்தாராலேயே மூடிவு செய்யப்படவேண்டு மெனவும் ஜெர்மனி சொல்வதாகவும், வேறொரு தந்தியிலே கூறப்படுகிறது. ஜெர்மனி ஸர்வதேச ஸங்கத்தில் சேரும்படி ஏற்பாடு செய்வார்களோ மாட்டார்களோ அதைக் குறித்து எனக்கதிகக் கவலையில்லை. எப்படியாவது ஆசியா மூதலிய வெளிக் கண்டங்களின் நாடுகளை ஐரோப்பியர் தமதிஷ்டப்படி பரஸ்பரம் ''அதிகாரப் பத்திரம்'' எழுதிக் கொடுத்து அநீதியாக ஆள்வ தென்ற ஏற்பாடு சிதறிப் போகவேண்டு மென்பதே என் பிரார்த்தனை. அந்தப் பிரார்த்தனை நிச்சயமாக விரைவில் நிறைவேறு மென்பதற்குப் போதிய அடையாளங்கள் தற்கால ஐரோப்பாவின் நிலைமையிலே காணப்படுகின்றன.

இதில் மிகவும் ஆறுதலுக்குரிய அம்சம் எது வெனில் பங்கிடற்குரிய ராஜ்யங்களின் தொகை மிகக் குறைவாகவும், அவற்றைப் பங்கிட்டாள விரும்பும் ராஜ்யங்களின் தொகை மிக அதிகமாகவும் ஏற்பட்டிருத்தலேயாம். ஊரிரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். கூத்தாடிகளுக்குள்ளே கக்ஷி பேதங்கள் மிகுதிப்பட்டால் ஊராருக்கு நல்லது.

வெறும் வேடிக்கை

காளிதாஸன்

1 டிசம்பர் 1920 *ரௌத்திரி கார்த்திகை* 17

குறிப்பு:—இத்தலைப்புடைய கட்டுரையில் ஜாதிபேத விநோதங்கள், திராவிடக் கக்ஷி, ஜப்பான் தேசத்து திருஷ்டாந்தம் என்ற மூன்று பகுதிகள் உள்ளன. அவற்றில் முதற் பகுதி தனிக் கட்டுரையாக **பாரதி நூல்கள்** மூன்றும் தொகுதியில் சமூகம என்ற பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆதலால் மற்ற இரு பகுதிகளை மட்டும் இங்கே தருகிறேன்.

திராவிடக் கக்ஷி

நான், ஸமீபகாலம் வரை, திருநெல்வேலி ஜில்லாவின் மேற்கோரத்தில் ஒரு நாகரிகமடைந்த கிராமத்தில் குடியிருந்தேன். பொதுப்படையாக நல்ல நாகரிகமடைந்த அந்த கிராமத்துக்கு ஜாதி பேத விரோதங்கள் ஒரு களங்கமாக ஏற்பட்டிருக்கின்றன. கிறிஸ்தவப் பாதிரிகளின் செல்வாக்கு இந்தியாவில் மற்றெந்தப் பகுதியைக் காட்டிலும் அதிகமாகச் சென்னை மாகாணத்திலும், இந்த மாகாணத்தில் மற்றப் பிரதேசங்களைக் காட்டிலும் விசேஷமாகத் திருநெல்வேலி ஜில்லாவிலும் ஏற்பட்டிருக்கிறதென்ற செய்தி நம்மவரில் பெரும்பான்மையோருக்கும் தெரிந்திருக்கக்கூடும். ஆதலால், இந்த ஜில்லாவில் படித்த பிள்ளைகளுக்குள் அந்த ஜில்லாவில் அநேகர் கிறிஸ்தவப் பாதிரிகள் உபதேசத்துக்கு

அதிகமாகச் செலவி கொடுத்துவிட நேர்ந்ததென்று நான் தெரிவிப்பது பலருக்கோர் வியப்பாகத் தோன்றுது. ஹிந்து மதத்தை வேரறுத்து, இந்தியாவில் கிறிஸ்து மதத்தை ஊன்றுவதே முக்ய நோக்கமாகக் கொண்டு வேலை செய்துவரும் அப்பாதிரிகள், ஹிந்து மதத்துக்கு பிராமணரே இதுவரை காப்பாளிகளாக இருந்து வருதல் கண்டு, அந்தப் பிராமணரை மற்ற ஜாதியார் பகைக்கும்படி செய்தால் தம்முடைய நோக்கம் நிறைவேறுமென்று யோசிக்கத் தொடங்கினர்கள். இங்ஙனம், மற்ற ஜாதிப் பிள்ளைகளுக்கு ஹிந்து மதத்தில் துவேஷபுத்தியுண்டாக்குவதற்கு அடிப்படையாக பிராமணத் துவேஷம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்ற கருத்துடையோர் சென்னை நகரத்து முக்யமான கல்வி ஸ்தலங்கள் சிலவற்றிலுமிருந்து நெடுங்காலமாக வேலை செய்து வருகிறார்கள். காமம், குரோதம் முதலிய தீய குணங்களை வேதம் அஸுர ரென்று சொல்லி, அவற்றைப் பரமாத்மாவின் அருள் வடிவங்களாகிய தேவர்களின் உதவியால், ஆரியர் வெற்றி பெறுதற்குரிய வழிகளைப் பற்றிப் பேசுகிறது; இந்த உண்மையறியாத ஐரோப்பிய ஸம்ஸ்க்ருத வித்வான்கள் சிலர் அஸுரர் என்று முற்காலத்தில் ஒரு வகுப்பு மனிதர் இந்தியாவிலிருந்தார்களென்றும், அவர்களை ஆரியர் ஜயித்து இந்தியாவின் ராஜ்யத்தைப் பிடித்துக் கொண்டு, அதன் பூர்வக் குடிகளைத் தாழ்த்திவிட்டனரென்றும் அபாண்டமான கதை கட்டிவிட்டார்கள். இதை மேற்கூறிய கிறிஸ்தவப் பாதிரிகள் மிகவும்

ஆவலுடன் மனனம் செய்து வைத்துக் கொண்டு தம்மிடம் இங்கிலிஷ் படிப்புக்காக வரும் பிள்ளைகளில் பிராமணரைத் தவிர மற்ற வகுப்பினர்-தென் இந்தியாவில் மாத்திரம் - அஸுர வம்சத்தாரென்றும், ஆதலால் பிராமணர் இவர்களுக்குப் போன யுகத்தில் (வேதமெழுதிய காலத்தில்!) விரோதிகளாக இருந்தனரென்றும், ஆதலால் இக்காலத்தில் அந்தப் பிள்ளைகள் அஸுரக் கொடியை மீளவும் தூக்கி பிராமணரைப் பகைக்கவேண்டுமென்றும் போதிக்கத் தொடங்கினர்கள். இந்தியாவிலுள்ள ஜாதி பேதங்களைத் தீர்த்துவிட்டு இங்கு ஸமத்வ தர்மத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அந்தப் பாதிரிகள் இந்த வேலை செய்யவில்லை. ஹிந்து மதத்துக்குக் கேடு சூழ வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்தார்கள். ஆனால், இதில் மற்றொரு விநோதமுண்டு. அமீதியாதென்றால் இந்தியாவில் பிராமணர்களிலேயே மூக்காற் பங்குக்குமேல் பழைய சுத்தமான ஆர்யர்களல்லரென்றும் விசேஷமாகத் தென் இந்தியாவில் இவர்கள் பெரும்பகுதி அஸுர வம்சத்தாருடன் கலந்துபோனவர்களின் சந்ததியாரென்றும், அப்பாதிரிகளும் அவர்களுக்கு இந்த அம்சத்தில் குருக்களான ஐரோப்பிய பண்டிதரும் தெரிவிக்கிறார்கள். எனவே பிராமணராகிய நாங்கள் இப்போது உங்களைப்போலே அஸுர ராக்ஷஸராய் விட்ட பிறகும் நீங்கள் எங்களைப் பகைக்கவேண்டுமென்று அந்தப் பாதிரிகள் போதிப்பது முன்னுக்குப்பின் முரண்படுகிறதன்றோ? மேலும் இந்த

"திராவிடர்" என்போர் அஸுர, ராக்ஷஸர்களின் ஸந்ததியாரென்பதும் அவர்களிடமிருந்து பிராமணர் ராஜ்யம் பிடித்த கதையும் யதார்த்தமென்று வேடிக்கைக்காக ஒரு க்ஷணம் பாவனை செய்து கொள்வோம். அப்படிக்கிருந்தாலும் அந்த ஸம்பவத்தில் பிராமணரின் மந்திரத்தால் அஸுரர்களை ஜயித்ததாகத் தெரிகிறதேயன்றி மாக்ஸ் முல்லரின் கருத்துப்படிக்கும் பிராமணர் அரசாண்டதாகத் தெரியவில்லை. பிராமணர்களையடுத்து, க்ஷத்ரியர்களே ராஜ்யமாண்டனரென்று தெரிவிக்கப்படுகிறது. தவிரவும் அந்த ஸம்பவம் நடந்து இப்போது புராணங்களின் கணக்குப்படி பார்த்தால் பல லக்ஷங்களோ கோடிகளோ வருஷங்கள் கடந்து போயின. ஐரோப்பியப் பண்டிதரின் கணக்குப்படி பார்த்தாலும் எண்ணாயிர வருஷங்களுக்குக் குறைவில்லை. இப்படியிருக்க அந்தச் சண்டையை மறுபடி மூட்டுவது என்ன பயனைக் கருதி? யதார்த்தமாகவே, இந்தியா தேச சரித்திரத்தில் ஹிந்துக்களுக்குள்ளேயே தமிழருக்கும் தெலுங்கருக்கும், தெலுங்கருக்கும் ஒட்டரருக்கும், ஒட்டரருக்கும், வங்காளிகளுக்கும், வங்காளிகளுக்கும் ஹிந்துஸ்தானிகளுக்கும் பஞ்சாபிகளுக்கும், பஞ்சாபிகளுடன் ராஜபுத்திரருக்கும், இவர்களுடன் மஹாராஷ்ட்ரருக்கும், மஹாராஷ்ட்ரருடன் ஏறக்குறைய மற்றெல்லாப் பிரிவினருக்கும், இவற்றைத் தவிர ஹிந்துக்களுக்கும் மஹமதியருக்கும் இடையே கணக்கற்ற யுத்தங்களும், அரசு புரிந்ததும் அடக்கியாளுதலும் நடந்து வந்திருக்கின்றன. இதுபோல்,

ஒரு நாட்டின் உட்பகுதிகளுக்குள் யுத்தங்கள் இந்தியாவில் மாத்திரமன்றி, ஆஸ்திரேலியா முதல் இங்கிலாந்து வரையுள்ள ஸகல தேசங்களிலும் ஓயாமல் நடந்து வந்திருப்பதாகச் சரித்திரம் தெரிவிக்கிறது. இங்ஙனம் நம் நாட்டில், சமீபகால சரித்திரத்திலேயே நிகழ்ந்த எண்ணற்ற போராட்டங்களை மறந்து இன்று தெலுங்கர், தமிழர் முதலிய ஹிந்துக்களும் மஹமதியரும் ஸஹோதரரைப்போல் வாழவேண்டுமென்ற உணர்ச்சி பரவியிருக்க, எண்ணாயிர வருஷங்களுக்கு முன் "மந்திரங்களாலும், யாகங்களாலும், அஸுர, ராக்ஷஸர்களை ஜயித்த பிராமணர்களை மாத்திரம் நம்மவர் எக்காலத்திலும் க்ஷமிக்காமல் உலக முடிவு வரை விரோதம் செலுத்திவர வேண்டுமென்று சொல்லுதல் பெரும் பேதைமையன்றோ? தவிரவும், இந்த நவீன "அல்லாதார்" தாங்கள் அஸுர வம்சத்தாரென்று சொல்வதே முற்றிலும் தவறென்பதை ஏற்கெனவே நன்கு நிரூபணம் செய்திருக்கிறேன். ஜாதி பேதங்களின் கொடுமைகளை உடனே அழித்துவிட வேண்டுமென்பதை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன்.

ஜப்பான் தேசத்து திருஷ்டாந்தம்

ஜப்பானில் தீண்டாத வகுப்பினருட்படப் பலவித ஜாதி பேதங்களிருந்தன. எனினும் காலஞ் சென்ற மிகாடோ சக்ரவர்த்தி நவீன உலகத்தின் அவஸரங்களைக் கருதி அங்கு ராஜாங்க விஷயங்களில் ஜாதிபேதங்களைக் கருதக்கூடாதென்று

சட்டஞ் செய்தார். எத்தனையோ நூற்றாண்டுகளாக இயல்பெற்று வந்த பேதக் கொடுமைகள் அங்கு ராஜீகத்துறையில் மட்டுமேயன்றி, ஸமூஹ வாழ்விலும் புலப்படாதபடி அதிசீக்கிரத்தில் மறைந்து போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவுக்கும் இதுதான் வழி. நாம் ஏற்கெனவே தெரிவித்தபடி ஸ்வராஜ்யம் கிடைத்தால் இந்த ஜாதி பேதத் தொல்லைகளையெல்லாம் சட்டம் போட்டு நீக்கிவிடலாம். இப்போதுள்ள அதிகாரிகள் இவ்விதமான சட்டம் ஏற்படுத்துவார்களென்று எதிர் பார்ப்பதே தவறு. ஆதலால் இந்தியாவின் ஸமூஹ வாழ்க்கையில் ஸமத்வமேற்படுத்த விரும்புவோர் முதலாவது ராஜீகத்துறையில் ஸமத்வமேற்படுத்த முயலும் "காங்ரஸ்" கக்ஷியாருடன் சேர்ந்து வேலை செய்யவேண்டும் என்று கருதுகிறேன்.

விநோத விஷயங்கள்

காளிதாஸன்

2 டிசம்பர் 1920 ரௌத்திரி கார்த்திகை 18

ஸர். ஹாமர் க்ரீன்வுட்டின் உபதேசம்

காரியமாக வேண்டுமானால் குதிரையின் காலையும் பிடிக்கலாமென்ற ராஜ்ய நீதியை ஐரிஷ் மந்திரியாகிய ஸர் ஹாமர் க்ரீன்வுட் நன்கு படித்து வைத்திருக்கிறார். சில தினங்களின் முன்பு ப்ரிடிஷ் பார்லிமெண்ட் ஸபையில் இவர் பேசியபோது ஐர்லாந்திலுள்ள ரோமன் கத்தோலிக்க குருக்களுக்கு ஒரு விஞ்ஞாபனம் செய்திருக்கிறார். எதைப் பற்றியெனில், முன்பு மஹாயுத்த காலத்திலே ஐர்லாந்தில் கட்டாய ராணுவ ஸேவகம் ஏற்படுத்துவதை ஐர்லாந்தின் கத்தோலிக்க குருக்கள் எத்தனை தீவிரமாகவும் உக்ரமாகவும் எதிர்த்தார்களோ, அத்தனை உக்ரமாகவும், தீவிரமாகவும் ஐர்லாந்தில் இப்போது நடக்கும் ஸின்ஃபீன் கொலைகளை அவர்கள் எதிர்த்து வேலை செய்ய வேண்டுமென்றும், ஜனங்கள் தங்களிடமுள்ள துப்பாக்கி முதலிய ஆயுதங்களை குருக்களின் வசம் ஒப்புவித்துவிட வேண்டுமென ஆலயங்களில் செய்யப்படும் உபதேசங்களிடையே அவர்கள் ஜனங்களைத் தூண்டுதலே நல்ல உபாயமென்றும் மந்திரி ஹாமர் க்ரீன்வுட் தெரிவிக்கிறார். ஆமாம்! வாஸ்தவந்தான்! ஆனால்,

முன்பு, கட்டாய ராணுவ சேவக முறைமையை ஐரிஷ் கத்தோலிக்க குருக்கள் எதிர்த்த காலத்தில் அவர்களுக்கு ஸர் ஹாமர் க்ரீன்வுட் எவ்வளவு தூரம் ஆமோதிப்பும் உதவியும் செய்தாரென்ற விஷயத்தை நாம் சற்றே தெரிந்து கொள்ள விரும்பு கிறோம். மேலும், இங்ஙனம் ஜனங்களிடமிருந்து பறித்துக் கொண்ட ஆயுதங்களை அந்த குருக்கள் அப்பால் கடலில் எறிந்துவிட வேண்டுமா, அல்லது ஆலயங்களிலேயே வைத்துப் பூஜை செய்ய வேண்டுமா, அல்லது அவற்றை ஆங்கிலேயப் போலிஸாரிடமும் சிப்பாய்களிடமும் ஒப்புவித்து ஐரிஷ் ஜனங்களையே வேட்டையாடும்படி கேட்டுக் கொள்ள வேண்டுமா என்ற விஷயத்தில் மந்திரி க்ரீன்வுட் தம்முடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்காமல் இருந்தது பற்றி வருத்தப்படுகிறேன்.

2. மிகவும் நன்றி தெரிவிக்கிறேம்!

சென்ற நவம்பர் 25-ந்தேதி யன்று, மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஐர்லாந்தில் ராணுவச் சட்ட மேற் படுத்துதல் இப்போது விரும்பத்தக்கதன் றென்ப தாகவே மந்திரி ஸபையார் முடிவாகத் தீர்மானம் செய்து விட்டன ரென்றும், அது விரும்பத்தக்க தாகவும் பயனளிக்கத் தக்கதாகவும் தோன்றிய வுடனே கவர்ன்மெண்டார் அதைப் பிரயோகம் செய்து விடுவார்களென்றும் அறிவித்தார். இந்த தயவின் பொருட்டு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும், ப்ரிடிஷ் மந்திரி ஸபையாருக்கும் ஐர்லாந்து வாஸி களும், உலகத்தாரும், மிகமிக நன்றி செலுத்தக்

கடமைப் பட்டிருக்கிறார்களென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் தாமரைப் பூவைச் சித்திரிப்பதும் தங்கத்திலே தங்க மூலாம் பூசுவதும் மிகையாகுமென்று ஆங்கிலேய மஹா கவியாகிய ஷேக்ஸ்பியர் சொல்லியது போல் இப்போது ஐர்லாந்தில் நடைபெறும் ஆங்கில ஆட்சி முறையில் ராணுவச் சட்டத்தைக் கொண்டு சேர்த்தால் மிகையாகுமென்று தோன்றுகிறது. ராணுவச் சட்டத்தின் ஆதிக்கத்தில் ஐரிஷ் ஜனங்களின் ஸ்வதந்த்ரங்களை இப்போதைக் காட்டிலும் அதிகமாகக் கட்டுப்படுத்த முடியுமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் நினைக்கிறாரா?

3 ப்ரான்ஸ் தேசத்தின் குட்டிக்கரணம்

ப்ரான்ஸ் தேசத்து வியாபாரிகளும் தொழிற் சாலைத் தலைவர்களும், ருஷ்யாவுடன் வியாபார ஸம்பந்தங்களேற் படுத்திக் கொள்ள அனுமதி கொடுத்துவிட வேண்டுமென்று ப்ரெஞ்ச் கவர்ன்மெண்டார் முடிவான தீர்மானஞ் செய்து விட்டதாக ராய்ட்டர் தந்தியொன்று தெரிவிக்கிறது. எனவே இங்கிலாந்தும் போல்ஷவிக்கர்களுடன் வியாபாரம் பண்ணுவதாகச் செய்து கொண்ட தீர்மானம் உறுதியாய் விடுமென்பதில் ஸந்தேஹமில்லை. இங்ஙனம் ருஷியாவுடன் ஆங்கிலேயர் வியாபாரஞ் செய்யலாகாதென்று வற்புறுத்துவதில் லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபர் முதலிய ஆங்கிலத் தலைவர் பலர் மிகமிஞ்சிய காஷ்கமும், மையும், நேரமும் செலவிட்டிருக்கிறார்கள். காலக் கிரமத்தில் நடந்து தீர வேண்டிய கார்யமொன்றை மேற்படி "டைம்ஸ்"

பத்திராதிபர் முதலாயினோர் வீணுகக் கடத்திக் கொண்டு போக முயற்சி புரிந்தனர். இன்றைக் கில்லாவிட்டால் நாளை அல்லது மறுநாள், அல்லது அதற்கடுத்த நாள், ருஷியாவுடன் வியாபாரந் தொடங்குதல் இன்றியமையாததாய் விடும். ருஷியா சிறிய தேசமா? ஐரோப்பாவில் முக்காற் பங்கு ருஷியா. அந்த தேசத்தை எத்தனை காலம் ஜாதி ப்ரஷ்டம் பண்ணி வைக்க முடியும்? அவர்களுடைய ராஜாங்கக் கொள்கைகள் இங்கிலாந்தில் பரவு வதற்கு வியாபார சம்பந்தங்கள் ஸாதனமாகக் கூடுமென்று இங்கிலாந்திலுள்ள பழங் கக்ஷியார் அஞ்சுகிறார்கள். என்ன செய்யலாம்? லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபருக்கு ஸம்மத மில்லாத கொள்கைகள் இங்கிலாந்தில் புகாதபடி தடுப்பதற் காக, ப்ரிடிஷ் ஜனங்கள் ஒரு மகத்தான தேசத் துடன் வியாபாரம் செய்வதால் நேரும் ஸௌகர்யங் களை எத்தனை காலம் நிறுத்தி வைக்க உடம்படுவார் கள்? ஆங்கில கவர்ன்மெண்டார் ருஷியாவுடன் வியாபார சம்பந்தங்கள் தொடங்கும்படி ஆங்கில ஜனங்களுக்கு அனுமதி கொடுத்தவுடனே நம்மு டைய இந்தியா கவர்ன்மெண்டாரும் இங்குள்ள வியாபாரிகளுக்கு அதே அனுமதி கொடுப்பார் களென்று நம்புகிறேன். அதன் மூலமாக ருஷியக் கொள்கைகள் இந்தியாவிலும் பரவிவிடக் கூடு மென்று அஞ்சுவோர் யாரேனுமிருப்பாராயின், அந்த அச்சம் அநாவசிய மென்றும் ஆதலால் அதனை விட்டொழித்து விடவேண்டு மென்றும் அவர்களுக்கு நான் விண்ணப்பம் செய்து கொள்ளு

கிறேன். ருஷியக் கொள்கைகள் ருஷிய வியாபார ஸம்பந்தங்களால் ஒரு வேளை இங்கு பரவுமிடத்தே அவற்றை எதிர்த்தடித்து வேலை செய்ய நம்முடைய இந்தியா கவர்ன்மெண்டாரிடமுள்ள பப்ளிஸிடி பீரோ என்ற விளம்பர ஸபையாரால் முடியாதா? நாமேன் வீணுகப் பயப்பட வேண்டும்?

4. "விளம்பரசபை"யின் தமிழ்

ராஜாங்கத்தாரால் நியமிக்கப் பட்டிருக்கும் விளம்பர ஸபையார் பத்திரிகை படிப்போருக்காகவும், பொது ஜனங்களுக்காகவும், அடிக்கடி துண்டுப் பத்திரிகைகள் முதலியன ப்ரசுரம் செய்து வருதல் நேசர்களுக்குத் தெரிந்த செய்தியேயாம். ஆனல் இந்த ஸபையாரின் ப்ரசுரங்களில் உள்ள இலக்கணத் தவறுகளுக்கும், பிரயோகத் தவறுகளுக்கும் கணக்கேயில்லை. தமிழ் பாஷையில் வெளி வரும் ப்ரசுரங்களைப் பற்றி மாத்திரம் நான் இங்கு பேசுகிறேன். பெரும்பாலும், மற்ற தேச பாஷைகளிலும் இதே மாதிரியாகத்தான் இருக்கக் கூடுமென்று ஸம்சயிக்கிறேன்.

பொதுவாக ராஜாங்கத்தாரின் கெஜட்டுகள், நியாய ஸ்தல மொழி பெயர்ப்புகள் முதலிய முக்யமான தமிழ் ப்ரசுரங்களில் வழுக்கள் நிறைந்ததாய், ஸதாரணத் தமிழருக்கர்த்தமாக வழியில்லாத தமிழ் பாஷையே வழங்கி வருதல் ப்ரஸித்தம். எனினும், ஜனங்களுக்கர்த்தந் தெரியாமல் "கெஜட்" வர்த்தமானங்கள் ப்ரசுரிப்பதைக் காட்டிலும், கக்ஷிப் பிரதிகக்ஷிகளும், தர்க்கங்களும் நடத்தி ஜனங்களுக்கு

அபிப்பிராய மாறுதலுண்டாகும்படி சர்க்கார் வக்கீல் வேலை செய்ய வந்த இடத்தில் ஜனங்களுக்கு விளங்காத, இலக்கணத் தவறுகள் நிறைந்த பாஷையை வழங்குதல், நூறு மடங்கு அதிகப் பரிஹாஸத்துக் கிடமாகு மென்பதை ராஜாங்கத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

5. "ஸின்பீன்" வேட்டை

ஐர்லாந்தில் இப்போது குடியரசு முறையைக் கைக் கொண்டிருக்கும் "ஸின்பீன்" என்ற ஸ்வாதீனக் கக்ஷியாரை ஐரிஷ் அதிகாரிகள் வெகு கோலாஹலமாக வேட்டையாடி வருகிறார்கள். வழக்கம் போலவே, கொலை செய்த குற்றவாளிகள் ஒரு புறமிருக்க, அந்தக் கொலைகளைத் தம் உபதேச முதலியவற்றால் தூண்டியதாகக் கருதப்படும் ஜனத் தலைவர்களைப் பிடித்தடைப்பது மிகவும் எளிதாதலால், ஐரிஷ் அதிகாரிகள் இத்தலைவர்களை மிகவும் சுறுசுறுப்பாகக் கைதி செய்யத் தொடங்கி விட்டனர். ஐரிஷ் குடியரசுத் தலைவரான மிஸ்டர் டிவலேரா அமெரிகாவிலிருப்பதால், அவருக்குப் பிரதியாக ஐரிஷ் குடியரசின் ஜனாதிபதி ஸ்தானத்தை வகித்து வரும் மிஸ்டர் ஆர்தர் க்ரிபித் என்பவர் சென்ற வெள்ளிக்கிழமை (26-நவம்பர்) கைதி செய்யப்பட்டார். இவர் ப்ரிட்டிஷ் காமன்ஸ் ஸபை மெம்பர்களில் ஒருவர். மறுநாள், நவம்பர் 27-ஆம் தேதியன்றைக்கும், அதற்கடுத்த 28-ஆம் தேதியிலும் மிஸ்டர்

ஆர்தர் க்ரிபித் ஐரிஷ் நிலைமையைக் குறித்து மாஞ் செஸ்டர் நகரத்தில் உபந்யாஸங்கள் செய்யப்போவ தாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்ஙனம் அவரைப் பேச விட்டால் அதினின்றும் ஜனங்களுக் குள் ராஜாங்கத் துவேஷம் பரவக்கூடும் என்று சொல்லி உள்நாட்டு மந்திரி அந்த உபந்யாஸங்களைத் தடுத்து விட்டார். அதனை யடுத்து மிஸ்டர் க்ரிபித் தைச் சிறைப் படுத்தவும் செய்திருக்கிறார்கள். இவரை யன்றி வேறிரண்டு பார்லிமெண்ட் மெம்பர் களும், ஒரு உபாத்யாயரும் உட்பட்ட மற்றுஞ் சில ஸின்பீன் தலைவர்களையும் பிடித்து வைத்திருக் கிறார்கள். மிஸ்டர் ஆர்தர் க்ரிபித்தை ஜனங்களுக் குத் தெரியாமல் எங்கேயோ ரஹஸ்யமாகக் கொண்டு போய் வைத்திருப்பதாகத் தெரிகிறது. இங்ஙனம் மிஸ்டர் க்ரிபித்தை இங்கிலாந்தில் பிடித்த தற்கு முகாந்தரங் கூறுமிடத்தே, டப்ளின் நகரத்தில் அவருடைய வீட்டைப் போலீஸார் சோதனை யிட்டதா கவும் அப்போது மேலும் ஆராய்ச்சி நடத்துவதற் கிடமான சில முக்யக் காயிதங்கள் போலீஸார் வசம் கிடைத்ததாகவும் அந்த ஆராய்ச்சி முடிவுவரை அவரை அடைத்து வைத்திருக்கப் போவதாகவும், மந்திரி ஹாமர் க்ரீன்வுட் சொன்னார். ஆனால், அதே காலத்தில் "ஸின்பீன்" கக்ஷியார் தாங்கள் இங்கி லாந்துடன் யுத்தம் நடத்தி வருகிறபடியால் தாங்கள் பிடிபட்ட இடத்தே தங்களை யுத்தக் கைதிகளாக நடத்த வேண்டுமென்று ஐரிஷ் தலைவர் சொல்வதை ஒருவாறு கவர்ன்மெண்டார் அங்கீகாரம் செய்து கொண்டே இவ்விதம் வேலை செய்து வருவதாகவும்,

அக்கொள்கைக் கிணங்கவே, இப்போது பிடிபட்டிருக்கும் ஐரிஷ் தலைவர்களை பந்தோபஸ்தில் வைத்து யுத்தக் கைதிகளைப்ப நடத்த உத்தேசங் கொண்டிருப்பதாகவும், ஒரு தந்தி மூலமாக அறிகைகையிடப்படுகிறது. இங்ஙனம், ஐர்லாந்தில் நடக்கும் போராட்டத்தை ஆங்கிலோ-ஜெர்மானிய யுத்தம் போல் ஓர் ஆங்கிலோ-ஐரிஷ் யுத்தமாக பாவித்து நடத்த வேண்டுமென்பது ப்ரிட்டிஷ் மந்திரிகளின் உண்மையான நோக்கமாயின், அந்த நோக்கத்தை வெளி யுலகத்தார் அதிகமாகக் கொண்டாட மாட்டார்களென்று தோன்றுகிறது.

ஸம பலமுடைய தேசங்களுக்குள்ளே யுத்தம் ஸாத்யப்படும். ஏற்கெனவே பல நூற்றாண்டுகளாக இங்கிலாந்தின் கீழே யிருப்பதும், பல நூற்றாண்டுகளாக விடுதலைக்குக் கிளர்ச்சி நடத்தி வருவதும், இப்போது குடியரசு வேண்டுவதுமாகிய சார்பு நாடொன்றை அடக்கும் தொழிலுக்கு "யுத்தம்" என்ற பட்டம், ஸின்பீனர்களாலே சூட்டப்பட்டாலும், பொறுப்புள்ள மந்திரிகள் அப்பட்டத்தை அங்கீகரித்தல் பெருந்தவறென்று நினைக்கிறேன். ஆனால் இங்கிலாந்தில் எக்காலமு மில்லாதபடி ஸகல-கக்ஷி-மந்திரிஸபை சேர்த்து மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் நடத்தி வரும் வேடிக்கையான ஆட்சி முறையில் இப்படி விநோதங்கள் ஏற்படுவது எனக்கு ஆச்சர்யமாகத் தோன்றவில்லை. கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருந்து போலீசாரைச் சுட்டு விட்டோடும் நூறே சில்லரை ஐரிஷ் ஸின்பீனருக்கு விரோதமாக ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யம் யுத்தம் செய்யப் புறப்பட்

டிருக்கிறதென்றால், இது கேட்போருக்கு நகை விளைவிப்பதொரு செய்கை யன்றோ?

6. காலத்தின் மாறுதல்

சென்ற ஐந்து மாஸங்களுக்குள்ளே ஜெர்மனியி லிருந்து 6 லக்ஷம் கடிகாரங்களும், எழுபத்தீராயிரம் ஸங்கீத வாத்யங்களும், மாஸந்தோறும் ஆயிரம் மோட்டார்வண்டிகளும், பதினாயிரம் காலன் ஜெர்மன் சாராயங்களும் இங்கிலாந்துக்கு இறக்குமதியாயிருப் பதாகவும், இன்னும் இவ்வருஷத்துக் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னே சுமார் பத்து லக்ஷம் பவுன் கிரயமுள்ள விளையாட்டு ஸாமான்கள் இறக்குமதி யாகப் போவதாகவும் ராய்ட்டர் தந்தி தெரிவிக் கிறது. ஜெர்மனி இன்னும் உடன் படிக்கையின் நிபந்தனைகளை முற்றிலும் நிறைவேற்றுத படியால் அந்நாட்டை இப்போது ஸர்வதேச ஸங்கத்தில் சேர்க்கப் போவதில்லை யென்று மற்றொரு தந்தி சொல்லுகிறது. அதற்குள் ஜெர்மனிக்கும் இங்கி லாந்துக்கும் இத்தனை நெருங்கிய வியாபார ஸம்பந் தங்கள் ஏற்பட்டு விட்டன. உலக முடிவுவரை அல்லது யுத்தம் முடிந்து நெடுங் காலம் வரை மானிட ராக்ஷஸராகிய ஜெர்மனியருடன் எவ்வித மான உறவுகளும் ஏற்படுத்திக் கொள்ளக் கூடா தென்றும், அவர்களிடம் ஸாதாரண மனித பாவனை செலுத்தாமல் ஸகல விதங்களிலும் அவர்களை பஹிஷ்காரம் செய்ய வேண்டு மென்றும் மஹாயுத் தம் நடக்கும் போதெல்லாம் கூக்குரலிட்டுக் கொண் டிருந்த ஆங்கிலப் பத்திராதிபப் புலிகள் முதலியோர்

இப்போது இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் ஏற் பட்டிருக்கும் நெருங்கிய வியாபார ஸம்பந்தங்கள் முதலியன வற்றைப் பற்றி என்ன நினைக்கிறீர் களென்றறிய இச்சைப் படுகிறேன்.

உலக விநோதங்கள்

காளிதாஸன்

3 டிசம்பர் 1920 சௌத்திரி கார்த்திகை 19

1. லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையும் ஒரு கிறிஸ்தவ குருவும்

"நற்றமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற் போல்"!— இங்கிலாந்தில், ஒரு கிறிஸ்தவ குருதம் ஆலயத்தில் சிஷ்ய கணங்களுக்கு மதோபதேசம் செய்து வருமிடையே, லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் தேச பக்தியையும், உயர்ந்த லக்ஷ்யங்களையும், ஞான மஹிமை வாய்ந்த உபதேசங்களையும், அச்சமற்ற பெருந் தன்மையையும் மிக வியந்து ஸ்தோத்ரம் பண்ணியதாக அந்தப் பத்திரிகையிலேயே ஒரு செய்தி ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

தன் உற்பத்தி முதலாகவே, உலகத்து விடுதலைகளையும் சீர்திருத்தங்களையும் எதிர்த்துக்கொண்டே வருவதும், அதுபற்றி அநேக மனுஷ்யாபிமானிகளால் நிந்திக்கப்பட்டிருப்பதுமாகிய அப்பத்திரிகையை, உலகத்தாரெல்லாரும் பரஸ்பரமாகிய ஸஹோதர உணர்ச்சியும், ஸமத்வ ஞானமும், மாறாத அன்பு முடையோராக ஒழுக வேண்டும் என்று போதித்த ஏசுகிறிஸ்து நாதரின் ஸமய குரு ஒருவர் பூஷித்துப் பேசுதல், ஐரோப்பாவில் பலருக்கு ஸாதாரணமாகத் தோன்றக் கூடுமெனினும், வெளி

யுலகத்தாருக்குப் பெரு வியப்பாகத் தோன்று மென்பதில் ஐயமில்லை.

2. மிஸ்டர் ஆர். வில்லியம்ஸ் பார்லிமெண்ட் அபேக்ஷகர்

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில் மேலே குறித்த மகுடத்துடன் ப்ரசுரிக்கப்பட்டிருக்கும் குறிப் பொன்றிலே, இங்கிலாந்தில் தொழிற் கக்ஷியில் ஏற்பட்டிருக்கும் புதிய குழப்பங்களுக்கு ஒரு திருஷ்டாந்தம் காட்டப்பட்டிருக்கிறது. இந்த மிஸ்டர் வில்லியம்ஸ் என்பவர் "பூட்டில்" என்னும் பிரதேசத்திற்குத் தொழிற் கக்ஷியைச் சேர்ந்த பார்லிமெண்ட் அபேக்ஷகராக நியமிக்கப்பட்டிருக் கிறார். இவர் ஆங்கிலத் தொழிற் கக்ஷியின் நிர்வாக ஸமிதியில் ஓரங்கத்தினர். ஆங்கிலத் தொழிற் கக்ஷியோ, "கம்யூனிஸம்" என்றும் "போல்ஷ விஸம்" என்றும் பலவாறாகக் கூறப்படும் நவீன ருஷியக் குடியரசின் "ஸமூஹ உடைமை"க் கொள் கையைக் கண்டனஞ் செய்து மறுத்திருக்கிறது. இந்த ஆர். வில்லியம்ஸ் என்பவரோ மேற்படி ஸமூஹ உடைமைக் (கம்யூனிஸ்ட்) கக்ஷியைச் சேர்ந்தவர். சென்ற ஆகஸ்ட் மாஸத்தில் இவர் தேசீயக் "கம்யூனிஸ்ட்" கக்ஷியின் நிர்வாக ஸபைக்கு ஓர் அபேக்ஷகராக வெளிப்பட்டார். பார்லிமெண்ட் ஸபையைக் கருவியாக வைத்துக் கொண்டு இப்போதுள்ள ஸமூஹ நிலையைக் கவிழ்த்துவிடவேண்டு மென்ற பக்ஷத்தைச் சேர்ந்த வர். "பார்லிமெண்ட் ஸபையில் மந்திரி ஸபையைச்

சேர்ந்த ஒருவர் பேச எழுந்த போதெல்லாம் அவரை நோக்கி 'நீர் பொய்யன்' என்று சொல்லக் கூடிய "கம்யூனிஸ்ட்" மெம்பரொருவர் அந்த ஸபையிலிருப்பது அந்தக் கக்ஷிக்கு ஒருவித பலமே யாகும் என்று இவர் பஹிரங்கமாகச் சொல்லு கிறாராம். இங்கிலாந்திலுள்ள தேசிய ஸமூஹ உடைமைக் கக்ஷி ருஷியாவில் மாஸ்கோவிலுள்ள ஸர்வதேச சங்கத்தின் ஒரு கிளையாகப் பதிவு செய் யப்பட்டிருக்கிறதாம். அந்த ஸங்கத்தினின்றும் "பொது ஜனத் தலைமை", "பலமான உள் நாட்டுச் சண்டைக்குத் தயார் செய்தல்" என்ற கொள்கை களை ஸ்வீகரித்துக் கொண்டிருந்ததாம்.

இப்படிப்பட்ட போல்ஷவிக் கொள்கைகளை ஆதரிக்கும் மிஸ்டர் வில்லியம்ஸ் என்பவரை ஆங்கிலத் தொழிற் கக்ஷியார் தமது நிர்வாக ஸபை யில் ஒரு மெம்பராக வைத்திருப்பது பற்றி லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் வியப்புத் தெரி விக்கிறார். அதே காலத்தில் "கம்யூனிஸ்ட்" கக்ஷி தன்னை ஒரு கிளையாகப் பதிவு செய்து கொள்ள வேண்டு மென்று ஆங்கிலத் தொழிற் கக்ஷிக்கு விடுத்ததொரு விண்ணப்பத்தைத் தொழிற் கக்ஷி நிராகரித்து விட்ட செய்தியும் எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது. இங்ஙனம் "கம்யூனிஸ்ட்" கக்ஷியை நிராகரிக்கும் தொழிற் கக்ஷியார் மேற் கூறிய மிஸ்டர் வில்லியம்ஸ் என்பவரையும் உதறித் தள்ளி விடாமல் தமது சார்பில் அவரை ஒரு பார்லிமெண்ட் அபேக்ஷகராக நியமித்திருப்பது பொருந்தாத

செய்கை யென்று அந் நிருபர் குறிப்பாலுணர்த்து கிறார்.

3. பக்ஷிகளைப் போல் பாடுந் தேரை

லண்டன் நகரத்திலுள்ள ஜந்து சாலைக்கு மிஸஸ் கய்லிவிங்ஸ்டன் என்ற ஸ்த்ரீ அர்ஜென் டைன் ராஜ்யத்துச் சிறு தேரை யொன்று இலும் கொடுத்திருக்கிறாள். அந்தச் சிறு ஜந்து ஒரு அங்குல நீளந்தானிருக்கிறது. அதன் மேற்புறம் மஞ்சள் புள்ளிகளுடன் கரு நிறமுடையதாக இருக் கிறது. கீழ்ப் பக்கத்திலும் அதன் வலை போன்ற பாதங்களினடியிலும் இரத்தச் செம்மை கொண்ட புள்ளிகள் தோன்றுகின்றன. இதைத் திடுக்கிடச் செய்யும் போதும், கோப மூட்டிய இடத்தும் அப்படியே மல்லாந்து படுத்துக்கொண்டு யோகம் ஸாதிக்கிறது. அப்போது செத்ததாக நடிக்கிறது. அல்லது "எச்சரிக்கை" வர்ணங்களைப் புலப்படுத்து கிறது. இதில் ஆண்பால் பெண்பால் இரண்டும் குட்டி வளர்க்கும் பருவங்களில் உரத்த குரலில் பாடுகின்றன. அந்தப் பாட்டின் ஒலி ப்ரிடிஷ் க்ரீன் பிஞ்ச் என்ற பக்ஷியின் குரலைப் போலவே யிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

4. ஸய்யிது துறைமுகத்தில் (போர்ட் ஸயிது) போல்ஷவிக் உபத்ரவங்கள்

சென்ற அக்டோபர் மாஸ முடிவில் ஸூயேஸ் கால்வாய்க்கு வட புறத்தேயுள்ள ஸய்யிது துறை

முகத்தில், பலமான தொழிற் கலகங்கள் நேரிட்ட தாக லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. ஸ்பெயேஸ் வாய்க்கால் வேலை யாட்களைத் தொழில் நிறுத்தும்படி கலகக்காரர் தூண்டியும் அது பலிக்கவில்லை யென்று தெரிகிறது. இவ்வாறு பலிக்காமற் போனதன் காரணம் அந்த வேலையாட்களின் சம்பளங்களில் கம்பெனியார் தக்கபடி மிகுதி செய்து கொடுத்திருப்பதேயாம். ஆனால் வேறு சில தொழிலாளிகள் (அக்டோபர் முடிவில், இன்னும் தொழில் நிறுத்திய நிலைமையிலே தான் இருந்தனராம். எகிப்தின் பட்டாளமொன்று ஸய்யிது துறைமுகத்துக்கு வந்திருக்கிறது. கலகக் காரர் சிறைச் சாலையை உடைக்க முயன்றார்களாம். இங்ஙனம் அவ்விடத்தில் குழப்பமேற்பட்டிருப் பதற்கு போல்ஷவிக்கரின் சேஷ்டைகளே முக்யக் காரணமெனினும், அந்தத் துறைமுகத்தில் வழங்கப் படும் "ப்ரான்" (Franc) என்ற ப்ரெஞ்ச் நாணயத்திற்கு விலை மதிப்புக் குறைவு நேர்ந்திருத் தலும் ஒருவாறு காரணமாகுமென்று, லண்டன் "டைம்ஸ்" சொல்லுகிறது. இந்த நாணயத்திலேயே அங்குள்ள வியாபார ஸ்தலத் தலைவர் தங்கள் வேலை யாட்களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்கும் வழக்கம் இருப்பதாகத் தெரிகிறது.

5. ஸ்வராஜ்யம் வேண்டும்

தேசீயக் கக்ஷித் தலைவராக இருந்து அரிய வேலை செய்த ஒரு வட நாட்டு வக்கீல், பின்னிட்டுப் பல வேறு காரணங்களைக் கருதி ஸர்க்கார் கக்ஷி

யுடன் பழகத் தொடங்கித் தம்முடைய ஸ்வதேசிய முயற்சிகளைச் சிறிது சிறிதாகத் தளரவிட்டு வந்தார்.

அன்பு மேலிட்டு, உயர்கர ப்ரிடிஷ் அதிகாரி யொருவர் அத்தலைவரின் வீட்டுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தார். அத் தலைவருக்கு ஏறக்குறைய எட்டு வயதுள்ள பெண் குழந்தை யொன்றிருந்தது. அந்தக் குழந்தை தன் வீட்டில் தான் பிறந்து அறிவு தெரிந்த பிராய முதலாகவே ஸ்வராஜ்யத்தைப் பற்றி ஓயாமல் கேட்டுப் பழகி யிருந்தபடியால் அதற்கு ஆங்கிலேயரிடமிருந்து நாம் ஸ்வராஜ்ய மடைய வேண்டுமென்ற எண்ணம் பலமாக ஏற்பட்டிருந்தது. ஒரு நாள், மேற்கூறிய ப்ரிடிஷ் அதிகாரி அத்தலைவரின் வீட்டுக்கு வந்திருந்தபோது, அக் குழந்தையிடம் வேடிக்கையாக ஸம்பாஷணை செய்யத் தொடங்கினர். அந்தக் குழந்தை மிகவும் ஸாமர்த்தியமாக மறுமொழி சொல்லிக் கொண்டு வந்தது. இந்தக் குழந்தைக்கு ஏதேனும் ஸம்மானம் கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் ப்ரிடிஷ் அதிகாரி அதை நோக்கி:—"உனக்கென்ன வேண்டும்?" என்று கேட்டார். ஆங்கிலேயரிடமிருந்து நமக்குக் கிடைக்க வேண்டியது ஸ்வராஜ்யந்தானென்று பாடம் படித்து வைத்திருந்த அக்குழந்தை உடனே:—"ஸ்வராஜ்யம் வேண்டும்" என்று மறுமொழி சொல்லிற்றும். அந்தக் காலம் முதல் மேற்படி தலைவரின் வீட்டுக்கு வருவதை அந்த ப்ரிடிஷ் அதிகாரி நிறுத்தி விட்டதாகக் கேள்விப் படுகிறேன்.

உலக விநோதங்கள்

காளிதாஸன்

8 டிசம்பர் 1920 சௌத்திரி கார்த்திகை 24

1. துருக்கிச் செய்தி

முஸ்லிம் உலகம் முழுதையும் புண்படுத்தித் துருக்கியையும் ஒரு சிறிய சார்பு ராஜ்யத்தின் பதவிக்குக் கொணர்ந்த ஸெவர் உடன்படிக்கையை மாற்றுவதாகிய விஷயத்தில் (கான்ஸ்டாண்டி நோபிள் நகரத்திலுள்ள) துருக்கிய ராஜாங்கத்தார் உறுதி கொண்டு நிற்க உடம்படுவாராயின், துருக்கிய தேசீயக் கக்ஷித் தலைவராகிய கமால் பாஷா, தம்மூடைய படைகளையும் செல்வாக்கையும் அவர்களுக்கெதிராகச் செலுத்தி வருவதை நிறுத்தி, அவர்களுக்குத் துணைப்படுத்த சம்மதிக்கிறாரென்பது நேயர்களுக்குத் தெரிந்த செய்தியேயாம். இது வரை பிடிவாதத்தாலோ, தம்மினத்தாருடன் அபிப்ராய பேதங்களை சரிப்படுத்திக் கொள்ளுதல் அதிகாரிகளுக்குக் கஷ்டமாகத் தோன்றுமென்ற காரணத்தாலோ, நேசக் கக்ஷியாரிடம் தாக்ஷிண்யத்தாலோ துருக்கி ராஜாங்கத்தார் கமால் பாஷாவுடன் ஸமாதானம் செய்து கொள்ளாமலிருந்தார்கள். ஆனால் மேற்றுக் கிடைத்த ராய்ட்டர் தந்தியொன்றில், உள்நாட்டு மந்திரி, கடற்படை மந்திரி, வியாபார மந்திரி என்போருட்பட்ட ராஜாங்கத்

தூதர் கணமொன்று கான்ஸ்டாண்டி நோபிளி லிருந்து புறப்பட்டுக் கமால் பாஷாவின் கூட்டத் தாருடன் உடன்படிக்கைப் பேச்சுக்கள் பேசும் பொருட்டுக் கமால்பாஷாவின் ஸ்தானமாகிய (ஆசியா மைனரிலுள்ள) அங்கோரா நகரத்துக்குப் போய்க் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்போ தேனும், துருக்கி கவர்ன்மெண்டார் உள்ளொற் றுமையை நாடி வேலை செய்வது துருக்கிக்கு நற் காலத்தைக் குறிப்பதாகவே கொள்ள வேண்டும்.

2. சிறிய ராஜ்யங்களுக்கெல்லாம் சுயேச்சையும் சுயநிர்ணயமும்!

சுயேச்சையும் சுயநிர்ணயமும் இல்லாத சிறிய ராஜ்யங்களுக்கு, அவற்றை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டே ஐரோப்பாவில் நான்கு வருஷங்கள் மஹாயுத்தம் நடத்துவதாக ஐரோப்பிய ராஜ்ய தந்திரிகள் பல்லவி பாடிக் கொண்டிருந்தார்கள். ஆனல் மேற்படி மஹா பிரளயத்தின் தற்கால விளைவுகளை மாத்திரம் பார்க்கும்போது, ஏற் கெனவே சுயநிர்ணய அதிகாரம் வைத்துக் கொண் டிருந்த தேசங்களுக்குக்கூட இப்போது அவ்வுரிமை மறுக்கப்பட்டு வருகிறது. நேற்றைய ராய்ட்டர் தந்தியொன்றில், கிரேக்க ராஜாங்கத்தார் சிறிது காலத்துக்கு முன்பு இருபது கோடியே இருபது லக்ஷம் த்ராக்மா (என்ற கிரேக்க நாணயம்) தங்கள் நாணய சாலைகளில் அச்சிட்டதுபற்றி நேசக் கக்ஷியார் ஆக்ஷேபம் தெரிவித்திருக்கிறார்களென் றும், அக்கார்யம் செய்யும் முன்பு கிரேக்க ராஜாங்

கத்தார் நேசக் கக்ஷியாரிடமிருந்து அநுமதி பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென அறிக்கையிட்டிருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. நல்ல வேலை! ஒரு தனி ராஜாங்கத்தார் தங்களிஷ்டப்படி காணயமடித்துக் கொள்ளவும் கூடாதென்ற நிலைமையில் ஐரோப்பாவிலுள்ள சிறு ராஜ்யங்களை நேசக் கக்ஷி ராஜ்யதந்திரிகள் அடக்கியாள முயலுகிறார்களென்று தெரிகிறது. உதவி செய்த கிரீஸ் தேசத்துக்கு இப்படி கிபந்தனை யேற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனாலும், என்ன செய்யலாம்? நாம் எத்தனை பெரிய வல்லரசாக இருப்பினும், "நாமொன்று நினைக்க, தெய்வமொன்று நினைக்கும்" என்ற பழமொழியை மீறிச் செல்லுதல் இயலாது. என்ன செய்யலாம்? ஏதென்ஸ் நகரத்தில் வெனிஜிலாஸ் இல்லையே! அவரிருந்தால் பணம் அடித்தல், புஸ்தகம் அடித்தல், ராஜாவுக்குச் சோறு போடுதல் எல்லா விஷயங்களிலும் நேசக் கக்ஷியாரின் கட்டளையை எதிர்பார்த்து நடப்பார். அவர் போய்விடவே, நேசக் கக்ஷியாரின் செங்கோல் பாக்தாதிலும் கெய்ரோவிலும், டப்ளினிலும் ஒளி வீசுவதுபோல் அத்தேனை நகரத்தில் நேராக வீசாவிடினும், சற்று மறைந்தேனும் வீச இடமில்லாமல் போய்விட்டது. இவ்விஷயத்தில் மிஸ்டர் லாய்ட் ஜார்ஜுக்கும் ப்ரெஞ்ச் மந்திரி ஸ்ரீமான் லேகும் என் அனுதாபம் தெரிவிக்கிறேன்.

3. மாதர் ஸமத்வம்

இங்கிலாந்தில் கீர்த்தி பெற்றிருந்த பொருள் சாஸ்த்ர பண்டிதராகிய மிஸ்டர் பா (f) ஸட்

(Fawcett) என்பவரின் மனைவியும், பெண்களுக்கு வாக்குரிட்டு வேண்டுமென்ற கக்ஷித் தலைவியாயிரு ஒருவருமான மிஸஸ் பாஸட் என்பவர், சில தினங்களின் முன்பு லண்டனில், "தகரத்காரின் ஸமத்வத்தை வேண்டும் ஸங்கங்களின் தேசீய ஐக்ய ஸபை" என்ற ஸபை மூன்று விவாகம் செய்து கொண்ட ஸ்திரீகளின் பதவியைக் குறித்து ஒருபன்யாஸம் செய்தார். அதனிடையே அவர் பின்வரும் ரஸமான கதையொன்று சொல்லுகிறார். "1870ஆம் வருஷத்துக்கு ஸமீபத்தில், ஒரு நாள் என் சட்டைப் பையிலிருந்த பணம் களவு போயிற்று. களவு செய்த மனிதன் அகப்பட்டான். அவன் மீது நியாய ஸ்தலத்தில் வழக்கு நடந்தது. நானும் நியாய ஸ்தலத்துக்குப் போயிருந்தேன். அப்போது அந்தத் திருடன் மீது நியாய ஸ்தலத்தில் வாசிக்கப் பட்ட குற்றப் பத்திரிகை பின் வருமாறு தொடங்கிற்று:— 'ஹென்ரிபாஸட் என்பவரின் உடைமையாகிய மிலிஸென்ட் பாஸட் என்ற ஸ்திரீயிடமிருந்து டாம் ஜோன்ஸ் என்பவன் ஒரு பணப் பையைக் களவு செய்ததாகக் குற்றஞ் சாற்றப்படுகிறான்' என. நான் ஏற்கெனவே ஸ்திரீகளுக்கு ஸ்வதந்திரம் வேண்டு மென்ற கக்ஷியைச் சேராதிருந்தேனையின், என்னை "உடைமை"ப் பொருளாக வர்ணித்த அந்த வாக்கியம் என்னை உறுதியாக அந்தக் கக்ஷியில் கொண்டு சேர்த்திருக்கும்" — என்று அந்தப் பண்டிதை கூறுகிறார்.

உலக விநோதங்கள்

காளிதாஸன்

9 டிசம்பர் 1920 ரௌத்ரி கார்த்திகை 25

1. நன்றி மறவாமை

"தீயினுற் சுட்ட புண் உள்ளாறும்; ஆறுதே
நாவினுற் சுட்ட வடு"

என்றார் திருவள்ளுவர். ஆதலால் ராஜ்ய தந்திரிகளாகவும் ராஜரீக உபந்யாஸகராகவுமிருந்து தேசத்துக்கு நன்மை செய்ய விரும்புவோர் சொற்களை உபயோகப்படுத்தும் விதத்தில் மிகவும் ஜாக்ரதை செலுத்த வேண்டும். தேச விடுதலைக்கு மூதலாதாரம் தேச ஐக்ய மென்பது குழந்தைகளுக்கும் கூடத் தெரிந்த விஷயம். அதிலும், தேசீயக் காங்ரஸியாருக்குள்ளே பலமான ஐக்ய உணர்ச்சி யிருத்தல் இன்றியமையாதது. ஆதலால் தேசீய வாதிகள் தம்முள் கருத்து மாறும் போதும், கண்டனம் செய்தல் அவசியமாகத் தோன்றும் போதும் தம் இனத்தாரை மாறுத மன வருத்தத்துக்குட்படுத்தக் கூடிய கடூர பாஷை சொல்வதை முற்றிலும் தவிர்த்து விடுதல் நன்று. சென்ற திங்கட் கிழமை மாலை நான் திருவல்லிக்கேணிக் கடற் கரையில் நடந்த பொதுக் கூட்டத்துக்குப் போயிருந்தேன். அங்கு ஒரு வாலிபர் ப்ரஸங்கம் செய்த போது நம்மவர்களில் வயதானவர்கள் தேச

ஸேவையைத் துறந்து விட்டார்களென்றும், இனி இளைஞர்கள் காப்பாற்றினலன்றி தேசம் கதியற்ற தாய் விடுமென்றும் தெரிவித்தார். காந்தி சிறு பிள்ளையா? விஜயராகவாச்சார்யர் சிறு பிள்ளையா? மதிபால் கோஷ் சிறு பிள்ளையா? மதன் மோஹன மாளவியா சிறு பிள்ளையா? நம்முள் வயதேறியவர் கள் தேச பக்தியைத் துறந்து விட்டதாக மேற் கூறப்பட்ட மஹான்கள் இருக்கும் வரை நாம் உச்சரிப்பது சரியா? இந்தியாவின் விருத்தத் தலைவர்களுக்கு யௌவன இந்தியர் செலுத்தும் நன்றி இதுதானு?

2. ஐரோப்பிய நாகரிகம்

ஐரோப்பிய நாகரிகத்தைக் குறித்துத் தம் முடைய கல்கத்தா உபந்யாஸமொன்றில் கர்னல் வெட்ஜ்வுட் பேசிய வார்த்தைகள் படிப்பதற்கு ரஸமாக இருப்பதால் அவற்றை இங்கு மொழி பெயர்த்துக் காட்டுகிறேன். கர்னல் வெட்ஜ்வுட் சொல்லுகிறார்:—

"ஐரோப்பிய நாகரிகம் இந்தியாவில் வந்து தங்கிப் போய்விடும் என்று தோன்றுகிறது. அதைத் தடுக்க வேண்டும். அந்த நாகரிகம் அநியா யத்தை அஸ்திவாரமாக உடையது. அது யோக் கியதை யற்ற பொருளாசையை ஆதாரமாகக் கொண்டது. அந்த நாகரிகத்தை நீங்கள் கைக் கொள்ள மாட்டீர்களென்று நம்புகிறேன். அது அநீதியை ஆதாரமாகக் கொண்ட தென்பற்குக் காரணம் சொல்லுகிறேன். தொழிலாளிகள் செல்

வத்தை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் அவர் களுடைய தொழிலால் உற்பத்தியாகும் செல் வத்தை அவர்கள் அனுபவிக்க இடமில்லை. இது அநியாயமன்றோ? நீதியை ஆதாரமாகக் கொள் ளாமல், அநீதியை ஆதாரமாகக் கொண்ட ஜன ஸமூஹம் பிழையானது. அதை எப்படி அழித்து விடலாமென்பதைக் குறித்து நாம் யோசனை செய்ய வேண்டும். தொழிலாளிகளுக்கு அதிகக் கூலி கொடுக்க வேண்டுமென்று மாத்திரம் நான் சொல்லவில்லை. அவர்களுடைய தொழிலின் முழுப் பயனையும் அவர்கள் அனுபவிக்க வேண்டு மென் கிறேன்" என்றார். முதலாளிகள் முதல் போட்ட அளவுக்கு அவர்களும் பயன்பெற வேண்டு மென் பதைக் கார்னல் வெட்ஜ்வுட் மறுத்துப் பேசு வதாக நினைப்பது நியாய மன்று. ஆனால், தொழிலாளரின் தொழிலால் பெருமளவில் முழுப் பயனும் தொழிலாளிகளையே சேர வேண்டு மென்பது தான் அவருடைய கொள்கை. மேலும் முதலாளிகள், தொழிலாளிகள் என்ற பேதமின்றித் தொழில் செய்வோரே நாட்டிலுள்ள தொழிற் களங் களுக்கெல்லாம் அதிபதிகளுமாய் விட வேண்டு மென்ற கொள்கை அவர் மனதிலிருக்கக் கூடும்.

இயன்ற வரை, நகரத்து ஜனங்கள் அனை வருமே, ஏதேனுமொரு வகையில் பொது நலத்துக் காகத் தொழில் செய்து தீரவேண்டு மென்பதும், அங்ஙனம் நாட்டு மக்கள் அனைவரும் தொழில் செய்யுமிடத்தே, தொழிற்சாலை யுரிமையும் பொது வாகிவிட வேண்டு மென்பதும் நவீன ஐரோப்பியத்

தொழிற் கக்ஷியாரின் கொள்கையாதலால், அதை யெண்ணியே கர்னல் வெட்ஜ்வுட் மேலே காட்டிய வசனங்களைக் கூறியிருக்கிறார். ஆனல் கீழ்த் திசையிலும் தொழிலாளிகளின் நிலைமை அதே மாதிரியாகத்தானிருக்கும் போது மேற்றிசை நாகரிகத்தை மட்டும் கர்னல் வெட்ஜ்வுட் குறிப்பிட்டுப் பழி பேசியதன் நோக்கம் யாதென்று நம்மவரிலே சிலர் திகைப்பெய்தக் கூடும். ஆனல், மேலெழுந்த வாரகப் பார்க்கும் போது, இவ்விஷயத்தில் மேற்றிசையும் கீழ்த் திசையும் ஒரே மாதிரியாகவே இருப்பதாகத் தோன்றினும், ஆழ்ந்து கவனிக்கும் போது, வேற்றுமை புலப்படும். மேற்றிசை நாகரிகத்தின் ஆதிக்கம் இங்கு தொடங்கிய காலத்துக்கு முன்பு நம் நாட்டுத் தொழிலாளிகள் பெரும் பாலும் தத்தம் தொழில்களுக்குத் தாமே முதலாளிகளாகவும் இருந்தனர். முதலாளி ஒருவன் பணம் போட்டுப் பலரைக் கூலியாட்களாக்கி, வேலை வாங்கி அவர்களுக்குச் சொற்பக்கூலி கொடுத்துவிட்டு, அவர்களுடைய தொழிலால் உற்பத்தியான பண்டங்களை விற்றுக் கிடைக்கும் லாபத்தில் பெரும்பகுதி தான் அழுத்திக்கொள்ளும் முறை இந்தியாவில் ஸாதாரணமாகக் கிடையாது. இது நம்முடைய தேசத்து நாகரிகத்தின் நோக்கத்துக்கு மாறுணமுறை. இந்த உண்மையை அன்னியராயினும், கர்னல் வெட்ஜ்வுட் ஸ்பஷ்டமாகத் தெரிந்து கொண்டது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. இங்கிலாந்திலும், பிற இடங்களிலுமுள்ள தொழிற் கக்ஷியார் நமக்கு எங்ஙனமேனும் ஸ்வராஜ்யம் கொடுக்கும்படி ப்ரிடிஷ்

ராஜாங்கத்தை வற்புறுத்தக் கூடுமாயின், அதனால் உலக முழுமைக்கும் நன்மையேற்படும். மேற்றிசையின் தற்கால நாகரிகம் அநியாயத்தைப்பற்றி நிற்ப தென்றும், ஆதலால் அழித்துவிடத்தக்க தென்றும் கர்னல் வெட்ஜ்வுட் சொல்லுகிறார். அதை நாமும் அங்கீகாரம் செய்கிறோம். ஆனால் அந்த அநியாய நாகரிகத்தை அழிக்கும் உபாய மெப்படி? நியாயத் தைக் கொண்டு நிறுத்தினால் அநியாயம் தானே அழிந்து விடும். சிலர் அநியாயத்தை அழிப்பதற்கு மேன்மேலும் அதிக அநியாயம் பண்ண வேண்டு மென்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மை அப்படி யில்லை. நியாயம் ஸாதிப்பது ஸுலபமென்றும், லாபகரமென்றும், மனிதர் தெளிவாக அறிந்து கொண்ட மாத்திரத்தில் அநியாயத்தைத் தாமே நிறுத்தி விடுவார்கள். ஒளியைக் காண்பித்தால் இருள் தானே அகன்று விடும். மேற்றிசையின் நாகரிகத்தை மாற்ற வேண்டுமாயின், கீழ்த்திசை நாகரிகம் அங்கு பரவும்படி செய்வதே அதற்குரிய உபாயமாகும். கீழ்த்திசை நாகரிகத் துக்கு இந்தியாவே இலக்கியமாக விளங்குகிறது. எனவே உண்மையான கிழக்கு நாகரிகம் ஐரோப்பா வுக்கு வேண்டு மென்று கர்னல் வெட்ஜ்வுட் முதலியவர்கள் விரும்புவாராயின் அதை இந்தியா விலிருந்தே பெற முடியு மென்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்தியா இப்போதிருக்கும் பராதீன நிலைமையிலே தனது பூர்விக நாகரிகத்தின் உயர்ந்த லக்ஷியங்களைத் தன் வாழ்விலே நிறைவேற்றிக் கொள்வதற்குமே திறமை

களை யிழந்து நிற்கிறது. இந்தியா பராதீனமாக இருக்கும் வரை ஐரோப்பியரிற் பெரும் பகுதியார் இதைக் குரு நாடாக ஒப்புக் கொள்ளவே மாட்டார் கள். இந்த நிலையில், அவர்கள் தம்மிடமுள்ள குற்றங்களை நீக்கி நம்மிடமுள்ள குணங்களைப் பற்றிக் கொள்ளுதல் எதிர்பார்க்கத் தக்க விஷய மன்று. எனவே, கீழ்த்திசை நாகரிகம் இந்தியாவில் மறுபடி சுடர் விட்டெரிவதை ஐரோப்பியர் கண்டு தமது நாகரிகத்தினும் இது சிறந்ததென்றுணரும் படி செய்யவேண்டும். இதற்கு இந்தியா ஸ்வராஜ்யம் பெற்றலன்றித் தகுந்த சௌகர்யங்களேற்பட மாட்டா. எனவே, வெளி யுலகத்து மனுஷ்யாபி மானிகள் இந்தியா ஸ்வராஜ்யம் பெறும்படி உழைப் பது நமக்கு நன்மையாவதுடன், நம்மைக் காட்டிலும் அவர்களுக்கே அதிக நன்மையாக முடியும்.

விசேஷக் குறிப்புக்கள்

சக்திதாஸன்

10 டிசம்பர் 1920 பிரளத்திரி காத்திகை 26

1. ஜெர்மனியில் ரவீந்த்ரநாதரின் நாடகம்

ஜெர்மனியில் மெய்ன் நதிக் கரையிலுள்ள ப்ராங்க்போர்ட் நகரத்தில் சென்ற நவம்பர் 21 ஆம் தேதியன்று ஸ்ரீமான் ரவீந்த்ரநாத டாகூரின் புதிய நாடகமாகிய "இருட்டறை வேந்தன்" என்பது ஜெர்மானிய பாஷையில் நடித்துக் காட்டப்பட்டது. இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் ஏற்கெனவே டாகூரின் நாடகங்கள் சில முறை நடித்துக் காட்டப் பட்டிருக்கின்றன. ஆனால் ஐரோப்பாவில் இதுதான் முதல் முறை யென்று தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவின் நாகரிகம் உலகத்தில் பரவுவதற்குத் தொழில் புரியும் நமது காலத் தொழிலாளிகளில் ரவீந்த்ர பாபுவை முன்னணியில் சேர்க்க வேண்டும்.

2. "நோபல் ப்ரைஸ்" என்ற வெகுமானம்

முன்பு, ரவீந்த்ரநாத டாகூருக்கு, "நோபல் ப்ரைஸ்" கிடைத்த செய்தியை நேயர்கள் மறந் திருக்க மாட்டார்கள். இந்த வெகுமானம் ஸ்வீடன்

தேசத்து வித்யா ஸங்கத்தார் மூலமாக ஒரு வித்யாபி மானி வைத்த நிதியினின்றும், அவ்வவ் வருஷத்தில் நாகரிக உலக முழுதிலும் இலக்கியத்திலும், சாஸ்திரத்திலும் மிகச் சிறந்த வித்வான்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ரவீந்த்ரநாத் டாகூருக்குக் கிடைத்த வெகுமதி ரூபாய்க் கணக்கில் சுமார் லக்ஷத்திருபதாயிரமாயிற் றென்பது நம்ம வருக்கு நினைப்பிருக்கக் கூடும். பரிசு இத்தனை பெரும் தொகையாக இருப்பது மன்றி, இதனைப் பெறுவோர் உலகத்து வித்வான்களில் சிறந்தோ ரென்ற ஸ்தானமும் ஏற்படுவதால், ஒவ்வொரு தேசத்தாரும் தத்தம் நாட்டுக் கவியரசர்களுக்கு அந்த ஸம்மானம் கிடைக்க வேண்டு மென்று விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட இந்தப் பரிசு களில் இலக்கியப் பரிசு (1919 ஆம் வருஷத்துக் குரியது) ஸ்விட்ஜர்லாந்து தேசத்துக் கவியாகிய கார்ல் ஸ்பித்தலர் என்பவருக்குக் கிடைத்திருக் கிறது. 1920 ஆம் வருஷத்துக்குரிய மேற்படி ஸம்மானத்தை நார்வே தேசத்துப் புலவராகிய நட்ஹாம்ஸன் என்பவர் பெற்றிருக்கிறார்.

3. கார்ல் ஸ்பித்தலர்

இவர் ஸ்விட்ஜர்லாந்து தேசத்தில் லுஸெர்ன் நகரத்தில் பிறந்தவர். இவருக்கு இப்போது 75 வயதாகிறது. ஜெர்மனி தேசத்துக் கீர்த்திபெற்ற பண்டிதராகிய நியட்ஷ் என்பவருக்கு ஸமானமாக இவரைச் சிலர் சொல்லுகிறார்கள். 1889 ஆம் வரு

ஷத்தில் இவர் "ப்ரொமீதியஸ்", "எபிமெத்துஸ்" என்ற இரண்டு நூல்கள் வெளியிட்டார். இவருக்கு இந்த வெகுமானம் கிடைத்ததுபற்றி ஸ்வீடன் தேசத்திலும் இங்கிலாந்து முதலிய இடங்களிலும் சில பத்திரிகைகள் மிக ஆச்சர்யப் படுகின்றன. இவர் ஏற்கெனவே எழுதியுள்ள நூல்களில் நல்ல திறமை காண்பிக்கப்பட்டிருப்பது மெய்யே யாயினும், வயது மிகுதியால் இப்போது இவர் சக்தி குன்றிப் புதிய கவிதைப் படைப்புகள் செய்யுந் திறனின்றியிருப்பதாக அப்பத்திரிகைகள் சொல்லுகின்றன. இங்கிலாந்திலுள்ள தாமஸ் ஹார்டி, பெர்னர்ட்ஷா, ஜான் கார்ல்ஸ்வர்த்தி என்போரும் பிரான்ஸிலுள்ள அந்தோல் ப்ரான்ஸ், ரோமாய்ன் ரோலான் முதலியவர்கள் இவரைக் காட்டிலும் இலக்கிய வெகுமதிக்கு அதிகத் தகுதியுடையோ ரென்று சொல்லப்படுகிறது. மேலும் ஆங்கிலப் புலவர்களிலே ருட்யார்ட் கிப்ளிங் ஒருவருக்குத்தான் இது வரை இப்பரிசு கொடுக்கப்பட்டிருப்பதினின்றும், இங்கிலாந்துக்கு ஸ்வீடன் கலா ஸங்கத்தார் சரியான நியாயம் செலுத்தவில்லை யென்று தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கார்ல் ஸ்பித்தலர் என்பவரை மிக உயர்வாகக் கொண்டாடுவோர் ப்ரான்ஸ் தேசத்தில் பலர் இருப்பதாக மற்றொரு திறத்தார் கூறுகின்றனர். ஜெர்மனியிலும் இவருக்கு மிகுந்த கீர்த்தி யிருந்ததாம். ஆனால் மஹா யுத்தத்தின் போது ஜெர்மானியர் பெல்ஜியம் தேசத்து நடுநிலைமைக்கு பங்கம் விளைத்ததுபற்றி இந்தப் புலவர் ஜெர்மனியை உக்ரமாகக் கண்டித்துப் பேசியதி

னின்றும், இவருக்கு ஜெர்மனியிலிருந்த மதிப்புக் குறைவு பட்டதாகத் தெரிகிறது.

4. நட் ஹாம்ஸன்

1920 ஆம் வருஷத்து நோபல் இலக்கியப் பரிசு கிடைக்கப்பெற்ற நட்ஹாம்ஸனுக்கு அது தகு மென்று கொள்ளுகிறார்கள். நுத்ஹாம்ஸன் என் பது இயற் பெயரில்லை யென்றும், இலக்கியத்திற் காக இவர் தாமே ஏற்படுத்திக்கொண்டதோர் புனை பெயரென்றும் அறிகிறோம். இவர் 1860 ஆம் வருஷத்தில் எளிய தாய் தந்தையர் வயிற்றில் பிறந் தார் அவருடைய ஆரம்ப வேலைகளாகிய ஒரு காவியமும் ஒரு கதையும் 1878 ஆம் வருஷத்தில் வெளியிடப்பட்டன. ஆனல் அவற்றால் நஷ்டம் வந்ததே யன்றி லாபம் வரவில்லை. பிறகு அவர் நார்வேயிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப் போனர். அங்கே, ஒரு வயலில் உழவு வேலை செய்து வந்தார். "ட்ராம்" வண்டி ஓட்டினர். 1885 ஆம் வருஷத்தில் மறுபடி நார்வேக்கு மீண்டு, இலக்கியத் தொழில் தொடங்கினர். மறுபடி தோல்வி ஏற்பட்டது.

பிறகு ந்யூபவுண்ட்லாந்து தீவில் மூன்று வரு ஷம் மீன்பிடிக்கிற படகில் வேலை செய்து வந்தார். அப்பால் "பட்டினி" என்றொரு கதை யெழுதி வெளி யிட்டார். அதில் பெரும் பகுதி அவருடைய சொந் தக் கதை. அந்தப் புஸ்தகம் வெற்றியடைந்தது. அது முதல் அவர் வெளியிட்டு வரும் பல நூல்களால் அவருடைய கீர்த்தி உறுதி பெற்று விளங்குகிறது.

[குறிப்பு :—நோபல் 'பவுதிக சாஸ்த்ர'ப் பரிசுகளில் 1919-ஆம் வருஷத்துப் பரிசு யாருக்கும் கொடுபடாமல் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது; ஷி 1920-ஆம் வருஷத்துப் பரிசு ப்ரான்ஸ் தேசத்தில் ப்ரதெய் (Bretehil) நகரத்தில் ஸர்வ தேசிய நிறை யளவுக் கார்யஸ்தலத்தில் தலைமையதிகாரியாகிய மிஸ்டர் ஸி. இ. (g) கியூரோம் என்பவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங் கிலிஷ் பாஷையிலுள்ள வில்லியம் என்னும் நாமமே ப்ரெஞ்சு பாஷையில் (g) கியூரோம் என்று வழங்குதலறிக.]

5. கலகக்காரர்

மெஸபடேமியா எவ்வகையிலும் ப்ரிடிஷ் ராஜ்யாங்கத்தின் ஒரு பகுதியாகக் கணிக்கப்படத் தகாததாகையால், அங்கு போர் செய்யும் அராபி யரைக் "கலகக்காரர்" என்று சொல்லுதல் பொருந் தாதென்று சிறிது காலத்திற்கு முன்பு லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை எழுதிற்று. ஸாதாரண யுத் தத்தில் கைதிகளாக எதிரிகள் அகப்பட்டால், அவர் களை எப்படி நடத்த வேண்டுமோ, அப்படியே அந் நாட்டரபியர் கைதிகளாகும் போதும் செய்ய வேண் டுமேயன்றி, கலகக்காரருக்கு விதிக்கும் தண்டனை அராபியருக்கு விதிக்கக் கூடாதென்ற மேற்கூறிய லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் அபிப்ராயத் தின் மீது லண்டனில் நடைபெறும் "இந்தியா" பத் திரிகை வியாக்யானம் செய்கிறது. அங்ஙனம் ஸாவா என்ற இடத்தில் போர் செய்யுமிடையே இறந்து போன மிஸ்டர் புகானன் என்ற ஆங்கிலே யர் ஒருவரைக் கொன்றதில் ஸம்பந்தப்பட்ட ஒரு அராபியின் மீது கொலைக் குற்றம் சாற்றி ஆங்கிலேய அதிகாரிகள் அவனைத் தூக்கிலிட்டுக் கொன்ற

தாகத் தெரிகிறது. இப்படி ஒரு யுத்த வீரனைய அரபியை ஆங்கிலேயர் கொலையாளியாக பாவித்துக் கொலை செய்ததைக் கருதி அந்த "இந்தியா" பத்திரிகை மிக்க பரிதாப முணர்த்துகிறது. ஆனால், லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் மேற்கூறிய கொள்கையை நாம் அங்கீகரிப்போமாயின், ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தில் ஒரு பகுதியில்லாத மெஸபொடேமியாவில் ஸைன்யத்தைக் கொண்டு வைத்துக் கொண்டு அந்நாட்டைச் சூறையாடு முறைமையில் ஒரிரண்டு தனிக்குற்றந்தானு காணலாம்? அடிமுதல் நுனிவரை அந்தச் செய்கை முழுமையும் பெருங் குற்றமே யன்றோ?

பட்டணத்துச் செய்திகள்

காளிதாஸன்

24 டிசம்பர் 1920 ரௌத்திரி மாகழி 10

ஒரு ட்ராம்வே உத்யோகஸ்தர் சாகத் தெரிந்தார்

சில தினங்களுக்கு முன் திருவல்லிக்கேணியிலிருந்து சென்னைக்கு ட்ராம் வண்டி யேறி வந்து கொண்டிருக்கையிலே முனிஸிபல் குப்பை மோட்டார் ஒன்று ட்ராம் வண்டிக்கு ஸமீபமாக வந்து கொண்டிருந்தது. இடையே ஒரு போலீஸ் சேவகர் நடந்து போய்க் கொண்டிருந்தார். அவர் தப்பிய ஒரு க்ஷணத்துக்குள் குப்பை மோட்டார் ட்ராம் வண்டியோடு உராய்ந்தது. இடையே, ட்ராம் ஏறு பலகைமேல் ஒருவர் நின்று கொண்டிருந்தார். இவர் நடுங்கிப் போனர். ஆனல் பொடி மனிதனைபடியால் காயமில்லாமல் தப்பினர். வண்டியிலிருந்த ஆண்களும் பெண்களும் இவர் பிழைத்ததுபற்றி ஈசனை ஸ்தோத்ரம் செய்தார்கள். "ஒரு நூலினடியிலே நிற்கிறது மனிதனுடைய ஆவி! இதில் எத்தனை கவலைகள், எத்தனை பயங்கள், எத்தனை போராட்டங்கள், கஷ்டங்கள், மனிதர் தமக்குத் தாமே மூடத்தன்மையால் விளைவித்துக் கொள்கின்றனர்!" என்று சொல்லி ஒரு ஸ்திரீ ஞானோபதேசம் செய்

தாள். இது நிற்க, மோட்டார் முதலியன விடுவோர் இயன்றவரை ட்ராம் மார்க்கத்தை விட்டு விலகி யோட்டுதல் அவசியமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ட்ராம் வண்டியில் ராஜீய வாதம்

"புதிய யுகம் வரப்போகிறது; மாண்டேகு ஸ்வராஜ்யக் குட்டி போடப் போகிறாரென்று சத்தம் போட்டதெல்லாம் கடைசியாக, வெங்கட ரெட்டி, ஸுப்பராயலு ரெட்டி, ராம ராயனிங்கார் என்ற மூவரும் நம்முடைய மாகாணத்துக்கு மந்திரி களாக வந்திருக்கிறார்கள். இஃதென்ன விநோதம்!"

என்று, இன்று காலை எனக்கெதிரே ட்ராம் வண்டியிலுட்கார்ந்திருந்த எழுபது வயதுள்ள ஒரு வைஷ்ணவ பிராமணர் கூறினர். அதைக் கேட்டு, அவரருகிலிருந்த மஹமதியரொருவர்:— "எவர் வந்தாலென்ன? சென்னப் பட்டணத்திலே பிராமணர் வந்தாலும் கிலாபத்துக்கு வேலை செய்ய மாட்டார்கள். மற்ற ஜாதியார் வந்தாலும் கிலா பத்தைக் கவனிக்கமாட்டார்கள். இது தரித்திரம் பிடித்த நகரமையா இது! லாஹோர், லக்னவ், டில்லி, பம்பாய், கல்கத்தா பக்கங்களிலே கிலா பத்துக்கு என்ன வேலை செய்கிறார்கள் தெரியுமா?" என்றார். அப்போது, ஒரு ஐரோப்பிய வியாபார ஸ்தலத்துக் கார்யஸ்தர்போலே தோன்றிய முதலி யார் ஒருவர்—"பிராமணர்கள் வந்தால், அதிகமாக ஆங்கிலேய உத்தியோகஸ்தருக்கு அடிமைப்பட மாட்டார்கள். எனவே, ஜனங்களுக்குக் கொஞ்சம்

நியாயம் கிடைக்கும். மற்றக் கூட்டத்தார் இன்னும் அது சரியாகப் படிக்கவில்லை" என்றார். அப்பால் கலாசாலை மாணக்கராகிய ஒரு அய்யர்:—

"பிராமணரில்லாமல் மற்றவர் மந்திரிகளாக நியமிக்கப்பட்டது எனக்கு சந்தோஷந்தான். காங்களே ஐரோப்பியக் கல்விக்குப் பிறப்புரிமை கொண்டோரென்றும் ஆதலால் ஐரோப்பியக் கல்வியில் தாம் பெறக்கூடிய தேர்ச்சி மற்ற ஜாதியாரால் எய்தவே முடியாதென்றும், ஆதலால் உயர்ந்த ஸர்க்கார் ஸ்தானங்களெல்லாம் தங்களுக்கே கிடைக்குமென்றும் சென்னை மாகாணத்து பிராமணரில் சிலர் மிகவும் கர்வம் பாராட்டி வருகிறார்கள். அவர்களுடைய கர்வத்தைத் தீர்க்க இது நல்ல மருந்தாகி வந்தது. ஆனால் பிராமணரைத் தவிர வேறு ஜாதியாரை நியமிப்பதில் பிராமணத் துவேஷம் ஒன்றையே பெருங் கடமையாகவும், பரம தர்மமாகவும், ஜன்ம லக்ஷ்யமாகவும் நினைக்கிறவர்களைவிட்டு, இதர ஜாதியாராயினும் பிராமணத் துவேஷமில்லாதவர்களையே லார்ட் வில்லிங்டன் நியமித்திருக்க வேண்டும்" என்றார்.

"இதுவரை பிராமணரைப் பகைத்துக் கொண்டிருந்த போதிலும், இப்போது மந்திரி ஸ்தானம் கிடைத்ததிலிருந்தேனும், இவர்கள் அதிகப் பொறுப்புணர்ச்சியும் விசால புத்தியும் உடையவர்களாய்த் தமது பெயரைக் காத்துக்கொள்ள வேணும். இயன்றவரை எல்லா வகுப்பினருள்ளும் பக்ஷபாதமில்லாமல் பொதுவாக நடந்துவர முயற்சி செய்வார்களென்று நம்புகிறேன்" என்று மேற்

கூறிய முதலியார் சொன்னர். இவர் சொல்லியதில் ஒருவித உண்மை யிருக்கக் கூடுமென்று என் புத்திக்குப் புலப்பட்டது. ஆனல் அதற்குள் ஸான் ட்ராம் வண்டியிலிருந்து இறங்குவதற்குக் காலமாய் விட்டபடியால் அந்த ரஸமான ஸம்பாஷணையைத் தொடர்ந்து கேட்க இயலவில்லை.

ரஸத் திரட்டு

காளிதாஸன்

10 ஜனவரி 1921 சௌத்திரி மாகழி 27

நிறவேற்றுமை

அமெரிக்காவில் செந்நிற இந்தியர் என்ற ஜாதியாருடன் அங்கு புதிதாக ஐரோப்பாவினின்றும் குடியேறிய வெண்ணிற மனிதர் ஒத்துவாழ முடியாமல் அவர்களைச் சுட்டழித்த செய்தி, ஆஸ்த்ரேலியாவின் புராதனக் குடிகளை வெள்ளையர் அழித்து முடித்த செய்தி, ஒரு நீக்ரோவன் ஒரு வெள்ளை ஸ்திரீயை விரும்பினால் அவனைச் சட்டப்படி விசாரணை செய்யாமல் ஜனங்கள் அடித்தும் கல்லெறிந்தும் கொல்வதாகிய - இன்றைகளும் அமெரிக்காவில் உள்ள அனுஷ்டானம், ஐரோப்பியரின் ஆட்சிக்குட்பட்ட இந்தியா முதலிய இதர நிறத்தாருடைய நாடுகளில் நிறவேற்றுமை காரணமாக ஏற்படும் அநீதிகள், அமெரிக்காவிலும் கனடாவிலும் ஐப்பானியரும் இந்தியரும் குடியேறி யிருப்பதால் அங்குள்ளவருக்குண்டாகும் பொறாமை, குடியேற்ற நாடுகளில் ஆசியாக்காரருக்குச் செய்யப்படும் கொடுமைகள் இவற்றாலெல்லாம் நிறவேற்றுமை பற்றிய பேத உணர்ச்சிகள் சில நூற்றாண்டுகளாக வெள்ளையரிடம் ததும்பிக்கிடப்பதாக நிச்சயப்படுவதை முகாந்தரமாகக் கொண்டு ஹிந்து

பத்திரிகையில் நிற வேற்றுமை உணர்ச்சி மனித இயற்கைக்கே சகஜமென்றும் இது சமீபத்தில் இவ் வுலகை விட்டுப் பெயராதென்றும் எழுதப்பட்டிருந்த அபிப்பிராயத்தை ஏற்கெனவே சில தினங்களின் முன்பு மறுத்தெழுதி யிருக்கிறோம். அங்ஙனம் மறுத்தெழுதுகையில் ஆசியாக் கண்டத்காருக்கு இந்த உணர்ச்சி எப்போதுமே கிடையாதென்பதை யும் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

அங்ஙனம் நாம் சொல்லியதற்கு வேறொரு நேர்த்தியான உபபலம் அகப்பட்டிருக்கிறது. அதனை நம் நேயர்களுக்குத் தெரிவித்தல் பய னுடையதாகும் என்று நினைக்கிறோம்.

சுக்ர நீதியிலுள்ள பிரமாணம் 1921 ஜனவரி மாஸத்து 'மாடர்ன் ரிவ்யூ' பத்திரிகையிலே சரித்திர ஆராய்ச்சியில் கீர்த்தி மிகுந்தவராகிய ஸ்ரீ விநய குமார சர்க்கார் என்பவர் சுக்ர நீதியின்படி ராஜ்யத் தின் செல்வ ஆதாரங்கள் என்ற மகுடத்தின் கீழ் எழுதிவரும் சிறந்த வியாசத்தின் 5-ம் பகுதி வெளி யிடப்பட்டிருக்கிறது. அதில் ஸ்ரீ சர்க்கார் சுக்ர நீதியினின்றும் பலமான மேற்கோள் எடுத்துக் காட்டிப் பூர்விக இந்தியாவில் சேனாதிபதி வேலை மந்திரி வேலை முதலாக ஸகல ஸ்தானங்களுக்கும் இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியாரையும் நியமிக் கலாமென்ற ஏற்பாடிருந்ததுடன் மிலேச்சர் யவனர் முதலிய மத்திய ஆசியாவாசிகளையும் தென் ஐரோப்பாவைச் சேர்ந்த வெள்ளை மனிதர்களையும் இந்தியரவில் எந்த உத்தியோகத்துக்கும் நியமிக்

கலாமென்ற ஏற்பாடு இருந்த தென்று உள்ளங்கை நெல்லிக்கனி போல மிகத் தெளிவாக விளங்கும்படி ருசுப்படுத்துகிறார். இங்குள்ள ஜாதிபேதங்களைக் கூட நாம் சீர்திருத்த இடமிருப்பினும் வெள்ளையர் கற்பிப்பது போல் இதனை உலகெங்குமில்லாத பெருங் கொடுமையாகப் பாவித்தல் சிறிதேனும் நியாயமில்லை. இந்த விஷயமும் ஸ்ரீமான் சர்க்கார் நின் வியாசத்தில் தெளிவுபடுகிறது.

எல்லா மனிதரும் சமமென்ற கொள்கையை ஸமூஹ வாழ்க்கையில் ஸ்தாபனம் செய்யும்வரை மானிடருள்ளே இகல், பொறாமை, வஞ்சனை, போர் முதலிய ஏற்பாடுகள் நீங்க மாட்டாவாதலால் அக் கொள்கையை எப்படியேனும் அனுஷ்டானத்துக்குக் கொணர்ந்து விடவேண்டுமென்று ஐரோப்பிய ஞானிகள் பேராவல் கொண்டிருக்கின்றனர். இந்தியா ராஜாங்க விடுதலை பெற்றுவிடுமானால் தன் அனுஷ்டானத்தாலே உலகத்தாருக்கு இக்கொள்கையின் நலங்களை விளக்கிக் காட்டி உலகமுழுவதும் இதனைப் பரவச் செய்தல் ஸாத்யப்படும்.

ஸமத்துவக் கொள்கையின் லோககுரு பாரதமாதா

வெறும்மே ஐரோப்பிய வித்வான்கள் செய்வது போல் இவ்விஷயமாக நூல்களும் பத்திரிகை வியாசங்களும் ப்ரசுரிப்பதனாலும் உபந்யாஸங்கள் செய்வதாலும் அதிக பயனேற்படாது. தன் உபதேசப்படி தானே நடக்காத ஐரோப்பாவின் உபதேசங்

களில் வெளியுலகத்தாருக்கு நம்பிக்கை பிறப்ப தெப்படி? எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்தி யாவின் நெஞ்சில் வேதாந்தக் கொள்கை ஊறிக கிடக்கிறது. இந்த வேதாந்தம் லௌகிகமான அனுஷ்டானத்தில் பரிபூரணமான ஸம்பூர்ணமான ஸமத்துவம் ஏற்படுத்தும் இயல்புடையது. ஆனால் நமக்கும் ஐரோப்பியரின் உறவாலேதான் இக்கொள் கையில் உறுதி ஏற்பட்டது. எனினும் ஐரோப்பியர் அதை நடத்திக்காட்டக்கூடிய அளவு தெளிவு பெற வில்லை. இக்கொள்கை அவர்களுக்குப் புதிது. புதிய கொள்கை உண்மையென்று நிச்சயப்பட்ட மாத்தி ரத்தில் அதை அனுஷ்டித்துத் தீர்க்க வேண்டுமென் பதில் இந்தியாவுக்குள்ள துணிவு ஐரோப்பாவுக்குக கிடையாது. ஆனால் நாம் இக்கொள்கையை முற றிலும அனுஷ்டித்தல் அன்ய ராஜ்யத்தின் கீழே ஸாத்யப்படவில்லை. ஆதலால் நமக்கு ஸ்வராஜ்யம் இன்றியமையாதது. இந்தியா ஸ்வராஜ்யம் பெறுவதே மனித உலகம் அழியாது காக்கும் வழி.

வெண்மை நிறத்தோரின் ஆட்சி விஸ்தாரம்

பூமண்டலத்தின் தரையளவு சுமார் 5,30,00,000 (ஐந்து கோடியே முப்பது லட்சம்) சதுரமைல். இதில் 4, 70, 00, 000 (நான்கு கோடியே எழுபது லட்சம்) சதுரமைல் விஸ்தாரமுள்ள பூமி வெண்மை நிறத் தோரின் ஆதிக்கத்திலிருக்கிறது. இங்ஙனம் உலகம் ஒரு சிறு கூட்டத்தாரின் கீழே அகப்பட்டிருப்பதில் அச்சிறு கூட்டத்தார் தங்களுடைய வயிற்றையும்

தமக்கு வேண்டிய இன்பங்களையும் மாத்திரமே கவனிப்பதுடன் மற்ற உலகத்தாரெல்லாரும் தங்களைக் காட்டிலும் தாழ்வென்றும் நினைத்துக் கொண்டிருக்குமிடத்தே ஸமத்வக் கொள்கையின் கதி என்னுகிறது?

ரங்கூன் ஸர்வகலா ஸங்க பஹிஷ்காரம்

சக்தீதாஸன்

18 ஜனவரி 1921 ரௌத்ரி தை 6

ரங்கூன் ஸர்வகலா ஸங்கத்தையும், ராஜாங்க உதவி பெற்ற மற்றப் பாடசாலைகளையும், மாணக்கர் பஹிஷ்காரம் செய்யும்படி நேர்ந்த விருத்தாந்தங்களைக் குறித்து, மிஸ்டர் மோங் தின் மோங் விடுத்திருக்கும் அறிக்கையை நோக்குமிடத்தே, ஸர்க்கார் அறிக்கை பக்ஷபாதமுடைய தென்பது வெளிப்படுகிறது. ரங்கூன் ஸர்வகலா ஸங்கத்தின் நிர்மாண நிபந்தனைகள் ஆக்ஷேபத்துக்கிடமானவை யென்று ஜனங்கள் கூக்குரலிட்டதை அதிகாரிகள் சிறிதேனும் பொருட் படுத்தாமல் நிராகரித்து விட்டு, அந்த நிர்மாணத்தை மிதமிஞ்சிய விரைவுடன் சட்டமாக்கினார்கள்.

இந்த விஷயத்தில் பர்மிய அறிவாளிகள செலுத்திய ஆத்திரத்தை அதிகாரிகள் கவனிக்கவேயில்லை. இவ்விதமான அதிரத்தையை பர்மிய அறிவாளிகள் முன்னைப் போல, ஆட்டுக் குட்டித்தனமாகப் பொறுத்துக் கொண்டிருப்பார்களென்று, "ஆகாசத்திலிருந்து நேராக இறங்கி வந்த" ஆங்கிலேய அதிகாரிகள் தீர்மானம் செய்து கொண்டனர். ஹெர்

மனியிலும் ருஷியாவிலுந்தான் காலச் சக்கரம் சுழலுகிற தென்றும் பர்மாவில் சுழலவில்லை யென்றும், ஸ்தம்பித்து நிற்கிற தென்றும், மேற்படி ஆகாச குமாரர்கள் எண்ணினார்கள். ஆனால், பர்மாவில் காலச்சக்கரம் இங்கிலாந்தைக் காட்டிலும் அதிக வேகமாகச் சுழன்று வந்திருக்கிறது. இந்த விஷயந் தெரியாமல் வழக்கம் போலே அதிகாரிகள் மஹாத்மா காந்தியின் ரீதி பழி சுமத்தி அவரைத் தூற்றுகிறார்கள்.

பர்மியப் படிப்பாளிகளுக்கும், அதிகாரிகளுக்கு மிடையே நிகழ்ச்சி பெற்றிருக்கும் மனஸ்தாபத்தின் ஆதாரம் பின் வருமாறு :—பம்பாய் மாகாணத்தைப் போல் பர்மா ஒன்றரை மடங்கு பெரிது. ஆயினும், பர்மா முழுமைக்கும், ரங்கூன் நகர மொன்றிலுள்ள இரண்டே முதல்தரக் கலாசாலைகளிருக்கின்றன. பர்மா முழுமைக்கும் உயர்தரப் பாடசாலைகள் 23; ஆரம்பப் பாடசாலைகள் சுமார் 8000 (எண்ணாயிரம்). பம்பாய் மாகாணத்திலோ 200 (இருநூறு) உயர்தரப் பாடசாலைகளுக்கதிகமே யுள்ளன. ஏறக்குறைய 15000 (பதினையாயிரம்) ஆரம்பப் பாடசாலைகளிருக்கின்றன.

இந்த நிலைமையில், பர்மா கவர்ன்மெண்டார் ரங்கூன் யூனிவர்ஸிடியை மாகாணத்துக்குப் பொதுவாக்காமல், வஸதி ஸஹிதமாக, (ரங்கூன் நகரத்தில் வந்து வஹிப்போருக்கு மாத்திரம் பயன் படும்படி) வைக்க வேண்டுமென்று தீர்மானித்த போது, ஜனங்களுக்கு வருத்த முண்டாயிற்று. ஏனென்றால், ஸர்வகலா ஸங்கம் மாகாணத்துக்குப் பொதுவாக

இருக்குமாயின், அதன் மூலமாக அதிகப் பிள்ளைகள் கடைத்தேற முடியும். இப்போதுள்ள சட்டப்படி, அதன் கட்டிடத்தில் ஏராளமான பணம் செலவு செய்து கொண்டு வாஸம் செய்யக் கூடிய மிகச் சில மாணக்கருக்கே அது பயன்படும். வஸதி ஸஹிதமான ஸர்வகலா ஸங்கத்தால் விளையக் கூடிய விசேஷ நன்மைகளை மாணக்கர் எய்தும்படி செய்வதே நோக்கமெனின் ; அப்போது, மாகாண முழுமைக்கும் போதியவாறு ஐம்பது அல்லது நூறு ஸங்கங்கள் ஸ்தாபனம் செய்வதற்குரிய பணச் செலவை ராஜாங்கத்தார் பொறுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

மேலும், அந்த ஸர்வகலா ஸங்கத்துடன் ரங்கூன் நகரத்திலுள்ள பாடசாலைகளை மாத்திரமே சேர்க்கலாமென்று சட்டம் செய்திருக்கிறார்கள். எனவே, மற்ற எவ்விடத்திலும் முதல்தரக் கலாசாலை ஏற்படுத்தக் கூட வழியில்லாமற் போய்விடும். ஸர்வகலா ஸங்க ஸம்பந்தமில்லை யெனில் முதல்தரக் கலாசாலை ஸ்தாபித்தல் பயன் படாதன்றே ?

ராஜாங்கத்தார் ஜனங்களுக்குக கல்வியளிக்க வேண்டுமென்ற விருப்பம் உண்மையாகவே உடையோ ரென்று காண்பிக்க வேண்டுமாயின், மாகாணமெங்கும் ஆயிரக் கணக்கான பாடசாலைகளையும் கலாசாலைகளையும் ஸ்தாபித்து, அங்கங்கே முக்ய நகரங்களில் வஸதி ஸஹிதமான ஸர்வகலா ஸங்கங்களை அமைத்தல் இயலும்படி செய்ய வேண்டும்.

இதையன்றி, ஒரு வருஷ ஆரம்பப் பயிற்சி அதிகமாக வைத்திருத்தல், "ஸெனேட்" ஸபையில் பிரதிநிதித் தன்மை யின்மை, என்ற வேறு சில அம்சங்களிலும் பர்மியப் படிப்பாளிகளின் கொள்கை ஸர்க்கார்க் கொள்கையினின்றும் மாறு பட்டிருக்கிறது.

இந்த அம்சங்களனைத்திலும் பொது ஜனங் களின் நன்மைக்கும் தீர்மானத்துக்கும் தக்கபடி தம் முடைய சட்டத்தை மாற்றிக்கொள்வதே ஜனங்களி டையே கொழுந்து விட்டெரியும் அதிருப்திக் கனலை அவிக்க வழியாகுமன்றி, மஹாத்மா காந்தியைத் தூஷணை செய்வதில் அதிகப் பயன் விளையாதென் பதை பர்மா கவர்னர் தெரிவாராகுக.

உலக நிலை

சக்தி ஞானம்

19 ஜனவரி 1921 ரௌத்திரி கை 7

லார்ட் மில்நரைத் தள்ளியதன் முகாந்தர மென்ன ?

குடியேற்ற மந்திரி ஸ்தானத்திலிருந்து லார்டு மில்நர் விலகிக் கொண்டதாகவும், அவர் எகிப்தின் விஷயத்தில் செய்த வேலையினால் அந்த விலகுகல் ஏற்படவில்லை யென்றும் ராய்ட்டர் இந்தியாவுக்கு மிக ஸங்க்ரஹமாக ஸாதித்திருகிறார். ''என் பிதா மெத்தையில் ஒளிந்திருக்க வில்லை'' யென்று, கதை யில் ஸாக்ஷ்ய மூரைத்த குழந்தையின் நல்லெண் ணத்தை எய்தியே ராய்ட்டர் இங்ஙனம் தந்தி கொடுத்திருக்கிறரென்று வெளிபடை யாகவே தோன்றுகிறது. எகிப்துக்கு, ஆதியில், (ப்ரான்ஸ், அமெரிகா முதலிய நேச ராஜ்யங்களின் தூண்டு தலாலே) ஏறக்குறைய ஸ்வாதீனமே கொடுப்பதாக விளம்பரம் செய்துவிட்டார்கள். ஸுயேஸ் கால்வா யைத் தமக்கு வைத்துக் கொண்டார்கள். வேறு சில பூமிகளையும் பல உரிமைகளையும் கவர்ந்து கொண்ட னர். இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு பரிபூர்ண ஸ்வா தீனம் கொடுப்பதாகவே வாக்குறுதி செய்து, பூமண் டலமறிய முழங்கி விட்டார்கள். இந்தியாவைப் போல்

எகிப்து பண வரவுள்ள பூமியில்லை. மெஸபடோமியாவை விழுங்கியதற்கு இஃதொரு பரிஹாரம் போன்றதாய் மூஸ்லிம்களை நமக்கு வசப்படுத்தக் கூடும். ஸூயேஸ் கால்வாய்தான் எகிப்திலே ஸாராம்சம். அதை நாம் வைத்துக் கொண்டாய் விட்டது. மேலும் நமது படை எப்படியேனும் எகிப்திலிருக்குமாதலால், எகிப்து தேசத்து ராஜாங்கத்தாரை ஸ்வாதீனங் கொடுத்த பின்னரும், நமது கைப் பொம்மைகளாக நம் இஷ்டப்படி ஆட்டிவரலாம். இப்போதைக்கு ப்ரான்ஸ், அமெரிகா முதலிய நேச கோடிகளின் வயிற்றெரிச்சலுக்கு இஃதோர் ஆறுதல் போலாகக் கூடும். தவிரவும், அந்த தேசம் விடுதலைக்காக எப்பாடும் படக்கூடிய நிலைமையிலிருக்கிறது. என, இங்ஙனம் பல காரணங்களை உத்தேசித்து ஆங்கில மந்திரிகள் ஆரம்பத்தில் எகிப்துக்கு ஸ்வாதீனங் கொடுப்பதாகிய இதிஹாஸத்தை ப்ரசுரப் படுத்தினர்கள். பின்னிட்டு, "காமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது." என்ன செய்யலாம்? லாய்ட் ஜ்யார்ஜ் உபதேசம் பண்ணுகிறார். கடவுள் தீர்ப்புப் பண்ணுகிறார்.

எதிர்பாராத விளைவுகள்

ஆங்கில மந்திரிகள் தினை விளைத்தோ மென்று கருதித் தினையறுக்கச் சென்ற இடத்தே பனை முளைத்திருக்கிறது. எகிப்துக்கு இவர்கள் ஸ்வாதீன விளம்பரம் செய்ததினால், முஸ்லிம் உலகத்தின் கோபம் ஆறவில்லை. முன்னிலும் அதிகமாகக் கொதித்

தெழுந்தது. எகிப்தை விடப் போகிறார்களா? வாஸ்தவந்தான். துருக்கியை ஏன் விடவில்லை? விடுவிக்கவில்லை? மெஸபொடோமியாவை, ஸிரியாவை ஏன் விடவில்லை? விடுவிக்கவில்லை? பாரஸீகத்தை ஏன் விழுங்க முயன்றார்கள்? அரபியாவை ஏன் விழுங்க முயலுகிறார்கள்? இந்தியாவுக்கு விடுதலை எப்போது? இத்தனை கேள்விகள் சீறுவாணம் வீசிக் கொண்டிருந்த இடத்தில் எகிப்துக்கு இவர்கள் ஸ்வாதீன விளம்பரம் செய்ததினின்றும் உலகத்துக்கு முஸல்மான்களின் புதிய மனக் கொதிப்புக்கள் அடங்கவில்லை. இப்படித்தான் நேருமென்பதை யாரும் முன் யோசனையாலே தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும் அவருடைய ப்ரிய ராஜீகத் தூணைவருக்கும் ஊறு சக்தி குறைவு. காலைக்குக் காலையில் இன்ன கார்யம் இப்படியாகக கூடுமென்பதை யுணரும் எதிர்கால ஞானமில்லாதோர் மந்திரி ஸ்தானத்துக்குத் தக்கோரல்லர். எனினும், இவர்கள் அதனாலே ஸங்கடங்களுகுட்படுவது கிடையாது.

மாற்றிச் சொல்லும் வித்தையில் மஹா மஹோபாத்யாயர்

ஏனெனில ஒரு முறை சொல்லியதை மறு முறை மனஸ்ஸாக்ஷியை வீசி யெறிந்து விட்டு, மாற்றிச் சொல்லும் வித்தையில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜும், அவருடைய ஸஹ மந்திரிகளும் மஹா மஹோபாத்யாயப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். அமெரிகாவிலிருந்து "ஸ்வதந்தர பரியோஷிணி ஸங்கத்தின்" (!) அத்யக்ஷகர்களாகிய ஆங்கில மந்திரி

கள் எதிர்பார்த்த கைம்மாறுகள் கிடைக்கவில்லை யென்று புலப்படுகிறது. அதினின்றும், எகிப்துக் குக் கொடுத்த வாக்குறுதியை அசைக்கலா மென்ற உத்தேசம் மேற்படி அத்யக்ஷகர்களுக்கேற்பட்டு விட்டதோ என்றெமக்கோர் ஐயமுண்டாகிறது. அங் ஙனம் அந்த வாக்குறுதியைக் கொஞ்சம் புதிய வ்யாக்யானங்களுக் குட்படுத்துவதற்கு முகவுரையாக லார்ட் மில்நரைச் சிறிது காலத்துக்கு விலக்கி வைத்திருக்கிறார்களென்று தோன்றுகிறது. ஆனல் இதிலும் உத்தேசந்தான் ரிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் கூட்டத்தாருக்குரியது. தீர்ப்பு கடவுளுக்குரியது. முதலாவது, கடவுளுக்கும் இரண்டாவது எகிப்துக்கு முரியது.

"கிலாபத்" விஷயம்

ஸ்மர்னவில் ஆஹாரமின்றி வருந்தும் முஸ்லிம் களுடைய ஸம்ரக்ஷிப்புக்கு பாரத மத்ய "கிலாபத்" ஸமிதியார் ஐயாயிரம் பவுன் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. இது போன்ற செயல்களே உலகத்து முஸ்லிம்களுக்குள் ஏற்கெனவே யுள்ளதாகிய ஸஹோதரப் பற்றுதலை இன்னும் உறுதிப் படுத்தும் நற்செயல்களாம். இது நிற்க, கிலாபத் ஸமிதிகளின் முயற்சியால் ஒத்துழையாமைக் கொள்கை நாட்டில் உறுதியடைந்து வருதல் யாராலும் மறுக்க முடியாத செய்தி. இந்த ஸமயத்தில் இந்தியா கவர்ன்மெண் டார் அதிரத்தையாக இருப்பதைப் பார்த்து நமக் குப் பெரு வியப்புத் தோன்றுகிறது. "ஸெவர்" உடம்பாடு, அநீதி, நஷ்டம், அபகீர்த்தி-இவை

வேண்டுமா? முஸ்லிம்களின் கட்டு, நீதி, கீர்த்தி, நஷ்டமெய்தாமை இவை வேண்டுமா? இந்திய முஸ்லிம்களே இக்காலத்தில் உலகத்து முஸல்மான்களுக்கு முக்யப் பிரதிநிதிகள். இந்திய முஸ்லிம்கள் என்ன நினைப்புக்கள் கொண்டிருக்கிறார்களென்பதை இந்தியா கவர்ன்மெண்டார் மேன் மேலும் அழுத்தமாக வற்புறுத்தித் தெரிவித்தாலன்றித் தாமாகவே தெரிந்து வேலை செய்யக்கூடிய அத்தகை புத்திமான்களுமல்லர் லாய்ட் ஜ்யார்ஜ் ஸபை மந்திரிகள்.

குறிப்புகள்

சக்திதாஸன்

19 ஜனவரி 1921 ரௌத்திரி தை 7

ஸௌந்தர்ய மஹால் உபந்யாஸத்தில் கர்னல் வெட்ஜ்வுட் இந்த மாகாணத்தாருக்கு ஓரிரண்டு நேர்த்தியான புத்திமதி சொல்லியிருக்கிறார். இந்த கவர்ன்மெண்டுக்குச் சட்ட ஸபையில் தோன்றும் எதிர்க கக்ஷி காலுக்கு நாள் வளர்ச்சி யெய்தித் தீரும். பார்லிமெண்ட் அனுஷ்டானங்களைப் பழமைப் பட்ட, சிதலமான, பிளவுபட்ட முறைகளிலே அனுஷ்டிக்கும் ராஜாங்கத்தாருக்கு எதிர்க் கக்ஷி மேன்மேலும் வளர்ச்சி பெறுமென்பது திண்ணம். முதலாவது விதிகளையும் உபவிதிகளையும் தக்கவாறு மாற்றி ஒரு சீட்டாளிக் கூட்டத்துக்கொரு பிரதிநிதி யென்று ஏற்படுத்த வேண்டும். வகுப்புவாரிப் பிரதி நிதி முறையை ஒழித்துவிட வேண்டும். அது வெறும் சதி, ஏமாற்றென்பது ருஜுவாய் விட்டது. பிரா மணரல்லாதாருக்குத் தனியாக ஸ்தானங்கள் ஏற்படுத்தியது புத்திபில்லாத குழந்தை விளையாட் டன்றி மற்றில்லை. மஹமதியர்களுக்குப் பொதுக் கூட்டத்துடனே கலந்து சீட்டுப் போடலாமென்ற ஏற்பாடு வைத்திருந்தால், அவர்கள் பொதுவாக எல்லாப் பிரதிநிதிகளிலும் யார் யார் முஸ்லிம் அனுகூலங்களைக் கவனியாதிருந்தனரோ, அவர்களை

யெல்லாம் கீக்க முயன்று ஸபையில் தமக்கு அதிக பலம் ஏற்படுத்திக் கொண்டிருப்பார்கள். இப்போது அவர்கள் குறிப்பிட்ட சிலரையன்றி மற்றப் பிரதிநிதிகளின் மீது எவ்வித சக்தியுமில்லாதிருக்கிறார்கள். அச் சிலரோ சட்ட சபையில் எப்போதும் சிறு பகுதியாகவே யிருப்பார்கள் என்று கர்னல் வெட்ஜ்வுட் சொன்னார்.

தீர்வைப் பாகுபாடு

குறிப்பிட்ட அளவைக் காட்டிலும் அதிக விஸ்தாரமான பூஸ்திதியுடையவர்களுக்கு அதிகமான தீர்வை விதித்தால், அவர்கள் அந்த ஸங்கடத்தைப் பொறுக்க முடியாமல், தங்களுடைய நிலத்தில் மிஞ்சின பகுதிகளைச் சிறு குடியானவர்களுக்கு விற்கத் தலைப்படுவார்கள். அதினின்றும், பூஸ்திதி முழுமையும் இப்போது மூன்றே முக்கால் மனிதரின் கையில் சிக்கிக் கொண்டிருக்கையிலே பண்ணைத் தொழிலாளிகள் தன் தொழிற்பயனை யுண்ணமாட்டாத கூலியாட்களாக இருக்கும் நிலைமை மாறிவிடும். பூஸ்திதி ஆதி திராவிடரிடையேயும், மற்றக் குடியானவரிடையேயும் அதிகமாகப் பரவுதலெய்தியிருக்கும். இதைக் கருதிப் பெரிய பூஸ்திதிகளுக்கு அதிகத் தீர்வை விதிக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கர்னல் வெட்ஜ்வுட் அபிப்பிராயப் படுகிறார். இந்தியாவில் பூஸ்திதி விவகாரத்தை முற்றிலும் நியாயமாகத் தீர்த்துக் கொள்ள உத்தேசித்திருக்கிறோம் வரம்புக்கு மிஞ்சின தீர்வையை ஒரு பகுதியாருக்கு மாத்திரம் விதித்தல் அநியாய

மென்பதில் ஐயமில்லை. கொள்ளைக்காரனும் கொள்ளையடிக்கக்கூடாது. உலகத்தில் கொள்ளை கூடாதென்று நிலைநிறுத்த வந்த தர்மிஷ்டர்களும் கொள்ளையடிக்கக் கூடாது. இப்போது கர்னல் வெட்ஸ்டவுட் காட்டுகிற பாதை கடைசியாக லெனினுடைய கொள்கையில் வந்து முடியும். அதாவது, பூஸ்திதிகளையெல்லாம் ராஜாங்கத்தார் ஜனங்களுக்கென்று சொல்லிப் பலாத்காரமாகப் பறித்துக கொண்டு உடையவரைத் தெருவில் விடவேண்டுமென்ற கொள்கை.

இங்ஙனம் கொள்ளையிடாமல், ஏழைகள், அதாவது, பூஸ்திதி யில்லாதவர்களிடம் ஊர்ப் பொது நன்மைக்கும் அபிவிருத்திக்குமுரிய ஸகலவித வேலைகளும் வாங்கிக் கொண்டு, அதற்குக் கைம்மாறாக, ஒருயிர் மிச்சமில்லாமல், அத்தனை ஏழைகளுக்கும் தகுந்த ஆஹாரம் கொடுத்துவிட வேண்டுமென்று சட்டஞ் செய்துவிட்டால் போதும். ஒருயிரேனும், ஒருபோதேனும், சோறின்றி இவ்வுக ராஜாங்கம் இடங் கொடாதென்ற உறுதிப்பாடு ஏற்பட்டுவிடும். அடே அப்பா! பசிப் பயமொன்று மாத்திரம் நீங்கிவிட்டால் மனித ஜாதி என்ன மேன்மையடைந்து நிற்கும்! இங்ஙனம், ஸமாதானமான முறையில் இந்தப் பசித் தொல்லையை இந்தியா மாற்றிவிட்டிருப்பதைக் கண்முன்னே காணில், மற்ற உலகத்து நாடுகளும் இந்த அறநெறியைப் பின்பற்றி யொழுகும். இதற்கு ஸ்வராஜ்யம் வேண்டும்!

இங்கிலாந்தில் தொழிலற்றோரின் நிலைமை

தொழிலின்றி யிருப்போருக்குள்ளேதான், இங்கிலாந்து போன்ற தேசங்களில், ருஷியக் கொள்கைகள் வெகு தீவிரமாகப் பரவி வருகின்றன. பொதுவாக அக் கொள்கைகள் தொழிலாளரைக் குறித்தன. ஆதலால் தொழிலாளரிற் பலர் அக் கொள்கைகளை அங்கீகாரம் செய்கிறார்கள். எனினும், அக் கொள்கைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதில் தொழிலாளர் காட்டும் சிரத்தையைக் காட்டிலும், தொழிலின்றி, உணவின்றி வருந்தும் கூட்டத்தார் பல மடங்கு அதிக சிரத்தை காட்டுகிறார்கள். எனவே, பொதுவாக ஜனோபகாரசிந்தையால் மாத்திரமேயன்றி, ராஜ்ய தந்திரத்தின் அவஸரங்களாலும் ஐரோப்பிய ராஜதந்திரிகள் தத்தம் நாடுகளில் தொழிலற்றிருப்போருக்கு ஏதேனும் நிவாரணம் செய்ய வேண்டுமென்ற அவசியத்துக்குட்பட்டிருக்கிறார்கள். எனவே, இங்கிலாந்தில், தொழிலில்லாதோரைப் பற்றி ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணைஸபை யொன்றுளது. அதில் வந்து தம்முடன் கலந்து வேலை செய்யும்படி தொழிற் சங்கங்களின் ஐக்ய மஹாஸமாஜத்தாருக்கு ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் அழைப்புப் பத்திரமனுப்பினார்கள். அந்தத் தொழிலாளிகள் இது தம்மால் இயலாதென்று சொல்லி மறுத்துவிட்டார்கள். ஸர்க்கார்க் கமிட்டி மூலமாக யாதொரு பயன்படக்கூடிய தொழிலும் நடக்காதென்றுணர்ந்த அத் தொழிற் பிரதிநிதிகள் அவ்விஷயமாகத் தம்மால் இயன்ற பரிஹாரங்கள்

செய்யும் பொருட்டுத் தம்முடைய சொந்த ஆலோசனை ஸமிதியொன்று நியமனம் செய்திருக்கிறார்கள்.

ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரின் சுருக்கு யோசனை

கவர்ன்மெண்ட் கார்யங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் தொழிலாளிகளின் வேலை நேரத்தைக் குறைத்தால் அவர்களுக்கும் ஆறுதல் ஏற்படும்; தொழிலின்றி யிருப்போர் பலருக்கு ராஜாங்கத்தார் தொழிலேற்படுத்திக் கொடுக்கவும் வழியுண்டாகும். இங்ஙனம் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் சொல்லிய உபாயத்தைத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும், ஸர்க்கார் வேலையாட்களும் நிராகரித்து விட்டனர். ஏனென்றால், குறைந்த நேரம் வேலை செய்து, தொழிலாளிகள் அதற்குத் தக்கபடி குறைந்த சம்பளம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்ட் சொல்லுகிறது. இப்போதுள்ள சம்பளத்துக்குக் கீழே வாங்கினால் ஜீவிக்க முடியாதென்று தொழிலாளிகள் சொல்லுகிறார்கள்.

இந்தியாவில் தொழிலற்றிருப்போர்

இங்கிலிஷ் படித்தவர்களுக்குள்ளே குறைவாகவும் அதாவது ஆயிரக் கணக்காகவும், இங்கிலிஷ் படிப்பில்லாதவர்களுக்குள்ளே மிகுதியாகவும் அதாவது லக்ஷக் கணக்காகவும் யாதேனும் தொழில் செய்து பிழைக்க வேண்டுமென்ற ஆவலும் தொழில் செய்யுந் திறமையு முடையோராயினும் தொழிலகப்படாமல் வறுமைப் பிசாசினால் கிழிப்

புண்டு மடிகிறார்கள். ஏனென்று கேட்பாரில்லை. ராஜாங்கத்தார் இந்த விஷயத்தை ஸ்மரிக்கவே யில்லை. ராஜாக்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள் இதைக் கருதவில்லை. மடாதிபதிகள், தர்மகர்த்தாக கள் இதனை ஸ்மரிக்கவில்லை. ஜனத் தலைவர்கள், ராஜ்ய தந்திரிகள் இதைக் கருதவில்லை. உபந்யாஸ கர்களும், பத்திராதிபர்களும், உபாத்யாயர்களும் இதைப் புறக்கணித்து விடுகிறார்கள். இந்தியாவிலே பசியால் மடிவோரைப் பார்த்திரங்குவாரில்லையா? தெய்வமில்லையா?

கால விளக்கு

சக்திதாஸன்

4 பிப்ரவரி 1921 ரௌத்திரி கை 28

"நாகரிகத்தின் வளர்ச்சி"

ப்ராண்ஸ் தேசத்து முதல் மந்திரி ஸ்தானத்திலிருந்தவராகிய ஸ்ரீமான் க்ளெமன்ஸோ சில தினங்களாக இந்தியாவில் ஸஞ்சாரம் பண்ணி வரும் செய்தி நம் நேயர்களுக்குத் தெரிந்ததேயாம். இவருக்குச் சில நாட்களின் முன்னே பம்பாயில் நடந்த விருந்தின் போது இவர் செய்த ப்ரஸங்கத்தில் பின் வரும் ஸார மயமான வாக்யம் காணப்படுகிறது:—

"ப்ராண்ஸிற்காக இரத்தம் சிந்திய மக்களைப் பெற்ற தேசத்தை வந்து பார்த்தது எனக்குப் பெருமையுண்டாக்குகிறது. ப்ரெஞ்ச் குடும்பங்களுடன் இந்திய சிப்பாய்களிருந்தபோது நான் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய மரியாதையும் அன்பும் ப்ராண்ஸ் தேசத்தாரை மோஹிக்கும்படி செய்தன. கீழ்த்திசையானது நாகரிகத்தில் குறைந்ததன்று. அன்பு, மானுஷீகம் என்பவற்றிற் குரிய மஹோந்நத லக்ஷ்யங்களெல்லாம் கீழ்த்திசையிலிருந்து வந்தன. மேற்குத் திசையார் அவற்றை ஸ்வீகரித்துத் தம்முடைய லக்ஷ்யங்களாகச் செய்து கொண்டனர். எனவே, உங்களைக் காட்டிலும் உயர்ந்த நாகரிகத்

தின் ப்ரதிநிதியாக என்னை மதித்து நான் உங்களோடு பேசவில்லை. (இந்தியாவாகிய) நாகரிகத்தின் ஊற்றை நோக்கி நீஞ்சி வந்தவனுக என்னை மதிக்கிறேன்" என்றார்.

இவர் யார்? ப்ரான்ஸ் தேசத்து முதல் மந்திரியாக இருந்து அதி ஸமீப காலத்தில் விலகியவர். வெறும் இலக்கியப் படிப்பு மட்டும் உடையவரல்லர். மிகவும் பழுத்த லௌகிகத் தேர்ச்சியும், ஐரோப்பிய ராஜ தந்த்ரத்தில் மஹாகீர்த்தி வாய்ந்த நிபுணதன்மையு முடையவர். இவரே பத்து வருஷங்களுக்கு முந்தி இவ்விதமாகப் பேசியிருக்கமாட்டார். இரண்டு வருஷங்களுக்கு முன் இப்படிப் பேசியிருக்கமாட்டார். நினைத்துக்கூட இருக்கமாட்டார். ஐரோப்பிய நாகரிகமே மேம்பட்டதென்று நினைத்திருப்பார். இன்றைக்கு இந்தியாவை வந்து கூடியவரை நிஷ்பக்ஷபாதமான, தெளிந்த விழிகளுடன் பார்க்கும் போது, இந்த எண்ணம் இவர்மீது வற்புறுத்தப் படுகிறது. இவருடைய வசனத்தை நன்றாக ஊன்றிப் படிக்கும்படி நம்மவர்களை வேண்டுகிறேன். இவர் என்ன சொல்லுகிறார்? ஐரோப்பிய நாகரிகத்தின் பரம லக்ஷ்யங்கள் அவர்கள் எதிர் காலத்தில் நிறைவேற்றக் கருதும் தர்மங்கள், ஐரோப்பாவுக்கு சொந்தமல்ல வென்றும் அவை கீழ்த்திசையிலிருந்தே கிடைத்தன வென்றும் சொல்லுகிறார். நாமே ஐரோப்பாவுக்கு லக்ஷ்ய தானம் செய்தோமென்றும் நம்முதவியின்றி அவர்கள் இன்னும் பச்சை குத்திய நிர்வாணமான காட்டு ஜனங்களாகவே யிருந்திருப்பார்களென்றும் அங்கீகரித்துக்

கொள்ளுகிறார். ஆசியாவிலிருந்து நாகரிகம் ஐரோப்பாவுக்குச் சென்றது. ஆசியாவின் நாகரிகத்துக்கு மூல ஸ்தானம் நமது பாரத வர்ஷம். ஆனால் முற்காலத்தில் நாம் எத்தனை உயர்ந்த நிலைமையிலிருந்து உலகத்திற்கு எத்தனை அரிய நலங்கள் செய்த போதிலும் இப்போது நாம் சரியான நிலைமையிலில்லாதிருப்போமானால் நமது பண்டைக் காலப் பெருமை யாருக்கும் நினைப்பிராது. இன்று மீண்டும் நமது தேசம் அபூர்வமான ஞானத் தெளிச்சியும் சக்திப் பெருக்கமும் உடையதாய்த் தலை தூக்கி நிற்பதே நமது பெருமையைக் குறித்து ஸ்ரீமான் களைமான்ஸோ முதலியவர்கள் மேலே காட்டியபடி பூஷித்துப் பேசக் காரணமாகிறது. எனினும், நாம் உலகத்திற்குப் புது வழி காட்டத் தகுதியுடையோ மென்பதை ருஜுப்படுத்தியிருக்கிறோமேயன்றி இன்னும் அந்த ஸ்தானத்தில் நாம் உறுதி பெறவில்லை. "மேற்குத் திசையிலிருப்பது போலவே இங்கும் மனிதர், பரஸ்பரம் அன்பு செலுத்தும்படி விதித்த கடவுளின் கட்டளையை மறந்து, ஒருவருக் கொருவர் விரோதிப்பதையும் கொலை புரிவதையும் கண்டு நான் வ்யஸனப் படுகிறேன்" என்று ஸ்ரீ க்ளைமான்ஸோவே சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த ஸமயத்தில் இந்தியாவில் பரவிவரும் ஸாத்விக தர்மக் காற்றை சுவாஸியாமலிருப்பாரானால், ஸ்ரீ க்ளைமான்ஸோவின் வாக்கில் இந்த வார்த்தை உதித்தே யிராதென்று நான் நிச்சயமாகக் கூறுவேன். இப்போது ஸ்ரீ க்ளைமான்ஸோ பாரீஸ் நகரத்திலிருந்தால் அங்கு மறுபடி வீசி

வரும் ஜெர்மானிய விரோதக் காற்று இவரையும் தாக்கி, இவருடைய புத்தி ஸாத்விக நெறிகளிலே செல்ல இடங் கொடுத்திராது. எனவே, இந்தியா அன்பு நெறியால் வலிமை யோங்கி உலகை நடத்த வேண்டுமென்ற கொள்கையை ஆசரிக்கத் தொடங்கி விட்டது. இந்த ஆசாரத்தின் ஆரம்பக் கஷ்டகளே மிகவும் ஆச்சர்யமாக, உலகத்தாரெல்லாருங் கண்டு வியக்கும்படி யிருக்கின்றன. இனி இக் கொள்கை இந்தியாவில் மக்களுக்குள்ளே எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் பூர்ணமாக ஸ்தாபிக்கப் பட்டு விளங் கும் காலத்தைக் கடவுள் விரைவிலே அருள் செய்வாராகுக.

ஸிர்ஸி ஜில்லா கமிஷனர்

பம்பாய் மாகாணத்தில் ஸிர்ஸி ஜில்லா கமிஷ னர் மிஸ்டர் காடெல் என்பவரிடம் மூன்று இந்திய கனவான்கள் ஒரு விண்ணப்பம் கொண்டு போனர் கள். அப்போது அந்த மூவரையும் மிஸ்டர் காடெல் அடித்தார்; புடைத்தார்; கழுத்தை நெரித்தார். இந்தப் படிக்கு ஸிர்ஸி நகரத்தார் மூன்று பேர் கை யெழுத்திட்டு "பம்பாய் க்ரானிகள்" பத்திரிகைக்கு ஒரு கடிதமெழுதினர்கள். பின்னிட்டு பம்பாய் கவர்ன்மெண்ட் கார்யதரிசி மிஸ்டர் கரேரர் என்பவர் அவ்விஷயமாக ஸர்க்கார்ப் பக்கத்து வாக்குமூல மொன்றை அதே பத்திரிகைக்கனுப்பினர். அதற் குப் பிறகு மறுபடி மூன்று பேர் மேற்படி ஸம்பவம் நடக்கையில் ஸாக்ஷிகளாக நின்று பார்த்தோர் அந்தப் பத்திரிகைக்குக் கையொப்பமிட்டனுப்பி

யுள்ள கடிதமொன்றில் ஸர்க்கார் வாக்குமூலம் பிழை யென்றும் மிஸ்டர் காடெல் மனதறிந்து, வேண்டுமென்றே புடைத்தா ரென்றும் தெரிவிக் கிறார்கள்.

பம்பாய் கவர்னர் இந்த விஷயத்தைக் குறித்து விசாரணைகள் நடத்தி வருகிறார். ஆனல் மாமூல்படி அடித்த உத்தியோகஸ்தரை மாத்திரம் விசாரித்து, அவர் தாம் புஷ்பாஞ்சலி செய்ததாக எழுதும் அறிக்கையைப் படித்து, கவர்ன்மெண்டார் திருப்தி கொண்டிருந்தால் போதாது. கை வீசி அடிக்கும் அநாகரிக மனிதர் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களா கவும் ஜில்லா "மாஜிஸ்ட்ரேட்களாக"வும் இருந்து நீதி பரிபாலனம் செய்யும் கோலத்தை இந்தியா இன்னும் ஒரு க்ஷணங்கூடப் பொறுத்திராது.

மிஸ்டர் காடெல் அடித்த காரணம்

இதைப் பற்றிய பூர்வ கதையை ஸமீபத்தில் ப்ரசுரமாயிருக்கும் ஸாக்ஷிகளுடைய கடிதத்தி லிருந்து ஸங்க்ரஹமாக எடுத்தெழுதுகிறோம் :— வண்டிகளைக் கமிஷனருடைய அவசியத்துக்காகப் பிடித்து வரும்படி போலீஸாருக்கு உத்தரவு கொடுக் கப்பட்டது. அவர்கள் அந்தக் கட்டளையை நிறை வேற்றுகையிலே பலவித அதிக்கிரமங்களிழைத் தனர். ஒரு காளைக்குக் கழுத்தில் புண்ணுய் இரத்த மொழுகிக் கொண்டிருந்தது. அந்தக் காளையையும், வண்டி சொந்தக்காரர்களையும் உடன் கொண்டு, நகரத்து ப்ரமுகர் கமிஷனரிடம் அதன் ஸம்பந்த மாக மனுச் செய்துகொள்ள வந்தார்கள். துரைக்கு

வண்டி கொடுக்கச் சொன்னால், அதை யெதிர்த்து மனுக் கொடுக்க வந்தார்கள் பார்த்தாயா என்ற கோபம் கமிஷனரின் தலைக்கேறி விட்டது. உடனே அபிமன்யு சண்டை! கண்டவனுக்கெல்லாம் அடி, குத்து, மிதி, உதை! ஆனால் இந்த அபிமன்யுவுக் கெதிரே வில்லாளிகளில்லை; வெறுமே விண்ணப் பச் சொல்லாளிகள் இருந்தனர். எனவே, மிஸ்டர் காடெல் உயிர் தப்பியதுமல்லாமல், பின்னிட்டு ஸர்க்கார் விசாரணையிலே விஷயங்களை உண்மை தவறிச் சொல்லிவர இடமேற்பட்டதென்று பேற் படி சாக்ஷிகள் தெரிவிக்கிறார்கள்.

ஸ்ரீமான் போமான்ஜியின் நன்கொடை

பம்பாயில் மாணக்கர்களுடைய இயக்கத்தில் ஸ்ரீமான் போமான்ஜி மிகவும் சிரத்தை யெடுத்து வருவதாகத் தெரிகிறது. இந்த இயக்கத்தை நடத்தி வருபவராகிய ஸ்ரீமான் தேச பாண்டேயினிடம் ஸ்ரீ போமான்ஜி 10,000 ரூபாய் கொடுத்திருக்கிறார். பாடசாலை விட்டு ஒத்துழையாமைக் கிளர்ச்சிக்கு உதவி செய்யும் மாணக்கர்களின் தற்காலச் செலவு களுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளும்படி இந்தப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சில குறிப்புகள்

சக்திதாஸன்

8 பிப்ரவரி 1921 ரௌத்ரி தை 27

கட்டாயக் கூலி

சிம்லா பிரதேசங்களிலும், அவற்றையடுத்த சுமாலன் பிரதேசங்களிலும் கட்டாயக் கூலி முறை இன்றும் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. எவராவது நிர்வாஹ உத்தியோகஸ்தர் அல்லது ராணுவ உத்யோகஸ்தர் அல்மோரா, நைநிதல், கட்வால் என்ற ஜில்லாக்களில் யாத்திரை செய்வாராயின் "பட்லாரி" எனப்படும் கிராமாதிகாரிகளுக்கு இத்தனை கூலியாட்கள் தயார் செய்து கொடுக்கும் படி கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. பட்லாரியாரை வேண்டுமானாலும் கூப்பிடலாம். அங்ஙனம் மைல் கணக்காக நடந்து வந்து, பிறகு மைல் கணக்காக மூட்டைகளைச் சுமந்து சென்று மீட்டும் அந்தக் கூலியாட்கள் தத்தம் வாஸஸ்தலங்கள் போய்ச் சேர மூன்று நாட்கள் பிடிக்கின்றன. இந்த மூன்று நாளுக்கும் சேர்த்துச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? ஆறணை. மகன் சாகக் கிடக்கும்போது பிதாவைக் கூலி வேலைக்கழைத்தால் அப்பிதா தன் மகனைக் கவனியாமல், துரைக்கு மூட்டை சுமக்க வந்து தீர வேண்டும். வராவிட்டால் 5 ரூபாய் அபராதம். இந்த மாதிரி அந்த ஜில்லாக்களில் வஸிப்போர்

கட்டாய வேலைக்கு வரவேண்டுமென்று ஸர்க்காருக்கும் அந்த ஜனங்களுக்கும் நெடுங் காலத்துக்கு முன்னே செய்து கொள்ளப்பட்டதோர் உடம்பாடிருக்கிறதாம்! இன் சந்ததியாரை ஜில்லாக்கணக்காக அடிமைகளாக இருக்கும்படி பூர்வ ஸந்ததியாரில் ஒரு சில மனிதர் எழுதிக் கொடுக்கும் உடம்பாடு செல்லாதென்பதை நம் அதிகாரிகள் அறியமாட்டார்கள் போலும்! சென்ற 18 வருஷங்களாக இந்த அனுஷ்டானத்தை ஒழித்து விடும்படி அந்தப் பிரதேசத்தார் ஸர்க்காருக்கு ஓயாமல் விண்ணப்பஞ் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த விண்ணப்பங்களை அதிகாரிகள் கழிவுக் காகிதக் குப்பையிலே போட்டுவிட்டுச் சும்மா இருந்து வருகிறார்கள்.

சாத்விக எதிர்ப்பு

ஆனால் இந்தியாவில் தோன்றியிருக்கும் புதிய ஸாத்விக சக்தி லிம்லாக் குன்றுகளையும் சூழ்ந்து விட்டது. ஜனவரி 13ஆம் தேதியன்று அல்மோரா ஜில்லாவிலுள்ள "வ்யாகரேசுரம்" என்ற ஊரில் ஒரு பெரிய சந்தை நடந்தது. அப்போது ஜனங்களெல்லாரும் கூட்டங் கூடிக் "கூலி உதார்" என்று வழங்கப்படும் இந்தக் கட்டாயக் கூலி முறைமைக்கு இனி உட்படுவதில்லையென்று பிரதிக்ஞை செய்து கொண்டார்கள்.

இரண்டு மூன்று ஜில்லா வாஸிகள் அத்தனை பேரையும் ஒருங்கே கூலியாட்களாகப் பாவித்து நடத்தும் இந்த மிருகத்தனமான முறைமையால்,

ஜனங்கள் சில ஸமயங்களில் பனியிலே மூட்டை சுமக்கமாட்டாமல் விறைத்துச் செத்துப்போய் விடுகிறார்கள். இந்த முறையினிடம் உண்டாகிய அருவருப்பு மிஞ்சி ஜனங்கள் கலகஞ் செய்யக்கூடிய நிலைமையிலிருக்கிறார்களென்று மிஸ்டர் வி. எப். ஆண்ட்ரூஸ் தெரிவிக்கிறார். இதையும், உத்யோகஸ்தர்களுக்கு காய், கறி, ஆடு, கோழி, ரொட்டி மாவிறகு முதலியன ஜனங்களிடம் பெறும் முறையையும் நாட்டில் வைத்தாதரிக்கும் ராஜாங்கத்தார் நாகரிகப் பதவியுடையவர்களாக மாட்டார்கள்.

"கௌரவ" ராம ராயலிங்காரின் ஸமத்வ ஞானம்

சில தினங்களின் முன்பு அமலாபுரத்தில் பஞ்சமர்களின் பிரதிநிதிக் கூட்டமொன்று நம் மாகாணத்துப் புதிய பிராமணரல்லாத மந்திரிகளை ஸந்தித்தபோது அம்மந்திரிகளில் ஒருவராகிய ஸ்ரீமான் ராமராயனிங்கார் மிகவும் ரஸமாகப் பேசியிருக்கிறார். இதுவரை பிராமணரல்லாத வகுப்பினர் பஞ்சமர்களிடம் தக்கபடி அனுதாபம் செலுத்தாமல் இருந்துவரும் காரணம் பிராமணர்களுக்கு மன வருத்தமுண்டாகுமென்ற பயத்தைத் தவிர வேறில்லை யென்றும், இப்போது பிராமணரல்லாதாரில் மேற்குலத்தார் பிராமணர்களின் ஆதிக்கத்தை உதறி எறிந்து விட்டபடியால், இனிமேல் பிராமணரல்லாதார் பஞ்சமர்களை மிகவும் ஆதரிக்கத் தொடங்கி விடுவார்களென்றும் இந்த மந்திரி சொன்னார். மேலும் இனிமேல் பிராமணரல்லா

தோரில் மேற்குலத்தார் பஞ்சமர்களைப் பரிபூர்ண ஸமத்வத்துடனும் சொந்த ஸஹோதரர் போலவும் நடத்த முற்றிலும் விருப்பத்தோடிருக்கிறார்கள் என்று இவர் சொன்னார். இங்ஙனம் இவர் பிராமணரல்லாதோரும் பஞ்சமரல்லாதோருமாகிய மற்ற ஹிந்துக்கள் அனைவரும் இப்போதே பஞ்சமர்களை முழுதும் ஸமானமாக நடத்த உடம்படுகிறார்களென்று எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு உறுதி சொல்லுகிறரென்பது நமக்கு விளங்கவில்லை. ஏற்கெனவே ஹிந்துக்களில் பிராமணர் முதலிய எல்லா வகுப்புகளிலும் அங்கங்கே ஜாதிக் கட்டுக்களை உதறிவிட்டு எல்லா ஜாதியாரையும் ஸமானமாக நடத்தி வருகிறார்களென்பது மெய்யே. பொதுப்படையாக எல்லா வகுப்புகளிலும் ஜாதிக் கட்டுக்கள் தளர்ச்சி பெற்று ஸமத்வக் கொள்கை ஓங்கிக் கொண்டு வருகிறதென்பதும் மெய்யே. ஆசாரத்திருத்த முயற்சி ஆரம்ப முதல் நீதிபதி ராணடே முதலிய பிராமணர்களாலே அதிக சிரத்தையுடன் போற்றப்பட்டு வருகிற தென்பதை நாம் மறக்கக் கூடாது. ஆனால் இவற்றைக் கொண்டு, இன்றைக்கே பிராமணரல்லாதாரில் மேல் வகுப்பினர் பஞ்சமர்களோடு ஸமானமாக உறவாடத்தயாராக இருக்கிறார்களென்று சொல்லுதல் அதிசயோக்தி. எனிலும் ஸ்ரீராமராயனிங்கார் தம்மளவிலேனும் தாம் சொல்லியதை மெய்ப்படுத்திக்காட்டுவாரென்று நம்புகிறேன். இவ்விஷயத்தில் இவர் மனத்தோடு பேசினாரா, அல்லது வெறுமே வெளிப் பேச்சுத்தானா, என்பதைப்

பஞ்சமத் திராவிட நண்பர்கள் பரிசோதனை செய்து பார்க்கும்படி வேண்டுகிறேன்.

ஜெர்மனியிடம் பணம் வாங்குதல்

ஜெர்மனியிடம் வசூலிக்க வேண்டிய தொகையைக் குறித்து நேசக் கக்ஷியாருள்ளே ஒரு முகமான அபிப்பிராய ஒற்றுமை ஏற்பட்டு விட்டது. அதாவது ப்ரான்ஸ் தேசத்தார் கேட்டபடி நம்பத் தகாத பொன் குவைகள் ஜெர்மனியிடம் வாங்கும் விஷயத்தில் இதுவரை மன மிணங்கா திருந்த இங்கிலாந்து முதலிய தேசத்தாரும் இப்போதிணங்கி விட்டார்கள். ஆனால் அதே காலத்தில் "நேசகர்கள்" கேட்கும் அபரிமிதமான தொகைகளை ஜெர்மனியால் செலுத்த முடியாதாகையால், நேசக்கக்ஷியாரின் ஏற்பாடுகளைத் தள்ளி அவற்றுக்கு மாற்றேற்பாடுகள் சில தயார் செய்து கொடுப்பதாக ஜெர்மன் மந்திரிகள் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். எனவே நேசக் கக்ஷியாருள் ஏற்பட்ட இணக்கத்தினின்றும் நாணய மாற்றுச் சந்தைகளிலும் பங்குப்பத்திரச் சந்தைகளிலும் எதிர்பார்க்கப்பட்ட மாறுதல்கள் தோன்றவில்லை. ஏனென்றால், நேசக் கக்ஷியாரின் வேண்டுதலுக்கிணங்கும்படி ஜெர்மனியை இவர்கள் வற்புறுத்த முடியுமா என்பதைப் பற்றி வியாபாரிகளுக்குள்ளே ஸம்ஸயம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் ஜெர்மனி தான் செலுத்த வேண்டிய சுட்டுப் பணங்களை 'மார்க்' என்ற ஜெர்மன் நாணயங்களில் செலுத்தும்படி உடன்பாடு விதிக்கிறது. எனவே, இப்போது ஜெர்மன் ராஜ்ய

கத்தார் கோடிக் கணக்கான காயிதப் பணத்தை அடித்து, "மார்க்" நாணயத்தின் மதிப்புக் குறைந்து போகும்படி செய்வார்களோ என்றும் வியாபாரிகள் பயப்படுகிறார்கள். இது பற்றியே நேசக் கக்ஷியாரின் நாணயங்களுக்கு எதிர்பார்க்கப்பட்டபடி மதிப்பேறவில்லை யென்று லண்டன் நகரத்துப் பொருள் நிபுணர்கள் சொல்வதாக ராய்ட்டர் தெரிவிக்கிறார். இப்போது (ஜூன்-31) ஒரு பவுனுக்கு 24 மார்க் விலை. ஜெர்மன் ஜனங்களின் மனதில் நேசக் கக்ஷியார்களின் முடிவு பற்றி மிக்க அதிருப்தியும் கொதிப்பும் ஏறியிருப்பதாகத் தெரிகிறது.

ஹாஸ்யம்

காளிதாஸன்

10 பிப்ரவரி 1921 சௌத்திரி தை 29

பத்திரிகைகளில் "பால்" வேற்றுமை

உயிரில்லாத வஸ்துக்களுக்குக்கூட ஆண் பால், பெண்பால் கற்பித்தல் கவிகளின் வழக்கம். ஸம்ஸ்க்ருதம் முதலிய புராதன பாஷைகள் சிலவற்றிலும், ப்ரெஞ்சு, ஹிந்தி முதலிய நவீன பாஷைகள் சிலவற்றிலும், பெரும்பான்மையான பொருட் பெயர்களுக்கு மட்டுமேயன்றி, குணப் பெயர்களுக்குங் கூடப் பால் வேற்றுமைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த பாஷைகளைக் கற்போர் சொற்களின் இறுதி யெழுத்துக்களைக் கொண்டும், நெடுங்கால அநுபவத்தைக் கொண்டும் இன்ன சொல் இன்னபாலைச் சேர்ந்த தென்று நிர்ணயித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் தமிழ், இங்கிலிஷ் முதலிய பெரும்பான்மையான பாஷைகளில் இந்தக் கஷ்டம் கிடையாது. "மக்கள், தேவர், நரகர் உயர்திணை. மற்றுயிருள்ளவும், இல்லவும் அஃறிணை" என்ற தமிழிலக்கண விதியே பொதுவாக எல்லா பாஷைகளுக்கும் பொருந்தி நிற்கிறது. எனினும், இப்போது சிறிது காலமாகத் தமிழிலேயே, பத்திரிகைகளின் பெயர்களுக்குச் சிலர் ஆண்பால், பெண்பால் வகுக்கத் தொடங்கியிருப்பது மிகவும் விநோத

மாகத் தோன்றுவதால், இங்கு அதைக் குறித்து எழுத நேர்ந்தது. முதலாவது இவ் வழக்கம் "தேச பக்தன்' பத்திரிகையில் தொடக்க மெய்திற்றென்று நினைக்கிறோம். அப்பத்திரிகையின் பழைய பத்திராதி பராகிய ஸ்ரீமான் கலியாண ஸுந்தர முதலியாருடைய காலந்தொட்டே அதில், "சுதேசமித்திரன் சொல்லுகிறன்", "தேச பக்தன் சொல்லுகிறன்" என்பன போன்ற பிரயோகங்கள் வழங்கி வருகின்றன. இப்போது ஸ்ரீமான் முதலியார் நடத்திவரும் "நவசக்தி"ப் பத்திரிகையிலும் அவ்வழக்க மிருந்து வருகிறது. எனவே, சில தினங்களுக்கு முன் ஏதோ தொழிலாளர் விஷயமாக மேற்கூறிய இரண்டு பத்திரிகைகளுக்குள்ளே எழுந்திருக்கும் விவாதம் மிகவும் ரஸமாக இருக்கிறது. 'தேச பக்த"னை ஆண்பாலாக்கி ஸ்ரீ முதலியார் எழுதிவருகிறார். "தேசபக்தன்" புதிய பத்திராதிபரோ, "நவசக்தி" யைப் பெண் பாலாக்கி விட்டார்! திருஷ்டாந்தமாக மேற்படி ஆண்பால் பத்திரிகையிலுள்ள பின்வரும் வசனங்களைக் கவனியுங்கள். 'தேச பக்தன் தன் பிரதிநிதியை ஏன் அனுப்பவில்லையென்று நவசக்தி கேட்கிறாள்", "அவர் சொல்லியனுப்பியதையும் நவசக்தி மறந்து விட்டாள் போலும்." இந்தப் புதிய வழி ரஸமாகத்தான் இருக்கிறது. ஆனல் இதைப் பொது வழக்கமாக்க முயன்றால், பலவித ஸங்கடங்கள் ஏற்படுமென்று தோன்றுகிறது. முக்யமாக, அன்ய பாஷைப் பத்திரிகைகளைக் குறித்துப் பேசுமிடத்தே தான் அதிகக் கஷ்டம். "லண்டன் டைம்ஸ்", "ஈவினிங் ந்யூஸ்"

என்பன பலவின்பாற் பெயர்களாதலால் 'டைம்ஸ் சொல்லுகின்றன', 'ஈவினிங் ந்யூஸ் பரிஹாஸம் பண்ணுகின்றன' என்றெழுத நேரும்! மேலும் 'பெர்லினர் தகப்ளாத்', 'ப்ராங்க்புர்த்தெர் ஜெய்துங்' என்பவை போன்ற ஜெர்மானியப் பத்திரிகை நாமங்கள் ஆண்பாலோ பெண்பாலோ, ஒன்றன் பாலோ, பலர்பாலோ, பலவின்பாலோ அறிகிலோம். இவை போன்ற சிரமங்களைக் கருதி ஸாதாரணமாக, வழக்கம் போலவே, எல்லாப் பத்திரிகைகளின் பெயர்களையும் ஒன்றன்பாலாகவே வழங்கி விடுதல் நன்றென்று நினைக்கிறேன்.

"யானைக்கால்" வியாதிக்கு முகாந்தரம்!

தென் இந்தியாவில் ஒரு நகரத்தில் ஒரு செல்வ மிகுந்த வியாபாரிக்கு இரண்டு கால்களிலும் யானைக் கால் நோய் வந்து கால்கள் உரல்களைப் போலாய் விட்டன. ஆனால் அந்தச் செட்டியார் தமக்கு யானைக்கால் நோயென்று சொல்ல மனமில்லாமல், யாராவது, "காலிலே என்ன?" என்று கேட்டால் தம்மிடம் மோட்டார் சைக்கிள்வண்டி யிருப்பதாக வும், அதில் ஏறிச் செல்லும்போது, அது தம்மை எங்கேயோ மரத்தில் மோதிக் கீழே தள்ளிவிட்டபடி யால் கால்கள் வீங்கி யிருக்கின்றன என்றும் சொல்வதுண்டு. அது போல் ஆங்கிலேய ராஜ தந்திரிகளில் சிலர் தமது தேசத்திலேற்பட்டிருக்கும் வறுமைக்கும் பணத்தட்டுக்கும் காரணம் சொல்லும் போது தங்கள் தேசத்தில் செழித்துக் கிடக்கும் செய் பொருள்களை மற்ற ஐரோப்பிய தேசத்தார்

கள் விலைக்கு வாங்க முடியாதபடி பரம ஏழைகளாய் விட்டபடியால் தங்களுடைய வியாபாரம் வீழ்ச்சி பெற்றிருப்பதாகவும் அதனால் பணக் கஷ்டம், தொழிலின்மை மிகுதி முதலியன தோன்றி விட்டதாகவும் "ஷரா" சொல்லுகிறார்கள். ஆனால் மேற்கூறிய இதர ஐரோப்பிய தேசங்களின் ராஜ தந்திரிகள் தத்தம் நாடுகள் ஏழ்மைப்பட்டதற்கு என்ன முகாந்தரம் சொல்லித் தப்புகிறார்களோ தெரியவில்லை. அவர்கள் இங்கிலாந்தின் மீது குறை சொல்லுகிறார்களோ அல்லது, ஆசியாவைக் காண்பிக்கிறார்களோ அறியோம்.

புதிதாகச் சென்ற நிர்வாஹ ஸபையில் சேர்ந்த பிராமணரும், (பஞ்சமரும், ஐரோப்பியரு மாகிய பிறரும்) அல்லாதார் வகுப்பைச் சேர்ந்த மந்திரிகள் தமிழர்களும் அல்லாதார் என்பதைத் தமிழராகிய பிராமணரும் (பஞ்சமரும் பிறரு)மல்லாதார் ஒருவர் என்னிடம் வந்து முறையிட்டார். ஹ¨ம்! இந்த பாஷை சரிப்படாது. நடந்த விஷயத்தை நல்ல தமிழில் சொல்லுகிறேன். தமிழ் வேளாளரொருவர் இப்போது மந்திரிகளாகச் சேர்ந்திருக்கும் ரெட்டியாரும், நாயுடுவும், ஸ்ரீராம ராயனிங்காரும் தெலுங்கர்களென்றும், தமிழ் நாட்டிற்குப் பிரதிநிதியாக இவருள் எவருமில்லாமை வருந்தத்தக்க செய்தியென்றும் என்னிடம் வந்து முறையிட்டார்.

"ஜஸ்டிஸ் பாடம்"

எனக்கு "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் வாசித்த விஷயமொன்று மேற்படி கதை கூறி வருகையி

லேயே ஞாபகத்துக்கு வருகிறது. அதில் அந்த "ஜஸ்டிஸ்" பத்திராதிபர் "ஹிந்து", பத்திராதிபருக்குப் பல பல ஞாலோபதேசங்கள் செய்திருக்கிறார். அவற்றின் மொத்தக் குறிப்பு யாதென்றால் ஆங்கிலேய அதிகாரிகளின் ஆட்சியை இந்த க்ஷணமே பஹிஷ்காரம் செய்துவிட வேண்டுமென்ற "காங்கிரஸ்" கக்ஷியைச் சேர்ந்த பத்திராதிபர் யார் மந்திரியாக வந்தாலும் கவனிக்கக் கூடாதென்பது; அவர்களிடமுள்ள குணதோஷங்களை எடுத்துக் கூறவும், அந்த ஸ்தானத்துக்கு பிறரை சிபார்சு செய்யவும் "ஹிந்து"வுக்குத் தகுதி கிடையாதென்பது.

ஏன் தகுதி கிடையாது? அதைக் குறித்துத் தர்க்கமெப்படி? "ஹிந்து" ஜனங்களுக்குப் பிரதிநிதி; அதிகாரிகளுக்கு விளக்கு. ஜனங்களுடைய நன்மைக்கிசைந்தவாறு அதிகாரிகள் நடக்கும்படி கவனிக்க வேண்டியது அந்தப் பத்திரிகையின் கடமை. இந்த ராஜாங்கத்தை மாற்றி இதைக் காட்டிலும் தர்மமான ராஜாங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று நாங்கள் முயற்சி செய்கிறோம். இதனிடையே இந்த அதிகாரிகள் எங்கள் வீடுகளில் தீயைக் கொளுத்தினால் நாங்கள் ஒன்றும் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டுமென்று "ஜஸ்டிஸ்" பத்திராதிபரின் தர்க்க சாஸ்த்ரம் போதிக்கிறதா? நாங்கள் ராஜாங்கத்தைப் புதுப்பிக்க விரும்புவது பற்றி நாங்கள் இவர்களுக்கு உதவி செய்வதை நிறுத்துவோம். இவர்கள் செய்யும் தவறுகளைக் கண்டனம் செய்து கொண்டிருப்போம். ஜனங்களுக்கெடுத்துக்காட்டி, அந்த உபாயத்தின் மூல

மாக, இவர்கள் தங்கள் தவறுகளை நீக்கிக் கொள்ளும்படி வற்புறுத்துவோம். ஜன கோபத்துக்கு இவர்கள் எப்போதும் அஞ்சித் தீரவேண்டுமென்பதை நாம் அறிவோம். எனவே இவர்களுக்கும் நமக்குமிடையே நிகழ்ச்சி பெற்றுவரும் தர்ம யுத்தத்தில் அந்த அறிவைப் பயன்படுத்தாமல் விடமாட்டோம். எங்களுடைய தர்க்கம் "ஜஸ்டிஸ்" பத்திரிகைக்குத் தெளிவுபடுகிறதென்று நினைக்கிறோம்.

அன்ய வஸ்து பஹிஷ்காரம்

"ஹிந்து" பத்திராதிபரிடம் "ஜஸ்டிஸ்" பத்திராதிபர் மற்றொரு குற்றம் கண்டு பிடிக்கிறார். அதாவது, அன்ய வஸ்து பஹிஷ்காரத்தை ஜனங்களுக்கு போதித்துவிட்டுத் தாம் அன்ய வஸ்துக்களின் விளம்பரங்களுக்குத் தமது பத்திரிகையில் இடங்கொடுக்கிறரென்ற குற்றம்! சபாஷ்! இந்தக் குற்றத்துக்காக "ஹிந்து" பத்திராதிபருக்குப் பெருந் தண்டம் விதிக்கலாம்! அதிலும் "ஜஸ்டிஸ்" பத்திரிகை நம்மை ஐரோப்பிய வியாபாரிகளுடைய விளம்பரம் போடும் குற்றத்துக்காகத் தண்டனைக்குட்படுத்த அதிகாரமுமுடையது! ஐரோப்பிய ஸம்பந்தமே அங்கில்லையே! இது குற்றமென்று "ஜஸ்டிஸ்" சொல்வது பேதைமை. விளம்பரங்களில்லாமல் இக்காலத்தில் பத்திரிகை நடத்த முடியாது. இது இந்தியருக்குத் தெரியும். ஆதலால் பத்திரிகைக்குள்ளே பத்திராதிபர் எழுதியிருக்கும் கருத்தைக் கவனித்து நடப்பார்களேயன்றி விளம்பரத்தைக் கவனித்து தேசக் கடமையை நிர்ணயிக்க மாட்டார்கள்.

"ஹிந்து" பத்திரிகையில் "சுருட்டு" விளம்பரம் போட்டிருக்கிறது. அதனின்றும் "ஹிந்து" பத்திராதிபர் உலகத்தாரையெல்லாம் புகையிலைச் சுருட்டுக் குடிக்கும்படி வற்புறுத்துகிறரென்று நிச்சயித்தல் பொருந்துமா? "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் "காந்தி சரித்திரம்" என்ற புஸ்தகத்தின் விளம்பரம் ப்ரசுரிக்கப்பட்டால் அதினின்றும் "ஜஸ்டிஸ்" பத்திராதிபர் மஹாத்மாவின் கொள்கைகளைப் பரப்ப விரும்புகிறரென்று நிச்சயித்து விடலாமா? "ஹிந்து" விளம்பரங்களைப் பிரசுரம் செய்வதை நிறுத்திவிட்டால், ஜஸ்டிஸின் வருமானம் அதிகப்படுமென்பது அப் பத்திரிகையின் ஆட்சேபத்திற்குக் காரணமோ?

அப்படி நிச்சயிக்கும்படி இந்தியர்கள் அத்தனை மூடர்களல்லர். மேலும், மனம் வேறு, சொல் வேறு, செயல் வேறுக நிற்பது தவறென்று 'ஜஸ்டிஸ்' பத்திராதிபர் பிறருக்கு போதிப்பதைப் பார்த்து எனக்கு மேன்மேலும் நகைப்பு விளைகிறது.

நேசக் கக்ஷியாரின் "மூட பக்தி"

சக்திதாஸன்

11 பிப்ரவரி 1921 ரௌத்ரி தை 30

"ரெயிக் ஸ்தாக" என்ற ஜெர்மன் ஜனப் பிரதிநிதிகளின் ஸபையில் ஹெர் வோன் ஸிமோன்ஸ் என்ற ஜெர்மானிய மந்திரி சில தினங்களின் முன்பு நேசக் கக்ஷியாரின் பாரீஸ் ஸமாஜத்தில் முடிவு செய்யப்பட்ட நஷ்டஈட்டுத் தொகைகளைப் பற்றிப் பேசுகையில், ஜெர்மனியுடன் ஸமரஸமான வாதங்கள் செய்து பெறக்கூடியதைக் காட்டிலும் ஜெர்மனிக்குக் "கட்டளை" பிறப்பிப்பதனால் அதிகம் பெறக்கூடுமென்ற மூட பக்தியை நேசக் கக்ஷியார் கைவிடுதல் தகுமென்று எச்சரிக்கை செய்தார். ஏற்கெனவே ப்ருஸ்ஸெல்ஸ் நகரத்தில் நடைபெற்ற அர்த்த சாஸ்த்ர நிபுணர்களின் ஸங்கத்தில் ப்ரெஞ்ச் பிரதிநிதியாகிய ஸ்ரீமான் லேதூ என்பவரால் திட்டஞ் செய்யப்பட்டு மற்ற ஆங்கில, ப்ரெஞ்ச் அதிகாரிகளாலும் அங்கீகரிக்கப் பெற்றிருக்கும் ஏற்பாட்டை நேசக் கக்ஷியார் இங்ஙனம் திடீரென்று கைவிட்டு விட்டதைக் குறித்து ஹெர் வோன் ஸிமோன்ஸ் வியப்புத் தெரிவித்தனர். லண்டனில் நடத்தப்போகிற ஸபைக்கு ஜெர்மன் பிரதிநிதிகளையும் அழைக்கப் போவதாக மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தெரிவித்திருந்தார். அதாவது; பாரீஸ்

ஸமாஜத்தின் தீர்மானங்களை ஜெர்மானியர் ஒப்புக் கொள்வாராயின் பிறகு லண்டன் ஸபைக்கு அவர் களைப் பிரதிநிதிகளனுப்பும்படி கேட்கவேண்டு மென்பது மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜின் கருத்து. ஆனால் அதன் ஸம்பந்தமான அழைப்புக் கடிதம் இன்னும் தங்கள் வசம் கிடைக்கவில்லையாதலால், அந்த ஸபையில் சேர்வதா, அல்லது அதை பஹிஷ்காரம் செய்வதா என்பதைக் குறித்து இன்னும் ஜெர்மானியர் நிச்சயமுரைக்க இயலா தென்று வோன் வி மோன்ஸ் கூறினார். ஆயினும், நேசக் கக்ஷியாரின் தீர்மானங்களை ஆதாரமாகக் கொண்டு மேலே விவாதங்கள் நடத்துவது ஸாத்ய மில்லை யென்றும், அத்தீர்மானங்களுக்கெதிரிடை யாக ஜெர்மானிய ஆலோசனைகளை வெளியிடப் போவதாகவும் அந்த மந்திரி தெரிவித்தார்.

நேசக் கக்ஷியாரின் பாரீஸ் தீர்மானங்களின்படி ஜெர்மனி நாற்பத்திரண்டு வருஷங்களில் இருபத் தீராயிரத்து அறுநூறு கோடி (.26000,0,0,000) தங்க "மார்க்" அல்லது மூன்றாயிரங் கோடி (3000,000,000,000) காயித "மார்க்" செலுத்த வேண்டுமென்றும், அதனுடனே, இன்னும் 42 வருஷங்கள் வரை ஜெர்மனியின் ஏற்றுமதிகளின் கிரயத்தில் 100-க்கு 12 வீதம் செலுத்திக் கொண்டு வரவேண்டு மென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. பிந்திய வகையில் இன்னும் ஒரிரண்டாயிரம் கோடி "மார்க்" அதிகமாகத் தட்டலாமென்று நேசக் கக்ஷியார் நினைப்பதாக வோன் வி மோன்ஸ் சொல் லியபோது ரெயிக் ஸ்தாக் அங்கத்தினர் நகைத்தார்

களென்று ராய்ட்டர் தந்தி தெரிவிக்கிறது. இதினின்றும் ஜெர்மானியர் கஷ்டஈட்டுத் தொகை செலுத்தும் விஷயத்தில் நேசக் கக்ஷியாரின் கட்டளையை உடனே எதிர்ப் பேச்சில்லாமல் நிறைவேற்றுவார்களென்று நினைக்க இடமில்லாமலிருக்கிறது. இத்தத் தீர்மானங்களை ஜெர்மானியர் அங்கீகரிப்பாவிடின், அவர்களுக்கு விதிப்பதாக எண்ணியிருந்தும் தண்டனைகளுக்கிடையே அவர்களை ஸர்வதேச ஸங்கத்தில் சேர்க்கமாட்டோமென்ப தொன்று. ஆனல் அந்த ஸங்கத்தில் தன்னைச் சேர்த்துக் கொள்ளும்படி ஜெர்மனி இன்னும் பிரார்த்தனை யனுப்பவில்லையாதலால், அந்த தண்டனை அதிகமாகப் பொருட்படுத்தத் தக்கதன்றென்று வோன் ஸி மோன்ஸ் குறிப்பிட்டபோது "ரெயிக் ஸ்தாக்" அங்கத்தினர் கரகோஷம் புரிந்தார்களாம்.

அமெரிக்கப் பத்திரிகைகளிற் பெரும்பாலனவும், ராஜதந்திரிகளிற் பெரும்பாலோரும், இவ் விஷயத்தில் ஜெர்மனிக்கனுகூலமாகவே பேசுதல் குறிப்பிடத்தக்கது. ஜெர்மானியரால் இந்த பாரத்தைச் சுமக்க முடியாதென்றும், இந்த ஏற்பாட்டிலிருந்து அமெரிக வியாபாரத்துக்கு இடையூறு விளையுமென்றும் அமெரிகாவில் பலமான கட்சிக்கை யேற்பட்டிருப்பதாக ராய்ட்டர் தெரிவிக்கிறார். ஜனதிபதி வில்ஸனுடைய பத்திரிகையாகிய "நியூ யார்க் உலகம்" என்பது,—'ஜெர்மன் ஏற்றுமதிகளின் மீது விதிக்கும் தீர்வையால் அமெரிகாவுக்கு ஏற்றுமதியாகும் வஸ்துக்களின் அளவு குறைந்துவிடும். இதினின்றும் விளைபொருள் வாங்கு

வதற்கு வேண்டிய நாணயம் ஜெர்மனிக்குக் குன்றிப் போகும். எனவே ஜெர்மனி மீளவும் உத்தாரணம் பெறுதல் இயலாது போய்விடும்' என்றெழுதுகிறது.

இவ்வாறு அமெரிகாவில் ஜெர்மனிக்குத் தக்க உபபலமிருப்பதைக் கருதுமிடத்தே, வோன் ஸீ மோன்ஸ் சொல்லியபடி நேசக் கக்ஷியாரின் திட்டம் வெறும் மூடபக்தியாகத்தான் முடியுமென்ற எண்ணம் எவருக்கு முண்டாகக்கூடும். ஆனல், இங்ஙனம், மஹாயுத்தத்தால் நேசக் கக்ஷியார்களுக்கு விளைந்திருக்கும் நஷ்டங்களை சிரமமில்லாமல் ஜெர்மனியின் தலையில் கட்டித் தாம் தப்பிவிடலாமென்று கருதும் மூட பக்தியைக் காட்டிலும் மற்றொரு பெரிய மூட பக்தி யிருக்கிறது. அதைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்லுதல் நமது கடமை என்று நினைக்கிறோம். அந்த மூட பக்தி நேசக் கக்ஷியாருக்குள்ளே பொதுவாக இருப்பினும், அவர்களுக்குள் மந்திராலோசனை முதலிய விஷயங்களில் தலைமை பூண்டிருக்கும் இங்கிலாந்தினிடம் மிகவும் விசேஷமாகக் காணப்படுகிறது. இதனை ஒரு திருஷ்டாந்த மூலமாக விளக்குகிறோம்.

ரெயிக் ஸ்தாக்கில் மேற்கூறிய ஸ்ரீஸிமோன்ஸின் உபந்யாஸம் இந்த மாஸம் (பெப்ருவரி) மூதல் தேதியன்று நடைபெற்றது. அதே முதல் தேதியன்று ஜர்லாந்தில் கார்க் நகரத்தில் ராணுவ விசாரணைக் கொலைத் தண்டனை யொன்று நிறைவேற்றப் பட்டது. ராணுவ விசாரணையின் கீழ் இதுதான் முதலாவது கொலைத் தண்டனை யென்று ராய்ட்டர் தெரிவிக்கிறார். கொரி யென்ற கிராமத்தைச்

சேர்ந்த விவசாயி ஒருவனிடம் அனுமதிச் சீட்டில் லாத கைத் துப்பாக்கி யொன்றிருந்ததாகக் குற்றஞ் சாற்றி, அக் குற்றத்துக்காக அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அடக்கு முறை களால் ஐர்லாந்துக் கலகத்தை நசுக்கிவிடத் தீர் மானஞ் செய்திருக்கிறார்களென்று இதனால் நன்கு விளங்குகிறது. இதைத் தான் நாம் பரம மூடபக்தி யென்று சொல்லுகிறோம். ஜனங்கள் ஏற்கெனவே கொடுமையை எதிர்த்துக் கலகம் புரியும் போது, அந்தக் கலகத்தை அடக்க இன்னும் அதிகக் கொடுமையை வழங்குதல் உபயோகமற்ற—தீமையை மிகுதிப் படுத்தக் கூடிய—முறை யென்பதை உலக சரித்திரம் மீட்டும் மீட்டும், மீட்டும் எத்தனையோ திருஷ்டாந்தங்களால் விளக்கி யிருக்கிறது. எனி லும் அதே முறையைத் தான் ஸிரியாவில் ப்ரான்ஸ் தேசத்தார் கையாள முயலுகிறார்கள். மெஸபொ டோமியாவிலும் அரபியாவிலும் ஆங்கிலேயர் அதைத்தான் கையாண்டு வருகிறார்கள். கிரேக்கர் துருக்கியில் அதே கிரீடை செய்து வருகிறார்கள். அச்சம், சினம் முதலிய சித்த விருத்திகள் தோன்றும் போது ஸாதாரண மனிதர் புத்தி தவறி வேலை செய்தல் ஸஹஜம். அந்த ஸமயத்தில் ஜனங்களுக்கு யுக்தி, அனுபவம், சாஸ்திரம் என்ற மூன்று வித ப்ரமாணங்களும் மறந்துபோய் விடுகின் றன. எனவே புத்தி ஹீனமான கார்யங்கள் செய்து பெரிய நஷ்டங்களுக்குள்ளாகின்றனர்.

ஆனால், இவ்விதமான கார்யங்களை ராஜாங் கத்து மந்திரிகள் செய்வாரானால், அவர்கள் ராஜ்ய

பாரதத்துக்குத் தகுதியற்றோராய் விடுகிறார்கள். மேலும், மனுஷ்ய ஸஹோதரத்வம், ஸமத்வம் இவை ஐர்லாந்துக்குண்டா, இல்லையா? அரபியாவுக்கும், மெஸபொடோமியாவுக்கும், இந்தியாவுக்கும், எகிப்துக்கும் அவை உண்டா, இல்லையா? இல்லையெனில், ஏன் இல்லை? தெய்வ விதிகளுக்கு மாற்றில்லை. கொடுமையும் அநீதியும் செய்வோர் கொடுமைக்கும் அநீதிக்கும் இரையாவர். பிறரை அடிமைப் படுத்துவோர், தாம் அடிமைகளாக்கப்படுவர். அநியாயம், ஸமத்வ விரோதம் முதலியவற்றால் ஐரோப்பிய மஹாயுத்தத்தில் அபாரமான கஷ்டங்களுக்குட்பட்டும், ஐரோப்பிய ராஜ்ஞாந்திரிகளுக்கு இன்னும் புத்தி தெளியாமலிருப்பது பற்றி விசனப்படுகிறோம்.

"பூகோள மஹா யுத்தம்"

சக்திதாஸன்

12 பிப்ரவரி 1921 ரௌத்திரி மாசி 1

ஐரோப்பாவைப் பிடித்த சனி இன்னும் முற்றிலும் நீங்கியதாகத் தெரியவில்லை. சென்ற நான்கு நூற்றாண்டுகளில் ஐரோப்பா கல்வித் தேர்ச்சி, இயற்கை யறிவு முதலியவற்றில் எவ்வளவோ மேன்மை யடைந்திருக்கிறது. ஆனால் அதை அக் கல்வி முதலியவற்றால் எய்தக் கூடிய முழு நலத்தையும் எய்தாதபடி தடுத்து, ஏறக் குறைய ஸ்மசான நிலைமையில் கொண்டு சேர்த்தது யாதெனில், அதன் ஓயாத போர் நினைவு! ஐரோப்பாவில் ஸதா ஏதேனுமோர் யுத்தம் நடந்து கொண்டிருக்கும். அல்லது விரைவில் ஒரு யுத்தம் வரப் போவதாகப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

அந்தக் கண்டத்தாரின் மனதிலிருந்து யுத்த பயம் முற்றிலும் நீங்கி யிருந்த ஒற்றை க்ஷணமேனும் பல நூற்றாண்டுகளாகக் கிடையாது.

இதனிடையே, சென்ற நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவின் ஒருபாகத்திலுள்ளே ஒதுங்கி வாழ்ந்த வெள்ளை ஜாதியார்கள் இன்றைக்கு ஐரோப்பா முழுதையும், அமெரிக்காக் கண்ட முழுதையும், ஆஸ்திரேலியாவையும், ஆப்ரிகாவில் முக்காலே யரைக்காற் பங்கையும், ஆசியாவில்

பாதிக்கு மேற் பகுதியையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

இங்ஙனம் இந்த நான்கு நூற்றாண்டுகளுக் குள்ளே பல கண்டங்களை வெல்லும் சக்தி இவர் களுக் கேற்பட்டதன் காரணம் வெடி மருந்து, துப்பாக்கி, பீரங்கிகள். இந்த ஆயுதங்கள் மற்றக் கண்டத்தாரின் வசப்படு முன்பு வெள்ளை ஜாதியா ருக்கு வசப்பட்டன. அதனால் பூமண்டலம் அவர் களுடைய ஆதிக்கத்தின் கீழ் வீழ்ந்தது.

ஆனால், இங்ஙனம் உலக முழுதையும் வென்று, அங்கெல்லாம் தங்களுடைய வியாபாரத்தையும் நிலை நிறுத்தி ஏராளமான செல்வங்கள் திரட்டி ஐரோப் பாவுக்குக் கொணர்ந்த ஐரோப்பியர் அந்தக் குவை குவையான திரவியங்களையும், அவர்களுக்கு "ஸயன்ஸ்" ஞானத்தால் இயற்கையின் மீது கிடைத்த புதிய சக்திகளையும் யுத்தத்தில் உபயோ கப் படுத்துவதே முதற் கடமையாகக் கருதினர்.

திருஷ்டாந்தமாக, வான விமானம் பறக்கத் தொடங்குவதற்கு முன்னதாகவே ஐரோப்பியர் அதைப் போரில் உபயோகப்படுத்துவ தெப்படி என்பதைக் குறித்து யோசனை செய்யத் தொடங்கி விட்டார்கள்.

இந்த குணத்திலிருந்து கடைசிப் பயனாக விளைந்த ஐரோப்பிய மஹா யுத்தத்தினால் தாம் எய்திய கஷ்டங்களை உணர்ந்த பின்னராவது அவர் களுக்கு இந்த குணம் அடிபோடு தொலைந்துவிட்ட தென்று நினைத்தோம். ஆனால் பிறவிக் குணத் துக்கு மட்டை வைத்துக் கட்டினால் போதுமா?

இத்தனை கஷ்டங்களுக்குப் பிறகும் இந்த குணம் அவர்களைக் கொஞ்சம் ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

உள் நாட்டுக் குழப்பத்தை அடக்குவதற்கு வேறு நியாயமான வழி தெரியாமல், பிற நாடுகளுடன் போர் தொடுத்து, அதினின்றும் ஸ்வஜனங்கள் ஏராளமாக மடிந்து தொலைவார்களாதலால் அங்ஙனம் உள் நாட்டுக் கலகம் தானே சாந்தி பெற்று விடுமென்று எதிர்பார்த்துப் பிற தேசங்களோடு போர் தொடங்குதல் சக்தியற்ற ராஜதந்திரிகளின் ஹீன மார்க்கங்களில் ஒன்று.

அதை முன்பு ருஷியா தேசத்துச் சக்ரவர்த்தி அனுஸரித்தார். அவர் அதனால் எய்திய மூடிவைக் கண்டும் புத்தி தெளியாமல், இன்று வேறு சில ஐரோப்பிய தேசங்களின் ராஜதந்திரிகள் அந்த வழியை அனுஸரிக்க எண்ணுகிறார்க ளென்று நினைக்க பலமான ஹேதுக்கள் இருக்கின்றன.

ஆனால், இனி ஐரோப்பாவில் அல்லது மேற்கு ஐரோப்பாவில், குறைந்த பக்ஷம் இன்னும் 30 வருஷங்களுக்கு ஜனங்கள் யுத்தத்தின் பெயரையே ஸ்மரிக்க மாட்டார்களென்பது திண்ணம். சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை அணுகாது.

எனினும், ஐரோப்பிய தேசத்தார்களுக்குள்ளே ஏற்பட்டிருக்கும் விரோதங்களை மூடும் பொருட்டு ஐரோப்பா முழுவதையும், அல்லது வெள்ளை ஜாதியார் அனைவரையும் ஆசியா, ஆபிரிகா ஜனங்களின் மீது போருக்கு விடலாமென்று சில மதி கேடர் யோசனை செய்கிறார்கள்!

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை பொறுப்புத் தன்மையுடையதாகத் தன்னை மிகவும் கணித்துக் கொள்ளுகிறது. இங்கிலாந்து தேசத்து மந்திரிகளைக் காட்டிலும் தனக்கு ப்ரிடிஷ் பரிபாலன விஷயத்தில் ஆயிரம் பங்கு அதிகப் பொறுப்புணர்ச்சியிருப்பதாக நடிக்கிறது. அந்தப் பத்திரிகை (தனது 1921 ஜனவரி 15-ஆம் தேதிப் பதிப்பில்) மிஸ்டர் மக்ளூர் என்ற அமெரிக்கப் பத்திரிகாசிரியரொருவர் எழுதிய "மேற்கும் கிழக்கும் விரோதம்" என்ற வ்யாஸத்தை ப்ரசுரம் செய்திருப்பதுடன், அதைக் குறித்து ஒரு கலவரங்கக் குறிப்பும் வரைந்திருக்கிறது.

அந்த வ்யாஸத்தின் கருத்து யாதெனில் எதிர் காலத்தில் ஸமீபத்திலே (ஏற்கெனவே நடந்த ஐரோப்பிய மஹாயுத்தத்தைக் காட்டிலும் பன்மடங்கு கொடிய) பூகோள மஹா யுத்தமொன்று நடக்கப்போகிறதென்பது. இந்த யுத்தம் வெள்ளை ஜாதியாருக்கும் இதர வர்ணத்காருக்கு மிடையே நடக்குமாம். ஜப்பானியரையும் சீனரையும் அமெரிகாவும் ஆஸ்திரேலியாவும் தம்முள்ளே ப்ரவேசிக்கக் கூடாதென்று தடுப்பதை உத்தேசித்து மஞ்சள் வர்ணத்தாருக்கும் வெள்ளையருக்கும் சண்டை வருமாம். ஜப்பானில் பூமி கொஞ்சம்; ஜனத்தொகை அதிகம். அதற்கு அதி சமீபத்தில் வட அமெரிகா இருக்கிறது. அங்கு விஸ்தாரமான பூமிகளிருக்கின்றன. ஜனத்தொகை மிக சொற்பம். இன்னும் உழவின் கீழே கொணராத மிக வளமார்ந்த மைதானங்கள் ஆயிரக் கணக்கான மைல்களில்

பரவிக் கிடக்கின்றன. கனடாவிலுள்ள நிலங்களை நன்றாக முழுமையும் பண்படுத்தினால் அதில் விளையக் கூடிய கோதுமை மனிதக் கூட்டத்தில் பாதிக்குப் போதிய உணவாகு மென்று கணக்கிடப் பட்டிருக் கிறது.

உலகத்திலுள்ள பூமியை யெல்லாம் இங்ஙனம் ஐரோப்பியர் சூழ்ந்து கொண்டு, நிலத்துக்குத் தவிக் கும் ஜனங்களைத் தம் சூழல்களுக்குள் ப்ரவேசிக்கக் கூடாதென்று தடுப்பதை ஜப்பான் ஆக்ஷேபிக் கிறது. வலியவன் பேச்சு இறுதியில் வெல்லு மென்ற ஐரோப்பியக் கொள்கையை சாதகமாக எண்ணி ஜப்பான் தன் சண்டைக் கப்பல்களை அதிகப்படுத்திக் கொண்டு வருகிறது. தன் பீரங்கி களைப் பெருக்குகிறது. தன் படைகளை பலப் படுத்துகிறது.

இதைக் கண்டு அமெரிகாவுக்கு நடுக்க மேற் பட்டிருக்கிறது. அமெரிகாவுக்கு இங்கிலாந்து கழுத்து வரை கடன் பட்டிருக்கிறது. இங்கிலாந்துக் கும் ஜப்பானுக்கும் நட்புடம்பாடு செய்து கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால், ஜப்பானுடன் சேர்ந்து கொண்டு இங்கிலாந்து அமெரிகாவுடன் போர் செய்யாதென்று மிஸ்டர் மக்ஸூர் ப்ரமாணம் பண்ணு கிறார். அதை லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபர் மனப்பூர்வமாக ஆமோதிக்கிறார்.

மேலும் தென் ஆசியாவிலும் ஆப்ரிகாவிலு முள்ள ஜனங்கள் ஐரோப்பாவின் ஆட்சியைத் தள்ளி விடப் போகிறார்களாம். அவர்களிடம் ஆயுதங்கள் இல்லையே யெனில், அவர்கள் அவற்றை மிக விரை

வில் செய்து கொள்வார்களென்று மிஸ்டர் மக்ளூர் சொல்லுகிறார்.

இந்த யுத்தத்தில் சில ஐரோப்பிய தேசத்தார் ஆசியாக கண்டத்தாரின் பக்கத்திலே சேர்ந்து கொள்ளக்கூடு மென்று மிஸ்டர் மக்ளூர் சொல்லுகிறார்.

எனவே, வெள்ளை ஜாதியாருக்குப் பெரிய ஆபத்து வரப்போகிறதென்று மிஸ்டர் மக்ளூர் பலமாக எச்சரிக்கிறார். ஆனால் ஆசியா இந்தியாவின் தலைமைக்குட்பட்டது. இந்தியா ஐரோப்பியரைக் கூடக் கொல்ல விரும்புவதில்லை. திருத்த விரும்புகிறது. எனவே, ஐரோப்பியர் இந்தப் புதிய பயத்திற்கிரையாதல் அவசியமில்லை. அது வெறும் பேதை யச்சம். ஆனால் கம்முடைய சொல் ஐரோப்பாவில் எட்டுவதைக் காட்டிலும் லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் சொல் அதிகமாகவும் விரைவாகவும் எட்டுமே? அதற்கென்ன செய்யலாம்?

மணித் திரள்

கார்க்கிதாஸன்

14 பிப்ரவரி 1921 ரௌத்திரி மாசி 3

வாளும் எழுதுகோலும்

என்றைக்குமே ராஜ்ய தந்த்ரத்தில் வாளைக் காட்டிலும் எழுதுகோலுக்கே மஹிமை அதிகம். அதிலும் ஐரோப்பிய மஹா யுத்தத்தின் பிறகு இக் கொள்கை முன் எப்போதையுங் காட்டிலும் அதிக ஆழமாகவும் உறுதியாகவும் பூமண்டலத்து ராஜ்ய தந்திரிகளின் மனதில் பதிந்துவிட்டது. ப்ரான்ஸ் தேசம் ஒன்றில் மாத்திரமே இந்த மஹா யுத்தத்தில் பத்து லக்ஷம் ஜனங்கள் மடிந்திருப்பதையும் இன்னும் பல லக்ஷங்கள் அங்கஹீனராய் விட்டதையும் எடுத்துக்காட்டி, அப்பால் இங்கிலாந்திற்கும் இதை விடக் குறையாத கஷ்டமேற்பட்டிருக்கு மென்பதைச் சுட்டிச் சில தினங்களின் முன்பு ஸ்ரீமான் க்ளெமான்ஸோ என்ற ப்ரெஞ்ச் ராஜதந்திரி (இப்போது இந்தியாவில் யாத்திரை செய்துகொண்டு வருபவர்) இனிமேலேனும் உலகத்தார் யுத்தப் பைத்தியத்தை விட்டுத் தொலைத்தல் அவஸரமென்பதை வற்புறுத்தியது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

அமீர் அமானுல்லாகான்

1921 ஜனவரி 10ஆந் தேதி திங்கட்கிழமை யன்று காபூல் நகரத்தில் ப்ரிடிஷ் தூதர்களை வரவேற்கும் பொருட்டாக ஒரு பெரிய தர்பார் நடத்தப் பட்டது. அப்போது ஆப்கன் அரசராகிய அமீர் அமானுல்லாகான் செய்த உபந்யாஸத்தினிடையே, காபூலில் நடத்தும் ஆங்கில-ஆப்கன் ஆலோசனை ஸபையில் தம்முடைய முக்ய ப்ரதிநிதியாக ஸர்தார்-இ-ஆலா முஹம்மது கான் தர்ஜியை நியமனம் செய்ததற்குப் பின் வருமாறு காரணம் சொன்னர்:- "ஸர்தார் முஹம்மத் நாதிர்கான் போர்த் தொழிலாளியாதலால் நான் அவரை நியமனம் செய்யவில்லை. ஸர்தார்-இ-ஆலா முஹம்மது கான் தர்ஜி எழுதுகோற் பயிற்சியுடையவராதலால் அவரையே நியமனம் செய்திருக்கிறேன். ஏனென்றால் இந்தக் காலத்தில் வாளைக் காட்டிலும் எழுதுகோலே அதிக அவசியமானது" என்றார். இந்த உண்மையான கொள்கையை ஆப்கன் அமீர் எப்போதும் மறக்காமலிருப்பாரென்று நம்புகிறோம். தேசத்தின் அபிவிருத்திக்குப் பரோபகார சிந்தையுள்ள மேதாவிகளின் இடையறாத உழைப்பே ஸாதனம். வாள் சிறிது காலத்துக்குக் காப்பாற்றுவதுபோலே நடிக்கும். பிறகு ஸர்வ நாசத்தில் கொண்டே சேர்க்கும். ஆனவே இந்தியாவுக்கு "வாள் பலம்" அல்லது தற்கால பாஷைப்படி பீரங்கி பலம் இப்போதில்லாமை கருதி, நாம் எப்படி விடுதலை பெறப் போகிறோமென்று எவரும் ஏங்குதல் வேண்டா. தைர்யமும் ஒற்றுமையும் தந்திரமும் சேர்ந்தால்

இவற்றுக்கெதிரே கோடி பீரங்கிகள் நிற்பினும் அஃதோர் பொருட்டன்று.

"டைம்ஸ் ஆப் இந்தியாவின் விகடம்"

பம்பாயில் பிரசுரமாகும் "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையின் பிரதிநிதியொருவருடனே ஸ்ரீ ஆகாகான் செய்த ஸம்பாஷணை அப்பத்திரிகையில் இரண்டு வாரங்களுக்கு முன்பு வெளியிடப்பட்டிருந்தது. அதில் ஸ்ரீ ஆகாகான் துருக்கி உடம்பாட்டை மாற்றும் விஷயத்தில் இங்கிலாந்து தலைமை வஹித்து நடத்தவேண்டுமென்று சொல்லியிருந்தார். இப்போது ஆகாகானுடைய இஷ்டப்படியே நடந்துவிட்டதாக அப்பத்திரிகை தன் தலையங்கமொன்றில் ஸந்தோஷச் செய்தி தெரிவிக்கிறது! என்ன நடந்தது? ஆங்கிலேயர் மூற்பட்டு மூண்டு வேலை செய்து "ஸேவர்" உடம்பாட்டின் அநேக நிபந்தனைகளை மாற்றித் துருக்கியை அதன் பழைய பெருமையில் ஸ்தாபித்து விட்டார்களா? அஃதன்று! துருக்கியுடம்பாட்டின் விஷயமாக எதிர் காலத்தில் செய்யவேண்டிய கார்யங்களைக் குறித்து ஆலோசனை செய்யும் பொருட்டு அடுத்த மாஸம் லண்டனில் ஒரு ஸபை நடத்தப்போவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். இதைத்தான் அந்தப் பத்திரிகை ஆகாகானுடைய அபீஷ்ட ஸித்தியாகக காண்பிக்கிறது! ஆனால் லண்டனில் இந்த ஸபை நடத்துவது மிகவும் கெட்ட அடையாளமென்று நான் கருதுகிறேன். ஏனென்றால் ப்ராண்ஸ் மந்திரிகளும் இத்தாலி மந்திரிகளும் இவ்விஷயத்தில்

துருக்கிக்கு ஒரு வேளை அனுதாபம் செய்யக்கூடும். மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் முதலிய ஆங்கில மந்திரிகளோ எப்படியாவது கிரேக்கரின் நட்பைப் பாதுகாக்க வேண்டுமென்பதிலும், துருக்கியிடமிருந்து பறிக்கப்பட்ட நாடுகளை அதனிடம் மீட்டும் ஒப்புவிக்கக்கூடாதென்பதிலும் ஒரே உறுதியாக நிற்கிறார்கள்.

கிறிஸ்தவ நாகரிகத்துக்குக் காவலாளி

வேல்ஸ் தேசத்து லிபரல் மஹா ஸங்கத்தின் நிர்வாக உத்யோகஸ்தருடன் சில தினங்களுக்கு முன்பு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஒரு ரஹஸ்ய ஸம்பாஷணை நடத்தினர். எனினும் இந்தக் கூட்டத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் பேசிய விஷயம் பின்னிட்டு இங்கிலாந்தில் ப்ரசுரமாய், ராய்ட்டர் தந்தி மூலமாக நமக்கெட்டியிருக்கிறது. அதிலேகூட மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஜெர்மனி கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை விட்டுக் கொடுப்பதும், கிறிஸ்தவ ஜனங்களை மீட்டும் துருக்கியின் ராஜாங்க நுகத்தடியின் கீழே கொணர்வதும் "லிபரல்" கக்ஷியின் நோக்கத்துக்கு விரோதமென்று வற்புறுத்திக் காட்டியிருக்கிறார். இதுபோலவே, துருக்கியிடமிருந்து பறிக்கப்பட்ட பூமிகளை அதன்பால் மீட்டும் விடுவதினின்றும் கிறிஸ்தவ நாகரிகத்துக்கு ஹானி வருமென்ற தமது கொள்கையை ஆங்கிலத் தலைமை மந்திரி இதுவரை எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார். எனவே, லண்டனில் இப்படிப்பட்ட மந்திரிகளின் ஆதிக்கத்தின் கீழே நடத்தப் போகிற

கூட்டத்தில் தருக்கிக்கு எள்ளளவேனும் நியாயம் கிடைக்காது. கிரேக்க தேசத்துக்குப் பிடுங்கிக் கொடுத்த பிரதேசங்களில் கிறிஸ்தவர்கள் வாஸம் புரிவதால் அவற்றைத் தருக்கிக்கு மீட்டும் ஒப்பு விப்பது சரியில்லையென்று சொல்லும் ஆங்கிலேய முதல் மந்திரி மெஸபொடோமியாவில் கிறிஸ்தவ ஜனத் தொகையில்லை யென்றுணர்ந்தும் அதை யேன் தருக்கியிடம் கொடுத்துவிடக் கூடாது? அந்த மெஸபொடோமியாவை இங்கிலாந்து கிறிஸ்தவ நாகரிகத்தால் மஹிமைப்படுத்த எண்ணங் கொண்டு விட்டது. ஆதலால் அதையும் விடக்கூடவில்லை! என்ன செய்யலாம்?

மயிலே, மயிலே

"மயிலே, மயிலே, இறகு போடு" என்றால் போடாது. வற்புறுத்தி இறகைப் பிடுங்கவேண்டும். வெறும் வாய்ப் பேச்சால் இங்கிலாந்தினிடமிருந்து நீதி பெறுதல் ஸாத்யமில்லை. இந்தியாவிலும், மற்ற முஸ்லிம் தேசங்களிலும் பலமான கிளர்ச்சி நடத்தி னாலன்றி, "ஸேவர்" உடம்பாடு நியாயப்படி மாற்றப் படுதல் ஸாத்யமில்லை. "கிளர்ச்சி செய்யுங்கள்!" "கிளர்ச்சி செய்யுங்கள்!" "கிளர்ச்சி செய்யுங்கள்!" என்று மூக்காலும் கூறி ஸ்ரீமான் தாதாபாய் நவுரோஜி கல்கத்தா காங்கிரஸ் ஸபையில் செய்த உபதேசத்தையே இன்று நான் முஸ்லிம் உலக முழுமைக்கும் செய்கிறேன். ஆசியா வாஸிகள் அனைவருக்கும் செய்கிறேன்.

அடக்கு முறைகள்

1921 பெப்ருவரி 10-ஆந்தேதியன்று ஸ்ரீ காசியில் தேசிய ஸர்வ கலாசாலை யொன்று மஹாத்மா காந்தியால் திறந்து வைக்கப்பட்டது. அந்த விசேஷம் நடக்கும் போது பிரமாண்டமான ஜனத்திரள் கூடியிருந்தது. அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த ஐகய மாகாணத்து விவசாயிகளின் தலைவராகிய பாபாராம் சந்தர் என்ற ஸ்யாஸியைத் துப்பாக்கியில் மருந்தேற்றிக் கொண்டு போலீஸார் பெருங் கூட்டமாக வந்து கைது செய்ததாகத் தெரிகிறது. கூட்டத்தார் மனக் கொதிப்பினல் கலகம் செய்வார்களென்றும், அதை முகாந்தரமாகக் காட்டித் தாங்கள் ஏராளமாக ஜனங்களைச் சுட்டுத் தள்ளுவது மன்றி, மஹாத்மா காந்திக்கும் ஏதேனும் ஆபத்துண்டாக்கலா மென்றும் போலீஸார் எதிர் பார்த்தனர் போலும். ஆனல் அந்த அவமானத்தை ஜனங்கள் ஸமாதானமாகப் பொறுத்திருக்கும்படி தலைவர்கள் சொல்லியது கேட்டு ஜனங்கள் சும்மா இருந்து விட்டனர். எனவே, போலீஸார் பாபா ஒருவரை மாத்திரம் கொண்டு மீண்டேகினர். தேசிய ஸர்வ கலாசாலையின் ஆரம்ப விசேஷங்கள் நடத்தும் இடத்திலே தான பாபாவைப் பிடிக்க வேண்டும்? தனியாக அவர் வீட்டிலிருக்கும் போது பிடிக்கக் கூடாதா? கூட்டத்தார் அவசரப்பட்டு மனம் பதறி ஏதேனும் செய்திருந்தால் என்னென்ன ஆபத்துக்கள் விளைந்திருக்குமோ யார் அறிவார்? இங்ஙனம் முற்றிலும் விரும்பத்தகாத விரஸமான வழிகளில் ராஜாங்கத்தார் அடக்கு முறைகளை அனுஸரிப்பதி

இன்றும் அவர்களுக்கு ஏற்கெனவே தேசத்தி லுள்ள மதிப்புக் குறை இன்னும் மிகுதியுறு மென் பதை அவர்கள் அறியாதது பற்றி வருத்தமடை கிறோம். மேலும் போலீஸார் இப்படி அநாகரிக மாக வேலை செய்த போதுகூட மனக் கொதிப்புக் கிடங் கொடுக்காமல் தலைவர்களின் சொற்படி கேட்டு ஜனக் கூட்டத்தார் அடங்கியிருந்தது நமக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. பொறுத்தார் ஆள்வார்?

தீப்பொறிகள்

காளிதாஸன்

14 பிப்ரவரி 1921 ரௌத்திரி மாசி 3

பாரத தேசத்தாரின் அகத்தில் தழல் வீசி எரிந்து வரும் தேசபக்திப் பெருங் கனலின் பொறிகள் சில இங்கு காண்பிக்கப் படுகின்றன.

"வில்லர்" ஸமாஜம்

பீலர் (Bhils) அல்லது வில்லர் எனப்படும் மலைக் குடிகள் ராஜபுத்ர ஸ்தானத்துச் சரித்திரத்தில் மிகவும் கீர்த்தி பெற்றவர்கள். கல்வி முதலிய நாகரீகச் சின்னங்களில் இந்த ஜாதியார் மற்ற பாரதவாஸிகளைக் காட்டிலும் குறைவு பட்டோராயினும், வீரத்தன்மையில் யார்க்கும் இளைத்தோரல்லர். புதிய ஸ்வதேசீயத் தீ இவர்களிடத்தும் பாய்ந்து விட்டது. எனவே, இவர்கள் தோஹாத் என்ற ஊரில் ஒரு பெரிய தேசாபிமானக் கூட்டம் நடத்தினர். அந்தக் கூட்டம் நடைபெறாமல் தடுத்து விட வேண்டு மென்ற நோக்கத்துடன் அதிகாரிகள் சில தினங்களின் முன்பு இக் கூட்டத்தாரின் குரு வாகிய குருகோவிந்தர் என்பவரைச் சிறைப் படுத்தி விட்டார்கள். அதினின்றும், அந்த ஸமாஜம் தடைப் படவில்லை. பெப்ருவரி 6-ஆந் தேதியன்று தோஹாதில் "வில்லர்" ஸமாஜம் கூடிற்று.

மஹாத்மா காந்தியின் முக்யத் தலைவரில் ஒருவ ராகிய ஸ்ரீமான் படேல் அக்ராஸனம் வஹித்தார். முஹமதியச் சிங்கமாகிய மௌலானா ஷௌகத் அலியும் அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தார்.

ஸ்ரீமான் படேலின் ப்ரஸங்கம்

சுமார் 10,000-பீல்(வில்லர்)ஜாதியார் கூடியிருந்த அக்கூட்டத்தின் முன்பு ஸ்ரீ படேல் செய்த அக்ரா ஸன உபந்யாஸத்தினிடையே பின் வருமாறு பேசினர்:—

"உங்களுடைய குருவை நள்ளிரவில் எழுப்பி ராஜாங்கத்தார் அவருக்கு யாதொரு முன் எச்ச ரிக்கை செய்யாமலும், அவருடைய குழந்தையைப் பார்க்கக் கூட இடங் கொடுக்காமலும், இரவு 'ரயில்' வண்டியில் ஏற்றிக் கொண்டு போய் விட்டார்கள். அவருடைய முக்ய சிஷ்யர்கள் நூற்றுக் கணக்காக அந்த நேரத்தில் அவரோடிருந்தார்கள். எனினும் அவர்கள் அதிகாரிகளை பலாத்காரமாக எதிர்க்காம லிருந்தது பற்றி நான் மகிழ்ச்சி யடைகிறேன். நாம் தார்மிகமான வெற்றி பெறுவோ மென்பதற்கு இஃதோர் அடையாளமாகும். பல குற்றங்கள் புரிந்து வரும் இந்த ராஜாங்கத்தாருக்கு நீங்கள் ஆதரவு செய்யும் முறைத்தை முற்றிலும் விட்டுவிட வேண்டும். பீல் ஜாதியாரே! நீங்கள் இவ்வுலகத்தில் யாருக்கும் அஞ்சி யிருக்கக் காரணமில்லை. உங்களு டைய வேண்டுதல்கள் மிக சொற்பம். உங்களுடைய வாஸமோ புலிகளுடனே செய்யப்படுவது. நீங்கள் ஏன் எதற்கும் அஞ்ச வேண்டும்? கட்டாயக் கூலி

வேலைக்கு நீங்கள் ஒரு போதும் உட்படக் கூடாது. எது நேர்ந்தாலும் அம்முறைமையை நீங்கள் எதிர்த்துத் தீரவேண்டும்."

மௌலானா ஷௌகத் அலியின் பேச்சு

மாலைக் கூட்டத்தின் போது, அந்த ஸமாஜத்தில் ஒத்துழையாமைத் தீர்மானம் நிறை வேற்றப் பட்டது. அதை ஆதரித்துப் பேசுகையில் ஸ்ரீமான் ஷௌகத் அலி பின் வருமாறு பேசினார்:—

"என் 'பீல்' ஸஹோதரரைப் பார்ப்பதற் கென்றே நான் விசேஷ ஆவலுடன் இங்கு வந்திருக் கிறேன். ஸ்வதேசத்திற்கும் ஸ்வதர்மத்துக்கும் நீங்க ளெல்லோரும் முழுத் தொண்டு புரிய வேண்டும். தைர்யத்தோடிருக்க வேண்டும். மஹாத்மா காந்தி காட்டியிருக்கும் வழியை சிரத்தையுடன் பின்பற்றி யொழுக வேண்டும். மனத் தளர்ச்சி யெய்தி விடா தீர்கள்! ராஜாங்கத்தார் உங்களுடைய குருவைப் பிரித்து விட்டது பெரிதில்லை. நமக்குள்ளே நூற்றுக் கணக்கான குருக்கள் தோன்றப் போகி றார்கள். மஹாத்மா காந்தியைக் கூட அதிகாரிகள் தீவாந்தரத்துக்கனுப்புவாராயின், அல்லது சுட்டுக் கொல்வாராயின், நம்மிடையே பற்பல காந்திகள் கிளம்பார்கள். ராஜாங்கத்தார் இதனை அறிந்து நடப்பாராக!" என்றார்.

"காந்திக்" குல்லா

இந்த மாஸம் 3-ஆந் தேதியன்று பேரார் மாகாணத்திலுள்ள அமராவதி நகரத்தில் டிப்டி

கமிஷனராகிய மிஸ்டர் ஆர். ஏ. வில்ஸன் என்பவருக்கும் அவருடைய கச்சேரியில் குமாஸ்தாவாக வேலை செய்து வரும் ஸ்ரீமான் கிர்காம்கார் என்பவருக்கும் நடந்த ஸம்பாஷணையின் வருமாறு —

மிஸ்டர் வில்ஸன் :— "உம்முடைய தலையிலிருப்பது 'காந்தி' குல்லாவா ?"

ஸ்ரீமான் கிர்காம்கார்:— "ஆம்."

மிஸ்டர் வி:— "ஸ்ரீமான் காந்தியின் கொள்கைகளை யெல்லாம் நீர் அங்கீகாரம் செய்து கொள்ளுகிறீரா ?"

ஸ்ரீமான் கி:— "ஆம்."

மிஸ்டர் வி:— "அப்படியானால் இந்த ராஜாங்கத்தாருக்கு நீர் ஏன் உதவி செய்துகொண்டிருக்கிறீர் ?"

ஸ்ரீமான் கி:— "பாரத ஜனஸபை (காங்கரஸ்) இன்னும் ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் தம் உத்யோகங்களை விடும்படி கட்டளை பிறப்பிக்கவில்லை."

மிஸ்டர் வி:— "ராஜாங்கத்தை அழித்துவிட வேண்டுமென்பது ஸ்ரீமான் காந்தியின் கொள்கை. அதை நீர் ஆமோதிக்கிறீரா ?"

ஸ்ரீமான் கி:— "ஆம், ஆமோதிக்கிறேன்."

மிஸ்டர் வி:— "அப்படியானால் உம்முடைய வேலையை உடனே ராஜிகாமா கொடுத்துவிட வேண்டும்.....மேலும், எங்கள் ராஜாங்கத்தினிடமிருந்து ஏறக்குறைய எட்டு மாஸங்களாக நீர் சம்பளம் வாங்கிக்கொண்டு வருகிறீர். அதனுடன், நீர் இப்படிப்பட்ட கொள்கைகள் வைத்துக் கொண்டிருப்பது பொருந்துமா ?"

ஸ்ரீமான் கி:— "இந்த ராஜாங்கத்துக்கு நான் உதவி புரிந்து வருதல் வெட்கத்துக்கிடமான செய்தியே யாம். ஆனல் நான் சில அவஸரங் களைக் கருதி அங்ஙனம் செய்ய நேர்ந்தது. எனினும் எனது தேசத்தின் ஆணை தோன்று மிடத்தே நான் இந்த உத்யோகத்தை விட்டு விடக் காத்திருக் கிறேன்."

மிஸ்டர் வி:— "நீர் அந்தக் குல்லாவை மாற்ற ஸம்மதப் படுவீரா?"

ஸ்ரீமான் கி:— "மாட்டேன்."

மிஸ்டர் வி: — "உம்முடைய தைர்யத்தை மதிக் கிறேன். எனிலும், இந்த விஷயத்தைக் குறித்து இன்றிரவு யோசனை செய்து பார்த்து, அப்பால் என்னிடம் உம்முடைய நிச்சயத்தைத் தெரிவிப் பீராக."

மறு நாள் காலையில், ஸ்ரீமான் கிர்காம்கார், மிஸ்டர் வில்ஸனிடம் தம்முடைய ராஜினமாக் கடிதத்தைக் கொடுத்துவிட்டார்.

"தீண்டாமை" என்ற பாதகம்

தேச பக்தி யென்பது நம்மவருக்கு அன்னிய ரால் நேரும் தீமைகளை மாத்திரம் ஒழிக்கும் இயல் புடையதன்று. நமக்கு நாமே செய்து கொள்ளும் அநீதிகளையும் நீக்கு மியல்புடையது. எனவே தேச பக்த சிகாமணியாகிய மஹாத்மா காந்தி நாம் இன்னும் ஒன்பது மாஸங்களுக்குள்ளே ஸ்வராஜ் யம் பெற்று விடுவோமென்று சொல்லிய போதி

லும், அதற்கொரு முக்யமான நிபந்தனை சொல்வதை நாம் கவனிக்க வேண்டும்.

தம்முடைய "யெளவன இந்தியா" பத்திரிகையில் மஹாத்மா பின் வருமாறெழுதுகிறார்:—"ஒரு வகுப்பினரைத் தீண்டாதவராகக் கருதும் பாவத்தை ஹிந்துக்கள் அகற்றினாலன்றி, ஸ்வராஜ்யம் ஒரு வருஷத்திலும் வராது; நூறு வருஷங்களிலும் வராது....ஹிந்து மதத்தின் மீது படிந்திருக்கும் இந்தக் களங்கத்தை நீக்குதல் ஸ்வராஜ்யம் பெறுதற் கவசியமாகு மென்ற தீர்மானத்தைச் காங்கரஸ் ஸபையார் நிறை வேற்றியது நன்றேயாம்....மேலும் இந்தத் தீண்டாமை யென்பது மதக் கொள்கைகளால் அனுமதி செய்யப்பட்டதன்று. இது சாத்தானுடைய தந்திரங்களில் ஒன்று" என்கிறார்.

அடிக்கடி "காந்தி கீ ஜெய்" என்று ஆரவாரம் செய்யும் நம்மவர்கள் இந்த அம்சத்தில் மஹாத்மா சொல்லியிருக்கும் வார்த்தையைக் கவனிப்பார்களென்று நம்புகிறேன். நம்முடைய ஸமூஹ வாழ்வில் அநீதிகள் இருக்கும் வரை நமக்கு ஸ்வராஜ்யம் ஸித்தியாகா தென்ற கொள்கையை நான் அங்கீகரிக்கவில்லை. ஆனால், "வினை விதைத்தவன் வினையறுப்பான்." நம்மவருக்குள் பரஸ்பர அநீதியுள்ளவரை தேசத்தில் ஸமாதான மிராது. நாம் பல வகைகளிலே துன்பப்பட நேரும்.

புதுமைகள்

சக்திதாஸன்

18 பிப்ரவரி 1921 ரௌத்திரி மாசி 7

பொம்மிடி ரெயில்வே விபத்து

"தென் இந்தியா ரெயில்வே, பொம்மிடியில் நடந்த பயங்கரமான விபத்தைக் குறித்து நம் நேயர்கள் சிலருக்கு மறதி யேற்பட்டிருக்கக்கூடும். அது நடந்து இப்போது ஏறக்குறைய இரண்டு மாஸங்களாகின்றன. அதில் 40 பேருக்கு மேலே இறந்து போனர்கள். ஏராளமான பொருட் சேதம் ஏற்பட்டது. ரெயில்வே பாதுகாப்பு விஷயத்தில் புது முறைகள் அனுஸரிக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். விசேஷத் தகுதி பெற்ற நிபுணர்களென்று உயர்ந்த சம்பளம் வாங்கும் ஐரோப்பிய மேற்பார்வை உத்யோகஸ்தர்கள் அதி ஜாக்ரதையுடன் வேலை செய்வதாகத் தெரிவிக்கிறார்கள். பொது உத்தரவுகளும் தொழிற் கட்டளைகளும் மலிந்து போயின. இவ்வளவையும் மீறி மேற்படி விபத்து நேர்ந்திருப்பதினின்றும், ரெயில்வே பராமரிப்பில் எங்கோ ஒரு மூலையில் பிழை யிருப்பதாக விளங்குகிறது. ஸம்பவம் நடந்த காலத்தை யொட்டி ஸ்தலத்திலேயே ஒரு "கலப்பு விசாரணை" நடத்தப்பட்டது. அதில் பத்திரிகைப் பிரதிநிதிகளும் பொது ஜனங்களின் பிரதிநிதிகளும் ஸாக்ஷியாக இருக்க அனுமதி கொடுக்கப்படவில்லை. ஆனல் அந்த விசாரணை ஸபையின் தீர்மானங்கள் இன்

னும் ப்ரசுரம் செய்யப்படவில்லை" என்று ஒரு நிருபர் சென்னைப் பத்திரிகை யொன்றில் முறையிட் டெழுதியிருக்கிறார். இதனிடையே வண்டியோட்டி, தீ வேலையாள், ஸ்டேஷன் அதிகாரி, அவருடைய உப அதிகாரி இத்தனை பேரையும் வேலையினின்று ஒதுக்கி வைத்திருப்பதாகத் தெரிகிறது. இத்தனை காலமாக இந்த விபத்துக்கு யார் பொறுப்பாளி யென்று நிச்சயப்படுத்தாமலிருப்பது மிகவும் வியப் புத் தருகின்றது. எவரும் பொறுப்பில்லையாயின், மனிதராலே தடுக்கொணாதவாறு அவ்விபத்து நேர்ந் திருப்பதாயின், அதையாவது ஏன் வெளிப்படுத்தாம லிருக்கிறார்கள்? இந்த மாதிரி ஸமீப காலத்தில் வேல்ஸில் நடந்த விபத்தில் சேதம் இதைக் காட்டி லும் மிகக் குறைவாயினும், அது நடந்த பத்து தினங்களுக்குள்ளே அதன் காரணமின்ன தென்ப தையும் பொறுப்பாளிகள் இன்ன ரென்பதையும் நிர்ணயித்து வெளிப்படுத்தி விட்டார்கள். இந்த பொம்மிடி, விபத்தின் காரணமும், இதன் பொறுப் பாளிகள் எவரென்பதும் இன்னும் ஏன் நிச்சயிக்கப் படவில்லை? இந்தியாவில் பிரயாணிகளுடைய உயி ருக்கு மதிப்புக் குறை யென்ற கொள்கையை இன்னும் ரெயில்வே அதிகாரிகள் விடாது பற்றி யிருக்கிறார்களா? இந்த ரெயில்வே அதிகாரிகள் தாம் வெளியிடற்குரிய அறிகைகையை வெளியிடச் செய்யும் பொறுப்பு யாரைச் சேர்ந்தது?

"என்னிடம் ஒரு கைத்துப்பாக்கி இருந்தால்!"

கிரேக்கரிடம் இன்னும் சற்றே அதிஸைன்ய மிருந்தால், நேசக் கக்ஷியார் 'ஸேவர்' உடம்பாட்டை

மாற்றுவதென்ற பேச்சை ஆரம்பித்தே யிருக்க மாட்டார்கள். ஆதலால், கிரேக்கர் தமது படையை மிகுதி செய்வதில் அதிக சிரத்தை செலுத்தி வருகிறார்கள். ஜெர்மனியிலுள்ள சட்ட அனுமதி பெறாத படைக் கூட்டங்களைக் கலைத்துவிட வேண்டுமென்று நேசக் கக்ஷியார் எவ்வளவோ சொல்லிக் கொண்டிருக்க, அதை மீறி ஜெர்மானியர் இன்னும் ரஹஸ்யமாகப் படைகளைத் திரட்டி வருகிறார்கள். ஜப்பானும், அமெரிக்காவும் கப்பற் படைகள் கட்டும் விஷயத்தில் தீவிரமான வேலை செய்து வருகின்றன. ஆஸ்த்ரேலியாவும் கானடாவும் தமக்குக் கப்பற் படைகள் அமைத்துக்கொள்ள முயலுகின்றன. இங்கிலாந்து தனது ஸைன்யத்தை அதிகப்படுத்த முயற்சி செய்கிறது. இவர்களெல்லாரும் உலகத்தில் நித்யமாகவும், நிரந்தரமாகவும், சாசுவதமாகவும் ஸமாதானம் நின்று நிலவவேண்டுமென்ற கொள்கையையே தரித்திருப்பதாகச் சில ஸமயங்களில் பேசிக் கொள்ளுகிறார்கள். ஆனால் ஸதா மண்ணாசை காரணமாகப் படைகளைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய குணம் இந்த மாஸம் (பெப்ருவரி) 11-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலையில், திருவாங்கூர் எல்லையிலுள்ள ஆராமொழிக் குன்றினருகே, திருவாங்கூர்ப் போலீஸ் சேவகராலே பிடிக்கப்பட்ட காசி நாடான் என்ற கீர்த்திபெற்ற கள்வனுடைய குணத்தை யொத்தது. இவர்களுடைய மனமும், உள்ளமும், அந்தக் காசி நாடானுடைய மனதையும் உள்ளத்தையும் ஒத்தன. இந்தக் காசிநாடானுடைய விருத்தாந்தம் "சென்னை

மெயில்'' பத்திரிகைக்கு அதன் திருநெல்வேலி அறிக்கையாளரால் தந்தி மூலமாக அனுப்பப்பட்டிருக்கிறது. சென்ற பல மாஸங்களாக நாங்கனேரி, சோனமாதேவி தாலுகாக்களில் பிரபலமான வழிப்பறிகளும், கொள்ளைகளும் நடத்திவரும் ஐம்புலிங்க நாடான் என்பவனுடைய படைத் தலைவர்களில் இந்தக் காசி நாடான் ஒருவன். இவனுக்கு இப்போது வயது இருபத்து மூன்று. இவனைப் போலீஸார் கைதியாக்கிய ஸமயத்தில் இவன் சொல்லிய வார்த்தைகள் பின்வருவன: ''ஹா! நீ வைத்திருப்பது போன்ற கைத் துப்பாக்கியொன்று மாத்திரம் என்னிடம் இருந்தால் நான் திருவாங்கூரை ஆளுவேன்'' என்றானும். திருநெல்வேலிக் கள்வரிடையேயும் பல அலெக்ஜாந்தர்கள் இருக்கிறார்கள்!

பெர்லின் நகரத்தில்
இந்தியன் கொலையுண்ட மாயம்

சென்ற மாஸம் (ஜனவரி) 23-ஆம் தேதியன்று பெர்லின் நகரத்திலிருந்து லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகைக்கு வந்திருக்கும் தந்தியொன்றில் ஸிங் என்ற இந்திய இளைஞனொருவன் கொலையுண்ட விஷயத்தைக் குறித்து பெர்லின் நகர் முழுதிலும் பெருங் கலக்கமேற்பட்டதாகத் தெரிகிறது. விஷயம் ஜெர்மன் போலீஸாரின் விசாரணையிலிருக்கிறது.

''ஜெர்மனியிடம் நட்புக் கொண்ட இந்தியர்களின் ஸபை'' என்பதாக பெர்லினில் ஒரு ஸபை இருக்கிறது. அந்த ஸபையார் இந்தியாவில் உள்ள ப்ரிடிஷ் ஆட்சி ஸபை முறைக்கு விரோதமாக

ஜெர்மனியிலே கிளர்ச்சி செய்து வருவதாக லண்டன் "டைம்ஸ்" நிருபர் சொல்லுகிறார். அது ஆரம்பித்து நெடுங்காலமாகவில்லை. சென்ற (1920-ஆம்) வருஷம் டிஸம்பர் மாஸம் 7-ஆந் தேதியன்று அந்த ஸபை ஜெர்மன் அதிகாரிகளின் அனுமதியுடன் நிறக்கப்பட்டது. அந்த ஸபைக்குத் தலைவரின் பெயர் எமீர் தேகிப் அர்ஸ்லான். இவர் மஹாயுத்தம் தொடங்கிய காலத்தில் துருக்கிப் பார்லிமெண்டில் மத்யக் கக்ஷியின் தலைவராக இருந்தவர். மற்ற அங்கத்தாரில் ஸ்ரீமான் பிள்ளை, கர்னல் எமெர்ஸன் முதலியவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ப்ரிடிஷாருக்கு விரோதமாக நடைபெறும் இந்த ஸபையை ஜெர்மானிய அதிகாரிகள் மிக ஆவலுடன் ஆதரித்து வருவதாக "டைம்ஸ்" நிருபர் தெரிவிக்கிறார். வெஸ்ட்(f)பாலியா மாகாணத்து ஆலைத் தலைவர்கள் அந்த ஸபைக்குப் பண உதவி செய்திருக்கிறார்கள். இது நிற்க.

மேற்படி ஸிங் கொலையுண்ட விஷயத்தில் அவனுடைய ஜெர்மானிய மனைவியையும், அவளுடைய மாதா பிதாக்களையும், ஜெர்மன் போலீஸார் ஸம்சயப்பட்டுப் பிடித்து வைத்திருக்கிறார்கள். இவன் விவாகமாகுமுன்பு அந்த ஸ்திரீயினிடம் தனக்கு இந்தியாவில் ஏராளமான செல்வமிருப்பதாகச் சொல்லி அவளை வஞ்சித்ததாகவும், அவளும் அப்படியே இவனிடம் தன் பிதா மிக்க செல்வமுடையவனென்று பொய் சொன்னதாகவும், ஆதலால் விவாகமாய் இருநிறத்து உண்மையுந் தெரிந்த பின்னர், அந்த தம்பதிகளுக்குள்ளே மனவருத்த

மேற்பட்டிருந்ததாகவும் போலீஸார் தெரிவிக்கிறார்கள்.

வெனிஜிலாஸின் தீர்மானம்

கிரேக்க ஸிம்ஹாஸனத்தின் மீது காண்ஸ்டன்டைன் ராஜா வீற்றிருக்கும் வரை தாம் ராஜரீக விவகாரங்களில் சிறிதேனும் ஸம்பந்தப்படாமல் விலகிக்கொள்ளப் போவதுறுதியென்று வெனிஜிலாஸ் தம் நண்பரொருவர் மூலமாகத் தமது கக்ஷியைச் சேர்ந்த முக்ய கிரேக்கப் பத்திரிகையில் விளம்பரம் செய்வித்திருக்கிறார். அங்ஙனமானால், இவர் பஹிரங்கமாக யவன ராஜ்யத்து விவகாரங்களில் கலந்து கொள்ளாவிட்டாலும், ரஹஸ்யத்திலே, காண்ஸ்டன்டைனுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்து கொண்டிருப்பார். வெளியரசுகளின் மூலமாகச் செய்யும் சூழ்ச்சிகளால் இவர் தம் ராஜ்யத்திற்கு அதிகத் தீங்கிழைக்க முடியாது. ஆனல் கிரேக்கர்களுக்குள்ளேயே கக்ஷி பேதங்கள் ஏற்படுத்த இவருக்கு இடமேற்படக் கூடாது. அதற்கிடமேற்பட்டால் பிறகு கிரேக்க ஸிம்ஹாஸனம் காண்ஸ்டன்டைனுக்கு உறுதியில்லை. வெனிஜிலாஸ் பழைய காலத்து நரி. அதனல் அஞ்சத் தக்கதென்று சிலர் நினைக்கக்கூடும். ஆனல் வாலறுந்த நரி-ஆதலால் அஞ்சத் தக்கதன்று.

இந்தோர் ராஜரீக அலங்கோலங்கள்

இந்தோர் ஸம்ஸ்தானத்தில் நிகழ்ச்சி பெற்று வரும்-ஸ்த்ரீகளைக் கடத்திக்கொண்டுபோவது ஸம்பந்தமான-அலங்கோலங்களைக் குறித்து ஏற்கெனவே

நமது பத்திரிகையில் பேசி யிருக்கிறோம். இப்போது அந்த வதந்திகளெல்லாம் சுத்தப் பொய்யென்று அந்த ஸம்ஸ்தான அதிகாரிகள் ஒரு மறுப்புரை ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். சென்ற வருஷம் ஸெப்டம்பர் மாஸத்திலே இந்த விஷயத்தைக் குறித்து இங்கோரில் ப்ரசுரமாகும் "மல்லாரி மார்த்தாண்ட விஜயம்" என்ற பத்திரிகையில் ஒரு அறிக்கை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இந்தக் கெட்ட செயல்களுக்குக் காரணமாவோரைக்குறித்து யாரேனும் ராஜாங்கத்தாருக்குத் தகவல் கொடுக்கலாமென்றும், அங்ஙனம் தகவல் கொடுப்போருக்கு வலிமையுடைய அதிகார துஷ்டர்களாலே கேடேதும் நேராமல் ராஜாங்கத்தார் இரண்டு வாரம் வரை பாதுகாப்பார்களென்றும், அந்த அறிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அந்த விளம்பரத்துக்கப்பால் எவனும் வந்து யாதொரு தகவலும் கொடுக்கவில்லை. அந்தத் தீச்செயல்களில் உயர்ந்த ராஜாங்க உத்யோகஸ்தர் ஸம்பந்தப்பட்டிருந்ததால் எவ்வித ருஜுவும் கிடைக்கவில்லை யென்று ஸம்ஸ்தான அறிக்கை சொல்லுகிறது. ஆனால் உயர்ந்த உத்யோகஸ்தர்களுக்கு விரோதமாக உயர்ந்த உத்யோகஸ்தர்களிடம் வாக்குமூலம் கொடுக்கத் துணியும் நிர்ப்பாக்யனுக்கு ராஜாங்கத்தார் இரண்டு வாரம் மாத்திரமே பாதுகாப்பருளினால் போதுமா? இதை மஹாராஜா கவனியாதது பற்றி வருத்தமடைகிறோம். இனி ஸ்ரீ கோவிந்தராவ் நிகோஷ்காரின் மகளுடைய விவாகத்தின் ஸம்பந்தமாக அவருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் மஹாராஜா

வின் உத்தரவுப்படி நேர்ந்த அவமானங்களும் துன்பங்களும் மேற்படி நிகோவ்ஸ்காராலே கான்பூர் மாஜிஸ்ட்ரேட் மூன்பு செய்து கொள்ளப்பட்ட பிரமாணப் பத்திரிகையில் விவரிக்கப்பட்டன.

அந்தப் பிரமாணப் பத்திரிகை வெறும் பொய் யென்று மஹாராஜா தெரிவிக்கிறார். மஹாராஜா தாம் நேராக அந்த விவாகத்தைப் பற்றி எவ்வித மான அபிப்ராயமும் சொல்லவில்லை யென்றும், அதைக்குறித்து விசாரணை செய்யும்படி ஹைகோர்ட் டுக்கு முறைப்படி உத்தரவு கொடுத்ததாகவும், ஹைகோர்ட்டார் அந்த விவாகம் செல்லா தென்று தீர்ப்புச் சொல்லி விட்டார்களென்றும் ஸம்ஸ்தான அறிக்கை தெரிவிக்கிறது. இவ்விஷயம் இந்தோர் "லா ரிபோர்ட்" வரிசையில் ப்ரசுரமாயிருப்பதாகவும் அவ்வறிக்கை சொல்லுகிறது. மேலும் இப்போ துள்ள மஹாராஜா சென்ற 10 வருஷங்களாகப் பட்டம் ஆளுகிறார். இதுவரை இவருடைய ஆட்சி யின் மீது எவ்விதமான முறையீடுகளும் வெளிப்பட வில்லை. இந்தோர் ஸம்ஸ்தானத்தின் வேலையி னின்று, ராஜவிரோதம் பற்றியும், கெட்டநடை பற்றியும் ஸமீப காலத்தில் தள்ளுண்ட உயர்தர உத்யோகஸ்தர்களே இந்தப் பொய் வதந்திகளால் மஹாராஜாவுக்கும் அவருடைய ஆட்சிக்கும் அவ மதிப் பிழைக்க விரும்பி, இவற்றைப் பரப்புகிறார் களென்று ஸம்ஸ்தான அறிக்கை கூறுகிறது. எனிலும் ஸ்ரீ கோவிந்தராவ் நிகோவ்காரின் முறை யீடுகளைக் குறித்து இந்தோர் ஸம்ஸ்தானத்தார் சொல்லும் ஸமாதானத்தில் நமக்கு முழுத் திருப்தி

பிறக்கவில்லை. இவ் விஷயத்தைக் குறித்து ஜனத் தலைவர்கள் ப்ரத்யேகமான விசாரணை செய்து தம்முடைய முடிவுகளை நாட்டோருக்குத் தெரிவிக்க வேண்டு மென்று விரும்புகிறோம்.

மஹாமகம்

ஸ்ரீமான் சி. சுப்ரமணிய பாரதி

24 பிப்ரவரி 1921 ரௌத்ரி மாசி 13

இந்த்ரனே தேவ தேவன் என்ப. மற்ற மனிதருக்கு வானவர் எப்படியோ, அப்படி வானவர்க்கவன் என்பது குறிப்பு. வடமொழியில் வால்மீகி, காளிதாஸர்களையும், தமிழில் கம்பனையும் புகழேந்தியையும், இங்கிலீஷில் ஷெல்லியையும், "கவிகளின் கவி" என்று சிறப்பித்துச் சொல்லுகிறார்கள். அதாவது, மற்ற மனிதருக்குக் கவிகளால் எத்தனை புதிய சுவை கிடைக்கிறதோ அத்தனை புதிய சுவை கவிஞருக்கு அவ்வால்மீகி முதலியவர்களிடம் கிடைக்கிற தென்பது குறிப்பு.

அது போல கும்பகோணத்திலுள்ள அமிர்தவாவிகள் என்று சொல்லப்பட்ட பொற்றாமரைக் குளம், மஹாமகக் குளம் இவ்விரண்டும் புண்ய தீர்த்தங்களுக்குப் புண்ய தீர்த்த மென்று புராணம் சொல்லுகிறது. அதெப்படி யெனில் முற்காலத்தில் ஒன்பது தீர்த்த தேவதைகளும் ஈசனிடத்தில் சென்று "கடவுளே, உலகத்திலுள்ள பாவிகளெல்லாரும் எங்களிடம் வந்து மூழ்கித் தங்கள் பாவங்களையெல்லாம் எங்களுக்குக் கரைத்து விட்டுவிட்டுப் புண்யாத்மாக்களாகிச் செல்லுகின்றனர். நாங்கள் சம்பாதிக்கும் இந்தப் பாவங்களுக் கெல்லாம் விமோ

சனம் அருள் புரிய வேண்டும்" என்று ப்ரார்த்தனை செய்தனர். அவர்களிடம் கருணை பாலித்து எம் பெருமான் "புண்ய தீர்த்தங்களே! பாவங்களாலே தீண்டப் படாத அமிர்த வாவிகள் இரண்டு நான் கும்பகோணத்தில் சமைத்திருக்கிறேன். அவற்றில் சென்று ஸ்நானம் புரிந்தால் உங்களுடைய பாவங் கள் விலகி விடும்" என்று கட்டளை புரிந்தார்.

பன்னிரண்டு வருஷங்களுக் கொரு முறை இங்கு கங்கை முதலிய தீர்த்த தேவதைகள் வந்து ஸ்நானம் புரியும் ஸமயமாகிய மஹாமக புண்ய காலம் நேற்று (பெப். 22) செவ்வாய்க் கிழமை யன்று கும்பகோணத்தில் கொண்டாடப் பட்டது. லக்ஷக கணக்கான ஹிந்துக்கள் நேற்று அதில் ஸ்நானம் செய்திருப்பார்கள்.

ஆனால், இத்தனை பேர்களும் ஸர்வ பாப ரஹிதர்களாய்ப் பரம சுத்தத் தன்மை யெய்தி விடுவார் களோ என்று சில மதப் பற்றில்லாதார் ஆக்ஷேபிக்கலாம். தீர்த்த ஸ்தலங்கள், புண்ய க்ஷேத்ரங் கள், எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவாக அமைந் திருக்கின்றன. யூதர்கள் யெருஸலேமைப் புண்ய க்ஷேத்ர மென்கிறார்கள். கிறிஸ்தவர்கள் யெருஸ லேம், நஸரேத், ரோமாபுரி முதலிய பல பல புண்ய க்ஷேத்திரங்களைக் கொண்டாடுகிறார்கள். முஸ்லிம் கள் மக்கம், மதீனம், யெருஸலேம் முதலிய கணக் கற்ற க்ஷேத்ரங்களைக் கொண்டாடுகிறார்கள். பௌத் தர் கயை முதலிய ஆயிரக் கணக்கான புண்ய க்ஷேத்ரங்களைப் போற்றி வருகிறார்கள். எனவே, அறியாமை காரணமாகவோ, மறதி காரணமாகவோ

சில கிறிஸ்தவப் பாதிரிகள் புண்ய க்ஷேத்ர யாத்திரை ஹிந்துக்களுக்கு மாத்திரம் விசேஷமாக ஏற்பட்ட வழக்கமென்று கருதுவார் போல், ஹிந்து மதத்தின் மீது இவ்விஷயத்தில் பழி கூறுவதை நாம் புறக்கணித்து, மதவாதிகளுக்குள்ளே இவ் வழக்கத்தை மறுத்துரைப்போர் யாருமிருக்க நியாயமில்லை யாதலால் மதப் பற்றில்லாதவர்களே மேற் கூறிய கேள்வி கேட்டார்களென்றுகுறிப்பிட்டோம்.

ஆனால், மதப் பற்றுடையார், அஃதற்றோர் என்னும் இரு திறத்தாரும் உணர்ந்துகொள்ளும் படி, இது போன்ற தீர்த்த யாத்திரைகளின் தத்துவத்தை இங்கு விளக்குவோம். இவற்றில் பாவ மழிந்து புண்யத் தன்மை பெற வேண்டுமானால், உண்மையான நம்பிகை யிருக்க வேண்டுமென்று நம்முடைய புராதன ஹிந்து சாஸ்த்ரங்கள் மிகத் தெளிவாக வற்புறுத்தி யிருக்கின்றன. உண்மை யான மனக் கோளின்றி கங்கையில் முழுகினாலும், மஹாமகத்தில் மூழ்கினாலும் பாப கர்மம் தொலையா தென்று சாஸ்த்ரங்கள் தெளிவு படத் தெரிவிக் கின்றன. இனிமேல் நாம் பாவம் பண்ணுவதில்லை யென்ற மனே நிச்சயம் வேண்டும்.

தீர்த்த யாத்திரையின் அர்த்தமும் பயனும்

இந்தத் தீர்மானந்தான் பரிசுத்தத் தன்மை கொடுக்கிறது. ஒருவன் இந்த க்ஷண முதல் பாவம் செய்வதில்லை யென்று மன வுறுதி செய்துகொள்ளு தலாகிய அக்நி மயமான செய்கையாலேயே அவன் அது வரை செய்த பாவ மெல்லாம் எரித்து விடப்

படுகிறது. "ஞானக்நிஸ் ஸர்வகர்மாணி பஸ்யந்தி குருதேர்ஜ்ஞான" என்று பகவத் கீதையில் கடவுள் சொல்லி யிருக்கிறார். பாவத்தை இனிச் செய்ய வில்லை யென்ற தீர்மானம் உண்மையாக இருக்க வேண்டும். ஞானமே அவ்வளவுதான். அதைக் காட்டிலும் பெரிய ஞானம் கிடையாது. சிலர் தவத்தால் ஞானமெய்த நாடுகிறார்கள். சிலர் தானத்தால், சிலர் ஆராய்ச்சியால், சிலர் தியானத்தால், சிலர் பூஜையால் ஞான மெய்த முயலுகிறார்கள். ஆனால் எல்லா வழிகளும் உண்மையான வழிகளே இவை யெல்லாம் ஞானத்தைத் தரும். ஆனால் எந்த வழியாலே தரும்? பாவத்தைத் தீர்த்து விடுதலாகிய வழியிலே தரும். அவற்றால் பாவம் நீங்கும். அதனால் மோக்ஷம் அல்லது அறிவு மயக்கம் தெளியும். அதிலிருந்து ஞான முண்டாகும். ஞானமாவது எல்லாம் கடவுள்மயமென்ற அனுபவம். பாவமாவது தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பம் விளைவித்தல். இங்ஙனமே, புண்யமாவது தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பக் கலப்பில்லாத சுத்தமான இன்பம் விளைவித்ததற்குரிய செய்கை யென்பது சாஸ்த்ர கோடிகளின் பரம ஸித்தாந்தம். எல்லாம் ஆத்மா - எல்லாம் கடவுள் ஆதலால், எல்லாம் தான் என்ற ஞானத்தால் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் குணம் நீங்கிவிடும். அதாவது பாவம் போய்விடும். நியாயம் புண்யம்; அநியாயம் பாவம். ஹிதம் புண்யம்; அஹிதம் பாவம். ஸத்யம் புண்யம்; அஸத்யம் பாவம்: திருப்தி புண்யம்; துக்கம் பாவம்.

மரணமாவது பாவத்தின் கூலி யென்று கிறிஸ்தவ வேதம் சொல்லுகிறது.

" இங்ஙனம் பாவத்தைத் துறந்துவிட விரும்பு வோனுக்கு மனே நிச்சயமும், ஞான உதயமும் கதியாயின், பணச் செலவு செய்து ரயிலேறிக் கும்பகோணத்துக்கும், காசிக்கும், ராமேசுவரத்திற்கும் ஏன் போகவேண்டும்?" என்று சிலர் வினவக்கூடும்.

மன மாறுதல்கள் சாசுவதமான இடத்தே விரதங்கள் என்று கூறப்படும், பெரிய சாசுவதமான ஸங்கல்பங்கள் விரதங்களெனப்படும். இந்த விரதங்கள் மனிதருடைய நிணைப்பில் நன்முக அழுந்தும் பொருட்டு ஆன்றோர் உலக மெங்கணும் இவற்றுக்குச் சில சடங்குகள் வகுத்திருக்கிறார்கள். கல்வி தொடங்கப் போகிறபோது ஒரு சடங்கு நடத்தப் படுகிறது. விவாகம் பண்ணும்போது மிகவும் கோலாகலமான கிரியைகள் நடக்கின்றன. புதிய வீட்டில் குடி புகும்போது ஒரு சடங்கு நடத்துகிறோம். இவற்றின் நோக்கம், நாம் ஏதேனும் அமங்களத்தை நீக்கி மங்களத்தை சாசுவத உடைமையாகச் செய்து கொள்ள வேண்டு மென்பதேயாம். நான் மேலே கூறியபடி, மரணம் பாவத்தின் கூலி என்று கிறிஸ்தவ வேதம் சொல்வதைக் கருதுமிடத்தே, அமங்களமானத்திலும் அமங்களமானது பாவ மென்று விளங்குகிறது. எனவே, மங்களங்களிற் சிறந்தது புண்ய மென்பதும் வெளிப்படையாம்.

இப்படிப்பட்ட பாவத்தைக் களைந்து புண்யத் தைப் போர்த்துக் கொள்வதாகிய ராஜ விரதத்துக்கு ஒரு சடங்கு வேண்டாவோ? அவ்விதச் சடங்கே மஹாமக முதலிய புண்ய தீர்த்த யாத்திரை யென்க.

புதுமைகள்

ஸோவியட் ருஷ்யாவில் பணம் தொலைந்தது!

காளிதாஸன்

2 மார்ச் 1921 ரௌத்திரி மாஸி 19

லாரின் என்பவருடைய அறிக்கையின் மீது ஸோவியட் கவர்ன்மெண்டார் (ருஷியக் குடியரசு ராஜாங்கத்தார்) ஓர் தீர்மானம் பிறப்பித்திருக்கிறார்கள். அதன்படி அரசிறை யாட்சித் தலைவர் சகுந்த உத்தியோகஸ்தர்களுடனே கலந்துகொண்டு இன்னும் ஒரு மாஸ காலத்திற்குள்ளே ஒரு 'நகல்' சட்டம் தயார் செய்து பிரதிநிதிஸபையாருக்குத் தெரிவிக்க வேண்டும். அந்தச் சட்டத்தின் கருத்து யாதென்றால், தொழிலாளருக்கும், வேலையாட்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் உணவிலாகாவில் கொடுக்கப்பட்ட, முதல், இரண்டாந் தரத்து ஆஹாரச் சீட்டுகளுக்குத் தரப்படுவன உட்பட்ட எல்லா சாமான்களுக்கும பணம் கொடுக்கும் முறையை ஒழித்துவிட வேண்டும் என்பது. ராஜாங்கத்துக்குரிய அல்லது நகர ஸபைகளுக்குரிய வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர், வேலையாட்கள், அவர்களுடைய குடும்பத்தார்களிட மிருந்து பண வாடகை வாங்குவதை நிறுத்தி விடுவதும் அந்தச் சட்டத்தின் நோக்கம். இங்ஙனமே, தொழிலாள

ருக்கும் வேலையாட்களுக்கும் ஸங்க ஸ்தாபனங்களுக்கும் முடிய ஷே இலாகாவால் கொடுக்கப்படும் அடுப்புக்கரி வகைகளனைத்திற்கும் பணக் கிரயம் கொடுக்க வேண்டியதில்லை யென்றும், வாயு, மின்ஸாரம், டெலிபோன், நீர், சாக்கடை முதலிய வற்றுக்கும் பணம் கொடுக்க வேண்டியதில்லை யென்றும் அச்சட்டம் நியமிக்கும்.

ராஜாங்கப் "பணந் தொலைத்தல்" கமிஷன்

இதனிடையே ருஷிய ராஜாங்கத்தார் ஒரு விசேஷ ஸமிதி யேற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஸமிதியில் ஒரு மாஸ காலத்திற்குள்ளே பணக் கிரயங்கள் என்ற ஏற்பாட்டையே அழித்துவிடுதற் குரிய விஸ்தாரமான திட்ட மொன்று சமைத்துக் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றுள், பாங்க் கணக்கு, ஸோவியட் தொழிற் சாலைகளினிடையேயும் ஸோவியட் ஸங்கங்களினிடையேயும் பரஸ்பரம் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் முதலியனவும் அடங்கும். இந்த ஏற்பாடுகளெல்லாம் விரைவாக அநுஷ்டானத்திற்கு வந்துவிடுமென்று மேலே கூறிய ஸ்ரீமான் லாரின் என்பவரே அமெரிக்கப் பத்திரிகை யொன்றில் எழுதியிருக்கிறார். இதே காலத்தில் ஸ்ரீமான் லாரினால் சொல்லப்பட்ட மற்றொரு யோசனையும் நிறைவேற்றப்படுமென்று தெரிகிறது. இந்த யோசனையை ஏற்கெனவே ராஜாங்கத்தார் அங்கீகாரம் புரிந்து விட்டனர். அதாவது, ரயில் பாதை வழியாகப் போகும் ஸாமான்களுக்குத் தீர்வைப்

பணம் வசூல் செய்யாமை, ஏறக்குறையப் பெரும் பான்மை ரயில்வே யாத்திரைக் கட்டணங்கள் வாங்குவதை நிறுத்திவிடுதல் முதலியவற்றைக் குறித்தது.

ஆரம்பங்கள்

1918-ம் வருஷத்தில் மாஸ்கோவில் நடை பெற்ற "ஸோஷலிஸ்ட்" ஸமாஜத்தில் குழந்தை களுக்குக் கொடுக்கும் ஆஹாரம் முதலியவற்றுக்கும், தொழிலாளருக்குக் கொடுக்கும் ஆஹாரம், துணி, வாஸஸ்தலம் முதலிய வற்றுக்கும் பணம் வாங்கக் கூடாதென்ற யோசனை ஸ்ரீமான் லாரினாலே சொல் லப்பட்டது. அதை ஸமாஜத்தார் ஒரு மனதுடன் அங்கீகாரம் செய்து கொண்டனர். அவ்வருஷ ஏப்ரல் மாஸத்தில் குழந்தைகளுக் கெல்லாம் ருஷி யாவில் இனம் ஆஹாரம் போடுவதாக ராஜாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. குழந்தைகளின் வயதளவு 14-ஆக வைத்திருந்தது பின்பு 16-ஆக உயர்த்தப்பட்டது. சிறிது காலத்திற்குப் பிறகு, வேலையாட்களுக்கெல்லாம் இனமாகத் துணி கொடுக் கப்பட்டது. அப்பால் சவர்க்காரம் எல்லாத் தொழி லாளருக்கும் விநியோகம் செய்யப்பட்டது. அப்பால் சாதாரணக் கடிதங்களுக்குத் தபாற் கிரயமாகப் பணம் செலுத்தும் வழக்கம் நிறுத்தப்பட்டது. அப் பால் வேலையாட்களின் கூலிக்குப் பணம் கொடுப் பதனிடத்தில் ஸாமான் கொடுப்பதென்றேற் பட்டது. இப்போது மேற்கூறியவற்றை யெல்லாந் திரட்டி, ஒரேயடியாக ஸர்வ விஷயங்களிலும் பண மில்லாதபடி செய்துவிடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

உண்மையான புதுமை

மனுஷ்ய நாகரிகத்தின் ஆரம்பகாலந் தொட்டே பணப் பழக்கமிருந்து வருகிறது. இதனல் விளைந்த துன்பங்கள் எண்ணற்றன. அந்தப் பழக்கத்தை இப்போது மனித ஜாதியில் பத்திலொரு பங்கு ஜனத் தொகையை ஆளும் ராஜாங்கத்தார் திடீ ரென்று நிறுத்த உத்தேசிக்கிறார்கள். இதனல் புதிய ஸௌகர்யங்களேற் படுவதுடனே, பணப் பழக்கத்தால் இயன்று வரும் பழைய ஸௌகர்யங் களுக்கு இடையூறில்லாமல் செய்து விடக் கூடு மானல், ருஷியாவை இவ்விஷயத்தில் உலகத்தார் பின்பற்ற முயல்வார்களென்பதில் ஸந்தேஹமில்லை.

ஸெண்ட் நிஹல்ஸிங் சொல்வது

ஸ்ரீமான் ஸெண்ட்-நிஹல்ஸிங் "பால் மால்" கெஜட்டின் தலையங்கப் பக்கத்தில் எழுதியிருக்கும் வ்யாஸ மொன்றில் நம் எதிர்கால வைஸ்ராயாகிய லார்டு ரீடிங்குக்குச் சில புத்தி வசனங்கள் சொல்லி யிருக்கிறார். ப்ரிடிஷார் மீட்டு மீட்டும் வாக்குறுதிகள் செய்து அவற்றை உடைப்பதினின்றும் இந்தியாவில் அமைதி ஏற்படாதென்று ஸ்ரீமான் ஸிங் எச்சரிக் கிறார். இந்தியச் சட்டப் புஸ்தகத்திலுள்ள அடக்கு முறைச் சட்டங்களையும் உத்தரவுகளையும் அறவே ஒழித்து விடுவதாக லார்ட் ரீடிங் இந்தியாவில் இறங் கியவுடனே உறுதி மொழி கொடுக்க வேண்டு மென்று ஸ்ரீமான் ஸிங் விரும்புகிறார். அவ்வுறுதி மொழியை விரைவில் நிறைவேற்றவும் வேண்டு மென்கிறார். ரௌலட் சட்டத்தையும், இந்தியாவில்

பேச்சு ஸ்வதந்த்ரத்தையும் பத்திரிகை ஸ்வதந்த்ரத்தையும் சுருக்கக்கூடிய மற்றச் சட்டங்களையும் அழிக்கும்படி சிபாரிசு செய்கிறார். இந்தியர்களின் ஸம்மதத்தின் மீது இந்தியாவை ஆளுவதாக ப்ரிடிஷார் ஒருபுறம் கதை சொல்லிக் கொண்டு மற்றொரு பக்கத்தில் அடக்கு முறைகளை நடத்திக் கொண்டிருந்தால், ப்ரிடிஷ் வாக்குறுதிகளை இந்தியர் நம்புதல் ஸாத்யப்படாமற் போகுமென்பதைக் குறிப்பிடுகிறார். இவ்விஷயம் ராய்ட்டர் தந்தி மூலமாக இந்தியாவுக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் ஸ்ரீமான் ஸிங் சொல்வதை இங்கிலாந்திலுள்ள சிலர் ஆதரிக்கக் கூடுமெனினும், இங்குள்ள அதிகாரிகள் அவர் விருப்பத்தைத் தாமும் ஆதரிக்க மாட்டார்கள்; லார்ட்-ரீடிங் ஆதரிக்க இடம் கொடுக்கவும் மாட்டார்க ளென்று தோன்றுகிறது. இங்குள்ள அதிகாரி வர்க்கத்தார் பாக்ய ஹீனராகிய (ப்ரான்ஸ் தேசத்து) (b) பூர் (b) போன் ராஜ குடும் பத்தாரைப் போலவே எதனையும் புதிதாகத் தெரிந்துகொள்வதுமில்லை, எதனையும் மறப்பதுமில்லை என்று "ஹிந்து" பத்திராதிபர் எடுத்துக் காட்டியிருப்பது மெய்யேயாம். இவர்களைச் சீர் திருத்து முன்பு இந்தியாவுக்கு ப்ரிடன் வேறென்ன சீர் திருத்தங்கொடுத்த போதிலும் இந்தியாவில் அமைதி யேற்படாதென்பது திண்ணம். பரிபூர்ணஸ்வராஜ்யங் கொடுப்பதே இந்தியா, ப்ரிடன் இரண்டு தேசங்களுக்கும் ஹிதமானவழி; அதுதான் சரியான சீர்திருத்தம். மற்ற எவ்விதமான சீர்திருத்தங்களையும் இங்குள்ள அதிகாரிகள் குட்டிச்சுவராக்கி விடுவார்கள்.

புதுமைகள்

காளிதாஸன்

5 மார்ச் 1921 ரௌத்ரி மாஸி 22

இல்லாத காலிலே நோவு தெரிதல்

ஐரோப்பிய மஹாயுத்தத்தில் கால் பறி கொடுத்த கூட்டத்தார் ப்ரான்ஸ் தேசத்தில், இதர தேசங்களைப் போலவே ஆயிரக் கணக்கான ஜனங் கள் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் நவீன முறையில் மரக் கால்கள் செய்து கொடுக்கப்பட்டிருக் கின்றன. இந்தக் கால்கள் மிகவும் ஸௌகர்யமான முறையில் அமைக்கப்பட்டிருப்பதால், இவர்கள் சிறிது காலத்திற்குள் அவற்றை ஸாமான்யக் கால் களாகவே பாவித்து விடுவதாகத் தெரிவிக்கப்படு கிறது. மனுஷ்யனுடைய மனதின் விநோத சுபா வங்களைக் கருதுமிடத்தே இஃதோர் ஆச்சரியமில்லை யெனலாம். ஆனால் இதற்கு மேலே மற்றொரு விநோதமான அனுபவத்தைக் குறித்துச் சில தினங்களின் முன்னே "லண்டன் டைம்ஸ்" பத்திரி கையில் ப்ரசுரம் செய்யப்பட்டிருந்த குறிப் பொன்றை நோக்குமிடத்தே மிகவும் ஆச்சர்யம் விளைகிறது. பாரிஸ் பட்டிணத்தில் அநேக ப்ரபல வைத்யர்கள் இஃதுண்மை யென்று ஒருமைப்பாடு தெரிவித்திருக்கிறார்களாம். அதாவது, மேற்படி மரக் கால்களின் பாதத்தில் நோவு தெரிவதாக எத்

தனையோ மரக்கால் மனிதர் வந்து வைத்தியர்களிடம் சிகிச்சை கேட்கிறார்களாம்!

"இஃதென்ன பைத்தியம்! தொடை முதல் தாள் வரை நல்ல மரக்கட்டையோ அது போன்ற வேறு ஜட ஸாமானோ! அதன் மரத்தாளில் நோயிருப்பதாம்! அதனைத் தொடைக்கு மேலுள்ள சரீரம் உணர்வதாம்! இஃதென்னே பேதைமை!" என்று பலர் வியப்புறலாம். ஒருவர் இருவர் சொன்னால் அவர்களைப் பித்தரென்று கூறித் திரஸ்காரம் புரிந்து விடலாம். ஒரே மாதிரியாக அநேகர் வந்து சொல்லும் போது, பின்னும் அது பேதைமை தானென்பதை நாம் உணர்வோமெனினும் அதைக் குறித்து சாஸ்த்ர ஆராய்ச்சி யேற்பட இடமுண்டாயிற்று. மனுஷ்யனுடைய மனதில் எத்தனை விதமாக மூடக் கொள்கைகள் ஜனிக்கின்றன! எத்தனை மயக்கங்கள், எத்தனை மோஹங்கள், எத்தனை மறதிகள்! நாகரிகமடைந்த, பயிற்சி பெற்ற அறிவுகளிலும் ஆயிரம் வகை விசித்திரமான மூட பக்திகளும் மஹாமூட பயங்களும் குடி புகுந்திருக்கின்றன! இஃது சாஸ்த்ர ஆராய்ச்சிக்குரிய விஷயமே.

ஐர்லாந்துக்குக் கார்டினல் போர்ன் சொல்லும் புத்தி

"கார்டினல்" என்பது ரோமன் கத்தோலிக்க குருக்களின் சிரேணியில் மிக உன்னத ஸ்தானத்தைக் குறிப்பிடுவது. கார்டினல் போர்ன் என்பவர் ஐரிஷ் பாதிரி வர்க்கத்தைச் சேர்ந்தவர். இவர் ஐர்லாந்து வாஸிகளுக்கு விடுத்திருக்கும் ஸ்ரீமுக

மொன்றில், ஸ்வதேசத்தின் மீதுள்ள ப்ரேமை மிகுதியால், தம் வசமின்றிச் சிலர் கடவுளின் விதி களுக்கும் கத்தோலிக்க மதத்திற்கும் விரோதமான ஸபைகளில் ஸம்பந்தப்பட்டிருப்பதாகத் தோன்று கிறதென்று சொல்லி அதனைக் கண்டனம் பண்ணி யிருக்கிறார். 1867-ஆம் வருஷத்தில் (f) பீனியன் பழிச் செயல்கள் லண்டனில் ஐர்லாந்தியரால் நடத் தப்பட்டபோது கார்டினல் மானிங் கொடுத்த எச்ச ரிக்கையைத் தாம் இப்போது மீட்டும் கொடுப்பதாக அவர் தெரிவிக்கிறார். அதாவது இப்போது ஸின் பீனர்கள் ஆங்கிலேயருக்கு விரோதமாக, ஐர்லாந்தில் ஏராளமாகவும் இங்கிலாந்திலே சொற்பமும் நடத்தி வரும் கொலைச் செயல்கள் முதலியன கிறிஸ்தவ மதத்துக்கும் கடவுளுடைய விதிகளுக்கும் விரோத மென்பது இவருடைய கருத்து. மனிதர் பரஸ்பரம் பகைக்கவாயினும் கொல்லவாயினும் கூடாதென் றும், ஸஹோதரரைப் போல் நேசிக்க வேண்டு மென்றும் யேசு கிறிஸ்து நாதர் கட்டளையிட்டிருப் பதை உத்தேசித்து, அவருடைய சிலுவைக்கு ஜரிஷ் ப்ரதிநிதியாகிய கார்டினல் போர்ன் இங்ஙனம் ஸ்ரீமுகம் பிறப்பித்தமை முற்றிலும் பொருத்த முடைய செய்கையேயாம். பகைவர்கள் நம்மைத் துன்புறுத்தும் போதும், நாம் அவர்கள் மகிழ்ச்சி யடையும்படி துன்பத்துக்குள்ளாகி நிற்க வேண் டுமேயன்றி, அவர்களைத் துன்புறுத்தலாகாதென் பது கிறிஸ்தவ தர்மம். ஆனால் ஐரோப்பிய மஹா யுத்தத்தில் யேசு கிறிஸ்துவின் பக்தர்கள் பரஸ் பரம் லக்ஷக் கணக்காக பீரங்கிகளாலும், எறி

குண்டுகளாலும், விஷக் காற்றாலும் கொன்ற ஸமயத்தில் இந்தப் பாதிரிகள் எங்கே போயிருந்தார் கள்? ரோமாபுரியில் போப்பானவர் மாத்திரம் இடைக்கிடையே யுத்தத்தை நிறுத்தி ஸமாதானந் தேடினால் நல்லதென்று யுத்தத்தின் பிற்பகுதிக் காலத்தில் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அந்தந்த தேசத்து குருக்கள் போரைக் கண்டித்து ஏதேனும் சொன்னார்களா? மூலக்கொரு பக்ஷ மாகத் தத்தம் கக்ஷியே நியாயமென்றும், தத்தம் கக்ஷிக்கே வெற்றியும் எதிரிகளுக்குத் தோல்வியும் கொடுக்க வேண்டுமென்றும் யேசு கிறிஸ்துவையே பிரார்த்திக்க ஆரம்பித்தார்கள்! இப்போதும் ஆங்கி லேயர் சட்டமின்றி ஐர்லாந்தில் செய்து வரும் பலாத் காரக் கொடுஞ் செயல்களைக் கண்டிக்காமல் ஸின் பீனரை மாத்திரம் கண்டிப்பதில் பயனில்லை. பயிற்சியற்ற, தொகை குறைந்த, திறமை மிகுந்த படையை வைத்துக்கொண்டு ஸின்பீனர் எவ்விதக் கார்யங்கள் செய்கிறார்களோ அதே விதமான செயல்கள் பயிற்சி வாய்ந்த தொகையேறிய திறமை குன்றிய படையைக் கொண்டு ஆங்கிலேயராலே செய்யப் படுகின்றன.

இங்கிலாந்திலே கூட மிஸ்டர் ஆஸ்க்வித் முதல் லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபர் வரை பலதிறப் பட்ட ராஜதந்திரிகளும் ஐர்லாந்தில் இப்போதுள்ள பரிதாபகரமான நிலைமைக்கு ஸின்பீன் படையையும் ஆங்கிலப் படையையும் ஒருங்கே பொறுப்பாக்கிக் கண்டித்துப் பேசுகிறார்கள். "யதா ராஜா, ததா ப்ரஜா". ராஜாங்கமே சட்டத்தை மீறி திருஷ்டாந்

தங் காட்டிலுல் பிறகு ஜனங்கள் சட்டத்தை மீறி நடக்கும்போது அவர்களைக் குற்றங்கூற வாய் ஏது?

பாதிக் கல்யாணம்

"ராஜாவின் மகளை விவாகம் பண்ணிக்கொள்ள எனக்கு ஸம்மதம். அந்தப் பக்கத்து ஸம்மதந் தெரிய வேண்டியதுதான் குறைவு. எனவே பாதிக் கல்யாணம் ஆய்விட்டது" என்று ஒரு விகட கவி சொன்னனும். அது போல் எமீர் (f) பெய்ஸுல் மெஸபொடேமியாவுக்கு ராஜாவாக இருக்கத் தாம் ஸம்மதப்படுவதாகத் தெரிவிக்கிறார். இவரும் இவ ருடைய பிதாவும், வேலிக்குள்ளிருந்த பாம்பைப் பிடித்துக் காதுக்குள் விட்டுக்கொள்வது போல, ஆங்கிலேயர்களையும் ப்ரெஞ்ச் ஜனங்களையும் மத்ய ஆசியாவுக்கு நல்வரவேற்று உபசரித்த மஹான்கள்; தற்கால ஸௌகர்ய மொன்றைக் கருதி நீண்ட கால யோசனையை இழந்து நடந்த கூட்டத்தைச் சேர்ந் தவர்கள். இந்த எமீர் பெய்ஸுல், ஏற்கெனவே, தம்மை ஸிரியாவுக்கு ராஜாவாகச் செய்வார்க ளென்று எதிர்பார்த்து இறுதியில் ப்ரான்ஸ் தேசத் தார் அதை விழுங்கிச் செல்லத் தாம் ஏமாறிப்போன பிரபு. இப்போது இவர் லண்டன் நகரத்தில் போய்ப் பத்திராதிபர்களுக்குக் குழையடித்துக் கொண்டிருக்கிறார். மெஸபொடேமியாவில் ஆங்கி லேயர்கள் வீணாக ஆட்களையும், செல்வத்தையும் பலி கொடுத்து வருவதில் ஆக்ஷேபம் செலுத்துவோ ரிடையே தம்மையும் சேர்த்துக் கொள்ள வேண்டு மென்று இவர் "டெய்லி டெலிக்ராப்" பத்திரிகைக்

கார்யஸ்தரிடம் தெரிவித்திருக்கிறார். ப்ரிடிஷ் மந்த்ராலோசனையையும் உதவியையும் கொண்டு மெஸபொடேமியாவை ஆளக்கூடிய ராஜாங்க மொன்றை அராபியர் ஸ்தாபனம் செய்ய ஆயத்தமாக இருக்கிறார்களாம். ப்ரிடிஷாருடைய ராஜரீக திரவிய உரிமைகளுக்கு பங்கம் நேராதபடி அரப் கவர்ன்மெண்டார் உறுதி மொழி கொடுப்பார்களாம். தேசத்தின் இயற்கைப் பொருள்களைக் காட்டி ஏராளமான கடன் வாங்க முடியுமாம்.....ஐயோ, பாவம்! எமீர் பெய்ஸலில் பகற் கனவு. காண்கிறார். இவர் ஹிந்துதேச சரித்திரம் வாசித்திருப்பாரானால், தம்முடைய தேச ஆட்சியாகிய கரும்புத் தோட்டத்தைப் பிறர் ஆளாமல் தாம் ஆளச் செய்யும்படி இங்கிலிஷ் யாரையை உதவிக் கழைத்திருக்க மாட்டார். இனி காலசக்ரத்தின் சுழற்சியால் மெஸபொடேமியாவில் அரப் ஆட்சி ஏற்பட்டாலும், அதில் எமீர் பெய்ஸலுக்குரியதொரு ஆதிக்கமும் இராதென்பது திண்ணம்.

காலக் கண்ணாடி

சக்திதாஸன்

15 மார்ச் 1921 ரௌத்திரி பங்குனி 2

சமாசாரப் பத்திரிகைகள்

இங்கிலாந்தில் சில முக்யமான வாசகசாலைத் தலைவர் இவ் வருஷத் தொடக்கத்தில், மற்றப் பழம் பத்திரிகைகளை விலைக்குக் கொடுத்தது போல், "லண்டன் டைம்ஸ்" பத்திரிகையை மட்டும் கொடுக் காமல் உலக சரித்திரத்துக்கு ஆதாரமாகச் சேக ரித்து வைத்தார்களென்று தெரிவிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் அத்தகைய பதவி நம் சுதேசமித்திர னுக்குக் கடவுள் அனுக்ரஹம் செய்யும்படி பிரார்த் திக்கிறேன். வர்த்தமானப் பத்திரிகைகளின் நிலைமை பொதுப்படையாகவே நாள்தோறும் ஏறிக் கொண்டு வருகிறது. உலகத்து ராஜ்ய தந்த்ரங்களுக் குப் பொது ஜன ஆதரவு அவசிய மென்ற விதி பலப்பட பலப்படப் பத்திரிகைகளின் சக்தி மிகுதிப் பட்டுக்கொண்டு வருகிறது. வியாபாரிகளுக்கு வர்த்த மானப் பத்திரிகை இன்றியமையாத விளக்காய் விட்டது. கைத்தொழில் வளர்ச்சிக்கும் பத்திரிகை கள் தூண்டுதலாகி வருகின்றன. இலக்கியத் துறையிலும் பத்திரிகைகள் மேன்மேலும் மாண் புயர்ந்து வருமென்று தோன்றுகிறது.

பாரமார்த்திக தர்சனம்

இங்ஙனம் லௌகிக வெற்றியை வேண்டு வோருக்கு மாத்திரமே பத்திரிகை முக்யமான தென்று கருதல் வேண்டா. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற பெரியோரின் வாக்குப்படி உலகத்து நிகழ்ச்சிகளெல்லாம் கடவுளுடைய செயல்களேயாதலால், பத்திரிகை படித்தல் தெய்வ பக்தியுடையோருக்கும் பேராநந்தம் விளைத் தற்குரியது. கடவுள் மனித உலகத்தை எங்ஙனம் நடத்திச் செல்கிறானென்பதை விளக்குவதே சரித் திரப் பயிற்சியின் மேலான பயனென்று பூர்வாசார் யர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அங்ஙனமாயின், இந்த அம்சத்தில் சரித்திர நூல்களைக் காட்டிலும் பத்திரிகைகள் பன்முறை அதிகமான பயன் தரு மென்பதில் ஐயம் சிறிதேனுமுண்டோ?

ஆனால் தற்காலப் பத்திரிகைகளில் பக்ஷபாத குணம் அதிகமாகக் காண்பிக்கப்படுகிறது. தேசப் பக்ஷபாதங்களும் கக்ஷிப் பிரிவுகளும் மலிந்து கிடக் கின்றன. இவற்றை நீக்கி விட்டால் பத்திரிகையின் மஹிமை இன்னும் நெடி தோங்கி வளர இடமுண் டாகும். இதனிடையே, இந்தியாவிலுள்ள பத்திரி கைகள் ஐரோப்பிய, அமெரிகப் பத்திரிகைகளி லிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் பல உள. விஸ்தாரமான செய்தி யெல்லை; ரஸ மாகச் சொல்லும் திறமை-இவற்றில் இந்தியாவி லுள்ள பத்திரிகைகளைக் காட்டிலும் மேற்றிசைப் பத்திரிகைகள் மிக உயர்ந்த நிலையிலிருக்கின்றன. அதிலும், இந்தியாவிலுள்ள தேச பாஷைப்

பத்திரிகைகளின் நிலைமை சில அம்சங்களில் மிகவும் பரிதாபத்துக்கிடமாக இருக்கிறது. கடிதங்களெழுது வோரில் பலர் இலக்கணப் பயிற்சிகூட இல்லாமல் பத்திரிகைக் கெழுதத் துணிகிறார்கள். அவற்றைப் பத்திராதிபர்கள் சில ஸமயங்களில் பிழை களையாமலே ப்ரசுரம் செய்து விடுகிறார்கள். இதுவுமன்றி இலக்கணப் பயிற்சியற்ற சிலர் பத்திராதிபராக இருக்கும் விநோதத்தையும் இந் நாட்டிலே காண்கிறோம். நவீன நாகரிகத்தின் முக்யச் சின்னங் களிலொன்றாகிய பத்திரிகைத் தொழிலில் நாம் மேன்மை பெறவேண்டுமானால், மேற்கூறப்பட்ட பிழைகளைத் தீர்த்துக் கொள்ளக் கடவோம்.

தொழிலாளர் கிளர்ச்சி

சில தினங்களின் முன்பு பெல்ஜியத்தில் ஒரு தொழிற்சாலையைத் தொழிலாளிகள் கைப்பற்றிக் கொண்டார்களென்று ஒரு செய்தி கிடைத்திருக் கிறது. எனவே பொது உடைமைக் கக்ஷி என்ற காட்டுத் தீ ஐரோப்பா என்ற மனுஷ்ய வனத்தில் ருஷியா முழுவதையும் சூழ்ந்து கொண்டது மன்றி மற்ற இடங்களிலும் அங்கங்கே திடீர் திடீர் என்று வெடித்துத் தழல் வீசி வருவது காண்கிறோம். போல்ஷெவிஸ்ட் கொள்கையை மத்ய ஆசியாவில் பரவவிடக் கூடாதென்றெண்ணும் ஆங்கிலேய மந் திரிகள் இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்த்ரியா, துருக்கி ப்ரான்ஸ், மூதலிய நாடுகளில் மிகுதியாகவும், இங்கி லாந்து, நார்வே, ஸ்வீடன் பெல்ஜியம், டென்மார்க் முதலியதேசங்களில் சற்றே மட்டாகவும் அக் கொள்கை வியாபித்து வருவதை எங்ஙனம் ஸஹிக்கி

ரூர்ளென்பது புலப்படவில்லை. என்ன செய்யலாம்? ஆங்கிலேயப் பழங்கதை யொன்றிலே சொல்லப் பட்டதுபோல, கான்யூட் ராஜா சொல்லுக்குக் கடல் கீழ்ப்படிந்து நடக்குமா?

ஜப்பானில் ஜாதி பேதம்

நான் ஜாதி பேதத்துக்கு நண்பனல்லேன். இந்தியர்களெல்லாரும், அல்லது ஹிந்துக்களெல் லாரும் ஒரே ஜாதி யென்ற ஸாதாரண இங்கிலிஷ் படிப்பாளிகளின் கொள்கையை நான் அனுஸரிக்க வில்லை. உலகத்து மனிதர்கள் எல்லாரும் ஒரே ஜாதி "வஸுதைவ குடும்பம்" என்ற பர்த்ருஹரி யின் கொள்கையைத் தழுவியுள்ளேன். மனித ஜாதியும் மற்ற ஜந்து ஸமூஹங்களும் ஒரே குடும்ப மென்ற (d) டார்வின் என்னும் ஆங்கில சாஸ்த்ரி யின் கருத்தைப் பின் பற்றுகிறேன். எல்லா ஜீவர் களும் கடவுளுடைய அம்சமென்ற பகவத்கீதையின் பரமோபதேசத்தைக் கடைப் பிடித்து நிற்கிறேன். ஒரு பிராமணனை, ஒரு ஆங்கிலேயனை, ஒரு ஆட் டைக் கொல்லுதல் அல்லது அடிப்பதால் எய்தும் பாவம் ஒரே மாதிரி. உபசரிப்பதால் அல்லது வணங் குவதால் எய்தும் புண்யமும் ஒரே தன்மையுடையது. இஃதென் உண்மையான, யான் ஒழுக்கப்படுத்தி வருகிற கொள்கை. எனினும் ஜாதி பேதம் தொலை யும் வரை நாம் ஸ்வராஜ்யம் புரியத் தகுதி பெற மாட்டோம் என்று சொல்வோருடைய பேச்சுக் காசு பெறுதென்பதை நான் உறுதியாகத் தெரி விக்க விரும்புகிறேன். திருஷ்டாந்தமாக, ஸமீப காலத்தில் கிடைத்த டோக்யோத் தந்திகளினின்

றும் அங்கு பரம நீதி ஸபை (ப்ரவி கௌன்ஸில்) அக்ராஸனாதிபதியான யமகாடாபிரபு என்பவரும், வேறு பல அரண்மனை அதிகாரிகளும் ராஜிநாமாக் கொடுத்து விட்டார்களென்று தெரிகிறது. இதன் காரணம் யாதென்றால் பூர்வகால மூதலாக ஐந்து பழைய குடும்பங்களிலிருந்து மட்டுமே சக்ரவர்த்தி வம்சத்தார் பெண்ணெடுப்பது வழக்கமாக நடை பெற்று வந்திருக்க, இப்போது அந்த வழக்கத்துக்கு மாறுகப் பட்டத்திளவரசருக்கு அவ்வைந்து குடும் பங்களில் சேராத சேனாதிபதி கூனி இளவரசர் என் பவரின் மகள் இளவரசி நாகாகோ என்பவளை மணம் புரிய நிச்சயித்திருப்பதேயாம். ஜப்பானியப் பரம நீதி ஸபைத் தலைவர் எவ்வித மான ஜாதி பேதம் பாராட்டுகிறார் பார்த்தீர்களா! விவாக ஸம்பந்தமான இடையூறுகளை உத்தேசித்தே யுனை டெட் ஸ்டேட்ஸ் மக்களான நாகரிக சிகாமணிகள் தமது களவாண்ட தேசத்தில் ஜப்பானியர் அடி யெடுத்து வைக்கக் கூடாதென்று கூக்குரல் போடு கிறார்கள். மற்றப்படி வெள்ளை ஜாதியர்களுக் குள்ளே இருக்கும் விவாகத் தடைகள் பல. ஜாதி பேதமாவது முக்யமாக விவாகத்தடை; இரண்டாம் பக்ஷம் ஸமபந்தி போஜனத்தடை. இவை யிருத்தல் தவறு. ஆனால் இவை ஸ்வராஜ்ய ஸ்தாபனத்திற்கு விரோத மென்று கூறுவோர் பச்சை அறியாமை யாலே அங்ஙனம் சொல்லுகிறார்கள்.

"ரிஷிகள் கடன்"

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி

21 மார்ச் 1921 ரௌத்திரி பங்குனி 8

கல்கத்தா சர்வகலாசாலை விசாரணை ஸபையின் முன்னே கீர்த்தி பெற்ற பாரத புத்திரர் ஒருவர் எழுதிக் கொடுத்த அறிக்கை யொன்றில், பூர்வ காலத்து இந்தியர்கள் என்ன நோக்கத்துடன் கல்வி கற்பித்து வந்தனர் என்பதைச் சுருக்கிக் காட்டும் படி பின் வருமாறு சொல்லுகிறார் :—

"இந்தியாவில் கல்வியைப் பற்றிய கொள்கை இன்னதென்பது இந்திய சாஸ்த்ரங்களில் தெரிந்த, குறிப்பான பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. இக்கொள்கை குறைந்த பக்ஷம் முப்பது நூற்றாண்டாக இந்தியாவின் வாழ்க்கையை ஆண்டு வந்திருக்கிறது. எனவே, அதனைத் தெளிவுபடச் சொல்லுதல் அவசிய மாகிறது.....என் வசத்திலிருக்கும் ஆதாரங்களை நான் மிகவும் ஜாக்ரதையாக ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறேன். ஆதலால் ஜாக்ரதையான பாஷையை, ஜாக்ரதையான பதங்களுடனே வழங்குவேன். கல்வியைப் பற்றிய இந்திய சித்தாந்தத்தைப் பின் வருமாறு எடுத்துக் காட்டலாம் :—

ஒவ்வொரு மனிதனும் சில கடமைகளுடனே பிறக்கிறான். இவற்றை சாஸ்த்ரங்கள் 'கடன்கள்' (ரிணங்கள்) என்று கூறும். இவையாவன :—

1. (ஆத்மாவை ஆளும்) தேவர் கடன்.

2. (தேச பிதிரர் உட்பட) பிதிர்க்கள் கடன்.

3. சுற்றத்தார்க்கும், மற்ற மனிதர்க்கும் இறுக்கப்படும் கடன்.

4. உணர்வு வாய்ந்த ஜீவ ஜந்துக்கள் அனைத்திற்கும் செலுத்த வேண்டிய கடன்.

5. இவை யனைத்திலும் மேலாக ரிஷிகளுடைய கடன். தனது வாழ்க்கைக்குப் பிரமாணமாகிய நாகரிகத்தின் புராதன ஸ்தாபகர்களுக்குச் செலுத்த வேண்டிய கடனே முக்கியமானது, முதன்மைப்பட்டது. ரிஷிகளுக்குச் செலுத்த வேண்டிய இந்தக் கடனை இறுக்கும் நெறி யாதெனிலோ வித்யாப்யாஸம்; கல்விப் பயிற்சி. அதாவது, அறிவை அதன் பொருட்டே தேடுதல்.

இப்படிப்பட்ட அற்புதமான கொள்கையினின்றும் தோன்றி வளர்ச்சி பெற்றதாகிய அற்புதமான இந்தியக் கல்வி முறையைப் பதினெட்டாம் நூற்றாண்டில், நம்மவர் திடீரென்று கைவிட்டுவிட்ட விஷயத்தை ஸ்ரீமான் எஸ். கே. தத்தர் என்பவர் 1921 ஜனவரி 'இந்திய இளைஞர்' (யங்மென் ஆப் இந்தியா) பத்திரிகையில் எழுதியிருக்கும் "கல்வி விவகாரம்" என்ற மகுடமுள்ள வ்யாஸத்தில் மிகவும் ஸாங்கோபாங்கமான சரித்திர விவரங்களுடனே குறிப்பிட்டிருக்கிறார்.

இதன் மத்யகால வடிவம் நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அதாவது மஹமதியர்களின் காலத்திற்கு முந்தி அனேக நூற்றாண்டுகளாகவும் மஹ

மதிய ஆட்சியின் காலத்திலும் இந்தியாவில் எத்தகைய கல்வி முறை இருந்தது என்பதை நாம் அறிவோம். இவை மஹாபாரத ராமாயண நூல்களினின்றும் ஹிந்து சாஸ்த்திரங்களில் பிற்காலத்து சாஸ்த்திரங்களினின்றும் பின்னிட்டுப் போதிய ஐரோப்பியக் கல்வி யென்ற வெள்ளத்தில் அழிந்தது போக இன்றைக்கும் அங்கங்கே சிதறிக் கிடக்கும் பூர்வ முறை பற்றிய கல்விச் சாலைகளின் திருஷ்டாந்தத்தினின்றும் அறியக் கிடக்கின்றன.

ஆதி பூர்வ காலக் கல்வி எப்படி யிருந்ததென்பதை வேதோபநிஷத்துக்களிலிருந்தும், பிரமாணங்களிலிருந்தும், தர்ம சாஸ்திரங்களிலிருந்தும் தெரிந்துகொள்ள முடியும்.

இதற்கும் மேற்கூறிய மத்ய காலத்துக்கு மிடைநின்ற காலத்துக் கல்வி முறை இதிஹாஸ, புராணங்களில் மிகவும் தெளிவாகப் புலப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவின் புராதன ராஜரீக முறைகளை ஸவிஸ்தாரமாக ஆராய்ச்சி யென்பதோர் திரிகாலக் கண்ணாடி மூலமாக உணர்ந்து கொள்வதில் சரித்திரம் பயில்வோருக்குள்ள சிரமம் பூர்வகாலக் கல்வி முறைகளை உணர்ந்து கொள்வதில் ஏற்படாது.

இந்தக் கல்வி முறைமை வேத காலந்தொட்டு நேற்றுவரை பலவகை வடிவங்களில் மாறி வந்திருக்கிறதெனினும், அதன் யதார்த்த ஸ்வரூபம் எப்போதும் மங்கியது கிடையாது. ஆகம ஞானம் அதன் லக்ஷியம் எப்போதும்! தெய்வ பக்தி அதன் கவசம் எப்போதும்! நல்லொழுக்கமும், நீதியும், அன்பும்

அதன் முறைகள் எப்போதும்! மேலே ஸர்வகலா சாலே விசாரணே ஸபையார் முன்பு செய்துகொண்ட தாகத் தெரிவிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டியபடி குறைந்த பக்ஷம் மூவாயிரம் வருஷங்களாகக் காப் பாற்றிக் கொண்டு வந்த, நீண்ட பக்ஷம் எத்தனேயோ ஆயிரம் நூற்ருண்டுகளாக இந்தியாவில் பாது காக்கப்பட்டு வந்த இந்தக் கல்வி முறை பதினெட் டாம் நூற்ருண்டினிடையே நிடீரென்று சிதறி விழுந்ததின் காரணம் யாதெனில்; ஸ்ரீமான் எஸ். கே. தத்தர் சொல்லுகிருர்:—

"இந்தக் கல்விக்கு திரவிய லாபமில்லாது போயிற்று. இனி, மீள, என்றேனும் ஏற்படக்கூடு மென்ற நம்பிக்கையும் இல்லாமற் போய்விட்டது. ஆதலால், இந்தியர்கள் இந்தக் கல்வியை ஆதரிக்க மனமில்லாதோ ராயினர்" என்கிருர்.

ஐரோப்பாவின் கல்வி முறை அந்த சமயத்திலே தான் ஐரோப்பாவிலே மத ஸம்பந்தங்களே வேர றுத்து சுத்த லௌகிகமாக மாறிக் கொண்டிருந்தது. எனவே ஐரோப்பியக் கல்வி ராஜாங்கத்தாரால் இந்த தேசத்தில் வற்புறுத்தப்பட்ட காலத்தில், அது மத ஒழுக்கங்களே ஆதாரமாகக் கொண்ட இந் நாட்டுக் கல்வி முறையுடன் சிறிதேனும் அனு தாப மில்லாததாயிற்று.

மேலே காட்டிய அறிக்கையில் இந்தியாவின் கல்வி நோக்கத்தைக் குறித்துக் காட்டுமிடத்தே "கல்விப் பயிற்சி" யாவது அறிவை அறிவின் பொருட்டாகவே தேடுதல் என்று விளக்கியிருக்கிருர்.

அதாவது "திரவிய லாபத்தை"க் கல்விப் பயிற்சிக்கு லக்ஷியமாகக் கொள்ளாமல்; அறிவுப் பயிற்சி தன் அளவிலே செய்யத் தக்கதென்றும், செய்தற்குரிய கடமை யென்றும் தெரிந்து கொள்ளுதல்.

இந்தியக் கல்விக்கு லக்ஷணம் இம்மாதம் பதினெட்டாம் நூற்றாண்டில் அது திரவிய லாபந் தாராமை பற்றிக் கைவிடப்பட்டதென்று சொல்லுதல் முன்னுக்குப் பின் முற்றிலும் முரண் படுகிறதன்றோ?

இந்தியாவின் அழைப்பு

19 ஜூலை 1921 துன்முதி ஆடி 4

இஃது (யுனைடெட் ஸ்டேட்ஸ், மிஷிகன் மாகாணம், தெத்ருவா நகரத்திலுள்ள ஸ்ரீமதி மாட் (ட்) ராஸ்ஸ்டன் ஷர்மன் என்ற ஸ்திரீ எழுதிய இங்கிலீஷ் கவிதையினின்றும், ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியால் மொழி பெயர்க்கப்பட்டது.)

வேண்டுகோள்

அன் பிற் கினிய இந்தியா ! அகில
மதங்கள், நாடுகள, மாந்தருக் கெல்லாம்
தாயே ! எங்கள் உணர்வினைத் தாண்டிய
சேய் நெடுங் காலத்தின் முன்னே சிறந்தொளிர
குருக்களை யளித்துக் குவலயங் காத்தனை.
திருக்கினர் தெய்வப் பிறப்பினர் பலரை
உலகினுக் களித்தாய் ; உனதொளி ஞானம்
இலகிட நீயிங் கெழுந் தருளுகவே !
விடுதலை பெறநாம் வேண்டிநின் மறைவு
படுமணி முகத்தைத் திறந்தெம் பார்வைமுன்,
வருக நீ !. இங்குள மானுடச் சாதிகள்
பொருகளந் தவிர்ந்தமை வுற்றிடப் புரிகநீ !
மற்றவர் பகைமையை அன்பினுல் வாட்டுக !
செற்றவர் படைகளை மனையிடந் திருப்புக !
தாயே, நின்றன் பண்டைத் தநயராம்
மாயக் கண்ணன், புத்தன், வலிய சீர்
இராமனும், ஆங்கொரு மஹமது மினையுற்ற
விராவுபுகழ் வீரரை வேண்டுதும் இக்கால் !
“ தோன்றினேன் ” என்று சொல்லி வந்தருளும்

சான்றோன் ஒருமுனி தருகநீ எமக்கே!
மோசே, கிறிஸ்து, நானக் முதலியோர்
மாசற வணங்கி மக்கள் போற்றிடத்
தவித்திடுக் திறத்தினர் தமைப் போலின்றொரு
பவித்திர மகனைப் பயந்தருள் புரிகநீ!
எம்முன் வந்து நீதியின் இயலைச்
செம்மையுற விளக்குமொரு சேவகனை அருளுக நீ.

உத்தரம்

கேள்! விடை கூறினள் மாதா! நம்மிடை
யாவனே யிங்கு தோன்றினன்? இவன் யார்?
உலகப் புரட்டர் தந்திர உரையெலாம்
விலகத் தாய்சொல் விதியினைக் காட்டுவான்.
மலிவு செய்யாமை; மனப்பகை யின்மை;
கலிவுறுத்தோரை காம் எதிர்த்திடாமை;
தீச்செயல் செய்யும் அரசினைச் சேராமை;
ஆச்சரியப்பட உரைத்தனன் — அவையெலாம்.
வருக காந்தி! ஆரியா வாழ்வே!
தருமம் விதிதான் தழைத்திட உழைப்பாய்.
ஆன்மா அதனில் ஜீவனை யாண்டு
மேனெறிப் படுத்தும் விதத்தினை யருளினாய்!
பாரத நாட்டின் பழம்பெருங் கடவுளர்
வீரவான் கொடியை விரித்துநீ நிறுத்தினாய்!
மானுடர் தம்மை வருத்திடும் தடைகள்
ஆனவை யுருகி அழிந்திடும் வண்ணம்
உளத்தினை நீ கனல் உறுத்துவாய்! எங்கள்
காந்தி மஹாத்மா! நின் பாற் கண்டனம்!
மாந்தருட் காண நாம் விரும்பிய மனிதனை!
நின்வாய்ச் சொல்லில், நீதி சேர் அன்னை
தன்வாய்ச் சொல்லினைக் கேட்கின்றனம் யாம்
தொழுந்தா யழைப்பிற் கிணங்கி வந்தோம் யாம்
எழுந்தோம்; காந்திக் கிசைந்தோம் எமதுயிர்.
இக்கவன் ஆவிக் கொள்கை வென்றிடவே.

அன்றைக் குணவுதான் அகப்படு மாயின்
கன்றதில் மகிழ்வோம்; விடுதலை காடி
எய்திடுஞ் செல்வ எழுச்சியிற் களிப்போம்;
மெய்திக ழொற்றுமை மேவுவோம்; உளத்தே
கட்டின்றி வாழ்வோம்; புறத்தலைக் கட்டினை
எட்டுணை மதியா தேறுவோம்; பழம்போர்க்
கொலைத் தொழிற் கருவிகள் கொள்ளா தென்றும்
நிலைத்தன ஆகிய நீதிக் கருவியும்
அறிவுங் கொண்டே அரும்போர் புரிவோம்;
வறியபுன் சிறைகளில் வாடினும்; உடலை
மடிய விநிப்பினும்; "மீட்டு நாம் வாழ்வோம்" என்
றிடியுறக் கூறி வெற்றி யேறி,
ஓடிபடத் தலைகள், ஓங்குதும் யாமே.

ஐர்லாந்தும் இந்தியாவும்

கா. வி. தா. ஸன்

19 ஜூலை 1921

மஹாயுத்தம் நடக்கும் காலத்தில், எடிஸன் என்ற அமெரிக மின்ஸார சாஸ்திரியின் விலை யுயர்ந்த ஆராய்ச்சிக் கூடமொன்று தீப்பட்டெரிந்து போயிற்று.

அதுபற்றிச் சில நண்பர்கள் அவரிடம் துக்க விசாரணை புரிந்து கடிதமெழுதியிருந்தார்கள். அதற் கவர் சொன்னார்:— "என் கஷ்டம் ஒரு கஷ்டமா! அதோ! ஜெர்மனியில் கைஸர் சக்கரவர்த்தி இருக் கிறார், பாருங்கள். அவர் ஒருவரையும், அவருடைய பலமற்ற துணைவர் ஒரிருவரையும் எத்தனையோ அரசுகள்கூடி எத்தனையோ வகைகளால் போர் புரிகின்றன. அந்த ஒரு மனிதர் என்ன செய்வார், பாவம்! எனவே எனக்கு ஏதேனும் ஸங்கடம் நேரும் போதெல்லாம் நான் நம்மைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிக பயங்கரமான விபத்துக் களாலே சூழப்பட்டிருக்கும் கைஸரை நினைத்து மனந்தேறுகிறேன்" என்றாராம்.

அக்காலத்தில் இக்கதை வெளியிடப்பட்டிருந் தது தொடர்ச்சியாகப் பத்திரிகை படித்து வரும் நண்பர்களிலே பலருக்கு ஞாபகமிருக்கலாம். அது போல், இந்தக் காலத்தில் நாம் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜைச் சூழ்ந்திருக்கும் ஸங்கடங்களின் தொகை

யையும் அளவையுங் கருதி நம்முடைய கஷ்டங்களை மறக்க முடியுமென்று தோன்றுகிறது.

ஐர்லாந்துக்கு ஏறக்குறைய இந்த முறை ஸ்வராஜ்யம் கொடுத்துத் தான் தீரவேண்டுமென்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் அமெரிகா சும்மா விடாது. காணடா சும்மா விடாது. ஆஸ்திரேலியா தென் ஆபிரிகா, நியூஜிலாந்து முதலிய குடியேற்ற நாடுகள் பொறுத்திருக்க மாட்டா. ப்ரான்ஸிடம் விடுதலைப் ப்ரஸங்கங்களை விரிக்க இங்கிலாந்துக்குச் சிறிதேனும் இடமில்லாமற் போய்விடும். உலக முழுமையிலும் அபகீர்த்தி மூற்றும். இங்கிலாந்தின் சத்துருக்கள் பெருமகிழ்ச்சியடைய ஹேதுவுண்டாகும். இத்தனை உதவிகளுமில்லாது போயினும் இப்போது ஸ்வராஜ்யம் கொடுக்காவிட்டால், ஐர்லாந்து சும்மா இராது. ஸ்வராஜ்யத்தை வற்புறுத்தும் பொருட்டு ஐர்லாந்தியர் ஐர்லாந்திலும், லண்டன் மான்செஸ்டர் முதலிய நகரங்களிலும் என்ன காரியங்கள் செய்து வந்தனரென்பதும், அதனால் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் முதலியோருக்கு நேர்ந்த அஸௌகர்யங்கள் எவையென்பதும் நேயர்களுக்குத் தெரிந்த சங்கதிகளேயாம்.

இத்தனை பலாத்காரங்களைக் கருதி ஸ்வராஜ்யம் கொடுத்துத் தொலைப்போம் எனிலோ, வட ஐர்லாந்து முதல் மந்திரியாகச் சில தினங்களின் முன்னே முளைத்திருக்கும் ஸர் ஜேம்ஸ் க்ரேக் ஏற்கனவே போர்க் கொடியைத் தூக்கிவிட்டார். அல்ஸ்டர் மாகாணத்துக்குத் தனிப் பார்லிமெண்ட் சாசுவதமாக இருக்குமெனில், பிறகு ஐரிஷ்

ஸ்வராஜ்யம் என்பதற்கு அர்த்தமே கிடையாது. ஐர்லாந்தை இரண்டாக வெட்டிப் பிறகு ஸ்வராஜ்யம் கொடுப்பதென்றால், என்ன செய்கை அது!

அஃதொருவனை இரண்டாக வெட்டிக் கொன்ற பின்னர் அவனுக்கு மணம் புரிவிப்பதாகக் கூறுதல் போலும். எனவே, அல்ஸ்டர் என்றொரு பதார்த்தம் இருப்பதன் உண்மையை நன்குணர்ந்த ஸ்ரீமான் தெவலேரா, தாம் தமது குடியரசுக் கொள்கையை விட்டு "ஸ்மட்ஸ்" ஸ்வராஜ்யத்தை அங்கீகரிக்க ஆயத்தமாக இருப்பதாகவும், ஆனால் அல்ஸ்டர் தனது தனிப் பார்லிமெண்டை விட்டுவிட வேண்டு மென்றும் வற்புறுத்தினர். இங்ஙனமிருக்க, முன்பு யூனியனிஸ்ட் தலைவராக இருந்து இங்கிலீஷ் கவர்ன் மெண்டினிடமுள்ள அளவிறந்த பக்தியால், அதனை எதிர்த்துப் போர் செய்யப் படைகள் தயார் செய்தவராகிய ஸர் எட்வர்ட் கார்ஸனுடைய பட்டத்தில் இப்போதிருக்கும் அல்ஸ்டர் ப்ரதம மந்திரியான ஸர் ஜேம்ஸ் க்ரேக் லண்டன் சமாதான ஸங்கத்திற்குத் தம்மை ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் அழைத்திருப்பதைக் குறித்துப் பேசிய உதாஸீன மொழிகளை ராய்ட்டர் தந்திகளினிடையே காணலாம்.

இங்கிலாந்திலும் லார்ட் டெர்பி முதலியவர்கள் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜைக் கடலில் கவிழ்த்து விடுவதற்குரிய யோசனைகள் இப்போது தீவிரமாகப் புரிவதன் காரணம் ஐர்லாந்துக்கு அவர் ஸ்வராஜ்யங் கொடுத்து விடுவாரோ என்ற பயத்தாலே யன்றிப் பிறிதில்லை.

கான்ஸர்வடிவ் கக்ஷியார் கைவிட்டால் பிறகு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ்ஜுக்கு பஸிபிக் சமுத்திரந் தான் கதி.

இங்ஙனம் ஐர்லாந்து விஷயத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் இருதலைக் கொள்ளி எறும்புபோல இடர்ப்படுதல் ஒருபுறமிருக்க, இந்த சமயத்தில் இந்தியராகிய நாமும் அவரிடம் ஒரு செய்தியை மிக நன்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

அதாவது, ஐர்லாந்தைச் சென்ற பல நூற் றாண்டுகளாக மீட்டும் மீட்டும் போரில் அடக்கி, அதன் விடுதலை வேட்கையை மறுத்து வந்தீர்கள். ஐர்லாந்து மிகச் சிறிய நாடு. உண்மையில், இப் போது கூட இங்கிலாந்திலுலே ஐர்லாந்தைப் போரில் மடக்கிவிட முடியும்.

அப்படியிருந்தும், உலக முழுமையிலும் எழுச்சி பெற்றிருப்பதாகிய, பெரிதோர் தர்மக் கிளர்ச்சியை முன்னிட்டு, ஐர்லாந்துக்குக்கூட இனி ஸ்வராஜ்ய மில்லை என்று மறுத்தால் இங்கிலாந்துக்கு ஸாத்யப் படாதென்று தீர்ந்து போய்விட்டது.

அப்படியிருக்க, 5000 வருஷங்களுக்கு முன்னே வேதாந்தப் பயிற்சி செய்தது; மூப்பது கோடி ஜனங்களுடையது; இன்றைக்கும் ஜகதீச சந்திரர் முதலியவர்களின் மூலமாக உலகத்தாருக்கு நாக ரிகப் பாதையிலே வழிகாட்டுவது; பூமண்டல சரித் திரத்திலே வீர்ய முதலிய ராஜ குணங்களில் நிகரற்ற தாகிய இந்தியாவுக்கு விடுதலை எப்போது தரப் போகிறீர்கள்?

என் ஈரோடு யாத்திரை

சக்திதாஸன் எழுதுகிறார்

4 ஆகஸ்ட் 1921

ஈரோட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். அது கொங்கு நாடு. ஆனால், அதற்கும் தென்பாண்டி நாட்டிற்கும் யாதொரு வேற்றுமையும் தென்பட வில்லை. ஸ்வதேசீய நிகழ்ச்சி தோன்றிய காலம் முதலாக தமிழகத்தின் உட்பகுதிகளுக்கிடையே உள்ள அகவேற்றுமைகள் குறைவுபட்ட காரணத் தாலே புற வேற்றுமைகளும் குறைவு படுகின்றன.

இதற்குச் 'சுதேச மித்திரன்' முதலிய பத்திரி கைகள் பெரிதும் உதவிபுரிந்தன என்பது நிச்சயம்.

கட்டை வண்டி ஒன்று கிடைத்தது. கட்டை வண்டியில் ஒரு மனிதன் நிமிர்ந்து உட்கார இட மில்லை. ஒன்றரை அடி நீளம். மாடு ஒரு சிறு பூனைக்குட்டி போன்று இருந்தது. நான் ஒன்று; வண்டிக்குடையவன் இரண்டு; அவனுக்குக் கீழே கூலிக்கு வண்டி ஓட்டும் சிறுவன் ஒருவன்; எங்கள் மூவரையும் மூன்று பர்வதங்களாக நினைத்து அந்த மாட்டுப் பூனை இழுத்துக்கொண்டு போயிற்று.

அரைமைல் தூரத்தில் உள்ள கருங்கல் பாளை யத்தில் எனக்கு வேலை. அங்கு ஒரு சிநேகிதருடைய அழைப்பிற்கிணங்கிச் சென்றிருந்தேன். கருங்கல் பாளையத்துக்குப் போய்ச் சேரு முன்னே மாடு வெயர்த்துப் போய்விட்டது. அதன் மேலே குற்றஞ் சொல்வதில் பயனில்லை. அது சிறு ஜந்து. அதன்

மேலே நாங்கள் மூன்று தடி மணிதரும் ஒரு கழுத் தளவுக்குச் செய்யப்பட்ட விதானத்தை உடைய வண்டியும் சவாரி பண்ணுகிறோம்.

ஏறக்குறைய இரண்டு மணி நேரத்துக்குள்ளே கருங்கல் பாளையம் என்ற கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அந்தக் கிராமத்தில் ஆண் மக்கள் எல் லோரும் மஹா யோக்கியர்கள், மஹா பக்திமான்கள்; புத்திக் கூர்மையிலும், சுறுசுறுப்பிலும், தேசாபி மானத்திலும் மிகவும் பாராட்டுதற்குரியவர்கள்.

இவர்களுடன் ஸல்லாபம் எனக்கு எல்லா வகை களிலும் இன்ப மயமாக இருந்தது.

அங்கே ஒரு புஸ்தகசாலை இருக்கிறது. வாசக சாலை. அதன் காரியதரிசி ஒரு வக்கீல். மிக நல்ல மனிதர்; மஹாபுத்திமான்; தேசபக்தியில் மிகவும் பாராட்டுதற்குரியவர்.

அந்த வாசகசாலை அவ்வூராரை நாகரிகப் படுத்துவதற்குப் பெரிதோர் சாதனமாக விளங்கு கிறது. இங்ஙனம் அதனால் அவ்வூருக்குப் பலவித நன்மைகள் ஏற்பட்டு வருகின்றன என்பதை கனம் நரசிம்மையர் (சேலம் வக்கீல்), ஸ்ரீமான் வரத ராஜுலு நாயுடு, ஸ்ரீ கல்யாணசுந்தர முதலியார் முதலிய முக்கியஸ்தர்கள் தம் நற்சாக்ஷிப் பத்திரங்க ளாலே தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தச் சபையின் வருஷோத்ஸவக் கூட்டத் திற்கு நான் போய்ச் சேர்ந்தேன். என்னை ஒரு பிரசங்கம் பண்ணச் சொன்னார்கள். எனக்கு ஒரு விஷயந்தான் முக்கியமாகத் தெரியும். அதையே அங்கும் எடுத்துப் பேசினேன். அதாவது இந்த

உலகத்தில் மானுடர் எக்காலத்திலும் மரணமில்லாமல் இருக்கக் கூடுமென்ற விஷயம்.

ப்ரஹ்லாதனைப் போன்ற தெய்வ பக்தியும், மன்மதனைப் போன்ற ஏக பத்தினி விரதமும் ஒருவன் கைக்கொண்டிருப்பானையின், அவன் இந்த உலகத்திலேயே ஜீவன் முக்தியடைந்து, எல்லா அம்சங்களிலும் தேவ பதவி எய்தியவனாய், எப்போதும் மகிழ்ச்சி கொண்டிருப்பான் என்பது என்னுடைய கொள்கை. இந்தக் கொள்கையை நான் வேதபுராண சாஸ்த்ரங்கள், இதர மத நூல்கள், ஐரோப்பிய ஸயன்ஸ் சித்தாந்தங்கள், ஸ்ரீமான் ஜகதீஸ்சந்திர வஸுவின் முடிபுகள் என்னும் ஆதாரங்களாலே ருஜுப்படுத்தினேன். அங்குள்ள பெரிய வித்வான்கள் எல்லோரும் கூடி என்னுடைய தர்க்கத்தில் யாதொரு பழுதுமில்லையென்று அங்கீகாரஞ் செய்துகொண்டார். பிறகு மறு நாள் என்னை ரோட்டுக்கு வந்து வாய்க்கால் கரையில் ஒரு பொதுக் கூட்டத்திலே, 'இந்தியாவின் எதிர் கால நிலை' என்ற விஷயத்தைக் குறித்துப் பேசும் படி கேட்டுக்கொண்டார்கள். நான் உடம்பட்டேன். மறுநாள் கூட்டத்தைப்பற்றிய விஷயங்களை இங்கு விவரித்துக் கொண்டுபோனால் இந்த வியாசம் மிகவும் நீண்டுபோய்விடும். ஆதலால் இன்று இவ்வளவோடு நிறுத்தி மற்றை நாள் சம்பவங்களைப் பற்றி நானை எழுதுகிறேன்.

குறிப்பு:— மேலே கூறியவாறு மற்றொரு கட்டுரை பாரதியார் எழுதியதாகத் தெரியவில்லை. முயன்று தேடியும் அதைக் கண்டு பிடிக்க இயலவில்லை.

ஒரு கோடி ரூபாய்

காளிதாஸன்

11 ஆகஸ்டு 1921 துன்முதி ஆடி 27

ஸெப்டம்பர் மாஸத்துக்குள் ஸ்வராஜ்யம் கிடைப்பதற்கு ஒரு கோடி ரூபாய் இன்றியமையாததென்றும், அது கொடுக்கா விட்டால் இந்தியா தேசத்து ஜனங்கள் ஸ்வராஜ்யத்தில் விருப்ப மில்லாத தேசத் துரோகிகளே யாவர்களென்றும் ஸ்ரீமான் காந்தி முதலியவர்கள் சொல்லிக் கொண்டு வந்தனர்.

ஜனங்கள் ஒரு கோடி ரூபாய் கொடுத்து விட்டார்கள். அந்தத் தொகை எங்ஙனம் செலவிடப் படுகிறது? எப்போது செலவு தொடங்கப் போகிறார்கள்? ஒரு மாஸத்திலோ, இரண்டு மாஸங்களிலோ, அன்றி இன்னும் ஒரு வருஷத்துக்குள்ளேயோ, ஸ்வராஜ்யம் கிடைக்கவேண்டுமாயின், அந்தத் தொகை ஏற்கெனவே செலவு தொடங்கியிருக்க வேண்டு மன்றோ?

"ஒருகோடி ரூபாய் கிடைத்தால்தான் ஸ்வராஜ்யம் வரும்" என்று சொல்லப்பட்ட வார்த்தைக்கு ஒரு பொருள்தான் உண்டு. அதாவது, அந்தப் பணம் ப்ரசாரத் தொழிலிலே செலவிடப் படவேண்டும். நாமோ பலாத்கார முறையை அனுஸரிக்கவில்லை. எனவே, அந்தக் கோடி ரூபாயை ஸைந்யச் செலவுக்கு உபயோகப் படுத்துவதென்ற ஆலோசனைக்கு இடமில்லை. எனவே, ப்ரசாரத் தொழில்

ஒன்றுதான் கதி. மேற்படி தொகையில் ஒரு பகுதிக்கு ராட்டினங்கள் வாங்கி ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கருதினால் அங்ஙனம் தாராளமாகச் செய்யலாம். வேறு எத்தனை வகைகளில் செலவு செய்ய விரும்பினாலும் செய்யலாம். ஆனால் அத்தனைக்கும் ஆதாரமான மூலவழி ப்ரசாரந்தான் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஏற்கெனவே, ப்ரசாரத்தில் இத் தொகையை எங்ஙனம் செலவு செய்யலாமென்பதைக் குறித்துச் சில வழிகள் இப்பத்திரிகையிலே குறிப்பிட்டிருக்கிறேன். ஜில்லாவுக்கு 4 பேருக்குக் குறையாமல் மஹா நிபுணரான ஸ்வதேசீய ப்ரசாரகர் ஏற்படவேண்டும்.

ஆனால், ப்ரசாரத் தொழில் இதுவரை தொடக்கமுறாமல் இருப்பதன் காரணம் யாதென்பது துலங்கவில்லை.

இந்த விஷயத்தைக் குறித்துச் சென்னை மாகாணத்தில் வசூல் தொழிலை முக்கியஸ்தராக இருந்து நடத்திய என் நண்பர் ஸ்ரீ சேலம் ராஜகோபாலாசார்யரும் பிறரும் ஸ்ரீமான் மஹாத்மா காந்திக் கெழுதி வேண்டியன செய்வார்களென்று நம்புகிறேன்.

மற்றபடியுள்ள காங்க்ரஸ் ஸங்கங்களின் அங்கத்தினரும் அனுதாபிகளும் மிகவும் சிரமப்பட்டு வசூல் செய்யப்பட்ட மேற்படி தொகை வீணாய் விடாதபடி கவனிக்க வேண்டும். உலக சரித்திரத்தில் இந்த சந்தர்ப்பம் மிக முக்யமானது. இதில் உலக முழுமையிலும் பல அற்புதமான மாறுதல்கள் தோன்றி

வருவது மாத்திரமே யன்றி, உலகத்திலுள்ள தேசங்களுக் கெல்லாம் விடுதலை பொதுவாகி விடு மென்றும் புலப்படுகிறது. இத்தருணத்தில் விரை விலே இந்தியா எங்ஙனமேனும் தன் ஸ்வதந்த்ரத்தை உறுதி செய்து கொள்ளுதல் அதன் கடமையாம். இதுவே, நமது தேசத்தில் பொது ஜனங்களின் மனதில் எப்போதும் விடாமற் பற்றியிருக்கும் பேராவலாகி விட்டது. அது பற்றியே, மஹாத்மா காந்தி கேட்ட போது, ஜனங்கள் சிறிதேனும் லோபத்தன்மை யின்றித் தங்கள் அளவிறந்த வறு மையையும் பாராட்டாமல், பணத்தை யதேஷ்டமாக வும் விரைவாகவும் கொடுத்துத் தங்கள் மீது பழிச் சொல்லுக்குச் சிறிதேனும் இடமின்றிச் செய்து கொண்டார்கள்.

ஒப்பந்தத்தில் ஒரு பாதி நிறைவேறிப் போய் விட்டது. அதாவது ஜனங்கள் பக்கத்திலே விதிக் கப்பட்ட கடமை நிறைவேறி விட்டது. இனித் தலை வர்கள் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டிய தைத் தவிர வேறொன்றும் இல்லை.

நாம் இங்ஙனம் எழுதிக் கொண்டு வருகையிலே, ஸ்ரீமான் ராஜகோபாலாசார்யர் ஒரு கணக்கு ப்ரசுரம் செய்திருக்கிறார். அதில் சென்னை மாகா ணத்து வசூல் எவ்வளவென்பதையும் அதில் செல வம்சங்கள் எவையென்பதையும் விவரித்துக் கணக் குகள் தெரிவிக்கிறார். அதில் மிகவும் சொற்பமான தொகை யொன்று சுமார் (50,000 ரூபா யென்று நினைக்கிறேன்.) ப்ரசாரச் செலவுக்காகப் போடப்

பட்டிருக்கிறது. இந்த ரூபாய் போதாதென்பது என்னுடைய அபிப்ராயம். ப்ரசார விஷயத்தில் இந்தியா முழுதையும் ஒன்றுகப் பாராட்ட வேண்டும். இந்தியா முழுமைக்கும் ஒரே திட்டம், ஒரே முறைமை, ஒரே ப்ரசார ஸங்கம் தலைமையாக இருந்து இந்த ஸ்வராஜ்ய ப்ரசாரத்தை நடத்தி வராவிட்டால் நமக்கு எண்ணிறந்த ஸங்கடங்கள் விளையும். "கர்மம் உனக்குரியது; நீ பயனைக் கருதுதல் வேண்டா" என்று கண்ணபெருமான் பகவத் கீதையில் சொல்லியிருப்பதற்கு இக்காலத்தில் பலர் பொருளுணர்ந்து கொள்ள மாட்டாதவர்களாக இருக்கின்றனர்.

பயனே மனிதருக்குக் கிடைக்காத நிலைமையில் தொழில் புரிய வேண்டுமென்பது கீதையில் சொல்லப் பட்டதாகச் சிலர் நினைக்கிறார்கள். அந்த அர்த்தத்தில் பகவான் அந்த வசனத்தை வழங்கவில்லை என்பது கீதை முற்றிலும் வாசித்துப் பார்த்தவர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரியும்.

தொழில் புரிந்துவிட்டு வெற்றி அகப்படுமோ அகப்படாதோ என்று எவரும் மனம் புழுங்குதல் வேண்டா. பயனுடைய தொழிலென்று புத்தியாலே நிச்சயிக்கப்பட்ட தொழிலை, ஒருவேளை அது பயன் தராதோ என்ற பேதை ஸம்சயத்தால் நாம் நிறுத்தி வைத்தல் தகாது. தொழிலுக்குப் பயன் நிச்சயமாக உண்டு. கடவுள் பின்னொரு பகுதியிலே சொல்லுகிறார்:—"பார்த்தா, தொழிலுக்கு வெற்றி இந்த உலகத்தில் மிகவும் விரைவாகவே எய்தப் படும்" என்று. தவிரவும், "மகனே, நற்றொழில்

புரிந்த எவனும் இவ்வுலகத்தில் தீ நெறி எய்து வதில்லை" என்று பின்னே கடவுள் மற்றோரிடத்தில் விளக்கி யிருக்கிறார்.

எனவே, வெற்றியைக் கடவுளின் ஆணையாகக் கண்டு, பயனைப்பற்றி யோசனையே புரியாமல், நம்மவர் ஸ்வராஜ்யத்துக்குரிய தொழில்களை இடை விடாமல் செய்து கொண்டு வரக் கடவர்.

அதனை உடனே தொடங்கவும் கடவர். அதில் நிர்கரணங்களை மீட்சி யின்றி வீழ்த்தி விடவும் கடவர்.

ஸ்ரீ ரவீந்திர திக் விஜயம்

காளிதாஸன்

25 ஆகஸ்டு 1921 துன்முதி ஆவணி 10

"—மன்னற்குத் தன் தேச மல்லால் சிறப்பில்லை;
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு."

ஆஹா மனிதராகப் பிறந்தோரில் கீர்த்தி பெற்றுல் மாத்திரம் என்ன ப்ரயோஜனம்? என் நண்பர் பெயர் சொல்லப்படாத ஒருவருக்குக்கூட ஓரிடத்தில், ஒரு கூட்டத்தினிடையே ஒரு சுகுஷியாருக்குள் ஒருவிதமான கீர்த்தி ஏற்பட்டிருக்கிறது.

நாளை அந்தக் சுகுஷி புகையாய்விடும். அந்தக் கூட்டம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். அந்தக் கீர்த்தி "பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய் மெல்லப் போய் விடுமே."

கீர்த்தி யடைந்தால், மஹான் ரவீந்த்ரரைப் போலே அடைய வேண்டும். வங்காளத்தில் மாத்திரமா? இந்தியா முழுமையுமா? ஆசியா முழுதுமா? ஜெர்மனி, ஆஸ்த்ரியா, ப்ரான்ஸ் பூமண்டல முழுமையும் பரவின கீர்த்தி. இத்தனைக்கும் அவர் பாடிய பாட்டுகளோ வங்க பாஷையிலே உள்ளன. வெறும் மொழிபெயர்ப்புக்களைத்தான் உலகம் பார்த்திருக்கிறது. அதற்குத்தான் இந்தக் கீர்த்தி.

ஜர்மனியிலே, இவருடைய அறுபதாம் வருஷக் கொண்டாட்டம் சில தினங்களின் முன்பு கொண்

டாடப்பட்டது. அப்போது (பி) பெர்ன்ஸ்தாப் (எப்) முதலிய மஹா பிரமுகர்கள் கூடி ஒரு ஸமிதி சமைத்துக் கொண்டு, இக்காலத்தில் ஜெர்மன் பாஷையில் எழுதப்பட்டிருக்கும் மிக முக்யமான காவ்யங்களும், சாஸ்த்ர க்ரந்தங்களும், பிற நூல் களும் அடங்கிய மிக விலையுயர்ந்த புஸ்தகத் தொகுதியொன்று டாகுருக்கு ஸம்மானம் செய் தார்கள்.

இவருக்கு ஐரோப்பா பூஜை புரியும் காரணம்

ஜெர்மனி தேசம் இன்றைக்கும் ஐரோப்பாக் கண்டத்தின் வித்யா ராஜதானியாக விளங்குகிறது. ஜெர்மனியில் நமது பாரத ரவீந்த்ரராகிய கவீந்த்ர ருக்கு நடத்தப்பட்ட உபசாரங்களெல்லாம் அவருக் குச் சேரமாட்டா. பாரதமாதாவின் பாத கமலங் களுக்கே சேரும். ஜெர்மனியில் உபசாரம் நடந்த மாத்திரத்திலே, அதைப் பின் பற்றி மற்ற முக்ய மான ஐரோப்பிய தேசங்களெல்லாம் அவருக்குப் பூஜை நடத்துமென்பது சொல்லாமலே விளங்கும். அங்ஙனமே நடத்தியுமிருக்கின்றன என்பதைக் கீழே நன்கு விவரணம் புரிவோம்.

1921-ம் வருஷம், மே மாஸம், 21-ந் தேதியன்று, "ஹம்புர் கெர் ஜெய்துங்க" என்ற பத்திரிகையில் ஒருவர் எழுதி யிருக்கும் நிருபத்தில் ஸ்ரீமான் டாகுரைப் பற்றிய பின்வரும் வசனங்கள் கவனிக் கத் தக்கன:-"ஸ்ரீமான் ரவீந்த்ரநாத டாகுர் ஸபைக் குள் வந்து பிரவேசித்த மாத்திரத்தில் எங்கள் அறிவுக் கெட்டாத ஒரு சக்தி வந்து புகுந்தது

போலிருந்தது. இந்த மனிதருடைய வாழ்க்கையில் ஒற்றை க்ஷணமாவது இவர் எல்லையில்லாத ஜகத்துடன் லயப்பட்டு நில்லாத க்ஷணம் கிடையாதென்பது தெளிவாகப் புலப்பட்டது. அவருடைய ஆரம்ப வசனங்களே மிகவும் வியக்கத் தக்கனவாக இருந்தன. கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்கும் நிகழ்ந்திருக்கும் ஸந்திப்பே இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய ஸம்பவமென்று ரவீந்த்ரர் தம்முடைய முதல் வாக்யமாகக் கூறினர். ஆசியா ஐரோப்பாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய உண்மைகள் ஆசியா ஐரோப்பாவிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய சக்திகள் பல இருக்கின்றனவென்பதை ரவீந்திரர் மறுக்கவில்லை. இதனை மேற்றிசை உபந்யாஸங்களினிடையே அவர் பன்முறை அங்கீகாரம் செய்திருக்கிறார். இந்தியாவுக்கு வந்த பின்னர் சில ஆங்கிலோ இந்தியப் பத்திராதிபர்களுக்குப் பேரானந்தம் விளையும்படி மிகவும் அழுத்தமான பாஷையில் வற்புறுத்தியிருக்கிறார். ஆனால் இஃதன்று அவருடைய முக்யோபதேசம். நாம் மேற்றிசையாரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய அம்சங்களைக் காட்டிலும், அவர்கள் நம்மிடம் கற்றுக்கொள்ள வேண்டிய அம்சங்கள் அதிகமென்பதே அவருடைய மதம். ஆசியாவையும் ஐரோப்பாவையும் ஒற்றுமைப்படுத்தினலன்றி, உலகத்தில் யுத்தங்கள் நிற்கப்போவதில்லை. ஆசியாவும் ஐரோப்பாவும் ஸமத்வம், ஸஹோதரத்வம். அன்பு என்ற தளைகளாலே கட்டப்பட்டாலன்றி, உலகத்தில் ஸமாதானத்துக் கிடமில்லை. ஸமா

தானமே யில்லாமல், மனிதர் பரஸ்பரம் மிருகங் களைப்போலே கொலை செய்துகொண்டு வருமளவும், மனிதருக்குள்ளே நாகரிக வளர்ச்சியைப் பற்றிப் பேசுதல் வெற்றுரையேயாகுமென்று கூறி விடுக்க. ஆசியாவையும் ஐரோப்பாவையும் இங்ஙனம் ஒற் றுமைப்படுத்துதற்குரிய பல புதிய உண்மைகளையும் அறங்களையும், தம்முடைய அற்புதமான நூல்களா லும், உபந்யாஸங்களாலும் தெளிவுபடுத்தி மஹான் டாகூர் இந்த பூமண்டலத்தையே தமக்குக் கடம்படு மாறு செய்துவிட்டார். இதனை ஜெர்மனி முற்றிலும் நன்றாக உணர்ந்துகொண்டு, அதன் பொருட்டாக நம் ரவீந்ரரிடம் அளவிறந்த மதிப்புச் செலுத்து வதுமன்றி அபாரமான நன்றியும் செலுத்துகிறது.

ஆஸ்த்ரியாவில்

ஆஸ்த்ரியா தேசத்தில் பாரத கவிராஜ ரவீந்த்ர ருக்கு நடந்த உபசாரங்கள் வர்ணிக்கத் தக்கன அல்ல. 1921 ஜூன் 26-ஆந் தேதியன்று, லண்டன் "அப்ஸர்வர்" பத்திரிகையின் வியென்னா நிருபர் எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு கூறுகிறார்:-

"வியென்னா நகரத்துப் பொதுஜனங்களாலும் பத்திராதிபர்களாலும், ஒருங்கே இத்தனை ஆழ்ந்த பக்தி சிரத்தைகளுடனே, இத்தனை ஒருமனமான புகழ்ச்சி வந்தனைகளுடனே கல்வரவேற்கப்பட் டோர், வேறெவரும் கவிகளிடையேயுமில்லை, பெரிய பெரிய ராஜ்ய தந்த்ரிகளிடையேயுமில்லை. வீர ஸேனாதிபதிகளிடையேயுமில்லை; மன்னரிடையேயு மில்லை" என. அஹா; இஃதன்றோ கீர்த்தி. இதனைக்

குறிப்பிட்டன்றே, முன்பு திருவள்ளுவனும்:— "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றார்.

தன் பொருட்டாகச் சேகரிக்கப்படும் கீர்த்தி யொரு கீர்த்தியாகுமோ? ஒரு தேச முழுமைக்கும் கீர்த்தி சேகரித்துக் கொடுப்போனுடைய புகழே புகழ். ரவீந்த்ரநாதர் இந்தியாவை பூலோக குரு வென்று பூமண்டலத்தார் கண் முன்னே நிலை நாட்டிக் கொடுத்தார். அவருடைய திருவடி மலர்கள் வாழ்க.

ஐரோப்பாவின் தாஹம்

இந்தியாவின் ஞானமே தேசமாகிய அமிர்தத் துக்கு, ஐரோப்பாவில் உயர்ந்த தரத்து மேதாவிகள் எத்தனை வேட்கையுடன் காத்திருந்தன ரென்பது மேலே கூறிய ஆஸ்திரிய நிருபரின் கடிதத்திலே மற்றொரு பகுதியில் பின் வரும் வசனத்தாலே நன்கு விளக்கப் படுகின்றது:—"இந்த நூற்றாண்டின் சிதறுபட்ட குழந்தைகளாகிய நாம் (ஐரோப் பியர் இப்போது ஒற்றுமையை நாடித் தவிப்பது போல் இதுவரை எப்போதும் தவித்தது கிடை யாது.) நரகவாதனைப் படுகிற நாம் இன்னும் எதிர் காலத்தில் இந்த மண் மீது தேவலோக அனுபவங்க ளெய்துவோம் என்று கனவுகள் காண்பதை விட வில்லை. இப்படியிருந்த எங்கள் முன்னே மற்றொரு லோகத்திலிருந்தொரு மனிதன் வந்தது போலே டாகூர் வந்தார். அவரை நல்வரவு கூறி உபசரிப் பதற்கு இப்போது நாம் தகுதிபெற்றிருப்பது போல் இதுவரை எப்போது மிருந்ததில்லை. இப்போது ஆயத்தமாக இருப்பது போல், இதுவரை எப்

போதும் ஆயத்தமாக இருந்தது கிடையாது. இஃது நேற்று அவருக்கு நடந்த உபசாரங்களாலே நன்கு விளங்கிற்று" என்று அந் நிருபர் கூறுகிறார்.

இனி, பிரான்ஸ் முதலிய மற்ற தேசங்களில் இந்தக் கவீசுவரருக்கு நடந்த உபசாரங்களைப் பற்றிப் பேசு முன்னர், இவர் இந்தியாவின் எந்த உண்மையைத் தெரிவித்தபடியாலே இங்ஙனம் பாரத பூமிக்கு பூலோக குருத்தன்மை ஏற்படுத்திக் கொடுக்க வல்லோர் ஆயினர் என்பதைச் சற்றே ஆராய்ச்சி புரிவோம்:—

அஃது பழைய வேத உண்மை; எல்லாப் பொருள்களும் ஒரே வஸ்துவாகக் காண்பவன் ஒரு வனுக்கு மருட்சியேது? துயரமேது? எல்லாம் ஒரே பொருளென்று கண்டவன் எதனிடத்தும் கூச்ச மேனும், வெறுப்பேனும், அச்சமேனும் எய்தமாட் டான். அவன் எல்லாப் பொருள்களிடத்தும் அன் பும், ஆதரவும், ஸந்துஷ்டியும், பக்தியும் செலுத்து வான். எல்லாப் பொருளிலும் திருப்தி பெறு வோன் எப்போதும் திருப்தியிலிருப்பான். இங்ஙனம் மாறுத சந்தோஷ நிலையே முக்தி நிலையென்றும் அமர பதமென்றும் கூறப்படுவது. இதனை மனிதன் அப்யாஸத்தாலும் நம்பிக்கையாலும் இந்த உலகத் தில் எய்திவிட முடியும். இஃதே வேதரஹஸ்யம்.

இந்த ஆத்ம ஐக்கியமான பரம தத்துவத்தை மிக இனிய தெளிந்த வசனங்களாலே ஐரோப்பா வுக்கு எடுத்துக் கூறியது பற்றியே ரவீந்திர கவிச் சக்ரவர்த்திக்கு ஐரோப்பா இங்ஙனம் அற்புத வழி பாடு செலுத்திற்று.

ஜாதி

1 பிப்ரவரி 1918 பிங்கள தை 20

[ஸர் ரவீக்ரநாத் டாகூரின் வியாசம். மிஸ்டர் சி. சுப்ர மண்ய பாரதியால் மொழி பெயர்க்கப்பட்டது.]

[மொழி பெயர்த்தவரின் குறிப்பு :—இதில் ஆசிரியர் ஜனப் பிரிவு களை 'ஜனம்', 'ஜாதி' என இரண்டு வகையாக நோக்குகிறார். நிலம், பாஷை மூதலியவற்றால் ஏற்படும் இயற்கைப் பிரிவுக்கு "ஜனம்" என்ற பெயர் சொல்லுகிறார். அதற்குத் திருஷ்டாந்தம் ஆரிய ஜனம்; நீகிரோவஜனம். ராஜபேதத்தால் கற்பிக்கப்படும் பிரிவுக்கு ஜாதி என்று பெயர் சொல்லுகிறார். திருஷ்டாந்தம்: ருஷிய ஜாதி, ஜெர்மன் ஜாதி. இந்த விசேஷப் பொருளை நூப கத்தில் வைத்துக் கொண்டு படிக்க வேண்டும்.]

ஜனவகுப்புக்கள் தனித்தனி சுபாவங்களுடைய வெவ்வேறு ஜீவன்களாம். ஆனால் "ஜாதி"கள் வெறுமே வலிமைக்காகச் சேர்ந்த கூட்டங்களைத் தவிர வேறில்லை. அதுபற்றியே இவற்றின் உட் குணங்களும் புறச் செய்கைகளும் எங்கும் ஒரே சந்தமாக ஒரே மாதிரியாக இருக்கின்றன. இவற் றுள்ளே வேற்றுமைகளிருந்தாலும் அவை தொழில் வலிமையைப் பற்றின வேற்றுமைகளேயன்றி குண பேதங்களல்ல. நவீன உலகத்தில் ஜனத்தின் ஜீவ சக்திக்கும், ஜாதியின் நிபந்தனைகளுக்கும் போர் நடக்கிறது.

ஆசியாக் கண்டத்தின் மத்தியில் முன்பு மனிதர் குடியிருந்த நாட்டுக்கும், அதன்மேல் இடைவிடாமல்

ஏறிக்கொண்டு வந்த பாலைவனத்து மணலுக்கும் சண்டை நடந்தது. உயிரும் அழகும் கொண்ட நாட்டை மணல் அழித்து விட்டது. அதுபோல் ஜாதி ஜனத்தை அழிக்கிறது. மனுஷ்யப் பொது ஜன உத்தம லக்ஷணங்களைப் பரவச் செய்தல் முக்ய மில்லை என்ற எண்ணத்திலிருந்து ஜாதியின் திறமை வளர்ப்பதாகிய கல்நெஞ்ச ஸம்ப்ரதாயம் பலமடைகிறது. ஸான்ப்ரான்ஸிஸ்கோ நகரத்தி லிருந்து லண்டன்வரை, லண்டனிலிருந்து டோக்யோ வரை ஜாதியெண்ணம் ஆதிக்கம் பெற்றிருக்கும் நகரங்களனைத்திலும் ஒரேமாதிரியான இயல்பைக் காணலாம். அவற்றின் முகங்களைக் காட்டுவதில்லை. முகமூடிகளையே காண்பிக்கின்றன. ஜனம் ஜீவ னுதலால் அதற்கு ஆத்மப் பிரகாசம் வேண்டும். அது ஸ்ருஷ்டி செய்யும் கல்வி, கலை, கோயில் முதலி யன ஜனத்தின் ஸ்ருஷ்டிகளாம். இவை ஒரே விருந் தில் பலவித உணவுகள் போலே உண்மையை அறிந்து இன்பமடைவதில் வெவ்வேறு சுவை தரு கின்றன. மனுஷ்ய லோகத்தை உயிர் வளமுடைய தாக்கிப் பலவிதங்களில் அழகு படுத்துகின்றன. ஆனால் ஜாதிகள் ஸ்ருஷ்டி செய்வதில்லை. அவை பெருக்குகின்றன, அழிக்கின்றன; பெருக்குதலாவது சோறு தூணி சேர்த்தல் போன்ற தொழில்வகை. பெருக்கும் கூட்டங்கள் அவசியமே. அழிக்குங் கூட் டங்களும் அவசியமாக இருக்கக்கூடும். ஆனால் இவை பேராசையும், விரோதமும் சேரும்போது, மனுஷ்ய ஜீவனை ஒரு மூலையில் ஒதுக்கிவிடுகின்றன. இதனால் இசை தவறுகிறது. ஜனங்களின் சரித்

திரம் அழிவை நோக்கிக் கழுத்தொடியும் வேகத் துடன் செல்லுகிறது.

மனுஷ்ய ஜாதி உயிருடனிருக்குமிடத்தே ஆதர் சங்களை, உத்தம தர்மங்களைப் பின்பற்றுகிறது. செத்த கட்டுப்பாடாகிவிடும் போது ஆதர்சங்களுக்கு இடங்கொடுப்பதில்லை. அதன் கட்டட மெல்லாம் புறத்தொழிலாகவே நடைபெறுகிறது. உள்ளிருக் கும் தர்மக் காட்சிக்கு அதன் உத்தரம் நேரில்லை. பல வளையாத முரட்டுத் தடைகளைக் கடந்து செல்ல வேண்டியதாகிறது.

மனுஷ்ய ஜீவனுக்குத் தனிமைக் குணமொன் றிருக்கிறது. தனிமையாகிய களத்திலேதான் அவ னுடைய ஆத்மா தன்னைப் பிரகாசப்படுத்திக் கொள் ளவும் வளரவும் ஸ்வாதீன மடைகிறது. மனிதன் பொது நிலையைவிட்டு ஒரு 'தொழிலாளி' அதாவது யாதேனுமோர் வியாபாரம், அல்லது விவகாரத்தால் கட்டுப்பட்டவன் ஆகும்போது அவனைச்சுற்றி இறு கலான ஒடு தோன்றுகிறது. இந்தத் தொழிலாளித் தனம் என்ற களத்திலே மனிதர் தத்தம் அறிவுக் குத் தனி வழிகள் காட்டித் தமது பலத்தை ஒருமுக மாக்கித் தாம் தாம் முற்படவேண்டுமென்று பரஸ் பரம் முழங்கைகளால் எற்றித் தள்ளுகிறார்கள். தொழிலாளித்தனம் அவசியந்தான். ஆனல் அதை ஆரோக்கிய வரம்புகடந்து செல்லவிடக் கூடாது. அது மனிதனை அடிமைப்படுத்தவும், குறுக்கவும், கடினமாக்கவும், ஆதர்சங்களில் நம்பிக்கையிழந்து லௌகிக லாபந் தேடுவோனைச் செய்யவும் இடங் கொடுக்கக் கூடாது.

புராதன ஹிந்து தேசத்தில் ஸ்மிருதியால் தொழில்கள் வரம்புகடவாமல் நிறுத்தப்பட்டன. அவை முதலாவது ஜனங்களின் பொதுத் தேவைகளாகவும், பிறகு அவரவருக்கு ஜீவனோபாயங்களாகவும் கருதப்பட்டன. எனவே எல்லையில்லாத போட்டியின் தூண்டுதலுக்குட்படாமல், தனித்தனி தனது பரிபூரணத் தன்மையைப் பரீக்ஷை செய்ய நேரிருந்தது.

ஜனங்களுடைய பொதுவான தொழிலாளித் தனத்துக்கு ஜாதியென்று பெயர். அது ஜனங்களுக்குப் பெரிய விபத்தாய்க் கொண்டு வருகிறது. ஏனெனில் அதில் பிருந்த லாபமுண்டாகிறது; எனவே உயர்ந்த ஆதர்ஸங்களின் நியதிகளிலே மனிதருக்குப் பொறுமையில்லாது போகிறது. லாபம் எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவு ஸ்வார்த்தம், பொறுமை, விரோதம், இவற்றின் அல்லல் பலமடைகிறது. இவை மனிதர்களின் மனதில் லாபத்தால் விளைகின்றன.

உயிருள்ள ஜனங்கள் ஜாதிகளாக இறுகுதல் மேன்மேலும் அவசியமாகிறது. ஜாதியக் கொள்கையின் வளர்ச்சியால் மனிதனுக்கு மனிதன் பெரிய விபத்தாய் விட்டான். அக்கொள்கை தீராத பயத்தை விளைவிப்பதனால், மேன்மேலும் பெரிய ஆபத்தாக மூண்டுவருகிறது.

கூட்டத்தின் புத்தி ஒரு குருட்டு சக்தி. நீராவி முதலிய பூத சக்திகளைப் போலவே அதையும் பிரமாண்டமான பலம் சேர்க்க உபயோகப்படுத்தலாம். ஆதலால் லோபத்தாலும் பயத்தாலும் தமது

ஜனங்களை வலிமைக் கருவிகளாக்க விரும்பும் அரசர் இந்தக் கூட்டப் புத்தியைத் தமக்கு வேண்டிய வழியில் பயிற்சி செய்கிறார்கள். ஜனங்களுடைய மனதில் எங்கும் பயமும், ஸ்வஜாதிக் கர்வமும்; பிற ஜாதிகளிடம் விரோதமும் வளர்த்தல் கடமையென்று நினைக்கிறார்கள். பத்திரிகைகளும் பள்ளிக் கூடப் புஸ்தகங்களும் கோயில் ஆராதனைகளையுங் கூட இந்த நோக்கத்துக்குப் பயன்படுத்துகிறார்கள்.

தெய்வ விரோதமான இந்தக் குருட்டுக் கொள்கையைத் தைரியத்துடன் எதிர்த்துப் பேசுவோரை நியாயஸ்தலங்களில் தண்டிக்கிறார்கள். அல்லது கூட்டத்திலிருந்து விலக்குகிறார்கள்.

தனி மனிதன் (லோபதாபமுதலிய) உணர்ச்சிகளின் சமயத்திலும் யோசனை பண்ணுவதுண்டு. ஆனால் ஒரு கூட்டத்தின் உணர்ச்சியுடன் கலக்கும் போது யோசனை செய்வதில்லை. அதனுடைய தர்மப்புலன் மழுங்கிப்போகிறது. கூட்ட மனங்களில் மனிதத் தன்மையை நசுக்கிவிடுவதனால் மிகுந்த பலமுண்டாகிறது. ஏனென்றால் கூட்டப் புத்தி இயல்பில் அநாகரிகமானது. அதன் சக்திகள் பூத சக்திகளைப் போன்றன. இருளின் பெரிய வலியை ஜாதி தனக்குப் பயன்படுத்திக் கொள்வதால் ஜாக்கிரதையாக இருக்கிறது.

சங்கட காலங்களில் ஒரு ஜனத்தின் தற்காப்புச் சிந்தையை ஆதிக்க முடையதாகச் செய்தல் அவசியமே. அப்போது அதன் ஒற்றுமையுணர்ச்சி கடுமையான விழிப்பெய்துகிறது. இந்த மிகை யுணர்ச்சி ஜாதியில் எப்போதும் சாகாதபடி

செயற்கை யுபாயங்களால் காக்கப்படுகிறது. ஒருவனுடைய வீட்டைத் திருடர் வந்து கொள்ளையிடும் போது அவன் போலீஸ் சேவகனுடைய தொழிலை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால் அவனுடைய சாதாரண ஸ்திதியே அப்படியாய்விட்டால் அவனுடைய வீட்டுச் சிந்தை மிகையாகி வீட்டருகே போவார் வருவோர் மேலெல்லாம் பாய்ந்து விழும்படி செய்கிறது.

இந்த மிகையுணர்ச்சி ஒருவன் கர்வப்படத்தக்க உடைமையன்று. இது மெய்யாகவே ஆரோக்கியத்துக்கு லக்ஷணமன்று. அது போலவே ஒரு ஜாதியின் தீராத தற்போதமும் ஜனங்களுக்கு மிகுந்த தீங்கு விளைவிக்கும். அதனால் தற்காலத்துக்குப் பயன் உண்டாவது போலே தோன்றினாலும் மனிதனுடைய நித்ய ஜீவனுக்கு நஷ்டமுண்டாகும்.

ஒரு கூட்டமும் சேர்ந்து யாதேனுமொரு குறுகிய நோக்கத்துக்குத் தம்மைப் பயிற்சிசெய்து கொள்ளுமாயின் பிறகு அதையே தளராமல் காத்து அதற்கு மரியாதை செலுத்த வேண்டுமென்று போதனை செய்தல் அந்தக் கூட்டத்திற்கு லாபகரமாகிறது.

ஒரு ஜன முழுதையும் குறுகின ஆதர்ஸப்படி பயிற்சி செய்வதே ஜாதியக் கொள்கை. அது ஜனங்களுடைய உள்ளத்தைக் கவரும்போது தர்மக் குறையையும் குருட்டறிவையும் விளைப்பது நிச்சயம். இந்த ஜாதியக் கொள்கையின் காலம் பிரமாண்டமான ஸ்வார்த்தமும் செருக்கும் தலைப்பட்ட காலம். இது நாகரிகத்தில் அசாசுவதமான

ஒரிடைக் காலமேயன்றி வேறில்லையென்ற நம்பிக்கையை நாம் உறுதியாகப் பற்றி நிற்போம்.

மனித சரித்திரத்தின் இந்த அசாசுவதமான குணத்தைத் திருப்திசெய்யும் பொருட்டு சாசுவதமான வேலை செய்வோர் இனி வரப்போகிற உண்மையான விடுதலைக் காலத்துக்குத் தகுதியில்லாதபோவார்கள்.

ஜாதியக் கொள்கை தடையின்றி வளர்வதனால் மனுஷ்ய நாகரிகத்தின் ஆதார நீதி தன்னையறியாமலே மாறுபடுகிறது. சமூகத்து மனுஷ்யனுடைய உத்தம லக்ஷ்யம் பிறர் நலம். ஆனால் ஜாதி தொழிலாளித்தனம் உடையதாகையால் அதற்குத் தக்கபடியே அதன் உத்தம லக்ஷ்யம் தன் நலம். இதனாலேயே தனி மனுஷ்யன் தனக்குத் தனக்கென்ற அவா உடையவனாக இருந்தால் பழிக்கப்படுகிறான். ஒரு ஜாதி அப்படி யிருந்தால் புகழப்படுகிறது. இதனால் ஏக்கத்துக்கிடமான நீதிக்குருட்டுத்தனம் உண்டாகிறது. அது ஜனத்தின் மதத்தை ஜாதியின் மதத்தோடு ஒன்றாகப் போட்டுக் குழப்புகிறது. இதனாலேதான் உலகத்தின் பெரும்பகுதியை கிறிஸ்தவ ஜாதியார் ஆளுவதனாலே கிறிஸ்து மதந்தான் உயர்ந்ததென்று சொல்லுவோர் சிலர் இருப்பதாகக் காண்கிறோம். இது ஒரு திருடன் களவு செய்த சொத்தை அளவிட்டு அவன் மதக் கொள்கையை ஆதரிப்பதொக்கும். ஜாதிகள் தாம் பிற மனிதரை யதேஷ்டமாகக் கொன்று மூடித்தது பற்றி ஆலயங்களில் விசேஷங்கொண்டாடுகின்றன. "டக" ஜாதிக் கள்வர்கூடத் தமது கொள்ளையை

நிறைவேற்றியது தாம் வணங்கிய தேவின் திருபை யென்று நினைத்தார்கள் என்பதை மேற்படி ஜாதி களீ மறந்து விடுகின்றன. "டக" ஜாதியார் விஷயத் தில் அவர்களுடைய தேவதையை வெளிப்படை யாகவே ஸம்ஹார மூர்த்தியென்று சொல்லி வணங் கினர். அது மேற்படி குற்றவாளி ஜாதியின் கொலை யுணர்ச்சியை தெய்வமாக்கினவாறு. தனி மனித னுடைய மனமன்று, கூட்டத்தின் பொது உள்ளம். ஆதலால் தெய்விகமென்று கருதப்பட்டது. அதே மாதிரி நவீன சர்ச்சு (கிறிஸ்தவாலயங்களில்) ஜாதி யின் பொது மனமென்ற கூட்டு நிலையில் ஸ்வார்த்த மும், அற்பச் செருக்கும், விரோதமும் தெய்வ பூசை யுடன் கூசாமல் வந்து கலந்துகொள்ளுகின்றன.

தன்னலத்தை நாடி யுழைத்தல் முழுமையும் அஹங்காரமாகவே யிருக்கவேண்டுமென்று கட்டாய மில்லை. எல்லா நலத்துடன் அது பொருந்தவும் கூடும். எனவே ஆதர்சிகமாகப் பேசுமிடத்து, ஜன ஸ்வார்த்தத்தின் பிரகாசத்தை நாடும் ஜாதியக் கொள்கை அவமானமடைய வேதுவில்லை. ஆனல் நாம் அனுபவத்தில் காண்பது யாதெனில் செல்வ மடைந்த ஜாதி யொவ்வொன்றும் பிறருக்குத் தீங்கு செய்யும் ஸ்வார்த்தச் செயல்களிலேதான் அதை யடைந்திருக்கிறது. அதாவது வியாபார வேட்டை களினலும், அந்நிய தேச உடைமைகளாலும், அல்லது இரண்டும் சேர்ந்ததாலும் என்க.

இந்த லௌகிகச் செல்வமிகுதி ஒயாமல் ஜனத் தின் ஸ்வார்த்த இயல்பைப் போஷிப்பதுமன்றி, ஒரு ஜாதிக்கு ஸ்வார்த்தம் (தன்னலம்) அவசியம்,

ஆதலால் அதுவே தர்மம் என்ற பாடத்தை மனிதரின் உள்ளத்தில் அழுந்தச் செய்கிறது. ஐரோப்பாவில் ஜாதி யெண்ணத்தில் அழுத்தம் எப்போதும் வளர்ந்து செல்வதால் அது நேர்ச் செய்கையாலும், தொத்தும் திறத்தாலும் மனிதனுக்குப் பெரிய விபத்தாய்க் கொண்டு வருகிறது.

மனுஷ்ய ஸ்வபாவத்திலேயே தீமைகள் இருப்பது மெய்தான். நாம் தர்ம விதிகளை நம்பியிருந்தாலும், தன்னுட்சியில் பயிற்சி பெற்றிருந்தாலும் அவை நம்மையறியாமல் வெளியே இழுத்து விடுகின்றன என்பதும் மெய்தான். ஆனால் அவை தம் நெற்றிமீது பழிச்சூடு போட்டுக்கொண்டிருக்கின்றன. அவற்றின் வெற்றியே அவற்றின் கொடூர ரூபத்தை அதிக கோரமாகக் காட்டுகிறது. மனுஷ்ய சரித்திர முழுமையிலும் துன்பப்படுவோர் சிலரும் படுத்துவோர் பிறரும் இருக்கவே செய்வார்கள். தீமையை வெல்லுதல் எக்காலத்திலும் பரிபூர்ணமாக நிறைவேறாது. தீ எரிவதுபோல் நமது நாகரிகத்தில் அது தொடர்ச்சியாக நடக்கும் செய்கையாம்.

நித்தியமான பரிபூரணத்வ லக்ஷ்யத்துக்கும், அதன் நிரந்தர ஸ்தானத்துக்கும் உள்ள பொருத்தமே ஸ்ருஷ்டி யென்று சொல்லப்படும். நன்மை யென்னும் உடம்பாட்டு லக்ஷ்யம், ஸாதனக் குறைவு என்ற எதிர்மறையுடன் சமவேகமாகச் செல்லும் மட்டும் அவ்விரண்டுள் முழுப் பரிவுண்டாகாதிருக்கு மட்டும் நாம் துன்பத்துக்கும் நஷ்டத்துக்கும் பயப்படவேண்டா.

ஆதலால் முற்காலங்களில் யாதேனுமொரு ஜனம் கலகந் தொடங்கிப் பிறருடைய மனுஷ்ய உரிமையைப் பறித்து விடமுயன்றபோது சில சமயங்களில் அந்த ஜனத்துக்கு வெற்றியும் சில சமயங்களில் தோல்வியும் ஏற்பட்டது; அவ்வளவு தான். ஆனால் இந்த ஜாதியக் கொள்கை இன்று சர்வ சம்பூர்ணமாய்த் தனது தன்னலம் அளவிலே பிரமாண்டமாக இருப்பதுகொண்டு அதை தர்ம மென்று காட்டத் தலைப்படுமிடத்தே அந்தக் கொள்கை பிறர் சொத்துக்களைக் கொள்ளையிடுவது மாத்திரமேயன்றி மனுஷ்ய ஜாதியின் உயிர் நிலையைத் தாக்குகிறது. தர்ம விதியைப் புறக்கணிக்கும் புத்தியை மனிதருக்கு அவசரமாகவே விளைவிக்கிறது. ஏனெனில் ஜனம் தர்மவிதியை தெய்வீகமாக எண்ணி, ஜாதி அந்த விதியைக் காற்றிலே தூற்றி விடுகிறதெதனால் எனில், ஜனத்தைக் காட்டிலும் ஜாதியே பெரிதென்ற கொள்கை பலவிதமான தந்திரங்களால் ஜனங்களுக்குக் கற்பிக்கப் படுவதனால் என்க.

ஒரு நோய் மூளையைத் தாக்கும்போது அது மிகவும் கடுமையாகிறது என்று கேள்விப்படுகிறோம். ஏனென்றால் எல்லாவிதமான வியாதி சக்திகளையும் இடைவிடாமல் மூற்றுகை போடுவது மூளையேயாம். ஜாதியத் தன்னலக் கொள்கையின் உள் நிலைமை ஒரு ஜனத்திற்கு நேரிட்ட மூள வியாதியைத் தவிர வேறில்லை. தற்காலத்து அந்த நோயின் அறிகுறிகள் எவையெனில் சிவந்த கண்களும், குவிந்த முட்டிகளும், கொடுஞ் சொற்களும், கொடுஞ் செயல்

களுமாம். இயற்கையிலே உள்ள சொஸ்தமாக்கும் கருவிகளை அது கொறுக்கிப்போடுகிறது.

ஜன சமூகத்தின் உயிருக்கு நல்ல வழிகாட்டும் சக்தி யாதெனில் ஆத்ம த்யாகமும் அனுதாபத்துக் கும் கூட்டுத்தொழிலுக்கும் இடமாகிய தர்மசிந்தை யுமே என்க. சூழ்ந்திருக்கும் வஸ்துக்களுடன் அனு கூல சம்பந்தம் கொண்டிருப்பதே அதன் தொழிலாம்.

இன்னும் பெருங்கேடு யாதெனில் ஜனங்களின் இந்தக் கோணல் ரீதியானது தேசபக்தியென்ற பகட்டான பெயர் புனைந்து கொண்டு தன்னை ஒரு மேலான தர்மமாகக் காண்பித்துக் கொண்டு திரி கிறது. சுழலுகிற தனது சொத்து நோயை உலக முழுதும் பரப்பித் தன் ஜ்வரத்தை ஆரோக்கியத் தின் சிறந்த குறியென்று முழங்குகிறது. இயற் கை யில் தேங்கில்லாத ஜனங்களின் மனதில் பொருமை யுண்டாக்குகிறது.

"ஜன்னி நிலையில் இருக்கும் அக்கம்பக்கத்துத் தேசத்தாருக்குள்ள பலம் நமக்கில்லையே, அவர்கள் பிறருக்குச் செய்யும் தீமை நம்மால் செய்ய முடிய வில்லையே, நாமன்றோ தீமையனுபவிக்கிறோம்" என்று பொருமையுறச் செய்கிறது.

எனது ஐரோப்பிய நண்பர் அடிக்கடி என்னி டம் "இத்தனை கொடிய தீமையை அழிக்க உபாய மென்ன?" என்று கேட்கிறார்கள். வெறுமே எச்சரிக்கை செய்துவிட்டு மாற்றுவழி சொல்லாதிருக் கிறேனென்றே என்மேல் பலர் குற்றஞ் சொல்லு கிறார்கள். ஒருவித அனுஷ்டானத்தால் நன்மை

யுண்டாகு மென்று நினைக்கிறோம். அனுஷ்டானத் துக்குப் பின்னே மறைந்து நிற்கும் உள்ள நிலை தவறுக இருந்தால் அனுஷ்டானம் இன்றில்லா விட்டாலும் நாளைக்குத் தீமையுண்டாக்கவே செய் யும் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். இன்று ஒரு ஜாதி கொண்டிருக்கும் அனுஷ்டானம் நாளை எல்லா ஜாதிக்கும் பரவும். மனிதர் தமது மிருகக் குணங்களையும் கூட்டக் கோப தாபங்களையும் விடும் வரை புதிய அனுஷ்டானம் புதியதொரு துன்பக் கருவி ஆகுமேயன்றி வேறில்லை. அல்லது வியர்த்த மாகும். நாம் தார்மிகமாக ஸத்குணத்தையும் கார்ய ஸித்திக்குரிய அனுஷ்டானத்தையும் ஒன்றாகக் கருதிக் குழப்பியே பழகியிருக்கிறோமாதலால் ஒவ் வொரு புதிய அனுஷ்டானமும் தோற்றுப் போகும் போது தர்ம விதியினிடத்திலேயே அவநம்பிக்கை கொள்ள நேரிடுகிறது.

ஆதலால் நான் எந்தப் புதிய அனுஷ்டானத் திலும் நம்பிக்கை வைப்பதில்லை. தெளிவான யோசனையும் பெருந்தகைமையுடைய உள்ளமும் நேர் நடையுமுடையவர்களாய் உலக முழுதிலும் ஆங் காங்கே இருக்கும் தனித்தனி மனிதர்களிடம் நம் பிக்கை கொண்டிருக்கிறேன். அவர்களே தர்மத் தின் உண்மைக்கு வாய்க்கால்களாவார்கள். நமது தார்மிக லக்ஷ்யங்கள் உளியும் சம்மட்டியும் வைத்துக் கொண்டு வேலை செய்யவில்லை. சிற்பிகளிடம் அனு மதி கேட்காமல் மரம் வளர்வதுபோல் மண்ணுக்குள் வேர்களையும் இயற்கையிலேயே விடுகின்றன. இந் தக் காரணத்தாலேதான் ஜப்பானில் ப்ரஞ்ச்

தேசத்து யௌவனப் பிராயமுடைய தர்மிஷ்டனொரு வனைக் கண்டபோது இனி நாகரிகத்தில் உயர்ந்த காலம் வருவதைப் பற்றி என் மனதில் நிச்சயமேற் பட்டது. ஐரோப்பாவில் அழிவின் பெரிய சக்திகள் களிக்கூத்தாடிக் கொண்டிருக்கையிலே நான் இந் தத் தனியான வெளிக் கீர்த்தி பெறுத ப்ரஞ்சு இளை ஞனைக் கண்டேன். அவனுடைய முகத்தில் புதிய ஸூர்யோதயத்தின் ஒளி வீசிற்று. அவனுடைய வாக்கில் புதிய உயிரின் அதிர்ச்சி தோன்றிற்று. எனவே ராஜ்யதந்த்ரிகளின் பஞ்சாங்கத்தில் பதி வாகா விடினும் மஹத்தான புதிய யுகம் ஏற் கெனவே பிறந்துவிட்டதென்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

"ஜாதி" என்ற வியாஸம் முற்றிற்று.

சிறிதும் பெரிதும்

ராஜரீகப் பஞ்சத்தில் நெடுங்காலம் கஷ்டப்பட்டு பாரததேவி வானத்தை நோக்கிக் கொண்டிருந்தாள். ராஜாங்கச் சோதிடர் ஒரு பலமான ஸ்வராஜ்ய மழைக் காற்று அராபிக் கடலைக் கடந்து வந்துவிட்டதென்றும் பெரிய மழை பெய்யுமென்றும் சோதிடங் கூறினர். அப்போது பார்த்தாலோ! பேஹாரில் மஹமதியர் மேலே ஹிந்துக்கள் கலஹ மழை தொடுத்தார்கள்—கனத்த மழை!

பிற தேசங்களிலும் மதக் கலஹங்கள் உள. அவை லௌகிகப் போட்டியாலும் விரோதத்தாலும் ஏற்படும். நமது தேசத்திலேதான் கேவலம் மதத்துக்கே சண்டை! இந்த உலகத்தில் நாமே அன்ய மத ஆதரவில் சிரேஷ்டரென்று வாயினாலே பிதற்றுகிறோம். நவீன ஐரோப்பாவில் கலகங்கள் சோற்றுக் காரணமாக விளைவன. அங்கு நிலக்கரிக் கூலிக்காரரும், கப்பல் கட்டுந் துறைமுகத்து வேலைக்காரரும், ரயில்வே கூலிக்காரரும் இடை யிடையே பெரிய கலகம் பண்ணுகிறார்கள். அதிலிருந்து படிப்படியாக புதுச் சட்டங்கள் பண்ணுதல் பழஞ் சட்டங்களை ரத்து செய்து வைத்தல், சிப்பாய்களை அழைத்தல்—ரக்தச் சேதம் இத்தனையும் நடக்கும். அங்கே இந்த மாதிரிச் சண்டைகளில் கக்ஷி இரண்டே. ஒரு கக்ஷி சண்டை நடத்துகிறது. மற்றொரு கக்ஷி அடக்குகிறது. நமது தேசத்தில்

இருப்பதுபோல் வேடிக்கை பார்க்க ஒரு மூன்றாம் கக்ஷி கிடையாது.

இங்கிலாந்தில் மூன்றாவது காலத்தில், அதன் ராஜாங்க யந்திரம் சரியானபடி செம்மைப்படாமலிருந்தபோது, ப்ரோடஸ்தாந்துக் கக்ஷியாருக்கும் ரோமாண் கத்தோலிக்க மதஸ்தருக்கும் கொடுமையான சண்டைகள் நடந்தன. அந்தப் போராட்டத்தில் ஒரு கக்ஷிக்கு மற்றொரு கக்ஷி செலுத்திய அநியாயங்கள் பல. நெடுங்காலம் வரை கத்தோலிக்கக் கிறிஸ்தவர் மிகவும் கஷ்டப்படும்படி நேர்ந்தது. இன்றும் அங்கு ப்ரோடஸ்தாந்து மதமே ராஜாங்க மதமென்று வைத்திருப்பது கத்தோலிக்கருக்கு நிலைத்த அநியாயமேயெனினும், கலகமும் அதிருப்தியும் வெளிப்படாமல் செய்துவிட்ட காரணங்கள் எவை?

எல்லாரும் ஒன்று சேர்ந்து ஸ்வராஜ்யம் பண்ணுகிறார்கள். அதனால் கலகங்கள் நின்றன. ஸ்காட் ஜாதியும் இங்கிலிஷ் ஜாதியும் ஜனவகுப்பிலும், பாஷையிலும், ரஸஞானத்திலும், சரித்திரத்திலும் வெவ்வேறு ஜாதிகள். கடைசியாக இங்கிலாந்துக்காரரும் ஸ்காட்டுகளும் ஒன்றுகூடி ஸ்வராஜ்யம் ஏற்படுத்தினார்கள். அதிலிருந்து ஒற்றுமையுண்டாய் அவர்களுக்குள் நெடுநாள் இருந்த கொடிய பழய விரோதப் புண்களெல்லாம் தீர்ந்து சேஷமலாபங்கள் ஒன்றாயின. அப்படி ஒற்றுமை இங்கிலாந்துக்கும் ஐர்லாந்துக்குமிடையே உண்டாகாத காரணம் யாது? ராஜரீக உரிமைகளில் ஸமத்வம் இல்லாமையே காரணம். வேறென்ன?

நமது தேசத்தில் இந்த ஹிந்து மஹமதிய விரோதம் ஒரு ஸங்கடமான அம்சம். மூழு உண்மை யினின்றும் விலகுதல் பாவம். பாவமுள்ள இடத்தில் தண்டனையுண்டு. மதக் கொள்கை பரவ ஒரு ஆத்ம விளக்காக இருப்பதைவிட்டு புராணங்களையும் புறக் கிரியைகளையும் ப்ரதானமாகக் காட்டுமிடத்தே மற்றெதனைக் காட்டியும் அது பெரிய கலஹாஸ்பத மாகிறது. மதக் கொள்கைக்காகச் சிந்தப்பட்ட ரத்தத்தால் ஐரோப்பிய சரித்திரம் செவ்விய கறைப் பட்டிருக்கிறது. "அஹிம்ஸா: பரமோ தர்ம:" என் பது உங்கள் கொள்கையாயின், அது அஸாத்ய மானதாயினும் சிறிது சிறிது அதை நோக்கிச் செல்ல முயலக்கூடாதா? மதக்கொள்கை யென்ற பெயர் வைத்துக்கொண்டு நீங்கள் ஒருவித மிருகத் தைக் கொல்லவும், பிறர் தங்கள் மதக்கொள்கை பற்றி மற்றொரு மிருகத்தைக் கொல்லவும், அது காரணமாக மீண்டும் மதக்கொள்கை என்று நீங்கள் அந்த மனிதரைக் கொல்லத் தலைப்படுதல் கொடுமை யன்றோ? நமது மதம் எப்போதும் சடங்கு மய மாகவே இருந்துவிடாதென்று நம்புகிறோம். ஹிந்து வும் மகமதியனும் ஒரே ராஜரீக ஆதர்சமுடையவர் களாய், நமது ராஜரீக வாழ்க்கை உண்மை பெறு மாயின் வெளி வேற்றுமைகளைத் துச்சமாகக் கருதக் கூடிய மன ஒற்றுமை வந்துவிடுமென்றும் நம்புகிறோம். நமது சொந்த துக்கங்களையும் நம்பிக்கைகளையும் பற்றின கதை அம்மட்டி லிருக்க, இதில் மூன்றாவது கக்ஷியாருக்கு என்ன வேலை?

சில தினங்களுக்கு முன்பு ரயில் வண்டியில் நானும் ஒரு ஆங்கிலேயனும் சந்தித்தோம். ஸ்வராஜ்யத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். பேஷாரில் ஒரு ஹிந்துஸ்தானி ஜமீந்தாரை நோக்கி ஓர் ஆங்கிலேய தளகர்த்தன், "உங்கள் குடித்தனக் காரரை அடக்கியாள உங்களால் முடியவில்லையே உங்களுக்கு ஸ்வராஜ்யம் தகுமா?" என்று கேட்டதாக அந்த ஆங்கிலப் பிரயாணி என்னிடம் சொன்னான். இங்ஙனம் அந்த ஆங்கிலேயன் சொல்லிய கதையில் மேற் தளகர்த்தனுக்கு ஜமீந்தார் என்ன மறுமொழி யுரைத்தானென்பதைத் தெரிவிக்கவில்லை. அநேகமாக ஜமீந்தார் தாழ்ந்த ஸலாம் போட்டு:— "துரையே, நாங்கள் தகுதியற்றோர். இந்தக் குடியானவரிடமிருந்து எங்களைக் காப்பாற்றினால் போதும். எங்களுக்கு ஸ்வராஜ்யம் அவசியமில்லை" என்றான் போலும். ஸ்வராஜ்யம் கனவுலகத்திலிருக்கிறது. எதிரே தளகர்த்தன் நிற்கிறான். குடியானவர் பின்னே பெருங் கலகம் பண்ணுகிறார்கள். அந்த ஜமீன்தார் வேறென்ன சொல்வான்? நான் என்னுடன் ரயில் வண்டியில் யாத்திரை புரிந்த ஆங்கிலேயனுக்குரைத்த மறுமொழி யாதெனில்:—"முன்பு எங்களவர் ஸ்வராஜ்யம் நடத்தியபோது இந்தமாதிரி ஹிந்து மஹமதியச் சண்டைகள் நடந்ததில்லை. மேலும், பேஷாரில் தளகர்த்தனிடம் படை யிருந்தது. அதை ஏழை ஜமீன்தார் மிகவும் ஆவலுடன் நோக்கி யிருப்பான். ஒருவன் கையிலே படைகளிருக்க மற்றொருவன் சண்டையிடுதல் எப்படி இயலும்? முன்பு சுதேசியக்

குழப்பத்தின் காட்களில் ஜாமலபூர் முதலிய தூர ஸ்தலங்களில் மாத்திரமேயன்றி கல்கத்தாவின் நடு மத்தியில் பெரிய பஜாரில் மஹமதியர் ஹிந்துக்களை ஹிம்ஸிக்க ஸர்க்கார் இடம் கொடுத்தது. இது ஆளப்படுவோருக்கு மாத்திரமேயன்றி ஆள்வோருக் கும் ஒரு வசை. இந்தமாதிரி மைஸூர் ராஜ்யத்தி லேனும், ஹைதராபாத் ராஜ்யத்திலேனும், நடந் திருந்தால் ஷை தளகர்த்தருகு மறுமொழி யுரைத் தல் அதிக சிரமமாகலாம்" என்றேன்.

நமது குறை அதுவே. நமக்கு அதிகாரப் பொறுப்பில்லை. நம்மை வெளிநின்று காக்கும் கடமையை நம்மை ஆள்வோர் மேற்கொண்டனர். அதனால் நாம் நமக்குள்ளே உதவியற்றவர்களாய் மேன்மேலும் கெடுகிறோம். அதனால் அதிகாரிகள் நம்மிடம் அதிக இகழ்ச்சி காட்டும்போது நாம் எதிர்த்து மறுமொழி சொல்லத் துணிவில்லையா யினும் மனதுக்குள்ளே வைகிறோம். நம்மிடம் அதி காரம் இருந்தால், அதைக் காப்பது ஹிந்துவுக்கும் மஹமதியருக்கும் ஒருங்கே கடமையாம். கலகம் நேரிடாமல் இருதிறத்தாரும் ஜாக்ரதையாக இருப் பார்கள். இங்ஙனம் இந்தியாவில் ப்ரிடிஷ் ராஜ்யம் சிறிது காலத்துக்கு மாத்திரமேயன்றி என்றும் ஸ்திரமாகும்.

ஆனால் ஒரு வேளை சரித்திரத்தின் அடுத்த பக்கத்தை நாம் திருப்பும்போது, ப்ரிடிஷ் ஜாதி யானது தனது 'நல்லரசாட்சி'யின் பின்னப்பட்ட குறைகளுக்கிடையே, நம்மை பலஹீனராய், தற் சார்பு தெரியாதவராய், தற்காப்புக்குத் தகுதியற்ற

வராய், உண்மையான தன்னலமறியாதவர்களாய், நமது நாட்டுக் கோடானுகோடி ஜனங்களை உயிருடன் அடங்காமல் தலையெடுத்திருக்கும் இதர ஆசியா தேசத்துக்கிடையே விட்டுவிட்டால் இந்த நிராதரவான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் நமக்கு முடிவின்றி நேரும் துன்பங்களுக்கு யாரை நோவர்? அல்லது, எப்போதும் மாறுகிற பூலோக சரித்திரத்தில், இந்தியாவின் ப்ரிடிஷ் ராஜ்ய சரித்திரம் மாத்திரம் எக்காலத்திலும் மாறாமலிருக்குமென்று வைத்துக்கொண்டபோதிலும் நாம் என்றும் பிரிந்தவராய், தேச உழைப்பில் பொதுக் கட்டில்லாதவர்களாய், சாசுவதச் சிறுமையில் பிணிப்புண்ட மனத்தினராய், அதிகாரமின்றி, குறுகி, நமது வருங்காலத்தைச் சூழ அன்னியரின் இச்சையென்ற பெருஞ் சுவர் வளர்ந்து நிற்க விதியா?

நாம் ஒரே ஆட்சியின் கீழிருக்கிறோம் ஒரே பொறுப்பின் கீழில்லை. எனவே நமதொற்றுமை புறத்தோற்றம். நம்மை அது சேர்க்கவில்லை. ஒரு வரிசையாக நிறுத்தி வைத்தது. எங்கேனும் லேசாக அடி விழுந்தால் ஒருவர் மேலே ஒருவர் மூட்டு கிறோம். இந்த ஐக்யம் உயிர் உடையதன்று. விழித்துக்கொண்டு ஒரே பாதையில் நடக்கும் மனிதரின் ஒற்றுமை போன்ற ஒற்றுமை. ஒரே தரையின்மீது தூங்குவோர் மாதிரி ஒற்றுமை. இந்த ஒற்றுமையில் கர்வப்பட இடமில்லை. மகிழ்ச்சி கொள்ளவும் இடமில்லை. ஒன்று கூடி ஸ்தோத்ரப் பாட்டுக்கள் பாடவும், ஒன்று கூடித் தலை குனியவும் இடங் கொடுக்கும். நம்மைத் தூக்கிவிடாது.

பழைய காலத்தில் ஜாதிக் கட்டிலில் நாம் ஸ்வ ஜனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளில் தவறுமலிருந்தோம். அது குறுகின களம். நாம் பிறந்த கிராமமே ஸ்வதேசமென்று நினைத்துக் கொண்டிருந்தோம். இருந்தாலும், அதன் வரம்பு களுக்குள், செல்வர் தமது செல்வப் பொறுப்பை யும், புலவர் தமது புலமைக் கடமையையும் உணர்ந் திருந்தனர். ஒருவன் எவ்விதமான அதிகாரம் கொண்டிருந்தாலும், அவனைச் சூழ நின்றோர் அதனை மாற்றுதல் இயலும். முயற்சியும். பொறுப்பு முள்ள அவ்வித வாழ்க்கையில் மனிதர் மகிழ்ச்சி யுறவும், பெருமை கொள்ளவும் இடமிருந்தது.

ஆனால் நம் பொறுப்புக்கள் ஜாதிக்கட்டி லிருந்து விலகிவிட்டன. இப்போது நமக்கு நியாயம் செலுத்துவதும் ஸர்க்கார், கரப்பாற்றுவதும் ஸர்க் கார், வைத்தியம் செய்வதும் ஸர்க்கார், தண்டிப் பதும் ஸர்க்கார்; எது ஹிந்து தர்மத்துக்கடுத்தது, எது அடுக்காதது என்பதை யெ ஸர்க்கார்தான் தீர்மானம் பண்ணுகிறது, நமக்குலாகிரி வஸ்துக்கள் தயார் செய்து கொடுக்கும் பொருட்டாகச் சாராயம் வடிக்குங் கடமையும் அதுவே செய்கிறது. கிராமத் தான் ஒருவனைப் புலி தின்றுவிட்டால், மாஜிஸ்த் ரேட்டுக்கும், அவருடைய ஸ்நேஹிதர்களுக்கும் வேட்டைக்குப் போக ஸௌகர்யம் ஏற்படுத்திக் கொடுக்கிறது. நமது ஜாதிக் கட்டின் விதிகள் நம்மால் பொறுக்க முடியாதபடி பாரமாய் விட்டன என்பது மெய்யே. பிராமணன் தக்ஷிணை வாங்கிக் கொள்ளுகிறான்; படிப்புக் கற்றுக் கொடுப்பதை

விட்டுவிட்டான்; ஜமீன்தார் குடித்தனக்காரரைக் கசக்கிப் பிழிகிறான்; ப்ரத்யுபகாரம் கிடையாது. மேற்குலத்தார் பொதுஜனங்களின் மதிப்பை வேண்டுகின்றனர்; அதற்குக் கைம்மாறாகக் காப்பில்லை. நமது சடங்குகள் வீண் செலவு மிகுந்தும் ஸ்நேஹ வழி குறைந்தும் வேஷமாத்ரமாயின. இடையே ஜாதி மூட்டுதல் பல. குருக்களின் கொள்ளை தீவிரம். ஜாதிப் பசுவுக்கு நாம் தீவனம் போடுகிறோம். அது நமக்குப் பால் கொடுப்பதை நிறுத்தி மூட்டுவதை நிறுத்தவில்லை.

நம்மவர் முன்பு நாடு நடத்திய திறமையைக் காட்டிலும் வெளியார் நடத்தும் நாடு செவ்விதா அன்று என்பது விசாரணையன்று. மனிதர்கள் மரங் கல்லாக இருந்தால் அடக்கி வைப்பதே சிறந்த தொழில். ஆனால் மனிதர் ஜீவஜந்துக்கள். உயிரும், விருத்தியும், முன்னேற்றமும் நாடுவோர் தேசக் காரியங்களினின்று பிரித்து நம்மவரை மனமேங்க விடுதல் குரூரம்; தந்திரத்துக்கு விரோதம்.

நாம் அதிகாரம் கேட்பது தற்புகழ்ச்சிக்கன்று. பிறரைத் துன்புறுத்த அன்று. பிறர் செல்வத்தைப் பறிக்க அன்று. பெருந் தொகையான ஜனங்களைக் கொல்லப் பெருமடங்கான சக்தி ஸம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்தாலன்று. 'ஸமாதான ஹிந்து' என்று பிறர் நம்மைக் குறிக்கும் ஏளனச் சொல்லை நாம் மகுடமாகத் தரிப்போம். நாம் ஆத்ம சாஸ்த்ரவாதிகளாக இருப்பது பற்றிப் பிறர் நம்மை நகைப்பதைப் பொறுத்துக் கொள்வோம். ஸ்வ

தேசத்துக்கு ஸேவை பண்ண வலிமை வேண்டு கிறோம். தேசப் பொறுப்புக்களை வஹிக்கும் இயற்கையுரிமை யில்லாமையால், முழுப் பயன் கேடாகிய இகழ்ச்சியின் துன்பங்கள் நம் நெஞ்சைத் தின்னுகின்றன.

இதனாலே நம் இளைஞர் சிறிது காலமாக 'ஜன ஸேவை'யைக் கைக்கொண்டிருப்பது காண்கிறோம். உயிரற்ற ஸமாதானமென்ற அறைக்குள் மனிதன் எக்காலத்திலும் திருப்தியுடன் அடைபட்டிருக்க மாட்டான். அபிவிருத்திக்குப் பாடுபடுதல் அவனு டைய அத்யந்த அவஸரம். தான் துன்பப்பட்டும் ஒரு கொள்கையைத் தூக்கி நிறுத்துதல் அதன் அடையாளம். எல்லாப் பெரிய தேசத்தாரின் சரித் திரத்திலும் இந்தப் போராட்டத்தின் எதிர்க்க முடியாத நதி நுரை வீசி, உறுமி, ஜயாபஜயங் களாகிய மேடு பள்ளங்களினூடே தடைகளை யெல் லாம் உடைத்துக்கொண்டு போகிறது. நம்மைப் போல் ராஜரீகப் பக்கவாத நோயுடையவர்களின் கண்ணிலும் சரித்திரத்தின் மஹத்தான இந்திர ஜாலம் படாதவாறு தடுத்தல் ஸாத்யமில்லை. பெரியோர் வாக்கியங்களால் ஊகமெய்திச் சரித் திரத்தின் பாடங்களை நன்கு கற்றவனுய் உயிரின் வேகம் நிரம்பியிருக்குமோரிளைஞன், பிறர் கட்டா யத்தால் வேலையற்றிருப்பதைக் காட்டிலும் சாதல் நன்றெனக் கருதுவான். 'பந்தோபஸ்த்' வைக்கப் பட்ட ஸீந்த்ரநாத தாஸ குப்தன் தற்கொலை செய்துகொள்ளுமுன் எழுதிய மனமுருகும்படியான கடிதத்திலும் இது தெளிவாகிறது.

ஆனால் வெள்ளத்திலும் பஞ்சத்திலும் ஜனங்களுக்குதவி செய்ய இடமிருப்பது கொண்டே மனுஷ்ய ஹ்ருதயத்தின் நானவித இச்சைகளும் திருப்தியடைந்துவிடமாட்டா. நாடோறும் மனித வாழ்க்கையில் சேரும் எல்லாவிதத் தொழில்களும் செய்ய இடங்கொடுத்தால்தான் திருப்திபெறும். இல்லாவிட்டால் அந்த இச்சைகள் நெஞ்சுக்குள்ளேயே அழுகி விஷமுடையனவாய் தேசத்தைத் துயர்ப்படுத்தும் ரஹஸ்ய யத்தனங்களாகின்றன. ஆதலால், ஆதர்சத்தை அனுபவமாக்க விரும்புவோரின்மீதே ஸர்க்காரின் ஸம்சயம் மிகத் தீவிரமாகச் செல்லுகிறது. தன்னலமே வேண்டுவோர், தருமங் கருதாதார், சோம்பேறிகள், உதாஸீனக்காரர், இவர்களுக்குத்தான் இப்போது கடை பெறும் ரஹஸ்யப் போலீஸ் தர்பாரில் பயம் குறைவு. இவர்களே பிறருக்குழைக்கப்போனால் அதற்கு முகாந்தரம் காட்டுதல் மிகவும் சிரமமாய் விடுகிறது. அதிகாரிகள் பெரிய தோரணையுடன்:— "நீங்களேன் பெரிய காரியங்களில் தலையிடுகிறீர்கள்? தின்னவும், குடிக்கவும், கூலி வேலை செய்து கூலிக்குத் தக்கபடி ஸௌக்யமாகக் குடியிருக்கவும் இடம் கொடுத்திருக்கிறபோது அதோடு திருப்தியடையாமல் ஆகாசவேட்டைக்கேன் புறப்படுகிறீர்கள்?" என்று நம்மை நோக்கிக் கேட்கையில் நாம் என்ன உத்தரம் கூறுவோம்? ஆனால், அவர்கள் என்ன சொல்லியபோதிலும், விசாரணையில்லாமல் மனிதரை "பர்தோபஸ்த்" பண்ணும் இருட்டுக் குகைத் தந்திரத்தில் ஒளியில்லை; நீதியில்லை; சத்திய

மில்லை; அதிலிருந்து தப்ப வழியுமில்லை. அதனை கவர்ன்மெண்டார் அனுஸரிப்பது நியாய மில்லை. தேசத்தில் மிகச் சிறந்த யத்தனத்தை யெல்லாம் இப்படி விசாரணை யில்லாமல் மண்ணுக்குள்ளே புதைத்தல் எளிதாம். அவற்றினின்றெழுக் கூடிய பிசாசுகளைத் தூங்கப் பண்ணுதல் கஷ்டம். உள்ளே பசியை தண்டனையாலே மாற்ற முயலுதல் மதி யுடைமையன்று.

இந்தக் குகைத் தந்திரம் இங்கு மும்முரமாக அனுஸரிக்கப்பட்டு வருகையிலே, இங்கிலாந்தி லிருந்து செய்தி வருவதைப் பார்த்தால் ஸ்வராஜ்யம் கொடுக்க மசோதா செய்ய யோசித்திருப்பதாகத் தெரிகிறது. தொல்லைப் பேயைத் தொலைக்கக் கொடுமை வழி சரியன்று. ஜனங்களை நலம் செய்யவேண்டுமென்பதையும் அதிகாரிகள் காணத் தொடங்கிவிட்டார்களென்று நம்புகிறேன். "நான் இதில் பிறந்த காரணத்தால் மாத்திரமேயன்றி, எனது யத்தனங்களும், ஜயங்களும், இதற்கே ஸமர்ப்பணம் செய்யத் தகுந்தன. ஆதலாலும் இது என் தேசம்" என்று ஜனங்களில் ஒவ்வொருவனும் தெரிந்து கொள்ளும்படி அதிகாரிகள் உதவி புரிந்தால் மாத்திரமே ப்ரிடிஷ் ஸாம்ராஜ்யம் இந்தியா வில் நிலைபெறும். இத்தனை பெரிய தேசத்து ஜனங்களை பலஹீனராகவும், சக்திஹீனராகவும், ராஜ்ய விஷயத்தில் சிரத்தாஹீனராகவும் வைத்திருந்தால், ஆபத்துக் காலத்தில் இவர்களால் உதவிபெற இட மில்லாது போய்விடும். அவர்களுடைய ஜடத் தன்மையின் பாரம் பொறுக்க முடியாததாய்விடும்.

மேலும், மிகவும் பலஹீனமாக இருப்போரையும் நமக்கெப்போதும் எதிர் ஸ்தானத்தில் வைப்பது தோணியடியில் சிறு தொகை போலாம். காற்று சரியாக இருக்கும்வரை ஜலத்தை இறைத்திறைத்து விட்டுத் தோணியைச் செலுத்தலாம். ஆனால் புயற் காற்றில் எல்லாரும் கண்டையும் சுக்கானையும் பாயையும் கவனித்துக் கொண்டிருக்கையில் சிறிய தொகை பெருங்கேடாம். அப்போது கோபங் கொண்டு மேற்படி தொகையைப் போலீஸ் சட்டத் தடி—அல்லது சட்டமில்லாத்தடி—கொண்டு புடைப் பதில் லாபமில்லை. சிறு செலவுக்கு பயந்து சரியான காலத்தில் இந்த ஒட்டையை அடைக்காதிருந்தால் பின்பு பெரிய செலவு நேரும். இதை ப்ரிடிஷ் தந்திரிகள் அறிந்திருப்பதாகவே தோன்றுகிறது. அதனால்தான் ஸ்வராஜ்யத்தைப் பற்றின வார்த்தை புறப்பட்டிருக்கிறது.

ஆனால் மனித இயல்பில் தாழ்ந்த பகுதிக்குக் கண்ணில்லை. அது நிகழ் காலத்தை மாத்திரமே கவனிக்கும், வருங் காலத்தைக் கவனியாது. உண்மையையும், தர்மத்தையும் நம்பி வார்த்தை சொல்லுதல் ஆண்மையற்ற சித்த பலக்குறைவென்று கருதும். இது ப்ரிடிஷ் ராஜ்யத்துக்குப் பகை. உயர்ந்த ஆசைகளால் தூக்கிய இறகுகளையுடைய வளாய் பாரததேவி இப்பகையைப் புறக்கணிக் கிறாள். இங்குள்ள ஆங்கிலோ - இந்தியன் ஸர்க்கார் உத்யோகஸ்தனனும், வர்த்தகனனும் தன் லாபத்தையும் அதிகாரத்தையும் விரும்புவோனுதலால், அவனுக்கு இவ்விடத்து நிலைமை கண் தெரிய

வில்லை. மிகவும் நெருக்கத்திலே கண் மங்கல் ஏற் படும். அவனுடைய குறுகிய பார்வையில் அவனதி காரமே பெரிதாகவும், இங்குள்ள முப்பது கோடி மனிதரும் இவர்களுடைய சுக துக்கங்களும் துச்ச மாகவும் தோன்றுகிறது. இதனால் இந்தியாவின் ஆண்மையை உறுதி செய்யத் தகுந்த சீர்திருத்தம் இங்கிலாந்து நமக்குக் கொடுத்தாலும், அது இங்கு வருமுன் வெட்டுண்டு துண்டு துண்டாய் ரத்தமில்லா மல் வருமோ? அல்லது வரும் வழியிலே செத்துப் போமோ? இந்தியாவின் விதியாகிய பாலவனப் பாதையிலே சிதறுண்டு கிடக்கும் பயனற்ற நல் லெண்ணங்களின் எலும்புகளுடனே இதன் எலும்பு களும் சேருமோ? என்று கருதி அஞ்சுகிறேன்.

நம்மைத் தடுக்கப் படைதரித்த ஆங்கிலோ-இந் தியன் அதிகார வெறியுடையவன். அதிகார மாமூல் என்ற பல தட்டுக்களாலே இந்தியாவின் உயிர்த் தீண்டுதலினின்று பிரிந்தவன். அவனுக்கு இந்தியா ஒரு கச்சேரி; ஒரு கடை. இங்கிலாந்தில் நமது விதிக் குத் தலைவராகிய ஆங்கிலேயருக்கு இவன் ரக்த பந்து. அவன் கை அவர்களுடைய கையுடன் கோக் கப்பட்டிருக்கிறது. அவனிதழ்கள் அவர்களுடைய செவிப்புறத்தே இருக்கின்றன. அவர்களுடைய மந்திர ஸபைகளில் அவனுக்கு ஸ்தானமுண்டு. ராஜ்ய சங்கத்தின் பின்னே அந்தரங்க அறைக்குள் அவன் போக அனுமதியுண்டு. இவன் அடிக்கடி இங்கிலாந்துக்குப்போய், அந்த தேசத்தின் எண் ணங்களையும் மன இயல்பையும் மாற்றுகிறான். அவன் தனது நரைத்த மயிரையும், அனுபவ மீட்சி

யையும் காட்டித்தானே ஸாம்ராஜ்யத்தை இவ்வளவு உச்சஸ்தானத்துக்குக் கொண்டு வந்ததாகக் கூறித் தன் இஷ்டப்படி எல்லோரும் நடக்கவேண்டுமென் கிறான். இந்தக் கோபுரம் போன்ற கஷ்டிக்குப் பின்னே நமது சொற்கூளையும், ஆவல்கூளையும், நமது வாழ்வையும் யார் கணிக்கப்போகிறார்கள்? இந்த மூப்பது கோடி ஜனங்களும் மனிதரென்ற விஷயத்தை அதிகாரிகளாகிய கோட்டைச் சுவரையும் மீறிப் பார்க்கத் தகுந்த அத்தனை காட்சிக் கூர்மை நாம் எந்த ஆங்கிலேயனிடத்திலும் எங்ஙனம் எதிர் பார்க்கலாம்?

தூரத்திலே இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயன், ஐரோப்பின் விடுதலைக் காற்றில் தன்னலக்குருட்டுத் தனத்தின் மோஹங்களில்லாமல், இந்தியாவை விசாலக் காட்சியுடன் காணுகிறான். அப்படி சுத்த மான மேற்காற்றின் தூரப் பார்வைகளை யொத்த காட்சி தவறென்றும், புழுதி படிந்த தரையோரப் பார்வையே சரியென்றும் அவனை ஆங்கிலோ-இந்தியன் எச்சரிக்கை செய்கிறான். தூரத்து ஆங்கிலேயன் இந்தியா விஷயங்களில் சிரத்தையெடுப்பது மானங்கெட்ட அதிகப்ரஸங்கித்தனமென்று ஆங்கிலோ-இந்தியன் நினைக்கிறான். நம்மை ஆள்வது நாம் கேள்விப்பட்ட மஹத்தான இங்கிலீஷ் ஜாதியன்று; நாம் ஒரு உத்தியோகஸ்தக் கூட்டத்திற்குக் குடிகள் என்பதை நம்மவர் அறிந்திருக்க வேண்டும். அந்தக் கூட்டம் ஸர்க்கார் கச்சேரி என்ற திராவகத்தில் ஊறப்போட்டு வைத்தமையால் நைந்து போன இயல்புடையது. மனதிலும், ஹ்ருதயத்

திலும், உயிரிலும் உண்மையான மனிதத்தன்மை யுடைய மனிதர் நம்மை ஆளவில்லை. ஒரு விசேஷ நோக்கத்தின் பொருட்டுக் கத்தரித்து முத்திரை போட்டு வைக்கப்பட்ட மனிதர் ஆளுகிறார்கள்.

புகைப்படம் பிடிக்கும் காமிரா ஒரு கருவி. அது தெளிவாகப் பார்க்கும். ஆனால் முழுதையும் பார்க்காது. நேராக முன்னே இருப்பதை மாத்திரந்தான் பார்க்கும். எனவே அது குருட்டுத்தனமாகப் பார்க்கிறதென்று கூறலாம். ஜீவக் கண்ணே எனில் யாதேனுமொரு குறித்த நோக்கத்துக்கு முழுதும் பயன்படாவிடினும், பொதுப்படையாக மனுஷ்ய ரின் பரஸ்பர விவகாரங்களுக்குசிதமானது. எனவே நமக்குக் கடவுள் காமிராக் கண்ணடி கொடுக்காமல் கண் கொடுத்தாரே என்று நாம் நன்றி செலுத்தக் கடவோம். இந்தியா கவர்ன்மெண்ட் விஷயத்தில் அவர் நமக்கென்ன வஸ்துவைக் கொடுத்துவிட்டா ரென்பதைப் பார்ப்போம்.

பெரிய இங்கிலிஷ்காரன் நமது விதி வசத்தால் கடலுக்கப்பாலே இருக்கிறான். இங்கு வருமுன்னே அவனை 'ராஜ்ய தந்திரம்' என்ற கத்திரியால் கத்திரித்து விடுகிறார்கள். தானும் வளர்ந்து பிறரையும் வளரச் செய்வதாகிய அம்சத்தைத் துண்டித்து அவனுடைய ஆண்மையில் மூக்காற் பங்கைக் கொய்து விடுகிறார்கள். இந்தச் சிதைவுண்ட மனிதர் தமது விலை மிகுந்த காமிராக்கள் நேரே பார்க்க வில்லையென்று பிறர் சொல்லக்கேட்டு ப்ரமிக்கிறார்கள். கற்பனைசக்தியையும் இவர்கள் தமது நாட்டில் வைத்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் ஏழைத் தொழிற் சத்திரங்களில் உள்ள ஏழைகள் ஏன் திருப்தியில்லாமல் ஓடிப் போக முயற்சி பண்ணுகிறார்கள்? அந்தத் தொழிற் சத்திரம் வீட்டோடும் சேரவில்லை. வீடில்லாத நிறைவுமில்லை. அது நிழலை அளந்து கொடுக்கிறது. நிழல் முக்யமான வஸ்துவே. எனினும், மனுஷ்யர் மனுஷ்யராகையால், வீடு கேட்கிறார்கள். அதாவது பூர்ணவசியமான வஸ்துக்கள் மாத்திரமேயன்றி அநவஸரமான வஸ்துக்களும் சில அவர்களுக்கு அவசியம். அவை கிடையாவிட்டால் தப்பியோட வழி தேடுகிறார்கள். அந்தத் தொழில் சத்திரத்து 'தர்மகர்த்தா'வுக்குக் கோபம் வருகிறது. அவன் முழு திருஷ்டியுடைய முழு மனுஷ்யனல்லன். ஏழைகளின் நன்றி கெட்ட தனத்தைச் சொல்லி வியக்கிறான். ஜீவனைச் சலிப்பிக்கும் வரம்பில்லாத ஆசையை விற்றுத் தன் சத்திரத்து நிழலில் கிடைக்கும் ஸமாதானத்தை இந்த ஏழைகள் கொள்ள விரும்பாதிருப்பதைக் கண்டு ஆச்சர்யப்படுகிறான். அவர்களுடைய துக்கத்தை தண்டனையால் அடக்க முயலுகிறான்.

பெரிய ஆங்கிலேயனுக்கும் இந்தியாவுக்கும் நேர் ஸம்பந்தமில்லை. இரண்டுக்குமிடையே சின்ன ஆங்கிலேயன் இடைநிலையாக விளங்குகிறான். எனவே, பெரிய ஆங்கிலேயன், நமக்கு சரித்ரத்திலும் இலக்கியத்திலும்தான் காணப்படுகிறான். அவனுக்கு இந்தியா நீலப் புஸ்தகங்களிலும் கச்சேரிகளிலும் உளது. அதாவது அவனுக்கு இந்தியா ஒரு கணக்கு ஜாப்தா. அதில் இறக்குமதிகள் ஏற்றுமதிகள், வரவு

செலவு, ஜனன மரணத்தொகை; ஸமாதானத்தைப் பாதுகாக்கும் போலீஸ்காரரின் தொகை; கலக குணமுடையவர்களைத் தண்டிக்கச் சிறைச்சாலைகளின் தொகை; ரயில் பாதை நீளம், பள்ளிக்கூடங்களின் உயரம்—இவற்றின் கணக்குக் காணப்படும்.

நம்மவருக்கு நம்புதல் கஷ்டமாகத் தோன்றினாலும், யதார்த்தமாகவே பூமியில் ஒரு ப்ரதேசத்தில் மஹத்தான ப்ரிடிஷ் ஜாதி என்று நியாயப் பெயர் பூண்ட ஜாதியொன்று வாஸம் செய்கிறதென்பதை அறியும்படி எனது தேசத்தாரை வேண்டுகிறேன். பலஹீனர் பலவான்களைப் பற்றி அநியாயம் பேசுதல் அதிக பலஹீனத்துக்கடையாளம். நாம் அவ்விதபலஹீனத்தை விலக்குதல் நமக்கொரு கீர்த்தியாம். இந்தப் பெரிய ஆங்கிலேயர் எல்லா விதங்களிலும் உண்மையான மனிதர் என்று நான் ஸத்யமாகச் சொல்லுகிறேன். மற்றப் பெரிய ஜாதியாருக்கு மஹிமை தந்த குணப் பெருமையே இந்தப் பெரிய ஆங்கிலேயருக்கும் மஹிமை தருவது. கேவலம் வாள் வலியாலும், அல்லது பணப் பைகளைக் குவித்ததனாலும் இந்த நிலைமைக்கு வந்து விட்டார்களென்று நாம் கோபத்திலே சொல்லுதல் சரியில்லை. சண்டை அல்லது பணம் சேர்க்கும் தொழிலில் மாத்திரமே வலிமை யிருந்தது கொண்டு மஹிமை பெற்ற ஜாதியார் உலகில் இல்லை. கர்ம மஹிமையாலேதான் ஜாதி மஹிமை உண்டாகிறது. வேறு விதத்தில் உண்டாகுமென்ற வார்த்தையை மேலே ருஜுக் கேட்காமல் திரஸ்காரம் புரிந்து விடலாம். இந்தப் பெரிய ஆங்கிலேயர் நியாயம்,

உண்மை, விடுதலை என்ற ஆதர்சங்களை யதார்த்தமாக நம்புகிறார்கள். அவர்களுடைய இலக்கியத்திலும் இதிஹாஸத்திலும் அவை பல வகைகளில் காட்டப்படுகின்றன. இப்போது நடக்கும் போரில் இந்த ஆதர்சங்களே அவர்களுக்கு பலம் தருகின்றன.

இந்தப் பெரிய ஆங்கிலேயர் ஸ்தம்பித்து நிற்கவில்லை. முன்னேறுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைகள் தமது சரித்திரத்தின் மூலமாக மாறியும் விசாலமெய்தியும் வருகின்றன. அவர்கள் ராஜ்யத்தையும் வ்யாபாரத்தையும் மாத்திரம் கவனிக்கவில்லை. அவர்களுடைய ஜாதீய ஜீவன் இலக்கியம், சாஸ்த்ரம், கலை, ஊர்க்குடித்தனம், மதம் இவை முழு வெள்ளமாகப் பாய்ந்து செல்லுகிறது. அவர்கள் படைப்புவல்லார். ஐரோப்பிய மஹா யாகத்தில் புரோஹிதர். யுத்தத்தின் பாடங்களை அவர்கள் புறக்கணிக்கவில்லை. தமது சித்தத்தை ஆத்ம பலியென்ற ஒளியினால் தூவி அவ்வொளியால் மனுஷ்ய சரித்ரத்தைப் புதுமாதிரி வாசிக்கப் பழகுகிறார்கள். மனுஷ்ய ஜாதியை அவமானப்படுத்தி அதற்கெதிரே பொய்த் தேசாபிமான கர்வத்தை ஒயாமல் நிறுத்துவதனால் பேராபத்து வருமென்பதை அவர்கள் கண்டறிந்தனர். நமது தேசத்துக் கடவுளே ஸகல தேசங்களுக்கும் கடவுள். அவனுக்கு மனுஷ்ய பசுக்களை பலியிட்டால் கோபமுண்டாகுமென்பதை புத்தி பூர்வமாகவோ, தம்மையறியாமலோ கற்றுக் கொள்ளுகிறார்கள். இன்றறியாவிடினும் சிறிது காலத்துள்ளே தெரிந்து

கொள்வர். யாதெனில் காற்று மிகவும் மெலிவாக இருக்குமிடமே சூறாவளிக்கு ஆரம்பம். உலகத்து ஜனங்களிலே மிகவும் பலஹீனப்பட்டோர் எங்குளரோ, அங்குதான் பல தேசத்தார் சண்டை போய் இழையும். கொள்ளையின் ஆசையினால் அவ்விடத்தேதான் மனிதனுடைய பொறுமை வெளிப்படும். மனிதன் அங்கு மேன்மேலும் சக்தி ஹீனனாய், அஜாக்ரதையால் ஆண்மையை நழுவ விட்டுவிடுவான். அங்கு சாத்தான் ஓராஸனம் போட்டுக்கொண்டு கடவுளை நோக்கி சக்தியற்றவனென்று சொல்லி இகழத் துணிவு பெறுவான்! ஆனால் அந்தப் பெரிய இங்கிலிஷ்காரன் மணலிலே கோபுரம் கட்ட முடியாதென்பதையும் மற்றவர்களுடைய பலக் குறைவின் மீது தமது பலத்தை நிறுத்தமுடியாதென்றும் அறிவான்.

சிறிய இங்கிலிஷ்காரன் முன்னே அசைய மாட்டான். அவன் பல நூற்றாண்டுகளாக இந்நாட்டுடன் கட்டுண்டு இது அழுகக்கடவதென்று நிச்சயித்தவன். அவன் வாழ்க்கையிலே ஒரு முகம் கச்சேரி முத்திரை போட்டது. மற்றொரு முகம் இன்ப முத்திரை. முதல் முகம் இந்தியாவை எட்ட நிறுத்துகிறது-அதிகாரக் கோலோ அல்லது வியாபாரக் கோலோ கொண்டு. மற்றொரு முகம் சந்திரனுடைய முதுகுபோலே, நமது கண்ணுக்குப் புலப்படாது. அப்படியிருந்தும் அவன் உத்யோகவருஷங்களை எண்ணிக் காட்டித் தனக்கு அனுபவம் நீளமென்று சொல்லுகிறான். ப்ரிடிஷ் இந்திய சரித்திரத்தின் ஆரம்பத்தில் அவன் கொஞ்சம் உபகார

மான தொழில் செய்தான். பிறகு சும்மா பார்த்துக் கொண்டு ராஜ்யத்திலும் வியாபாரத்திலும் நன்கு ஸ்திரப்பட்ட மேன்மையின் சுகங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறான். மாமூலாகிய செக்கைச் சுற்றி சுற்றி அதிலே மஹத்தான லௌகிக பாண்டித்யமடைந்து விட்டான். தன் கச்சேரி வேலையை ஸாமர்த்யமாகச் செய்வதே உலகத்தில் பெரிய செய்தியென்று நினைத்துக் கொள்ளுகிறான். எப்போதும் தன்னிலும் பலக் குறைவான ஜாதியுடன் பழகுவதால் தானே நிகழ்காலத்துக்கு நாதனென்றும், வருங்காலத்துக்கு பிரமதேவனென்றும் நினைத்துக் கொள்ளுகிறான். இப்போது தான் இங்கேயிருப்பதாகச் சொல்வது மாத்திரமேயன்றி எப்போதும் இங்கே இருக்கப் போவதாகவும் சொல்லுகிறான்.

பெரிய இங்கிலிஷ்காரனுடைய தயாள குணத்தை நம்பி நமது தேசத்தார் இந்தச் சின்ன இங்கிலிஷ்காரனுடைய பலத்தைச் சட்டை பண்ணுமல் இவனை எதிர்த்துப் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். கடவுள் கொடுக்கும் வரத்துக்குள்ள கிரயத்தைக்காட்டிலும் நாம் பூசாரிக்குக் கொடுக்கும் பரிதானத்தின் கிரயம் சிலசமயங்களில் அதிகப் படலாமென்பதையும் மறக்கலாகாது. இந்தப் பூசாரியின் பலத்திற்கும் குணத்துக்கும் ஸமீபத்தில் வெளிப்பட்ட சில திருஷ்டாந்தங்களை ஆராய்ச்சி செய்வோம். ஆனி பெஸாண்ட் மேலே குற்றமிருந்ததாகவே வைத்துக் கொள்வோம். ஆனால் பெரிய இங்கிலிஷ்காரன் அவளை மன்னித்து விட்டான்.

இதைக் கண்டு சின்ன இங்கிலிஷ்காரன் சில பூகம் பங்களை ஸ்ருஷ்டித்தான். அவை போய்ப் பார்லி மென்ட் சபைகளை அசைத்தன. கூஷமை என்ற குற்றத்தைச் சின்ன இங்கிலிஷ்காரன் கூஷமிக்க மாட்டான். சரியற்ற தண்டனைகளுக்கு முகாந்தரங் கேட்கவேண்டுமானால் மறந்துபோவான். தண்டனை ஏற்பட்டால் அதில் ஒட்டுவதற்கு அங்கே ஒரு குற்றம் இருக்கவேண்டும் என்கிறான். இதை ஒப்புக கொள்ளாவிட்டால் அநீதவாதி என்று சொல்லு கிறான். வைஸ்ராய் சட்ட சபையில் பஞ்சாப் உதவி கவர்னர் ஹிந்து தேசத்து ஜனங்களைத் தாறு மாறாக நிந்தனை செய்தபோது, வைஸ்ராய் உதவி கவர்னரை லேசாக மட்டந்தட்டிவிட்டார். சின்ன இங்கிலிஷ்காரனுக்கு அப்போதண்டான ஜ்வரம் இன்னும் தீரவில்லை. மிஸ்டர் மான்டேகு தமது உத் யோகத்தை வஹிக்குமுன்னே இந்தியாவின் அதி காரி வர்க்கத்தைப் பற்றிக் கொஞ்சம் வெளிப்படை யான வார்த்தை சொன்னதாகப் பெரிய தூஷணை யாகிய புயற்காற்றெழுந்து மிஸ்டர் மான்டேகுவின் அதிகாரம், செய்கை, சுவாதீனம் என்னும் ஸ்தூடி களை அடித்துக்கொண்டு போய்விட்டது. லார்டு ரிப்பன் காலத்திலும், லார்டு ஹார்டிஞ்ச் காலத் திலும் இந்தச் சின்ன இங்கிலிஷ்காரனுடைய பலத்தை நாம் பார்த்திருப்பது மாத்திரமேயல்லாமல், நெடுநாளைக்கு முன்பு லார்டு கானிங், லார்டு பென் டிங்க் காலங்களிலேகூடப் பார்த்திருக்கிறோம்.

இது கொண்டே நான் அடிக்கடி என் தேசத் தாரை எச்சரிக்கிறேன்.

"இவ்வளவு துணிபு எங்ஙனம் பெற்றீர்? உங்கள் பலத்தாலா? அன்று. உங்களுக்கு பலமில்லை. உங்கள் வாக்கினாலா? அன்று. அது நீங்கள் நினைக்கிற அளவு பெரிய ஒலியில்லை. உங்களுக்குப் பக்க பலமுண்டா? கிடையாது. உங்கள் சக்தி தர்மமா? ஆம். அதை நம்புங்கள். வேண்டுமென்று நாம் துன்பப்படுவதை யாவராலும் தடுக்கமுடியாது. கற்பாதையின் முடிவில் ஸத்ய, தர்மங்களுக்கு ஆத்ம ஸமர்ப்பணம் செய்து கொள்ளும் மஹிமை உங்களுக்குக் கிடைக்கும். கடைசியாக உங்களுக்கேதேனும் ராஜ்யவரம் கிடைத்தால் அது உங்கள் அந்தக் கரணத்தினின்று கிடைக்கும். உங்களுக்குள்ளேயிருக்கும் ஈசனிடமிருந்து கிடைக்கும்." ஏற்கெனவே இந்தியாவுக்கு ஏதோ சீர்திருத்தம் கொடுக்கவேண்டுமென்ற வார்த்தையில் இந்தியா கவர்ன்மெண்டாரும் உடன்பட்டிருப்பதாக ஸந்தேஹப்பட்டு, ஆங்கிலோ இந்தியன் கோபச் சிரிப்புடன்: "ஹோ ஹோ, இந்த கவர்ன்மெண்ட் ஏன் இப்படி மஹிக்கிறது? இடியிலாகா மழை பெய்யும் தொழிலில் இறங்கத் தக்கதாக என்ன பெரிய விபத்து நேரிட்டது?" என்று விசாரிக்கிறான். எனினும், வெறும் பள்ளிப் பிள்ளைகளைச் சட்டவிரோதமாகிய இருட்டுக் குகைகளில் அடைத்து வைப்பது தகுமோ என்று கேட்டால் இதே ஆங்கிலோ இந்தியன், "நாங்க ளென்ன செய்வோம்? இவ்விடத்து விவகாரங்களின் நிலைமை பயங்கரமாக இருக்கிறது. ப்ரிடிஷ் நீதி இங்கே தோல்வி ஒப்புக் கொள்கிறது; நாங்கள் தர்த்தாரிய உபாயங்களை அனுஸரித்தல் அவசிய

மாகிறது" என்று கத்துகிறான். ஆகவே தான் அடிக்கும்போது காட்டில் பயத்துக்கு ஹேது உண்டென்று ஒப்புக்கொள்வோன் அந்த அடியினால் விழுந்த காயத்தை நீக்க மருந்துத் தைலம் போட வேண்டுமென்றால் காசு செலவாகுமென்பதை உத்தேசித்து, பயத்துக்கு காட்டில் ஹேதுவில்லாமல் இருக்கையில் வீணாக ஏன் சீர்திருத்தம் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறான். அடிக்கிற தொழில் மருந்து போடுகிற தொழிலைக் காட்டிலும் அதிகச் செலவிலே கொண்டுவந்து விடுமென்று நான் சொல்லுகிறேன். உன் பலத்தை உறுதியாக நம்பி நீ ஹிந்து தேசத்தாரின் சரித்திரம் முன்னேற வில்லையென்றும் சுழித்துச் சுழித்துக் கீழே போகிறதென்றும் நினைக்கிறாய். ஒரு நாள் நீ கச்சேரியை விட்டு வெளியேறி வருகையிலே நீ போட்ட கோட்டை அது கடந்து பாய்வது கண்டு, "அதைக் கட்டு, தடு, அணைபோடு" என்று கத்துகிறாய். அப்போது அந்த ஓடை மண்ணுக்குள்ளே ஒளிந்து கொள்ளுகிறது. அதன் மறைவான ஓட்டத்தைத் தடுக்கவேண்டுமென்று நீ செய்கிற வெறி கொண்ட யத்தனங்களிலே எங்கள் தாய்ப் பூமியின் மார்பு முழுதும் கிழிபடுகின்றது.

ஸமீப காலத்தில் நானே சின்ன இங்கிலிஷ் காரனுடைய தூஷணைகளைப் பேச நேர்ந்தது. நூற்றுக்கணக்கான இளைஞரை விசாரணையில்லாமல் சிறைப்படுத்தும் கொடுமையைக் குறித்துச் சில தினங்களின் முன்னே ஒரு சிறு கடிதம் எழுதினேன். உடனே நான் பொய்கள் பரப்புவதாகச்

சொல்லி ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் எனக்கு அமிதவாதி என்ற பட்டம் சூட்டின. அந்தப் பத்திராதிபர்கள் கேவலம் சாமான்ய உடை தரித்த கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தரேயாதலால், அவர்கள் சூட்டும் அடைமொழிகளை க்ஷமிக்கிறேன். எனது கவிதையில் பொருளில்லை யென்றும் என் வசனத்தில் ஸாரமில்லை யென்றும் கருதுகிற என் ஸ்வதேசத்தார்கூட எனது லிகிதங்களைப் படித்திருப்பின், முன்பு ஸ்வதேசீயக் கலகத்தின் கால முதலாக இன்றுவரை நான் அமித வாதத்தைக் கண்டிக்கிறேன் என்பதை அறிவார்கள். நான் எப்போதும் இந்த ஒரு வார்த்தை இடைவிடாமல் சொல்லிக் கொண்டு வருகிறேன். யாதெனில்: பாவம் பண்ணின கூலி கடைசிவரை நற்பலன் தராது. பாவக் கடன் நாளாக நாளாக அதிகச் சுமையாய்விடும். தவிரவும், எழுதுமை கொட்டி வைவோர் இந்தியராயினும் ஆங்கிலேயராயினும் அவர்களுக்கு நான் பயப்படுகிற வழக்கம் கிடையாது. யோக்யதையுமின்றிச் சட்டத்துக்கும் விரோதமாய் பகிரங்கமில்லாமல் ஒரு காரியத்தை சீக்கிரத்திலே ஸாதனை செய்துவிட வேண்டுமென்று ரஹஸ்யக் கோணல் வழிகளிலே நேர் வழியை விட்டுப் புகுதலாகிய அமிதவாதத்தை நான் எப்போதுமே கண்டனம் புரிவேன். இதை நான் முழு நம்பிக்கையுடன் மாறுமல் சொல்லி வருகிறபடியால், அதற்கு ஸமானமான உறுதியுடன் கவர்ன்மெண்டார் இந்த அமிதவாதக் கொள்கையை ஒரு ராஜ்ய தந்திரமாக அனுஸரித்தலும் பெரிய குற்ற

மென்பதை உரைக்கிறேன். ஒரு நோக்கத்தை அடைவதற்கு சட்ட ரஸ்தா குறுக்கு வழியில்லாமல் சுற்று வழியாகப் புலப்படலாம். ஆனல் பெல்ஜியம் தேசத்தின் ஸ்வதந்த்ரங்களின்மேல் இரும்புச் செருப்பு மாட்டி நடப்பதுபோலே நேர் வழியைக் குறுக்கும் அமிதவாதம் எப்போதும் கண்யமன்று.

புராதன சரித்திரத்தில் குறுக்கு வழி ஸஹஜ அனுஷ்டானத்திலிருந்தது. விவகாரங்களைச் சிக்கறுக்க வேண்டுமானல்:—'இன்னனுடைய தலையைக் கொண்டுவா' என்று சொல்லிவிடுவார்கள். ஆனல் சிரமமான முடிச்சை அறுப்பதைக் காட்டிலும் அவிழ்ப்பது நல்லதென்றும் அறுப்பதில் நஷ்டங் களுண்டாகுமென்றும் தான் கண்டுபிடித்திருப்ப தாக ஐரோப்பா தற்புகழ்ச்சி பேசிக்கொள்ளுகிறது. தொல்லையும் கலகமுமாக இருக்கும் காலங்களிலும் நாகரிகமானது செலுத்தவேண்டிய கடமைகள் உள. அவற்றைப் புறக்கணிக்கக் கூடாது. எல்லா விதமான தண்டனையிலும் மிருகத்தனம் இருக்கத் தான் செய்கிறது. அதை நாகரிக ஜனக் கூட்டத் தில் கையாளுமுன்னே, சட்டம் என்ற சல்லடையால் வடிகட்டி எல்லாவிதமான கோபம், பகைமை, பக்ஷ பாதம் இல்லாதபடி செய்தல் மரபு. இல்லாவிட்டால் நியாயாதிபதியின் கோலுக்கும் நிருடன் தடிக்கும் சரியானபடி வேற்றுமை தெரியாமல் போய்விடும். இந்தக் காலம் சிரமமான காலமென்பதை நான் அங்கீகரிக்கிறேன். தேசம் அபிவிருத்தியாவதில் ஏற்படும் தடைகளை நீக்க நமது வாலிபரில் சிலர் அனுஷ்டிக்கும் முறைமை நமக்கு வெட்கந்

தருகிறது. மேற்குத் திசையாரிடமிருந்தே நியாயத் தையும் ஸௌகர்யத்தையும் பிரிக்கும் வழி நாம் கற்றுக்கொண்டோம். ஆதலால் மேற்படி காரியத் தில் அதிக வெட்கப்படுகிறோம். ராஜ்ய தந்திரத்தின் பஹிரங்கப் பொய்களும், ரஹஸ்யப் பொய்களும், பஹிரங்கக் கொள்ளைகளும், ரஹஸ்யக் கொள்ளை களும் பொன்னில் மாற்றுக் கலப்பதுபோலே பொன்னுக்கு பலமென்று மேற்குத் திசையார் கருதுகின்றனர். ஆதலால் தேசபக்தியின் ஸ்வார்த் தம் ஒரு வழி காட்டும்போது, தர்மம் வந்து அதைத் தடுத்துத் தொந்தரவு செய்ய இடங்கொடுத்தல் மடமை யென்றும் பலஹீனத்துக்கு அடையாள மென்றும் நமக்குக் கற்றுக் கொடுத்தனர். மேலும் நியாயத்தை ஸௌகர்யத்தால் மெருகு பண்ணிக் கொள்ள வேண்டுமென்றும் நாகரிகத்தை அநா கரிகத்தால் கொஞ்சம் கெட்டியாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் நமக்கு நம்பிக்கை உண்டா யிற்று. இதனால் நாம் அதர்மத்தை ஸஹிப்பது வழக்கமாய்விட்டது மாத்திரமேயன்றி நம்மையாள் வோரின் அனுசித அம்சங்களைக் கண்டு வணங்கும் படியாகவும் நேர்ந்துவிட்டது. நமது வாத்தியார் களுடைய படிக்கு மேற்படியிலே நின்று:—"அதர் மத்தால் மனிதன் ஏறுகின்றான்; அதனால் நலங்கள் காண்கிறான்; அதனால் எதிரிகளை அழிக்கிறான்; அதனால் பின்பு தானே வேருடன் கெடுகிறான்" என்று முழங்கும் தைரியத்தை இழந்து விட்டோம்.

மேற்குத் திசையின் உபதேசங்களுக்கு முன்னே நம்முடைய ஆதர்சங்கள் இத்தனை பரி

பூர்ணமாகத் தோல்வி யொத்துக்கொண்டது தவ றென்று நான் சொல்லுகிறேன். தேச பக்தியாகிய விளக்கு நம்முள் எரியத் தொடங்கிய காலத்தில் நம் முள்ளே இருக்கும் அதிக உத்தம அம்சங்கள் ஜோதி பெற்றுத் திகழும் என்ற உயர்ந்த ஆசைகள் கொண்டிருந்தோம். பல நூற்றாண்டுகளாக நம் மிடையே சேர்ந்த பிழைக் கூட்டம் இருள் மூலையை விட்டோடிப்போமென்றும், நமது நிராசையின் கற்றரையில் ஆசையூற்றுத் தோன்றுமென்றும், நம் எதிர்காலத்தின் நிராசை வெளியில் நம் ஊக்க விழிப்புக்களால் ஒரு பாதை புலப்படுமென்றும், நம்முடைய ஆண்மையை நசுக்கிப் பழிக்கிடமாக்கிய குரூரமான ஜாதியாசாரங்களினின்றும் பரஸ்பர அன்பினால் விடுபட்டு முடி தூக்கித் தோள் கோத்து நிற்போமென்றும் எதிர்பார்த்தோம்.

ஆனால் விதி நம்மைப் பரிஹாஸம் செய்கிறது. தேசபக்தி விளக்குக் கொளுத்துண்டது. ஆனால் அதில் களவும், கொள்ளையும், ரஹஸ்யக் கொலையு மாகிய இதுவென்ன காட்சி! நாம் புகழ்ந்து பாடின தெய்வம் வந்து முன்னே நின்றால் அதற்குப் பாவத்தை நைவேத்யம் பண்ணலாமோ? ஆரம்பத் தில் ராஜ்யப் பிச்சை கேட்பதே ஸர்வ க்ஷேமத் துக்கும் ஆதாரமென்று நம்பி நம்மை விண்ணப்பம் எழுதும் தொழிலில் ஸமர்த்தர்களாகச் செய்து கொள்வோமென்று நினைக்கும்படி தாண்டிய சக்தி ஹீனமும், சோம்பரும், நம்பிக்கைக் குறையுமே இப்போது கிருத யுகத்தை விரைவுபடுத்த நாடி ராஜ்யக் குற்றம் செய்யும்படி தூண்டுகின்றன

அன்றே? கொள்ளையும் வீரமும் சந்திக்கமாட்டா. ஐரோப்பாவில் அப்படிப்பட்ட சந்திகள் இருப்பதாகத் தோன்றலாம். ஆனால் தெய்வத்தின் சோதனையில் அந்த ரஸ்தா சரியானதென்று இன்னும் அங்கீகாரம் செய்யப்படவில்லை. உடனே கிடைக்கும் லாபமே ஸகல தர்மங்களிலும் பெரிதென்று பூமி முழுதும் உரைத்தாலும் இந்தியா அக் கொள்கையில் சேராதிருக்க வேண்டுமென்று தெய்வத்தை வேண்டுகிறேம். அஃதில்லாமல் நாம் ராஜ்ய விடுதலை பெறக்கூடுமாயின் நன்று. இல்லாவிடில் ராஜீக அஸத்யங்களால் பெரிய விடுதலையின் வழியை அசைக்காமலாவது சும்மா இருப்போம்.

ஆனால் ஒரு ஸங்கதி நாம் மறக்கக்கூடாது. நமது தேசபக்தியின் உதய ஒளியில் கொள்ளையும் கொலையும் கண்டோம். வீரரையும் கண்டோம். ஆத்மபரித்யாகத்தின் தேவ சக்தி இன்று நம் இளைஞரிடத்தே சுடர்விட்டெரிவதுபோல் என்றும் எரியக்கண்டதில்லை. ஆச்சர்யமான பக்தியுடனே உலக சுகங்களையெல்லாம் உதறி யெறிந்துவிட்டு ஸ்வதேசத் தொண்டுபுரிய ஓடிவருகிறார்கள். அந்தத் தொண்டினால் அவர்களுக்குப் பண லாபம் கிடையாது; ஸர்க்கார் தயவு கிடையாது; சில ஸமயம் பந்து மித்திரருடைய விரோதம் உண்டாகிறது. இந்தக் குறுகிய கஷ்டமான பாதை மீதில் யௌவன யாத்ரிகர் குறைவின்றிச் செல்வதையும், வானத்திலிருந்து தேச பக்திக்கு வா என்று சத்தம் கேட்டவுடனே இவர்கள் தக்ஷணமே சரியென்று வந்ததையும் கண்டு என் உள்ளம் பூரிக்கிறது.

தேசத்துக்கும் மனுஷ்ய ஜாதிக்கும் தொண்டுபுரியப் பல துறைகள் விரிந்து கிடக்கும் மற்ற அதிர்ஷ்ட முள்ள தேசங்களில் இந்தமாதிரி அலைகிகமான, கற்பனைசக்தியுடைய, மனவுறுதி கொண்ட, தன்னல மறியாத பிள்ளைகள் தேசத்துக்குப் பெருஞ் செல்வ மென்று கருதப்படுகிறார்கள். பந்தோபஸ்த் வைக் கப்பட்ட ஸீசிந்திரனுடைய கடைசிக் கடிதத்தை வாசித்துப் பார்த்தால் அவன் தன்னை தண்டனை புரிந்த ஆங்கிலேயரின் தேசமாகிய இங்கிலாந்தில் பிறந்திருந்தால் அற்புதமான வாழ்க்கை வாழ்ந்து அதனிலும் அற்புதமாக மடிந்திருப்பானென்பது விளங்கும்.

விஸ்தாரமான ஒரு தேசத்திலுள்ள இளைஞரின் ஆண்மையை முழுதுமே நசுக்கி, அந்த தேசத்தை நான்கெல்லையிலும் பக்கவாத நோய் கண்டது போலே செய்துவிடும் திறமை பண்டைக் காலத் திலும் இக்காலத்திலும் அரசருக்கும் அவர்களுடைய ஸேவகருக்கும் உண்டு. அது மிகவும் சுலபம். ஆனால் அது நாகரிகமில்லை; எனக்குத் தெரிந்தவரை ஆங்கி லேயர்க்குரியதன்று. குற்றமறியாத மஹான்களை ஆயுள் முழுமைக்கும் காலை ஒடித்துப் போடுவதும், ஒரு பெரிய பக்தியின் க்ஷணிகத் தவறுதலால் வீழ்ந்தும் கொஞ்சம் கைகொடுத்ததவிலை மறுபடி எழுந்து நேர் வழிக்கு வரக்கூடியவர்களை ஜன்ம முழுதுக்கும் பயன்படாதபடி செய்வதும் மனித உயிரைக் குரூரமாக அழித்தலாகுமன்றே? இப் படிப்பட்ட இளைஞரையும் பிள்ளைகளையும் ரஹஸ்யப் போலீஸாரின் தயவின் மீதே விட்டுவைக்கும் ராஜ்ய

தந்திரத்தின் புத்தி இருந்தபடி என்னே! இது மேன்மையான தாணிய முனைகளின் மீது இரவு வேளையில் எருமைக் கூட்டத்தை மேய்ப்பதற்கு ஸமானம்; வயலின் உடையான் மார்பைப் புடைத்துக் கொள்ளுகிறான்; எருமைகளை ஓட்டுவோன் கொஞ்சம் கூடக் களை மிச்சமிராதென்று சொல்லி மகிழ்ச்சியடைகிறான்.

இந்த விபத்தை இன்னும் அதிகமாக்கும் செய்தியாதெனிலோ, போலீஸ் கடிபட்ட செடி அப்புறம் நேரே வளராது. அதில் பூவும் கனியும் தோன்றாது. போலீஸ் ஸ்பர்சத்திலே விஷம் இருக்கிறது. எனக்கொரு பையனைத் தெரியும். அவன் புத்தி மிகவும் கூர்மையானது; படிப்பில் மிகுந்த அக்கறையுள்ளவன். அவனுடைய குணமோ மிகவும் பெருந்தன்மையானது. அவனைப் போலீஸார் தொந்தரவுபண்ணிப் பின் விட்டார்கள். இப்போது அவன் தன் இளமையின் வஸந்த காலத்திலே பெர்ஹாம்பூரில் ஒரு பைத்திய வைத்திய சாலையில் இருக்கிறான். அவனுல் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாருக்கு எவ்விதமான தீங்கும் நேரிட்டிராதென்றும், நமது தேசத்துக்கு எவ்வளவோ நன்மை விளைந்திருக்குமென்றும் நான் ஸத்யம் பண்ணுவேன்.

சிறிது காலத்துக்கு முன்பு என் "சாந்தி நிகேதனம்" என்ற பாடசாலையில் படிக்கும் பிள்ளைகள் பரீக்ஷைக்காக வீர பூமி என்ற ஊரிலுள்ள ஜில்லாப் பள்ளிக்கூடத்துக்குப் போனார்கள். அப்போது போலீஸார் வந்து அவர்களுடைய பெயர்களைப் பதிந்து கொண்டனர். அந்த இளைஞரின்

மனம் சோர்வடைந்து போக அவ்வளவு செய்தால் போதாதா? போலீஸ் ரஹஸ்யப் பதிவுகளில் என்ன எழுதி வைத்தார்களோ எவன் கண்டான்? அவர் களுடைய இருட்டு வழிகளின் நோக்கத்தை யாராலே கண்டுபிடிக்க முடியும்? பாம்பு கடித்த பழத்தை யார் தின்பார்கள்? அதுபோல போலீஸ் ஸம்சய மாகிய களங்கத்துக்குட்பட்ட மனிதனுடன் எவனும் பழக விரும்புவதில்லை. விவாகமாகாத பெண்ணை வைத்துக் கொண்டு அவளை எப்படியேனும் கழித்து விடவேண்டுமென்ற நோக்கத்துடன், குரூபியாக இருந்தாலும், பாதகனாலும், கிழவனாலும், நோயாளியானாலும், எதையும் கவனியாமல் பெண்ணை யாரேனும் ஒருவனுக்குத் தள்ளிவிட ஆயத்தமாக இருக்கும்—கிராமங்களிலோ இலக்கிய மாகிய—வங்காளித் தந்தைகூட அவனுக்குப் பெண் கொடுக்க உத்தேசிக்கமாட்டான். ஒரு காலத்தில் போலீஸ் ஸம்சயத்துக்குட்பட்டவன் வியாபாரம் செய்யப்போனால் அது தோற்றுப் போகிறது அவன் நம்மிடத்தில் வந்து பிச்சை கேட்கும்போது நமக்கிரக்கம் உண்டாகிறது. அவனிடமுள்ள பயத்தை மாற்ற முடியவில்லை. அவன் ஏதேனும் கல்ல காரியத்திலே சேர்ந்தால், அந்தக் காரியம் அபாயம்.

இந்தப் பயங்கர இலாகாவின் அதிகாரிகள் கேவலம் சதையும் ரக்தமுமுடைய மனிதர். கோப தாபாதிகளையும் அஸூயையும் வென்ற முனிவ ரல்லர். நாம் மன அதிர்ச்சியிலும் பயத்திலும் நிழலை உண்மையென்று நினைப்பதுபோலே அவர்களும்

நினைக்கிறார்கள். எல்லாரையும் ஸம்சயிப்பதே அவர்களுடைய தொழிலாகையால், அவநம்பிக்கை அவர்களுடைய குணத்தில் ஊறிப்போய் விடுகின்றது. சொற்ப ஸந்தேஹத்தை வைத்துக்கொண்டு வேலை செய்தல் அவர்களுக்கு இன்பமான வழியாகிறது. மேலே இருந்து அவர்களைத் தட்டி விடுவாரில்லை அக்கம்பக்கத்தார் பதறி வாய்பேசாதிருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னே நிற்கும் சின்ன இங்கிலிஷ்காரன் கவனியாமல் இருக்கிறான்; அல்லது அவர்களைத் தூண்டி விடுகிறான். இயற்கையன்பில்லாமையுடன், கோபமும் பயமும் வந்து சேர, வரம்பற்ற அதிகாரமும் அதில்கூட, இவற்றுடன் ரஹஸ்ய வழிகளையும், மூச்சைப் பிடிக்கும் சட்டங்களையும் கலந்தால் அந்த இடத்தில் சரியான நியாயமும் தர்மமும் கிடைக்குமென்று அந்தச் சின்ன இங்கிலிஷ்காரன் தான் எப்படி நம்பமுடியும்? அவன் அங்ஙனம் நம்பவில்லை யென்பது எனக்கு நிச்சயம். கலகத்தை அடக்க இது சுலபமான வழியென்று நம்பியே இது வெல்லாம் செய்கிறான். ஜெர்மனியிலும் இங்ஙனமே சின்ன ஜெர்மன் பெரிய ஜெர்மனைக் கீழே தள்ளி மேலே நிற்கிறதைகையால் உடன்படிக்கைகளைத் திரஸ்காரம் பண்ணுதலே யுத்தம் ஜயிக்க சுலபமான வழியென்று கணிக்கலானார்கள். "தலையைக கொண்டுவா" என்று சொல்லும் ராஜ்ய தந்திரம் சிறிதுகாலம் உதவும். எக்காலத்துக்கும் உதவாது. எக்காலத்துக்கும் உபயோகப்படக்கூடிய உபாயம் யாதெனில் பெரிய இங்கிலிஷ்காரரால் அடிக்கடி போராடிக் காக்கப்படும் உபாயம். அந்த உபாயத்

துக்கு மாறான எதிர்த் தந்திரத்தை இன்று ஹோ மனியார் கையாளுவதில் மிகவும் வெறுப்பெய்தின படியாலேதான் அனேக யௌவனமுள்ள பெரிய இங்கிலிஷ்காரர் யுத்த களத்தில் ஆயிரக்கணக்காக உயிர்ப்பலி கொடுக்க விரைந்து செல்லுகின்றனர்.

எனது சாந்திநிகேதனப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் மனுஷ்ய ஜாதியின் சரித்திரத்தை விசாலமாகவும், ஜாதி விரோதமில்லாமலும் பொதுப் படையாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றே நான் மிகவும் ஊக்கத்துடன் பாடுபட்டு வருகிறேன். இந்த நோக்கத்தை மனதில் கொண்டு, யோக்யரான ஆங்கிலேயர் இந்தக் காரியத்தில் ஆத்ம ஸமர்ப்பணம் செய்ய முற்பட்டபோது, நான் அவர்களை யோசனையில்லாமல் ஏற்றுக் கொண்டேன். ஆனால் அந்தப் பாடசாலை நடத்தும் எங்கள் நிலைமை ஸ்வராஜ்யத்துக்கு மாறுபட்டு நிற்கிறது. எங்கள் தற்கால நம்பிக்கையும் எதிர்கால நம்பிக்கைகளும் மிகவும் குறுகி நிற்கின்றன. எங்களுக்குத் தகுந்த தூண்டுதலும், ஸௌகர்யமும் இல்லாதபடியால், எங்களுக்குள்ளே உறங்கும் சக்திகளை நேரே எழுப்பிவிட வழியில்லை. எங்களுடைய தொழிற் களம் வரம்பு பட்டது. எல்லா அதிகாரமும் கவுரவமும் நாட்டிலே கொண்டு நிற்கும் அதிகாரிகள் அதில் அன்பில்லாதவராக இருக்கிறார்கள். ஆதலால் எங்கள் தொழிற் பயன்கள் குறுகி உலகத்துச் சந்தைகளில் அதிக விலைமதிப்பில்லாது போகின்றன. எங்களை அதிகப் பள்ளத்தில் அழுத்த மறுபடி அதனையே ஒரு காரணமாகவும் கொண்டு

வருகிறார்கள். இதனால் எங்களுடைய ஜீவன் சோர்ந்து போகிறது. எனவே பெரியோரால் புகழப் படுவதாகிய பெரிய விடுதலை—அதாவது, மனிதன் தனது இழி குணங்களினின்றும் விடுபடுதல்—இந் நாட்டில் யாராலும் மதிக்கப்படவில்லை. இருந்தாலும் சாந்திநிகேதனப் பள்ளிக்கூடத்தில் நாங்கள் படும் பாடெல்லாம் முழுதும் வீணாகவில்லை யென உறுதி கூறுகின்றேன். ஏனென்றால், நமது வழியிலுள்ள தடைகள் எத்தனை பெரியன ஆயினும், நமது நாட் டாரின் கண்முன்னே பரமஸத்யத்தைக் காட்டினால் அதை அவர்கள் முழுதும் புறக்கணிக்க மனங் கொள்ளார். நமது பாடசாலைப் பிள்ளைகளில் மிகவும் புதியவர்கூட அந்நாளன் செய்யார். இந்த அம்சமொன்று நமது குணத்தில் இருப்பதைப் பஞ்சாப் லெப்டினன்ட் கவர்னரும் நானும் ஒருங்கே அங்கீகாரம் செய்துகொள்ளுகிறோம்.

ஆனால் சில ஸமயங்களில் மிகவும் பயங்கரமான சிரமம் உண்டாகிறது. வங்காளிப் பிள்ளைகளில் மஹா ஸாதுவான பிள்ளைகள்கூட உயர்ந்த போதனைகளை எதிர்த்து நடக்கும்படியாகச் செய்திகள் தோன்றுகின்றன. ஒரு பக்கத்தில் கீழ்மைக் குணம் ஏற்பட்டால் இது எதிர்ப்புறத்திலும் கீழ் மைக் குணத்தைத் தூண்டுமன்றோ? எங்கள் சாந்தி நிகேதனப் பள்ளிக்கூடத்தில் இரண்டு சிறுவர் இருந்து. அவர்களுடைய தாய் தந்தையர் கொஞ்சம் பணக்காரர். சம்பளம் சரியாகச் செலுத்திக்கொண்டு வந்தனர். சிறிது காலத்துக்கு முன்பு ஒரேயடியாக அந்தக் குடும்பத்தில் மூன்று பேரைப் பிடித்துப்

போலீஸார் பந்தோபஸ்த் பண்ணிவிட்டார்கள். பிள்ளைகளுக்கு மேலே வாசிப்புச் செலவுக்குப் பணமில்லை. பள்ளிக்கூட நிதியிலிருந்து பணம் கொடுத்து அவர்களைக் காப்பாற்றுகிறோம். அச் சிறுவர் தம் நிலையின் இகழ்ச்சியை உணர்கின்றனர். வீட்டாருடைய கவ்டங்களை நினைத்தும் வருந்துகிறார்கள். தந்தைக்கு பந்தோபஸ்திலிருக்கும்போதே முறைக் காய்ச்சல் வந்துவிட்டது. அவனைச் சற்றேனும் சௌகர்யமான இடத்தில் அடைத்து வைக்கும்படி தாய் பகீரதப் பிரயத்தனம் செய்தும் பயனில்லை. இவையெல்லாம் கூடி அந்தக் குழந்தைகளின் மனதைத் தொல்லைப்படுத்துகின்றன. இதைப்பற்றி அவர்கள் வாய் திறந்து ஒன்றும் சொல்லாது நடையாது. நாங்கள் அவர்களிடம் இந்த விஷயத்தைக் குறித்துப் பேசுவதில்லை. எனினும் அவர்கள் முன்னே நியாயம், நீதி, ஸர்வ ஜன அன்பு முதலிய விஷயங்களைப் பேசும்போது ஏதோ என் தொண்டைக்குள்ளே வந்து அடைக்கிறது. இந்த வேதாந்தப் புரட்டுகளைப் புறக்கணிப்போராகிய பஞ்சாப் உதவி கவர்னர் போன்றவர்களின் முகங்கள் என் விழிக்கெதிரே வந்து கேலிக கோபம் பூண்டு நிற்கின்றன. இங்ஙனம் இந்தப் போராட்டத்தில் இருதிறத்தாரின் கீழ்க் குணங்களின் தீப் பொறிகள் பறக்கின்றன. வங்காள முழுதிலும் கவ்டத்தை உள்ளே அமுக்குகிறார்கள். உள்ளே போய் ஒழுக்கத்தை மாற்றும் சாசுவதப் பொருளாக அது பரிணமிக்கிறது. முழு முழுக்குடும்பங்களின் ஹ்ருதயத்தில் உத்யோகமாகிய மேக மண்டலத்தி

லிருந்து போடும் வெடிகுண்டுகள் குழந்தைகளையும், ஸ்த்ரீகளையும் அழிக்கின்றன. அடடா! இந்த யுத்தத்தில் குழந்தைகளையும் பெண்களையுமாவது போர் செய்யத் தகாதோர் என்று கருதி அதிகாரிகள் சும்மா விடலாகாதா?

இந்த விஷமமான ஸங்கடத்துக்கு மூலம் யாதென்று கேட்பீராஞல் உடனே சொல்லுகிறேன்: ஸ்வராஜ்யம் நமக்கில்லாமையே மூலம். அவ்வளவு தூரம் நாம் ஆங்கிலேயருக்கு அன்னியர். ஒரு ஆங்கிலேய வித்வான் தனது யாத்திரைகளைப் பற்றி எழுதுகையிலே இந்தியா தேசத்தாரைக காட்டிலும் சீன ஜப்பானியர்கூட ஆங்கிலேயருக்குச் சற்றே ஸமீபப்போல் தோன்றுவதாகச் சொல்லுகிறான். நமது வேதாந்தம் கடுவே நிற்கிறதாம்! அந்த வியாதி தனக்கு வரவே வராதென்று ப்ரிடிஷ்காரன் சொல்லுகிறான். மனுஷ்யனுக்கு மனுஷ்யன் இதைக் காட்டிலும் அதிக வேற்றுமை கொள்ளுதல் அரிதன்றே? மேலும், அவர்களுக்கு நம்முடைய பாஷை தெரியாது. அவர்கள் நம்முடன் ஸாதாரண காலங்களில் பழகுவதும் கிடையாது. இருதிறத்தாருக்குமிடையே இத்தனை பெரிய தூரம் இருக்கையிலே, அதனைக் கடக்கும் புத்தியோ மிகவும் சொற்பம். ஆதலால் ஜாக்ரதையும் ஐயமுமே ஏக நீதியாக இயல்பெறுகின்றன கவுரவ ஒற்றத் தொழில் செய்வதனால் விரைவிலே பதவி உயரலாமென்று நினைக்கிற ஸ்வகார்ய துரந்தரரான கபடிகளாலே பரப்பப்படும் விஷம் ஆட்சி முழுதையும் புகுந்து கெடுக்கிறது. பிறர் தயவைக் காட்டிலும்

தன் மதிப்பே மேலென்றும், தங்கள் நலத்திலும் தேச நலம் உயர்வென்றும் கருதுவோர் ஸர்க்கார் சம்பந்தங்களினின்றும், போலீஸ் இடங் கொடுக்கு மளவு, இயன்றவரை, எட்டி நடக்கிறார்கள்.

போலீஸ் சேர்க்கையினாலே களங்கமுற்ற தாய்க் கால் விரல் மீது நின்றும், நிழல்களை ஐயத்துடன் நோக்கியும், மறைவில் பதுங்கியும் நடத்தல் ஸம்ப்ர தாயமான வட்டத்தில் பழகும் அதிகாரியின் வழக்க மான சந்தேகம் கடைசியில் கொடுஞ் செய்கை யாகப் பரிணமிக்காதவண்ணம் தடுக்கத் தகுந்த கருவி எதனையும் காணேம்.

அவனுக்கு நாம் கேவலம் "ஆளப்படுவோர்!" எனவே நமது வீடுகளில் தாய் அழு, ஸஹோதரன் நடுங்க. மனைவி கற்கொலை செய்து கொள்ள, குழந்தைகளுக்குப் போஷணையும் கல்வியும் இல்லா மல் போக, நாம் பல வருஷங்கள் தேசாபிமானத் துடன் பாடுபட்டு வளர்த்த முயற்சிகள் ரஹஸ்யப் போலீஸாரின் செய்கையால் புழுதியாக நொறுங்கிப் போக – இங்ஙனம் நாம் கஷ்டப்படுவதனால் அந்த அதிகாரிக்கு போஜனத்தில் ருசி குறையவுமில்லை; அவன் தூக்கத்துக்கும் ஹானி கிடையாது. சீட்டாட்டத்தில் அவனுக்குள்ள ஆவல் மாறுபடவு மில்லை. நான் இதைக் கோபத்துடன் சொல்ல வில்லை. இப்போதுள்ள நிலைமைகளை உத்தேசிக்க இதுவெல்லாம் ஸஹஜந்தான். அதிகாரி வர்க்கம் மெய்யான உலகத்துடன் விவகாரங்கள் நடத்துவது வழக்கமில்லை. தன் கற்பனை விதிகளால் ஏற்படுத்தப் பட்ட கற்பனையுலகத்துடனேதான் விவரிக்கிறார்கள்.

விடுதலையுள்ள தேசங்களில் அதிகாரிக் கூட்டம் இட முழுதையும் கவரும்படி விடுவதில்லை. இடைவே துவாரங்கள் உள. அவற்றின் வழியே ஜனங்கள் அறிவிருத்தி பெற முடியும். சார்பு நாட்டில் அப்படிப் பட்ட துவாரங்கள் இல்லாதபடி அக்கூட்டத்தார் செய்து விடுகிறார்கள்.

நாம் வெளி வானத்தில் இடம்பெற நாடி முயற்சி செய்தால், வெ வர்க்கத்தின் கிளைகளில் சூரிவளியடித்ததுபோல இலைகளின் நுனி வரை சலசலப்புண்டாகிறது. அதனால் நமக்கும் அசாந்தி யுண்டாய் வெ கிளைகளின் புடைப்பில் உடைந்து போவதைக் காட்டிலும் காற்றடிக்கும் வழியைத் தேடாதிருத்தலே நல்லதென்று கருதுகிறோம். எனினும், இங்கே எனது முதல் வார்த்தையும் கடைசி வார்த்தையும் ஆகிய முக்யமான விஷயத் தைச் சொல்லி விடுகிறேன். இயற்கையற்றதைத் தப்பாக்கி மனிஷியிடமே மைநிலையில் நிறுத்திவைக் கும்படி அத்தனை பலமுடைய ஜாதி உலகத்தில் எதுவுமில்லை. கணம் அறிப்படுகிறது. தசைகள் கழலுகின்றன. தூக்கி நிறுத்தப்பட்ட அஸம்பா விதங்களை யெல்லாம் பெரிய பூமியின் ஆகர்ஷண சக்தி தரைக்குக் கொண்டு வருகிறது. அரசாட்சி யின் இயல்பு யாதாயினும் ஆளப்படும் ஜனங்களுக்கு அது உத்தரவாதியாக இருக்கவேண்டும். அப்போது அவர்கள் அதைத் தமதாகக் கருதி உண்மை செலுத்துவார்கள். தமக்கு ஸம்பந்தமில்லாத, பொறுப்பற்ற, புறத்து ஸர்க்காரிடம் ஜனங்களுக் குள்ள உதாஸீனம் அஸூயையாகத் தாமும் அதை

வலிமையினால் அடக்க விரும்புவோர் விரோதமாக மாற்றுகிறார்கள். இங்ஙனம் விவகாரம் மிகவும் சிக்கலாகிறது.

காலசக்தியின் தூதாக ப்ரிடிஷ் ஜாதி இந்தியாவுக்கு வந்தது. ஒவ்வொரு காலத்திலும் மனுஷ்ய ஜாதி கற்றுக்கொள்ளும் பெரிய உண்மைகளாகிய செல்வம் உலகத்து நாடுகள் அனைத்திலும் யாதேனுமொரு ரூபத்தில் பரவுதல இன்றியமையாதது. இந்தச் செல்வத்தைச் சுமப்போர் பரப்புவதிலே லோபம் காட்டுதல் நம்பிக்கைத் துரோகமாகும். அப்போது அவர்கள் தெய்வ சித்தைக்கு விரோதம் செய்து துக்கத்தைப் பரப்புகிறார்கள். எனினும் அவர்கள் ஒளியை ஒரு மரக்காலுக்குள்ளே மூடி வைத்தல் ஸாத்யப்படாது. அவர்கள் கொடுக்கும்படி ஆக்கினை பெற்றதைக் கொடுத்தே தீரவேண்டும். ஞானத்தின் கர்த்தா காலம். அவர்கள் கேவலம் காலத்தின் கருவிகள். அவர்கள் தமது சரித்திரத்தின் ஒரு பகுதிக்கு ஒளிப்பககத்தையும், மற்றொரு பகுதிக்கு இருட் பககத்தையும் திருப்புகையிலே அஸம்பாவிதம் ஜனிக்கிறது. ஆனால் அவர்கள் தமது குணத்தில் ஓரம்சம் மற்றோரம்சத்தை வஞ்சிக்க விடுதல் எக்காலத்தும் இயலாது. பெரிய இங்கிலீஷ்காரனைச் சுற்றிச் சின்ன இங்கிலீஷ்காரன் சுயநலக் கோட்டை கட்டிக் கொண்டே போவானையின் ஆபத்தும் துயரமுமே விளையும். சரித்திரமானது தான் சீட்டாடும்போது கைச் சீட்டுக்களைக் காட்டுவது வழக்கமில்லை. பல ஸமயங்களில் மனிதருடைய முன் யோசனைகளையெல்லாம் கவிழ்த்து முடிவு திடீரென்று வந்துவிடும்.

எப்படியும், அஸம்பாவிதத்துக்கு நெடுங் காலம் ஒருவன் இடங்கொடுத்துத் தனது விதிகளே ஜகத்தின் விதியென்று பாவனை செய்தால், அப்போது திடீரென்று சரித்திரமானது ஒரு சிறிய தடையில் இடறித் தலைகீழாகக் கவிழ்ந்துவிடுமென்பதை ஒரு பொது உண்மையாகக் கூறலாம். பல நூற்றாண்டுகளாகக் கிழக்கும் மேற்கும் கூடியிருந்தும் தம்முள் மனுஷ்ய ஸம்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. மேற்கானது கிழகைை ஆள ஸம்மதப்படுகிறது. பந்துவாக்க ஸம்மதமில்லை. கிழக்கின் காப்புச் சுவர்கள் இடிந்து, அதன் தானியக் களஞ்சியங்களுக்கு நடு மத்தியில் மேற்கு வந்து புகுந்திருக்கிறது. ஆனால் பல்லவி மாத்திரம் தவறாமல் பாடுகிறார்கள். "Never the twain shall meet"—"அவ்விரண்டும் தீண்டமாட்டா" என்று.

இப்படிப்பட்ட அஸம்பாவிதத்தின் சேத்த பாரம் நெடுகாள் ஸ்திரமான ஸம நிலையில் இருக்குமா? இதற்கு நேரிப்படி ஒரு தீர்ப்புச் செய்யாவிடின் சரித்திரத்தின் சோக நாடகத்தில் பயங்கரமான ஐந்தாம் அங்கத்தின் மூடிவிலே திரை விழும். ஹிந்து தேசத்துப் புராதன சரித்திரமாகிய நாடகம் இப்படியே சோகமாக முடிந்தது. மனிதர்கள் ஒன்று சேர்ந்து யோசனை பண்ணித் தாம் என்றைக்கும் பிரிவுபட்டு நிற்க வழிகள் தேடியதை நமது நாட்டிலும் கண்டோம். நமக்கு மிகவும் இனிமையாகத் தோன்றிய ஸ்வதந்த்ரங்களைப் பிறர் அனுபவியாமல் தடுக்க நாமும் முயன்றோம். ஸர்வ ஸாதாரணமாக வழங்கத் தக்க உரிமை

களுக்குச் சிறப்புரிமைகள் என்று பெயர் சூட்டி மானுஷிகத்தை அவமானப்படுத்தினேம். ஆனால் எத்தனையோ பலமான சாஸ்த்ர மூட்டைகளை வைத்துக் காத்தும் இந்த அஸம்பாவிதத்தை நம்மால் ஸ்திரமாகக் காப்பாற்ற முடியவில்லை. நமக்கு பலமென்று கருதிய முறைமை நமக்கு தூர்ப் பலமாக மூண்டது. நம்மை நாமே புண்படுத்திக் கொண்டு பல நூற்றாண்டுகளாக மடிகிறோம்.

தற்காலத்துப் புறத் தோற்றம் யாதாயினும் கடைசி வரை கிழக்கும் மேற்கும் சந்திக்குமென்றே நான் நம்புகிறேன். ஆனால் இது நிறைவேறுமாறு நாம் செய்யப் பல கடமைகளும் உள. நாம் சிறிய ராய் அஞ்சிக் கிடந்தால், இங்கிலீஷ்காரன் சிறிய வனாய் நம் முன்னே பயத்தை உலாவவிடுவான். சின்ன ஆங்கிலேயனுடைய அதிகார முழுதும் நம் இயல்பிலுள்ள சிறுமையை ஆதாரமாகக் கொண்டு நிற்கிறது. ஆனால் பூமியில் இனி வரப்போகிற எதிர் காலத்தில் நிராயுதபாணிகள் ஆயுதபாணிகளை எதிர்த்து நிற்பர். அடிக்கத் தெரிந்தவனுக்கு வெற்றியில்லை. சரியானபடி சாகத் தெரிந்த வனுக்கு வெற்றியுண்டாம். துன்பம் விளைப்பவன் அழிவான். துன்பப்படுவோன் மஹிமையடைவான். ஆத்மாவுக்கும் மாம்ஸத்துக்கும்—ஆத்மாவுக்கும் யந் திரத்துக்கும்—நடக்கும் சண்டையின் முடிவில், மனுஷ்யன் தான் மிருகமில்லை யென்றும், "இயற் கையின் பொறுக்குதல்" (Natural Selection) என்ற ஜந்து சாஸ்த்ர விதியைத் தான் கடந்தவனென்றும் ருஜுப்படுத்துவான். ருஜுப்படுத்தும் கடமை நம்மைச் சேர்ந்தது.

கிழக்கும் மேற்கும் சந்தித்தால், பெரிய ஆதர் சத்தில் ஸந்திக்கும். யஜமான ஸேவக ஸம்பந்தத் திலும் பெரிய பீரங்கிகள் வைத்த சண்டைக கப்ப லின் ஸம்பந்தத்திலும் ஸந்திக்கமாட்டா.

மரணத்தைத் தோழமை செய்து கொண்டால், யமன் நமக்குத் துணை செய்ய வருவான். நமக்கு நாமே வலிமை தேடிக்கொள்ள வேண்டும். அன்றி, வலிமை யுடையதற்கும் வலிமையற்றதற்குமுள்ள தோழமை உண்மையாகாது. ஒரு பக்கம் மேலான ஐக்கியம் சரியான ஐக்கியமன்று. அது பிரிவு களிலே பெரிய பிரிவு.

நம்மைச் செங்கல், சுண்ணாம்பாக வைத்துக் கட்டும் ஸாம்ராஜ்யம் நமதன்று. நாமும் சேர்ந்து கட்டும் ஸாம்ராஜ்யமே நமதெனலாம். அந்த மாதிரி ஸாம்ராஜ்யத்திலேதான் நாம் ப்ராண லாபம் பெற லாம் அதற்காக நாம் ப்ராணனைக் கொடுக்கவும் செய்வோம். பலவான்களுடன் நம்மைத் தோழமைப் படுத்தும் சக்தி நமக்கு யாசகத்திலும், இரவலிலும் கிடைக்காது. நம் உள்ளே நிற்கும் தர்ம சக்தியே அதனை நிறைவேற்றுவதாகுக. அந்த சகதி அநந்த மான துக்கத்தையும் சிரமத்தையும் பொறுப்பது. தன்னைப் பலியிட்டுத் தான் துயரப்படும் சக்தியை விலங்குகளாலே கட்டி வைக்கும் சக்தி உலகத்தில் எதுவுமில்லை. அது தோல்வியில் வெல்லும். மரணத் தில் அமரத்தன்மை பெறும்.

பிற் குறிப்பு

மேற்படி உபந்யாஸத்தை நான் வாசித்த பிறகு லார்டு ரோனல்ட்ஷே (வங்காளத்து கவர்னர்) தமது

சபையில் செய்த ப்ரஸங்கமொன்றில் நான் இங்கிலாந்தில் ஒரு நண்பருக்கெழுதிய கடிதத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார். அக்கடிதத்திலேனும், இந்த உபந்யாஸத்திலேனும் இந்தியா பாதுகாப்புச் சட்டத்தின் கீழே தண்டனைப்பட்டவர்களுடைய குற்றம் குற்றமின்மையைப்பற்றி எவ்விதமான அபிப்பிராயமும் சொல்லவேண்டுமென்பது என்னுடைய நோக்கமன்று. நான் சொல்ல விரும்புவது யாதெனில்: ரஹஸ்யமாகக் குற்றஞ் சார்த்தி ரஹஸ்யமாக தண்டனை புரிதலாகிய இதுவரை அனுஷ்டானத்தில் நடந்துவரும் உபாயமானது தண்டனைப்பட்டவர்களில் பலர் குற்றமில்லாதவரென்று நினைக்கும்படி என் தேசத்தாரில் பலரைத் தூண்டுகிறது. சிறைச்சாலைகளில், தனியறைகளில் அடைத்து வைக்கும் வழி மூன் ஜாக்ரதையென்று பொதுஜனங்களின் மனதில் படவில்லை. பழிவாங்குவதுபோல் தோன்றுகிறது. மேலும் பந்தோபஸ்திலிருந்தவன் விடுதலையடைந்த பிறகும் அவனை ஓயாமல் போலீஸார் பின் தொடரும் கொடுமையைக் கொடுமையென்று அதிகாரிகள் ஒப்புக்கொள்ளாவிடினும், கஷ்டப்படுவோருக்கு அது கொடுமையென்று மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. இந்த வழியின் இயற்கைப் பயன் யாதெனில் இது எங்கும் பரவினதன் காரணமாகக் குற்றமில்லாத பலர் கூடத் தமது நலத்தையும் பொது நலத்தையும் கருதிச் செய்யும் தொழில்கள் தடைப்பட்டுப் போகின்றன. இந்த அஸம்பாவித நிலைமையில் புதிதாக ஒருவனைக் கண்டால் அவனுடன் காரா

மாகப் பழக இடமில்லை. மேலும் அதிதி ஸத்காரத்திலும், தான தர்மங்களிலும், ஸர்வ வ்யாபியான ஐயம் வந்து புகுந்து கொண்டது. இது பெரிய விபத்தன்றோ?

ஜப்பானுடைய ஆவி

பழைய வழக்கங்களாகிய சுவர்களை ஒரே யிரவில் இடித்துத் தள்ளி, ஜப்பான் வெற்றிக் கோலம் பூண்டு நிற்பதை ஒருநாட் காலையில் எழுந்த வுடன் உலக முழுதும் பார்த்து வியப்பெய்திற்று. இம்மாறுதல் நம்பமுடியாதபடி அத்தனை விரைவில் நடந்தது; உடுப்பு மாற்றுவதுபோல் இருந்தே யன்றி, ஒரு புதிய கட்டிடத்தை மெதுவாக எழுப்பு வதுபோலில்லை. முதிர்ச்சியால் விளையும் கன்னம் பிக்கையின் பலத்தையும், புதிய உயிருக்கியல்பாகிய புதுமையையும், எல்லையற்ற ஸாத்யத் தன்மைகளை யும் ஜப்பான் ஏககாலத்திலே காண்பித்தாள். அப் போது சிலர்:—"இது சரித்திரத்திலே ஒரு விநோ தம்; காலதேவதையின் குழந்தை விளையாட்டு; சவர்க்காரத்தில் உண்டாகும் குமிழியைப்போலே, கோளத்திலும் வர்ணத்திலும் குறைவில்லை; ஆனல் உள்ளே ஒட்டை, ஸத்தில்லாதது" என்றெண்ணிப் பயந்தார்கள். ஆனல் ஜப்பானை, தன் எதிர்பாராத சக்திப் பிரகாசம் சிலநாள் விந்தையன்று, காலத் தில் யதிர்ச்சையாக விளைந்த விளைவன்று; ஆழ்ந்த இருளினின்றும் வீசுண்டு மறுக்ஷணம் சூன்யக் கடலில் மோதப்படும் ஓர் பொய்ப் பொருளன்று; என்பதை முடிவாக நிரூபணம் செய்துவிட்டாள்.

உண்மை யாதெனில், ஜப்பான் ஏககாலத்தில் புதியவளும், பழையவளுமாகினள். அவளுக்குக்

கிழக்கு (ஆசியாக் கண்டத்துப்) பயிற்சி முன்னோரிட மிருந்து கிடைத்தது; அப்பயிற்சி எப்படிப்பட்டது? மெய்யான செல்வமும் வலிமையும் வேண்டினால், நோக்கத்தைத் தன்னுள்ளே செலுத்த வேண்டு மென்று கற்பித்த பயிற்சி; ஆபத்து வரும் போது புலனிழந்து போகாமல் காக்கும் பயிற்சி; மரணத்தை இகழவேண்டுமென்ற பயிற்சி; உடன் வாழும் மனிதருக்கு நாம் எண்ணற்ற கடமைகள் செலுத்த வேண்டுமென்ற பயிற்சி; பின்ன வஸ்துக் களில் அகண்ட வஸ்துவைப் பாரென்று காட்டிய பயிற்சி; மேலும் இவ்வுலகம் உயிருடையதென்றும், இதனுள்ளே ஒரு ஆத்மா கதறும்புகிறதென்றும், இது வெறுமே யதிர்ச்சை யென்னும் பெரிய பேயினாலோ, அல்லது காரணமாத்ரமாக எங்கோ தொலையெட்டிய வானமொன்றில் மறைந்து கிடக் கும் தேவனாலோ செய்துவிடப்பட்ட யந்திரமில்லை யென்றும் விளக்கிய பயிற்சி! அநாதியாகிய கிழக்கு திசையில் ஜப்பான் மலர்ந்தாள்; தாமரைப் பூவொன்று தான் பிறந்த ஆழத்தில் பலமான பிடிப்பு வைத்துக்கொண்டு எளிய விலாஸத்துடன் மலர்வதுபோலே மலர்ந்தாள்.

பழைய கிழக்கின் (ஆசியாக் கண்டத்தின்) குழந்தையாகிய ஜப்பான் அச்சமின்றிப் புதிய காலத்தில் பேறுகளை யெல்லாம் தனக்கு வேண்டு மென்று கேட்டாள். சோம்பேறிகளின் மனதில் திரளும் குப்பைகளும், பூட்டுத் திறவுகோல்களினால் அபாயத்தை விலக்க நினைப்பனவும் ஆகிய வழக்கச் சிறைகளை உடைத்து வெளியேறித் தனது தைரியத்

தைக் காண்பித்தாள். இங்ஙனம் அவள் உயிருடைய காலத்துடன் ஸ்பர்சமடைந்தாள். ஆச்சர்யத்துக் கிடமான ஆவலும் தகுதியுமுடையவளாய் நவீன நாகரிகத்தின் பொறுப்புகளை மேற்கொண்டாள்.

இதிலிருந்து ஆசியாவின் மற்றப் பகுதிகளெல் லாம்:—"நமக்குள் உயிரும் பலமும் உள, மேல் தோடுதான் செத்தது. அதை நீகஇ விடுவோம்" என்றெண்ணி தைரியத்தை அடைந்தன. இளமை தருகின்ற கால வெள்ளத்தின் ஓட்டத்தில் நாம் நிர்வாணமாக முழுகி எழவேண்டும். செத்ததை அடைக்கலம் புகுதல் சாதலேயாம். உயிரில் என்ன அபாயம் நேரினும் அஞ்சாது மேற்கொள்வதே உயிர்த்தல். இஃதெல்லாம் ஜப்பான் கற்றுக் கொடுத்த பாடம்.

மேலும் நமக்கு ஜப்பான் படிப்பித்ததென்ன வென்றால், நாசமாகாமல் பிழைக்கவேண்டுமானால் கால சக்திக்குக்—காலமாகிய காவற்காரனுக்கு— சரியான உத்தரம் சொல்லவேண்டும். நமது காலத் தின் ஸங்கேத மொழியை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

ஜப்பான் ஆசியாக் கண்ட முழுதும் தனது சொல்லை விடுத்தாள்; எப்படி யென்றால், நமது பழைய விதைக்குள் உயிர் இருக்கிறது; அந்த விதையை நவீன காலமாகிய புதிய தரையில் நட வேண்டியதைத் தவிர வேறொன்றும் வேலையில்லை.

ஜப்பான் மேற்கு தேசத்தாரைப் போலே வெறும் புறநடிப்பு—அபிநயம் காட்டி இந்தப் பதவி

யடைந்துவிட்டதாகச் சிலர் சொல்வதை நான் ஒரு போதும் நம்பமாட்டேன். உயிரை அபிநயிக்க முடியாது. வலிமையை நெடுநாள் பொய் நடிப்புக் காட்ட இயலாது. வெறும் அபிநயம் பலஹீனத்துக்கு மூலாதாரம். நம்முடைய எலும்புக் கூட்டை மற்றொருவனுடைய தோலினால் போர்த்துக் கொள்வதுபோலாம். அதனால் ஒவ்வொரு நிமிஷமும் தோலுக்கும் எலும்புக்கும் தீராத சண்டையாகவே இருக்கும். எனக்கு ஐப்பானுடன் நெருங்கிப் பழகி அவளியல்பு யாது, அவளுடைய பலம் எதிலே யிருக்கிறது, அவளுக்கு விபத்துக்கள் எவை யென்பவற்றையெல்லாம் நானே நிச்சயப்படுத்திக் கொள்ள ஸந்தர்ப்பம் வாய்க்கவில்லை. நானும் இழக்கைச் சேர்ந்த வனுகையாலே, அவளுடைய தற்கால விவகாரங்களையும், அவற்றை அவள் தீர்க்கும் வழிகளையும் நான் மிகவும் ஆவலுடன் கவனிக்க வேண்டியவனுகிறேன். இந்தப் பெரிய இழக்கு ஜாதி நவீன காலத்தினிடம் பெற்ற ஸௌகர்யங்களையும், பொறுப்புகளையும் என்ன செய்யப் போகிறளென்பதைப் பார்க்கும் பொருட்டாக உலக முழுதும் காத்திருக்கிறது. வெறுமே மேற்கை (ஐரோப்பாவை) அபிநயிப்பாளானால் அவளைக் குறித்து நாம் எதிர்பார்த்ததெல்லாம் வீணுகிவிடும்.

மேற்கு நாகரிகம் பல ஸங்கடமான விவகாரங்களை உலகத்தின் முன்னே காட்டிற்று; ஆனால் அவற்றைத் தீர்ப்புப் பண்ணும் நெறி காட்டவில்லை. ஆளுக்கும் அரசுக்கும் போராட்டம்; தொழிலாளிக்

கும் முதலாளிக்கும் சண்டை; ஆணுக்கும் பெண்ணுக்கும் யுத்தம்; லௌகிக லாபத்துக்கும் ஆத்ம லாபத்துக்கும் யுத்தம்; ஜாதிகளின் கூட்டவுறவு காரத்துக்கும், மானுஷீக பரம தர்மங்களுக்கும் யுத்தம்; அங்ஙனமே, வர்த்தகம், அரசு எனுமிவற்றின் பிரமாண்டமான கூட்டங்களிலே ஸஹஜமாக விளையக்கூடிய குரூபமான சிக்கல்களுக்கும், அழகையும், பரிபூரண சாந்தியையும் விரும்புகிற மனுஷ்ய ஸ்வபாவத்திற்கும் யுத்தம்;—இத்தனை குழப்பங்களுக்கு ஸமாதானம் கண்டு பிடிக்க வேண்டும். இதுவரை கனவிலே காணுத ஒரு புது யுக்திபண்ணிக் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்த நாகரிகமான நதி பல வாய்க்கல்கள் வழியே தன்னுள் வந்து சேரும் குப்பை கூளங்களால் அடைப்புண்டுபோவது கண்டோம். மானுஷீகத்தில் தனக்கு மிகுந்த அன்புண்டென்று தற்புகழ்ச்சி பேசியும் அது மனிதனுக்குப் பரம சத்ருவாக மூண்டது கண்டோம். முற்காலத்தில் காடுகளிலே சுற்றிய அநாகரிகக் கூட்டத்தார் திடீர் திடீர் என்று கலகம் விளைவித்த இயல்பைக் காட்டிலும் இது மிகவும் கொடிது. இந்த நாகரிகம் மிகவும் ஸ்வதந்த்ராபிமானம் இருப்பதாக டம்பம் பேசுகிறதேயொழிய, நடையில் முற்காலங்களில் வழங்கிய வற்றைக் காட்டிலும் கொடுமையான அடிமைத்தன்மைகளை இது மனுஷ்ய ஸங்கத்தில் புகுத்தியிருப்பது கண்டோம். நவீன அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தலரிது. காரணம்—இவை கண்ணுக்குப் புலப்படவில்லை; அல்லது விடுதலை

யின் வேஷத்தையும் பெயர்களையும் புனைந்து கொள்ளுகின்றன. இந்த நாகரிகத்தின் அஸுர லோபத்தினால், மனிதன் தன்னைப் பெருமைப் படுத்திய வீர தர்மங்களில் நம்பிக்கை யிழப்பது கண்டோம்.

ஆதலால், ஐப்பானியராகிய நீங்கள் இலேசாக இந்த நவீன நாகரிகத்தை இதன் இச்சைகள், வழிகள், ஸங்கேதங்களுடன் அங்கீகாரம் செய்து, இவை இன்றியமையாதன என்று வீணெண்ணம் கொள்ளலாகாது. கிழக்குப் புத்தியை உபயோகப் படுத்துங்கள்; ஆத்ம சக்தியை, டம்பமின்மையில் விருப்பத்தை, அயலாருக்குதவவேண்டுமென்ற நம் பிக்கையை, உபயோகப்படுத்திக் கிறீச்சுக் கிறீச் சென்று கத்திக்கொண்டு போகும் மனுஷ்ய அபி விருத்தி யென்ற தேருக்குப் புதிய பாதையொன்று கண்டு பிடியுங்கள். ஒவ்வோரசைப்பிலும் அத்தேர் கேட்கும் அபரிமிதமான ஜீவ பலியையும் ஸ்வதந்த்ர பலியையும் இயன்ற வரை சுருக்கப்படுத்துங்கள். பல தலைமுறைகளாக நீங்கள் உங்கள் தேசத்துக் குரிய தனி வழியிலே உணர்ந்தும், எண்ணியும், தொழில் செய்தும், இன்புற்றும், தொழுதும் வந் திருகிறீர்கள். இதையெல்லாம் பழங் கந்தை போலே கழற்றி யெறிதல் இயலாது. இந்த வழி உங்கள் ரக்தத்தில் கலந்திருக்கிறது. உங்கள் எலும் பின் மஜ்ஜைக்குள், தசைக்குள், மூளை நிணத் துக்குள் கலந்திருக்கிறது. நீங்கள் கைவைப்பதி லெல்லாம் அது தொழில் செய்ய வரும். உங்களுக்குத் தெரியாமலே வரும்; உங்களிச்சையை மீறியும் வரும்.

முற்காலத்தில் நீங்கள் மானுஷீக விவகாரங்களை உங்களுக்குத் திருப்தியாகவே தீர்த்துக் கொண்டீர்கள். உயிரைப் பற்றிய உங்களறிவு, வாழ்விற்கு நீங்கள் கண்ட தனி வழி, இவற்றையெல்லாம் இக்கால நிலைமையிலே செலுத்திப் பாருங்கள். அதிலிருந்து சிருஷ்டி தோன்றும். அந்த ஸ்ருஷ்டி வெறும் அபிநயமன்று. அதை உங்கள் ஜாதியின் ஆத்மா தனதென்று கொண்டு, உலக க்ஷேமத்துக்கும் அதனையே தனது காணிக்கையாக இறுமாப்புடன் செலுத்தும். மேற்கேயிருந்து சேகரித்த பொருள்களை உங்களுடைய சொந்த அறிவுக்கும் அவசியத்துக்கும் தக்கபடி உபயோகித்துக் கொள்ளும் உரிமை ஆசியாக் கண்ட முழுதிலும் ஜப்பானிய ஜாதியொன்றுக்கு மாத்திரந்தானிருக்கிறது. அதிருஷ்ட வசத்தால், உங்களுக்கு அன்னியரின் தொல்லை கிடையாது. ஆனால் அதற்குத் தக்கபடி உங்களுக்குப் பொறுப்பதிகமாகிறது. மனுஷ்ய ஸபையின் முன்னே ஐரோப்பா கொண்டு வந்திருக்கும் கேள்விகளுக்கு ஆசியா உங்கள் வாக்குமூலமாகவே உத்தரம் கொடுக்க வேண்டும். நவீன நாகரிகத்தின் சில தோற்றங்களை மாற்றி; அதுயந்திரம்போலச் செத்துக் கிடக்குமிடத்தில் உயிரைப் பொழிந்து; நிஷ்கருணையான அவசிய விதியினிடத்தே மனுஷ்ய ஹ்ருதயத்தைப் போட்டு; இன்னிசையும், உயிருமுள்ள வளர்ச்சியையும், உண்மையையும், அழகையும் மேலாக எண்ணி; கேவலம் கார்ய லாபத்தையும், வலிமையையும், தாழ்வாக நினைத்து; இங்ஙனம் ஆசியா கடத்திப் பார்க்கும் சில

புதிய சோதனைகள் உங்கள் நாட்டிலே நடத்தப்படும்.

பழைய காலத்தில் ஆசியாவின் கீழ்ப்பகுதி முழுதும், பர்மாவிலிருந்து ஜப்பான் வரை, எல்லாம் இந்தியாவுடன் நெருங்கிய ஸ்நேஹத் தளையில் கட்டுப்பட்டிருந்தது. ஜாதிகள் பரஸ்பரம் ஸஹஜமாகக் கொள்ளத் தகுந்த தளை அதுவேயாம். நமக்குள் ஜீவமயமான உள்ளத் தொடர்பிருந்தது. ஒரே நாடி வலியுண்டு. அதன் வழியே மனுஷ்ய ஜாதியின் முக்யமான அவஸரங்களைப் பற்றிய சிந்தனைகள் நமக்குள்ளே பரவின. நாம் பரஸ்பரம் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கவில்லை. பரஸ்பரம் அடக்கி வைக்கும் பொருட்டாக ஆயுதங்கள் தரிக்கவில்லை. சுயலாபத்தை வேண்டிப் பரஸ்பரம் சட்டைப் பையில் கை போட்டுத் திருடும் சம்பந்தம் நாம் கொண்டிருக்கவில்லை. ஆதர்சங்களையும், சிந்தனைகளையும் பண்டமாறிக் கொண்டோம். பரம வாத்ஸல்யத்தின் தான ப்ரதி தானங்கள் செய்து கொண்டோம். பரஸ்பரம் நமது ஹ்ருதய ஒற்றுமை பாஷா பேதங்களால் தடைப்படவில்லை. ஜாதி கர்வம், உடம்பிலோ மதியிலோ நாம் வலியோமென்ற செருக்கு, நமது தொடர்பைக் கெடுக்கவில்லை.

கலைகளும், ஸாஹித்யங்களும், புதிய தழைகளும், மலர்களுங் காட்டின; ஹ்ருதய ஒற்றுமை என்ற ஸூர்யனுடைய செய்கையால் அங்ஙனம் காட்டின. நாட்டிலும், பாஷையிலும், சரித்திரத்திலும் வேறுபட்ட பல ஜாதியாராயினும் நாம் ஒருங்கே மனுஷ்ய ஜாதியின் பரம ஐக்யத்தையும்,

அன்பின் ஆழ்ந்த பந்தத்தையும் அங்கீகரித்தோம். சாந்தியும், தர்ம சிந்தையுமுடையதாய், மனிதர் பரமார்த்தங்களின் பொருட்டுக் காட்டிய அந்தக் காலத்தில் உங்கள் ஜாதி அமரத் தைலம் கூட்டி வைத்தது. அது கொண்டே உங்கள் ஜாதி புதிய யுகத்தில் மறுபடி பிறக்கவும், புதிய இனிய உடல் தரிக்கவும், உலகம் பார்த்தனவற்றுள்ளே பெரு வியப்பாகிய பெரும் புரட்சியின் இடிப்பிலே காயம் படாமல் பிழைக்கவும் ஹேது உண்டாயிற்று.

பழையதைப் புதிதாகவும், பலமற்றதை பல முடையதாகவும், அவமானத்தை மாட்சியுடைய வெற்றியாகவும் மாற்றவேண்டுமாலில், அதற்கு மனிதனிடத்தில் மறைந்து நிற்கும் தேவ சக்தி தான் வந்து தீரவேண்டுமென்பதை நம்பாதிருத்தல் சிரமம். அந்த தேவ சக்தியானது உங்கள் நாட்டிலே, இந்த அற்ப லோப நாட்களில் பிறக்கவில்லை. நீச்சிடும் யந்திரங்களும், அஸ்திரத்தனமான அஹங்காரமும், ராஜ்யதந்திரிகளின் பொய் முழக்கங்களும், செழிப்படைந்த கபடமும் தலையெடுத்திருக்கும் இந்த நாட்களில் அது பிறக்கவில்லை. வீர ஆண்மையின் உதய காலத்தில், வானம் மண்ணை நெருங்கி வந்த காலத்தில், மனிதன் தனதாத்மாவிலும், ஜகத்தை ப்ரகாசப்படுத்திய பரமாத்மாவினிடத்திலும் நம்பிக்கை கொண்டிருந்த புராதன காலத்தில், அது பிறந்தது.

இந்த நாட்டில் என் மனதிலே அதிகமாகப் பதிந்த விஷயம் யாதென்றால், நீங்கள் இயற்கையின் மர்மங்களைப் பகுப்பு நெறியால் அறியாமல் அனுதா

பத்காலே தெரிந்தீர்களென்ற நம்பிக்கை. இயற்கைத் தேவியின் கோடுகளிலுள்ள பாஷையையும், வர்ணங்களிலுள்ள ஸங்கீதத்தையும், கோணல்களிலுள்ள ஒழுங்கையும், விடுதலையுள்ள அசைவுகளிலே இன்னிசையையும் நீங்கள் கண்டீர்கள். அவள் தன் அபரிமிதமான வஸ்துக் கூட்டங்களை யாதொரு முட்டுதலுமின்றி நடத்திச் செல்லுகிறாள். அவளுடைய படைப்புக்களில் சண்டைகள் கூடக் கூத்தும் பாட்டும்போலே இனிக்கின்றன. அவளுடைய இளர்ச்சியிலே கேவலம் பகட்டு மிகுதியன்று, தன்னே மறந்த ஸம்பூர்ணத்வம் காணப்படுகிறது.

இயற்கையானவள் தனது லௌந்தர்ய ரூபங்களில் சக்தி சேர்த்து வைத்திருக்கிறாள். இந்த அழகுதான் அவள் மார்பின் மீது கிடக்கும் பெரிய சக்திகளைத் தாய்போலே போஷிக்கிறது. வேகத்திலும், சாந்தியிலும் அவற்றைக் காப்பாற்றுகிறது. பரிபூர்ண லௌந்தர்யத்தின் ஸங்கீதத்திலுள்ள பிரகிருதியின் சக்திகள் தம்மைத் தாமே அழிவின்றிக் காத்துக் கொள்ளுகின்றன. அவள் தனது கோணல் வரிகளின் மென்மையால், பூமியின் தசைகளிலுள்ள ஆயாஸத்தை நீக்கிவிடுகிறாள். இந்த விஷயங்களையெல்லாம் நீங்கள் அறிந்து கொண்டீர்கள். இந்த மர்மங்களை வாழ்க்கையிலே கலந்து கொண்டீர்களென்றும், எல்லாவற்றிலும் தோன்றும் அழகு உங்கள் மதிக்குள்ளே பாய்ந்து விட்டதென்றும் உணர்கிறேன்.

வஸ்துக்களைப் பற்றிய புற அறிவு விரைவிலே வந்துவிடும். அகத்தைக் காண்பதே பல நூற்றாண்டு பழகித் தன்னைக் கட்டிய பின்பு கைகூடும் விஷயம். புறத்தே நின்று இயற்கையை ஆராய்தல் மிகவும் எளிது. அன்பின் கனியிலே அவளைத் தனதாக்கிக் கொள்ளுதல் அரிது. அதுவே உண்மையான மேதையின் தொழில். உங்கள் ஜாதி அந்த மேதையைப் பயிற்சியாலே காட்டவில்லை; படைக்குந்திறனாலே காட்டிற்று. புறக்கோலத்தாலன்று, ஆத்மப் பிரகாசத்தால். இந்த ஸ்ருஷ்டி சக்தி எல்லா ஜாதிகளிலும் உண்டு. இதன் தொழில் மனிதரின் குணங்களைக் கவர்ந்து, தன் ஆதர்சங்களுக்குத் தக்கபடி அவற்றை உருமாற்றுதலாம். ஆனால் இங்கே அந்த சக்தி பலிதமாய்விட்டது. இங்கு, ஜப்பானில், அது எல்லா மனிதரின் மனதிலும் அழுந்திவிட்டதாகத் தோன்றுகிறது. தசை, நாடிகளில் ஊறிவிட்டதாகப் புலப்படுகிறது. உங்கள் மன உணர்ச்சிகள் உண்மையாயின. புலன்கள் தீக்ஷண்யமாயின. கைகள் இயற்கைத் திறமை பெற்றன. ஐரோப்பாவின் மேதையால் அங்குள்ள ஜனங்களுக்குக் கூட்டஞ் சேர்க்கிற சக்தி ஏற்பட்டது. அந்த சக்தியை ராஜ்ய நீதியிலும், வியாபாரத்திலும், பௌதிக சாஸ்த்ர ஞானத்தை ஒருமுகப்படுத்துவதிலும் உபயோகிக்கிறார்கள். ஜப்பானுடைய மேதையோவென்றால் உங்களுக்கு ஸௌந்தர்ய தர்சனத்தையும், அதை வாழ்க்கையில் நிரூபணம் செய்யும் திறமையையும் கொடுத்தது. இதனால் நீங்கள் வேண்டியபோது கூட்டஞ் சேர்க்கிற

திறமை தன்னுலே வந்துவிட்டது. ஏனெனில் அழகின் இசை அந்தராத்மாவில் உள்ளது. அதன் புறஉடல் ஸங்க-ஸ்தாபன சக்தி.

ஒவ்வொரு நாகரிகமும் ஒவ்வொருவிதமான மனுஷ்ய அனுபவத்தின் மொழிபெயர்ப்பு. உலகத்திலுள்ள வஸ்துக்களின் சண்டைப் பகுதியை மாத்திரம் ஐரோப்பா அழுத்தமாகத் தெரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அந்தப் போராட்டத்தை வெற்றியினுலேதான் வசப்படுத்த முடியும். ஆதலால், அவள் (ஐரோப்பா) எப்போதும் போர் செய்ய ஆயத்தமாகவே யிருக்கிறாள். அவளுடைய கவனத்தில் பெரும்பகுதி ஸைன்யங்கள் சேர்ப்பதிலே செலவாகிறது. ஆனல் ஜப்பான் தனது லோகத்தில் ஒரு தேவ ஸந்நிதியின் ஸ்பர்சத்தை உணர்ந்தாள். ஆதலால் அவளுடைய ஆத்மாவில் பக்தியாராதனம் எழுந்தது. அவள் இயற்கையை வென்றதாகச் செருக்குரை சொல்லவில்லை. அளவில்லாத ஜாக்ரதையுடனும், மகிழ்ச்சியுடனும் இயற்கைக்கு ப்ரேமாஞ்சலி செலுத்துகிறாள். அவளுக்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பு ஆழ்ந்த உள்ளத் தொடர்பு. இந்த அன்பாகிய உயிர்த் தளையை அவள் தனது குன்றுகளுடனும், கடல், ஆறுகள், பலவிதமான புஷ்ப விஹாரங்களும், இனிய காட்சிகளுமுடைய வனங்களுடனும், ஏற்படுத்திக் கொண்டாள். காடுகளின் பெருமூச்சையும், இசை இசுப்பையும், ஹ்ருதயத்தில் வாங்கிக் கொண்டாள். அங்ஙனமே, அலைகளின் விம்முதல்களையும், ஸௌர்ய, சந்திரரின் ஒளி, நிழல்களின் ஸகல கலா பேதங்

கனியும் கற்றுணர்ந்தாள். சோலைகளிலும், உப வனங்களிலும். வயல்களிலும் ருதுகாலங்களின் வரவைக் காணும் பொருட்டுக் களிப்புடன் கடைகளைச் சார்த் திஞள். உலகத்தின் ஆத்மாவுக்கு இங்ஙனம் நெஞ்சு திறத்தல் உங்களிலே சில செல்வர் மாத்திரம் செய்ய வில்லை. இது புறத்து நாகரிகமொன்றின் பலாத் காரத்தால் ஏற்பட்டதன்று. ஜகத்தின் ஹ்ருதயத் திலே ஒரு புருஷனைக் காண்பதாகிய ஆத்மாநுபூதி உங்கள் நாகரிகத்திலும் வடிவு கொண்டது. மனிதரையெல்லாம் பந்துக்களாக நினைப்பது உங் கள் நாகரிகம். ஆதலால் உங்களில் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடமை தந்தைக்குச் செலுத்த வேண்டிய கடமை போலாயிற்று. உங்கள் ஜாதி ஒரு குடும்பமாயிற்று. சக்ரவர்த்தி அதற்குத் தலை. பிறரை அடித்தல், தம்மைக் காத்தல் என்ற இரண்டு நோக்கங்களுக்காக உண்டான ஆயுதக் கூட்டுறவினின்றும் உங்கள் ஜாதியொற்றுமை பிறந்ததன்று. பிற நாடுகளின்மீது படையெடுத் துக் கொள்ளைத் தொழிலின் லாப நஷ்டங்களைப் பங்கிட்டுக்கொள்ளும் கூட்டுறவிலே பிறந்ததன்று. யாதேனுமொரு பலாபேக்ஷையினல் அவசியமாகும் ஸங்கத்தில் தோன்றியதன்று. ஆனல் குடும்பத்தின் விஸ்தாரம்; ஹ்ருதய விஸ்தாரம்; விசாலமான க்ஷேத்ரத்தில், நீண்ட காலத்தில் இயல்வதான விஸ்தாரம்.

இது பற்றியே இப்போது ஜப்பானிய நாக ரிகத்தை பயமுறுத்தும் மாறுதலை நான் எனது சரீரத்துக்கு நேரும் பயம்போலே அஞ்சுகிறேன்.

ஏன்? கார்யலாபத்தையே பொதுத் தலையாக உடைய நவீன காலத்தில் வேறுபாடுகள், மௌன ஸௌந்தர்யத்துக்கும மறைந்த சக்திகளுக்கும் எதிரே பரிதபிக்கும்படியாகத் திறந்துகிடக்கும் கோலத்தை ஐப்பானில் காண்பதுபோல் இத்தனை தெளிவாகப் பிற இடங்களிலே காண்பதரிது.

ஸங்க பலமுடைய குரூபம் மனத்தைத் தாகி வசப்படுத்தித் தன் கண மாத்ரத்காலே வெற்றி யடையுமாயின் அதுவே அபாயம். அதன் இடை விடாத அடிகளினாலும், ஹ்ருதயத்தின் ஆழ்ந்த ராகங்களை அது கண்டு நகைப்பதாலும் அதனை யேறவிட்டால் அபாயமுண்டாம். அது கடூரமாகவும் பலாத்காரமாகவும் வந்து நமது கண் முன்னே நிற் பதால் அதைக் கண்டு நம் புலன்கள் மயங்கு கின்றன. குரூபத்தினாலே சக்தியுடையதாகத் தோன்றும் மரப்பொம்மைக்குக் காட்டு மனுஷ்யன் பூஜைகள் செய்வதுபோலே நாம் அதற்கு பலிகள் கொடுக்கிறோம். ஆதலால் அடக்கமும், ஆழமும் உயிரின் நுட்பமான மென்மையுமுடைய வஸ்துக் களுடன் அது போட்டிக்கு வரும்போது பய முண்டாகிறது.

உங்கள் ஜாதியின் ஆதர்சங்களில் அன்பில் லாத பலர் உங்களிலே உள்ளார். அவர்களுக்கு நோக்கம் வளர்ச்சியன்று; லாபம். அவர்கள் ஐப்பானை நாங்களே நவீனமாக்கினோமென்று தம் புகழ்ச்சி செய்து கூவுகிறார்கள். ஒரு ஜாதியின் ஆவிக்கும் காலத்தின் சக்திக்கும் இசை தவறக் கூடாதென்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன்.

ஆனால் நவீனத்தனத்துக்கும் நவீனத்துக்கும் பேத மூண்டு; கவிராயத்தனத்துக்கும் கவித்வத்துக்கும் பேதமிருப்பதுபோலே. இதை மறக்கக்கூடாது. இந்த நடிப்பு வெறும் கேலி தவிர வேறொன்று மில்லை. இது மூலத்தைவிட அதிக இரைச்சல்; மூலத்தின் பொருளாக கருதாமல் எழுத்தைக் கருது வது. உண்மையான நவீன போதமுடையோர் நவீனத்தனம் பண்ணுதல் அவசியமில்லை யென்பது ஞாபகமிருக்கவேண்டும். தீரர் தைரியம் பேசமாட் டார். நவீனத்வம் ஐரோப்பியரின் உடையிலே இல்லை. அவர்களுடைய குழந்தைகள் பாடம் படிக் கும்போது, அடைத்து வைக்கும் குரூபமான கட்டி டங்களில் இல்லை. நட்டையான நேர்வரிச் சுவர் களுடையனவும், ஸம தூர வரிகளில் உள்ள ஜன் னல் வரிசைகளை உடையனவுமான அந்த மனிதர் அடைபட்டுக்கிடக்கும் சதுர வீடுகளில் இல்லை. மேலும், அவர்களுடைய பெண் மக்கள் தலையிலே நாலுவிதமான கூளங்களைச் சுமத்திய தொப்பி களிலும் நவீனத்வம் இல்லையென்று நிச்சயமாகக் கூறலாம். இவை நவீனமல்ல; கேவலம் ஐரோப் பியம். உண்மையான நவீனமாவது சிறந்த விடுதலை. ருசி பேதங்களுக்கடிமைப்படுவதன்று. அறிவிலும், தொழிலிலும் விடுதலை; ஐரோப்பிய வாத்திகளின் மேலே பள்ளிப் பிள்ளைத்தனமன்று. நவீனமானது ஸயன்ஸ் (சாஸ்த்ரம்); அதை வாழ்க்கையிலே தவறாக ப்ரயோகித்தலன்று. சாஸ்த் ரத்தை ஒரு மூட பக்தியாக்கி, அஸங்கதமாக அதன் உதவியை எல்லா அஸாத்யங்களுக்கும் நாடுகிற

நமது ஸயன்ஸ் வாத்தியார்களைப் பின்பற்றுதல் நவீனமன்று.

நவீனத் தற்காப்புக் கருவிகளை ஸம்பாதிப்பதில் ஜப்பான் அஜாக்ரதையாக இருக்கவேண்டுமென்று நான் கூஷணமேனும் கூறவில்லை. ஆனால் ஆத்ம—ஸம்ரக்ஷணையளவுக்கு மிஞ்சி அக்கருவிகளை வேண்டலாகாது. உண்மையான சகதி ஆயுதங்களில் இல்லை. அவற்றைக் கையாளும் மனிதனிடம் உள்ளதென்பதை அறியவேண்டும். மனிதன் பலத்தை வேண்டி, ஆத்மாவுக்குத் தீங்கு நேருமளவு ஆயுதங்களை வளர்த்தால், அவற்றாலே அவனுடைய பகைவருக்கு நேரும் ஆபத்தைக் காட்டிலும், அவனுக்கே அதிக ஆபத்தாகிறது.

உயிருடைய வஸ்துகளை காயப்படுத்துதல் எளிது. ஆதலால், அவற்றுக்கு ஸம்ரக்ஷணை வேண்டும். இயற்கையிலே உயிர் தன்னைத் தனது சொந்த வஸ்துக்களாலே செய்த போர்வைகளால் காக்கிறது. அது பற்றியே அவை உயிரின் வளர்ச்சியுடன் இசை பொருந்துகின்றன. இல்லாவிட்டால் காலம் வரும்போது அவை உடைந்துபோகும். எளிதிலே மறைந்துபோகும். உயிருள்ள மனிதனுக்கு உண்மையான கவசம் அவனுடைய ஆத்ம ஆதர்சங்களேயாம். அவை அவனுடன் ஜீவ ஸம்பந்தமுடையன. அவன் வளர்ச்சியுடனே வளர்வன. துரதிர்ஷ்டவசத்தால் அவன் தனக்குச் சில ஸமயங்களில் உருக்கினால் செய்த, செத்த, யந்த்ரதுல்யமான கவசங்களையும் உபயோகிக்க நேரிடுகிறது. அப்போது அவற்றின் கொடுமையிலிருந்து தன்னைக்

காப்பதில் ஜாக்ரதையாக இருக்கவேண்டும். அவன் பலஹீனனாய், போர்வைக்குத் தக்கபடி உடம்பைக் குறுக்கிகொண்டு போனால், காளடையில் ஆத்மா சுருங்கித் தற்கொலையாக முடியும். அந்தத் தற் கொலையின் வழியை மேற்கு ஜாதியார் அனுசரிப் போராகித் தாங்கள் அதிகாரத்திலிருக்கவும், பிறரை அடக்கி வைக்கவும் கருதித் தமது மனுஷ்யத் தன்மையை ஸங்கங்களின் பெரிய பாரத்தின் கீழே அழுத்தி மூச்சைப் பிடித்துக் கொள்ளுகிறார்களென் பதை ஜப்பான் தன் மனதில் உரக்கக் கூறிக் கொள்ளவேண்டும். தர்ம விதியிலே உறுதியான நம்பிக்கை செலுத்தவேண்டும். ஆதலால், நவீன ஜப்பானில் அதிகரித்துவரும், மேற்குத் திசையாரை அனுகரணம் (அபிநயம்) செய்வதாகிய, பழக்கம் இவளுடைய பலத்துக்கும், ஸ்திரத்தன்மைக்கும் அவசியமென்று நான் நினைக்க இடமில்லை. அது இவளுடைய உண்மையியல்புக்குப் பெருஞ் சுமை யாய், பலக்குறைவை உண்டாக்குகிறது. காலமாக ஆக இந்த பலஹீனம் மிகுதிப்படும். நவீன ஜப்பா னியர் பால்யதசை முதலாகக் கற்றுக் கொள்ளுகிற மேற்குத் திசையின் ஆசாரங்கள், அன்ய நாகரிகத் தின் வழக்கங்கள், கடைசியாக ஒருநாள் ஜப்பான் தனது சொந்த இயல்பை மறக்கும்படி செய்து விடும். அப்போது ஜப்பான் மக்கள் தமது பூர்வ காலத்தை மறந்து விடுவர். தமது புராதன சரித்திர மாகிய குன்றத்திலிருந்து பாய்ந்துவரும் நதியைத் தாமே தடைகளாய் நின்று அடைத்துப் போடுவார் கள். அப்போது அவளுடைய நாகரிகத்தை ஸௌந்

தர்யத்தின் செழிப்பினாலும், பலச் செழிப்பாலும் மிக வளம்பெறச் செய்த ஜீவ நீர் எதிர்காலத்துக் கில்லாமல் போகும்.

இதைக் காட்டிலும் ஐப்பானுக்குப் பெரிய தொரு விபத்து யாதெனில்,—மேற்கின் புறக் கோலங்களை அபிநயிக்கும் செய்கை மாத்திரமன்று; மேற்குத் திசை நாகரிகத்தின் உள்ளிருந்து நடத்தும் சக்தியையே தனதாக அங்கீகரித்தல். அவளுடைய ஜன ஆதர்சங்கள் ஏற்கெனவே, ராஜ்ய விவகாரங்களின் முன்னே தோற்குங் குறிகளைக் காட்டுகின்றன. மனிதர் விளையாட்டில் ஜெயிக்கும் பொருட்டாக மனிதர் ஆத்மாவைப் பணயமென்று வைக்கும் ராஜ்யச் சூதில் அவளுடைய நவீன விருப்பம் சாய்ந்து வருகிறது. "தகுதி மிக்கதன் உயிர் மிஞ்சும்" என்ற ஸயன்ஸ் வாக்யத்தை அவள் தனது வாயில் மீது பெரிய எழுத்தில் எழுதி வைத் திருக்கக் காண்கிறேன். அந்த வாக்யத்தின் உள் ளர்த்தம் யாதெனில்: 'உன் லாபத்தையே தேடு. அதனில் மற்றவர்களுக்கு எவ்வளவு நஷ்டமுண்டா னாலும் கவனிக்காதே.' இது குருடனுடைய மந்திரம். அவன் கண் தெரியாதபடியால் கையால் தீண்டக் கூடியதை மாத்திரந்தான் நம்புவான். ஆனால் மனிதரை இயற்கை மிகவும் நெருக்கமாகப் பின்னி யிருப்பதால், நீ பிறரை அடித்தால் அந்த அடி உன் மீது தவறாமல் திரும்பி விழுமென்பதைக் கண் ணுடையோர் அறிவார். மனிதன் கண்டுபிடித்த உண்மைகளிலே மிகப் பெரியது தர்மவிதி. அது யாதெனில் எவ்வளவு மனிதன் பிறருக்குள்ளே

தன்னைக் காண்கிறதிலே அவ்வளவு உண்மை நிலை யடைகிறதெனென்ற ஆச்சர்யமான ஸத்யத்தைக் கண்டுபிடித்த செயலேயாம். இதற்கு உள்ளத்திலே விளையும் பயன் மாத்திரமேயன்றி, நமது வாழ்வில் ஒவ்வொரு சாயையிலும் நற்பயனுண்டாகிறது. தார் மிகக் குருட்டுத்தனத்தை எந்த ஜாதியார் தேசபக்தி மதமென்று யத்தனத்தாலே பயிற்சி செய்கிறார் களோ, அவர்கள் திடீரென்று பலாத்கார மரணத்தை யடைவார்கள். முற்காலத்தில் தேசங்களை அன்யர் படையேறி வருதல் உண்டு. குரூரமும், ரக்தச் சேதமும் இருக்கத்தான் செய்தன. பொறுமை, லோபங்களால் சூழ்ச்சிகள் செய்வது முண்டு. ஆனால் அவை ஜனங்களின் ஆத்மாவை ஆழத் தீண்டின அல்ல. ஏனெனில் பொதுஜனங்கள் இந்தக் கேளிகளில் நேரே கலந்தது கிடையாது. சிலருடைய பேராசைகளினாலேதான் அவை உண்டாயின. இந்தத் துணிசெயல்களின் கீச, பாதகப் பகுதிகளிலே பொதுஜனங்கள் உத்தரவாதமில்லாமல், இவற்றினுண்டாகும் வீர, மானுஷீகப் பயிற்சிகளின் லாபத்தை மாத்திரம் பெற்றனர். அதனால் பொதுஜனங்களுக்கு விளைந்த நன்மைகள் எவை யெனில்: ஆபத்துக்குப் பின்வாங்காத விசுவாசமும், மானக்கடமைகளில் ஒருமனப்பட்ட பக்தியும், சரணாகதியிலே நிறைவும், மரணத்தையும் விபத்துக்களையும் பயமின்றி அங்கீகாரம் செய்யும் திறனுமென்க. ஆதலால் அரசரும் ஸேனாபதிகளும் அனுஸரித்த முறைகளினின்றும், ஜனங்களின் ஹ்ருதயத்தில் ஆஸனமிட்டு விளங்கிய ஆதர்சங்கள்

பிரமாதமான மாறுதலுக்குட்படவில்லை. ஆனால் மேற்கு நாகரிகத்தின் குணம் பரவிவருகிற இக் காலத்தில் எல்லா வகையாலும் விரோதங்களையும் ஆசைகளையும் வளர்க்கும்படி ஜன முழுதும் பால்ய முதலாகவே பயிற்சி பெறுகிறது. சரித்திரத்தில் பாதியுண்மைகளையும் பொய்களையும் ஸ்ருஷ்டி செய்வதனாலும், இதர ஜாதியாரை எப்போதும் இடைவிடாமல் பழித்து அவர்களிடம் விரோத எண்ணங்களை வளரச் செய்வதனாலும், பெரும் பகுதி பொய்யும் மனிதப் பொது நலத்தைக் கருதி விரைவில் மறக்கத் தக்கனவுமாகிய ஸம்பவங்களுக்கு ஞாபகச் சின்னங்கள் கட்டி நிறுத்துவதனாலும், இங்ஙனம் ஒவ்வொரு ஜாதியும் தன்னைத் தவிர மற்ற ஜாதிகளுக்குத் தீய விபத்தாக மிகுந்து வருகிறது. அது மானுஷீகத்தின் ஊற்றிலேயே விஷத்தைக் கலந்ததுபோலாகிறது. நம்மூர் மிகப் பெரியோரும் மிக நல்லோரும் வாழ்க்கையிலே காட்டிய ஆதர்சங்களைப் பழிப்பதுபோலாகிறது. உலகத்து ஜாதியாருக்கெல்லாம் அஸாரத்தனமான ஸ்வார்த்த நாட்டமே, ஸர்வ ஸாமான்யமான பெருந் தர்மமென்று காட்டுவதுபோலாகிறது. ஸயன்ஸ் (சாஸ்த்ரத்தின்) இடமிருந்து வேறெது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தர்ம மரணம் விளைவிக்கும் இந்த மருந்தை மாத்திரம் கைக்கொள்ள வேண்டாம். பிற தேசத்துக்கு நீங்கள் விளைவிக்கும் தீமை உங்களையும் சூழாதென்று கணப்பொழுதும் நினையாதீர். உங்கள் மனையைச் சுற்றி நீங்கள் விதைக்கும் தீமைகள் கோட்டைகளாகுமென்றெண்ண வேண்

டாம். ஒரு ஜாதி முழுதையும் தானே உயர்வென்ற அஸாதாரண கர்வ சிந்தையில் புகுத்தலும், தர்மத்துக்கிளகாத கல்நெஞ்சும், சோரத்தால் வந்த செல்வமும் பெருமையென்று கருதச் செய்தலும், போரில் வென்ற கொள்ளைகளை பஹிரங்கமான இடங்களில் காட்டித் தோற்ற ஜாதியாரின் அவமானத்தை எக்காலமும் மறந்து போகாமல் பாராட்டுவதும், அவற்றைப் பள்ளிக்கூடங்களில் வைத்துப் பிற ஜாதியார் விஷயத்திலே குழந்தைகளின் மனதில் இகழ்ச்சியைப் பயிராக்குவதும்—இஃதெல்லாம் மேற்குத் திசையை அது புண்பட்ட இடத்தில் அபிநயித்தலாம். அந்தப் புண்ணில் வீக்கம் உயிரைத் தின்னுகிற வியாதியின் வீக்கம்.

நமது ஜீவனத்துக்கவசியமான தானியப் பயிர்கள் பல நூறுண்டு கருத்துடன் தெரிந்தெடுத்து விளைவித்த பயன்களாம். ஆனால் உயிராக மாற்ற முடியாத களைகளை நாம் பொறுமையுடன் யோசித்து யோசித்து வளர்க்கவில்லை. களைகளைப் பிடுங்குதல் சிரமம். கவனக் குறைவினால் பயிரைக் கெடுத்துப் பழைய காட்டு நிலைக்குச் செல்லவிடுதல் எளிது. அதுபோல் உங்கள் பூமிக்கு தயவுடன் தன்னை இசைத்துக் கொண்டதாகிய நாகரிகமும் முற்காலத்தில் உழுது களைபிடுங்கியது போதாமல் இன்னும் நீங்கள் உழைத்துக் கவலையுடன் காக்கும் படி வேண்டுகிறது. ஸயன்ஸ் கூட்டுறவு முதலிய சுத்த நவீனங்களை இடம் பெயர்த்து நடலாம். ஆனால் மனிதனுடைய ஜீவ குணங்கள் மிகவும் மெல்லிய நரம்புகளுடையன. நெடுந் தொலை பரவிய

பல வேர்களையுடையன. அவற்றை இடம் பெயர்த்தால் செத்துப்போம். ஆதலால் மேற்குத் திசையின் ராஜ்ய ஆதர்சங்கள் உங்கள் ஆதர்சங்களை மூரட்டுத்தனமாக அழுத்துவதை நான் அஞ்சுவேன். ராஜ்ய விஷயங்களையே முக்யமாக உடைய நாகரிகத்தில் நாடென்பது ஒரு மானஸிக பதார்த்தம். மனிதருக்குள்ளே சம்பந்தமெல்லாம் லாபத்தைக் கருதிய ஸம்பந்தம். இந்த நாகரிகத்துக்குச் சித்தத்திலே ஆதாரமில்லையாதலால், இதை நடத்துதல் பயங்கரமானபடி சுலபம். இந்த யந்திரத்தை நீங்கள் பாதி நூற்றாண்டுக்குள்ளே வசப்படுத்தி விட்டீர்கள். உங்கள் ஜாதியுடன் பிறந்து, உங்கள் நூற்றாண்டுகளில் வளர்ந்த உயிருள்ள ஆதர்சங்களைக் காட்டிலும் அந்த யந்திரத்தை அதிகமாக விரும்பும் மனிதர் உங்களுக்குள்ளே சிலர் உள்ளார். விளையாட்டுப் பரபரப்பில் ஒரு குழந்தை தனது தாயைக் காட்டிலும் விளையாட்டுப் பண்டங்களிடம் தனக்கதிக அன்பிருப்பதாக நினைத்துக் கொள்ளுதல் போலே.

மனுஷ்யன் மிகவும் உயர்ந்த ஸ்திதியை அடையும்போது தன்னை மறக்கிறான். மானுஷீக அன்பாகிய தளையை மூலாதாரமாகவுடைய உங்கள் நாகரிகம் தன்னைத்தானே தொளைத்துத் தொளைத்துப் பார்க்கும் குணத்தால் தீண்டப்படாதபடி உயிரின் ஆழத்திலே போஷிக்கப்பட்டது. வெறுமே ராஜ்ய விவகார சம்பந்தம் முழுதும் வேதனை மயம்; பரஹிம்ஸையே வடிவெடுத்து வீங்கிய புண்! அது வலிய உங்கள் கவனத்தைக் கவர்ந்தது. உங்கள்

வாழ்விற்குரிதியாகிய உண்மையை நீங்கள் முழுதும் உணர்ந்துகொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது; பராக்காக இருக்கும்போது உங்களுக்கு விபத்து வாராமல் தடுக்கும்படி முற்காலம் உங்களுக்கு ஈசனுடைய தானம். தற்காலத்தைப்பற்றி நீங்களே சரியான தீர்மானம் செய்யவேண்டும்.

ஆதலால் உங்களை நீங்களே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகள் பின்வருமாறு :—"நாம் உலகத்தை அறிந்த நெறி பிழையா? மனித இயல்பை நேரே அறியாமல் நாம் அதனுடன் சம்பந்தங்கள் வகுத்துக் கொண்டோமா? மேற்குத் திசையின் மனவுணர்ச்சியே நேரானதா? மானுஷீகத்தின் பொது அவநம்பிக்கை யென்ற காப்புச் சுவரின் பின்னே அவள் ஜாதீய க்ஷேமத்தைக் கட்டுகிற வழி தான் நேர் வழியா?"

கிழக்கு ஜாதியொன் றெழுச்சி பெறுமோ என்று ஆலோசனை பண்ணும்போதே மேற்குத் திசை எத்தனை பயம் காட்டுகிறதென்பதை நீங்கள் கண்டுபிடித்திருக்கலாம். இதன் காரணம் யாதெனில் அவள் வாழ்விற்குத் துணையாகிய சக்தி தீய சக்தி. அது அவளுடனிருக்கும் வரை அவளுக்கு (மேற்குக்கு) க்ஷேமம்; இதர லோகத்துக்கு நடுக்கம். ஐரோப்பிய நவீன நாகரிகத்தின் ஜீவ விருப்பம் யாதெனில் சாத்தானைத் தனக்கு மாத்திரம் சொந்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பது அவளுடைய ஸகல ஆயுதங்களையும் தந்திரங்களையும் இந்த ஒரே நோக்கத்தில் செலுத்துகிறாள். சாத்தானை இங்ஙனம் கூவி நடத்தும் பூசைகள் செல்வத்

தின் பாதை மூலமாக ஸர்வ நாசத்தின் கரையிலே கொண்டு சேர்க்கும். கடவுளுடைய பூமியின் மீது மேற்குத் திசை அவிழ்த்துவிட்ட பிசாசுகள் அவளையே பயமுறுத்துகின்றன. அவளைக் கோலடியாலே பயங்களுக்குள்ளே துரத்துகின்றன. எனவே, அவளுக்கு ஆறுதல் இல்லை. அவள் பிறருக்கு விளைவிக்கும் அபாயங்களையும், அதனால் அவளுக்கேற் படும் அபாயங்களையும் தவிர மற்றதை யெல்லாம் மறந்து விடுகிறாள். இந்த ராஜ்ய சிந்தனைப் பேய்க்கு மற்ற நாடுகளை பலியிடுகிறாள். அவற்றின் பிணத் தசையை உண்டு கொழுக்கிறாள். பிணங்கள் பச்சை யாக இருக்குமட்டும் அதிகக் கேடில்லை. ஆனால் அவை அழுகுவது நிச்சயம். செத்தது பழி வாங்கும். எங்கும் அசுசியைப் பரப்பித் தின்போ னுடம்பில் விஷமேற்றும். மூன்று, ஜப்பான் மாளு ஷீகச் செல்வமெல்லாம் கொண்டிருந்தாள். வீர, ஸௌந்தர்யங்களின் இன்னிசையும் நியமத்தில் கம்பீரமும் ப்ரகாசத்தில் வளமும் பெற்று விளங் கினாள். அப்படி யிருந்தும் மேற்குத் தேசங்கள் அவளை மதிக்கவில்லை. "மனுஷ்ய ரத்தத்தைக் குடிக்கும் சாத்தானுடைய நாய்கள் ஐரோப்பிய நாய்க் குகைகளிலேதான் வளர்க்கலாமென்பதில்லை; ஜப்பானிலும் அவற்றைக் குடியேற்றி மனிதத் தன்பங்களை இரை போட்டு வளர்க்கமுடியும்" என்பதை நிரூபணம் செய்யும் வரை ஜப்பானை அவர்கள் கவனிக்கவில்லை. அழகிய பூமியின் மீது நரகத் தீயின் வெள்ளக் கதவுகளைத் திறந்துவிடும் திறவுகோல் தன் கையிலும் இருக்கிறதென்றும்;

அவர்களுடைய தாளத்தின் கணக்கிலேயே கொள்ளை, கொலை, அநாதைப் பெண்களைக் கற்பழித்தல் முதலியன செய்யும் பேய்க் கூத்து தணக்கும், பூமண்டலம் நாசமாகும்படி, ஆடத் தெரியுமென்றும் ஜப்பான் காட்டினவுடனே இவளைத் தமக்கு ஸமானமாக அங்கீகாரம் செய்தனர். மனிதன் தர்ம நெறியில் பக்குவப்படாத ஆரம்ப நிலையிலே தான் அஞ்சும் தெய்வத்தின் கொடுமை பற்றியே அதனிடம் பக்தி செலுத்துகிறான் என்பதை அறிவோம். ஆனல் மனிதன் இறுமாப்புடன் எதிர்நோக்கத்தக்க ஆதர்சம் இதுதானு? பல நூற்றாண்டுகளான நாகரிகத்துக்கப்பால், ஜாதிகள் இரவிலே சுற்றும் காட்டு மிருகங்களைப்போலே, பரஸ்பரம் அஞ்சுவதும்; உபசாரக் கதவுகளை அடைப்பதும்; அடித்தல், தடுத்தல் இரண்டுக்கு மாத்திரமே கூட்டுறவு கொள்வதும்; வியாபார ரஹஸ்யங்களையும் ராஜ்ய ரஹஸ்யங்களையும், ஆயுத ரஹஸ்யங்களையும், பொக்குகளுக்குள்ளே மூடி வைப்பதும்; பரஸ்பரமாக வளர்க்கும் குலை நாய்களுக்குத் தமக்கு சொந்தமில்லாத மாம்ஸத்தைப் போட்டு ஸமாதானம் செய்வதும்; எழுந்து நிற்க விரும்பும் வீழ்ந்த ஜாதியாரை மேலெழாதபடி அழுத்துவதும்; மனுஷ்ய ஜாதியின் மற்றப் பகுதிகளின் பலஹீனத்தையே தமக்கு க்ஷேமமாகக் கணிப்பதும்; தமமைக் காட்டிலும் பலக்குறைவான ஜாதியாருக்கு வலது கையாலே மத ப்ரசாரம் செய்து, அவர்களை இடது கையாலே கொள்ளையடிப்பதும்; இவற்றையெல்லாம் கண்டு நாம் பொறுமைப்படத் தகுமா? இந்த நாக

ரிகத்தின் கொள்கைக்கு நாம் மூழங்கால்படி யிடலாமா? இந்த நாகரிகம் பூமண்டல முழுதிலும் பயத்தையும், லோபத்தையும், ஐயத்தையும் தன் ராஜ்ய தந்திரத்தைக் குறித்து வெட்கங்கெட்ட பொய்களையும், மனிதனுடைய ஸமாதானத்திலும், பொது ஸஹோதரத் தன்மையிலும் தனக்கு நல் லெண்ணமிருப்பதுபோலே பேசும் எண்ணெய் தடவின பொய்களையும், விதை தெளிப்பதுபோலே தெளிக்கிறது. நம் பூர்வ ஆஸ்திக்கு பதில் இந்த அன்யச் சரக்கை வாங்க நாம் மேற்குச் சந்தைக்கு விரைந்தோடிப் போகையிலே நாம் ஐயுறவுகொள்ள வேண்டாமா? தன்னைத் தான் அறிதல் சிரம மென்பதை நானறிவேன். குடிவெறியிலிருப்போன் தனக்கு வெறியில்லை யென்று சத்தியம் பண்ணு வான். எனினும், மேற்குத் திசை தனது விவகாரங் களைப் பற்றித் தானே அக்கறையுடன் யோசனை பண்ணி வருகிறாள். சோதனைகள் புதிது புதிதாகச் செய்து பார்க்கிறாள். ஆனால் அவள் ஒரு பெருவயி றுடையவள் போலாவாள். பெருவயிறன் தன் அமித போஜனத்தைக் கைவிட மனமில்லாமல், அஜீர்ணத்தால் உண்டாகி மூச்சைப் பிடிக்கும் பயங்கரக் கனவுகளை மருந்தினால் தீர்த்துக் கொள்ளலாமென்ற வீணாசையுறுவான். ஐரோப்பா தனது ராஜ்ய அமானுஷ்யத் தன்மையைக் கைவிட மனமில்லாதிருக்கிறாள். அதற்குச் சார்பான ஸகல நீச தரமான சித்த விருத்திகளையும் கைவிட விரும்ப வில்லை. உபாயங்களை மாற்றுவதில் நம்பிக்கை யுடையாள். சித்தத்தின் மாறுதலை வேண்டாள்.

அவர்களுடைய யந்திர அனுஷ்டானங்களை மூளையினல் விலை கொள்வோம்; ஹ்ருதயத்தால் கொள்ளவேண்டாம். அவற்றைச் சோதனை போடுவோம். அவற்றுக்குக் கொட்டகைகள் கட்டி வைப்போம். ஆனல் அவற்றை நமது வீடுகளிலும் கோயில்களிலும் தேவாஸனத்தில் வைக்கக்கூடாது. மிருகங்களைக் கொல்லுமுன்பு கும்பிட்டுக் கொல்லும் ஜாதிகள் உள. அவர்களிடம் நாம் பசித்தபோது மாம்ஸம் விலைக்கு வாங்குவோம். ஆனல் கொலையுடன் செய்யும் பூஜைகளையும் கிரயத்துக்கு வாங்கமாட்டோம். வியாபாரமும், யுத்தமும், ராஜ்யமும் வெகு முக்யமாதலால் அவற்றிலே லாபம்பெற யாது வேண்டுமாயினும் செய்யலாமென்ற மூடபக்தியால் நமது குழந்தைகளின் புத்தி கெட்டுப்போக விடமாட்டோம். மனிதனுடைய வியாபாரம் கேவலம் வியாபார தசைக்கு மேலே செல்லவேண்டுமென்பதை அறியக்கடவோம். போரும் அப்படியே. அரசும் அப்படியே. ஜப்பானில் உங்களுடைய சொந்தக் கைத்தொழிலிருந்தது. அது எத்தனை நாணயம், எத்தனை யோக்யம், எத்தனை உண்மையென்பதை நீங்கள் செய்த பண்டங்களாலே அறியலாம். அவற்றின் அழகு, பலம், பிறர் கண்டுபிடிக்கக்கூடாத சில்லரை விவரங்களிலேகூட மனம் பொய்யாமை, இவற்றைக் காணலாம். வியாபாரம் ப்ரதானமென்றும், யோக்யதை கேவலம் ஒரு சிறந்த தந்திரமென்றும் கொண்ட கண்டத்திலிருந்து பொய்மையின் வெள்ள அலை உங்கள் நாட்டின் மீது பெருகிவிட்டது. நகர முழுதிலும்

பொய்யும் புளுகுமாக வியாபார விளம்பரங்களை எழுதி ஒட்டிக் கெடுத்தது போதாதென்று, உழவர் யோக்யமாக உழைக்கும் பச்சை வயற்புறங்களிலும், உதயத்தின் தெளிந்த ஒளி முதலாவது படும் மலைச் சிகரங்களிலும் ஒட்டத் தலைப்பட்டு விட்டீர்களே— உங்களுக்கு வெட்கமில்லையா? மானத்தையும், உள்ள மென்மையையும் அடிக்கடி அழித்தழித்து மழுங்கச் செய்துவிடுதல் இக்காலத்தில் மிக எளிது. ஏனெனில் இப்போது பொய்கள் வர்த்தகமென்றும் அரசென்றும் தேச பக்தி யென்றும் பெயர் பூண்டு செருக்குடன் உலாவுகின்றன. எனவே, அவை நமது வாழ்க்கையில் ஒயாமல் தலையிட்டுக் கொண்டிருப்பதை நாம் கண்டித்தல் உண்மையான ஆண்மைக்குத் தகாத சித்தமென்மையாகக் கருதப் படுகின்றது.

இது எப்படி வந்து முடிந்ததென்றாலோ, மரணம் வந்தாலும் சொன்னது தவறார், அற்ப லாபத்திற்காகப் பிறரை வஞ்சித்தல் இகழ்ச்சி யென்று கொள்வார், போரிலும் மானங்கெட்ட செய்கை செய்வதிலும் தோல்வியே மேலென்று கொள்வார், அப்படிப்பட்ட வீரரின் மரபில் பிறந்த நீங்கள் பொய்களை அதிதீவிரமாக வழங்குதலும், அதனாலே லாபம் ஸம்பாதிப்பதும் இகழ்ச்சியில்லை யென்று கருதும் ஸ்திதிக்கு வந்து விட்டீர்கள். இது "நவீனம்" என்ற பதத்தின் மோஹத்தால் உண்டானது. வெறுமே பயனைக் கருதல் நவீனமாயின் அழகைத் தேடல் ஸநாதனம். அற்பமான அஹங்காரம் நவீனமாயின் மானுஷ்ய ஆதர்சங்கள் புரா

தனம். உபாயத்துக்கும் யந்திரத்துக்கும் வேண்டி மனிதனை நறுக்கி நொண்டியாக்குகிற திறமை எவ் வளவு "நவீன"மாயினும் அது நெடுங்காலம் வரை சாகாமல் பிழைத்திருக்க மாட்டாது.

ஆனல் நாம் ஐரோப்பாவின் மமதாவசனங்களி லிருந்து நம் மனதை விடுவித்துக்கொள்ள முயலும் போது, அந்த மோஹத்தின் புதைமணல்களி லிருந்து நாம் தப்ப வழி தேடுங்கால்,—மேற்கின் விஷயத்தில் முழுதுமே அவநம்பிக்கைப்படும் மற் ரோர் அந்தம்வரை போய்விடக் கூடாது.

மோஹாரம்பத்தில் உண்டாகும் மயக்கம் எவ் வளவு பொய்யோ, அவ்வளவு மோஹந் தீரும்போ தண்டாகும் விரோதமும் பொய். ஸஹஜமான மனநிலை வேண்டும். அங்குதான் நமக்கு வரும் விபத்துக்களைக் கண்டு விலகமுடியும். விபத்தை விளை வித்த பொருளிடம் விரோதமும் தோன்றுது. எப் போதும் இயற்கையிலே நம் மனதில் ஓரிச்சை தோன்றலாம்; ஐரோப்பாவுக்கு அது கொடுத்த காசையே திரும்பக் கொடுப்போமென; அதாவது, இகழ்ச்சிக்கிகழ்ச்சியும் தீமைக்குத் தீமையும் திருப் பிச் செலுத்துவோமென்று; அதுவும் பிழை; அதுவும் அஜ்ஞானம். மஞ்சளென்றும் செம்மை யென்றும் கருமை யென்றும் கபில வர்ணமென்றும் தான் நினைக்கும் ஜாதியாரிடம் அவள் நடந்து கொள்ளுகிற மாதிரியிலிருந்து வெளிப்படும் குணத்தை அவளுடைய கெட்ட காலத்தை அஜ்ஞானம் செய்வதாம். இந்த இடத்தில் இழுக்கினராகிய நாம் நமது குற்றத்தையும் ஏற்றுக்கொள்ள

வேண்டும். நமது பாவமும் அத்தனை பெரிது. அதனிலும் பெரிதென்று கூறலாம். நாமும் மனித ஜாதியை அவமதித்தோம். குறிப்பிட்ட மதம் அல்லது நிறம் அல்லது ஜாதியைச் சேராதவர்களை நாமும் இகழ்ந்து கொடுமை செய்தோம். வலிமையைக் கண்டஞ்சும் நமது பலக்குறைவினாலே, நாம் மதி சோர்ந்து அதற்கு பதிலாகப் பிறர் மஹிமையைக் கண்டு குருட்டுத்தனங் காட்டும் மற்றொரு பலக்குறைவிலே போய் விழுகிறோம்.

நல்லதும் பெரிதுமாகிய ஐரோப்பாவை நாம் அறிய முயலும்போது, அற்ப லோபி ஐரோப்பாவினிடமிருந்து நம்மைக் காத்துக்கொள்ளலாம். தன்பங்களை நோக்கும்போது மனிதன் தனது தீர்ப்பில் நியாயந் தவறுதல் சுலபம். மனம் கஷ்டப்படுகிறபோது கொள்கைகள் கட்டுவதிலிருந்து சூன்யவாதம் உண்டாகிறது. தோல்வி மிகவும் பெரிதாக இருக்கையிலே, நாசத்தின் ஆழத்திலிருந்து புதிய உயிரை எழுப்புகிற வலிமையைத் தனக்குக் கொண்டு தருகிற சக்தியினிடம் ஒரு ஜாதி நம்பிக்கை பிழக்கும்போது, அதற்கு மனுஷ்ய வாழ்க்கையிலேயே நிராசை தோன்றிவிடும். ஆத்ம, மானுஷ்ய விதிகளை மறக்கும், யந்திரம் போன்ற, அவஸரங்களையுடையதாய், ஆசையும், பெண்ணாசையும், சிசுவையும் தன் கீழே போட்டு நசுக்குகிற பெரிய கூட்டுறவுகளுக்கு விரோதமாகப் போராடும் ஜீவனென்று மேற்கின் கண்ணே இருக்கத்தான் செய்கிறது. அந்த ஜீவனுடைய புலனுணர்ச்சிகள் அதற்கன்பில்லாத ஜாதியாருடன் விவகரிக்கும்போது,

அவமதிப்புக்குரிய பயங்கரமான வழக்கங்களால் முழுதும் மழுங்கிப்போவதில்லை. மேற்கின் பலம் கேவலம் மிருக, யந்திர, பலம்போலிருந்தால், இத் தகீன உன்னத நிலைக்கு வந்திராது. அதன் ஸ்ருதி யத்தில் தெய்வாம்சம் இருக்கத்தான் செய்கிறது. அதன் கைகள் உலகத்திற்கிழைக்கும் தீமைகளை யெண்ணி அந்த அம்சம் கஷ்டப்படுகிறது.

அதன் உன்னத இயற்கையின் அந்த நோவி லிருந்து, ஒரு ரஹஸ்ய மருந்துத் தைலம் பொழி கிறது. அது அப் புண்களை ஆற்றும். மீட்டு மீட்டும் பலமுறை மேற்கு தன்னை எதிர்த்துப் போர் செய்து வருகிறது. தன் கையால் பலங் குறைந்தவருடம்பில் கட்டிய தளைகளைத் தானே வெட்டிற்று. பண ஆசையினால் ஒரு பெரிய தேசத்தின் தொண்டையில் விஷத்தை இறக்கிப் பிறகு விழித்தவுடன் தானே அந்த தேசத்தினின்றும் விலகிக் கையலம்பிக் கொள்ளும். இதனால் சித்தனவும், பலிதமற்றனவு மாகத் தோன்றுமிடங்களிலே கூட மானுஷ்யத்தின் ரஹஸ்ய ஊற்றுக்கள் இருப்பதாக ருஜுவாகிறது. இத்தனை குரூரமான கோழைத்தனத்திற்கும் மிஞ்சி யிருக்கும் அதன் ஆழ்ந்த உண்மை லோபமன்று. பரோபகார ஆதர்சங்களில் அதற்குள்ள பக்தி யென்று ருஜுவாகிறது.

நவீனக் நிழக்கின் புத்தியை அது வெறும் வெளிப் பகட்டினால் மாத்திரமே மோஹிப்பித்து விட்ட தென்றல் ஐரோப்பாவுக்கும், நமக்கும் ஒருங்கே அநீதி செய்தலாம். அதன் தர்ம ஒளி பீரங்கிப் புகை, சந்தைப் புழுதிகளை ஊடுருவியும்

தெளிவுற விளங்குகிறது. அது நமக்கு தார்மிக விடுதலையின் ஆதர்சத்தைக கொணர்ந்து கொடுத்தது. இதன் அஸ்திவாரம் ஜன ஸங்கேதங்களுக்குக் கீழே நெடுந்தூரம் சென்றது. இதன் செய்கை மண்டலம் பூலோக விசாலம்.

தன் அருவருப்பை மீறியும், தான் ஐரோப்பாவிடம் அதிகார வழிகளைப் பற்றி மாத்திரமேயல்லாமல், மானஸிக தார்மிக லோகச் செய்திகளும் பல கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஸ்வபாவத்தினாலே தெரிந்து கொண்டது கிழக்குத் திசை. இன்னும் ஐரோப்பா நமக்குக் கற்றுக் கொடுத்தனவாவையென்றால், குடும்ப ஜாதிகளின் நலத்தைக் காட்டிலும் உலக நன்மையின் உயர்ந்த கடமைகளே மேலென்றும், சட்டம் புனிதமென்றும் காட்டிற்று.

சட்டம் பரிசுத்தமென்பதால், ஸமூஹம் தனி மனுஷ்யனுடைய சேவ்டைகளைக் கடந்ததாகிறது. ஸமூஹ அபிவிருத்தியிலே தொடர்ச்சி தவறுகிறது. எல்லா நிலைமைகளில் உள்ள எல்லா மனிதருக்கும் நியாயம் கிடைக்கிறது. இஃதனைத்திலும் விசேஷம் யாதெனில், அவள், (ஐரோப்பா,) நமது கண் முன்னே, பல நூற்றாண்டுகள் வருந்தி வித்தி பெற்று, விடுதலையின் கொடியைத் தூக்கிக் காட்டுகிறாள். கொள்கையில் விடுதலை, யோசனையில் விடுதலை, செய்கையில் விடுதலை, கலையிலும் இலக்கியத்திலும் ஆதர்சங்களிலும் விடுதலை!

நம் ஆழ்ந்த மதிப்பை ஐரோப்பா வென்ற படியாலேதான், அவள் சண்டைக்கிடமான பலவீ

னத்தையும், பொய்மையையும் காட்டுகையில் நமக்கோரபாயமாகிறாள். மிகவும் சிறந்த உணவுடன் சேர்த்துக் கொடுக்கும் விஷத்தைப் போலாகிறாள். நமக்கோரிடத்தில் சேஷமமுண்டு; அதை எப்போதும் நம்பலாமென்று நம்புகிறோம். எங்ஙனமெனில், அவள் மயக்குக்களையும், கடுமையான ஆக்ரமணங்களையும் நாம் எதிர்ப்பதில் அவளையே துணை கூப்பிடலாம். நிறைவின் அளவொன்று தன் சொந்தமாகக் கொண்டு சுமந்து வருகிறாள். அந்த அளவு கொண்டே அவளுடைய வீழ்ச்சிகளையும், தோல்விப் படிகளையும் அளக்கலாம். அதனால் அவளை அவளுடைய சொந்த நியாய ஸ்தலத்தின் முன்னே இழுக்கலாம். வெட்கப்படுத்தலாம். அந்த வெட்கம் உண்மையான பெருந்தன்மையின் மானத்திற்கு லக்ஷணம்.

அவள் கொடுக்கும் உணவைக் காட்டிலும் விஷம் வலிதாய் விடுவதை அஞ்சுகின்றோம். இன்று அவளிடம் வலிமையாகக் காண்பது ஸௌக்யத்தின் அடையாளமன்று போலும். எதிரிடையாக, உயிரின் தராசு கவிழ்ந்தபடியால் அது சிறிது காலத்துக்கு வெளியே தோன்றுவதோர் பொருள்போலும். தீமையானது விதியைப்போலே மோஹத்தில் வீழ்த்தும்—அதன் அஸுரப் பெரு வடிவங்களிலே—என்றஞ்சுகிறோம். இறுதியில் அதன் வரம்பு கடந்த அளவுப் பிழையினால் நடுநிலை தவறி விழுந்துவிடுமென்பது மெய்யேயாயினும், அது விழுமுன் விளைக்கும் கஷ்டம் பின்பு நீக்கமுடியாததாய் விடலாம். ஆதலால் நான் உங்களைப் பிரார்த்திக்கிறேன்,

பக்தி வலிமையும் மனத் தெளிவும் கொண்டிருங்கள்.

"ஸாமர்த்ய" மென்னும் இரும்புத் தாழ்களால் இணைப்புண்டதும், அவா என்னும் சக்கரங்களின் மீது செல்வதும் ஆகிய "நவீன முன்னேற்றம்" என்னும் ஆபாஸ நிர்மாணம் நெடுங்காலம் ஒன்று சேர்ந்திராது. மோதல்கள் நேரிடத்தான் செய்யும். அது ஸங்கேதக் கோடுகளின் மேலே செல்லுகிறது. ஸ்வேச்சைப்படி தன் கதியை நிர்ணயித்துக் கொள்ள முடியாதபடி, அத்தனை அதிக பார முடையது. இதனை அறிந்து கொள்ளுங்கள். தண்டவாளத்தைவிட்டு நழுவினால் அதன் எண்ணற்ற வண்டித் தொடர்கள் தடுமாறிப் போகும். ஒரு நாள் இது நாசக் குப்பையிலே சிதறி விழும் போது உலகத்தின் வியாபாரத்துக்குப் பெரிய கஷ்டமான தடையாகும். இப்போதுகூட இதன் அடையாளங்கள் தெரியவில்லையா? யுத்த மூழக்கத்துக்கிடையே, பகைமையின் அலறுதல், நிராசையின் ரோதனங்கள், இந்த நாகரிகத்தின் அடியிலே பல காலமாகச் சேகரிப்புற்றுவரும் சொல்ல முடியாத மலத்தின் கடைதல், இவற்றுக்கிடையே இவற்றை ஊடுருவி நமக்கொரு வாக்கு வரவில்லையா? அந்த வாக்கு: "ஜாதி அஹங்காரமென்ற கோபுரம் தேசபக்தி என்ற புனைபெயர் கொண்டதாய்த் தன் துரோகக் கொடியை வானத்துக்கெதிரே காட்டுகிறது. இது தன்பாரம் பொறுமல் அசைந்து சடேலென்று விழும். இதன் கொடி மண்ணைத் தழுவும். இதன் ஒளி அவிந்துபோம்" என்று நமது ஜீவனுக்

குக் கூறவில்லையா? எனது ஸஹோதரரே, படர்ந் தெரியும் செந்தீ வானத்து மீன்களுக்கெதிரே சலசலவென்று நகைக்கும்போது, வானத்து மீன் களை நம்புங்கள்—நாசத் தீயை நம்பவேண்டாம். இந்தத் தீ அவிந்து தானே மடியும்போது, அதன் ஞாபகச் சின்னம் சாம்பலிலே கிடக்க நித்யமான ஒளி கிழக்குத் திசையிலே தோன்றும். கீழ்த் திசையே மனித நாகரிகத்தின் உதய ஸ்தானம். அப்படிப்பட்ட நாள் ஏற்கெனவே பிறந்துமிருக் கலாம். யாரறிவார்? ஆசியாவின் கிழக்கோரத்து வானடியில் அந்த ஸூரியன் தோன்றிவிட்டானே? எனது முன்னோர்களாகிய ரிஷிகள் செய்தது போலே நானும் இந்தக் கீழ்த்திசை உதயத்துக்கு வந்தனம் சொல்லுகிறேன். இஃது பூமண்டல முழு தையும் ஒளியுடையதாக்கும். இது விதி.

பேரிரைச்சலுடைய அக்காலத்தின் கூக்குர லுக்கு மேலே எனது சத்தம் பெரிதாகக் கேட்கும் படி செய்ய என்னால் முடியாது. என் சத்தம் அதி பலஹீனமென்பதை நானறிவேன். தெருவிலே போகும சிறுவன்கூட என்மீது "லௌகிக மறியாத வன்" என்ற அடை மொழியை வீசி யெறியலாம். அது என்னுடைய சட்டையின் வாற்புறத்தில் ஒட்டிக்கொண்டு, அழிக்கமுடியாமல் போய்விடலாம். அதனால், "மரியாதையுள்ள கிரஹஸ்தர்"களின் மதிப்புக்கு நான் பாத்திரமாகாமல் போய்விடலாம். ஸிம்ஹாஸனங்கள் மதிப்பிழந்து போகவும், தீர்க்க தர்சிகள் அகால வஸ்துக்களாகவும், ஏற்பட்ட இந்தக் காலத்தில்—எல்லா வாக்கையும் மிஞ்சிச்

சந்தை யிரைச்சல் பெரிதாகக் கேட்கும் இந்த நாட்களில்—ஒருவன் "ஆதரிசி" (உத்தம தர்மத்தையே நாடுவோன்) என்று பெயர் வாங்குவதனால், தடியடிக் கூட்டத்தாரிடமிருந்து அவனுக்கு அபாயம் நேரிடக் கூடுமென்பதையும் அறிவேன்.

எனினும், ஒருநாள் நான் நவீன விநோதங்கள் மலிந்து கிடக்கும் யோகோஹாமா பட்டணத்தின் வெளிப்புறத்தில் நின்று உங்கள் தென்கடலில் பொழுது சாய்வதைக் கண்டேன். தேவதாரு மரங்கள் நெடித்த குன்றுகளுக்கிடையே ஸூர்யாஸ்தமயத்தின் சாந்தியையும் மஹிமையையும் நோக்கினேன். பொன்னிறமான வானடிக்கு நேரே, பூஜியாமாவின் மலையொளியானது தன்னொளியில் தான் மங்கும் தேவனைப்போலே மங்கலாயிற்று. மாலையின் மோகனத்திடையே நித்ய காலத்தின் ஸங்கீதம் பொங்கி வந்தது.

அப்போது கருதினேன்:—வானமும் பூமியும் உதயாஸ்தங்களாகிய கவிதைகளும் ஆதர்சிகளுக்கும் புலவர்களுக்குமே அனுகூலம்; ஹ்ருதய ராகங்களினிடம் திடமான இகழ்ச்சியடைய சந்தைக்காரர் சார்பில்லை. தனது தேவத் தன்மையை மறந்து நிற்கும் காலம் மாறி மறுபடியும் மனிதன் வானம் எப்போதும் மண்ணைத் தீண்டி நிற்கிறதென்ற ஞாபகமெய்துவான். மனுஷ்ய ரக்தத்திற்கு மோப்பங்கொண்டு வானத்தை நோக்கி அவனும் நவீன காலத்து வேட்டை ஓநாய்களின் வசத்தில் மண்ணுலகம் ஸதாகாலத்துக்கு விட்டுவைக்கத் தக்க தன்று—என்ற நினைப்பு மனிதனுக்கு மீண்டு வரும்.

குறிப்பு:—இந்த உபன்யாஸம் ஸ்ரீமான் டாகூர் ஜப்பானில் செய்தது.

"ஜப்பானுடைய ஜீவன்" என்ற வ்யாஸம் மூற்றிற்று.

குறிப்பு:— மஹிந்திரநாத தாகூர் 1917-லேயே ஜப்பானுக்கு அளித்த இந்த உபதேசத்தையும் எச்சரிக்கையையும் அந்நாடு கவனித்திருந்தால் இரண்டாவது உலக யுத்தத்தில் அதன் நிலை கீர்குலைந்திருக்காது. சீனாவில் ஜப்பான் நடந்துகொண்ட விதத்தைக கண்டே தாகூர் உள்ளம் வருந்தினர். இக் கட்டுரையில் கண்டுள்ள உபதேசத்தை ஜப்பான்மட்டுமல்ல கிழக்கு நாடுகள் அனைத்தும் கைக்கொண்டால் அவற்றிற்கு நிலைத்த க்ஷேமமுண்டாகும்.

கட்டுரையின் முடிவிலே 'ஜப்பானுடைய ஜீவன்' என்று தலைப்புக் கூறப்பட்டிருக்கிறது.

கல்வி கற்பிக்கும் பாலை

கல்வியினால் பயனுண்டா இல்லையா என்பதைக் குறித்துப் பேசுவதே மிகை. எனினும் அதைக் குறித்து விவாதங்கள் சில ஸமயங்களிலே ஏற்படுதல் காண்கிறோம். உழுவோனுக்குப் படிப்பு வந்தால் உழவுத் தொழில் நின்றுபோமென்றும், பெண்ணுக்குக் கல்வி கற்பித்தால் அவளுடைய பதியும் ஈசனுமாகிய கணவனுக்கு மேலே ஆராதனை நடத்த மாட்டாளென்றும் பலர் ஐயப்படுகிறார்கள்.

கண்ணிலே தூணியைக் கட்டி ஓட்டுவதே செக்குச் சுற்றுகிற மாட்டுக்கு நல்லது. அதற்கு வெயிலொளி யெதற்கு? மாமூலாகிய செக்கைச் சுற்றிக் கொண்டிருப்பதே மனிதனுக்குப் பரம தர்ம மென்று கருதப்படும் இந்த நாட்டில் 'மேதாவிகள்' எல்லாவிதமான ஒளியுமே மனிதனுக்குப் பகை யென்று கருதி வெறுத்தல் ஸஹஜந்தானே?

எனினும் பகலொளி நமக்குக் காரியத் தூண்டா மாத்திரமன்று; கண் விழிக்கச் செய்யும் கருவியும் அதுவே. இதனிலும் முக்யமான விஷயம் யாதெனில்; ஒளியில் ஜனங்கள் கூடுகிறார்கள்; இருளிலே பிரிந்து செல்லுகின்றனர். மனிதனிடம் அறிவுதான் ஒற்றுமைக்கு மிகப் பெரிய ஸாதனம். வங்காளத்தில் ஒரு மூலையிலுள்ள மாணாக்கனுக்கும், ஐரோப்பாவின் கோணமொன்றிலுள்ள படிப்

பாளிக்கும் நெருக்கம் அதிகம். இந்த ஐரோப்பிய னுக்கும் இவனுடைய பக்கத்து வீட்டில் அக்கரம் தெரியாமல் குடியிருப்பவனுக்கும் உள்ள நெருக்கம் குறைவு. அறிவினல் உலக முழுதும் ஒன்றுபட்டுக் காலதேசங்களால் நேரிடும் பேதங்களெல்லாம் நீங்கி விடுமென்ற பெரும் பயன் ஒருபுறமிருக்க, எந்த மனித ஜந்துவும் கல்வியால் உண்டாகும் பெரு மகிழ்ச்சி பெறுதவண்ணம் எந்தக் காரணம் பற்றி யும் தடுத்தல் எவ்வளவு அஸம்பாவித மென்பதை இங்கு கருதுவோம்.

நமது ஹிந்து தேசத்தில் இந்த அறிவின் தீபங் கள் எத்தனை மங்கலாகவும் இடைவிட்டும் எரிகின் றன என்பதை யோசிக்கும்போது, உலகத்தார் அனைவரும் இக்காலத்தில் நாடிச் செல்லும்—'அறி வினல் ஒற்றுமைப்படுதல்' என்ற—பாதை நமக் கெவ்வளவு கஷ்டமென்பது தெளிவாகும். கல்வி முறையைச் சீர்திருத்தும் பொருட்டு இடையிடையே இந்நாட்டில் சில காரியங்கள் செய்யப்படுகின்றன. எனினும் அதன் பரவுதலுக்குள்ள தடைகள் எப் போதும்போல் மகத்தாகவே இருக்கின்றன.

நாட்டோரத்தில் நதி பாய்ந்து செல்லுகிறது. மழையோ வான்முழுவதினின்றும் பெய்கிறது. ஆதலால் பயிருக்குத் தோழமை செய்வதில் வானத் தைக் காட்டிலும் நதிக்குத் தாழ்ந்த ஸ்தானம். மேலும், நதியின் ஆழமும் நிறமையும் மழையைப் பொறுத்து நிற்பன. இடியாயுதம் கொண்ட இந்திர னுடைய பதவியிலிருந்து நமது நாட்டை ஆளும் அதிகாரிகள் ஏராளமாக இடியிடிக்கிறார்கள். மழை

கொஞ்சந்தான் பெய்கிறார்கள். வங்காளிகளின் கல்வி முயற்சி எவ்வளவு குறைந்த பலன் தருகிற தென்று நகைக்கும் அவர்களுடைய பரிஹாஸ மின்னலும் மேடி இடிகளுடன் கலந்து வெட்டுகிறது. அதிர்ஷ்டஹீனராகிய வங்காளிகளைப் பழுக்கவைத் ததுபோலே கல்வி யிலாகா அதிகாரிகளையும் மண் ணுக்குள்ளே போட்டுப் பழுக்க வைத்திருந்தால், இப்படி ஓரத்தில் மென்மையாகவும் நடுவில் காயா கவும் இருப்பதன் காரணம் பழுக்க வைக்கையிலே வெயிலொளிபடாத குற்றமென்பதை அவர்கள் சாஸ்த்ர ஹேதுக்களுடன் நிரூபணம் செய்ய முற்பட் டிருப்பார்கள்.

மேற்கு நாட்டார் மேற்கேயே இருந்துகொண்டு, கீழ்த்திசையின்மேல் ஏறி வாராதிருந்த காலத்தில், இந்த தேசத்துத் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும், சாஸ்திர பாடசாலைகளிலும் நடந்த தார்க்கிக குஸ்தி களையும், இலக்கண வலைப்பின்னல்களையும் காட்டி 'நாங்கள் வருமுன்பும் உங்கள் கல்விப் பயிற்சி அத்தனை சிறப்பில்லை, கண்டீர்' என்று மேடி அதி காரிகள் ஆக்ஷேபவுரை கூறலாம். இதுவெல்லாம் இருந்தது மெய்தானென்பதை நானும் அங்கீகாரம் செய்து கொள்ளுகிறேன். எந்த நாட்டிலும் பழைய பண்டித வழக்கங்களைச் சொல்லுதல் மிகவும் சிரமம். அவை இங்கும் இருக்கத்தான் செய்தன. வீழ்ச்சிபெற்ற நாட்டிலே கல்வியின் உள் ஸாரத் தைக் காட்டிலும் புறக்கோலங்களே மேலாக பாவித் தல் ஒருவேளை அதிக சுலபமாகலாம். ஆனால் மூலை களிலேயிருந்த "பண்டிதர்" மாத்திரமே தமது

பாண்டித்யத்தை இப்படி விழலாக்கி வந்தனர். மற்றப்படி அவ்வக்காலத்திற்குரிய பொது அறிவுப் பயிற்சி தேச முழுதிலும் யாதொரு தடையுமின்றிப் பரவி வந்தென்பதில் ஐயமில்லை. கலப்பை உழும் உழவனும், அந்தப்புரத்து ஸ்த்ரீயும் ஜீவசக்தி பெறும்படி அந்தப் பயிற்சியாகிய ஜீவநதி அவர் களுக்கும் போய்ச் சேர்வதற்குரிய வாய்க்கால்கள் இருந்தன. ஆதலால், வேறெவ்விதமான குறைகள் இருந்தாலும், ஜனஸமூஹம் தன்னிலேதான் நிறைவு பெற்றிருந்தது.

நமது தற்காலத்து அன்னியக் கல்வியோ அப் படியில்லை. இது பள்ளிக்கூடம் அல்லது கலாசாலை யுடன் நின்று போகிறது. அந்தப் படிப்பை நாம் பள்ளிக்கூடத்திலேயே குறிப்பலகைபோல் கட்டித் தொங்கவிட்டு வருகிறோம். அது நம்முடைய உயிரில் கலக்கவில்லை. அது நம் குறிப்புப் புஸ்தகங்களில் அடங்கிப்போகிறது. நமதெண்ணமாகவும் செயலாக வும் உருமாறுவதில்லை. நமது தேசத்து வித்வான் களில் சிலர் மேடை கல்வியின் அன்னியத் தன்மையே இதன் காரணம் என்று சொல்லுகிறார்கள். இதை ஏற்றுக்கொள்ள எனக்கு விருப்பமில்லை; ஏனெனில் உண்மைக்கு பூமி சாஸ்திர வரம்புகள் கிடையா. கிழக்கே கொளுத்திய தீபம் மேற்குக் கண்டங் களுக்கும் ஒளிதரும். இல்லாவிடில், அதற்கு ஒளியே யில்லை யெனலாம். இந்தியாவுக்கு மாத்திரந்தான் நன்மை தருமென ஒரு ஜ்யோதி யிருந்தால், அது நன்மையேயில்லை யென்று நான் உறுதியாகக் கூறுவேன். இந்தியாவுக்கென்று ஒரு தனிக்

கடவுள் வைத்தால், அது நம்மை உலகப் பொது வாகிய கடவுளின் ராஜ்யத்துக்குள் புகவொட்டாமல் தடுக்கும்.

உண்மை யாதெனில் நமது நவீனக் கல்விக்குத் தகுந்த வாறனம் கிடைக்காதபடியால், அது தாராளமாக முன்னேற்றம் பெற இடமில்லை. அறிவு மனிதருக்கெல்லாம் பொதுவென்பதை உலக முழுதும் ஒப்புக் கொள்ளுகிறது. எக்காரணத்தாலோ இந்த மாகாணத்தில் மாத்திரம் அக்கொள்கை அங்கீகாரம் பெறவில்லை. மஹான் கோகலே இந்த விஷயத்தில் மிகவும் பாடுபட்டார் அவருக்கு வங்காளத்திலேதான் அதிகத் தட்டுதல் உண்டானதாகத் தெரிகிறது. ராஜ்ய ஆகர்சங்களாகிய வானத்தில் ஏறிப் பறக்க நிச்சயித்திருக்கும் நாம், மற்றப்படி ஜன வாழ்க்கையில் பின்னே நடந்து செல்ல எண்ணங் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

பொதுஜனக் கல்வியே உயர்தரக் கல்வியின் வேர்களுக்கு ஜீவரஸமேற்றுகிறது. அந்தப் பொதுக் கல்வி இந்நாட்டில் இல்லை. அதனுடன் இப்போ தொரு புதிய தொல்லையும் வந்து சேர்ந்திருக்கிறது. ஏற்கெனவே பள்ளிக்கூடத் தொகை குறைவு. அது போதாதென்று, பள்ளிக்கூடங்களின் இட அளவைக் குறைத்து ஸாமான்களை அதிகப்படுத்தி, அவற்றின் பயனைக் குறுக்க வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. மாணக்கர் இல்லாவிட்டால் பெரிதில்லை, பாடசாலைக்கு வேண்டிய உபகரணங்கள் குறையக்கூடாதென்பது அதிகாரிகளுடைய கக்ஷி.

மனிதனுக்கு உணவும் வேண்டும்; அதை வைத்துண்ணப் பாத்திரங்களும் வேண்டு மென்பதை நான் கன்றுக அறிவேன். ஆனல் ஆஹாரமே குறையு மிடத்தில் பாத்திரம் வாங்குவதிலே அதிகப் பணம் செலவிடக் கூடாது. பாரத தேச முழுமைக்கும் அறிவாகிய உணவு இலவமாகக் கொடுக்கும் அன்ன ஸத்திரங்கள் ஸ்தாபனமான பிறகு, அதனை வைத்துண்ண நாம் தங்கத் தாம்பாளம் வேண்டுமென்று பிரார்த்தனை பண்ணலாம். நாம் ஏழ்மைக் கிரைப் பட்டு நிற்கையிலே, கல்விக்குரிய உபகரணங்களை அதிகச் செலவுக் கிடமாக்குதல், ஒருவன் தன் பண முழுதையும் கொடுத்துப் பணப் பைகள் விலைக்கு வாங்கும் மடமைபோலா கும். முற்றத்தில் பாய்களை விரித்து நம்முடைய ஜனக் கூட்டங்கள் கடைபெறுகின்றன. நமது பெருஞ் செல்வர் வீட்டு விருந்துகளுக்குக்கூட வாழை யிலை போதும். நாம் முடிவணங்கும் நமது தேசத்து மாஹான்களிலே பலர் குடிசைகளில் பிறந்து வளர்ந்தோர். ஆதலால், லக்ஷ்மியினிடம் வாங்கின இரவல் கோலங்களால் ஸரஸ்வதி கோயிலை அலங் காரம் செய்தாலொழிய நிறைவுண்டாகாதென்ற கொள்கையை நமது நாட்டில் யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

உலக வாழ்க்கை யென்பதொரு சங்கைக்குக் கிழக்குத் திசையாராகிய நாம் தனித் தீர்ப்புக் கண்டு பிடித்து வைத்திருக்கிறோம். நமக்கு வேண்டிய உணவும் உடையும் சொற்பம். நமது நாட்டு சீதோஷ்ண நிலைமையினல் இஃது ஸத்யமாகிறது.

நமக்குச் சுவரைக்காட்டிலும் சாளரம் அதிக அவசரம். நமது வஸ்திரங்களுக்குத் தறியினிடத்தேயுள்ள ஸம்பந்தத்தைக்காட்டிலும் ஒளியுடனும் காற்றுடனும் அதிக ஸம்பந்தம். பிறதேசங்களில் ஆஹார பதார்த்தத்திலும், மடைப்பள்ளி வேலையிலும் சேரும் உஷ்ணம் இங்கு நமக்கு ஸௌர்யன் நேராகவே தருகின்றான். இந்த இயற்கை ஸௌகர்யங்கள் நமது வாழ்கையை ஒருவித வடிவத்திலே சமைத்திருக்கின்றன. அவ் வடிவத்தை நமது கல்வி விஷயத்திலே மறத்தல் நமக்கு லாபகரமன்று.

நான் வறுமையைக் கீர்த்திக்க வரவில்லை. வறுமை தமோகுணப் பயன்; அது மிகத் தாழ்ந்தது. ஆனல் செல்வத்தின் இன்பங்களைக் காட்டிலும், டம்பமில்லாமை அதிக விலையுடையது. அது ஸத்வ குணப்பயன்; மிகவும் உயர்ந்த பொருள். வெறுமே அமித போகங்களைக் குறைத்ததன் பயன் மாத்திரமன்று; நான் சொல்லும் டம்பமின்மை நிறைவுக்கொரு குறி. இது மனுஷ்ய ஜாதிக்கு வசப்பட்டால், இப்போது நாகரிகத்தை மறைக்கிற மூடுபனி விலகிப் போகும். டம்பத்தாலேதான் ஜீவனுக்கு அவசரமான பண்டங்கள் அளவு குறைந்தும் விலையேறியும் போகின்றன.

நாகரிக லோகத்தில் பெரும்பான்மையான வஸ்துக்கள் உண்ணல், களித்தல், கல்வி, பயிற்சி, அரசு, வ்யாஜ்யம் முதலியன—தத்தமக்குரிய எல்லையை மீறி அதிக எல்லையை வ்யாபித்து நிற்கின்றன. இவற்றல் உண்டாகும் சுமையில் பெரும் பகுதி அநாவசியம். இதைச் சுமப்பதில் மனிதன்

தனது பெரிய பலத்தைக் காட்டுகிறானே யொழிய, புத்திக் கூர்மை காட்டவில்லை. இதை வானத்திலிருந்து பார்க்கும் தேவர்களுக்கு—ஒரு ராக்ஷஸன் குளத்தில் அதிக ஆழத்திலிறங்கி, நீச்சுத் தெரியாமல் தத்தளிக்கையில், அவன் குள முழுதையும் தன் வீணை வலிய முயற்சிகளால் குழப்பிக்கொண்டு, இங்ஙனம் குழப்புவதால் ஏதேனும் லாபம் கிடைக்குமென்ற மூட நம்பிக்கை கொள்வதுபோலே தோன்றும்.

ஸம்பூர்ண குணத்தில் உண்டாகும் எளிமை, டம்பமில்லாமை, மேற்குத் திசையில் தோன்றினால், பிறகு அவர்கள் வீட்டு கடைகளிலே ஜப்பானிய விசிறிகளும், சீனத்துப் பிங்கான் தட்டுக்களும், மான் கொம்புகளும் இரா. அவர்கள் வீட்டு மூலைகளிலே குவித்து வைத்திருக்கும் தட்டுமுட்டுக் குப்பையெல்லாம் மறைந்துபோகும். அவர்களுடைய ஸ்த்ரீகளின் டொப்பியிலுள்ள பக்ஷிச் சிறகுகள், செயற்கைப் பூக்கள் முதலிய விகாரங்களெல்லாம் மறைந்துவிடும். அவர்களுக்குப் பின் அநாகரிகங்களும், மிகைகளும் காட்சி மண்டபத்திலே விநோதங்களாகக் கொண்டு வைக்கப்படும். அவர்களுடைய கப்பல்களின் ஆகாசப் பாய்கள் வெட்கித் தலை குனியும்.

அப்போது தொழிலும் இன்பமும் கல்வியும் எளிதாகி உண்மையான வலிமை பெறும். இஃதெல்லாம் எப்போது கடைபெறுமென்பதை நானறியேன். இது நடக்கும்வரை நாம் தலைவணக்கத்துடன் 'உயர்ந்த கல்வி உயர்ந்த கட்டிடங்களிலேயே

கிடைக்கும்' என்ற உபதேசத்தைத் தான் கேட்டுக் கொண்டு பொறுத்திருக்க வேண்டும்.

ரூபங்களும், புறக்கோலங்களும், எதுவரை ஜீவனுடைய லக்ஷணங்களாகத் தோன்றுமோ அதுவரை அவற்றைப் புறக்கணிப்பது லாபமில்லை யென்பதை நானறிவேன். ஆனால் இதில் பொன் போலப் போற்றத் தகுந்த நடுமை நிலையை எய்த வேண்டுமென்று ஐரோப்பா மிகவும் முயற்சி செய்து பார்த்தும் கைதேறவில்லை. அப்படியிருக்க நாம் அந்நிலையைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யுமிடத்து நமக்கேன் தடைகள் செய்யவேண்டும்? அந்த நடு நிலை யாதெனில் டம்பமில்லாமலு மிருக்க வேண்டும்; ஏழையாகவும் கூடாது. இந்த விவகாரத்துக்கு அவனவன் தன் குணத்துக்குத் தக்க உபாயம் கண்டுபிடித்துக்கொள்ளுதல் தகும். பிறரிடமிருந்து கல்வியின் விஷயத்தை அறிந்துகொள்ள நாம் எப் போதும் தயார். ஆனால் பிறர் குணத்தையும் நமக் குள்ளே புகுத்த முயலுதல் நியாயமில்லை.

மேற்குத் திசையின் ஸ்வீகார புத்திரர் தமது ஸ்வீகாரத் தந்தையைவிட ஓரடி அதிகமாகவே பாய் கிறார்கள். அமெரிக்காவில் ராஜாங்கத்தார் பல பெரிய பாடசாலைகள் நடத்துகிறார்கள். அங்கு பிள்ளைகள் கொடுக்கவேண்டிய சம்பளம் சொற்பத் திலும் சொற்பம். ஐரோப்பாவிலும் ஏழைப் பிள்ளை களுக்காக மிகவும் குறைந்த சம்பளத்தில் பல பாட சாலைகள் நடக்கின்றன. நமது நாட்டில் வறுமை அதிகமென்பதைக் கருதி இங்கு படிப்பின் செல வைப் பிள்ளைகளுக்கு மிகுதியாக்குகிறார்களா? கல்வி

யை விற்பதும் விலை கொள்வதும் வழக்கமில்லாத காலமும் நமது நாட்டில் இருந்ததன்றே ?

பிற நாடுகளில் ஜனங்களுக்குக் கல்வி தருதல் ராஜாங்கத்தார் மிகவும் அக்கறையுடன் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றாக பாவிக்கப்படுகிறது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஜப்பானிலும் படிப்பு விஷயத்தில் பொதுப் பணம் செலவிடக் கூசுவதே கிடையாது. ஆதலால், கல்வி அதிக ஜனங்களுக்குக் கிடைக்கிறது. எனவே படிப்பை எத்தனைக் கெத்தனை பிள்ளைகளுக்கு சிரமமாகவும் செலவாகவும் செய்கிறோமோ, அத்தனைக் கத்தனை தேசத்துக்கு நன்மையென்ற வார்த்தை எத்தனைக் கெத்தனை உயர்ந்த ஆஸனத்திலிருந்து எத்தனைக் கெத்தனை சத்தம் போட்டுச் சொல்லப் படுகிறதோ, அத்தனைக் கத்தனை அதிகப் பொய்யாக நமது காதில் படும்.

வயதாக வயதாக கனம் அதிகப் படுதல் நோயற்ற குழந்தைக்கு லக்ஷணம். கனம் அதிகப் படாமலிருந்தால் நல்லதன்று. கனம் குறைந்தாலோ பயப்பட வேறது. அதுபோல் நம்முடைய தேசத்திலும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் தொகை வருஷந்தோறும் அதிகப்பட வேண்டுமென்று தேசாபிமானிகள் விரும்புகிறார்கள். ஏற்கெனவே இங்கு கல்விநிலம் பெரும் பகுதி தரிசாகக் கிடக்கிறது. அத்தொகை மிகுதிப் படாதிருந்தால் நமக்கு வருத்தமுண்டாகிறது. தொகை குறைந்தாலோ மரணம் நேரிடுமென்றஞ்சி நம்மவருக்கு பயமுண்டாகிறது.

வங்காளத்தில் பள்ளிப் பிள்ளைகளின் தொகை குறைந்து வருவதாகத் தெரிந்து, ஒரு ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை மிகவும் ஆனந்தமடைய லாயிற்று. "ஆஹா! வங்காளிகளுக்குக் கல்வியில் உள்ள அபிமானம் இவ்வளவுதானா? கோகலேயின் கட்டாயப் படிப்பு மசோதா சட்டமாயிருந்தால், அது படிக்க ஸம்மதமில்லாத வங்காளிகளுக்குப் பெருங் கொடுமையாக முடிந்திருக்குமன்றே என்று கூறி ஏளனம் புரிந்தது. இவை குரூரமான வார்த்தைகள். தனது ஸ்வதேசத்தைக் குறித்து எவனும் இந்த மாதிரி வார்த்தை சொல்லியிருக்க மாட்டான். இன்று இங்கிலாந்தில் கல்வி விருப்பம் திடீரென்று குறைவுபட்டால், இதே பத்திரிகை உபாயங்களால் அவ் விருப்பத்தைத் தூண்டிவிட வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கும்.

எனினும், இவர்கள் தமது நாட்டுக் கிரங்குவது போல் இந்தியாவுக்கிரங்குவார்களென்று நம்புதல் அவமானத்துக் கிடமாகும். ஆயினும், தேச பக்தியின் அவஸரங்களையெல்லாம் திருப்தி செய்து கொண்ட பிறகு, பின்னும் கொஞ்சம் நல்லெண்ணம் மிஞ்சி லோகோபகாரமாக வடிவெடுத் திருந்தாலும் பெரிய காரியமன்று. மனிதனுடைய தர்ம சிந்தையின் அபிவிருத்தியிலே, தற்கால நிலைமையில், இதர தேசத்தாரை நஷ்டப்படுத்தி ஸ்வதேசத்துக்குப் பொருளும், பலமும் தேடுதல் ஸாத்யமாகிறது. எனினும் ஆரோக்யம் குறைவுபட்டு வரும் தேச மொன்றைப் பார்த்து, அதற்கு வைத்தியர் ஏற்படுவதைக் காட்டிலும், பாடை தூக்குவோர் தயார்

பண்ணுவதே செலவு குறைந்த உபாயமென்று சொல்ல இடம் கொடுக்கக் கூடாது.

எனினும் நமக்குள் சுதேசிய ஞானம் தகுந்தபடி ஏற்படாத காரணத்தாலே தான், பிறர் நமது லௌகீக அவஸரங்களையும், கல்வி யவஸரங்களையும் இத்தனை இகழ்ச்சியாகக் கருத நேரிடுகிறது. இது மறுக்க முடியாத விஷயம்.

நமது தேசத்துக்கு நாம் செலுத்தும் மதிப்பைக் காட்டிலும் அன்னியர் அதிக மதிப்புச் செலுத்த வேண்டுமென்று முயற்சி செய்தல் ஒருவித வஞ்சனை, அது ஏமாற்றும் வித்தையென்பது ஸகலருக்கும் தெரியும். சைனபஜார் சந்தையிலே நடக்கும் உரத்த வாக்கு வாதங்கள் போலே வீண் நேரப் போக்கு. ஸாம்ராஜ்யத்தின் சந்தையில் நாமும் உரத்த குரலுடன் இவ்வளவுதான் செய்திருக்கிறோம்.

கல்வி வேண்டுமென்று கெஞ்சினோம். மனுப் போட்டோம். அதில் அக்கறைப்படவில்லை. அதைப் பரப்புவதிலே பாடுபடவில்லை. அதாவது அர்த்த மென்னவென்றால்: நாம் நமக்கு விருந்து கேட்கிறோம். நம்மைச் சுற்றிப் பசித்து நிற்போருக்குத் துண்டுகளாவது கிடைக்குமா என்பதை நாம் சிறி தேனும் கவனிக்கவில்லை. ஜனங்களில் பெரும் பகுதிக்குக் கல்வி கற்பித்தால் கெடுதியுண்டாகு மென்று நம்மவர் சொன்னால் அவர்களிடம் அதிகாரி கள் மொத்தத்திலே வங்காளிகளுக்கே அதிகப் படிப்பு அவசியமில்லை யென்றும், நீங்கு வினைத் தாலும் விளக்கக்கூடுமென்றும் கூறுதல் தகும்.

பொதுஜனக் கல்வி ஏற்பட்டால் கூலியாட்கள் இல்லாமல் போவார்களேயென்று நம்மவர் யோசித்தால், வங்காளிகளில் உயர்ந்த ஜாதியாருக்கு அதிகக் கல்வி கொடுத்தால் அவர்களுடைய அடிமைக் குணம் நீங்கிப் போய்விடுமேயென்று பிறர் ஆலோசனை செய்தல் தகும்.

நமது மனதின் உண்மை நிலைக்கு ஓரடையாளம் யாதெனில் "வங்காளத்து மாகாணக் கான்பரன்ஸ்" என்று சொல்லப்படும் சபையில் வங்காளி பேசவேண்டுமென்ற எளிய விஷயத்தை இத்தனை வருஷங்களாக மறந்துபோய் விட்டார்கள். காரணம் யாதெனில் நாம் நமது தேசத்து ஜனங்களை நம்மவரென்று பரிபூர்ணமாக புத்தியில் தரிக்கவில்லை. அதுகொண்டே நாம் நமது நாட்டுக்கு முழுக்கிரயம் கொடுக்க இயலவில்லை. நாம் கேட்பது முழு அளவில் கிடைக்கவில்லையெனில், அது கொடுப்பவன் விருப்பமின்மையாலன்று, நமக்கே முழு விருப்பத்துடன் கேட்க விருப்பமில்லையாதலால்தான்.

கல்வியைப் பரப்புதல் என்ற விஷயத்தைக் கவனிக்கப்போகுமிடத்தே, முதல் கஷ்டம் இங்கிலீஷ் கருவியாக இருத்தல் என்று காண்கிறோம். அன்னியர் கப்பல் துறைமுகத்தில் சரக்குகள் கொண்டு சேர்க்கும். உள்நாட்டுச் சந்தைகளில் கொண்டுவந்து பகுத்துக் கொடுக்காது. நாம் பரிபூர்ண நம்பிக்கையை அன்னியக் கப்பலில் வைத்தோமானால் நமது வியாபாரம் பட்டணத்தோடு நின்றுபோம். இதுவரை நாம் இதைத் தவறாகவே நினைக்கவில்லை. நாம் இதழ்களால் எதுரைத்தாலும்

ஹிருதயங்களில் நமக்குத் தெரிந்த தேசம் பட்டண மாத்திரமே. நமக்கு நமது பாஷையினிடத்தே அதிக தயவு தோன்றும்போது இதன் மூலமாகப் பிரதம சிக்ஷை பயிற்ற இடங் கொடுக்கலாமென்று நினைத்தோம். அதற்குமேல் வங்காளி பாஷை எட்ட விரும்பினால், அதை நகைத்தோம்.

இந்த கிடனற்ற ஆத்ம—ஸம்சயம் நம்மிடம் எத்தனைகால மிருக்கவேண்டும்? நம்முடைய தாய்ப் பாஷையில் உயர்தரக் கல்வி கற்பித்து அக் கல்வியை முழுதும் நம்மதாக்கிவிடவேண்டுமென்று சொல்லும் தைரியம் நமக்கெப்போதுமே வராது போகுமா? ஜப்பான் தனக்கு வேண்டியதை மேற்குத் திசையிலிருந்து பற்றிக்கொண்டதன் காரணம் யாது? அதுவும் இத்தனை சீக்கிரத்தில்? அவள் மேற்குக் கல்வியைத் தனது பாஷையில் சிறைப்படுத்திக்கொண்டாள். ஜப்பானிய பாஷை நமது பாஷையைக் காட்டிலும் சொல் வளமுடையதென்று நினைக்கிறீர்களா? புதிய புதிய பதங்கள் புனைந்து கொள்வதில் வங்காளி பாஷைக் கிருக்கும் சக்தி அநந்தம். தவிரவும் ஐரோப்பிய சாஸ்திரம் ஜப்பானியருக்கு எத்தனை அந்நியமோ அத்தனை நமக் கன்னியம் அன்று. ஆனால் ஜப்பான் பிரதிக்ஞை செய்து கொண்டாள்:—"நமது பாடசாலைகளில் ஐரோப்பிய சாஸ்திரத்தை நிலை நிறுத்தக் கடவோம்!" என. அவள் அங்ஙனம் சொல்லியது மட்டுமன்று. செய்து காட்டினாள். பயனை நுகர்கிறாள். உயர்தரக் கல்வி நமது பாஷை மூலமாகக் கொடுக்க வேண்டுமென்றும், அப்படிக்கொடுத்தால்மாத்திரமே

அக் கல்வியால் நமது நாட்டுக்குப் பயனுண்டாகு மென்றும் சொல்லக் கூட நமக்கு இன்னும் தைரியம் பிறக்கவில்லை.

நாம் இங்கிலீஷ் பாஷையும் படிக்க வேண்டு மென்று கூறுதல் மிகை. அதுவும் கேவலம் ஜீவ னோபாயத்தமாக மாத்திரம் செய்யக்கூடாது. இங்கிலீஷ் மாத்திரமேன்? ப்ரெஞ்ச் பாஷையும் ஜெர்மன் பாஷையும் படித்தால் இன்னும் விசேஷம். வங்காளி களிலே பெரும் பகுதிக்கு ஒரு காலத்திலும் இங்கி லீஷ் வராதென்று கூறுதலும் மிகையேயாம். இந்த லக்ஷக்கணக்கான வங்காளி பாக்ய ஹீனருக்குப் புத்தி பிசித்தும், அரைப்பசி யுடனேனும் தான் இருக்க வேண்டுமென்பது நம்முடைய கொள்கையா?

நமது நவீனக் கல்வியென்னும் சிக்கான யந்தி ரத்தில் யாதேனுமொரு மாறுதல் செய்ய வேண்டு மானால் அதற்கு ஏராளமான புடைத்தலும் இடித் தலும் சம்மட்டி வேலையும் செய்ய வேண்டும். மேலும் அது செய்ய வலிய தோள் வேண்டும். வீரத் தனமுடைய ஸர் ஆசு தோஷ் மூக்கர்ஜி அங்ஙனம் சற்றே யத்தனம் செய்து கொஞ்சம் தேச பாஷைக் கப்பியை உள்ளே நுழைத்திருக்கிறார். ஸர் ஆசு தோஷ் மூக்கர்ஜி செய்துவைத்த காரியம் யாதெ னில் எந்த வங்காளியும் இங்கிலீஷில் எவ்வளவு படித்திருந்தாலும் வங்காளி பாஷையில் பாண்டித்ய மில்லாவிடில் பூர்ண பண்டிதனைக் கருதப்பட மாட்டான் என்று செய்து வைத்தார். இது இங்கி லீஷ் தெரிந்தவருடைய படிப்பை ஸம்பூர்ணப்படுத் தும் வழியாயிற்று. வங்காளி மாத்திரம் தெரிந்து

இங்கிலீஷ் தெரியாதவர்களுடைய கதி என்ன? அவர்களுக்கு வங்காளி "யூனிவர்ஸிடி" (ஸர்வகலாசாலை) என்ன சொல்லுகிறது? இங்ஙனம் கொடுமையான அஸம்பாவிதம் பாரத தேசத்தைத் தவிர வேறேந்த தேசத்திலேனும் உண்டென்று நினைக்கிறீர்களா?

"கவித்தனம் பேசினதிலே பயனில்லை. நடக்கிற வார்த்தை சொல்ல வேண்டும். ஒரேயடியாக அதிகம் எதிர்பார்த்துவிடக் கூடாது" என்று என்னிடம் சிலர் சொல்லக்கூடும். அதிகம் எதிர்பார்க்கிறேனா? நடக்கிற காரியத்தை மாத்திரம் சொல்ல வேண்டுமென்று தொடங்கினால் பேசவே இடமில்லை. எவன் மனதிலேனும் என் வார்த்தைகளினாலே சிறிது சலனம் ஏற்பட்டால் அதுவே எனக்குப் போதும். அந்தச் சலனம் என்னை வைதல் அல்லது அடித்தல் என்ற ரூபமாக வந்தாலும் சரியே.

இனி "ஸாத்தியமான" காரியங்களைப் பேசுவோம்.

பூர்வத்தில் நமது ஸர்வகலாசாலை, பரீக்ஷைக்கு வரும் மாணாக்கருக்கு ஒரு விதக் குஸ்திக் கொட்டகை போலிருந்தது. இப்போது அதில் கொஞ்சம் அதிகமெல்லை சேர்க்கப்பட்டிருக்கிறது. குஸ்திகளுக்கு நடுவே குஸ்திக்காரர் வந்து கொஞ்சம் இளைப்பாறும் பொருட்டாக வெளியிலிருந்து கீர்த்தி பெற்ற பண்டிதர்களை இங்கு வந்து ப்ரஸங்கம் செய்யும்படி கேட்கிறோம். நமது வித்வான்களுக்கும் ப்ரஸங்க ஸ்தானங்கள் ஏற்பாடு செய்கிறோம். இந்தக் கடைசி

தயவுக்கும் மூல புருஷர் மேடை தீர ஸர் ஆசு தோஷ் மூக்கர்ஜீதானென்று கேள்விப்படுகிறேன்.

இப்போது நான் என்ன சொல்லுகிறேனென்றால், பழைய யூனிவர்ஸிடி அதன் பழைய வழிப்படியே நடக்கட்டும். இந்த விசேஷ உபந்யாஸங்களை வங்காளிகளுக்கு மாத்திரமென்று தனியாக ஏன் விடக்கூடாது? கல்வி விருத்துக்கு அழைப்பின் மேலே வந்தவர்களுக்கு உள்ளே சோறு போடு. நல்ல செய்தி கேட்டு வந்த பிறருக்கு வாசலிலே உட்கார இடங்கொடு. உள்ளே இருப்பவர்களுக்கு இங்கிலீஷ் மேஜை போடு. வெளியே இருப்போர் தாங்கள் வாழையிலையை உபயோகப்படுத்திக் கொள்ளுவார்கள். வாயில்காப்போரை விட்டு அவர்களை வெளியே தள்ளச் சொன்னால், விருந்துக்கு இடையூறன்றோ? அவர்களுடைய சாபம் வானத்திலே கேட்காதோ?

கங்கா யமுனைகளின் புண்ய ஸங்கமுகம் போலே, இங்கிலீஷ், வங்காளி என்ற இரண்டு பாஷைகளின் மூலமாகவும் இரண்டு கல்வி யாறுகள் வந்து இங்கே கூடினால், அப்போது வங்காளத்து மாணக்கர் எல்லோருக்கும் இது உண்மையிலே தீர்த்த யாத்திரை ஸ்தலம் போலாகும். இவற்றுள் ஒன்று கருநிறமாகவும் மற்றது வெண்ணிறமாகவும் பேதம் புலப்படத்தான் செய்யுமெனினும், இரண்டும் கூடிப் பாய்ந்து தேசத்தின் கல்வியை விசாலமாகவும் உண்மையாகவும் ஆழமாகவும் புரியும்.

ஒரு பட்டணத்தில் ஒரே வீதி யிருந்தால் அது நெருக்குண்டுபோம். அதனாலேதான் பட்டணத்

திருத்த ஏற்பாடுகளில் புதிய வீதிகள் போடுகிறார்கள். நமது ஸர்வகலாசாலைப் பயிற்சிக்கு மற்றொரு பெரிய வீதி போடவேண்டுமென்று நான் சொல்லும் யோசனையை அனுஸரித்தால், பழைய ரஸ்தாவில் ஜன நெருக்க மதிகமென்பதாக இப்போதுண்டாகும் புகார் நின்று போம்.

உபாத்திமைத் தொழிலனுபவத்தில் நான் தெரிந்துகொண்ட விஷயம் யாதெனில், மாணக்கரில் பலருக்கு பாஷைகள் கற்றுக்கொள்ளும் திறமை இயற்கையிலே குறைவு. அப்படிப்பட்டவர்கள் இங்கிலீஷ் சரியாகத் தெரியாமல் மிகவும் சிரமப்பட்டுப் பிரவேசப் பரீக்ஷை தேறுவார்கள். மேற் படிகளிலே நொறுங்கிப் போவார்கள். வங்காளிப் பிள்ளைகளில் பெரும்பகுதி இங்கிலீஷ் பாஷையை வசப்படுத்த முடியாமலிருப்பதற்கு வேறு காரணங்களும் உள. வங்காளிகளுக்கு அந்த பாஷை முதலாவது மிகவும் கடினமானது. உடைவாளின் உறைக்குள் இங்கிலீஷ் கத்தியைப் போட முயல்வது போலே இங்கிலீஷ் கற்றுக்கொடுக்கத் தக்க வாத்தியார்களின் தொகை குறைவாதலால், சரியான இங்கிலீஷ் போதனை சில பிள்ளைகளுக்குத் தான் கிடைக்கிறது. ஏழைகளின் மக்களுக்குக் கிடையாது.

ஆதலால் தான் தேடி வந்த மருந்து இன்னதென்று தெரியாமல் மலையோடு தூக்கிக்கொண்டு போன ஹனுமானைப்போலே, இந்தப் பிள்ளைகள் அந்த பாஷையை நேரே உபயோகிக்கத் தெரியாமல் புஸ்தக முழுதையும் குட்டியுருப் போடும்படி நேரிடுகிறது. அஸாத்ய ஞாபக சக்தியுடையவர்கள்.

கடைசிவரை படிக்கிறார்கள். ஸாதாரண புத்தியுடைய பிள்ளைகளாலே இயலவில்லை. பாஷைத் தடையின் கதவுகளை இவர்களால் திறக்கவும் முடியாது, ஏறிக் குதிக்கவும் வழியில்லை.

ஜன்மக் குறையாலோ வேறு எவ்விதக் காரணத்தாலோ இங்ஙனம் இங்கிலீஷ் பாஷையில் தேர்ச்சி பெற ஸாமர்த்தியமில்லாத பிள்ளைகளை நாம் பிரமாண்டமான குற்றவாளிகளாகக் கருதி ஸர்வ கலா சாலைக்குள் எக்காலத்திலும் புகக்கூடாதென்ற உத்தரவு போடுதல் நன்றா? இங்கிலாந்தில் ஒரு காலத்தில் ஸாதாரணத் திருடரைத் தூக்கிலிட்டுக் கொல்வது வழக்கம். ஆனால் இந்த தண்டனை விதி அதனிலும் கொடிதாக இருக்கிறது. ஏமாற்ற முடியாததற்காகக் கடைசி தண்டனை விதிக்கிறது. ஆம் குட்டியுருப்போட்டுப் பரீக்ஷை தேறுவது ஏமாற்றுதல்தானே? புஸ்தகத்தைத் துணியில் மறைத்து வைத்துக்கொண்டு பரீக்ஷை மண்டபத்திலே பார்த்தெழுதுதல் வஞ்சனையென்றால் மூளைக்குள் உருவேற்றி வைத்துக்கொண்டு போவதும் வஞ்சனை தானே?

இந்தக் குட்டியுருப் பேர்வழிகளின் மேலே நான் குற்றம் கொண்டு வந்ததாக நினைக்க வேண்டாம். ஆனால் பின்னே நிற்போருக்கு ஒரு வழிவிட வேண்டாமா? ஹாக்ளி நதிப் பாலத்தில் நடக்க அனுமதியில்லாதவர்கள் நதியைக் கடந்துவர இங்கிலீஷ் புகைத் தோணி கொடுக்காவிட்டாலும் நாட்டுப் படகு கொடுக்கக்கூடாதா? அன்னிய பாஷை படிப்பதில் ஸாமர்த்தியமில்லாத பிள்ளைகள் அத்தனை

பேருக்கும் உயர்தரக் கல்வியில்லாமல் செய்து அவர்களுக்குள்ள புத்தியையும், படிக்க வேண்டுமென்ற ஆவலையும் விழலாக்குவது தேசத்துக்கு பயங்கரமான பெரிய நஷ்டமன்றோ?

ஆதலால் நான் சொல்லும் யோசனை யாதெனில் பிரவேசப் பரீக்ஷைக்கு முந்தின வகுப்பு முதற் கொண்டே பாஷை வழியை இரண்டாக்கி, எந்தக் கதவு மூலமாக ஸர்வகலாசாலையில் புக விருப்பமோ அது வழியே புகலாமென்று வைக்க வேண்டும். நான் மேலே சொல்லியபடி, இதனால் பழைய ரஸ்தாவில் பெருங் கூட்டம் கூடாமல் இருக்கும் நன்மையொன்று மாத்திரமேயல்லாது உயர்தரக் கல்வியை மிகவும் விசாலமாகப் பரவச் செய்யும்.

இருந்த போதிலும் இங்கிலீஷ் வழிக்குத்தான் பெரும்பகுதியான பிள்ளைகள் சேருமென்பதையும், இரண்டு பாஷைகளுக்கும் ஸமமாக மதிப்பேற்பட நெடுங்காலமாகுமென்பதையும் நானறிவேன். ராஜ பாஷைக்குப் பகட்டதிகம். அதற்கு வியாபாரச் சந்தையிலும் விவாகச் சந்தையிலும் அதிக கிராக்கியிருக்கத்தான் செய்யும். இருக்கட்டும். தாய் பாஷையை அலக்ஷியம் பண்ணினாலும் பண்ணுங்கள். நிஷ்ப்ரயோஜனமாக்கிவிடாதேயுங்கள். பணமுள்ளவன் குழந்தை செவிலித் தாயின் பால் குடிக்கட்டும், ஏழையின் குழந்தைக்குத் தாயின் பால் இல்லாமல் செய்துவிடாதேயுங்கள்.

நானும் எனது வாழ்நாளில் பல சண்டைகளிலே குட்டுப் பட்டிருப்பதால், இப்போது வார்த்தை சொல்லும்போதெல்லாம் வெகு ஜாக்கிரதையுடன்

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டுதான் பேசு வேன். இருந்தாலும் வழக்கத்துக்கு சக்தி யதிகம். உண்மை கடைசிவரை வெளிப்படத்தான் செய்யும். ஓரத்தில் அடி வைக்க இடம் கேட்பது போலே கேட்டு வெகு தந்திரமாக ஆரம்பம் செய்ததுபற்றி நானே என்னை மெச்சிக்கொண்டேன். வங்காளி முதற்பாட புஸ்தகத்தில் வருகிற, கொடுத்ததை மாத்திரமே வாங்கி உண்ணும் கோபாலன் என்ற நல்ல பிள்ளை மாதிரி என்னை பாவித்தேன். அந்த யோசனையைக் கேட்டு யூனிவர்ஸிடி அதிகாரிகள் திரஸ்காரம்பண்ணுவார்களேயொழியக் கோபித்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் நான் நல்ல பிள்ளை கோபாலன் ஆரம்பத்திலே எவ்வளவு நல்லவனாக இருந்தும் பின் அதிகப்பட அதிகப்பட இரைச்சல் போடத் தொடங்கிவிட்டான். நமது பாஷைக்குச் சார்பாக எனது வேண்டுதலும் வளர்ந்துவிட்டது. அதனால் யோசனைக்கும் அது சொல்வோனுக்கும் விபத்தென்பதை நானறிவேன். இருந்தாலும் அது ஒன்றும் புதிதில்லை. குழந்தை மரணவிஹிதம் மிகவும் அதிகமாகிய இந்த நாட்டில், நூற்றுக் இருபத்தைந்து புதிய யோசனைகள் சிசுப் பிராயத்திலேயே மடிகின்றன. மேலும் நான் விபத்துக்களுக்கு நெடுந்தூரம் பழக்கப்பட்டதினின்றும் அவை விபத்துக்களாகவே தோன்றவில்லை.

எதிர் விவகாரம் என்ன சொல்வார்களென் பதை நானறிவேன். "வங்காளி பாஷையில் உயர் தரக் கல்வி கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறீ ரேங்காணும்! அந்த பாஷையில் பாடப் புத்தகங்கள்

இல்லையே'' என்று கேட்பார்கள். அந்த பாஷையில் பாடப் புத்தகங்கள் இல்லையென்பதை நான் அறிவேன். ஆனால் அந்த பாஷையில் உயர்தரக் கல்வி கற்பிக்கத் தொடங்காவிட்டால் பாடப் புஸ்தகங்கள் எங்கிருந்துவரும்? அவை ரஸங்களைக் கருதி ரஸிகர்களாலே பயிர் செய்யப்படும் அலங்காரச் செடிகளல்லவே! கேவலம் ப்ராண பலத்தாலே பூமியை வந்து மேவுகிற களைப் பூண்டுகளுமல்லவே. உயர்தரக் கல்விபாடப் புஸ்தகத்துக்காகக் காத்திருந்தால் தழைக்குப் பின் நான் தோன்றுவேனென்று மரம் காத்திருக்கும். கரைக்குப் பின் நான் தோன்றுவேனென்று நதி காத்திருக்கும்.

வங்காளி பாஷையில் உயர்தரக் கல்விக்குத் தகுந்த பாடப் புஸ்தகங்களில்லை யென்பதொரு குறையாயின், இந்த பாஷையைக் கல்விக்கு வாஹனமாக்குதலே அக் குறையை நீக்கும் வழியென்று நான் மீட்டும் சொல்லுகிறேன். வங்கீய-ஸாஹித்ய பரிஷத் என்ற இலக்கியச் சங்கத்தார் சிறிது காலமாகக் கல்வியின் வெவ்வேறு சாகைகளுக்குப் பயன்படத் தகுந்த ஸங்கேத மொழிகள் கண்டு பிடித்தும் உண்டாக்கியும் அஸ்திவாரத் தொழில் செய்து வருகிறார்கள். அதன் தொழில் மிகவும் மெதுவாக நடக்கிறதென்று சிலர் குறைகூறக் கேட்கிறோம். அது தொழில் செய்வதே வியப்பன்றோ? தூண்டுதலெங்கே? இந்த ஸங்கேத பதங்களை உபயோகப்படுத்த இடமெங்கே? ஒரு நாணய சாலைக்காரர் தங்கள் நாணயங்களை யாரும் வாங்கலாகாதென்று விதி ஏற்பட்ட பிறகு மேலே நாணயம் அடித்துக்

கொண்டே போவார்களா? ஸர்வகலாசாலையார் வங்காளி மூலமாகக் கல்வி கற்பிக்க வழி திறந்தால் அப்போது பரிஷத்துக்குப் பயன் ஏற்படும்.

நமது பாஷையிலே கல்விப் பெரு விருந்துக்குரிய பண்டங்களும் உபகரணங்களு மிருக்கின்றன. ஆனல் ஸ்தானமில்லை. இது மிகவும் வருந்தத் தக்கது. நமக்குள்ளே ஜகதீச சந்திரவஸு, நமது ப்ரபுல்ல சந்த்ரராய், நமது வரேந்த்ர நாத சீல், நமது மஹா மஹோபாத்யாய சாஸ்திரி மூதலிய பண்டிதர்கள் இருக்கிறார்கள். பகிரங்கமாகவும் மறைவாகவும் இன்னும் இவர்களைப்போல் எத்தனையோ வங்காளிகள் இருக்கிறார்கள். இருந்தும் வங்காளி மாத்திரம் தெரிந்தவர்களுடைய அறிவுப் பசியை நீக்க ஒருபோதும் வழி ஏற்படாதா? அப்படிப்பட்ட மாணக்கர்கள் இம் மஹான்கள் தமது தேசத்தாராக இருப்பது பற்றி கர்வப்பட மாத்திரம் இடம் வைத்துப் பயன்பெற இடமில்லாமல் வைத்து விடப் போகிறீர்களா? நமது ஸர்வகலாசாலையின் உதார குணத்தால் வெளி நாட்டு மாணக்கர் கடல் கடந்து தாண்டி வந்து இவர்களிடம் கல்வி கற்றுச் செல்லுகிறார்கள். ஆனல் தாய்மொழி மாத்திரமே அறிந்த வங்காளி மாணக்கனுக்கு அவர்களுடன் உட்காரத் தகுதியில்லை!

ஜெர்மனியிலும், ப்ரான்சிலும், அமெரிக்காவிலும், ஜப்பானிலும் மனுஷ்யருடைய புத்தியைப் பக்குவப்படுத்தும் பொருட்டு நவீன ஸர்வகலாசாலைகள் தோன்றியிருக்கின்றன. அவை ஜனங்களின் அறிவையும் குணத்தையும் விருத்தி செய்து தமது

நாடுகளைப் புதுமை செய்துகொண்டு வருகின்றன. அந்த விதமான புதிய ஸ்ருஷ்டி அன்ய பாஷை மூலமாகச் செய்ய முடியாது. இங்கே, நமது கல்வி நிஷ்ப்ரயோஜனமாகப் போவதன் முக்கிய காரணம் யாதெனில், நாம் சம்பாதிக்கும் அறிவினுல் நமது பாஷை செழிப்படையவில்லை. எப்போதும் உயர்ந்த மதிக்குப் புறத்தே தள்ளப்படுவதால் நமது பாஷை நம் அறிவு முதிர்ச்சியுடன் தொடர்ந்து வளர இடமில்லாமல் போகிறது.

இந்த ஸ்திதியில் விளைந்த பயன் யாதென்றாலோ, நாம் உயர்ந்த கல்விப் பயிற்சி பேற்றோமேயல்லாது, உயர்ந்த யோசனைகள் பண்ணவில்லை. நமது காலேஜ் - உடுப்பைப் போலவே, காலேஜ் - பாஷையையும், முள்ளியிலே மாட்டிப் பாடசாலையில் படித்ததை யெல்லாம் அந்தச் சட்டையின் பையிலே போட்டு வைக்கிறோம் பின்பு வம்பளப்பதும், தூற்றுவதும், ராஜா உண்டாக்குவதும், தள்ளுவதும், மொழி பெயர்ப்பதும், வசனந் திருடுவதும், பரிதாபத்துக்கிடமான கந்தை வர்த்தமானப் பத்திரிகைகளில் கோழைக் குப்பைகளெழுதுவதும் எல்லாம் தேச பாஷையில் செய்கிறோம்!

இப்படி யிருந்தும் நம்முடைய இலக்கியம் கொஞ்சம் அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்பதை நான் மறுக்கவில்லை. இருந்தாலும் இன்னும் பல பசியடையாளம் காட்டத்தான் செய்கிறது. அளவில்லாமல் தின்றும் மெலிந்திருக்கும் அஜீர்ண நோயாளி போல் நமதிலக்கியம் நாம் படித்ததையெல்லாம் நேரே ஜீர்ணமாக்கிக்கொள்ளவில்லை.

நாம் விழுங்குவது நமது பிராணனை பலப்படுத்த வில்லை. அவற்றை நாம் நாவினால் ருசி பார்ப்ப தில்லை. தொண்டைக் குழி வழியே சரிக்கிறோம்; வயிற்றிலே பெரிய சுமை; உடம்புக்குப் போஷணை இல்லை.

நமது ஸர்வகலாசாலை லண்டன் நகரத்து ஸர்வ கலாசாலையின் மாதிரியைத் தழுவி ஆக்கப்பட்டது; அதாவது, இந்த ஸர்வகலாசாலை ஒரு பெரிய சாய முத்திரை போடுகிற யந்திரம். இதன் நோக்கம் மனுஷ்யரை உண்டாக்குவதன்று. அவர்களுக்கு முத்திரை போடுதல். சந்தை விலைகள் தெரிந்து கொள்வதில் வியாபாரிகளுக்குத் துணை செய்கிறது. படிப்பென்ன வந்ததென்பதைக் கவனியாமல் முத் திரை வாங்கிக்கொண்டு வருவதில் நாம் திருப்தி கொண்டோராயினும். இஃது நமக்கு மிகவும் எளி தாயிற்று. ஏனெனில் நெடுங்காலமாகவே நாம் ஆசார அனுஷ்டானங்களில் பூர்வ நியதமான மூன் மாதிரியைக் குருட்டுத் தனமாகப் பின்பற்றி நடப் பதில் வழக்கப்பட்டுத் தேறியிருக்கிறோம். நாம் ஆரா தனை செய்து வரும் புராதன மாதிரிகளைத் தவிர வேறு மாதிரிகள் உண்டாக்க முடியுமென்ற எண்ணமே நமக்கு உதிப்பது கிடையாது.

ஆதலால் நான் சொல்லும் யோசனை ஸாதாரண வங்காளித் தகப்பனுக்கு ஸம்மதமாகாவிடினும், இதை அனுசரித்தால் இங்கிலீஷ் வழியின் வலையைக் கடந்து செல்ல மாட்டாத பிள்ளைகளுக்குப் பயனுண் டென்பது மாத்திரமே யன்றி, அதைவிடப் பெரிய பயன் ஒன்றுண்டு. அதாவது இயற்கை வழியிலே

நமது பாஷைவளர விடுதலை பெறும். சந்தை மதிப்பில்லையென்ற காரணங்கொண்டே, அது சந்தை நிபந்தனைகளுக்கு அடிமைப்படாது பிழைக்கும். இக்காரணத்தால் லாபத்தைக் கருதி இங்கிலீஷ் பாதையில் செல்ல உடன்பட்ட பலர் அத்துடன் அன்பு காரணமாகத் தேச பாஷை வழியையும் கொள்வர். மிகவும் சீக்கிரத்தில் தாய்ப் பாஷையில் உபந்யாஸகர்கள் தமது மேதை முழுதையும் வெளிப்படுத்துவார்களென்பது திண்ணம். இப்போது பத்ரி பதங்களும், இங்கிலீஷ் பாடப் புஸ்தக வியாக்யானங்களுமாகிய குப்பையைக் கிளறிக் கொண்டிருப்போர் அப்போது பசித்திருக்கும் நாட்டில் உயிர் தரும் கொள்கைகளைப் பரவச் செய்வார்கள்.

இங்கிலீஷ் படித்த வங்காளி தனது புதிய ஸம்பாதனச் செருக்கினால் வங்காளி பாஷையை இகழ்ச்சியுடன் நோக்கிய காலம் ஒன்றிருந்தது. எனினும், ஏதோ மாய வழியால் வங்காளத்தின் ஹ்ருதயத்தினின்றும் நமதிலக்கிய விதை முளை விட்டது. ஆரம்பத்திலே அதன் சிறிய மெல்லிய மூளையைக் கண்டு நகைத்தல் சுலபமாக இருந்தது. ஆனால் எவ்வளவு சிறிதாயினும் உயிருடைய வஸ்துவொன்றை நெடுங்காலம் ஏளனத்தால் அடக்கி வைக்க முடியாது. இன்று அதன் முடியை மிகவும் உயர்த்தி இங்கிலீஷ் படித்த வங்காளிகளின் ஆங்கிலேய உபந்யாஸங்களை நோக்கிப் புன்னகை செய்யும் நிலைமைக்கு வந்துவிட்டது. இந்தப் பயன் அதிகாரிகளின் தயவு கலக்காமல் விளைந்தது. அவர்கள்

புறக்கணித்தனர். சார்பு நாடுகளில் இது பெரிய கஷ்டம். அப்படியிருந்தும் தன் உயிரில் தான் மகிழ்ந்து வளர்ந்தது. இப்போது பூமண்டலத்தின் அங்கீகாரம் பெற்றுவிட்டது.

நமது கையிலிருக்கும் ஸாதனங்களைக்கொண்டு இப்போதுள்ள ஸர்வகலா ஸங்கத்தின் யந்திரத்தை மாற்றுதல் ஸாத்யமில்லையென்று முன்னமே கூறினேன். இதன் காரணங்கள் இரண்டு. முதலாவது இந்த யந்திரம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக உண்டானது. அதைவிட்டு வேறொரு நோக்கத்துக்குப் பயன்படுத்த வேண்டுமானால் இதைத் தலை முதல் கால்வரை மாற்ற வேண்டும். இரண்டாவது, நமது வடிவாராதனைக்காரர் இந்த ஸர்வகலாசாலை ரூபத்தைக் கண்டு எவ்வளவோ தூரம் மயங்கிவிட்டார்களாகையால், அவர்கள் புதுமையாக ஜாதீயக் கல்விச் சங்கங்களும், ஹிந்து ஸர்வகலாசாலைகளும் செய்யத் தொடங்கிய போதும் இதன் அழியாத முத்திரையை அவர்களால் மறக்க முடியவில்லை.

எனவே, இதனைச் சீர்திருத்த ஒரே வழி. இதன் யந்திரமனைக் கருகே ஒருபிர்ச் செடியை நட இடங் கேட்க வேண்டும். இப்போது சத்தமும் விவாதமு மில்லாமல் அந்தச் செடி ஒரு நாள் தலை தூக்கித் தழை, மலர்களின் வளத்தால் தனது பக்கத்திலுள்ள கோரமான யந்திர சாலையை நகைத்து நோக்கும். இங்ஙனம் கல்வி யந்திரசாலை இரைச்சலுடன் சந்தைக்கு மூட்டை தயார் செய்து போட்டுக்கொண்டிருக்க, அருகிலுள்ள ஜீவ விருக்ஷம் தேச முழுமைக்கும் பழமும் நிழலும் கொடுப்பதுடன் எண்ணி

றந்த பாட்டுப் பக்ஷிகளுக்குத் தன் கிளைகளிலே வாஸம் தரும்.

இந்தக் குப்பையான பழைய யந்திரத்துடன் நான் ஸமாதானம் ஏன் பேச வேண்டும்? நமது நீதி ஸ்தலங்கள், கச்சேரிகள், போலீஸ் டாணாக்கள், சிறைச்சாலைகள், பைத்திய வைத்தியசாலைகள் முதலிய நம்முடைய நாகரிகக் கோலங்களுடன் அதுவும் ஒன்றுகச் சேர்த்துவிடுங்கள். தேசத்துக்குப் பழமும் நிழலும் வேண்டுமாயின், இந்தச் செங்கல் சுண்ணாம்புக் கட்டிடங்களை விட்டு வெறுந் தரைக்கு வருக. வேத காலத்தில் காட்டில் ஆசிரமங்களிலும், பௌத்த காலத்தில் நளந்தா, தக்ஷசிலா முதலிய இடங்களிலும், இன்று நமது வீழ்ச்சிக் காலத்திலே கூடத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள், சாஸ்த்ரப் பாட சாலைகளிலும் பிள்ளைகள் கூடவில்லையா? அது போலே இப்போதும் நாம் ஸர்வகலாசாலை வைத்து நமது பிராண சக்தியால் போஷிப்போமென்று ஏன் தைரியத்துடன் சொல்லக்கூடாது? ஸ்ருஷ்டியில் முதற்படி விரும்புதல்; இன்று நமது தேசத்தில் அவ்வித விருப்பத்தின் சலனங்கள் இல்லையா? ஆராய்ச்சியிலும் தியானத்திலும் படிப்பிலும் ஈடுபட்ட நமது நாட்டு வித்வான்கள் தமது வித்தையைப் பிறருக்குக் கொடுக்க வேண்டுமென்று இச்சைப் படுவதுபோல் அதை அவர்களிடம் பெறவேண்டுமென்று விரும்புவோர் யாருமில்லையா? ஏறிச்* செல்லும் நீராவியோடு கலந்து செழிப்பை யுண்டாக்கும் மழையாக விழுகின்ற மேகங்களைப் போலத் தாய்ப் பாஷையிற் கலந்து தாய் நாட்டிலுள்ள தாகங்

கொண்டோருக்குத் தண்ணீராகவும், பசித்தோருக்கு ஆகாரமாகவும் பெருக்கெடுக்க ஆசை கொள்வோர் யாருமில்லையா?

கடைசியாகக் கூறிய எனது வார்த்தைகள் கிரியாம்சையில் ஸாத்யமானவையல்ல; ஒரு கருத்தையே அவை வெளியிடுகின்றன. ஆனல் இந்தக் காலம் வரை கிரியாம்சையில் ஸாத்தியமாகக் கூடிய ஆலோசனைகள் ஒட்டுப் போடுவதற்குத்தான் உதவியிருக்கின்றன; கருத்துக்களே உண்மையான சிருஷ்டிசெய்துள்ளன.

குறிப்பு:—மேலேயுள்ள கட்டுரையின் இறுதியிலே சில வரிகள் கிடைக்கவில்லை. முடிவுரும‌ல் கட்டுரையை அப்படியே நிறுத்தினல் வாசகர்களுக்குத் தாகூரின் முழுக் கருத்தும் தெரியாமற் போய்விடும் என்று கருதி உடுக்குறிபிட்ட பாகத்திலிருந்து இறுதி வரை ஆங்கிலக் கட்டுரையைப் பார்த்து மொழிபெயர்த்துச் சேர்க்க நேர்ந்தது. பாரதியார் எழுதிய இறுதிக் கட்டுரையாக ஸ்ரீ ரவீந்திர நித் விஜயம் என்பது கிடைத்துள்ளது. அது சுதேசமித்திரனில் வெளியான தேதி 1921 ஆகஸ்ட் 25. அடுத்த செப்டம்பர் 11-ஆம் தேதியில் பாரதியாரின் பூதவுடல் ஓய்ந்துவிடுகிறது. உலகப் புகழ் பெற்ற ஒரு கவிஞருக்கு மற்றொரு சிறந்த கவிஞர் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்திவிட்டு விடைபெற்றுக் கொள்ளுகிறார்.

ரவீந்திரநாத தாகூரின் வாக்கிலே பாரதியாருக்கு மிகுந்த பற்று தலுண்டு. தாகூரின் சிறந்த கவிதைகள், கதைகள, கட்டுரைகள் சிலவற்றைப் பாரதியார் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். "வளர் பிறை" குழந்தைக் கதை என்ற கட்டுரையிலே (பாரதி நூல்கள் - தொகுதி 1.) தாகூரின் சில பாடல்களையும், "நாட்டுக் கல்வி" என்ற பாடலையும் (தொகுதி 1.) மொழிபெயர்த்திருக்கிறார். உரைநடைக் கவிதை எழுதுவதற்கும் ரவீந்திரரே இவருக்கு முக்கியமாக உற்சாகம் அளித்திருக்கிறார் என்று கூறலாம். தாகூரின் சிறுகதைகளையும் பாரதியார் மொழிபெயர்த்திருக்கிறார்.

வ. வெ. சு. ஐயர் முதலியோர் செய்த மொழி பெயர்ப்புக்களுடன் சேர்த்து அவை தூல் வடிவில் முன்பு வெளியாயின. நான் வைத்திருந்த அந் நூற் பிரதி கை நழுவி விட்டது. வேறு பிரதி யும் கிடைக்கவில்லை. தாகூர் எழுதிய கட்டுரைகள் சிலவற்றை யும் பாரதியார் மொழி பெயர்த்திருக்கிறார். அவற்றில் ஐந்தைத் தொகுத்து நாகூரின் பஞ்ச வியாசங்கள் என்ற தலைப்புடன் ஒரு நூலாக முன்பு வெளியிட்டுள்ளனர். அந்நூலின் பிரதிகள் இப் பொழுது கிடைப்பதில்லை. திரு. பி. ஸ்ரீ. அவர்கள் அருமையாகப் பாதுகாத்து வைத்திருந்த பிரதி யொன்றை எனக்கு அன்புடன் உதவினார்கள். அதில் கடைசிப் பக்கம் மட்டும் இல்லை.

அன்பர் பி. ஸ்ரீ. அவர்கள் பாரதியாரோடு பழகியவர்; அவரி டத்திலே பெரிதும் ஈடுபாடுடையவர்கள். பாரதியாருடைய தூல் களை மக்கள் நன்கு சுவைக்க வேண்டும் என்ற ஆர்வமுடைய வர்கள். இந்நூலை நல்ல முறையிலே வெளிக் கொண்டுவர திரு. பி ஸ்ரீ. ஆர்வத்தோடு பலமுறை எனக்கு யோசனை கூறி யுதவினர். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

தாகூர் எழுதிய இந்த ஐந்து கட்டுரைகளும் 'மாடர்ன் ரெவியூ' என்ற பத்திரிகையில் கீழ்க்கண்ட தேதிகளில் வெளியாகியுள்ளன.

1. ஜப்பானுடைய ஆவி (The Spirit of Japan) 1917 ஜூன்.
2. ஜாதி (The Nation) 1917 ஜூலை.
3. அடங்கி நட (Thou Shalt Obey) 1917 செப்டம்பர்.
4. கல்வி கற்பிக்கும் பாஷை (The Medium of Education) 1917 அக்டோபர்.
5. சிறிதும் பெரிதும் (The Small and the Great) 1917 டிசம்பர்.

இவற்றில் ஜப்பானுடைய ஆவி, ஜாதி என்பவை தாகூரால் ஆங்கிலத்திலேயே எழுதப் பெற்றவை. மற்றவை மூன்றையும் வங்காளி மொழியில் அவர் எழுதினார். ரவீந்திரநாத தாகூரின் உடன் பிறந்தார் மைந்தரான திரு. சுரேந்திரநாத தாகூர் என்பார் அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இந்த விவரம்

கவி ரவீந்திரநாத தாகூரின் புத்திரரான திரு ரதீந்திரநாத தாகூர் எனக்குத் தெரிவித்ததோடு இக் கட்டுரைகளை வெளியிட அன்புடன் அனுமதியும் தந்தார்கள்; மாக்மில்லன் கம்பெனியாரும் அனுமதியளித்தார்கள். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலே குறித்த ஐந்து கட்டுரைகளில் 'அடங்கி நட' என்பது **பாரதி நூல்கள்** மூன்றும் தொகுதியில் முன்பே வெளியாகி யிருப்பதால் அதை விலக்கி மற்ற நான்கையும் இங்கு தந்திருக்கிறேன்.

தாகூரின் கட்டுரைகள் கவிதை நடையிலே அமைந்திருக்கின்றன. ஆழ்ந்த, பரந்த கருத்துக்களைத் தாங்கி நிற்கின்றன. அவற்றின் சுவை குறையாமல் அழகிய முறையிலே பாரதியார் மொழி பெயர்த்து நமக்கு உதவியுள்ளார். தாய் மொழியிலேயே உயர்தரக் கல்வி யளிப்பதும் புகட்ட வேண்டும் என்று ரவீந்திரர் 1917லேயே வற்புறுத்தி இக் கட்டுரையை எழுதியுள்ளார். இன்றும் நாம் அதைக் கடைப் பிடிக்காமலிருக்கிறோம். தாய் நாட்டிற்காகவும் தாய் மொழிக்காகவும் தமது வாழ்க்கையையே அர்ப்பணம் செய்த பாரதியாரின் கடைசி எழுத்தாக இந் நூலிலே இந்த முக்கியமான மொழிபெயர்ப்புக் கட்டுரை அமைந்துள்ளது. இரண்டு கவிஞர்களுடைய இந்த வாக்கு விரைவிலே நிறைவேற வேண்டும்.

துணை நூல்கள்

1. மகாகவி பாரதியார் - வ. ரா.
2. பாரதியார் சரித்திரம் - செல்லம்மா பாரதி
3. கவிச்சக்ரவர்த்தி சுப்ரமணியபாரதி சரிதம் - ஆக்கூர் அனந்தாச்சாரி
4. புதுமைக்கவி பாரதியார் - நி. ஐ. ர.
5. என் குருநாதர் பாரதியார் - ரா. கனகலிங்கம்
6. பாரதியும் கவிதையும் - தங்கம்மாள் பாரதி
7. வி. ஓ. சி. கண்ட பாரதி - வ. உ. சிதம்பரம் பிள்ளை
8. பாரதி விளக்கம் - சுத்தானந்த பாரதி
9. பாரதியார் - 'சக்தி தாசன்'
10. சுதேசமித்திரன் - தொகுதிகள் 1905 - 1921 (தினசரி, வார மும்முறைப் பதிப்புகள்)
11. இந்தியா - பாரதியார் நடத்திய வாரப்பத்திரிகை இதழ்கள்
12. லோகோபகாரி - பரலி சு. நெல்லையப்பர் நடத்திய வாரப்பத்திரிகை இதழ்கள்
13. Bharathi and his Works - C. Viswanathan
14. பாரதி நூல்கள் - மூன்று பாகங்கள்
15. தாகூர் பஞ்ச வியாசங்கள் - பாரதியார் மொழி பெயர்ப்பு

திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	8	தந்திடுமூனுனு	தந்திடுமூனுணு
19	3	இத்தியா	இந்தியா
20	13	பராமார்த்திக	பாரமார்த்திக
46	1	பராதியாரின்	பாரதியாரின்
61	4	1901	1910
98	28	விதை	கவிதை
100	3	செய்யம்	செய்யும்
151	23	பிருக்கிறூர்	யிருக்கிறூர்
153	6	பதினெழசை	பதினேழசை
159	7	ஐனச்சேதமும்	ஜனச்சேதமும்
197	3	பார்கக	பார்க்க
207	4	மாஹான	மாஹாண
207	20	மாராட்டிய	மராட்டிய